சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி
வெளியீடு 6

திருக்குறள் ஆராய்ச்சி : 6

அகப்பொருள் மரபும் திருக்குறளும்

பொதுப் பதிப்பாசிரியர் :
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம்
1980

THE THEME OF LOVE AS TREATED BY TIRUVALLUVAR

M. SHANMUKHAM PILLAI
LECTURER IN TAMIL
Tirukkural Endowment Research Centre
UNIVERSITY OF MADRAS

UNIVERSITY OF MADRAS
1980

திருக்குறள் ஆராய்ச்சி : 6

அகப்பொருள் மரபும் திருக்குறளும்

ஆசிரியர் :

மு. சண்முகம் பிள்ளை

தமிழ் விரிவுரையாளர்

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம்

1980

முதற்பதிப்பு-1980

© சென்னைப் பல்கலைக்கழகம்

விலை ரூ. 22-60

ஜெயமாலிகா அச்சகம், சென்னை-89.

அணிந்துரை

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம் லிட்., பிஎச். டி.,
தமிழ்த்துறைப் பேராசிரியர் – தலைவர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

அகப்பொருள் மரபும் திருக்குறளும் என்னும் இந்நூல் தமிழ்த் துறையைச் சேர்ந்த திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியின் ஆறும் வெளியீடாக வெளிவருகின்றது. இதற்கு முன்னர், 'திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்', 'திருக்குறள் அமைப்பும் முறையும்' என்னும் நூல்களைச் சிறந்த முறையில் எழுதிய, திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியில் பணியாற்றும் புலவர் மணி மு. சண்முகம் பிள்ளை அவர்களே இந்நூலையும் இலக்கிய வரலாற்றுக் கண்கொண்டு அழகுற எழுதியுள்ளார்கள்.

அகப்பொருள் மரபு என்னும் முதற்பகுதியில் எட்டு இயல்களும், திருக்குறளில் அகப்பொருள் மரபு என்னும் இரண்டாம் பகுதியில் ஐந்து இயல்களும் ஆகப் பதின்மூன்று இயல்களைக் கொண்டது இந் நூல்.

> "ஓர் ஆணும் பெண்ணும் தனிமையில் கூடி இன்பம் நுகர்ந்து மகிழ்ந்தும், பின் ஊரும் உலகும் அறியத் திருமணம் புரிந்து சான்றோர் போற்ற இல்லறம் புரிந்தும், வீடும் நாடும் போற்ற வாழும் உலகியல் வாழ்க்கை பற்றிய பொருள்களை யெல்லாம் உள்ளடக்கிக் காண்பதே அகப்பொருள் ஆகும்"

என்றும்,

> "அகப்பொருளாம் இன்ப வாழ்க்கை ஓவியம் உலகியல் அடிப்படையில் நாடக வழக்காய்ப் புனைந்துரைக்கப் படுவதாகும். புலவர் பெருமக்கள் இன்பவொழுக்கினைப் பாடுதற்குச் சிற்சில மரபுகளையும் மேற்கொண்டுள்ளனர். இப் புலவர் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டே வழிவழி வந்த மரபாகும்"

என்றும்,

> "தொல்காப்பியத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல் பொருளியல் என்பன அகப்பொருள் பற்றிய கவிமரபுகளை விளக்கும் பகுதிகளாம். மற்றும் மெய்ப்பாட்டியல், செய்யுளியல்

களிலும் அகப்பாடல் மரபுகள் சில சுட்டப்பட்டுள்ளன. கூர்ந்து நோக்கின், புறத்திணையியல் ஒன்று நீங்கலாக ஏனையவை எல்லாமே அகப்பாடல் குறிப்புகளைக் கொண்டன என்றும் கொள்ளலாம்''

என்றும் தொல்காப்பியர் கூறும் அகப்பொருள் நெறிமுறைகளை முதல் இயலில் விளக்குகிறார்.

சங்க இலக்கிய மரபுகள் என்னும் இரண்டாவது இயலில், ''சங்க இலக்கியங்கள் காலத்தால் முற்பட்டவையாதலின், இவற்றின் நெறிமுறைகளுக்கு ஏற்ற வழிகாட்டி தொல்காப்பியமே ஆகும். வேறு எந்த இலக்கண நூலும் சங்க இலக்கிய மரபுகளுக்கு ஏற்ற பழமை யுடையனவல்ல'' என்பதைத் தக்க சான்றுகளுடன் நிறுவுகின்றார். மேலும் எட்டுத்தொகையுள் பெரும்பாலானவற்றிலும் ஐந்திணை முறைப்படியே பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன என்பதை விளக்கி யுள்ளநயம் பாராட்டிற்குரியது.

தொல்காப்பியர் தொகுத்துத் தந்துள்ள அகப்பொருள் நெறிமுறை களைச் சுருக்கி அறுபது நூற்பாக்களில் அடக்கி விளக்குவதே களவியல் என்னும் இறையனார் அகப்பொருள். ''அகப்பொருளாம் தமிழ்நெறிகளை ஆய்வதற்கு அடிநிலையாக விளங்கும்'' இந் நூலின் நூற்பாக்களின் பொருளையும் அவை பற்றிய நக்கீரரின் தொடர்புரையையும் இனிதாக விளக்குவதே மூன்றாவது இயல். பண்டைத் தமிழ்ச் சங்க வரலாற்றை உலகுக்கு உணர்த்துவதும், தமிழ் நூற்கடலின் பரப்பை ஓரளவு தொட்டுக் காட்டுவதும், பழைய உரைநடைக்குச் சான்றாகத் திகழ் வதும் நக்கீரருடைய நல்லுரையேயன்றோ?

''தொல்காப்பியப் பொருளதிகார அகப்பொருட் சார்பான இயல் களில் துறை வரிசை கூறப்படாது தலைவன் தலைவி முதலியோர் பேச்சு (கிளவி) நிகழும் இடங்களே தொகுக்கப்பட்டுள்ளன. அக் கருத்துகள் திருக்கோவையாரில் வகைப்படுத்தித் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆகவே திருக்கோவையாரில் வந்துள்ள அகப்பொருள் துறைகளைத் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாதது'' என்று தெளிவுபடுத்தித் திருக்கோவையாரில் உள்ள நானூறு துறைகளையும் நான்காவது இயலில் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

'கல்லாடம் கற்றவரிடம் சொல்லாடாதே'

என்பது பழமொழி. சங்க இலக்கியம் போன்று வீறு நடைகொண்டு விளங்குவது கல்லாடம்; பக்திச் சுவையுடன் அகப்பொருளில் நூறு துறைகளை அழகுடன் விளக்குவது. அவைகளைக் கூறுவதே ஐந்தாவது இயல்.

சடகோபர் அருளிய திருவிருத்தம் விருத்தக் கலித்துறையால் ஆன்றது; திருக்கோவையார் போன்று அகப்பொருள் அமைதியுடையது. அதில் இடம் பெற்றுள்ள பற்பல அகப்பொருள் காட்சிகளை ஆறாவது இயல் இயம்புகின்றது.

கம்பராமாயணத்தில் காணும் அகப்பொருள் நெறிகளை அழகுற விளக்குவதே ஏழாவது இயல். ''கம்பராமாயணத்தில் சங்கப் பாடல்களிற் காணப்படுவது போன்ற அகப்பொருள் நிகழ்ச்சிகளைக் காண இயலாது. ஆயினும் காலத்தொடு பொருந்தத் தமிழ்நாட்டுப் பண்பாடுகளையும் போற்றி இராமகாதையில் புதுமை புகுத்திய கம்பன், பொருத்தமான இடங்களில் தமிழ்நெறியாம் அகப்பொருள் நிகழ்ச்சிகளையும் அமைந்துள்ளான்... முந்தையோர் வழிதுறைகளை அடியொற்றித் தம் காவியப் போக்கிற்கு ஏற்றவகையில் அங்கங்கே அகப்பொருள் கருத்துகளையும் காட்சிகளையும் கம்பன் படைத்துள்ளான்......ஆடவர் பெண்டிரின் அகவொழுக்கம் இக்காவிய நாடகத்தில் புறக்காட்சியாய்க் காணுமளவுக்குச் சித்திரித்துக் காட்டியுள்ளான் கம்பன். இந்த மரபு பற்றிய படலச் செய்திகளைக் கொண்டு சிருங்கார ரசத்தைக் கம்பன் மிகுத்துப் பாடியுள்ளான் என்று கருதுவாரும் உண்டு. தமிழ் வடநூல் மரபுகளும் வேர்விட்டு வளர்ந்துவந்த நிலையில் காவிய மரபு பற்றியே கம்பனும் சிறப்பிக்கிறான் என்று கொள்வதே பொருத்தமாகும்'' என்றெல்லாம் ஆசிரியர் கூறும் விளக்கங்கள் அவருடைய நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்றாய் அமைவன.

> கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே
>
> (தொல். பொருள், கற்பு. 1)

என்னும் தொல்காப்பியனார் நெறியில் அமைந்த கற்புத் திருமணமே இராமன்-சீதை திருமணம் என்று நிறுவும் அழகு எண்ணி மகிழ்ந்து போற்றற்குரியது.

சந்திரசயிலப் படலம், வரைக்காட்சிப் படலம், உண்டாட்டுப் படலம் முதலிய படலங்களில் வரும் ஆடவர் மகளிர் வருணனைகள் பற்றி ''இத்தகு சிருங்கார வருணனைகள் எல்லாம் அகப்பொருள் நெறியானது இன்பப்பொழுது போக்குகளாயும் மக்களிடை வளர்ந்து விட்ட ஒரு நிலையை எடுத்துக்காட்டுகிறது எனலாம்'' என்றும்,

''இதுகொண்டு தகாத நெறியில் இன்பம் துய்த்துனர் என்று கொள்வது அகப்பபாட்டு நுணுக்கங்களையும் தமிழின் பொருளிலக்கணச் சிறப்புகளையும் அறியார்தம் கூற்றெனவே விடுத்தல் சாலும்'' என்றும் ஆசிரியர் கூறும் அமைதியும் விளக்கமும் எண்ணி மகிழ்தற்குரியன வாகும்.

'காதல்' என்னும் எட்டாவது இயல் எமர்சன் என்பாருடைய கட்டுரையின் தமிழாக்கம். தமிழ் அகப்பொருள் மரபின் கூறுகள் பிறமொழியாளர் கருத்தோட்டத்திலும் அமைந்துள்ளதை இது விளக்குகின்றது.

இரண்டாம் பகுதியில் அமைந்துள்ள முதல் இயலில், காமத்துப் பால் கூற்றுவகையில் மூன்றாகக் கொள்ளப்பட்ட பழைய மரபையும்.

ஐந்திணை வகையில் நோக்கிய விதத்தையும், உரிப்பொருள் வகையில் முக்கூறுபடுத்திக் காண்பதையும் எடுத்துக்காட்டிப் பின் கைகோள் வழிப் பரிமேலழகர் கண்ட களவு கற்பு என்னும் பாகுபாடே தலைசிறந்த பகுப்பு முறை என்பதை விளக்குகின்றார்.

காமத்துப்பாலின் கட்டுக்கோப்பு என்பது இரண்டாவது இயல். இதில், களவு நிகழ்ச்சிகளை நாடகப்பாங்கில் ஏழு அதிகாரங்களிலும், கற்பு வாழ்க்கையின் பிரிவாற்றாமை ஒரு அதிகாரத்திலும், தனித்திருக்கும் தலைவியின் நிலை பதினோர் அதிகாரங்களிலும், பிரிந்த தலைவன் மீண்டு வந்த காலத்து நிகழ்ச்சிகளை இரண்டு அதிகாரங்களிலும், புணர்ச்சியை விரும்பிய தலைவன் தலைவியரும் தம் நெடுஞ்சொடு மாறுபட்டு உரையாடுவதை ஓர் அதிகாரத்திலும், புலவி ஊடல் ஊடல் உவகை முதலியவைகளை மூன்று அதிகாரங்களிலும் விளக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றார்.

"சங்க நூல் மரபுக்கும் இடைக்கால அகப்பொருள் மரபுகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் உள்ளது முப்பால்" என்பதை அழகுடன் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

திருக்குறள் எல்லையிலேயே நின்று அக்கால ஆண் – பெண் சமத்துவத்தை விளக்கும் மூன்றாவது இயலில் இருபாலார்க்கும் பொதுவான பண்புகளும், கடமைகளும் உரிமைகளும் விளக்கப்பட்டுள்ளன.

கூற்றுவகை என்னும் நான்காவது இயலில் தலைவன், தலைவி, தோழி என்னும் மூவர் பேச்சுகளே முதன்மை பெறுவது குறிக்கப்பட்டுள்ளது.

இறுதி இயலில் தொல்காப்பியனார் விரித்துரைக்கும் மெய்ப்பாட்டு நிலைகளுக்கு ஒத்துவரும் குறளுரைகளையும் உடன்வைத்து ஒப்புநோக்கிக் காட்டப்பட்டுள்ள முறை போற்றற்குரியது.

"திருவள்ளுவர் காமத்துப் பாலில் ஐந்திணை அமைப்பு இல்லை; களவு, கற்பு என்னும் கைகோளும் திட்டவட்டமாய் வெளிப்படையாய்த் தெரியவில்லை; தலைவன் - தலைவியர் பேச்சுக்களே மிகுதியாயுள்ளன. கேட்போர் பற்றியும் வரையறுத்துச் சுட்டுதல் எளிதன்று.

இயற்கை புணர்ச்சி தொடங்கி அகப்பொருள் நிகழ்ச்சிகளைப் பிற்காலத்துக் கோவை போலத் தொடர்பாகவும் தரவில்லை. சிற்சில காட்சிகளே காமத்துப்பால் பகுதியில் சிறப்பாக எடுத்தோதப்படுகின்றன.

தலைவன் தலைவி முதலியோர் வாய்ப்பிறப்பாக வரும் பாடல்களில் அவர்தம் மெய்ப்பாடுகள் நன்கு புலனாகிறது. ஆகவே வள்ளுவர் நிகழ்ச்சிகளை மெய்ப்பாட்டின் அடிப்படையிலேயே அமைத்துத் தந்துள்ளார் என்னும் கருத்தே குறட்பாக்களின் தன்மைக்கும் அமைப்பிற்கும் பொருத்தமாகும் எனத் தோன்றுகிறது.

உள்ளுணர்வு வெளிப்பாடுகளையே மையமாக வைத்து அகம் பற்றிய அன்புடைக் காமம் வள்ளுவர் குறளில் ஒரு புத்துருவம் பெற்றுத் திகழ்கிறது'' என்பதை அருமையாக விளக்கியுள்ளார்.

ஆக 'அகப்பொருள் மரபும் திருக்குறளும்' என்னும் இச்சிறிய நூலில் நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆசிரியர் தம் புலமை நலம் துலங்கவும் ஆராய்ச்சி வன்மை மிளிரவும் சிறந்த பல கருத்துகளை வெளியிட்டுள்ளார். தமிழர்க்கே இயைந்த தனித்த சிறப்புடைய அகப்பொருள் மரபினைத் திருக்குறளோடு இயைத்துக் காட்டி நம் சிந்தைக்கு விருந்தளிக்கின்றார் ஆசிரியர். ஆசிரியர் புலவர்மணி மு. சண்முகம்பிள்ளை அவர்கள் சான்றோர் பலருடன் நெருங்கிப் பழகியவர்; அவர்தம் புலமைச் செல்வங்களை நேரிற்கண்டு கேட்டுத் துய்த்தவர். தாம் பெற்ற இலக்கிய இன்பத்தினைத் தமிழுலகு பெறுமாறு இந்நூலினைப் படைத்துள்ளார். அவர்தம் அருந்தொண்டினைப் பாராட்டுகின்றேன். அவருடைய ஆராய்ச்சி முயற்சிகள் வெல்க என வாழ்த்துகின்றேன்.

சென்னை-600 005
30—1—1980

சி. பாலசுப்பிரமணியன்

நான்முகம்

முப்பாலாம் திருக்குறளின் மூன்றாவது பாலாக அமைந்து விளங்குவது காமத்துப்பால். தமிழிலக்கியப் பரப்பில் பண்டு பல பாடல்களைப் பெற்றுள்ள அகப்பொருள் நெறி மரபின் சிறப்பினைக் கோடிட்டுக் காட்டும் வகையில் அமைந்த 25 அதிகாரங்களை கொண்டது, வள்ளுவர் கண்ட காதல் உலகம். களவு-கற்பு வாழ்க்கை நிகழ்ச்சிகள், தமிழ்நெறி எனப் போற்றும் அகப் பொருளின் இரு சிறப்புக் கூறுகளாகும். இலக்கிய இன்பம் மிகுந்த இப்பகுதிப் பாடல்களைப் பலர் பல்வேறு வகையான கண்ணோட்டத்தில் பார்த்து வந்துள்ளனர். இலக்கிய வரலாற்று நெறி முறையில் அகப்பொருளாம் இன்பப் பகுதி திருக்குறளில் இடம் பெற்றுள்ள பாங்கினை ஆராயும் நோக்கில் அமைந்தது இந் நூல்.

அகப்பொருள் இலக்கியங்கள் சங்கப் பாடல்களில் மிகுந்து காணப்படுகின்றன. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் முதன்மையாக வைத்து அகத்திணை இயலை அறிவித்ததோடு களவியல், கற்பியல், பொருளியல் என்னும் இயல்களிலும் பிற இயல்களிலும் அக இலக்கிய மரபுகளை விளக்கியுள்ளார். சங்கம் மருவிய நூல்களாகிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் ஆறு நூல்கள் அகப்பொருள் பற்றி அமைந்துள்ளன. இவ்வகப் பொருளுக்குத் தொல்காப்பியருக்குப் பின் இலக்கணம் வகுத்துரைத்தவர் இறையனார். இறையனாரகப் பொருள் தனித்தனி நிகழ்ச்சியாய் முன்னையோர் பாடி மகிழ்ந்த அகப்பொருள் நிகழ்ச்சிகளைக் கோவைப்பட வகுத்து ஒரு புதுநெறி வகுத்துள்ளது. இதற்கு ஏற்பப் பாண்டிக்கோவை, திருக்கோவையார் முதலிய கோவை இலக்கியங்களும் வளம்பெற வாய்த்தன. பத்திக் கண்ணோட்டத்திலும் அகப்பொருள் நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. நம்மாழ்வார், கல்லாடனார் ஆகியோர் இத்துறையில் தனி இலக்கியமும் படைத்துள்ளனர். இங்ஙனமாகக் காலந்தோறும் அகப்பொருள் நிகழ்ச்சிகள் புத்துருக் கொண்டு பல்வேறு வகையில் பல்கிப் பெருகியுள்ளன.

அகப்பொருள் இலக்கிய வளர்ச்சி குறித்துக் காலந்தோறும் நிகழ்ந்த வரலாறுகளைப் பொதுவாக நோக்குவதனால், வள்ளுவர் வகுத்த காமத்துப்பாலின் தனித்தன்மை நமக்கு விளக்கமாகும். இந்தக் கருத்தில் அகப்பொருள் மரபுகளுள் இலக்கிய இலக்கண வளர்நிலைகளில் முக்கியமான பகுதிகள் எடுத்து ஆராயப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் நெறியும் சங்கப் பாடல்களும் முன்னோடி நூல்களாயினமையினுல் அவற்றிற்கு முதலிடம் தந்து இரு இயல்களில் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த நிலையில் இறையனார் அகப்பொருள் ஒரு திருப்பமாய், கோவைமுறை இலக்கியத்திற்கு உந்துதலா யிருப்பதனுல் அந் நூற்செய்திகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன. கோவைகளுள் முதன்மை வாய்ந்த திருக்கோவையாரில் அமைந்துள்ள துறைகளும் அடுத்துத் தரப்பட்டுள்ளன. அகப்பொருள் நிகழ்ச்சி களுள் சிற்சில கூறுகளை மட்டும் கூறும் பாங்கில் அமைந்த திருவிருத்தம், கல்லாடம் என்னும் நூல்களின் பொருள்களும் சுட்டப்பட்டுள்ளன. காதல் இலக்கியம் உலகப் பொதுவாய் எல்லா மொழிகளிலும் உரம் பெற்றுத் திகழ்வது ஒன்றாதலினுல், பிறமொழியாளர் போக்கினை எடுத்தியம்பும் பாங்கில் 'காதல்' பற்றிய கட்டுரையும் இப்பகுதியின் இறுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றால் அகப்பொருள் இலக்கியம் வளர்ந்து வந்துள்ள பாங்கினை நாம் நன்கு உணர்தல்கூடும்.

கம்பராமாயணம் ஒப்பற்ற பெருங்காவியம். இக்காவியக் கதைப் போக்கில் கம்பன் அகப்பொருள் கருத்துகளுக்கு விளக்கம் தருகிறான். காவிய கர்த்தாக்கள் தமிழ்நெறி மரபு விளக்கம் செய்யும் பான்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கம்பனின் பெருங்காவியம் எடுத்துக் கொள்ளப் பட்டது. இக்காவியத்திற் போலவே ஏனைய காவியங்களிலும் பிற நூல்களிலும் அகப்பொருள் நிகழ்ச்சிகள் பல இடம் பெறுவது காணலாம். வாழ்க்கையில் ஓர் அங்கமாய் அமைந்துள்ள காதல் நிகழ்ச்சிகளை எந்த வகை இலக்கியம் படைத்தோரும் ஏற்றுத் தக்க வகையில் போற்றுதல் இயல்புதானே!

அடுத்துச் சிறப்பு வகையில் திருவள்ளுவரின் காமத்துப்பாலை அடியொற்றித் திருக்குறளில் அகப்பொருள் மரபுகள் என்னும் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. காமத்துப்பாலின் பகுப்பு முறையும் கட்டுக் கோப்பும் குறித்து உரையாசிரியர்கள் காட்டிய வழியில் ஆசிரியர் வாக்குகளை அடிப்படைச் சான்றாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன. அகப்பொருளில் கூற்று நிகழ்த்துவோர் பலராகவும் வள்ளுவர் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவருக்கு முதன்மை தந்து பொருள்களை விளக்கும் பாங்கு கூற்றுவகைப் பகுதியில் புலப்படுத்தப்பட்டுள்ளது. ஆண் பெண் சமத்துவம் குறள்வழி ஆராயப்பட்டுள்ளது.

உள்ளத்திலுள்ளதை உரையிலும் முந்துற ஒருவரின் முகம், கண் முதலிய உறுப்புகளில் தோன்றும் குறிப்புகளே விளக்கிக் காட்டிவிடும். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது நம் நாட்டுப் பழமொழி. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஏதேனும் ஒரு சுவையுணர்வு அடிப்படையாய் அமைதல் இயல்பே. ஆதலால், காமத்துப்பாலில் வள்ளுவர் எடுத்துரைத்த நிகழ்ச்சிகளும் மெய்ப்பாட்டின் அடிப்படையில் அமைந்து விளங்குகின்றது. காமத்துப்பாலின் கட்டுரைகள் மெய்ப் பாடுகளுக்கு இலக்கியமாய் அமைந்து காணப்படுதலை இறுதி இயல் ஆராய்கிறது.

அகப் பொருள் நிகழ்ச்சிகளையும் காமத்துப்பால் பாடல்களையும் கூர்ந்து நோக்க நோக்க இன்னும் பல கோணங்களில் பார்ப்பதற்கு

இடம் ஏற்படலாம். பொது வகையாக நான் கண்ட மட்டில் திருக்குறளில் இடம் பெற்ற அகப்பொருள் மரபுகளை விளக்க முற்பட்டுள்ளேன். இப்பகுதி மேன்மேலும் வெவ்வேறு வகையில் கண்டு களிப்பதற்கு இடம் தருவது என்பதும் உளம் கொளத் தகும்.

நான் இதற்கு முன்னர் திருக்குறள் பற்றி எழுதிய 'திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்,' 'திருக்குறள் அமைப்பும் முறையும்' என்னும் நூல்களும் இரண்டிரண்டு பொருள்களைத் தன்பால் கொண்டவை. அவை போலவே இந்த நூலும் இரு பொருள்களை உள்ளடக்கியுள்ளது. அகப்பொருள் மரபுகள் பொதுவாகவும், திருக்குறள் காமத்துப்பால் பகுதி சிறப்பாகவும் வைத்து இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. காமத்துப்பால் கருத்துக்களை மேன்மேலும் பகுத்துணர்ந்து நுட்பமாய் ஆராய்வதற்கு இந்நூலும் ஓர் அடிப்படையாய் அமைந்துள்ளது எனலாம்.

1973ஆம் ஆண்டு வெளிவந்த திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியின் 5-ஆம் வெளியீட்டிற்குப் பின்வரும் இந்நூல் அந்த வரிசையில் ஆறுவது வெளியீடாகும். ஆறு வருட இடைவெளியில் நூல்கள் வெளிவர இயலாமைக்குத் துறையில் நிகழ்ந்த சில மாறுதல்களே காரணமாகும். பல்வேறு இடையறவுகள் அவ்வப்போது நேர்ந்தமையால்தான் இந்த நூலும் உருவாகக் காலம் பிந்தியது. தமிழ்த்துறையில் இடையிடையே நேர்ந்த பல்வேறு பணிகளும் ஒருங்கிணைந்த பணிமுறை அமைப்புகள் பழுதுபட்டுப் போனதும் விரைவில் நூல் உருவாகாமைக்கு முக்கிய காரணங்களாகும். அவ்வப்போது நிகழ்ந்த இடையறவுகளுக்கு இடையிலும் இந்நூலைச் சிறுகச்சிறுக வளர்த்து வந்துள்ளேன். இப்பொருள் குறித்து இன்னும் பலவற்றைச் சேர்த்து எழுதும் அவா எனக்கு உண்டு. ஆயினும், காலங்கருதி இந்த அளவில் இப்பொழுதைக்கு இதனை முற்றுவிக்கிறேன்.

இந்த நூல் விரைவில் அச்சேறுவதற்குத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பெரிதும் ஊக்கம் தந்து ஒத்துழைத்துள்ளார்கள்; இந்நூலுக்கு ஓர் அணிகலமாக ஆய்வு முறையில் அணிந்துரை வழங்கியும் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு முதற்கண் என் நன்றி உரித்தாகுக.

இப்பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் வாய்ப்பினை எனக்கு அளித்து, நான் எழுதிய இந்த நூலையும் வெளியிடுவதற்கு ஆவன செய்த சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும் துணைவேந்தர் பெருந்தகை ஜி. ஆர். தாமோதரன் அவர்களுக்கும் பெரிதும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்நூலின் அச்சுப்பணியில் ஒத்துழைத்த 'ஜெயமாலிகா' அச்சகத்தாருக்கும் என் நன்றி உரியது.

சென்னை—600 005
31—1—1980

மு. சண்முகம் பிள்ளை

உள்ளுறை

முதற் பகுதி

அகப்பொருள் மரபு

எண்	பொருள்		பக்கம்
1.	அகப்பொருள் நெறிமுறை	...	1
2.	சங்க இலக்கிய மரபுகள்	...	17
3.	களவியல் என்னும் இறையனார் அகப்பொருள்	...	36
4.	திருக்கோவையார் துறை விளக்கம்	...	78
5.	கல்லாடர் பாடிய அகப்பொருள் துறைகள்	...	118
6.	சடகோபர் அருளிய திருவிருத்தத் துறைகள்	...	122
7.	கம்பராமாயணத்தில் அகப்பொருட் கருத்துகள்	...	126
8.	காதல்	...	~~174~~

இரண்டாம் பகுதி

திருக்குறளில் அகப்பொருள் மரபு

1.	காமத்துப்பாலின் பகுப்புமுறை	...	161
2.	காமத்துப் பாலின் கட்டுக்கோப்பு	...	171
3.	ஆண்-பெண் சமத்துவம்	...	199
4.	கூற்று வகை	...	209
5.	மெய்ப்பாட்டு இயற்கையும் காமத்துப்பாலின் கட்டுரையும்	...	217
	பொருட்குறிப்பு அகராதி	...	249

அகப்பொருள் மரபு

1. அகப்பொருள் நெறிமுறை

1. அகப்பொருட் பொதுஇயல் மரபுகள்

அகமே இன்பம்

'அகம்' என்பது, அடங்கியது, இடம், உள்ளிடம், மனம் உள்ளிட்ட பலபொருள் தரும் ஒரு சொல்லாகும். உள்ளமாகிய, மன உணர்வினுல் நுகர்ந்து இன்பமுறும் காம இன்பத்தையும் ஆகுபெயராய் இச் சொல் உணர்த்தும். ஓர் ஆணும் பெண்ணும் தனிமையில் கூடி இன்பம் நுகர்ந்து மகிழ்ந்தும், பின் ஊரும் உலகும் அறியத் திருமணம் புரிந்து சான்றோர் போற்ற இல்லறம் புரிந்தும், வீடும் நாடும் போற்ற வாழும் உலகியல் வாழ்க்கைபற்றிய பொருள்களையெல்லாம் உள்ளடக்கிக் காண்பதே அகப்பொருள் ஆகும். இவை பற்றிய புலவர் பாடல்களை அகப்பாடல் என வழங்குவர்.

மணப்பருவமுற்ற ஆணும் பெண்ணும் மனம் ஒருப்பட்டு இருவரும் ஒருவராய் ஒன்றி வாழும் நிகழ்ச்சியை 'அகவொழுக்கம்' என்பர். அகவொழுக்கம் என்பதே அகத்திணை. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கனுள், இன்பம் ஒன்றனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பாடப் பெறுவன அகப்பொருட்பாடல்கள்.

அகம் பற்றிப் பண்டை உரைகாரர்

பண்டை உரைகாரர்களுள் சிறப்புற்று இலங்கும் நச்சினுர்க்கினியர், தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இயலின் முதற்சூத்திர உரையில், அகம் என்பதுபற்றி நன்கு விளக்கியுள்ளார். அஃது வருமாறு:

> "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனுக 'இவ்வாறிருந்தது' எனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின், அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகுபெயராம்."

இங்ஙனம் அன்புடையராய ஆணும் பெண்ணும் ஒருமனப்பட்டுக் கூடி வாழும் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் பாடல்களே அகப்பொருட் பாடல்கள் ஆகும்.

அகப்பொருளின் வகைகள்

அகப்பொருளை ஆசிரியர் தொல்காப்பியர் எட்டு வகையாக எடுத்துரைக்கின்றார் என்பர் நச்சினார்க்கினியர் (தொல். பொருள். அகத். சூ. 1. உரை). அவையாவன : 1. திணை, 2. பால், 3. செய்யுள், 4. நிலன், 5. காலம், 6. வழு, 7. வழக்கு, 8. இடம்.

இவற்றுள் திணை[1] என்பது பொதுவாகப் பேசப்படும் அகத்திணை, புறத்திணை என்னும் இருபெருங் கூறுகள். பால்[2] என்பது இவ்விரு திணைகளின் உள்ளுறு பகுப்பு. கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழும் அகப்பொருளுக்குரிய பகுதிகளாம். இவ்வாறே புறத்திணைக்கும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, காஞ்சி, வாகை, பாடாண் என ஏழு பகுதிகளாகக் கொள்வர் தொல்காப்பியர். செய்யுள்[3] என்பது, ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி, பரிபாடல், மருட்பா என்னும் அறுவகைச் செய்யுள்களில் அகப் பொருட் பாடல் தரும் மரபினைச் சுட்டுவதாகும். நிலன்[4] முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலத்தைக் குறிக்கும், பாலை என்பது, முல்லை குறிஞ்சி நிலங்களின் வளங்குன்றிய வேற்று வடிவமாகக் கருதப்படுவதனால் அதனை ஒரு தனி நிலம் எனச் சிறப்பாகக் குறிப்பதில்லை. காலம்[5] என்பது பெரும்பொழுதும் சிறுபொழுதுமாய்ப் பன்னிரு வகைத்தாம். வழு[6] என்பது இரு திணைக்கும் உண்டு. இரு திணைக்கும் எவ்வேழாகப் பதினான்கு வழுக்களையும் விலக்குதல் மரபு. வழக்காவது[7] நாடக வழக்கு, உலகியல் வழக்கு என இருவகை. இடம்[8] என்பது வழக்கிடமும் செய்யுளிடமும் என இரண்டாம்.

எட்டிறந்த பலவகை

இனி, எட்டிறந்த பலவகையான் ஆராய்ந்தார் என்று கொள்வோரும் உண்டு எனவும் நச்சினார்க்கினியர் எடுத்துரைக்கிறார். (தொல். பொருள். அகத். சூ. 1. உரை) எட்டிறந்த பலவகை என்னும் போது மேற்குறித்தனவேயன்றி வேறு பலவும் உடன்கூட்டி உரைப்பர். அவையாவன: 1. முதல், கரு, உரி, 2. திணைதொறும் மரீஇய பெயர் : நிலமக்கள் பெயர் : கானவர், கோவலர், நுளையர், உழவர் முதலியனவாக வருவன. 3. திணை நிலைப்பெயர் : தலைமக்கள் பெயர்; குறிஞ்சிக்கு வெற்பன், பொருப்பன், கொடிச்சி என்பது போல ஒவ்வொரு திணைக்குமுரிய தலைமக்கள் பெயரைச் சுட்டுவதாம். 4. இருவகைக் கைகோள் : களவு, கற்பு. 5. பன்னிருவகைக் கூற்று : அகப்பொருட் பாடல்களில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவராகக் கூறப்படுபவர், பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைமகன், தலைமகள், பாணர், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்னும் பன்னிருவர். 6. பத்துவகைக் கேட்போர் : மேலே சுட்டிய கூற்று நிகழ்த்துவதற்குரிய பன்னிருவருள் தலைவன், தலைவி ஒழிந்த பதின்மருமாவர். 7. எட்டு வகை மெய்ப்பாடு : நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகள். 8. நால்வகை உவமம் : வினை, பயன், மெய் (வடிவு), உரு (வண்ணம்) என்பன. 9. ஐவகை மரபு : இருதிணைக்கும் பொதுவாகிய இளமை, ஆண், பெண் பற்றிய மரபும், உயர்திணை நான்கு சாதியும்

பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரமும் பற்றிய மரபும், அவை பற்றி வரும் உலகியல் மரபும் நூல் மரபும் ஆம்.

2. அகப்பொருட் செய்யுள்களின் அங்கங்கள்

அகப்பாடல்களுள் பயின்றுவரும் பொருள் மரபுகளை ஆசிரியர் தொல்காப்பியர் செய்யுளியலில்,

'திணையே கைகோள் கூற்றுவகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ'
(தொல். பொருள். செய்யு. 1)

என்று எடுத்துரைக்கின்றார், இப் பன்னிரண்டு உறுப்பும் அகப்பொருட் பாடல்களுக்கு அடித்தளமாய் அமைகின்றன.

1. திணை : அகப்பொருளில் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழு திணைகளாய்த் தொல்காப்பியர் பகுத்துரைப்பர். இப்பாகுபாடு அந்நாளைய இலக்கியப் போக்கினை ஆய்ந்து வரையறுத்த முடிவாகும்.

2. கைகோள் : கைகோள் என்பதற்கு 'ஒழுக்கங்கோடல்' என்று உரைப்பர் பேராசிரியர் (தொல். பொருள். 500 உரை). அகத்திணை ஒழுக்கம் களவும் கற்பும் என இரு பெரும் பாகுபாட்டுள் அடக்கப் பெறும். இவற்றுள் முதலது மறைந்த ஒழுக்கம்; பின்னது வெளிப் பாடான உலகு அறி வாழ்க்கை,

3. கூற்றுவகை : பேச்சுக்குரியார் இன்னார் என அறிவித்தல். பாடலைக் கேட்பார்க்கு இதனைச் சொல்லுபவர் இவர், இஃது இன்னா ருடைய பேச்சு என்று தெரிவிப்பதாம்.

4. கேட்போர் : இக்கூற்று இன்னார் இன்னார்க்குச் சொல்லியது என அறிவித்தலாம்.

5. களன் : களன் ஆவது களம். அஃதாவது இடம், ஒரு நிகழ்ச்சி முல்லை, குறிஞ்சி, முதலிய ஐவகை நிலங்களுள் ஒன்றில் நடை பெறுவது என்றோ இரவுக்குறி பகற்குறி என்னும் குறியிடங்களில் நடைபெறுவதாகவோ அறிவித்தல்.

6. காலவகை : நிகழ்ச்சிக்குரிய இடத்தைக் குறிப்பிட்டாற்போல அந்நிகழ்ச்சி நடைபெறும் காலத்தையும் வெளிபடுத்தலாம். இது பெரும்பொழுது சிறுபொழுது என இரு கூறாய் அமையும்.

பெரும்பொழுது என்பது, ஓர் ஆண்டில் இரண்டு திங்கள் அளவினை தாய் வரும், அவை, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனல், முதுவேனில் என்பனவாம். சிறுபொழுது என்பது ஒரு நாளில் 5 நாழிகை, அதவாது 4 மணி நேரம் கொண்ட குறுகிய காலமாகும். வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, நடுநிசி என அவற்றை வழங்குவர்.

7. பயன் : தாம் சொல்லிய பொருளினாலே வேறொன்று விளையு மாறு செய்தலாம்.

8. மெய்ப்பாடு : நிகழ்ச்சிக்குரியர் பேச்சுகளைக் கேட்டார்க்கு அவர் கூறிய பொருள்கள் கண்ணெதிரிலே தெரியுமாறு போலப் புலப்பட, அதனால் அவர் உணர்ச்சி வயத்தராகவே அவர்தம் உடம்பிலே சில தோற்றங்கள் புலனாகும். மெய்யிலே பொருந்திப் புறத்தார்க்குப் புலனாகும் உள்ளுணர்வு வெளிப்பாடே மெய்ப்பாடு என்பதாம்.

9. எச்சவகை : வெளிப்படையாய்ச் சொல்லப் பெறாத மொழி களைக் குறிப்பு மொழிகளினால் கண்டு உணர்தல். அவற்றைக் குறிக் கொண்டு உள்ளடங்கிய பொருளினை ஓர்தல்.

> 'சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
> புல்லிய கிளவி எச்ச மாகும்.'

(தொல். பொருள். 518)

10. முன்னம் : சொல்லுதற்கு முன்பே குறிப்பு உணர்ந்து செய லாற்றுதல். உயர்ந்தோரும் இழிந்தோரும் தத்தம் விருப்பின் வண்ணம் ஒப்பச் சொல்லுதல். அங்ஙனம் சொல்லுதற்கேற்ப அவற்றைப் போற்றிச் செய்ய முற்படுவர்.

> 'இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியவென்று
> அவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.'

(தொல். பொருள், 519)

11. பொருள்: புலவன், தான் கற்பித்துக் கொண்டு கூறுவதாகிய பொருளினை விளக்கமுறச் செய்தல்.

12. துறைவகை : முதல் கருப்பொருள்கள் முறை பிறழ்ந்தாலும் இஃது இன்ன பொருண்மைக்கே சாரும் எனப் பாடலுள் காணும் கருவி கொண்டு தெளிதல்.

தொல்காப்பியரின் மரபினைப் பெரும்பாலும் அடியொற்றியே இறையனாரகப் பொருளாசிரியர், களவு கற்புப்பற்றிய அகப்பொருட் பாடல்களைப் பின்வரும் பத்து இலக்கணத்தானும் உரைக்கக் கடவர் என்கிறார்.

> 'திணையே கைகோள் கூற்றே கேட்போர்
> இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
> பயனே கோளென் றாங்கப் பத்தே
> அகனைந் திணையும் உரைத்தல் ஆறே.'

(இறை. கள. 56)

இவ்வாறாக அகப்பொருள் நெறி புலனெறி வழக்காய் ஒருநெறிப்பட்டு வந்தமையைப் பண்டைப் பனுவல்களில் பரக்கக் காணலாம்.

3. ஐந்திணை நெறி

புலனெறி வழக்கம்

அகப்பொருளாம் இன்பவாழ்க்கை ஓவியம் உலகியல் அடிப்படை யில் நாடக வழக்காய்ப் புனைந்துரைக்கப்படுவதாகும். புலவர் பெரு

மக்கள் இன்பவொழுக்கினைப் பாடுதற்குச் சிற்சில மரபுகளையும் மேற் கொண்டுள்ளனர். இப் புலவர் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டே வழிவழி வந்த மரபாகும். இம்மரபினை அவர்,

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்.'
(தொல். பொருள். அகத். 53)

என்று குறிப்பிடுகின்றார்.

அகப்பொருளுக்கு அடிநிலை

தொல்காப்பியர் அகத்திணையியலில் விவரித்துள்ள பொருள்கள் எல்லாம் அகப் பொருட் பாடலுக்கு அடிநிலையாய பொது மரபுகளை எடுத்தியம்புவன.

இன்ப வாழ்க்கைக் கூறுகள் எல்லா நிலத்தும் நிகழ்வதாயினும் புலவர் அவற்றுள் ஒவ்வோர் ஒழுக்கத்தை நிலம், பொழுது, பிற இயற்கைச் சூழ்நிலைகளின் அடிப்படையில் ஒவ்வொரு நிலத்தொடு சார்த்தி உரைப்பாராயினர். நச்சினார்க்கினியர் ஓரிடத்து,

'இவ்வதிகாரத்து நாடக வழக்கு என்பன புணர்ச்சி உலகிற்குப் பொதுவாயினும், மலைசார்ந்து நிகழும் என்றும், காலம்வரைந்தும், உயர்ந்தோர் காமத்திற்குரியன வரைந்தும் மெய்ப்பாடு தோன்றப் பிறவாறும் கூறிய செய்யுள் வழக்காம்'

எனத் தரும் விளக்கம் (தொல். பொருள். அகத். 53 உரை) அகப் பாடல் மரபினைப் புலப்படுத்தும்.

எழுதிணை

அகப்பொருளுக்குரிய திணை ஏழு எனப் பொருளதிகார முதற் சூத்திரத்திலேயே தெளிவுபடுத்துகிறார் தொல்காப்பியர்:

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.'
(தொல். பொருள். அகத். 1)

இச்சூத்திரத்தில் 'என்ப' என அவர் முன்னையோர் மரபினைச் சுட்டு கின்றார். எனவே, தொல்காப்பியர் தமக்கு முற்பட்ட காலத்து எழுந்த இலக்கிய மரபுகளையும் தம் கால வழக்கொடு ஆய்ந்து, அவற்றின் முறைமைகளைத் தம் நூலுள் விளக்கியுள்ளார் என்பது வெளிப்படை.

ஒருதலைக் காமமான கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய் தல், பாலை எனப்படும் ஐந்திணை, பொருந்தாக் காமமான பெருந்திணை என அகத்திணை ஏழு திணையாகக் கொள்ளப்படும். இவற்றுள் கைக் கிளையும் பெருந்திணையும் சிறந்த இன்பவொழுக்கமன்மையின் அவற்றை அகத்தின் சற்று வழுவிய நிலையாகக்கொண்டு 'அகப்புறம்' என்பர்.

'அகனைந்திணை எனவே அகமென்பது நடுவுநின்ற ஐந்திணையாதலிற் கைக்கிளையும் பெருந்திணையும் அவற்றின் புறத்து நிற்றலின் அகப் புறம் என்று பெயர் பெறுதலும் பெற்றாம்'

என நச்சினார்க்கினியர் தரும் விளக்கமும் (தொல். அகத். 54 உரை) அகம், அகப்புறம் என்பவற்றைத் தெளிவுபடுத்தும்,

ஐந்திணை

உலகம் போற்றும் உயரிய இன்பவொழுக்கம் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என வகுத்துரைக்கும் ஐந்திணை ஒழுக்கமே, இந்நிலங்களின் அடிப்படையில் சித்திரிக்கப் பெறும் இன்ப வொழுக்கம் முறையே புணர்ச்சி, இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பனவாம். இவற்றுள் முதலில் நின்ற புணர்தலும் ஈற்றில் நின்ற பிரிதலும் சிறப்பாகக் கருதப்படும். ஏனைய இருத்தல், இரங்கல், ஊடல் என்பன தலைவனது பிரிவின் காரணமாய் ஏற்படுவனவாம்.

இவ்வைந்திணையை ஆசிரியர் தொல்காப்பியர்,
'நடுவண் ஐந்திணை'
(தொல். பொருள். அகத் .2)

'மக்கள் நுதலிய அகனைந்திணை'
(தொல். பொருள். அகத். 54)

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை'
(தொல். பொருள். கள. 1)

என்றெல்லாம் அடைமொழி புணர்த்துப் பேசுகின்றார். அன்பு நெறிப் பட்ட அகவாழ்வாம் இன்ப நிகழ்ச்சிகள் ஐந்திணைப் பின்னணியிலே சித்திரித்துப் பாடப் பெறும் வழக்கினை அவர் தரும் அடைமொழிகள் நன்கு விளக்கும்.

அகப்பாடலுள் முப்பொருள்

அகப் பொருட் பாடல்களில் மூன்று பொருள் அடிநிலையாய்—உயிர் நிலையாய்—அமைந்து விளங்கும்.

'முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங் காலை'
(தொல். பொருள். அகத். 3)

என ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவதனால், முதல், கரு, உரி என்னும் மூன்று பொருளும் அகப்பாடல்களுக்கு அடிநிலையாய் வேண்டுவதன் இன்றியமையாமை புலப்படும். உரிப்பொருளோ ஒழுக்க நிலையை உணர்த்துவதாயினும் அவ்வொழுக்கம் நிகழ முதற் பொருள், கருப் பொருள்கள் ஏற்புடையனவாய் அமைந்து விளங்குதல் வேண்டும். அப்பொழுதுதான் குறித்ததொரு இன்பவொழுக்கம் சிறந்து காணப் படும்.

முதற்பொருளான நிலம் பொழுதுகளும் கருப்பொருளான தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், யாழ் என்பனவும் (தொல். பொருள், அகத். 18) ஒவ்வொரு நிலத்தும் வேறு வேறாய்க் காணப்படும். இவையெல்லாம் இன்பவொழுக்கிற்குப் பின் னணிச் சார்பாய் அமைகின்றன,

ஐந்திணை-ஒழுக்கம்

புணர்தல், பிரிதல் இருத்தல், இரங்கல் ஊடல், என்பனவும் அவற்றிற்கு ஏதுவான நிமித்தங்களும் ஐந்திணைகளுக்கும் உரிய உரிப் பொருள்கள் ஆகும்.

'புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரியப் பொருளே.'

(தொல். பொருள்; அகத். 14)

இச் சூத்திரத்தினுள் சுட்டிய புணர்தல், பிரிதல் முதலியன முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணைக்கும் உரியன. இங்கே அகப்பொருள் ஒழுக்கினை ஆசிரியர் முறைப்படுத்தி உரைத்தற்கும் மரபு நெறி ஏதுக்கள் இல்லாமல் இல்லை. நச்சினார்க் கினியர் தரும் விளக்கம் வருமாறு :

"அகப் பொருளாவது புணர்ச்சியாகலானும் அஃது இருவர்க்கும் ஒப்ப நிகழ்தலானும் புணர்ச்சியை முற்கூறி—

புணர்ந்துழியல்லது பிரிவின்மையினும், அது தலைவன் கண்ணதாகிய சிறப்பானும், தலைவி பிரிதற்குப் புலனெறி வழக்கு இன்மையானும் பிரிவினை அதன்பிற் கூறி—

பிரிந்துழித் தலைவி ஆற்றியிருப்பது முல்லையாகலின் இருத்தலை அதன்பிற் கூறி—

அங்ஙனம் ஆற்றியிராது தலைவன் ஏவலிற் சிறிது வேறுபட்டிருந்து இரங்கல் பெரும்பான்மை தலைமகளே யாதலின் அவ் விரங்கற் பொருளை அதன்பிற் கூறி—

இந்நான்கு பொருட்கண்ணும் பொதுவாதலானும் காமத்திற்குச் சிறத்தலானும் ஊடலை அதன்பிற் கூறி—

இங்ஙனம் முறைப்படுத்தினார்.

(தொல். பொருள். அகத் 14. நச்சினார்க். உரை)

ஐந்திணை முறைவைப்பிற்கான பொருத்தங்களை இவ்வாறு விளக்கிய நச்சினார்க்கினியர் பிறிதோரிடத்து,

'ஐந்து உரிப் பொருள்களிலும் குறிஞ்சித்திணை களவுப் பகுதிக்கும், முல்லை, மருதம், நெய்தல் என்னும் மூன்றும் கற்புப் பகுதிக்கும் சார்த்திப் புலவர் பெருமக்களால் பாடப் பெறும். பாலை என்பதைக் களவு, கற்பு என்னும் இரண்டிற்கும் பொதுப்பட நிகழும் ஒழுக்கமாய்க் கொண்டு நெறிப்படுத்துரைப்பர்'

(தொல். பொருள், அகத். 25 உரை)

என்கிறார். இவ்வுரைப் பகுதியால் அகப்பொருள் நெறியுள் காணும் ஒழுக்கப் போக்குமுறை நன்கு விளக்கமாகும்.

பிரிவு வகை

புணர்தல் போன்று பிரிதலும் அகவாழ்க்கையில் நீக்க இயலா வகையிலே பிணைந்து வருகின்றது. இல்லொழுக்கில் ஈடுபட்ட ஆண் மகன் தனக்காகவும், தான் பிறந்த நாட்டிற்காகவும், பிறருக்காகவும் அன்புக்குரிய தலைவியைச் சிலகாலம் பிரியநேரும். எனவே, இப்பிரிவு வகை பற்றியும் அகத்திணையியலில் ஆசிரியர் தொல்காப்பியர் விளக்கம் தருகிறார். தவிரவும், எத்தகையார் எவ்வெப் பிரிவில் செலற்குரிய ரென்னும் வரையறைகளையும் உலகியல் நெறி பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். (தொல். பொருள். அகத். 25-34).

அகப்பொருள் மரபுகள்

அகப்பொருள் பொது மரபுகளைத் தொல்காப்பியர் அகத்திணை இயலில் தொகுத்துக் கூறியதோடன்றிக் களவியல், கற்பியல்களிலும் பொருளியலிலும் ஆசிரியர் விவரித்துள்ள வகைமையினை நன்கு உணர்தல் வேண்டும். ஆகவே, அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்பன அகப்பொருள் பற்றிய கவிமரபுகளை விளக்கும் பகுதிகளாம். மற்றும் மெய்ப்பாட்டியல், செய்யுளியல்களிலும் அகப் பாடல் மரபுகள் சில சுட்டப்பட்டுள்ளன. கூர்ந்து நோக்கின், புறத் திணையியல் ஒன்று நீங்கலாக ஏனையவை எல்லாமே அகப்பாடல் குறிப்பு களைக் கொண்டன என்றும் கொள்ளலாம்.

4. களவு நெறி

காமக் கூட்டம்

ஒத்த பண்புடைய ஓர் இளங்காளையும் பருவ மங்கை ஒருத்தியும் தனியிடத்து எதிர்ப்பட்டு, இருவரும் ஒருமை உள்ளத்தராய் முதலில் உள்ளப் புணர்ச்சியை உறுகின்றனர். இதுவே அடுத்து மெய்யுறு புணர்ச்சிக்கும் வழி வகுக்கிறது. இங்ஙனம் மனமொத்த காதலர் இருவ ரும், தத்தம் தமரும் உலகமும் அறியாது, மறைவிடத்துக் கூடி, இன்பம் துய்க்கும் இந்த நிலையே 'களவு நிலை' எனப்படும். இக்களவொழுக்கம் பிறர்க்குரிய பொருளை மறைந்து கவரும் களவு போன்றதன்று. வேதம் 'மறை' என்று வழங்கப்படுவது போன்று இருவர் உளங்கவரும் உழுவ லன்பு பற்றிய ஒழுக்கமும் 'களவு' என்னும் பெயர் பெற்றது என்று அறிஞர் கருதுவர் (தொல். பொருள். 92, நச். உரை). 'களவென் னது மறையென்றதனால் இது இமை பயக்கும் களவன்மை கொள்க' என்கிறார் இளம்பூரணர் (தொல். பொருள். 87 உரை). இதனைக் 'காமக்கூட்டம்,' 'காமப்புணர்ச்சி' (தொல். பொருள். 498), இயற் கைப் புணர்ச்சி எனவும், இருவரும் முயற்சியும் உளப்பாடுமின்றித் தெய்வம் வழிப்படுத்தக் கூடினமையின் 'தெய்வப் புணர்ச்சி' எனவும், இருவர் நலமும் ஒருவரின் ஒருவர் முன்னுற எய்தப்பட்டமையால் முன்னுறு புணர்ச்சி எனவும் பெயர் பெற்றன என விளக்கம் தருகிறார். 'தெய்வமும் இயற்கையும், முன்னுறவும் பொதுக்காரணமும் காமம் சிறப்புக் காரணமும் ஆகலான் காமப் புணர்ச்சி எனப்பட்டது' என்று திருக்கோவையார் உரையில் பேராசிரியர் கூறுவதும் (7, உரைக் குறிப்பு) கருதத் தக்கது.

களவில் நான்கு கூறு

இந்தக் களவு வாழ்க்கை நான்கு கூறுபட அமைவதாகும். உள்ளம் ஒப்பி இருவரும் இயைந்து கூடிய கூட்டம் முதல்நிலை; மீண்டும் அந்த ஆடவன் முன் கூடிய இடத்திற்குச் சென்று தலைவியை அடுத்த நாளும் கூடி மகிழும் நிலை இரண்டாவதாம். இதனை 'இடந்தலைப்பாடு' என்பர்.

மூன்றாவது நிலை தலைவன் தன் பாங்கன் துணையுடன் தலைவி இருப்பிடம் அடைந்து அவளோடு மருவி மகிழ்தல். இதனைப் 'பாங்கொடு தழால்' எனத் தொல்காப்பியரும், 'பாங்கற் கூட்டம்' எனப் பின்னூலாரும் குறிப்பிடுவர்.

களவு ஒழுக்க நிலையில் தலைவன், தலைவியின் உயிர்த் தோழியை அறிமுகம் செய்துகொண்டு அவள் துணை நிற்பத் தலைவியை அடைந்து மகிழுவான். இதனைத் தோழியிற் புணர்வு - பாங்கியர்க் கூட்டம் என்பர்.

பாங்கியின் துணையால் தலைவன் பகலிலும் இரவிலும் ஓரிடம் குறித்து, ஆண்டுத் தலைவி வரத் தலைவனும் அவ்விடம் சென்று அவளோடு கூடி இன்புறுவான். இதுவே பகற்குறி, இரவுக்குறி எனப் பெயர் பெறும்.

இதன் பின்னர்த் தலைவனுக்கு உலகியல் எடுத்துக் கூறித் திருமணம் செய்துகொள்ளத் தூண்டிக் கற்பு நெறிப்படுத்தத் தோழி உறுதுணையாய் இருப்பாள். இந்நிகழ்ச்சிகளை 'வரைவு கடாதல்', 'அறத்தொடு நிற்றல்' என்பர். களவுப் புணர்ச்சியில் தோழியின் பங்கு பேரளவினதாகும். இவை அகப்பாடல்களில் புலவர் பெருமக்கள் சிறப்பித்துப் பாடும் பொருட் கூறுகளாம்.

> "காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
> பாங்கொடு தழாலும் தோழியிற் புணர்வும் என்று
> ஆங்க நால் வகையினும் அடைந்த சார்பொடு
> மறையென மொழிதல் மறையோர் ஆறே'.
>
> (தொல். பொருள். செய்யுள். 186)

என்பது களவு நிகழ்ச்சியின் முக்கியமான நான்கு பகுதிகளையும் வரையறுத்துரைக்கும் தொல்காப்பிய நூற்பாவாகும்.

மறையோர் ஆறு

இங்கே 'மறையோர் ஆறு' என்பதைத் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் 'கந்தருவ வழக்கம்' என்று குறிப்பிடுவர். இதில் நான்கு வகைக் கூறுபாடும் பெரும்பாலும் களவு ஒழுக்கத்தில் இடம் பெறலாம்; சில இல்லாமலும் இருக்கலாம்.

> 'யாழோர் கூட்டம் உலகியலாதலால் இல்ல தன்றாமாகவே உலகத்தார் நிறைவுடையராகி மறை வெளிப்படாமல் ஒழுகுவாரும், மறை வெளிப்படுத்து விளம்பும் பாங்கனை உடையாரும் இல்லாதாரும் எனப் பலவகையினர்'

என்று எடுத்துக் காட்டுகிறார் உரைகாரராகிய பேராசிரியர் (தொல். பொருள். செய்யு, 186 உரை).

5. களவு நெறியில் அறிமுகமாகும் மாந்தர்

களவொழுக்கத்தில் ஆடவர்-பெண்டிர் கூட்டத்திற்குத் துணை புரிந்து கூற்று நிகழ்த்துவோர் சிலரே; தலைவன் தலைவியரைத் தவிர்த்து நால்வரே.

'பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியொடு
அளவியல் மரபின் அறுவகை யோரும்
களவினிற் கிளவிக் குரியர் என்ப'

(தொல். செய்யு. 189)

என்பது தொல்காப்பிய நூற்பா.

தொல்காப்பியர் இந் நூற்பாவில் வகுத்துக் கூறிய பார்ப்பான் முதலியோரை முறைப்பட வைத்து மொழிந்தமைக்கு விளக்கவுரை யாசிரியராகிய பேராசிரியர் பின்வருமாறு காரணங்களை எடுத்து மொழிகின்றார்.

"பார்ப்பான் என்பான் நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான் எனப்படும். பாங்கன் என்பான் அவ்வாறன்றித் தலைமகன் வழி நின்று ஒழுகி வருமாகலின் அவனை அவன்பின் வைத்தான். தோழி அவன் போன்றும் பெண்பாலாகலின் அவளைப் பின் வைத்தான். செவிலி மாற்றம் சிறுவரவிற்று ஆதலின் அவளை அவளின்பின் வைத்தான். அவரிற் சிறந்தமையின் சீர்த்தகு சிறப்பிற் கிழவனையும் கிழத்தியையும் அவர்பின் வைத்தான். அவ்விருவருள்ளும் தலைமகளது கூற்றே பெருவரவிற்று ஆதலின் அவளை ஈற்றுக்கண் வைத்தான் என்பது."

(தொல். பொருள். செய்யுள். 189 உரை)

இந்த விளக்கம் தம் கால இலக்கிய இலக்கணங்களின் நன்கு தோய்ந்து பேராசிரியர் கண்ட உண்மைகளின் அடிப்படையில் பிறந்தது எனக் கருதலாம்.

இலக்கிய மரபு

தொல்காப்பிய மரபினையும் பேராசிரியரின் விளக்கத்தையும் கொண்டு நோக்கின், களவுப் புணர்ச்சிக் காலத்துப் பார்ப்பான்—பாங்கன், தோழி—செவிலி, கிழவன்—கிழத்தி என்னும் அறுவரும் பேச்சு நிகழ்த்துதற்குரியார் என்பது உறுதிப்படும். இது பண்டை நாளைய இலக்கியமரபு. எனவேதான் பேராசிரியர் தமது உரையுள்,

"எண்ணப்பட்ட அறுவரும் களவொழுக்கினுள் நிகழ்ந்தன கூறினராகவல்லது ஒழிந்தோர் கூறினராகச் செய்யுள் செய்யப் பெறார்"

(தொல். பொருள். செய்யுள். 189 உரை)

என்று தெளிவுற எடுத்துக்காட்டியுள்ளார். எனவே, அக்காலத்து எழுந்த களவொழுக்கம் பற்றிய தமிழ் இலக்கியங்களில் புலவர் மேற்கொண்ட மரபு இவையே என்பது விளக்கமாம்.

6. கற்பு நெறி வாழ்க்கை

உடன்போக்கு

உளமொத்த காளையும் தோகையும் கணவனும் மனைவியுமாய் இல்லறம் நடத்துவதே கற்பு வாழ்க்கை. களவு மணம் கொண்டார் நிலையைத் தோழி அறத்தொடு நிற்பதால் தமர் அறிந்து அவர்தம் மணத்திற்கு உடன்பட்டுக் கற்பு வாழ்க்கையில் புகச் செய்வர். சில சமயம் தலைவியின் தமர் அவளை இற்செறித்து, அவளுடைய களவு ஒழுக்கினைத் தடை செய்வாராயின், தலைவி தலைவனுடன் அவன் ஊருக்குப் பிறர் அறியாவகை தனித்துச் செல்லுதலும் உண்டு; இதனை உடன்போக்கு என்பர்.

உலகறி நன்மணம்

இவ்வாறு உடன் செல்லும் தலைவியைத் தமர் இடை வழியிற் கண்டு மறித்துப் பின், அவர்தம் அன்பின் முதிர்ச்சி கண்டு மீள்வர். பின் அவள் சுற்றத்தார் தலைவனுடைய ஊருக்குச் சென்று வேண்ட, அத்தலைவன் தலைவியின் பெற்றோர் இருப்பிடம் வந்து, முறைப்படி உலகறியத் திருமணம் செய்து கொள்வன். அவ்வாறு தமர் முன்வாரா நிலையில் தலைவனே தம் ஊரில் தலைவியை உலகறியக் கற்பு மணம் புரிந்து கொள்வதும் உண்டு. 'மறை வெளிப்படுதலும் தமரிற் பெறுதலும்' (தொல். பொருள். செய்யுள். 187 உரை) என்று ஆசிரியர் தொல்காப்பியர் குறிப்பிடுதலின் களவு வெளிப்பட்டபின் தலைவியின் தமர் உடன்பட்டுக் கொடுத்தலே பெரும்பான்மை.

> 'கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'
>
> (தொல். பொருள். கற்பு. 1)

எனக் கற்பு நெறி மணமுறைக்கு இலக்கணம் வகுக்கிறார் ஆசிரியர் தொல்காப்பியர். சடங்கு முறையோடு தலைவியைக் கொடுத்தற்கு உரிமையுடைய பெற்றோர் கொடுப்பக் கிழவன் உலகறிய ஏற்றுக் கொள்வதுதான் கற்புத் திருமணம் என்பது இதன் கருத்து. உலகம் கலைநயத்துடன் களித்துப் பெருக்கமுற வாழ்வதற்கு வழி செய்கிறது திருமணம்.

> 'மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
> உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடி?
> உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
> கலைநவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ!'

எனவரும் திருவாசகப் பாடலும் (திருச்சாழல் 13) உலகறியத் திருமணம் கொண்டு வாழ்வதன் உண்மையை உணர்த்துதல் காணலாம்.

மனையோள் மாண்புகள்

உலகறியத் திருமணங் கண்ட ஆடவனும் மங்கையும் ஓர் இல்லத்தில் இருந்து இல்லறத்தாருக்குரிய கடமைகளில் தவறாது வாழ்ந்து

வருவதே உலகியல். இல்லற வாழ்வில் தலைவி போற்றி ஒழுக வேண்டும் நெறிகள் பல.

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட்கு உரிய.'

(தொல். பொருள். கற்பு. 11)

கற்பு முதல் சுற்றம் ஓம்பல் ஈறாக ஏழு குண நலங்கள் மனைவிக்குக் கட்டுரைக்கின்றார் தொல்காப்பியர். விருந்தினர் முதலியோரை ஓம்புதல் இல்லறத்தார் கடன்.

கற்பு வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள்

இந்தக் கற்பு வாழ்க்கையில் மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு என ஐந்து வாழ்க்கைப் போக்குகள் புலவரால் சிறப்பித்து உரைக்கப்படும்.

'மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவை முதலாகிய இயனெறி பிழையாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பு எனப்படுமே'

(தொல். பொருள். செய்யுள். 186)

என்று கற்பு என்னும் ஒழுக்க நியதியைத் தொல்காப்பியர் தொகுத்து உணர்த்துகிறார்.

இவற்றுள் மலிதல் என்பது இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலியவற்றான் மகிழ்தலாம்.

புலவி என்பதற்குப் பேராசிரியர், 'புணர்ச்சியான் வந்த மகிழ்ச்சி குறைபடாமல் காலங் கருதிக் கொண்டிருப்பதோர் உள்ள நிகழ்ச்சி' என விளக்கம் தருகிறார். இதனைச் 'சிறு பிணக்கு' என்றும் கூறுவர். இது தலைவனின் குளிர்ப்பக் கூறும் பேச்சாலும் அவள் உள்ளமும் உடலும் கிளர்ந்தெழுமாறு முயங்கலாலும் தீர்ந்துபடும் என்பர்.

ஊடல் என்பது மனம் மாறுபட்டது போலப் பிணங்கிக் கூறுவதாம். இது உள்ளத்தாலன்றி உரையாலும் வெளிப்படுத்தப்படும். 'உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்பு மொழியானன்றிக் கூற்று மொழியான் உரைப்பது' என்கிறார் பண்டைய உரைகாரராகிய பேராசிரியர்.

உணர்தல் என்பது தலைவன் உணர்த்த தலைவி உணர்ந்து தெளிதலாம் (தொல். 499 உரை) தலைவி ஊடிக் கூறும்பொழுது தலைவன் அவள் பிணங்கி மாறுபடும்படியான ஒழுக்கம் எதுவும் தன்பால் இன்மை கூறி அவளைத் தெளிவித்தலை 'உணர்த்தல்' என்பர். அதனை அவள் உணர்ந்து தெளிதலால் உணர்வு என்று கூறப்பட்டுள்ளது.

பிரிவு என்பதோ முன்கூறிய நான்கினும் வேறுபட்டது. தலைவன் ஓதல், நாடுகாவல், பொருளீட்டல் முதலியவற்றின் ஏதுவாய்த் தலைவியைச் சில காலம் பிரிந்து செல்வன். தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் நிலையில் தலைவன் பிரிவு ஆற்றுது பொழுதொடும் இயற்கையொடும் தலைவி வருந்திக் கூறித் தலைவனின் பிரிவை ஆற்றியிருப்பாள்.

அறுவகைப் பிரிவு

மனை வாழ்க்கையில் ஒருவன் தன் மனையாளை விட்டுப் பிரிந்திருக்கும் நிலைமை சிற்சில சமயங்களில் நேரிடுகின்றன. இவ்வாறு ஒரு தலைமகன் கற்பு வாழ்க்கையில் பிரியும் பிரிவினை அறுவகைப்படுத்து இலக்கண நூலார் வரையறை செய்துள்ளனர்.

'ஓதல் பகையே தூது இவை பிரிவே'
(தொல். பொருள். அகத். 25)

எனத் தொல்காப்பியர் மூன்று பிரிவுகளை முதன்மையாக வகுத்துரைக்கின்ருர். கல்வியில் மேம்பாடு பெற ஓதுதற்குப் பிரிதலும், பகைமேற் பிரிதலும், பகைவரைச் சந்து செய்வித்தற்காகப் பிரிதலும் என்னும் இம்மூன்றும் சமூகத்தில் உயர்ந்தார்க்கு ஒப்ப உரியவையாம் என முற் கூறி விளக்குகின்ருர்.

மற்றும் நாடு காக்கும்பொருட்டுப் பிரிதலையும் பொருள் தேடும் பொருட்டுப் பிறநாடு நோக்கிப் பிரிந்து செல்லுதலையும் அடுத்த நிலையில் வைத்துப் பேசுகிருர். (தொல். பொருள். அகத். 28-33). ஓதல், பகை, தூது, காவல், பொருள் என்னும் இந்த ஐவகைப் பிரிவினையே அகத் திணையியலில் எடுத்துக் கூறுகிருர்.

ஒருவனும் ஒருத்தியுமாகி இன்பம் நுகர்ந்து இல்லறம் நிகழ்த்துதலே சிறந்தது என்பதும், காமங் காரணமாகப் பரத்தையர்பால் பிரிதல் வழுவாம் என்றும் சுட்டுமிடத்து வழுவமைதியாக,

"பரத்தை வாயில் நால்வர்க்கு முரித்தே
நிலத்திரி பின்றஃது என்மனுர் புலவர்'
(தொல். பொருள். பொருளி. 30)

என்று பொருளியலில் விளக்குகிருர் தொல்காப்பியர். இதனுல் ஏனைய ஓதல், தூது முதலியன போலப் பரத்தையர்ப் பிரிவு சிறப்புடையதன்று என்று அவர் கருதியமை புலப்படும்.

பின்னூலாராகிய இறையனுரகப் பொருள் ஆசிரியர் முன்னூர்லார் நெறிபற்றி, கற்புக்காலப் பிரிவுகள் எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டி,

'ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே அவ்வயின் பிரிவே'
(இறையனுர் களr; 35)

என்று விளக்க முற்படுகிருர்.

கற்பு வாழ்வில் பழகும் மாந்தர்

களவு வாழ்க்கையில் இடம் பெறுவோரினும் மிகுதியான மாந்தர் கற்பு வாழ்க்கையில் உலகியலிலே எதிர்ப்படுகின்றனர். பார்ப்பான்'

பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி என்னும் களவியற் பகுதியில் அறிமுகமான அறுவர் கற்புப் பகுதியிலும் இடம் பெறுவர். இவ் வறுவரைத் தவிரப் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என மேலும் அறுவர் இப்பொழுது வந்து சேருகின்றனர்.

'பாணன், கூத்தன். விறலி, பரத்தை,
யாணம் சான்ற அறிவர், கண்டோர்,
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொல்நெறி மரபின் கற்பிற் குரியர்'

(தொல். பொருள். செய்யுள். 190)

என்று கற்பிற்குரியாரை வரையறுத்துரைக்கிறார் தொல்காப்பியர்

அன்றியும், பாகனும் தூதனும்கூடக் கற்பியல் பாடல்களில் இடம் பெற்றுள்ளனர். இவ்விருவரும் குறிப்பாகப் புறப்பொருளிலே சிறப்பிடம் பெறுவர். எனவே, தொல்காப்பியர் வகுத்துக் கூறிய பன்னிருவருடன் பாகனும் தூதனும் சேரப் பதினால்வர் கற்பு வாழ்க்கையைச் சித்திரிக்கும் பாடல்களுள் இடம் பெறுகின்றமை தெரியவரும்.

(தொல். பொருள். செய்யுள். 190 பேரா. உரை)

மேலும், வேறு சிலரும் களவு, கற்பு ஒழுக்க நிலையில் குறிப்பிட்டுப் பேசப்படுவர். இவ்வாறு தோழி முதலியோரின் உரையில் இடம் பெறுவார், அயலில் உள்ளார், ஊரையடுத்த சேரியிலுள்ளார், துன்பங் கண்டு இரங்குவார், தந்தை, தன்னை (தமையன்) ஆகியோராவர். இவருள் ஊரார், அயலார், சேரியார் என்பார் பெண்பாலரையும், தந்தை தன்னை என்பன ஆண்பாலாரையும், நோய் மருங்கு அறிநர் என்பது இருபாலாரையும் குறித்துக் கூறப்பட்டன எனக் கொள்வர் பேராசிரியர் (தொல். பொருள். செய்யுள். 191 உரை).

'ஊரும் அயலும் சேரி யோரும்
நோய்மருங் கறிநரும் தந்தையும் தன்னையும்
கொண்டெடுத்து மொழியப் படுதல் அல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்'

(தொல். பொருள். செய்யுள். 191)

என்பது தொல்காப்பிய விதி. இவ்விதி அந்நாளைய புலவர் பெருமக்கள் கொண்டொழுகிய கவி மரபு நெறியை அடியொற்றியதாகும் என்பது கருதற்பாற்று.

7. கூற்றுவகை

கூற்றுவகைநிலை

அகப்பொருள் பாடல்கள் எல்லாம் ஐந்திணை நெறியில், யாராயினும் ஒருவர் கூற்றாய் அமையும். அதனைக் கேட்போரும் முக்கியமாய்க் குறிப்பிடத்தகுவர். எனவே, ஒவ்வொரு பாட்டும் எத்திணை

பற்றியது? யார் கூற்று? கேட்டார் யார்? என்றாற் போன்றவற்றைக் கவனித்தல் வேண்டும்.

களவு, கற்பு நெறிக்கண் கூற்று நிகழ்த்துதற்குரியாரை மேலே கண்டோம். தொல்காப்பியர் தம் பெருநூலுள் தலைவன், தலைவி, தோழி முதலியோரெல்லாம் களவு வாழ்க்கையிலும் கற்பு வாழ்க்கையிலும் இன்னின்ன இடத்து, இன்னின்ன காலத்து இத்தகைய பேச்சுகளைப் பேசுதற்குரியார் என்று வகுத்தும் தொகுத்தும் உரைக்கின்றார்.* இப்பேச்சுகள் அந்த வாழ்க்கை நெறியை முற்றவும் நமக்குச் சித்திரித்துக் காட்டுகின்றன. 'கிழவோன்மேன,' 'கிழவோள்மேன,' 'தோழிமேன,' 'செவிலிமேன' என்றெல்லாம் தனித்தனி நூற்பாக்களில் தொல்காப்பியர் தொகுத்துச் சுட்டியுள்ளார், (தொல். பொருள். களவு:' 17, 24, 25 தொல். பொருள், கற்பு. 5, 6, 9, 10). இவையெல்லாம் மக்கள் வாழ்க்கையின் அடிப்படையில் புலவர் கற்பித்துக் கொண்ட பாடுதுறைகளாம்.

இம் மாந்தர்களின் கூற்றுகளை ஒன்றனோடு ஒன்றை இயைத்துப் பார்த்தால், அவை ஏறக்குறைய பிற்றை நாளில் தோன்றிய அகப்பொருட்கோவை நூல்களின் போக்கினை ஒத்துக் காணப்படுதல் தெரிய வரும்.

புலனெறி வழக்கில் வாழ்வியல்

கற்பு வாழ்க்கையில் தலைவனது பிரிவு குறித்தும் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஒருவர் தாம் விரும்பிய கல்வியில் சிறப்புற மூன்றாண்டும், ஏனைய தூது, பகை முதலிய பிரிவுகளில் ஓராண்டின் அகமாகவும் தலைவனுடைய பிரிவு நிகழும் என்று கால எல்லையும் குறிப்பிடப் பெற்றிருக்கிறது (தொல். பொருள். கற்பு 47-49). தலைவன் தன் முயற்சியால் பொருள் தேடித் தலைவியுடன் கூடி இன்புற்று வாழும் இல்லறவியலின் போக்குகளைப் புலனெறி வழக்கில் ஒரு கதை போன்று பாடிச் செல்கின்றனர்.

தலைவன் தன் தலைவியோடும், மற்றும் காமக்கிழத்தியரோடும் யாறுகளிலும் குளங்களிலும் நீராடிப் பூங்காக்களில் உலாவி இன்பம் நுகர்ந்து வாழும் இன்பவாழ்க்கைகளும் கற்புக் காலத்து உள்ளமை விவரிக்கப்படுகிறது (தொல். பொருள். கற்பு-50).

இல்லறத்தின் இனிய பயன்

இல்லறம் நிகழ்த்தி இன்பம் நுகர்ந்த தலைவனும் தலைவியும் பின்னர்த் துறவறம் பூண்டு வீடு பெறுவர் எனவும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இச் செய்தியைக் கற்பு வாழ்க்கையின் பயனாய்க் கற்பியலின் இறுதியில் சுட்டுதலும் கருதத்தகும்.

> 'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
> ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி

---

* தொல்காப்பியர், வகுத்துரைத்துள்ள கூற்றுவகை விரிவும் விளக்கமும் 'கூற்றுவகைமரபு' என்னும் இயலிற் காண்க.

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.'

(தொல். பொருள். கற்பு. 51)

இஃது இல்லறத்தின் பயன் இது என்று அறுதியிட்டு உரைப்ப தாகும். காம நுகர்ச்சியெல்லாம் முடிந்து தலைவனும் தலைவியும் மூப்பு வருவதன் முன்னர்த் துறந்து, சிறந்த வீட்டின்பம் பெறுதற்கான செயல்களில் முனைந்து நிற்பர் என்று எடுத்துக்காட்டுகின்றார் தொல் காப்பியர். இதனால் இல்லறநெறி நின்று துறவு நிலையுற்று மெய் யுணர்ந்து வீடு பெறுதலே அந்நாள் மாந்தரின் வாழ்க்கைப் போக்கா யிருந்தது என்பதும் புலப்படும்.

2. சங்க இலக்கிய மரபுகள்

பழந்தமிழ் இலக்கியம்

சங்க இலக்கியங்கள் என்பவை இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள தமிழ்ச் செல்வங்களுள் காலத்தால் பழமையானவை; இன்றைய நிலையில் காணப் பெறும் முற்பட்ட இலக்கியங்கள். இவையெல்லாம் வழிவழி வழங்கி வரும் இலக்கிய மரபுகளைப் பின்பற்றியனவே. உயர்ந்தோர் வழக்குகளே சிறப்பாய்ப் போற்றப்படும்; செய்யுள்களில் இடம் பெறும் தகுதி படைத்தவையும் அவையே:

> 'உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
> வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே'
>
> (தொல். பொருள். பொருளியல் 21)

என்கிறார் தொல்காப்பியர். எனவே, சங்க இலக்கியங்கள் நம் நாட்டுப் புலவர்கள் பாடிவந்த யாப்பு மரபு, பொருள் மரபு முதலியவற்றை அறிவதற்குரிய கருவிகளாம். 'புலனெறி வழக்கம்' எனப் போற்றப் பெறுவன இவ் இலக்கிய மரபுகளே.

சங்ககால இலக்கணம் தொல்காப்பியம்

சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டது 'தொல்காப்பியம்' எனின், தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கியங்களின் மரபை அந்நூல் வெளிப்படுத்துதல் இயல்பே. தொடர்ந்து வரும் இலக்கியங்களும் பெரும்பான்மை அதனை ஒட்டி அமைவது இயற்கையே. சங்க இலக்கியங்கள் காலத்தால் முற்பட்டவையாதலின், இவற்றின் நெறிமுறைகளுக்கு ஏற்ற வழிகாட்டி தொல்காப்பியமே ஆகும். வேறு எந்த இலக்கணநூலும் சங்க இலக்கிய மரபுகளுக்கு ஏற்ற பழமையுடையன வல்ல.

சங்க நூல்களுள் ஒன்றாகிய புறநானூற்றுப் பாடல்களுக்கு அமைக்கப்பட்ட திணை-துறை வழக்குகள் தொல்காப்பிய நூலினை ஒட்டி அமைக்கப் பெறவில்லை; பிற்காலத்துப் புறப்பொருள் இலக்கண மரபுரைக்கும் நூல்களைப் பின்பற்றித் திணை-துறைகள் கூறப் பெற்றுள்ளன. இப்பொழுது இந்நூலுள் காணப்பெறும் திணை-துறைக் குறிப்புகள் ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பாமாலையை அடியொற்றிக் காணப்படுகின்றன. இஃது அந் நூலின் பழமைக்கு ஏலாத அமைப்பாகும் என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் எடுத்துக் காட்டியுள்ளார். அவர்தம் கருத்துரை வருமாறு:

"தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினு ரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலா தலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டும் என்று உணர்க."

(தொல். பொருள். புறத். 35 உரை)

இங்கே நச்சினார்க்கினியர் தாம் உதாரணமாக எடுத்துக்காட்டிய சில புறப்பாட்டுகளுக்கு (புறநா. 5, 184) அந்நூலின் உரைகாரர் கொடுத்துள்ள 'செவியறிவுறூஉ' என்னும் துறைக்கு மாறுக 'வாயுறை வாழ்த்து' எனக் குறிப்பிட்டு, உரைகாரர் தொல்காப்பியத்தைப் பின் பற்றி உணரா வகுத்திலர் எனக் கருதுகிறார். ஆகவே, சங்கநூல்களுக்கு எல்லாம் உரிய மரபு காணத் தொல்காப்பியமே வழிகாட்டியாம் என்பது தெளிவு. இறையனாரகப் பொருளுரைகாரரும் பாட்டு தொகைகளுக்கு உரிய இலக்கணநூல் அகத்தியமும் தொல்காப்பி யமுமே என்கிறார்.

"இனிக் கடைச் சங்கம் இருந்து தமிழாராய்ந்தார் .... நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் நூற் றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசை யும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப" (சூ. 1 உரை)

எனவரும் இறையனார் களவியலுரைகாரர் வாக்கால் அவர் காலத்து வழங்கிய அறிஞர் பெருமக்களின் கருத்துத் தெற்றென விளங்கும். எனவே, சங்க இலக்கியங்கள் தொல்காப்பியர் கூறும் மரபு நெறியில் செல்லும் பண்டைப்பனுவல்கள் என்று கொள்ள வேண்டும். அதனால் தான் தொல்காப்பிய உரைகாரர் எல்லாரும் சங்கப் பாடல்களையே பொருளதிகாரத்துள் பெரும்பாலும் எடுத்துக்காட்டி விளக்கம் தருகின் றனர். ஆகவே, தொல்காப்பிய நெறியும் சங்கப் பாடல்களின் நெறி யும் பெரிதும் ஒற்றுமையுடையன என்பது மனம் கொளத் தகும்.

சங்க நூல்களுள் அகப்பாட்டு

சங்கநூல்களாகிய பத்துப்பாட்டு எட்டுத்தொகைகளுள் அகப் பொருள் பற்றிய பாக்களே மிகுந்துள்ளன. குறிஞ்சிப் பாட்டு, முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை என்னும் நான்கும் பத்துப் பாட்டுள் அகப்பொருள் பற்றியன. தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை என்னும் ஐந்தும் அன்பினைந்திணை கூறும் அகப்பொருள் இலக்கியங்கள். பரி பாடலிலும் சில பாடல்கள் அகப்பொருள் பற்றி அமைந்தவை.

ஐந்திணை அமைப்பு

எட்டுத் தொகையுள் பெரும்பாலனவற்றிலும் ஐந்திணை முறைப் படியே பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஐங்குறு நூறும் கலித் தொகையும் ஐந்து ஐந்து கூறுகளாய்த் திணை பற்றிப் பாகுபாடு செய் யப்பட்டுள்ளன. அகவற்பாடல்களுள் குறைந்த அடிவரையறையை

யுடைய—அதாவது 3 முதல் 6 அடி வரையிலான அகவற்பாக்களாலான தொகுதி ஐங்குறுநூறு. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் வரிசையில் இதில் ஐந்திணையமைப்புக் காணப்படுகிறது. இவற்றைப் பாடியோர் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்னும் ஐவராவர். இவ்வைவரும் பாடிய ஒவ்வொரு நூறும் பத்துப்பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதியாகவும் உள்ளது. இவ்வாறாக இந் நூலின் ஐந்திணை யமைப்புமுறை திட்டவட்டமான வரையறைகளுடன் காணப் படுகின்றது.

இது போன்றே கலித்தொகையிலும் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் வரிசையில் ஐந்திணைப் பாடல்கள் தனித் தனியே தொகுக்கப் பெற்றுள்ளன. இவையெல்லாம் பாவகையால் ஒப்புமையுடையன. இவை முற்றும் கலிப்பாவினால் இயன்றவை. இவ் வைந்திணைகளும் முறையே பெருங்கடுங்கோன், கபிலன், மருதனிள நாகன், நல்லுருத்திரன், நல்லந்துவன் என்னும் ஐவரால் பாடப் பெற்றன என்பது ஒரு கருத்து. ஆயின், நச்சினார்க்கினியர் உரைக் கருத்தினைக் கொண்டு பார்க்கின், நெய்தற்கலி பாடிய நல்லந்துவனாரே இதனைத் தொகுத்தவர் என்பர். அன்றியும், முழுநூலுக்கும் ஆசிரியர் நல்லந்துவனாரே என்று கொள்வாரும் உளர்.[1] எவ்வாறாயினும், இஃது ஐந்திணைக் கூறுபாட்டுள் அமைந்துள்ளமை தெளிவு. உரைகாரர்களும் இந்நூலை எடுத்தாளும்பொழுது பாலைக்கலி, முல்லைக்கலி என்று தனித் தனித் திணைப்பெயருடன் சார்த்தியே எடுத்தாளுகின்றனர்.[2]

அகநானூற்றின் அமைப்புச் சிறப்பு

ஏனைய அகவற்பாடலால் ஆன அகப்பொருள் நூல்களுள் 'அக நானூறு' ஒன்றே தக்க வரன்முறைகளோடு தொகுக்கப்பெற்றதாம். இதன்கண் உள்ள நானூறு பாடல்களும் களிற்றியானை நிரை (1-120), மணிமிடை பவளம் (121-300), நித்திலக்கோவை (301-400) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும் இதனகண் உள்ள பாடல்கள் தக்கதொரு வரையறையை மேற்கொண்டும் அமைந்துள்ளன. 1, 3, 5, 7, 9, 11 என்று ஒற்றைப் படை எண்களையுடைய பாடல்கள் பாலைத்திணை பற்றியனவாம். 2, 8, 12, 18 என்று இரண்டும் எட்டுமாக வரும் எண்கள் குறிஞ்சித்திணை பற்றிய பாடல்கள். 4, 14, 24 என்று வரும் நான்காம் எண்கள் முல்லைத் திணைக்குரியன. 6, 16, 26, 36 என்று ஆறும் எண்ணாக உள்ளவை மருதத்திணை பற்றிய பாடல்களாகும். 10, 20, 30 என்று வரும் பத்துப் பத்தான எண்கள் நெய்தல் திணைக்குரியன.

"ஒன்றுமூன் றைந்தேழ்ஒன் பான்பாலை; ஓதாது
நின்றவற்றின் நான்கு நெறி முல்லை;—அன்றியே
ஆறும் மருதம்; அணிநெய்தல் ஐயிரண்டு
கூறு தலைகுறிஞ்சிக் கூற்று"

---

1. History of Tamil Language and Literature Prof. S. Vaiyapuri pillai p p 26—27
2. தொல் - பொருள் - நச்சினார்க்கினியருரை.

என்று பப்பத்துப் பாடல்கள் ஐந்திணை முறையில் எவ்வெவ் எண்களைப் பெற்றுள்ளன என்பதை இப்பழம் பாடலும் உணர்த்தும். இதனால், இந்நூலுள் ஒவ்வொரு பத்துப்பாடல்களும் திணைவகையுள் அமைக்கப் பெற்றுள்ள திறம் விளக்கமாகும்.

நற்றிணை குறுந்தொகைகளின் நிலை

அகநானூற்றைப் போலவே அகவற்பாடல்களால் இயன்ற நானூற்றுத் தொகைகளாகிய குறுந்தொகையையும் நற்றிணையையும் திணை வகையில் பண்டே கூறுபாடு செய்திருந்தனரா என்பது ஏட்டுப் பிரதிகளால் அறியக் கூடவில்லை. இந்நூல்களின் ஏட்டுப் பிரதிகளில் பாடல்களின் கருத்தை விளக்கும் பழங்குறிப்புகள் உள்ளனவே தவிரத் திணைபற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. ஆயின், அகப் பொருட்பாடல் களின் பொருள் விளக்கத்திற்குத் திணை விளக்கம் இன்றியமையாததே. அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவற்றில் திணைப்பாகு பாடு காணப்படுகிறது. எனவே, இவற்றிற்கும் பதிப்பாசிரியர்கள் திணைக்குறிப்பு இட்டுப் பதிப்பிக்கலாயினர். பாடல்களின் அடியில் வரும் குறிப்புகளைக் கொண்டும், உரையாசிரியர் இந்நூற் பாடல்களை மேற்கோள் காட்டும் இடங்களை நோக்கியும், பாடலுள் பயின்று வரும் முதல், கரு, உரிப்பொருள்களைக் கவனித்தும் ஒருவாறு திணைப்பாகு பாடு தந்துள்ளனர்.[1]

கூற்று வகைத் துறைகள்

ஐந்திணை என நாம் முன்னர்க் கண்டது அகப்பொருள் ஒழுக்கம் பற்றிய பெரும்பிரிவு. இவற்றுள் ஒவ்வொரு திணையொழுக்கமும் பற் பல நிகழ்ச்சிகளால் நிரம்பி அவ்வத் திணையின் இன்ப ஒழுக்கினைச் சிறப் பித்து நிற்கும். திணை நிகழ்ச்சிகள் தலைவன், தலைவி, தோழி முதலி யோர்களுடைய பேச்சுகளின் விளைவாக வளர்ந்து பெருகும். இவ்வா றுகத் திணைகளுக்குள் அமைந்த பேச்சுகளைக் 'கூற்றுவகை' என்பர். இதனையே 'துறை' என்றும் பெயரிட்டு அழைப்பர்.

"அவ்வவ் மாக்களும் விலங்கும் அன்றிப்
பிறஅவண் வரினும் திறவதின் நாடித்
தம்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறம் தானே துறை எனப்படுமே"

(தொல். பொருள். செய்யுள் 207)

என்த் துறை என்பதன் பொருளை விளக்குகிறார் தொல்காப்பியர். மக்கள், விலங்கு முதலியோர் வந்து நீருண்ணும் நீர்த்துறை போல மரபுவழிப் பொருள்களை வகைப்படுத்து உரைப்பது துறையாம். நீர்ப்பயன் கொள்ளும் துறை போல இதுவும் பொருட்பயன் கொள்ளத் துணைபுரிவதாகும்.

---

1. நற்றிணையை முதலிற் பதிப்பித்த பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் திணைக் குறிப்புகளைத் தமது புதுச்சேர்க்கை என்பது புலப்பட இருதலைப் பகர வளைவுக்குள் அமைத்தனர். குறுந்தொகை உரைநூலுள் டாக்டர் உ. வே. சாமி நாதையர் அவர்கள் கூற்று வகையில் பாடல்களுக்குக் குறிப்புத் தந்தனரேயன்று திணைவகைக் குறிப்பை அவர் சுட்டவே இல்லை.

ஐந்து பகுப்பாகவுள்ள ஐந்திணைப் பொருள்களைத் தெளிவாயும் விரிவாயும் அறிவிப்பன. இக்கூற்றுவகை என்னும் துறைகள்.

அகத்திணைக் காட்சிகள்

களவு வாழ்க்கை

தலைவனும் தலைவியும் ஒருமனப்பட்டுத் தமரும் பிறரும் அறியா வண்ணம் மறைவிடத்திற் கூடிக் கலந்து இன்பம் நுகர்வது பற்றிய செய்திகள் களவு வாழ்க்கை எனப்படும். இவ்வாழ்க்கையில் ஈடுபட்டார், தமது அன்பு ஒழுக்கத்தினை வெளிப்படுத்தித் தலைவியைக் கொடுத்தற்குரிமையுடைய பெற்றோர் கொடுப்ப உலகறியத் திருமணம் செய்து கொள்வது கற்பு வாழ்க்கை எனப்படும். இவ்விருவகைக் களவு, கற்பு என்னும் வாழ்க்கையிலும் ஊடாடும் மாந்தர்களையும் அவர்தம் கூற்றுக்களையும் தொல்காப்பியர் முன்னையோர்கண்ட புனைந்துரை நெறியாம் புலனெறி வழக்கினை நோக்கித் தொகுத்தும் விரித்தும் உணர்த்தியபடியே சங்கப் பாடல்களிலும் அகப்பொருட்பாக்கள் பலவாய் உள்ளன.

ஐந்திணை இன்ப ஒழுக்காம் களவு கற்புவாழ்க்கைச் சித்திரங்களைப் புலப்படுத்தும் சங்கப் புலவர் வாக்குகள்பண்டைநாள் மாந்தர் இல்லற ஒழுக்கினையும் அவர்தம் சமூக வாழ்க்கையினையும் நன்கு எடுத்துக்காட்டு வனவாய்க் காணப்படுகின்றன. இவ்வகைப் பாடல்களின் அடிப்படையில் களவு—கற்பு வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்து விளக்கம் காண்போமாயின் மிகமிக விரிந்துபட்டுச்செல்லும். ஆகவே, அன்பொடு புணர்ந்த ஐந்திணை வாழ்க்கையுள் ஒருசில காட்சிகளைச் சங்கப் பாடல் வழி நின்று பார்ப்போம்.

குறிஞ்சிப்பாட்டு

பத்துப் பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டு குறிஞ்சியொழுக்கமாம் களவு நெறி வாழ்க்கையை நன்கு சித்திரிக்கிறது. தலைவியின் நற்றாய் தன் மகளின் வேறுபாடு கண்டு கட்டினும் கழங்கினும் குறியறிந்துரைப்பாரை உசாவுகின்றாள். அக்குறிகாரர் தெய்வத்தான் ஆயது அவளது வருத்தம் எனக் கூறுகின்றனர். அது கேட்ட தாய் அந் நோய் திரும்பொருட்டு வேறுபட்ட வடிவங்களையுடைய பல தெய்வங்களைப் பரவுகின்றாள். இந்த நிலையில் தலைவியின் தோழி நற்றாய்க்கு அவள் மெலிவுக்குக் காரணம் தலைவன் ஒருவனோடு அத் தலைவி கொண்டுள்ள நட்பே என எடுத்துரைக்கின்றாள். இவ்வாறு தோழி நடந்த உண்மைகளை வெளிப்படுத்துதலை 'அறத்தொடு நிற்றல்' என்பர் ஆன்றோர்.

அறத்தொடு நிற்கும் பாங்கு

"எளித்தல் ஏத்தல் வேட்கையுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்"

(தொல். பொருள். பொருளியல் 13)

எனத் தொல்காப்பியர் எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல், கூறுதல் உசாதல், ஏதீடு, தலைப்பாடு, உண்மை செப்பும் கிளவி என்னும் எழுவகை முறைமைகளில் தோழி அறத்தொடு நிற்பாள் என்று பகுத்துரைக்கின்றார். இவற்றுள் முதல்மூன்றும் தலைவனின் எளிமை, உயர்வு வேட்கைப் பெருக்கம் ஆகியவற்றை எடுத்து மொழிதலைச் சுட்டும். வெறியாடுமிடத்தும் பிறவிடத்தும் பிறர் கூறுமிடத்துத் தோழி இடைமறித்துக் கேட்பது கூறுதல் உசாதலாம். பிறர் ஒன்று கூறுங்காலத்துக் கேட்டல் என்பது இதன் கருத்து. 'ஏதீடு' என்பது காரணம் காட்டி உரைத்தலாம். ஒருவன் எங்களிடம் வந்து பூத் தந்தான் என்றும், களிறு, புலி முதலிய விலங்கின் தாக்குதலினின்று காத்தான் என்றும், நீர் விளையாட்டில் தலைவி நீருள் மூழ்கவிருந்த நிலையில் அதனின்றும் எடுத்து அவளைக் காத்தான் என்றும் இவ்வாறு தலைவிக்கும் தலைவனுக்கும் முன் தொடர்புண்மையைப் புலப்படுத்துதலாம். தலைவன்-தலைவி எதிர்ப்பட்டுக் கூடியதனை யான் அறிந்திலேன் என்று பேசுவது தலைப்பாடாம். உண்மை செப்பலாவது எளித்தல் ஏத்தல் முதலியவற்றால் மறைத்தும் கற்பித்தும் கூறியது போலக் கூறாது நிகழ்ந்தது நிகழ்ந்தபடி உரைத்தலாம். இவற்றுள் 'கூறுதல் உசாதல்' ஒழிந்த ஆறு திறமும் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் வாக்கால் நன்கு புலனாகின்றன.

களவு மணம் பற்றிய பேச்சு

தலைமகன் மாட்டுள்ள பெருமையும் உரனும், தலைவி பக்கலிலுள்ள அச்சமும் நாணமும் ஆகிய அருங்குணங்களும் நுணுகிய நிலையில் களவுப் புணர்ச்சி தோன்றுகிறது. இதனைக் குறிஞ்சிப் பாட்டில் கபிலர்,

'இருவேம் ஆய்ந்த மன்றல்' (குறிஞ்சிப். 21)

என்று தலைவியின் பேச்சாகத் தோழிவாக்கால் புலப்படுத்துகின்றார். மேலும், களவுநெறியை வெளிப்படுத்துமிடத்துத் தோழி,

'எமியேம் துணிந்த ஏமஞ்சால் அருவினை' (குறிஞ்சிப். 22)

என்றும் களவு மணத்தைக் குறித்துப் பேசுகிறாள். நாங்கள் தமியராய்த் துணிந்த உயிர்க்குப் பாதுகாப்பாகிய செய்தற்கரிய கந்தருவ மணம் என்பது தோழி குறித்த பொருள். தலைவன் தலைவியர்தம் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தோழியும் உடன்பட்டு உதவினாள். ஆதலினால் நாங்களே துணிந்து ஏற்றுக் கொண்டது இம்மறையிற் புணர்ச்சி என்று தன்னையும் உளப்படுத்திப் பேசுகின்றாள் அத்தோழி.

தலைவனுடைய பெருவேட்கை குறிஞ்சிப் பாட்டில் தோழியின் வாய்ப் பிறப்பாய் நன்கு புலப்படுத்தியுள்ளமை நோக்கத் தகும்.

'நேரிறை முன்கை பற்றி நுமர் தர
நாடறி நன்மணம் அயர்கம் சின்னாட்
கலங்கல் ஓம்புமின் இலங்கிழை யீரென
ஈர நன்மொழி தீரக் கூறித்
துணைபுணர் ஏற்றின் எம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண்டுறை நிறுத்திப் பெயர்ந்தனன் அதற்கொண்டு
அன்றையன்ன விருப்போ டென்றும்
இரவரல் மாலையனே ... ...' (குறிஞ்சி. 231-239)

தலைவன் தலைவியையும் அவள் தோழியையும் ஊரிலுள்ள நீர்த் துறை வரையில் கொண்டு வந்து விட்டுப் பிரிந்ததும், அவன் ஆவைப் புணர்ந்து செல்லும் ஏறு போலே விட்டு நீங்காமல் அவருடன் வந்தனன் என்பதும், அதுமுதல் அவன் முதல்நாள் போன்ற விருப்பத்துட னேயே இரவுக் குறியிடத்தும் வந்துசென்றான் என்பதும் தோழியால் நயமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

தலைவனின் ஆண்மையும் வீரமும்

தலைவியும் தோழியும் காட்டுப் புனக் காவலுக்காகத் தனித்திருந்த பொழுது சினங்கொண்ட நாய் ஒன்று அவர்களை வளைத்து நெருங்கிவர, அவர்கள் அஞ்சி வேறிடம் விரைகின்ற காலத்தே தலைவன் ஒரு வெற்றி மிக்க காளை போலத் தோன்றி அவர்களுடைய அச்சத்தைத் தணித் தானும், தனக்கு மாறுபட்ட காளைகளை எல்லாம் பொருது கெடுத்த மனச் செருக்கினையுடைய தானறியாத நிலத்தில் புதிய ஆவைக் காணும் ஏறு போலே அழகுபெற வந்து எமது அச்சம் தணிய இனிய சொற்களைச் சொன்னான் தலைவன் என்கிறாள். பசுவைக் காணும் காளை போலத் தோன்றினான் தலைவன் என முற்கூறியதனை ஒத்தே இங்கும், 'துணை புணர் ஏற்றின்'—அதாவது ஆவைப் புணர்ந்த காளை போல— எம்முடன் தலைவனும் நீர்த்துறைவரை வந்தான் எனத் தோழி பின்னரும் கூறியது மகிழ்வுக்குரியது. தலைவன் செருக்கு மிக்க காளையை ஒத்த வீறுடையான் எனத் தோழியால் சிறப்பித்துப் பேசப்படுகின்றான். இதனால் அவனுடைய ஆண்மையும் வீரமும் வெளிப்படுத்தப்படு கின்றன.

நாடு அறி நன்மணம்

நாடறியக் கற்புமணம் புரிவதுவரை சில நாள்களே இக் களவொழுக்கம் பெற விரும்புவதாயும் அவன் அருளுடன் எடுத்துரைத் தான் என்றும் தோழி குறிப்பிடுகிறாள். இங்கே கற்பு மணத்தின் முறையும் தக்க வகையில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

> 'நேரிறை முன்கை பற்றி நுமர்தர
> நாடறி நன்மணம் அயர்கம்' (குறிஞ்சிப். 231-232)

என்பது கற்பு மணத்தின் பான்மையைத் தெளிவுற எடுத்துக் காட்டும்.

> 'உம்முடைய சுற்றத்தார் உமது முன்கையைப் பிடித்து எமக்குத் தர நாட்டிலுள்ளாரெல்லாம் அறியும்படியான நன்றாகிய கலியாணத்தைச் செய்வோம்'

என்கிறான் தலைவன்.

> 'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'
> (தொல். பொருள். கற்பு. 1)

என்று கற்பு மணத்தின் பொது இயல்பை எடுத்து மொழிகிறார் தொல் காப்பியர். தலைவியைக் கொள்ளுதற்குரிய தகுதி படைத்த தலைவன் சடங்குடன் தலைவியைக் கொடுத்தற்குரிய பெற்றோர் கொடுப்பச்

சுற்றம் சூழ உலகறிய மணந்து கொள்ளுதலாம். இக் கற்புத் திருமணத்தில் தலைவியின் கையைப் பிடித்துத் தலைவன் கையில் ஒப்படைத்தல் சிறப்பு நிகழ்ச்சியாய் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

தொகை நூல்களில் சில காட்சிகள்

இவ்வாறே அகப்பொருள் தொகை நூல்களாகிய குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவற்றிலும் இயற்கைப் புணர்ச்சியாம் களவுநெறி வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவை பட உணர்த்தும் பாடல்கள் பல உள.

வழிவழித் தொடரும் கேண்மை

முன்னமே உறவு முறையாலோ பிறவாற்றாலோ சிறிதும் அறிமுக மில்லாத ஓர் ஆணும் பெண்ணும் தனியிடத்து எதிர்ப்பட்டு உளம் இயைகின்ற நிலைமையே தெய்வத்தான் நேர்ந்த கூட்டம் எனக் கருது கின்றனர்.

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே'
(தொல். பொருள். களவு. 2)

என்று தொல்காப்பியர் ஒத்த தகுதி படைத்த ஆணும் பெண்ணும் கண்டு கலத்தற்கும் ஒருகாலைக் கொருகால் அன்பு சிறத்தற்கும் பால் வரை தெய்வத்தின் ஆணையே காரணம் என இந்நூற்பாவுள் எடுத்துக் காட்டுகிறார்.

இக் கருத்துக் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் (366) தோழி கூற்றாகத் தெரிய வருகின்றது.

'பால்வரைந் தமைத்தல் அல்லது அவர்வயின்
சால்பளந் தறிதற்கு யாஅம் யாரோ?'
(குறுந். 362: 1-2)

என்று தோழி செவிலித்தாயிடம் பேசுகிறாள். தலைவனுடைய நிறை குணத்தை அளந்தறியத்தக்க தகுதி நமக்கு இல்லை. இது 'நல்ல ஊழினால் பிணைக்கப்பட்ட தொடர்பு' என்று எடுத்துக் கூறுகிறாள். ஆகவே, களவுக்கூட்டம் இறையருளால் நேர்வது என்பதும், அதனால் அது தெய்வப் புணர்ச்சி எனச் சிறப்பிக்கப்படுகிறது என்பதும் கருதற் பாலன.

'ஒன்றுதும் என்ற தொன்றுபடு நட்பின் காதலர்'

என்று தோழி ஒருத்தி குறிப்பிடுவதாய் நற்றிணைப் பாடலில் காணப்படு கிறது (109: 1-2). ஐங்குறு நூற்றில் தலைமகனைத் 'தொல்கேள்' (167: 4; 271: 4) என்று குறிப்பிடும் தொடர் காணப்படுகிறது. இவற்றால் தலைவன் தலைவியர் கேண்மை வழிவழித் தொடரும் நீர்மையது என்பது பெறப்படும்.

உயிர் கலந்து ஒன்றிய உறவு

மேலும் காதலரின் உறவு உயிர் கலந்து ஒன்றிய உறவு என்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

'உயிர்கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மைப்
பிரிந்துறல் அறியா, விருந்து கவவி,
நம்போல் நயவரப் புணர்ந்தன—
கண்டிகும் மடவரல்!—புறவின் மாவே'

(ஐங். 419)

என்பது தலைவியைக் கூடி இன்புற்ற ஒரு தலைமகனின் பேச்சு. இங்கே புணர்ச்சியால் மகிழ்ந்து பேசும் தலைவன் மான்களின் சேர்க்கை நம் சேர்க்கை போல் உள்ளது என்று எடுத்துக் கூறுகிறான். இதில் இருவர் மாட்டும் உளதாய அன்பின் பிணைப்பும் நன்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"....................................யாக்கைக்கு
உயிர் இயைந்தன்ன நட்பின், அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவு அரியோளே'

(அகம். 339: 11-14)

என வரும் அகநானூற்றடிகளும் உத்தமக் காதல் வாழ்க்கையின் உயர்வினை நன்கு புலப்படுத்துகின்றன.

காதலரின் அன்புப் பிணைப்பு

ஒரு தொடர்பும் இல்லாத நாம் ஊழ்வலியான் ஒன்றுபட்டோ மாதலால் இனி நம்பால் என்றும் பிரிவு நேராது என்று ஏதுக்களுடன் எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது பின்வரும் குறுந்தொகைப் பாட்டு.

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.'

(குறுந்தொகை 40)

எனது தாயும் உனது தாயும் எத்தகைய உறவுமுறை யுடையர்? என் தந்தையும் உன் தந்தையும் ஒருவர்க்கொருவர் என்ன முறையினர்? ஒருவிதத் தொடர்பும் இருப்பதாய்த் தெரியவில்லையே! நானும் நீயும் ஒருவரையொருவர் எப்படி அறிந்தோம். நம்முடைய அன்புடைய நெஞ்சங்கள் பயிரிடுவதற்குப் பக்குவமான செம்புலத்திற் பெய்த நீர் போல் கலந்து விட்டனவே!'

இவ்வாறு தனக்கும் தன் காதலிக்கும் ஏற்பட்ட அன்பின் பிணைப்பை எடுத்து மொழிகின்றான் ஒரு தலைவன்.

தலைமகனின் காதல் மொழிகள்

மேலும், தலைவியுடன் கூடி இன்புற்றான் ஒருவன். அக்கூட்டத்தால் மகிழ்ந்து அத் தலைவியின் நலங்களைப் புனைந்துரைக்கும் உரைகளை நோக்கினால் அவர்தம் ஒருமையுணர்வும் சிறப்பும் விளக்கமாம்.

'பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அஞ்சில் ஓதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது; இவள்,
தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே!'

(ஐங். 299: 2-5)

'நலம்மாண் எயிற்றி போலப் பலமிகு
நன்னல நயவர வுடையை
என்நோற் றனையோ—மாவின் தளிரே!'

(ஐங். 365: 3-5)

'தொடலை தைஇய மடவரல் மகளே!
கண்ணினும் கதவநின் முலையே!
முலையினும் கதவநின் தடமென் தோளே!'

(ஐங். 361: 3-5)

இவையெல்லாம் தலைவன் களவுப் புணர்ச்சியால் மகிழ்ந்து தன் உள்ளுணர்ச்சியை வெளிப்படுக்கும் காதல் மொழிகளாம்.

தலைமகளின் நேச உணர்வு

இத்தகைய நேச உணர்வு தலைவிபாலும் மிகுதல் இயல்பேயாகும். ஒரு தலைவி, 'இப்பிறப்பு மாறி இனி எப்பிறப்பு வாய்த்தாலும் நீயே எனது கணவனாக இருக்க வேண்டும். யானே நினது நெஞ்சம் கலந்த காதலியாவேனாக' என்கிறாள்.

'இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே!'

(குறுந்தொகை. 49)

இதில் தலைமகள் தன் தலைவன்மாட்டுக் கொண்டுள்ள அன்பின் பிணைப்பு நன்கு புலனாகும். இத்தகைய மிக உயர்ந்த நற்பண்புள்ள இரு உள்ளங்கள் ஒன்றுபடுதலே 'களவுமணம்' என்று ஆன்றோரால் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

காதலின் பெருக்கம்

கருத்து ஒருமித்த காதலர் இருவரின் அன்பிற்கு ஓர் எல்லை உண்டா?

'நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று,
நீரினும் ஆரள வின்றே, சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே!'

(குறுந்தொகை, 3)

என்று பேசுகிறாள் ஒரு தலைவி. அவள் தன் தலைவன்பால் கொண்டுள்ள நட்பு பூமியைக் காட்டிலும் அகன்றுள்ளதாம்; ஆகாயத்தை விடவும் உயர்ந்து விளங்குகிறதாம்; கடல் நீரின் ஆழத்தினும் மிக ஆழமானதாம். இங்ஙனம் தன் காதல் நட்பு அகன்று உயர்ந்து ஆழ்ந்து காணப்படுகிறது என்று போற்றுகிறாள். இதனால் இருவர்தம் அன்பின் ஆழமும் மாட்சியும் தெற்றெனப் புலனாகும்.

இடந்தலைப்பாடு

களவு நெறியில் மனம் ஒன்றிக் கூடிய காதலரின் கூட்டுறவு அடிக்கடி தொடர்ந்து நிகழ்கிறது. தெய்வ நியமனத்தால் காதலியை எதிர்பாராது எதிர்ப்பட்டு உளம் கலந்து ஒன்றிய தலைமகன் மற்றை நாளும் தலைவியைக் காணும் ஆசையால் முன்னாள்:எதிர்ப்பட்ட இடம் நோக்கிச் செல்லுகிறான். மீண்டும் அவளையடைந்து இன்பம் துய்க்கிறான். இந் நிகழ்ச்சியை 'இடந்தலைப்பாடு' எனப் புலநெறி வழக்கில் போற்றி யுரைப்பர்.

'இலங்குவளை தெளிர்ப்ப அலவ னாட்டி
முகம்புதை கதுப்பின ளிறைஞ்சிநின் றோளே
உலம்புகொள் மாலை மறைய
நலங்கே ழாகம் நல்குவள் எனக்கே!'

(ஐங்குறு நூறு, 197)

இடந்தலைப் பாட்டின்கண் தலைவியது நிலைமை கண்டு தலைமகன் ஒருவன் சொல்லிய சொற்களாக இப்பாட்டின் பழங்குறிப்பு அறிவிக்கிறது. நண்டுகளைப் பிடித்து வருத்தி விளையாடுதல் மகளிரின் பொழுது போக்கு. மாலையில் இவ்வாறு விளையாடிக் கொண்டிருக்கும் இவ்விளமகள் தன் அழகிய நிறமுடைய ஆகத்தை எனக்கு நல்குவாள் என்று மகிழ் பூப்பத் தலைமகன் பேசுவதாய் இப்பாடல் உள்ளது.

பாங்கன் வினுதல்

அடுத்துத் தலைமகனின் வாட்டம் கண்டு என்னென வினவுகிறான் அவனுடைய உயிர்த்தோழன். அதற்குத் தலைமகன் தான் ஓர் அழகிய பெண்ணின் வயப்பட்டு இன்பம் நுகர்ந்து அவளையன்றி வாழக்கூடாத தன் அன்பின் பிணைப்பைத் தோழனுக்கு அறிவிக்கின்றான். அத் தோழனோ தலைமகனுக்கு மிகமிக இனியான் அவன் தலைமகனை நோக்கி அறிவின் முதிர்ச்சி பெற்ற நீ இங்ஙனம் காமவயப்படுதல் தகாது என ஏதுக்களுடன் இடித்துரைக்கின்றான்.

'காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே யானை
குளகுமென் றாள்மதம் போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே!'

(குறுந்தொகை, 136)

'காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நினைப்பின்
முதைசுவல் கலித்த முற்றா இளம்புல்

மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே!'

(குறுந்தொகை. 204)

இங்ஙனமாகக் காமம் என்பது வருத்தும் தெய்வத் தாக்கோ அல்லது துன்பம் நல்கும் நோயோ அன்று; ஆராயுமிடத்து அறிவும் திண்மையுமுடைய நீ காம வயத்தனாய் நிலை தாழ்தல் வியப்புத் தருவ தாம் என்றெல்லாம் எடுத்துக் காட்டுகளுடன் பாங்கன் கடிந்துரைக்க முற்படுகிறான்.

பாங்கனுக்குத் தலைவனின் மறுமொழி

அதனைச் செவி மடுத்த தலைமகன் பாங்கனுக்குத் தலைவியின் இனிய பண்புகளை எடுத்துரைக்கிறான். அமிழ்தம் போன்ற அந்த இன் சொல் லாளின் குணம் துன்பம் மிகுக்கும் தொல்லை தருமோ? அவ்வாறு செய்யு மாயின் காமமுறுதல் அரிதுதான். அறிவுடைய நீயே சென்று நேரில் காணின் இவ்வாறெல்லாம் உரையாய் என மறுமொழி பகர்கிறான் தலை மகன்;

'அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி
அன்ன வினியோள் குணனு மின்ன
இன்னா வரும்படர் செய்யு மாயின்
உடனுறை வரிதே காமம்
குறுக லோம்புமின் அறிவுடை யீரே.'

(குறுந்தொகை. 206)

இக்குறுந்தொகைப் பாட்டு, கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது ஆகும்.

பாங்கற் கூட்டம்

தலைவனின் முறுகிய அன்புறுதி கண்டு பாங்கனே தலைமகன் குறித்த விடம் சென்று தலைமகளின் நலம் காண்கின்றான். திரும்பித் தலைமக னிடம் அவள் நிலையை மொழிய, தலைமகன் குறித்தவிடம் சென்று தலை மகளை அணைகின்றான். பாங்கன் துணையாகவும் களவுக் காலப் புணர்ச்சி நிகழ்வதுண்டு என்பதனை இப்பாடலால் அறியலாம். பாங்கன் துணை நிற்கத் தலைமகன் குறியிடம் சென்று தலைமகளைச் சேர்தலே பாங்கற் கூட்டம் என்று சொல்லப்படும். இந்நிகழ்ச்சியைப் 'பாங்கொடு தழாஅல்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

தோழியின் துணை

தலைமகள் விளையாடிடத்து அவள் தோழியருடன் கூடி அளாவும் நிலைமையிலிருந்து தலைவியின் உயிர்த்தோழியை ஊகித்துக் கண்டுகொள் கிறான் தலைவன். தலைவி தன் தோழியுடன் தனித்திருக்கும் காலத்துச் சென்று, தான் ஒரு புதியவனைப் போலப் பேச்சுக் கொடுக்கிறான். அப் பொழுது தோழி தலைவன் தலைவி தோற்றத்தால் அவர் தமக்குள்ள தொடர்பை அறிந்து கொள்கிறாள்.

'ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்

நரந்தம் கண்ணி இவனோ டிவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் நாணுவர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுப கண்ணி னானே.'
(தொல். பொருள். கள. 23 நச். உரைமேற்கோள்)

இது தோழி ஒருத்தி தலைவன் தலைவியர் குறிப்பால் உணர்ந்து மொழிந்த உரைகளாகும். தோழியின் துணையுடன் பகலிலும், இரவிலும் தலைவியைத் தனியிடத்துத் தலைமகன் சந்தித்துக் கூடிமகிழ்தலும் இயல்பாகும்.

குறியிடம் விலக்கல்

இவள்தன், காமம் பெருமையிற் காலையென்னாள் நின்
அன்புபெரி துடைமையின் அளித்தல் வேண்டிப்
பகலும் வருதி பல்பூங் கானல்
இந்நீ ராகலோ இனிதா லெனின்இவள்
அலரின் அருங்கடிப் படுகுவள் அதனால்
எல்லி வம்மோ மெல்லம் புலம்ப
சுறவினம் கலித்த நிறையிரும் பரப்பிற்
துறையினும் துஞ்சாக் கண்ணர்
பெண்டிரும் உடைத்திவ் வம்ப லூரே.'
(நற்றிணை, 223)

'பகற்குறி வந்து மீள்வானைத் தோழி இரவுக்குறி நேர்வாள்போன்று அதுவும் மறுத்து வரைவு கடாயது' என்பது இப்பாடலுக்குரிய பழைய விளக்கக் குறிப்பு. இதில் தலைவனுடைய பகற்குறி ஒழுக்கமும், அது பிறர் அறியின் பழிச்சொல் பிறத்தற்கு இடமாம் என்று தோழி கூறுதலும் முற்பகுதியால் விளங்கும். பிற்பகுதியிலோ, இரவுக் குறியினும் ஊரில் உள்ள மகளிர் துஞ்சாதிருக்கின்றனர். எனவே, அதுவும் தகாது என விலக்குகின்றாள். இவ்வாறு பகற்குறி இரவுக்குறியாம் மறையொழுக்கம் நீளுதல் முறைமையன்று என்பது தோழியின் கருத்து. எனவே, தலைவன் உலகறிய அவளை மணந்து கொண்டு இன்ப, வாழ்வு வாழ்க எனத் தூண்டும் குறிப்போடு பேசுவதும் புலனாகிறது.

இரவுக் குறி இடையூறு

இங்ஙனம் பகல் இரவு நேரும் குறிகளை மறுத்துரைப்பது ஏதனால்? பிறர் அறியாமல் குறித்த இடத்திற்குக் குறித்த நேரத்தில் வருவது என்பது தலைவன் தலைவி இருவருக்குமே எளிதான செயலன்று. ஓர் அகநானூற்றுப்பாடல் (122) இரவுக் குறியில் நேரும் இடையூறுகளை யெல்லாம் எடுத்து இயம்புகிறது.

'இரும்பிழி மகாஅரிவ் வழுங்கல் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்;
மல்ல லாவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்;

பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்,
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவே லிளையர் துஞ்சின், வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்;
அரவவாய் ஞமலி மகிழாது மடியின்
பகலுரு வுறழ நிலவுக் கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே;
திங்கள் கல்சேர்பு கனையிருள் மடியின்,
இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுது வழங்குயாமத் தழிதகக் குழறும்;
வளைக்கட் சேவல் வாளாது மடியின்,
மனைச்செறி கோழி மாண்குர லியம்பும்;
எல்லா மடிந்த காலை யொருநாள்
நில்லா நெஞ்சத்தவர் வாரலரே! அதனால்,
அரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றால் தோழிநங் களவே.'

(அகநானூறு, 122)

இப்பாடலைப் பாடிய பெரும்புலவர் பரணர் இரவுக் குறியில் தடையாய் எதிரும் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்து உரைக்கின்றார். அவையாவன: ஊர் உறங்காமை, அன்னை துயிலாமை, காவலர் விரைந்து சுற்றி வருதல், நாய் குரைத்தல், நிலவு வெளிப்படல், கூகையின் கூப்பீடு, கோழி கூவுதல் என்பனவாம்.

இக்குறுக்கீடுகள் எல்லாம் இல்லாத ஒரு சமயம் தலைவி குறியிடம் சென்றாலும் அங்கே அன்று அத்தலைவன் வராமை பெரும் ஏமாற்றமாம். இங்ஙனமாக, எத்தனை எத்தனை தடைகள் உள எனத் தோழிக்குச் சொல்லுகிறாள் ஒரு தலைவி. எனவே தான் தோழி களவுநெறியை நீட்டியாது விரைந்து திருமணம் செய்து கொள்க எனத் தலைவனுக்கு எடுத்துரைக்க முற்படுகிறாள்.

வரைவு கடாதல்

இது போன்றே இருவகைக் குறியினையும் மறுத்துரைத்துத் தலைவி ஏனற்புனங்காத்தலை விட்டு இப்பொழுது வீட்டினுள் இருக்கும் நிலையை எய்தியுள்ளாள் என்று தோழி எடுத்துரைக்கும் வகையில் மற்றொரு அகப்பாடல் உளது. அது வருமாறு:

"கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅற்
றேங்கமழ் திணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ
மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத்து
இயல்முரு கொப்பினை வயநாய் பிற்படப்
பகல்வரிற் கௌவை யஞ்சும் இகல்கொள
இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்

பெருங்கை யானைக் கோட்பிழைத் திரீஇய
அருமிபுலி வழங்கு மாரிருள் நடுநாள்
தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்
என்று குவள் கொல்தானே பன்னாட்
புணர்குறி செய்த புலர்குர லேனற்
கிளிகடி பாடலும் ஒழிந்தனள்
அளியள் தானின் னளியல திலனே.''

(அகநானூறு, 118)

''தலைவி முன்பு பகற்குறி இரவுக் குறிகளில் வந்தது போல வரும் நிலைமையில் இல்லை; அவள் தினைப்புனங்காத்தலை விட்டு விட்டாள்; இப்பொழுது வீட்டினுள் வைக்கப்பட்டுள்ளாள். நீ பகல் வருதல் பிறர் பழிப்புக்கு இடமாம்; இரவிலோ அச்சம் தரும் வழியில் நீயே தனியாய் வருதல் குறித்து அஞ்சுகிறோம். நின்கருணையை அல்லது எதனையும் எதிர்பாராதிருக்கும் இத்தலைவியோ மிகவும் இரங்கத் தக்காள்'' எனப் பேசும் தோழியின் உட்கோள் நன்கு புலனாகிறது.

வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தலைவிக்கு நீதான் அருள் செய்தல் வேண்டும் என்பதால் நீ நாடறிய நன்மணம் விரைந்து புரிந்து அவள்தன் அவலத்தைப் போக்குவாயாக என்று வேண்டும் முறையில் இப்பாடற் பகுதி அமைந்துள்ளது. தலைமகனை நீ திருமணம் செய்து கொள்ளுதல் வேண்டும் என அறிவுறுத்தலையே ''வரைவு கடாதல்'' என்பர்.

இருவகை மணநிலை

களவுநெறி ஒழுக்கம் புறத்தார்க்குப் புலப்படா முன்னரே தலைவன் தலைவியின் பெற்றோரை வேண்டித் திருமணம் செய்து கொள்வதுமுண்டு. அவ்வொழுக்கம் புறத்தார்க்குத் தெரிய வந்தபின் கொடைக்குரி மரபுடையோரை அணுகித் திருமணம் செய்து கொள்வதுமுண்டு. இவ் வழக்கத்தினையே தொல்காப்பியர்,

'வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண்டு என்ப வரைதல் ஆறே'

(தொல். பொருள். களவு. 49)

என்னும் நூற்பாவில் நுவல்கின்றார்.

அறத்தொடு நிற்றல்

பகற்குறி இரவுக் குறிகளில் நேரும் இடையூறுகள், இல்லில் இருக்க வேண்டிய நிலை முதலியவற்றால் தலைவிக்குக் களவு நெறியில் இன்பம் தடையின்றி அடைய முடிவதில்லை. இதனால் அத்தலைவி மேனி மெலி வெய்தி அழகிழக்கும் நிலையுறுகிறாள். மகளின் மெலிவு கண்ட தாய் உண்மைக் காரணம் உணராது தெய்வங்களைப் பரவவும் குறி கேட்கவும் முற்படுகிறாள்.

இந்நிலையில் தோழி, தலைவியின் உடல் மெலிவுக்கும் வேறுபாட்டிற் கும் காரணமான களவுநெறி உண்மையைச் செவிலி, நற்றாய் முதலி

யோருக்குக் குறிப்பாய் அறிவுறுத்த முன் வருகிறாள். இதனை 'அறத் தொடு நிற்றல்' என்று கூறுவது மரபு.

தோழி சொன்ன செய்திகளால் உண்மை உணர்ந்த தலைவியின் பெற்றோர் தலைவி விரும்பிய தலைவனுக்கே அவளை மணமுடித்து வைக்க வேண்டுவன செய்வர். தலைவனும் தன்னுடைய பெற்றோரை மகள் பேச விடுத்தும் திருமணத்தை இனிதின் முடிக்க முயல்வான்.

உடன்போக்கு

இவ்வாறாகக் களவு மணமுண்மை தெரிந்தபின் இனிதின் மண முடித்து வையாது தலைவியை இல்லிலே வைத்துச் சிறையிடுங்காலத்து இதனின்றும் தலைவி விடுதலை பெற உன்னுவாள். தலைவன் தோழி யின் உதவியுடன் தலைவியைப் பிறர் அறியாவண்ணம் தன்னுடன் அழைத்துச் சென்றுவிடுவான். இதனை 'உடன்போக்கு' என்பர்.

"வருமழை கரந்த வானிற விசும்பின்
நுண்டுளி மாறிய உலவை யங்காட்
டால நீழ லசைவு நீங்கி
யஞ்சுவழி யஞ்சாது அசைவழி அசைஇ
வருந்தா தேகுமதி வாலிழைக் குறுமகள்
இம்மென் பேரலர் நும்மூர்ப் புன்னை
வீமல ருதிர்ந்த தேனுறு புறவிற்
கானல் வார்மணல் மரீஇக்
கல்லுறச் சிவந்தநின் மெல்லடி யுயற்கே"

(நற்றிணை, 76)

என்னும் இப்பாடலில் தலைவியை உடனழைத்துச் செல்லும் தலைவன், பாலைநில வழியில் அச்சமின்றி ஆலமரநிழலில் இளைப்பாறி வருந்தாமல் வழி நடக்குமாறு கூறுகிறான்.

வரைவு வேண்டி மணம் பேசியோர், உடனழைத்துச் சென்று மணந்தோர், தலைவியை அடையப் பெறாத நிலையில் தலைவன் 'மடலேறி'த் தன் காதல் உண்மையை உலகத்திற்கு வெளிப்படுத்தத் துணிந்துவிடுவான். ஒருவன் காதலியை அடையும் பொருட்டு மடலேறினானாயின், உலகச் சான்றோர், முன்னின்று தனக்குரிய காதலியைப் பெற அவனுக்கு உதவி புரிவது வழக்கமாகும்.

மடலேறும் சூழ்நிலை

தலைவன் ஒருவன் தன் காமம் கைகூடித் தலைவியை அடைவதற்கு மடலேறுவதன்றி வேறு வழியொன்றும் இல்லை என்னும் துணிவிற்கு வந்த பின்னரே மடலேற முற்படுவன். இத்தகுநிலை எய்தியான் ஒருவன், தலைவியின் தோழி கேட்கும் வகையில், முன்னிலைப் புறமொழி யாகத் தன் துணிவினை உரைப்பதாய் நற்றிணைப் பாடல் ஒன்றில் ஆலம் பேரி சாத்தனார் தெரிவித்துள்ளார்.

மடலே காமம் தந்தது அலரே
மிடைபூ எருக்கின் அலர்தந் தன்றே
இலங்குகதிர் மழுங்கி எல்விசும்பு படரப்

புலம்புதந் தன்றே புகன்றுசெய் மண்டிலம்
எல்லாம் தந்ததன் றலையும் பையென
வடந்தை துவலை தூவக் குடம்பைப்
பெடைபுணர் அன்றில் இயங்கு குரல் அளைஇக்
கங்குலும் கையறவு தந்தன்று
யாங்கா குவென்கொல் அளியன் யானே!

(நற். 152)

இங்கே தலைமகள் காமம் மடலைத் தந்தது; ஊரார் தூற்றும் அலர் மொழிகளாம் பழிமொழிகள் மடலேறுவான் அணியும் எருக்கமாலையை ஈந்தன; கதிர் சுருங்கிய மாலை ஞாயிறு துன்பம் தந்தது; இரவு தனிமை காரணமாகச் செயலற்ற நிலையை உண்டாக்கிற்று. இவ்வாறான சூழலில் யான் எப்படிப் பிழைப்பேன் என்று தோழி கேட்குமாறு கூறினமையால், கேட்ட அத்தோழி, தன் குறையை முடிப்பாள் என்று அவன் கருதினனுதல் வேண்டும். தோழி அறத்தொடு நின்று உண்மையை வெளிப்படுத்தித் தலைவியின் பெற்றோரை இணங்க வைப்பாள் என்பது கருத்தாம்.

மடலேறுவான் நிலை

மடலேறுவான் நிலை குறித்தும் கவிஞர்கள் பலபடப் பேசியுள்ளனர். காமம் கைகூடாத ஒரு தலைவன் மடலூர்ந்து வருகின்ற நிலையில் என்னென்ன செய்வான் என்பதனைக் குறுந்தொகையில் வரும் பேரெயின் முறுவலார் பாடல் ஒன்று தெளிவுற விளக்கிக் காட்டுகின்றது. அது வருமாறு.

'மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே.'

(குறுந். 17)

இதுவும் மேற்காட்டிய நற்றிணைப் பாடலைப் போன்றே தலைமகன் தோழியிடம் கூறும் செய்தியாகவே அமைந்துள்ளது. இவ்வாறாகத் தோழியிடம் தன் உள்ள உறுதி கூறுதலினால், வரைவிற்கு அவள் ஆவன செய்தல் கூடும் என்பது நோக்கமாம்.

மடலேறும் மரபு

காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப் போல ஓர் உருவினைச் செய்வான். அக் குதிரையின் கழுத்தில் மணி, மாலை முதலியவற்றைப் பூட்டுவான். தானும் ஒரு பித்தனைப் போல எருக்கமாலை, நீறு, ஆவிரம் பூமாலை முதலியவற்றை அணிந்து கொள்வான். தன் உருவமும் தன் காதலியின் உருவமும் எழுதிய ஒரு படத்தைக் கையில் ஏந்திக் கொண்டு, அக் குதிரையில் ஏறி, ஊரார் அறியத் தெருவில் நடத்தி வருவான். இங்ஙனம் அவன் வரக்கண்டதும் ஊரினர், படத்தில் எழுதிய உருவத்தால் இவனுக்கு இன்னவளோடு நட்பு உண்டு என்பதனை அறிவர். இவனை இந் நிலைக்கு ஆளாக்கிய தலைவியின் சுற்றத்தாரைப் பழிப்பர். அது கேட்ட தலைவியின் பெற்

ரோர் அவனுக்கே அவளை மணமுடித்து வைப்பர். மடலேற்றம் குறித்த பல செய்திகள் திருமங்கை மன்னன் பத்திநிலையில் பகர்ந்த பெரிய திருமடல், சிறிய திருமடல் நூல்களிலும் விளக்கமாகச் சொல்லப் பட்டிருத்தல் காணலாம்.

கலித்தொகைக் காட்சி

கலித்தொகையில் 141 ஆம் பாடல் தலைவன் ஒருவன் மடலூர்ந்து சான்றோரை நோக்கி முறையிட்ட செய்தியையும், அது கண்டு அஞ்சிய தலைவியின் சுற்றத்தார் தலைவியை அவனுக்குக் கொண்டு கொடுத்த தன்மையையும் சித்திரித்துள்ளது. மடலேறும் மரபினை நன்கு விளக்கிக் கூறும் அப்பாடலை ஈண்டுக் காண்போம்.

'அரிதினில் தோன்றிய யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்தாங்குக் காட்டிமற் றாங்கே
அறம்பொருள் இன்பமென் றம்மூன்றின் ஒன்றன்
திறம்சேரார் செய்யும் தொழில்கள் அறைந்தன்று
அணிநிலைப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி
அணிநலம் பாடி வரற்கு.

ஒரொருகால் உள்வழிய ளாகி நிறைமதி
நீருள் நிழல்போல் கொளற்கரியள் போருள்
அடல்மாமேல் ஆற்றுவேன் என்னை மடல்மாமேல்
மன்றம் படர்வித்தவள், வாழி சான்றீர்!

பொய்தீர் உலகம் எடுத்த கொடிமிசை
மையறு மண்டிலம் வேட்டனள் வையம்
புரவூக்கும் உள்ளத்தேன் என்னை இரவூக்கும்
இன்னா இடும்பை செய்தாள்; அம்ம சான்றீர்!

கரந்தாங்கே இன்னாநோய் செய்யுமற் றிஃதோ
பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு!

இடிஉமிழ் வானத்து இரவிருள் போழும்
கொடிமின்னுக் கொள்வே னென்றன்னள் வடிநாவின்
வல்லார்முன் சொல்வல்லேன் என்னைப்பிறர் முன்னர்க்
கல்லாமை காட்டியவள், வாழி சான்றீர்!

என்றாங்கே,
விருந்தாமா ஊர்ந்து மறுகின்கண் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்!

தலைவன் ஒருவன் தோழியை இரந்து வேண்டியும் திருமணத்திற் குரிய சூழல் ஏற்படா நிலையில் மடலேறிச் சான்றோரை விளித்துத் தன் நிலையை எடுத்துரைத்து வருகிறான். அது கண்டதும் அத்தலைவியி னுடைய சுற்றத்தார் அஞ்சி அத் தலைவியைக் கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்தனர். இக் காட்சியைக் கண்டார் ஒருவர் சொல்லுகின்ற நிலையில் நல்லந்துவனார் அமைத்துப் பாடியுள்ளார்.

தோழியிடம் தலைவன் மடலேறும் தன் துணிவினை உரைக்கின்ற நிலையில் அத்தோழி அறத்தொடு நிற்க வைத்து மணம்புரிய விரைதல் ஒருவழி. இது கூடாத நிலையில் ஊரறிய மடல் ஊர்ந்து சான்றோரிடம் முறையிட்டுத் தன் காதலியை அடைவது உச்சநிலையில் அமைவதாகும் எனலாம்.

இல்லற வாழ்க்கை

களவு மணம் கண்ட காதலர் கற்பு நெறியுறுதலில் தவறுதல் இல்லை. அறத்தொடு நிற்றல், உடன் போக்கு, மடலேறுதல் என்று இவற்றான் தலைவியின் பெற்றோர்க்குத் தலைவன் தன் காதல் உண்மையை வெளிப்படுத்தி, அவர்கள் முன்னின்று தர உலகறிய மணந்து இல்லறம் புகுதலே இயல்பு.

இல்வாழ்க்கையில் தலைவி, தலைவனைப் பேணி, விருந்தோம்பி உலகோர் மெச்ச நல்வாழ்வு நடத்துவள். தலைவனுக்கு உணவு சமைத்து இட்டு, அவன் இனிது எனப்போற்றி உண்பது கண்டு உவப்புறுவாள்.

நன்கு தோய்ந்த தயிரைப் பிசைந்த தன் கை விரலைக் கழுவாமல் தன் ஆடையில் துடைத்துக் கொண்டு, தன் கண்களில் புகைபடியத் தாளிதம் செய்து சமைத்த குழம்பைத் தலைவன் மெச்சி அருந்தும் காட்சியையும், அது கண்டு தலைவி மகிழ்தலையும் கூடலூர் கிழார் பாடிய குறுந்தொகைப் பாடல் ஒன்று சித்திரிக்கிறது.

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.'

(குறுந். 167)

இங்ஙனமே விருந்தினரை உபசரித்தும், சுற்றம் பேணியும், எளியோர்க்கு இட்டும்,

'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு,

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப இல்லறம் புரிவோர் வாழ்ந்தலமையைச் சங்கப் பாடல்களில் அங்கங்கே காணலாம்.

3. களவியல்

என்னும்

இறையனார் அகப்பொருள்

தோற்றுவாய்

தொல்காப்பியர் வரம்பு கட்டி வகுத்துரைத்த பேரிலக்கணமாகிய தொல்காப்பியம் தமிழின் மரபுக் களஞ்சியம். மொழி மரபும் இலக்கிய மரபும் முன்னாளில் எவ்வெவ் வகையில் வளர்ந்து சிறந்திருந்தன என்பதனைத் திக்கெல்லாம் அறியச் செய்யும் ஒரு கலங்கரை விளக்கம். தொல்காப்பியர் விளக்கியுரைத்த எழுத்து, சொல், பொருள் பற்றிய மரபுகள், காலநிலைக்கு ஏற்பப் பின் வந்தோரால் தனித் தனியாகவும் கொள்ளப்பெற்று மேலும் விளக்கம் பெறுகின்றன. இந்த வகையில் தொல்காப்பியர் தொகுத்துத் தந்துள்ள அகப்பொருள் மரபுகளை அறுபது சூத்திரங்களில் அடக்கி விளக்குவதே களவியல் என்னும் சிறப்புப் பெயர்பெற்று விளங்கும் இறையனார் அகப்பொருள் நூல்.

தென்தமிழ்க் கடவுளாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் கூடற் பதியாம் மதுரையின் மாண்பினைச் சுட்டவந்த கல்லாடர் இந்த அகப் பொருள் நூலின் தோற்றத்தைச் சுட்டியுரைக்கும் பின்வரும் பாவடிகள் இதன் அருமைபெருமைகளை நன்கு எடுத்துக் காட்டும்:

'உலகு இயல் நிறுத்தும் பொருள் மரபு ஒடுங்க,
மாறனும் புலவரும் மயங்குறு காலை,
முந்துறும் பெருமறை மூளைத்தருள் வாக்கால்
'அன்பின் ஐந்திணை' என்று அறுபது சூத்திரம்,
கடல் அமுது எடுத்துக் கரையில் வைத்தது போல்
பரப்பின் தமிழ்ச்சுவை திரட்டி, மற்று அவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்தமிழ்க் கடவுள்,
தழற்கண் தரக்கின் சரும ஆடையன்,
கூடல்அம் பெரும்பதி............

(கல்லாடம் 3 : 10-18)

இத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூலின் சூத்திரங்களுக்கு நக்கீரர் தரும் உரைநடை படித்து மகிழத்தக்கது. பாண்டிக் கோவைச் செய்யுட்களை எடுத்துக்காட்டாக மிகுதியும் பயன்படுத்துவதனால், இந்நூலுரை அக்

கோவையின் தலைவனாகிய நின்றசீர் நெடுமாறன் வாழ்ந்த கி.பி. ஏழாம் நூற்றாண்டை அடுத்துத் தோன்றியது என்று கருதப்படும். நக்கீரரின் விளக்கவுரை, நூலுள் சொல்லப்பட்ட மரபுகளை நன்கு விளக்கி அழகுற அமைத்துத் தருகிறது. பண்டைத் தமிழ்ச் சங்க வரலாற்றை உலகுக்கு அறிவித்ததும் இந்நூலின் பேருரையே. தமிழ்நூற்கடலின் பரப்பையும் ஓரளவு தொட்டுக் காட்டுவதும் இவ்வுரையே. இந்நூல் எழுந்த வரலாறும் ஆக்கியோன் பெருமையும் உரைக்கும் இந்நூலின் தோற்று வாய்ப் பகுதியே தமிழ்நூற் களஞ்சிய அறிமுகமாகும்.

பண்டைய இலக்கிய, இலக்கண மரபுகளைத் தழுவி நக்கீரர் தந்துள்ள விளக்கவுரை பல்லாற்றானும் சிறப்புற்று விளக்குகிறது. பழைய உரைநடைக்கு முன்மாதிரியாகத் திகழ்வதும் இதுவே. நூற்பாவிளக்கமாக உரைநடையில் அகப்பொருள் மரபுகளைத் தெளிவாக எடுத்துரைக்கும் இந்நூல் அகப்பொருள் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. எனவே, இந்நூலுள் காணும் நூற்பாக்களின் கருத்துக்களையும் உரை விளக்கங்களையும் ஒருவாறு சுருக்கி இப்பகுதியில் தரப்படுகிறது. அகப்பொருளாம் தமிழ்நெறிகளை ஆய்வதற்கு அடிநிலையாக விளங்கும் இந்நூல் நூற்பாக்களின் பொருளையும் அவை பற்றிய நக்கீரரின் தொடர்புரையையும் இனிக் காண்போம்,

களவு

1. அன்பின் ஐந்திணை களவு எனப்படுவது

அன்பினன் ஆய ஐந்திணையுள் களவு என்னும் ஒழுக்கம், அந்தணர் போற்றும் அருமறையில் சொல்லப்பெற்ற மணம் எட்டனுள் கந்தருவ வழக்கத்தொடு ஒப்பது.

மணம் என்பது பெண் கொள்ளும் வழி.

இங்குக் கூறிய அன்பு 'இது காண்' என்று காட்டல் ஆகாது; இவை இருப்பதால் இங்கு அன்பு உண்டு என்று அனுமித்துக் கொள்ளற்பாலது. அன்பரால் ஆன குணம் சாவிற் சாதல், நோவின் நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கு இனிது மொழிதல், புணர்வு நனி வேட்டல், பிரிவு நனி இரங்கல் என்பர்.

மேலும், அன்பெனப்பட்டது தான் வேண்டப்படும் பொருளின் கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி. அதனைக் காட்டிக் காண்க என்பது இயல்வது அன்று. அல்லாமலும் உலகத்துப் பொருள்கள் இரண்டு வகையான் உணர்த்தப்படும். உண்மை மட்டும் உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதன ஒருவகை; உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவன பிறிதொரு வகை.

அவற்றுள் உண்மை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதன காமமும், வெகுளியும், மயக்கமும், இன்பமும், துன்பமும் முதலாக உடையன. இவற்றை நெஞ்சில் கொள்ளின் அன்றிக் காட்டல் இயல்வதன்று. இவை போன்று அமைந்த அகப்புறப் பொருள்களின் பண்புகளாவன;

1. ஒப்பு : தந்தையர் ஒப்பர் மக்கள் என்றவழி, அது மன உணர்வாலன்றிக் கட்புலனாகாது என்பது.
2. உரு : இது பொறிநுதல் வியர்வு போல்வனவற்றால் அன்றிப் பிழம்புபற்றி உணர்தலின்று.
3. வெறுப்பு : இஃது ஓர் மக்கட் குணமாவது.
4. கற்பு : இது தலைவி மேற்கொள்ளும் கொள்கை.
5. ஏர் : இஃது ஓர் எழுச்சி.
6. எழில் : எழுந்து வளர்ந்த பருவத்தும் இன்னும் வளரும் என்பதுபோல் காட்டுதல்.
7. சாயல் : ஐம்பொறியால் நுகரும் மென்மை
8. நாண் : செய்யத்தகாதனவற்றின்கண் உள்ளம் ஒடுங்குதல்.
9. மடன் : கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.
10. நோய் : நோதல் (மனத்தின் நிகழ்வது)
11. வேட்கை : பொருள் மேல் தோன்றும் பற்றுள்ளம்.
12. நுகர்வு : இன்ப துன்பங்களை நுகரும் நுகர்ச்சி.

இங்ஙனம் இப்பன்னிரண்டன்று அகப்பொருட்கண் வரும் கிளவிகளும் இப்பன்னிரண்டின்கண் புறப்பொருட்கு உரியவாய் வரும் கிளவிகளும் எல்லாம்[1] நெஞ்சு உணர்ந்துகொளினன்றி உலகியல் வழக்கால் ஒருவர்க்கொருவர் கட்புலனாகக் காட்டப்படாத பொருளைப் பொருளாக உடையன. இவை மேல்வரும் மெய்ப்பாடுபற்றி உணர்தலின் கட்புலனாகாவோ எனின், அது மனக் குறிப்பாதலின் அதன் குறிப்பிற்குப் பற்றுக்கோடாகிய பொருளைச் சார்ந்தனவாம் என்பது கருதற்பாற்று.

இனி, உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவன மாடக் கூடல் மாநிலத் தொடக்கத்தன என்று கொள்க.

ஐந்திணை ஆவன குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்பன. அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் இந்நூல் சுருக்க நூலாதலின் சொல்லிற்றிலர். இவற்றைத் தொல்காப்பியத்தில் விளக்கமாகக் காணலாகும்.

---

1. எல்லாமாவன : ஒளியும், அளியும், காய்தலும், அன்பும், அழுக்காறும், பொறையும், நிறையும், அறிவும் முதலியனவும் பிறவுமாம். 1. ஒளி : வெள்ளையின்மை. 2. அளி : அன்பு காரணத்தால் தோன்றும் அருள். 3. காய்தல் : வெகுளி. 4. அன்பு : இது மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம். 5. அழுக்காறு ; பிறர் செல்வம் முதலியவற்றைப் பொறாமை. 6. அறிவு : நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறு உணர்தல். இவை கண்டிலம் என்று கடியப்படா. கொள்ளும் பொருள்.

—பேராசிரியர் பொருளியல் 53-ஆம் சூத்திர உரை காண்க.

மன்றல் எட்டு

அந்தணர் அருமறை மன்றல் எட்டாவன: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்ப.

1. பிரமம்: நாற்பத்தெட்டு ஆண்டு பிரமசரியம் காத்தானுக்குப் பன்னிரண்டாண்டுப் பிராயத்தாளை அணிகலன் அணிந்து கொடுப்பது. அதனை அறநிலை என்பர்.

2. பிரசாபத்தியம்: மைத்துனக் கோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மறுது கொடுப்பது. அதனை ஒப்பு என்பர்.

3. ஆரிடம்: ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பின வாகச் செய்து அவற்றிடை நீரில் கொடுப்பது. அதனைப் பொருள் கோள் என்பர்.

4 தெய்வம்: வேள்வி ஆசிரியனுக்கு வேள்வித் தீமுன் வைத்துக் கொடுப்பது. அது தெய்வம் என வழிபடப்பட்டதாம்.

5. காந்தர்வம்: இருவர் ஒத்தார் தாமே கூடும் கூட்டம். அதனை யாழோர் கூட்டம் என்ப.

6. அசுரம்: கொல்லேறு கொண்டான் இவளை எய்தும்; வில்லேற்றினான் இவளை எய்தும்; திரிபன்றி எய்தான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது. அஃது 'அரும் பொருள் வினைநிலை' என்பதாம்.

7. இராக்கதம்: அவள் தன்னினும் தமரினும் பெறாது வலிந்து கொள்வது.

8. பைசாசம்: மூத்தாள் மாட்டும், துயின்றாள் மாட்டும், களித்தாள் மாட்டும் சார்வது. அது 'பேய்நிலை' எனப்படும்.

2. மேற்சொல்லப்பட்ட கந்தருவ வழக்கம் போலும் களவு, தானே அவள், அவனேதான் என (வேற்றுமையிலராய்த்) தமியராகி எதிர்ப்பட்டு வேட்கை மிகலினால் புணர்வதாகும்.

தமியராதல் என்பது தம்முணர்வினர் அல்லராதல். தம்முணர் வினர் அல்லர் ஆதல் என்னோ எனின் தலைமகனுக்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன குணம். இவற்றுள் அறிவு என்பது எப் பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம்மெய்ம்மையை அறிவது. நிறை என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம், ஓர்ப்பு என்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல். கடைப்பிடி என்பது கொண்ட பொருள் மறவாமை. இந்நான்மையும் தலைமகற்கு வேட்கை யான் மீதூரப்பட்டுப் புனலால் மீதூரப்பட்ட புல்போலச் சாய்ந்து கிடப்பது.

தலைமகளுக்கோ எனின் நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன குணம். நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாகவே உள்ளதொரு தன்மை; மடம் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை; அச்சம் என்பது பெண்மையில் தான் காணப்படாததோர் பொருள்

கண்ட இடத்து அஞ்சுவது; பயிர்ப்பு என்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை. இந்நான்மையும் புனல் ஓடு வழியில் புல் சாய்ந்தால் போல வேட்கையால் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடப்பது.

வேட்கை என்பது ஒருவரையொருவர் இன்றியமையாமை. அவ் இன்றியமையாவது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக் காசு போலவும், நீர்வழி மிதவை போலவும் பான்மை வழியோடி இருவர் உயிரையும் புணர்விக்கும்.

ஆதலால், தமியராய்ப் புணர்தல் தலைமையொடு மாறு கொள்ளாது. இது காமப் புணர்ச்சி என்பது. இதனைத் தெய்வப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சி என்றும் கூறுப. இவற்றுள் ஒன்றே சொல்லினும் ஒக்கும். அவையெல்லாம் அன்பினானே நிகழும் ஆதலின் காமப்புணர்ச்சி என்றார்.

3. அவ்வாறு கூடிப்பிரிந்த தலைமகன் (கிழவோன்) தன் பாங்கனால் குறி தலைப்பெய்தலும், பாங்கனையின்றித் தனியாளை இடத்தெதிர்ப்படுதலும் தலைப்பெயல் மரபாகும்.

பாங்கற் கூட்டமாவது: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து ஆற்றுவித்துப் பிரிந்த தலைமகன், பிரிந்த அன்று சொன்ன சொற்களை எல்லாம் நினைக்கும். நினைக்குமாறு யாதோ எனின், 'நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன்' எனச் சொல்லிப் பிரியப்பட்டாள், தன்னைக் காணாது என் நிலைமை நினைந்து ஆற்றுங்கொல்லோ, ஆற்றாள் கொல்லோ, அறியாது வருந்துங்கொல்லோ எனவும் இவை முதலாயின நினைத்து ஆற்றானாம். ஆற்றாநின்றானைப் பிற்றை ஞான்று சிறுகாலே தலைப்படும் பாங்கன், அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கி, 'என்னைகொல்லோ எம்பெருமானுக்குத் திருமேனி வேறுபடுதற்குக் காரணமான மனவாட்டம் என்னும். இங்ஙனம் வினாயின பாங்கற்கு, 'நெருநல் இவ்வகையார் ஒருவரைக் கண்டேனுக்கு என் உள்ளம் பள்ளத்துப் பாயும் வெள்ளம்போல் ஓடி இவ்வகைத்து ஆயிற்று என்று சொல்லும்.

கழறி உரைத்தல்: இவ்வாறு தலைவன் சொல்லக் கேட்ட பாங்கன் கழறும், கழறுதல் என்பது அன்புடையார்மாட்டுத் தீயன கண்டால், அவ்வன்பின் தலைப்பிரியாத சொற்களால் நெருங்குவது. கழறுமாறு பின்வரும் வகையில் அமையும். குன்றம் உருண்டால் குன்றி வழியடை ஆகாது போலவும், யானை தொடு உண்ணின் மூடுகலம் இல்லாது போலவும், கடல் வெதும்பின் வளாவும் நீர் இல்லது போலவும் எம் பெருமான் நின் உள்ளம் அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடியின் வரைத்து அன்றிக் கைமிக்கோடுமே எனின், நின்னைத் தெருட்டற்பால நீர்மையரும் உளரோ, நீ பிறரைத் தெருட்டின் அல்லது? அப்பெற்றியாய நீ, 'இன்னதோரிடத்து, இன்னதோர் உருவு கண்டு, என் உணர்வு ஒழியப்போந்தேன்' என்றல் தக்கதின்று என்னும்.

இவ்வாறு பாங்கன் கழறத் தலைமகன் ஆற்றானாய்ச் சொல்லும் சொற்கள் கழற்றெதிர்மறை எனப்படும்.

கவன்று உரைத்தல்: இவ்வாறு தலைமகன் தனது ஆற்றாமையின் கழற்றெதிர் மறுத்துரைப்பது கேட்ட பாங்கன், 'எம்பெருமான் தானே தகாதனவற்றைத் தகாதென உணரற்பாலன்; யான், 'எம்பெருமானுக்குத் தக்கதோ இவ்வாறு உள்மெலிவது' எனவும் தெருண்டிலன்; தெருளான் ஆயதுதான் காணப்பட்ட உருவும் அந்நீர்மைத்து ஆகவே; அன்றாயின் தெருளுமன்றே' எனக் கவன்றான்.

இயலிடம் கேட்டல்: கவன்ற பாங்கன், 'என் பாக்கியம் பிற கழற்றெதிர் மறுத்துச் சொல்வானாயிற்று. சொல்லாது அகன்றான் ஆயினும் செய்வதில்லை; பெரியதோர் இழுக்குச் செய்தேன்' என ஆற்றான் ஆயினான். அவ்வாற்றாமை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். 'யான் அகன்ற இடத்து, இவனை இஃது எய்துவிக்கலாகாது. யான் அகலாது ஆற்றுவதே பொருள்' என்று அவனை அடுத்து நின்று, 'எவ்விடத்து எத் தன்மைத்து நின்னால் காணப்பட்ட உரு?' என்னும்.

இயலிடம் கூறல்: இவ்வாறு பாங்கன் வினவியது கேட்ட தலைமகன், கோடையால் தெறப்பட்டு வாடி நின்ற சந்தனமரம் மழை பெற்றுத் தளித்தாற் போலப் பெரியதோர் கழியுவகை மீதூர, 'இவ்விடத்து இத்தன்மைத்து என்னால் காணப்பட்ட உருவம்' என்னும்.

இவ்வாறு உணர்த்தப்பட்ட பாங்கன், 'நீ இனையை ஆகாது என்னின் ஆவது உண்டேல், காண்பேன்' என்று தலைமகனை ஆற்றுவித்து, அவன் சொன்ன இடம் நோக்கிச் செல்வானாவது. இது தலைமகன் நிலைமை.

இனி தலைமகளது நிலைமை: பிற்றைஞான்று தன் ஆயவெள்ளத்தொடும் வந்து தான் விளையாடும் இடம் புகுதலுடையாள், 'நெருநலை நாளால், "நின்னின் பிரியேன், பிரியின் ஆற்றேன்" என்று சொல்லினான், ஆயத்துள்ளே வருவான் கொல்லோ!" என்னும் பெருநாணினானும், ஆற்றாமையான் இறந்துபட்டான்கொல்லோ என்னும் பேரச்சத்தினாலும் மீதூரப் பட்டுத் தனிமையள் அன்றித் தன் ஆயங்கள் புடைபெயருமாறு புடைபெயர்ந்து வருகின்றாள், நெருநலை நாளால் தலைமகனை வழிபட்ட இடம் எதிர்ப்படும்.

எதிர்பட்டுத் தலைமகனைக் கண்டாளே போன்றாள். என்னை? இனியரோடு தலைபெய்த இடம் கண்டாலும், அவ்வினியரைக் கண்டாலே போல்வது உலகத்துத் தன்மை. அவ்வாறு நிற்ப, ஆயங்களும் நெருநலை நாளால் பிரிந்தாற்போலத் தழை விழைத்தக்கன தொடுத்தும் என்றும் போது மேதக்கன கொய்தும் என்றும் இவ்வாறு விளையாட்டு விருப்பினால் பிரியும். பிரியநின்றாள் எப்பெற்றி நின்றாளோ எனின், ஆயத்துள்ளே வருவான் கொல்லோ என்னும் அச்சம் நீங்கிற்று, ஆயங்கள் நீங்கினமையின். இனி, இறந்துபட்டான் கொல்லோ என்னும் அச்சத்தினால் மீதூரப்பட்டு நின்றாள். நின்ற நிலைமைக்கண் பாங்கன் சென்று, அவள் தன்னைக் காணாமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் காணும். கண்டு, இவ் இடமே அவனால் காணப்பட்ட இடமும், இவ்வுருவே அவனால் சொல்லப்பட்ட உருவும் எனத் துணியும்,

தலைவனை வியந்துரைத்தல் : இங்ஙனம் பாங்கன் துணிந்து, இவ் வுருவினைக் கண்ட எம்பெருமான் ஆற்றான் ஆகாமைக்குக் காரணம் என்னை? பெரியவர்க்கே ஆகாதே? அரியன தாம் கற்று வல்லன் அவன் ஆதலான் ஆற்றினான்; பிறராயின் இறந்து படுப. இறந்துபடாது என் காறும் வந்த இருந்தலைப் பெருந்தக்கானை யான் பெரியதோர் இட னன்றிக் கழறினேன் என நினைக்கும்.

கண்டமை கூறல் : என நினைந்து ஆற்றானாயினும் இறந்துபடான் ஆயினான். அவனை அஃது எய்துவிக்கும் திறம் என்னைகொல்லோ என்ப தனான். அவ்வகை நினைத்துத் தலைமகனைச் சென்று எய்தி, 'யான் கண்ட இடம் மேதக்கதேகாண்,

'இரவோர் அன்ன கொழுநிழல் தாஅய்
நிலவோர் அன்ன வெண்மணல் ஒழுகி
வண்டும் தேனும் வரிக்கடைப் பிரசமும்
கொண்டு புணர்நரம் பென்று முரன்று
விழைவு விடுத்த விழுமி யோர்க்கும்
விழைவு தோற்றுவிக்கும்'

பண்பிற்று' என்னும்.

என்று சொல்லி நீயன்றே இவ்வகை மேதக்கன எய்தற்பாலாய் என, தலைமகனும் அவ் இடம் நோக்கிச் செல்லும்; சென்ற இடத்துத் தனியளாய் நின்ற தலைமகளை எதிர்ப்படும். எதிர்ப்படவே, தலைமகள் காணும். காணவே, 'ஆற்றாமையின் இறந்துபட்டான் கொல்லோ' என்னும் அச்சம்நீங்கிற்று. நீங்கத் தன் தன்மையளாயினாள். தன் தன்மை என்பது, நாண்மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் இவற்றோடு கூடி நிற்பது இத் தன்மையளாய் நிற்பத் தலைமகளது குறிப்பறியாமைச் சாரலா காமையின் ஆற்றானாயினான் தலைமகன். ஆற்றாமையாவாது, பிறிதுணர்வு மின்றி அவ்வாற்றாமை தானே ஆவது. அவ் ஆற்றாமை ஆற்றுவது ஒன் றனைப் பற்றும். ஆற்றுவது பிறிதின்மையின், ஒரு சொல் சொல்லும். என் சொல்லுமோ என்னின், 'நின்னை யான் இப்பொழிலுறை தெய்வம் என ஐயுறுவல்; அல்லையாயின் வாய் திறவாய். ஆவி சென்ற பின்னைப் பெயர்ப்பு அரிதன்றே,' என இவ்வகை போல்வன சொல்லும்.

மருங்கணைதல்: அங்ஙனம் சொல்லக்கேட்ட தலைவிக்கு உவகை ஆயிற்று. ஆக அவ்வுவகை ஒரு முரல் முறுவல் தோற்றிற்று. தோற்ற, எம்பெருமான் முன்னர்ப் பெரியதோர் நாணின்மை செய்தேன் என ஆற்றாளாயினாள். யான் முன் என் தன்மையேனாய் நிற்ப ஆற்றானாயின் எம்பெருமான், எனது ஆற்றாமை கண்ட இடத்து இறந்துபடும் பிற என ஆற்றாமை நீங்கும். நீங்க நாண் வந்தடையும். அடைய மறைவது காணாது மாதுபடுநோக்கி, தன் மணிக்காந்தள் மெல் விரலால், போதுபுரை நெடுங்கண் புதைத்தாள். புதைப்ப, 'இனிச் சார்வு ஆற்றும் என நினைந்து, நின் கருநெடுங்கண் புதைத்தது இவற்குப் பெரியதோர் ஆற்றாமை செய்யும் என்று ஆகாதே, அவற்றின் பரத்தவோ சுரும்புடைக் கோதை நின் கரும்புடைத் தோள்' என்று சொல்லி அவள் குழலும் கோதையும் திருத்துவானாய்ச் சென்று சேரும். இது பாங்கற்கூட்டம் ஆயினவாறு.

பொழிலிடைச் சேறல்: இனி, பாங்கிலன் தமியோள் இடந்தலைப் படுவது. யான் இவளை எய்தியது விதியானே. இன்னும் அவ்விதி கைதருமேல் காண்பல் எனப் பாங்கற்குச் சொல்லாதே தான் முன் எதிர்ப்பட்ட இடமே நோக்கிச் செல்லும்.

பொழில் கண்டு உவத்தல்: சென்று நெருநலை நாளால் அவளைக் கண்ணுற்ற பொழிலே புக்கான். புக்காற்கு அப்பொழில் பெரியதோர் சார்வாயிற்றாக, ஆற்றாமை நீங்கினான். என்னை? இனியரோடு தலைப் பெய்த இடம் கண்டாலும் அவ்வினியரைக் கண்டாலே போலும் என்னும் என்று முன் பாங்கற் கூட்டத்துச் சொன்னவாறே சொல்லித் தலைமகன் புணர்வது. இது பாங்கிலன் தமியோன் இடம் தலைபடுமாறு;

பாங்கற் கூட்டம் நிகழின் இடந்தலைப்பாடு நிகழாது இடந்தலைப் பாடு நிகழின் பாங்கற் கூட்டம் நிகழாது.

4. மேற் கூறப்பட்டன இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த இயல்பல்லது ஒருவர் இடை நின்று புணர்ப்பார் உளராகப் புணர்தல் எவ்விடத்தானும் களவிற்கு இல்லை.

எனவே, உலகினுள் ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் ஒழுக்கம் அன்று. இது புலவரால் நாட்டப்பட்ட ஒழுக்கம். கூட்டக் கூடல் எவ்விடத்தானும் களவிற்கு இல்லை எனவே, கூட்டாமைக்கூடல் கற்பினுக்கு இல்லை என்பதாம். தலைமகன் உலாப்போயின இடத்துப் பரத்தையர் மாட்டுப் பிரிந்தான் எனக் கருதி ஒரு சிவப்பு உண்டாம். அச் சிவப்பு நீக்கி வாயில்கள் கூட்டவே கூடும் என்பது.

'அவ்வியல்பல்லது கூட்டக்கூடல் களவிற்கு இல்லை' என அமையாதோ, 'எவ்விடத்தானும்' என்றது என்னோ எனின், உணர்த்த உணர்தல் ஓரிடத்து உண்டு என்றற்குச் சொல்லினார். 'யாருணர்த்த உணர்பவோ' எனின், தோழி உணர்ந்தமை தலைமகன் உணர்த்தத் தலைமகள் உணரும் என்பது.

பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் புணர்ச்சி இறுதிக்கண், ஒருகால் தலைமகளைக் கோலம் செய்தான். செய்யவே அவள் மிகவும் நாணினாள். நாண, தலைமகன் கருதுவான், 'யான் செய்தது இயற்கைக் கோலமல்லது போலும் என்னும் இவள் வேறுபடுகின்றது' என உணர்ந்து, அவளை ஆற்றுவித்தற்கு, 'நின் தோழி செய்யுமாறே கோலம் செய்தேன்' எனச் சொல்லும். சொல்ல, 'ஒக்கும், இவர் என் தோழி யொடு தலைப்பெய்து உடையர் போலும்' என உணர்ந்தாள் அவள்.

5. பாங்கனானும் தமியாளை இடத்தெதிர்ப்பட்டானும் புணர்ந்த பிற்றை ஞான்றும் அப் பெற்றியே ஒழுகாது, பணிந்த மொழியால், தோழிமாட்டு இரந்து குறையுறுதலும் செய்து நிற்றல் தலைமகற்கு உரித்து.

அஃதாவது பாங்கனான் ஆதல், எதிர்ப்பட்டாதல் புணர்ந்த தலை மகன் பின்னைத் தெருண்டு வரைதல் ஒருதலை. அல்லாதுவிடின் இவ் வாறு ஒழுகும் என்று தலைவன் திறம் உணர்த்துகின்றார்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின், அவன் (தலைவன்) அவள் (தலைவி) காணுமைத் தான் காணுமோர் அணிமைக்கண் நின்றான். நின்றானாக, மற்றையோரெல்லாம் தலைமகட்குச் செய்யும் வழிபாடும் இவள் (தோழி) விசேடத்தால் செய்யும் வழிபாடும், எல்லார்க்கும் தலைவி செய்யும் அருளும் கண்டமையான், "இவள் அவட்குச் சிறந்தாள்; இதுவும் எனக்கோர் சார்பு" என்பதனை உணர்ந்தான். உணர்ந்தமையால், பின்னிற்கும். அங்ஙனம் இரந்து பின்னின்ற இடத்து, 'எத்திறத்து கொல்லோ இவனுடைய குறை' என்று நிற்ப தல்லது இன்னது என்று உணராள் அன்றே. உணராமையால், 'என் குறை இன்னது' என்று இரந்து பின்நிற்பன் என்ற கருத்தினால் இது செய்யும் என்று விளக்குகிறார்.

6. இரந்து வைத்துக் குறை உறவு தோன்றாமை, தலைவியும் தோழியும் ஆகிய அவ்விருவரும் கூடியிருக்கும் செவ்வி நோக்கிப் பதியும் பெயரும் புதுவோன் போலப் பொருந்துமாறு வினவி, மதியுடம்படுத்தற்கும் உரியன் என்பது அது.

பதிவினுதல் என்பது, 'எவ்வூரீர்?' என்பது; பெயர் வினுதல் என்பது, 'என்ன பெயரீர்?' என்பது; பிறவினுதல் என்பது, 'இங்கே மான் போந்தன உளவோ? இளையர் போந்தார் உளரோ? யானை போந்தன உளவோ? என்று இத் தொடக்கத்தன வினுதல்.

மதி உடம்படுத்தல் ஆவது அறிவினை ஒருப்படுத்தல். யார் அறிவை உடம்படுத்தல் எனின் தோழி அறிவை எனக் கொள்க.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த ஞான்று முதற்கொண்டு கண் சிவந்து, நுதல் வேறுபட்டுக் காட்டிற்று. இவட்கு இவ்வேறுபாடு தெய்வத்தினான் ஆயிற்றுக்கொல்லோ எனவும், மக்களினான் ஆயிற்றுக் கொல்லோ எனவும், இவனும் அது முதற்கொண்டு பின்னிலை முனியாது இரந்து பின்னிற்கின்றான், இவனுடைய குறை யார்மாட்டது கொல்லோ எனவும் தோழியின் அறிவு கவர்ந்தது. அங்ஙனம் அறிவு கவர்ந்த தோழி, 'இவள் வேறுபட்டது இவன் காரணமாகப் போலும்' என அவற்றை ஒன்றாக வைத்து எண்ணிப் பிறகு வேறாகப் பிரித்து ஆய்வாள்.

இனி, 'மதியுடம்படுத்தற்கும் உரியன்' என்ற உம்மையான் வரைந்து எய்துதல் மிக்கது என்பது போதரும்.

அடுத்துத் தோழியின் உணர்ச்சியைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகிறார்.

7. முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் என்ற அம் மூன்றும் தோழிக்கு உணர்ச்சி.

(அ) முன்னுற உணர்தலாவது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றை ஞான்று அவள் (தலைவி) கண் சிவப்பும் நுதல் வேறுபாடும் கண்டு கரவு நாடி உணர்வது. எங்ஙனம் உணரும் எனின், 'எம் பெருமாட்டிக்கு இவ்வேறுபாடு பண்டைத் தன்மைத்து அன்று; இஃது

எதனால் ஆயிற்று? சொல் நீ' என்னும். என, நெருநல் நின்னை நீங்கி, மேதக்கதோர் சுனை கண்டு நெடுங்காலமும் ஆடினேனுக்கு இஃது ஆயிற்று, ஆகாதோ கண் சிவப்பும் நுதல் வேறுபாடும்' என்னும். என, 'என்ன, சுனையாடினார்க்கெல்லாம் இவ் அழகின் தன்மை பெறலாம் எனின் யானும் அதுவே செய்து காணேனோ' என்னும் எனக் கேட்டுத் தலைவி, தலை சாய்த்து, நிலம் கிளையா நிற்பப் புணர்ச்சி உண்டு என்று தோழி உணர்ந்து கொள்வாள். அல்லதூஉம்,

பிறை தொழுக என்றல்: அங்ஙனம் வேறுபாடு கண்டு ஐயுற்று நின்ற தோழி, அந்திவானத்தின்கண் செங்கோட்டு மதர்வைக் குழவித் திங்களைக் கண்டு தான் தொழுது, 'நீயும் தொழுது காண்' என்னும் எனக்கேட்டுத் தலைமகள் தொழாதே நிற்கும், கற்பழியும் என்பதனான். அதுகண்டு உண்மை அறிந்துகொள்ளும்.

வேறுபடுத்துக் கூறல்: அஃதன்றி அவனை வரையணங்கு ஆகவும் சொல்லும். அத் தலைமகளுக்குப் புணர்ச்சி உண்மையை உணர்ந்து கொண்டதனையும் நகையாடி உரைக்கும்.

இங்ஙனம் சுனையாடல் கூறி நகைத்தல், பிறை தொழுக என்றல், வேறுபடுத்துக் கூறல், புணர்ச்சி உரைத்தல் என்னும் இவற்றை நாண நாட்டம் என்பர்.

இனி நடுங்க நாட்டம் நாடுமாறு: 'நம் புனத்துள் உதிரம் அளைந்த கோட்டது ஓர் களிறு கண்டேன்' என்பது. அது கேட்டு, 'பல் காலும் இவ்விடத்து வந்து எம்பெருமான் இயங்குவான் ஆதலான், அவனைக் களிறு ஏதம் செய்தது கொல்லோ' என்று நடுங்கும். அது கண்டு கூட்டம் உண்மை உணரும்.

இவ்விரண்டிற்கும் மறுப்பு: நாண நாடுதலும் நடுங்க நாடுதலும் ஆகிய இரண்டும் பொருந்தாது என்பர் களவியல் உரையாசிரியர். 'அவை அகத்திணை இலக்கணம் அன்று என்க' என்பர்.

அவ்வாறு களவியல் உரையாசிரியர் மறுத்தற்குரிய காரணங்களைக் காண்போம்.

'நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேஎத்து'

என்பவாகலான். அல்லதூஉம், இவள் பெரும் நாணினள் ஆகலானும், பேரச்சத்தினள் ஆகலானும் இறந்துபடுமாகலின் அவள் ஏதத்திற்குக் காவலாள் ஆயினும் ஆம்; அவளது குறிப்பறியாது உரைத்தமையான் ஆசாரம் அறியாளும் ஆம். இக்குற்றமெல்லாம் தங்கும் அவ்வகை (நாணவும் நடுங்கவும் நாடுதல்) உரைப்பார்க்கு என்பர்.

'மற்று என்னோ உரை' எனின் முன்னுற உணர்தல் என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னை, அவளது வேறுபாடு தெய்வத்தினான் ஆயிற்று கொல்லோ, மற்றொருவாறு ஆயிற்று கொல்லோ' என ஐயுற்று நிற்பது.

(ஆ) குறையுற உணர்தல்: அவன் (தலைவன்) தழையும் கண்ணியும் கொண்டு பின்னிலை முனியாது நிற்ப, 'ஒக்கும்; இவன் இரந்து பின்னின்றது அவள் (தலைவி) காரணம் போலும்' என உணர்வது. அது பொருந்தாது அன்றே? யாரானும் ஒருவர் தன்னுழை ஒரு குறையுடையராய்ச் சென்ற இடத்து அவள்கண்ணது ஒன்று கருது வாளாயின், அவளை அவமதித்துக் கருதினளுமாம்; அது அவளது பெருமையொடும் மாறுகொள்ளும். மற்று, 'என்னோ குறையுணருமாறு' எனின், 'இவன் இரந்து பின் நிற்கின்றது எற்றிற்குக் கொல்லோ' என்று உணர்வது ஆயிற்று என்பது.

இவை இரண்டும் (முன்னுற உணர்தல் குறையுற உணர்தல் என்னும் இவை) ஐய உணர்வே. துணிபில.

(இ) இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல்: அவ் ஐய உணர் வோடு நின்ற தோழி, இருவரும் உள்வழி அவன் வந்து நின்று, பதியும் பெயரும் பிறவும் வினவத் துணிந்து உணர்ந்து கொள்வாள் எனக் கொள்க அதற்குச் செய்யுள்:

'ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்;
நரந்தம் கண்ணி இவனோடு இவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே;
நம்முன் நாணுவர் போலத் தம்மின்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப;
சொல்லும் ஆடுப, கண்ணினானே.'

இதனை மதியுடம்பாடு என்றமையானும், முன்னை அறிவு கவர்த்தது என்பது பெற்றும். துணிவுடன் உணர்வு பெற்றிலம். அஃதே எனின், 'அம் மூன்றென்ப தோழிக்குணர்ச்சி' என்று மூன்றனையும் உணர்ச்சி என்றே சொன்னமையால், துணிவு உணர்வே ஆகற்பாலது எனின், உணர்வு என்னும் பொதுமை நோக்க துணிவு உணர்வும் உணர்வே எனப்படும்; ஐய உணர்வும் உணர்வே எனப்படும். இவ்வாறாகவே தோழி ஆராய்ச்சி உடைமையும் ஆசாரம் உடைமையும் ஏதத்திற்குக் கவறலும், நன்கு மதித்தலும் வெளிப்படும்.

இன்னும் ஓர் இலக்கணம் தோழிக்கு உரைப்பர்.

8. அங்ஙனம் (தோழி) உணர்ந்த பின்றை அல்லது தலைமகள் மாட்டுத் தான் குறைமுடிப்பல் என்னும் சொல் தோழிக்கு இல்லை.

இல்லை எனவே கரவுநாடி, வேண்டுவாரையும் நாடி மறுத்தாளாம். 'தான்' என்றது எற்றிற்கு எனின், பின்னையும் தானல்லள் குறை நயப்புக் கூறுவாள். அவன் அது ஆற்றுமையைத் தன்கண் கொண்டு நின்றமையால், அவனே (தலைவனே) குறையுறுவான் எனப்படும்.

அடுத்துத் தலைமகள் முன் நின்று தோழி சொல்லாடும் திறன் உணர்த்துகிறார்.

9. முன்னுற உணரினும் (மதியுடம்படுப்பக் கூட்ட முண்மை உணர்ந்தாள் ஆயினும்) அவன் குறையுற்ற பின்னர் அல்லது தோழிசொல் தோன்றுது.

மதியுடம்படுத்துத் தன் கருத்து அறிவித்துப்பின் தழையும் கண்ணியும் கொண்டு தலைவன்பின் நிற்பான். நின்றுேடு முடிப்பக் கருதுவாள் தன்கண் நாணுக் கெடுந்துணையும் குறிப்பாகப் பேசுவாள். பேசத் தலைவனது ஆற்றுமை பெருகும். பெருகுவது கண்டு இவட்கு (தோழிக்கு) நாணுச் சுருங்கும். இரண்டும் (தலைவன் ஆற்றுமையும் தோழி நாணும்) துலாக்கோலிட்டு நிறுக்கப்பட்டன போலச் சமநிலை எய்தி நின்றுழி, அவனது ஆற்றுமையும் இதனின் இங்குப் பெருகுமாறு இல்லையெனப் பெருக்கத்து வரம்பெய்தி நின்றது. இவளது நாணும் இதனின் இங்கு நுணுகுமாறு இல்லையென நுணுக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது.

மடல் திறம் ; அவ்வாறு நின்ற நிலைமைக்கண் தலைமகன் ஒரு சொல் சொல்லும். என் சொல்லும் எனின், 'இதனின் ஊங்கெல்லாம் இக் கருமம் நின்ருல் முடியும் எனக் கருதி வந்து உழந்தேன்; இனி நின்ருல் முடியாமை உணரப்பட்டது; பட்டமையின், இனிவந்தன செய்தாயினும் முடிப்பல், இதனை இன்றியமையேன் ஆகையால்' என்னும். இனி வந்தன செய்துமுடித்தல் என்பது மடலூர்வதாயினும் வரைபாய்வதாயினும் என்பது. அதற்குச் செய்யுள்:

'மாவென மடலும் ஊர்ப; பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே'

(குறுந்தொகை. 17)

அருளால் அரிதென விலக்கல் : தலைமகன் ஆற்றுமை கேட்டலும், முன் குறைபாட்டின்கண் சென்று நின்ற நாண் உண்டன்றே. அது கெடும். அது கெட, அவனது ஆற்றுமையைத் தன்கண் கொண்டு தலைமகனை ஆற்றுவிப்பதோர் சொல் சொல்லும். அஃது யாதோ எனின், அரியன தாங்கலன்றே பெரியாரது பெற்றிமை. நீயிர் இதன் திறத்தினீர் ஆகன்மின், யானும் அதன் திறத்து என்னின் ஆவது உண்டேல் காண்பன்' என்னும். என, அவனது ஆற்றுமை நீங்கும். அது நீங்க, தலைமகனது நிலைமை நோக்கி, 'இவன் இறந்துபடான்,' என்பது உணர்ந்து, இவை சொல்லும். யாவையோ எனின், மடல் ஏறுவன் என்றிரால், மடல் ஏறுதல் இயையாது நீர் பேரருளீர் ஆதலான்' என்னும். அன்றியும்,

அவயவம் எழுதல் அரிதென் விலக்கல் : 'மடலேறுவேன்' என்றிரால்; மடல் ஏற்பபடுவதோர் உருவெழுதிக் கொண்டன்றே ஏறுவது, நுமக்கு அவ் உரு எழுதுதல் ஆகுமோ,' என்னும். அல்லதூஉம், 'எழுதினரூன்று, 'இங்ஙனமோ நீர் எழுதுவது? என்று சொல்லும்.

உடம்பட்டு விலக்கல் : அங்ஙனம் சொல்லக் கேட்டுத் தலைவன் பெயர்த்தும் ஆற்றுனும். ஆக, இறந்துபடல் ஆகாதென்று நீர் இந்நீரர் ஆகாதீர்; நுமக்கு இக்குறை முடித்துத் தருவன்; நும்மால் கருதப்படு வாள் என் மாட்டுப் பெரிதும் அருளுடையள் ஆயினுள் இப்பருவம் என்னும், இது சொல்லி இவனை ஆற்றுவித்துத் தலைமகள் மாட்டுச் சென்று அக்குறை முடிக்கும் உபாயம் ஆராய்வாள் ஆவாள்.

10. உள்ளத்து நின்ற உணர்ச்சியைத் தோழி நன்கு புலப்படாமை மறைத்துத் தலைமகள்மாட்டுக் குறை வேண்டலும் உள.

உள்ளத்து உணர்ச்சி என்பது யாதோ எனின், கூட்டம் உண்மை உணர்ந்த உணர்ச்சி என்றுமாம்; அல்லதூஉம், 'அவர் இக்குறையினை இன்றியமையாதார்' என உணர்ந்த உணர்ச்சி என்றும் ஆம். 'யான் குறையுற, அவள் இதனை ஆற்றுங் கொல்லோ' என உணர்ந்த உணர்ச்சி என்றுமாம். அல்லது என்னின் ஆய கூட்டம் முடியாதுவிடின் இவன் இறந்துபடுமாகலின், அவளைக் குறை நயப்பித்துக்கொண்டு முடிக்கலாம் கொல்லோ என உணர்ந்த உணர்ச்சி என்றும் ஆம். 'உண்டு' என்னுது 'உள' என்ற பன்மைச் சொல் எற்றிற்கோ எனின், குறையுறுதல்தாம் பல என்றற்குச் சொல்லப்பட்டது. அவை யாவையோ எனின், மெலி தாகச் சொல்லிக் குறை நயப்பித்தலும் வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தலும் என இவை.

மென்மொழியால் கூறல் : இவற்றுள் மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பிக்குமாறு: 'இங்கு வந்து ஒழுகாநின்றுன் ஒரு தோன்றல் உளன்; அவன் என்னின் ஆயதொரு குறையுடையான் போலும். ஒருவராலும் ஒரு குறை கொள்ளும் தன்மையனும் அல்லன், ஒருவர்க்கு ஒரு குறை முடிப்பின் அல்லது; அதனுல் குறை இன்றியமையாமை நோக்கி, யான் முடிப்பன் என்று பொய்த்தேன். அவன் அதனை மெய் என்று கருதிக் கைக்கொண்டு சென்றுன், தான் பொய் அறியாமையின், அன்னுன் இன்றும் வருவான்; வந்தால் குறை முடியாமையின், பொய்யென உணர்வனுகானே என்னும். என இவ்வகைக் கூறக் கேட்டுத் தலைவி, [a]'நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன்' என்ற எம்பெருமான் இவனை வந்து இரந்துபின் நின்றமையின் இறந்துபட்டிலன் என்று ஏமாப் பாள் ஆவது.

வன்மொழியால் கூறல் : இனி, வலிதாகச் சொல்லிக் குறை நயப் பிக்குமாறு: இங்கு வந்து ஒழுகாநின்றுன் ஒரு தோன்றல் உளன்; என்னின் ஆவது ஒரு குறையுடையான் போலும். அவன் ஒருவராலும் ஒரு குறைகொள்ளும் தன்மையனுயுமல்லன், தான் பிறர் குறை முடிப் பின் அல்லது. அதனுல் குறை இன்றியமையாமை நோக்கிக் குறை முடிப்பன் எனப் பொய்த்து ஒழுகினேன்; ஒழுக, நெருநலை நாளால் இக் கானலுள் வந்து, என்னை எதிர்ப்பட்டுத் தன் துணைப் புறந்தருவதோர், அலவனைக் கண்டு, 'இதுவாகாதே அறிவும் ஆண்மையும் உடையது' என அதனை நன்கு மதித்து ஆற்றுனய், என்னையும் நோக்கி அலவனையும் நோக்கி, உணர்வினை என்கண்ணும் அவ்வலவன்கண்ணும் ஒழியப் போயினுன்; எத்தன்மையன் ஆயினுன் கொல்லோ, இன்று வந்திலன் என்னும். இது கேட்டு இறந்துபடாளாயிற்று.

அங்ஙனம் குறைநயப்புக் கூறப்பட்ட தலைமகள் இன்ன தன்மையள் என்பது உணர்த்துகிறார்.

11. தன் உள்ளத்துக் குறிப்பினைச் சார்த்தலுறும் தோழிக்கு இயற்கைப் புணர்ச்சியினைத் தலைமகள் கரத்தலும் உடையள்.

தோழி மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்த இடத்து, 'எம் பெருமான் தனக்குத் தகாத இளிவுபட ஒழுகாநின்றான்' எனத் தலைவிக்குக் கவற்சி உண்டன்றே, அது புலப்படாமை நிற்கும். வலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறினவழி, 'நெருநல் வாரானாயினான்' என்றமையின், இறந்துபட்டானென ஆற்றாமை பெரிதாய் அங்கு (தோழிக்கு)ப் புலப்பட நிற்கும்.

இனி, ஒரு திறத்தார் சொல் நிகழ்த்தலும் உண்டு, சொல் நிகழாமையும் உண்டு என்பர். மெலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறிய வழி, முன் இறந்துபட்டான்கொல்லோ எனக் கருதி ஆற்றாமையொடு நின்றாள், உண்மை (தலைவன் உளனாதலை) கேட்ப, ஆற்றாமை நீங்கி நாணு வந்து அடைய, தோழி முன்னர் நிற்கலாது. 'வேங்கைப்பூக் கொய்வாம்,' 'மயிலாடுமாறு காண்பாம்,' 'குயில் கூவுமாறு கூவுவாம்,' 'அருவி ஆடுவாம்' என ஒன்றன்மேலிட்டுத் தலைவி நீங்கும். வலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறிய வழி, 'நெருநல் வாரானாயினான் ஆதலின் இறந்து பட்டான்' என ஆற்றாமையது பெருமையால் சொல் பிறவாது எனக் கொள்க.

ஒருவர்க்கு ஒரு சொல் சொன்ன இடத்து அது சொல்லப் பட்டார் இன்ன நிலைமையிர் ஆயினார் என்பது சொல்ல வேண்டும் அன்றோ, மேல் (10 ஆம் சூத்திரத்து) தோழி தலைமகளைக் குறையுறும் என்றார்; இங்கு (இப்பதினொன்றாம் சூத்திரத்து)க் குறையுறப்பட்ட தலைமகள் இன்ன நிலைமையள் ஆயினாள் என்பது சொல்ல வேண்டுமன்றே. அது கூறினார்.

இவ்வாறு குறை நயப்புக் கூறக் கேட்ட தலைமகள் தலைமகனைக் காண வேண்டும் கருத்தினளாம். அக் குறிப்பு உணர்ந்த தோழி, தலைமகள் குறை நேர்ந்தாள் என்பது தலைமகற்கு அறிய நிற்கும் என்பாரும் உளர்.

12. குறையுறவினான் ஆற்றானாகிய தலைமகனை உணர்ந்த தோழி, காப்பு மிகுதியைச் சொல்லி அகற்றி நிறுத்தலும், ஆற்றானாகி நின்ற தலைவனை என்னை நீர் இவ்வகையில் திரிதற்குக் காரணம் (என் குறை இது என்னாதானை மறைத்தால் நுமக்காவ தென்னை) என்றலும், என்னை மறையாதுவிடக் குறைமுடிப்பல் என்றலும், மாயமான புணர்ந்து சொல் இன்றது என்று அவனோடு நகாநிற்றல், அவளுக்கு நீயே சென்று நின்குறை சொல் என்றல், தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு பின் நின்ற விடத்து, 'நும்மால் சொல்லப்படுவாளை அறியேன்' என்றல், கையுறையை ஏற்றுக் கொள்ளாது மற்றொன்று சொல்லி நீக்குதலும், நீர் உடையதோர் குறைஉண்டு எனின் அகன்று நின்று முடித்துக்கொள்ளற்பாற்று என்றலும், வேண்டாத குறிப்பினளாய்க் காட்டலும், அன்னபிறவும் 'தலைப்பெய்விப்பல்' என்னும் உள்ளத்தாள் சொல்லுதற்குரிய கிளவிகள்.

இவையெல்லாம் கூறித்தோழி தலைமகனைச் சேட்பட நிறுத்துவாள். ஏனெனில், தலைமகன் தெருண்டு வரைந்தெய்துவான் எனக் கொள்க. மதியுடம் படுத்துப் பின் நின்றானாகத் தான் இதனை முடிக்கக் கருதுவாள் தன்கண் நாணுக் கெடுந்துணையும் குறியாடிக்கொண்டு ஒழுகுமாறு உணர்த்துதல் நுதலிற்று எனவும் அமையும் என்பர் களவியல் உரை காரர். இவற்றின் விளக்கம் வருமாறு:

(அ) சிறையுறக் கிளந்து சேண்பட நிறுத்தல்: (சிறை-காப்பு; உற-மிக; கிளத்தல்-சொல்லுதல்; சேண்-அகற்றல்; பட-நிகழ்தல்; நிறுத்தல்-தழீஇக்கோடல்.) காப்பு மிகுதி சொல்லி அகற்றித் தழீஇக் கோடல். இது, 'இவ்விடம் மிக்க காவலுடைத்து; நீயிர் வரற்பாலிர் அல்லீர்,' என்பது. இவ்வாறு தோழி சொல்லத் தலைமகன் ஆற்றியிருக்கும். எவ்வாறு என்னின், அச்சொல்லே ஆற்றுவிக்கும். இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்கு உரைப்பாளாயது என்கண் கிடந்த பரிவினான் அன்றே. இத்துணைப் பரிவுடையாள் எனக்கு இது முடியாமை இல்லை என ஆற்றுவானும். இனி, இப்படி அருமைத் தாகலின், இவளின் ஆகாதென்று உணர்வானாயின் வரைந்து எய்து வானும்.

இவள் இவையெல்லாம் தலைமகனைச் சொல்லுதற்குக் காரணம் என்? எனில், "தன் ஆற்றாமையால் யான் முடிக்கின்ற அதனை எளிதென உணரும்; அது படாமை அரிதென உணர்வானாக" என்றற்கு.

(ஆ) மறைத்தமை கூறி நகைத்தல்: 'எனது ஆற்றாமை இன்னதின் ஆயது என அதனை அறிந்திலள். அறியாதாளுக்கு இன்னது என் குறை என்பேனாயின், இவள் மறுக்கவும் பெறும்; இவளை இன்னும் பல்கால் நெகிழ ஒழுகின், தானே அறிந்து முடிக்கும்,' என உணர்ந்து, 'இன்னது என்குறை' என்னாதானை, 'நும்குறை என்னை மறைத்தால் நுமக்காவது என்னை' என்னும். எனவே, மறையாதுவிட்ட இடத்து முடிவு உண்டு என்றாள் என்பது.

(இ) 'நீயே கூறு' என்று மறுத்தல்: தலைமகன் இறந்து பின் நின்ற இடத்து, 'மாயமான புணர்த்துச் சொல்கின்றது உலகத்து நிகழ்வ தொன்றல்ல' என்று அவனோடு நகாநின்றே, 'யார் அறிவார்? அது நிகழவும் பெறும்; நிகழாமையும் பெறுமே. எனினும், யான் குற்றேவல் மகளிராதலால், துணிந்து அவள் குறிப்பறியாது சொல்ல கில்லேன்; அவளுக்கு நீயே சென்று நின்குறை சொல்' என்னும். என்ற இடத்து ஆற்றானும். என்னை? உலகத்தார் ஒருவரை, 'இக்குறை முடித்துத் தரல்வேண்டும்' என்று இரந்த இடத்து, 'என்னின் ஆகா; நீரே சென்று முடித்துக் கொண்மின்' என்றால் எத்துணையும் இன்னாது அன்றே? அதுபோல. அவ்வகை ஆற்றானாய் நின்றானது ஆற்றாமை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும். என்னை, 'நகாநின்றன்றே சொல்லியது; அந் நகை ஒன்றுடைத்து' என ஆற்றுவது.

(ஈ) அறியாள் போன்று நினைவு கேட்டல்: தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு பின்னின்ற இடத்தும், 'நும்மால் சொல்லப் படுவானை அறியேன்' என்பது. அது கேட்டு, இவள் இக்குறை

முடியாள்; அவத்தமே வருந்தினேன். யான் சொல்லியது இருப்ப, ஏதிலது ஒன்று சொல்லியமையின்' என்று ஆற்றாளுயினான். அவ்வாற்றாமை ஆற்றுவ தொன்றனைப் பற்றும். ஆற்றுவது யாதோ எனின், 'இவள் பிறிதொன்றற்குப் புடைகவன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன்; அல்லாக்கால் மறு மாற்றம் தாராமை இல்லை; இவள் கவன்று நில்லா நிலைமைக்கண் வருவேன்' என அந்நசையால் ஆற்றும்.

(உ) படைத்து மொழியால் மறுத்தல்: இவன், "இத்தழை நல்ல; இக் கண்ணி நல்ல; இம் முத்து நல்ல; இவை கொள்ளற்பால' என்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண், 'இவ்விடம் பெரியார்களிடம்; என்னையரானும் தன்னையரானும் பல்காலும் புகுதரப்படும்; அவர் நும்மைக் கண்டால் ஏதம் செய்வார், கூற்றினும் கடுஞ்சினத்தர் ஆதலான்; நீர் உடையதோர் குறையுண்டெனின் அகன்று நின்று முடித்துக் கொள்ளற்பாற்று' என்பது.

இது படைத்துமொழி கிளவி ஆயினவாறு என்னையோ எனின், 'பெரியார்கள் இடம்' எனப்படுவன பெண்பால்கட்கு உரியவழிப் பெண்பால்கள் புகுதலும், ஆண்பாலுக்கு உரியவழி ஆண்பால்கள் புகுதலும் செய்யப்படாதன, அவற்றை இல்லது படைத்து மொழிந்தமையால் படைத்து மொழி கிளவி ஆயிற்று.

அது கேட்டு ஆற்றாளும். அவ்வாற்றாமை ஆற்றுவது ஒன்றனைப் பற்றும்; அது, 'இவ்வகை என்கண் ஏதத்திற்குக் கவல்வாள், யான் எய்தாவிடின் உளதாம் ஏதத்திற்குக் கவலும்,' என ஆற்றுவான் என்பது.

(ஊ) குறிப்பு வேறு கொளல்: தன் கூட்டம் வேண்டும் குறிப்பினள் ஆயினும் சொல்லும் கூற்றும் குறிப்பும் இன்றி வேண்டாத குறிப்பினளாய்க் காட்டுவது.

மேலனவெல்லாம் சொல் நிகழ்ச்சியுடைய; இது சொல் நிகழ்ச்சியின்றிக் கூட்டம் வேண்டாக் குறிப்பினளாவது.

இனிக் 'குறிப்பு வேறு கொளல்' என்பதனைப் பிறர் சொல்வது; தன் குறிப்பினள் அன்றி நின்றாட்கு, 'என் சொல்கேன்' என்னும்' அதற்குச் செய்யுள்;

'நெறிநீர் இருங்கழி நீலமும் சூடாள்
பொறிமாண் வரியலவன் ஆடலும் ஆடாள்;
சிறுநுதல் வியர்ப்ப வரும்பச் சிந்தியா நின்றாட்கு
எறிநீர்த் தண்சேர்ப்ப யான்என் சொல்லிச் செல்கோ'

என இவ்வாறு சொல்ல ஆற்றாளுயினான் அச்சொல்லே பற்றுக் கேடாக ஆற்றும் என்பது.

அங்ஙனம் எல்லாவற்றையும் கூறப் புகுந்தால் பெருகுவது கண்டு சிலவற்றை எடுத்தோதிச் சிலவற்றைப் புறனடையால் கூறினார். புறநடையாற் கொள்வன சில வருமாறு:

(i) அருமை சாற்றல் : நீயிர் விருந்தினரன்றே; அவள் தாமரைக் கொட்டையின் அல்லியே போலக் கிளைபுறங் காப்பச் செல்வாள். இந் நிலத்து மிக்காள் ஒரு தலைமகள், எமக்குக் கண்கூடாச் செல்வ தோர் தெய்வ மல்லளோ? அவளைக் கண்ணிற் கண்டு கையிற்கூப்பித் தலையிற் பணிந்து வழிபடச் செல்வதல்லது எம்போல்வார்களால் ஒரு குறைவு உணர்த்தும் தன்மையளோ என்று சொல்வது.

(ii) குலமுறை கூறி மறுத்தல் : நீயிர் பெரியீர்; யாம் சிறியேம்; நும்மொடு எம்மிடைக் கட்டுரை பொருந்தாது என்பது.

இன்னும் தழீஇக் கொள்ளற்கு வந்தவழிக் கொள்க.

இனி, இவனுக்குக் குறை முடிக்கக் கருதுவாள் இவ்வாற்றான் இவனை வருத்துவது எற்றிற்கோ எனின், தன்கண் நாணுண்டாந் துணையும் குறையாடி, நாணினது நீக்கத்துக்கண் கொண்டுநிலை கூறுவாள் என்பது. அதுவே எனின், முன்னுறு புணர்ச்சி போல, 'தலைப்பெய் விப்பல்' என்னும் வேட்கை அவளுக்குரிய என்றமையான், முன்னுறு புணர்ச்சியை உணர்ந்தாளோ எனின், உணர்ந்தாளல்லள்; 'அந் நீர்மைக்கு வரம்பெய்தப் புணர்ப்பல்' என்னும் நினைப்பினள்; அந் நினைப்பினை ஆசிரியன் முன்னுறு புணர்ச்சியா ஒப்பித்தான் என்பது.

இனித் தலைமகளது இலக்கணம் உணர்த்துகிறார். அது—

13. குறையுறவினால் புணரும் புணர்ச்சி தோழிமாட்டுத் தலைவிக்கு இல்லை—தலைப்பெயற்கண் என்பது.

இதனால் தோழிபக்கம் நின்ற குறையுறவினால் கூட்டம் தலைமகட்கு இல்லை என்றாயிற்று. அஃது யாங்ஙனமோ எனின், 'சங்கு வந்து ஒழுகா நின்றான் ஒரு தோன்றல் உளன், அவன் என்னினான் ஆவதோர் குறை யுடையான் போலும், அக்குறையின்றியமையான், அக்குறை முடித் தருளாயாயின், என்னைக் குற்றேவல் இழத்தி' என அவளை இழப்பதற் கஞ்சிக் குறை நேர்ந்து தலைமகள் தலைமகனை ஏற்றுக்கொண்டு கூடும் கூட்டமில்லை என்பது.

14. செவிலித்தாயிடத்து மாறுகொள்ளாமைச் சொல்லும் சொற் களும் தோழிக்குரியவை உள.

இது, பின்னர் அறத்தொடுநிலை உணர்த்துவார் அவ்வறத்தொடு நிற்கும் முறைமை உணர்த்துகிறது. எவற்றோடு மாறு கொள்ளாமை எனின், தாய் அறிவினோடு மாறுகொள்ளாமையும் தலைமகள் பெருமை யொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் கற்பினோடு மாறுகொள்ளா மையும், தோழி தனது காவலொடு மாறுகொள்ளாமையும், நாணி னொடு மாறுகொள்ளாமையும், உலகினோடு மாறுகொள்ளாமையும் எனக் கொள்க, ஆயின், 'காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்'[1] என்னும் சூத்திரத்துள் சொல்லப்பட்ட நான்கு இடத்தும் வேறுபாடு

1. களவியல் சூ. 29.

உண்டாம். அஃது எப்பொழுது உண்டாயிற்று. அப்பொழுதே தோழிக்குப் புலனாம். என்னை? தான் அவள் என்னும் வேற்றுமையிலள் ஆகலான்.

அவ்வாறு ஆயின இடத்துத் தோழி, 'எனக்குப் புலனாயினவாறு போல யாய்க்கும் புலனாயின ஞான்று வாளா ஒழியாள்; அறிவாரை வினவும்; வினவின இடத்து, வினவப்பட்டார் தெய்வத்தினான் ஆயிற்றென்ப. என்னலும் இவள் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும்; செய்விக்கத் தலைமகட்குக் கற்பழியும், என்னை? தன் தலைமகனையன்றிப் பிறிதோர் தெய்வம் வணங்கார் பத்தினியாராகலின். தெய்வம் வணங்கக் கற்பழியும் என்று தலைமகள் ஆற்றாளாம்.

தாய் அறிவினோடு மாறு கொள்ளாமை: ஆற்றாளாயினாளது (தலைவியது) ஆற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும். ஆற்றுவது பிறிது இன்மையின், 'யாய் அறிவாரை வினவுமிடத்து என்னை வினவும். வினவ, யான் அறியேன் என்றதன் புறத்ததாம் பிறரை வினவுவது. அங்ஙனம் என்னை வினவினவிடத்து இனியாது சொல்லுவேன் என்று கூட்டமில் நாட்ட வகையால் சிந்தித்துக் கொண்டிருந்தாள். இருந்த நிலைமைக்கண், தாய் பிற்றை ஞான்று சிறுகாலையே படிமக்கலத்தொடும் புக்காள், மகளை அடிமுதல் முடிகாறும் நோக்கினாள். நோக்கி, 'அன்னாய், என் மகள் பண்டையள் அல்லள்; இவ்வேறுபாடு எற்றினான் ஆயிற்று? நின்னால் அறியப்படுவது உண்டோ?' என்னும், என்ற இடத்து, இவள், 'அன்றுகொண்டு என்னாலும் சிறிதுண்டு அறியப்படுவது. யாதோ எனின், எம்மைக் கூழைக் கற்றைக் குழவிப்பருவத்து மயக்கம் கலந்த ஏழை நீர்மையாரோடு நாட்கோலம் செய்து, விளையாடி வம்மின் என்று போக்கினாய். போக்கினவழி, யாம் போய் ஒரு வெண்மலர் பரந்த தண்மலர்ப் பொழிலிடை விளையாடி நின்றேமாக, ஒரு தோன்றல் ஒரு சுனைக் குவளைப் பூக் கொண்டு அவ்வழியே போந்தான்; போதர, நின்மகள் அவனை நோக்கி, 'அப்பூவினை என் பாவைக்கு அணியத் தம்மின்,' என்றாள். அவனும் பிறிது சிந்தியாது கொடுத்து நீங்கினான். இஃது அறிவது அறியாக் காலத்து நிகழ்ந்தது,' என்னும், இங்ஙனம் நிகழ்ந்ததனை அறிவதறிந்து, கொண்டார்க்குரியர் கொடுத்தார் என்பதும், உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர் என்பதும் நினைந்து அவனை வழிபடாது பிறிதோர் ஆறு ஆவதாயின், இக்குலத்துக்கு வடுவாங்கொல்லோ எனக் கருதினமையான், நின்மகள் மாறுபட்டதென்னும். எனவே, தாயறிவினோடு மாறுகொள்ளாதாயிற்று. என்னை, 'விளையாடி வம்மின்' என்றமையின்.

பெருமையோடு மாறுகொள்ளாமை: அக்காலத்து நற்செய்கை செய்ததனை இக்காலத்து நினைந்தமையின் பெருமையோடு மாறுகொள்ளாதாயிற்று.

கற்பினொடு மாறுகொள்ளாமை: இவ்வாறு இன்றிப் பிறிதோராறு ஆயின இடத்துக் குடிக்கு வடுவாம் எனக் கருதினமையின் கற்பினொடு மாறுகொள்ளாதாயிற்று.

காவலொடு மாறுகொள்ளாமை : இருவரும் இருந்த நிலைமைக்கண் நிகழ்ந்ததென்றமையின் தன் காவலொடு மாறுகொள்ளாதாயிற்று.

நாணினொடு மாறுகொள்ளாமை : அறிவது அறியாக் காலத்து நிகழ்ந்தது என்றமையின் நாணினொடு மாறுகொள்ளாதாயிற்று.

உலகினோடு மாறுகொள்ளாமை : உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர் என்றமையின் உலகினோடு மாறுகொள்ளதாயிற்று.

இது பூத்தரு புணர்ச்சி. இனி, களிறுதரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி என்பனவற்றை வந்தவாறு கண்டுகொள்க.

இனி, கற்புக்கு இலக்கணம் ஆமாறு உணர்த்துகிறார்.

15. புணராதமுன் சொல்லின்மையின், கற்பென்று சிறப்பிக்கப்பட்ட ஒழுக்கம் களவென்னும் ஒழுக்கத்தின் வழித்து.

களவின்கண் புணராதமுன் சொல் இல்லை எனவே, புணராதமுன் சொல் நிகழும் என்பாரை மறுத்தார். புணராதமுன் சொல் இல்லை எனவே, புணர்ச்சியுள்ளும் புணர்ச்சிப் பின்னும் சொல் உள எனப்பட்டதாம். ஆயினும் அப் புணர்ச்சியுள் புலனல்லை அவர்க்குத் துப்பாயின் அல்லது, புணர்ச்சியின் பின் சொற்கள் புலனும். அவை யாவையோ எனின், நயப்பு உணர்த்தினமையும், பிரிவச்சமும், வன்புறையும் எனக் கொள்க. அப்பெற்றிப்பட்ட களவொழுக்கத்தின்வழி நிகழ்ந்து பின்னைத் தமரால் பெற்று எய்துவது கற்பு என்க.

இனி, களவுக் காலத்துச் சென்று ஒழுகும் தலைமற்கு இடையிடும் இடையீடு இவை என்பது உணர்த்துகிறார்.

16. களவுக் காலத்துத் தலைமகன் புணராத இடையீடு (தலைமகளை எய்தாத நாள்) காப்பு மிக்க வழியும் உரித்து; வரைவிடை வைத்த காலத்தும் உரித்து.

காப்பென்பது தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டல் என இவை. மிகுதல் பெருகுதல். அஃது ஒன்று பல நாளும் வருதலும், பல மயங்கி வருதலும், முறையில் தோன்றலும் என இத்திறத்தனவாம்.

17. தலைவன் வரவினை அறிவிக்கும் குறிப்பு அவனுனன்றிப் பிறிதின் நிகழ்ந்து சென்ற இடத்துக் குறியல்லதனைக் குறியாகக் கருதுதலும் அவ்வயின் (களவினுள்) இடையீடாதற்கு உரித்து.

இதுவும் களவினுள் இடையீடாமாறு உணர்த்துகிறது. அஃதாமாறு: தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகுவான், அவ்வாறு ஒழுகாநின்ற காலத்து ஒருநாள், தலைமகன் செல்லாமே அவனால் செய்யப்படும் குறிப்புக்கள் தாமே வெளிப்பட்டன. அவை புன்னைக்காய் நீரில் விழுதலும் புள் எழுப்புதலும் என இவை.

அவை வேறுனும் நிகழும். புன்னைக்காய் மூக்கு ஊழ்த்தும் (முதிர்ந்தும்) விழும்; வளி எறியவும் விழும்; புள் துளக்கவும் விழும். புள் எழு

மிடத்து வெருவியும் எழும்; வேற்றுப் புள் வரவும் எழும். இவை கண்டு, 'இவனன் ஆயினை', எனக் கொண்டு போந்து, அவ்விடம் புகுந்து அவனின் ஆகாமை உணர்ந்து மனையகம் புகும். புகுந்த பின்னை அவன் வந்து அக் குறி செய்யும்; செய்தக்கால், இரண்டாவது கொண்டு போகல் ஆகாதன்றே? பிற்றைஞான்று அவனுக்கு, 'யாம் அகத்தினின்று நின்னின் ஆகாதன கண்டு வந்து நின்று பெயர்ந்தோம்' என்பதனை உணர்த்தும். உணர்த்த, 'இரவெல்லாம் என்பாலராய் நின்று துயிலா ராயினார் போலும்! என்னை, தாம் துயிலாது நின்றாரன்றே துயிலாதன அறிவார்? இவற்றின் துயிலெழ, வினையேன் குறி என்று வந்து பெயர்ந் தார் போலும் என ஆற்றாளாய்ப் பெயரும். பெயர்வான் தன் நெஞ்சினை நெருங்கியதற்குச் செய்யுள்:

'குணகடல் திரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆரிரைக் கணவந் தாங்குச்
சேயள் அரியோள் படர்தி
நோய நெஞ்சே! நோய்ப்பா லோயே.'

(குறுந்தொகை, 128)

இனி, குறியாமாறு கூறுகின்றார்.

18. குறி என்று சொல்லப்படுவது பகலினும் இரவினும் அறியக் கிடந்த இடம் என மொழிப.

அறியக் கிடந்த இடம்—உணரச் சொல்லப்பட்ட இடம். 'யார் யாருக்குச் சொல்லிற்றோ எனின் தோழி தலைமகனுக்குச் சொல்லும் என்பது.

தலைமகன் தோழியை இரந்து குறையுற்றுப் பின் நின்ற இடத்து, ஆற்றுவன சில சொல்லி ஆற்றுவித்துக் குறை நயப்பித்து அவ்வாறு நின்ற தோழியைப் பின்னும் தலைமகன் எதிர்ப்படும். எதிர்ப்பட்டானை, 'இன்ன இடத்து வா' என்று குறிப்பினான் உணர்த்தும். தலைமகன் அவ்விடத்திற்குச் செல்லும். செல்ல, தலைமகனது வரவு உணர்ந்து தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சென்று, 'யான் செங் காந்தள் பூக் கொய்து கொடு வருவன்; அவ்விடம் தெய்வம் உடைத்து; நின்னால் வரப்படாது; நீ அவ்வளவும் இப்பொழிலிடத்தே நில்,' என்று நிறீஇ நீங்கும். நீங்க, தலைமகள் பொழிலிடத்து நிற்கும். நின்றாளைத் தலைமகன் எதிர்ப்பட்டுப் புணரும். புணர்ச்சி இறுதிக்கண் தோழி வந்து, 'நின் கைபோலக் காந்தள் மலர்ந்தன கொண்டு வந்தேன், எம் பெருமாட்டி, நீட்டித்தாள் என்று சிறியருளாது போந்தருள்' என்று அவளைக் கொண்டுபோய் ஆயவெள்ளத்தோடு கூடும். இது பகற்குறி.

இவ் வகைப் பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமனைக் காணும் பொழுதின் காணப் பொழுது பெரிதாகலான், ஆற்றாளாய், நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து கடலிற்கேனும், கானலிற்கேனும், புள்ளிற் கேனும், நெஞ்சிற்கேனும், வறிதே குழவி அழுதாற்போல், யாதானும் ஒரு சொல் சொல்லும். தலைமகள் அவ்வாறு சொல்லி, அவ் விடத்துத் தலைமகன் கேட்பின், தலைமகனை வரைவு கடாவுவாள்; யாரும் கேட்பார் இல்லையாயின், தலைமகள் சொல்லி ஆற்றுவாள். மூடி இருந்து வேவ

தோர் கொள்கலம் மூடி திறந்த இடத்து ஆவி எழுந்து முன் நின்ற வெப்பம் நீங்கினுற்போல, அச் சொல் சொல்ல ஆற்ருமை பண்டையின் சிறிதளவு படுவதாம்.

இனி, இரவுக்குறி ஆமாறு: பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் 'இன்று தெருளும்; நாளை தெருளும்', எனத் தெருளானுய், நெடுங்காலமும் வந்தொழுக, 'இவ் வொழுக்கம் புறத்தார்க்குப் புலனுயது அறிந்த இடத்து இவள் இறந்துபடும்; இவள் இறந்துபட இவனும் இறந்துபடும்' என ஆற்ருளாய், வரைவு கடாததற்குச் செறிப்பு அறிவுறுக்கின்ற முன்னுடைத்தாக அறிவுறாஉம்[1].

இனி, தோழி வரைவு கடாவு வகை. குறிப்பினுன் வரைவு கடாவுதலும் வெளிப்படையான் வரைவு கடாதலும் என இரு திறத்தன. அவற்றுள் குறிப்பினுன் வரைவு கடாவுமாறு: 'யாய் எம் உறுப்பில் குறிக்கொண்டு நோக்கினுள்' என்னும். எனவே தலைமகன் 'இவர் புறத்துப் போய் விளையாடும் பதத்தர் அல்லர்; இவரை இற்செறிக்க வேண்டும் என்று போலும் அவ்வாறு நோக்கியது' எனத் தெருண்டு வரைந்து எய்தப்பெறும்.

இனி, 'இவ்விடத்து வரப் பெறும்' என்பது படத் தலைமகனுக்குத் தோழி முன்னின்று சொல்லவும் பெறும். இனி, முன்னிலைப் புற மொழியாகத் தலைமகனது வரவு உணர்ந்து வேங்கைக்கு உரைப்பாளாய்த் தலைமகன் கேட்ப இவ்வாறு சொல்லியும் செறிப்பு அறிவுறுத்தும்.

இவ் வகைச் செறிப்பு அறிவுறுக்கப்பட்ட தலைமகன் தெருள்வானுயின், இந் நாள் வரைவல்; அத்துணையும் இவளை ஆற்றிக் கொண்டிரு. நினக்கு அடைக்கலம், எனக் கைப்பற்றும்; கைப்பற்றியதனைத் தோழி சூளுறவாகக் கருதினுள். உலகத்துச் சூளுறுவார் பகவையும், பார்ப்பாரையும், பெண்டிரையும் தொட்டுச் சூளுறுவராகலான், சூளுறவு ஆற்ருர் என நினைந்து, 'நீ வரைவல் என்றதே அமையாதோ, சூளுறவு வேண்டுமோ, பொய்த்தலும் வாய்த்தலும் உடையாரன்றே சூளுறுவார், மெய்யல்லது சொல்லாதார்க்குச் சூளுறுவு வேண்டுமோ, நின் கண்ணும் பொய் உண்டாயின், மெய் என்பது இவ்வுலகத்து நிலை பெற்ற வழி இல்லை யாகாதே' என்னும்,

'வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயின் நுடங்க
மீன்சினை அன்ன வெண்மணல் குவைஇக்
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி.
ஊர்க்குறு மகளிர் குறுவழி பிறழ்ந்த
ஆரல் அருந்திய சிறுசிரல் மருதின்

---

1 முன்பின் எதிர்பாராத நிலையில் திடீரென, 'எம்மை இற்செறித்தார்' எனத் தலைவனிடம் கூறின், அவன் ஆற்ருனுதலும் உளதாம் என்றெண்ணிச், செறிப்பு அறிவுறுத்தல் பின் உளதாயிருக்கவும் தலைவனது தன்மை அறிந்து அவனைத் தேற்றுதற்பொருட்டுப் பொய்யாகத் தோழி அவனுக்குச் செறிப்பறிவுறுத்துவள்—கா. ர. கோ. விளக்கம் (இறையனுர் அகப்பொருள் விளக்கப் பதிப்பு—பக். 133 அடிக்குறிப்பு பார்க்க)

தாழ்கின உறங்கும் தண்துறை ஊர
விழையா உள்ளம் விழைவ தாயினும்
என்றும்;
கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாமை நாடித்
தன்தக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்தல்;
அனைய பெரியோர் ஒழுக்கம்; அதனால்
அரிய பெரியோர்த் தேருங் காலை
நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோ இவ் வுலகத் தானே'

(அகம், 286.)

என, 'யான் தனக்கு அடைக்கலம் என்று கைப்பற்றிற்றைச் சூளுற வாகக் கருதித் திரிய உணர்ந்தாளாகலான் நீட்டிக்கல் ஆகாது எனப் பிற்றை ஞான்றே வரைவொடு புகுவானும்.

இனி, தெருளானாயின தலைவன் இரவுக் குறிக்கண் வந்து வரைவல் என்னும். அது கேட்ட தோழி, இரவுக் குறியது ஏதம் காட்டி மறுக்கும். யாங்ஙனம் மறுக்குமோ எனின், 'அரவும், உருமும், புலியும், எண்கும், வெண்கோட்டு யானையும் என்று இவற்றது ஏற்றம் உடைத்து; ஏற்றிழிவு உடைத்தாய் அருவரையிடத்து ஒரு வேல் துணையாக நீயிர் ஆரிருள் நடு நாள் வரவு ஆற்றும் நீர்மையதோ' என்னும். என்பது கேட்ட தலைமகன் ஆற்றுவனாயின், வரைந்து எய்தும்; ஆற்றான் ஆயின், 'இறந்து படும்' எனக் கருதி இறந்துபாட்டு அச்சத்தினான் இரவுக்குறி நேரும். நேர்ந்தாள், தலைமகனுக்கு, 'நின் நாட்டார் என்ன பூவினர், என்ன சாந்தினர், என்ன மரத்தின் கீழ் விளையாடுவர்' என்னும். அது கேட்டுத் தலைமகன், 'முன்னெல்லாம் மறுத்தாளன்றே', மறுத்தாள் இது சொல்லிற்று ஒரு காரணம்பற்றி என உணர்ந்து, தானும் நின் னாட்டார் என்ன பூவினர், என்ன சாந்தினர், என்ன மரத்தின்கீழ் விளை யாடுவது என்னும். என்றக்கால், தோழி யாம் காந்தளும், வேங்கையும் சூடுதும்; சந்தனச் சாந்து பூசுதும், பிண்டி மரத்தின் கீழ் விளையாடுவது என்னும்.

குறிஞ்சி நிலமாகலின் இவ் வகைச் சொல்லும். அல்லா நிலத் துக்கும் அவற்றுக்குத் தக்கவாறு சொல்லும். இவை சொல்ல, 'ஒக்கும், இவை செய்வந்து நின்மின், என்றவாறு போலும்' என உணர்ந்து, பிற்றை ஞான்று அப் பூக்கொண்டு சூடி, அச் சாந்து அணிந்து, அம் மரத்தின்கீழ் விளையாடல் குறி செய்து நிற்கும். நின்ற இடத்து, அவனது வரவு உணர்ந்து, தோழி, குவளை அலர்ந்தனவேல் காண் பாம், பரந்த முல்லை அரும்பினவேல் காண்பாம் எனச் சொல்லித் தலை மகளைக் கொண்டு போதும். போந்து, அக் குறியிடம் புகுந்து, பகற் குறிக்கண் நீங்கினவாறே நீங்கித் தனியளாய் நின்ற தலைமகளை எதிர்ப் பட்டுப் புணரும். புணர்ச்சி இறுதிக்கண் தோழி தலைமகளைக் கொண்டு போதும், இஃது இரவுக்குறி ஆமாறு.

குறி இரண்டு என்றார். அவற்றுள் இரவுக்குறி நிகழும் இடம் கூறுகின்றார்.

19. இரவின்கண் குறியிடம் இல்லிடத்தை விட்டு நீங்காது எனவே புறத்தது அன்று என்பது பெறப்பட்டது.

20. பகற்குறி இடந்தான் இகந்துபடினும் குற்றம் கூறார்.

இகத்தல் என்பது ஒன்றின் இறத்தல், இகத்தல் எனினும் இறத்தல் எனினும் ஒக்கும். ஒன்றின் இறத்தல் என்பது பலவாதல் என்பது. ஒரு ஞான்று வேங்கைப் பொதும்பினுள் ஆம்; ஒரு ஞான்று புன்னையங் கானலுள் ஆம்; நெய்தல் நிலமாயின். இவ்வகை ஏனை நிலத்திற்கும் ஒக்குமாறு அறிந்து உரைக்க.

இனி, இரவுக்குறி வகுக்கப்பட்ட இடம் வேறுபாடுடையது கண்டு, அவ் வேறுபாடு உணர்த்துகின்றார்.

21 இரவின்கண் மனையகத்து நீங்கிய குறிக்கப்பட்ட இடத்தல்லது, தலைமகனைச் சேர்தல் இல்லை.

எனவே, இல்லின் எல்லைப் பக்கத்தே ஆகல் வேண்டும் என்பதூஉம், மனையகத்து ஆகற்க என்பதூஉம் உணர்த்தப்பட்டன. அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளி என இவற்றுள் நீங்கி, செய்குன்றும், இளமரக்காவும், பூம்பந்தரும், விளையாடும் இடமும், இவற்றைச் சார்ந்தனவற்றுள்ளும் பிறவற்றுள்ளும் என்பது. எனவே பகற்குறி இடம் போல வேறுபட்டது ஆகற்க இரவின் குறியிடம் என்பது. 'அஃதே எனின், மனையகத்தாக அழிவதுண்டோ' எனின், குரவர்கள் உறையும் இடமாதலின், தெய்வத்தான மென்று கருதப்படும். அல்லதூஉம், புகவும் போகவும் அருமை உடைமையானும் ஆகாது என்பது. என்றார்க்குச் செய்யுள் 'வால மனையகத்துச் சார்ந்தான் தலைமகன்' எனப்பட வந்தன எனின், அவை அகமல்ல, அகப்புறத்தே அடங்கும் என்பது.

அடுத்துக் களவு ஒழுக்கினது நெடுங்காலச் செலவின்கண் இவர்க்கு நிகழும் உள்ள நிகழ்ச்சி இன்னது என்று உணர்த்துகிறார்.

22. அம்பலும் அலரும் ஆகிய அவ்விரண்டும் நிகழ்ந்தன என்பது தாம் அறியின் அல்லது யாவரும் அறிவாரில்லை. இன்மையின் களவு என்பது:

களவு என்பது செய்தாரே அறிந்து மற்றொருவர் அறியாதாகலான் என்பது. அம்பல் என்பது முகிழ்த்தல்; அலர் என்பது சொல் நிகழ்தல் எனப் பல்வேறு பொருள் கூறுவர். அவை வருமாறு:

	அம்பல்	அலர்
1.	முகிழ்த்தல் (முகிழ் முகிழ்த்தல்)	சொல் நிகழ்தல்
2.	சொல் நிகழ்தல்	இல் அறிதல்
3.	இல் அறிதல்	அயல் அறிதல்
4.	அயல் அறிதல்	சேரி அறிதல்
5.	சேரி அறிதல்	ஊர் அறிதல்
6.	ஊர் அறிதல்	நாடு அறிதல்
7.	நாடு அறிதல்	தேசம் அறிதல்

அம்பலெனப்பட்டதே அலரும், அலரெனப்பட்டதே அம்பலும். இஃது அம்பலுக்கு இலக்கணம், இஃது அலருக்கு இலக்கணம் என்று விசேடம் காட்டிற்றிலர், இவை இரண்டால் தம்முள் வேற்றுமை காணப்படும் ஆகலான். களவொழுக்கம் தெய்வத்தினான் ஆயது ஆகலின், புலனாகாதன்றே. அம்பலும் அலரும் எவ்விடத்து நிகழும் எனின் காப்புக் கைமிக்க இடத்து நிகழும்; நெடுங்காலத்துக்கண் அயிர்ப்பினால் நிகழும்.

அடுத்து, அம்பலும் அலரும் ஆயின என்று உள்ளத்து வெளிப்பட்ட பின் நிகழற்பாலது கூறுகின்றார்.

23. அம்பலும் அலரும் வெளிப்பட்டபின் கிளவியும் உரிய.

கிளவி என்பது மகள் கூறுதல். இது (களவொழுக்கம்) பலராலும் அறியப்பட்டது என்னும் கருத்து தலைமகட்கும் தோழிக்கும் உடனே நிகழும். தலைவன் வந்து பயின்ற இடத்திற்குத் தோழி செல்லும். செல்ல, தோழியை எதிர்ப்பட்ட தலைவனை வலங்கொண்டு சார்ந்து, முன்பு நின்று, 'நின்னால் தலையளிக்கப்பட்ட தலையளி பலராலும் அறியப் பட்டு அலராயிற்று' என்னும் அகற்குச் செய்யுள்:

அறிந்தோர் அறனிலர் என்றலர் சிறந்த
இன்னுயிர் கழியினும் நனிஇன் னாதே!
புன்னையங் கானல் புணர்குறி வாய்த்த
பின்னீர் ஓதியென் தோழிக் கன்னே!
படுமணி யானைப் பசும்பூண் சோழர்
கொடிநுடங்கு மறுகின் ஆர்க்காட் டாங்கண்
கள்ளுடைத் தடவில் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவின் அன்ன
கௌவை ஆகின்ற தையநின் அருளே.

இது சொல்லிப் பின்னும், 'நீ இது புகுகருந் துணையும் இவ்வாறு ஒழுகு வாய் ஆயினாய், அறன் அறியாமையான்; அறிதி என்னின், இது புகு தாமை வரைந்தெய்துவாய்; அல்லதூஉம், பிறரும் வரைந்தெய்துதற்கு முலைவிலையோடு புகுந்து பொன்னணிவான் நின்றாரும் உளர்,' எனப் படைத்து மொழிந்து சொல்லும்.

இங்ஙனம் சொல்லப்பட்ட தலைவன், 'என்னால் செய்யப்பட்டது என்னே' என்னும். என, தோழி, 'நீ ஒரு பொருளை விகற்பித்தறியும் துணையான் அறியுமாறில்லை; யாம் குற்றேவல் மகளிர்; நீயாயின் அவ்வாறு ஒழுகுவதல்லது, இது கொண்டு இது செய்மின் என்றற்குத் தக்கேம் அல்லேம்' என்னும்.

இது கேட்ட தலைமகன், 'உடன்கொண்டுபோவது துணிந்தேன் எனினும், நிழலும் நீரும் இல்லாத அழல் வெங்கானம் ஆற்றகில்லாள்' என்னும். என்ன, 'அன்ன வெங்கானம் எனினும் எம்பெருமாட்டி நும்மொடு வரப் பெரிதும் இனியவாம்' என்னும் அது கேட்டு, 'ஆயின் உடன்போக்கு வலித்தேன்; நீ இதனை அவட்குச் சொல்ல வேண்டும்' என, நன்றென்று, 'எம் பெருமான் அருளிச் செய்தது எம் பெருமாட்டிக்கு உணர்த்துவல்' என்று தலைமகனை வலங் கொண்டு போந்து, தலைமகளுழைச் சென்று, அவள் குறிப்பறிந்து, 'எம் பெருமாட்டி நம் பெருமான் நம்மைத் தம்மொடு உடன்கொண்டு

செல்லக் கருதுகின்றார்; நின் குறிப்பென்னை,' என்னும். என்றவிடத்து, உடம்படுதலும் உடம்படாதொழிதலும் என இரண்டல்லது இல்லை. சென்று வழிபடுமே எனின் நாணிலள் ஆயினளாம்; உடன்படாள் ஆயின், கற்பிலள் ஆயினளாம்; இரண்டினுள்ளும் எத்திறத்தள் ஆயினளோ எனின், நாணுக் கற்பு என்னும் இரண்டன்றே அவள்கண் உள. அவற்றுள் நாணின் கற்பு வலியுடைத்து.

உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று[1].

என்பதாகலான், நாண் அழியினும் கற்பு அழியாமை நினைக்கும், நினைத்து, உடன்போக்கு நேர்ந்து, தலை சாய்த்து நிலம் கிளையா நிற்கும் நிலைமை இது சொல்லுவதே போன்றது. அதற்குச் செய்யுள்;

அளிதோ தானே நாணே; நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே; இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறைத்
தீம்புனல் நெரிதர வீந்துக் காங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைநில் லாதே. (குறுந்தொகை 149)

இன்னும் இது சொல்வது போன்றது அந்நிலைமை.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி, கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு குருஉச்சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே;
அலர் சுமந் தொழிகஇவ் வழுங்கல் ஊரே.

(நற்றிணை 149)

இங்ஙனம் இவள் உடன்படும். உடன்பட்டது உணர்ந்து வைத்துத் தாயுழைச் செல்லும். தாயும், மகளது வேறுபாடு கண்டு, 'உற்றது அறியாது, நற்றிறம் படர்ந்து செல்கின்ற காலமன்றே ஆதலால் கண்டவாறே, அன்னாய் என் மகட்கு இவ்வேறுபாடு எற்றினான் ஆயிற்று, எனக்குச் சொல்லாய்' என்னும். என்றால் அறியப்பட்டதும் சிறிது உண்டு. என்று அறத்தொடு நிற்குமாறு, 'தோழிக்குரியவை கோடாய் தேஎத்து' என்னும் சூத்திரத்தில் (களவியல் சூ. 14) சொல்லி யமை கண்டோம்; அவ்வகை அறத்தொடு நிற்கும்.

நிற்க, செவிலித்தாய் இன்புற்ற மனத்தினளாய், 'என் மகள் பெரிது அறிவு உடையளே காண்,' என்று அவ்வாறு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும். நற்றாயும் இன்புற்ற மனத்தினளாய்த் தந்தைக்கும்

1. தொல். பொருள். களவியல். சூ 22

தனையன் மார்க்கும் அறத்தொடு நிற்கும். நிற்க, அவரும் அவளது அறிவும் ஆசாரமும் கேட்டு இன்புற்ற மனத்தராய்ச் சொல் மறுத்தும் தலை இறைஞ்சி நிற்பர். நின்று, 'இவள் நீரில் ஆற்றிடைப் போய் வருந்தும் குறையென்னை,' என்று தலைமகனைச் செலவு அழுங்குவிக்கும். தலைமகன் செலவு அழுங்கும். அழுங்க, 'நாளை நீ வரைந்து புகுதர நினக்கு வரைவு மாட்சிப்படும்' என்று தலைமகனைத் தவிர்ந்து, பெயர்ந்து தலைமகளுழை வந்து, 'நிழலும் நீரும் உடையவாய்க் கானம் தண்ணியவானால் சேறும்' என்று உடன் போக்கு அழுங்குவித்த இடத்து, தலைமகனும் அந்நாள் வரைவொடு விரைந்து வந்து புகுவா னும். இது வெளிப்பட்ட பின்றைக் கிளவியும் உரியவாயின.

அவ்வாறு அறத்தொடு நிலை மாட்சிப்பட்டது இல்லையாயின், இரவுக் குறிக்கண் தலைப்பெய்விக்குமாறு போலத் தலைமகளை முற்படுத்து உடன்போக்க மாட்சிப்படும்; படுத்து ஓம்படை சொல் லும், அதற்குச் செய்யுள்:

இவளே நின்னல திலளே; யாயும்
குவளை உண்கண் இவளல திலளே;
யானும் ஆயிடை யேனே;
மாமலை நாட, மறவா தீமே
(தொல். பொருள். பொருளியல் சூத்திரம், இளம். உரை)

இவ்வகை ஓம்படுத்துத் தான் தவிரும் என்றவாறு. தான் தவிர்வதோ செயற்பாலது, போகாளோ எனின், தனது வருத்தத்திற்குக் கவன்று போகாதாள் அல்லள்; இதனைப் பண்பாக உரைத்தற்பொருட்டுத் தவிரும் என்பது. 'செவிலி தாய்க்கு உரைத்தாளன்றே, அவள் அதனைப் பண்பாக உரையாளோ எனின், 'இவள் சொல்லியது தெளியு மாறு செவிலித்தாய் சொல்லி அது தெளியார் என்பது. என்னை எப் பொழுதும் கைவிடா மரபினள் ஆகலான்.

இனித் தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக் கொண்டு, தன் ஆயத்தோடும் செல்வாள் போலக் கொண்டு செல்லும். அவ் வகைப் போவாரை இடைச் சுரத்துக் கண்டோர் சொல்லியதற்குச் செய்யுள்:

எமியூர் அல்லது ஊர்நணித் தில்லை;
வெம்முரண் செல்வன் கதிரும் ஊழ்த்தனன்
சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையள் மெல்லியள் மடந்தை
அரிய சேய பெருங்கல் ஆறே.
(சிற்றெட்டகம்)

பிற்றை ஞான்று மகளது போக்குணர்ந்து செவிலி மயங்கிப் பெரிய தோர் கவலையளாய், 'நெருநலை இவை செய்தது இது கருதிப் போலும்' என்னும். சுரத்தருமை நோக்கி இரங்கும். இடைச் சுரத்துப் புலம்பும் செவிலியை எதிர்வருவார் கண்டு தெருட்டுவர். செவிலி சுரத்திடைச் செல்லாது மனையகத்திலிருந்து சொல்லும் என்பாரும் உளர். அது பொருந்துமாறு அறிந்துகொள்க.

'வெளிப்பட்ட பின்றைக் கிளவியும் உரிய (சூ. 23) என்றமையான் வெளிப்பட்ட பின் வரைதல் முறைமையான் அல்லது இல்லை எனக் கொண்டு நின்ற மாணுக்கர்க்கு மற்று வரைதலாறு உண்டென்பது உணர்த்துகிருர்.

24. களவு வெளிப்படாமுன்னுற வரைதல், களவு வெளிப்பட்ட பின் வரைதல் என்று வரைதலாறு இரண்டு என்ப.

பலராலும் சிலராலும் இவ்வொழுக்கம் அறியப்பட்டது என்னும் இக்கருத்து எய்தாமுன்னம் வரைதல், வெளிப்பட்ட பின் வரைதல் என்று வரைதல் முறை இரண்டாம் என்பர். களவு வெளிப்படாமுன் வரைதல் சிறப்புடைத்து. களவு வெளிப்பட்டபின் வரைதல், அறத் தொடு நிகழ்ந்தபின் வரைதல்.

மேல்வரையும் இடம் உணர்த்திஞர். அவ்வரைவுக்கு வரும் இடை யீடு இவை என்பது உணர்த்திஞர். இனித் தலைமகன் வரைந்தெய்திஞன் அல்லன், அறத்தொடு நின்றவாறே பிரிந்தான். ஆதலான் அன்ஞள் 'கற்பிஞளோ களவிஞளோ' என்ற மாணுக்கர்க்கு இவள் கற்பிஞளே எனப்படும் என்கிருர்.

25. அறத்தொடு நின்ற பின்றை வரைந்து எய்தாத தலைமகன், நாடும், காடும், இடையிட்ட பல் காதமும் நீங்கிப் பொருட்குப் பிரியும் பிரிவும், பொருட்குப் பிரியாது ஓரிடத்தனுய் உறைதலும் கற்பிஞள் ஆதற்குப் பொருந்தும்.

இதன் கருத்து, இவ் விரண்டு இடையீட்டின்கண்ணும் தலைமகள் ஆற்ருளாய காலத்துத் தோழி ஆற்றுவித்தலும், ஆற்றுவித்து அத னெதிர் மொழிதலும், பிறவும் எல்லாம் கற்பிஞெடு ஒக்கும் என்பது.

26. களவு வெளிப்படைதான், விரித்து உரைக்குமிடத்து தந்தை-தாய், தன்னையர் என்று அவர் அறியப் பண்பாகும்.

மேல் வெளிப்படையே சொல்லிப் போந்தார், அவ்வெளிப்படை இவை என்பது உணர்த்துகிருர்.

வெளிப்படை என்பது அறத்தொடு நிலை. வெளிப்படை நிலை யெனினும், அறத்தொடுநிலையெனினும் ஒக்கும் என இவ்விரண்டும் ஒரு பொருள்மேல் கிடந்தன ஆயினும் கருத்து வேறுபாடு உடையன வாம். யாவரும் அறியப்படாத களவு, தந்தையும் தாயும் தன்னை யரும் அறிய நிகழ்ந்தமையின் களவு வெளிப்படை எனப்பட்டது. தலை மகன் அறன் அழியாமை நிற்றலின் அறத்தொடுநிலை எனவும் பட்டது. பண்பு எனினும் இலக்கணம் எனினும் இயல்பு எனினும் ஒக்கும்.

27. அவருள் தாய் அறிவுறுதலின் ஏனேரும் அறிப.

தாய் தந்தை தன்னையர் என்று சொல்லப்பட்ட மூவருள்ளும், தாய் அறிவுறுக்கப்பட்டுத் தந்தைக்கும் தன்னையர்க்கும் அறத்தொடு நிற்கும். (செவிலித்தாய் நற்ருய்க்கு அறத்தொடு நிற்கும் என்பது உரையிற் கோடல் என்னும் உத்தியால் பெறப்பட்டது).

28. தந்தையென்றும் தன்னையர் என்றும் சொல்லப்பட்ட இரண்டு கூற்ருர்க்கும் முன்னத்தானல்லாது செவ்வனம் சொல்லப் பெருள்;

இது தந்தைக்கும் தன்னையன் மார்க்கும் நற்றாய் அறத்தொடு நிற்கு மாறு உணர்த்துகின்றது.

நற்றாய் தந்தைக்கும் தன் ஐயன்மார்க்கும் அறத்தொடு நிற்கு மிடத்து, "இன்னதொன்று உண்டால்! அஃது என்னோவெனின், குலத் தானும், செல்வத்தானும் மிக்கான் ஒருவன், உலகத்தாரெல்லாம் ஒரு குறை வேண்டப்படும் தன்மையன் நம்மை வழிபட்டு வாழலுறும்; அவனை யாம் கிழமை கொள்ள அழிவதுண்டோ?" என்னும். 'என்பது கேட்டு அவர் என் கருதுவரோ' எனின், 'இவள் கருதிச் சொல்லுகின்ற குறிப்பாவது இது போலும் தன் மகள் திறத்தின் ஆகாதோ,' என உணர்வார் ஆவார்.

இனி, அறத்தொடு நிற்கும் இடம் கூறுவான் எடுத்துக் கொண்டு அதனை உணர்த்துகிறார்.

29. காப்புக் கைம்மிகுப்பாட்டின் வேட்கை பெருகினும், அயலார் வரைந்து புகும் காலமாயினும், வரைவினை ஏற்றுக் கொள்ளாது தமர் அவ் விடத்து மறுப்பினும், அவனுக்கு நிகழும் ஏதம் அஞ்சின இடத்தும், அந் நாலிடத்தும் மெய்க்கண் நின்ற நாண் நீங்கி அறத்தொடு நிற்கும் நிலைமை தோழிக்கும் உரித்து.

காப்பு என்பது இரண்டு வகைத்து, நிறை காவல் சிறை காவல் என; அவற்றுள் நிறை காவல் என்பது காப்பன காத்து கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்.

> சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை
>
> (திருக்குறள்—வாழ்க்கைத் துணை நலம் 7)

என்ப ஆகலான். இனி, சிறைக்காவலென்பது, தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டல், என இவை. அவற்றுள் ஈண்டுச் சிறை காவல் கொள்ளப்படும்.

அச் சிறைகாவலாது மிகவின் இடையீடான இடத்து தலைமகளுக்குப் பெரியதோர் வேறுபாடு உண்டாம். அது தோழிக்குப் புலனாம்; தோழி அது எனக்குப் புலனாயினவாறே யாய்க்கும் புலனாம்; யாய் அறி வாரை வினவும்; அறிவார் தெய்வத்தினாயது என்ப; அது சொல்லுதல் பயத்தது தன் கருமம் ஆகலானும், பிறிதொன்று சுட்டி உணரும் தன் மைத்தன்று இக்குலம் ஆகலானும், தெய்வத்தினான் ஆயது என்ப. என்ற இடத்து இவளை முன்நிறீஇத் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும். செய்த இடத்துக் கற்பு அழியும். இவட்குக் கற்பழிவு வந்ததென்றும் இவட்கு ஆற்றாமை தணியாதன்றே, தெய்வத்தினான் ஆயிற்று என்றமை யின். பெயர்த்தும் அது கண்டு யாய்க்கு ஆற்றாமை பெருகும் என்றும் தலைமகளது கற்பழிவுக்கும் தாய் ஆற்றாமைக்கும் தோழி தான் ஆற்றா ளாம்.

ஆற்றாமை என்பது பிறிது எவ்வுணர்வுமின்றி ஆற்றாமை தானே யாவது. ஆற்றாமை ஆற்றுவதொன்றினைப் பற்றும். ஆற்றுவது பிறி

தின்மையின் அறிவுரை வினவுமிடத்து என்னை வினவ, யான் அறியேன் என்றதன் புறத்தாம் பிறரை வினவுவது; என்னை வினவினவிடத்து இது சொல்லுவன் என்று கூட்டமில் நாட்டவகையால் சிந்தித்துக் கொண்டிருக்கும். இருந்த நிலையில் தாய் படிமக்கலத்தோடும் புக்கு மகளை அடிகொண்டு முடிகாறும் நோக்கி, 'ஆன்னாய், என் மகட்கு இவ் வேறுபாடு எற்றினாயிற்று' என்னும் என்ற விடத்து, 'என்னால் அறியப் படுவதும் சிறிதுண்டு' என்று மேற்சொல்லியவாறே மாறுகோள் இல் லாத வகையான் அறத்தொடு நிற்கும். அங்ஙனம் அவள் நற்றாய் தொடக்கத்தார்க்கெல்லாம் அறத்தொடு நிற்கும்.

இனி, 'நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்' என்பது. நொது மலர் என்பார் ஏதிலார்; அவர்தாம் வரைவொடு வந்தார் என்பது கேட்ட இடத்துத் தலைமகள் அதற்கு ஆற்றாளாம். ஆற்றாளாயின விடத்து, மேற் சொல்லியவாறே தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்கும்.

'வரைவு எதிர்கொள்ளாது தமர் அவண் மறுப்பினும்', என்பது தலைமகன் தமர், பார்ப்பார், சான்றோரை முன்னிட்டு அருங்கலங் களோடு வரைதற்கு புகுவர்; புக்கவிடத்து ஒரு காலைக்கு மறுப்பர். பிறர் போகக் குமரியை உடையார் போலக் கதுமென நேர்ந்திடார் அன்றே! 'பரியம் சிறிது' என்றானும், 'இளையாள்' என்றானும், 'நாளும் புள்ளும் திருந்தி வாரீர்' என்றானும் தமர் மறுத்தார் என்பதனைத் தலை மகள் கேட்ட ஞான்றும் ஆற்றாளாம். அவ்வாற்றாமை தோழிக்குப் புலனாகும். புலனாயினவிடத்து மேற்சொல்லியவாறே தோழி அறத் நிற்கும்.

'அவன் ஊறு அஞ்சு காலமாயினும்' என்பது: தலைமகன் இரவுக் குறி வந்து ஒழுகுகின்ற நிலைமைக்கண் 'எம் பெருமான் வரும் வழி எண்கும், வெண் கோட்டு யானையும், அரவும் உருமும் புலியும் வானர மகளிரும் வரையர மகளிரும் உடைத்து; மற்றும் தெய்வங்கள் வெளவும் வண்ணத்தன; ஏதம் நிகழ்வது கொல்லோ என வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனாகும். புலனாகியவிடத்து மேற்சொல் லியவாறே தோழி அறத்தொடு நிற்கும்.

'மெய் நாண் ஒரீஇ' என்பது; மெய்யினாய நாண் நீங்கி; நாண் உண் டாயின இடத்துத் தாய் முன்னின்று சொல்லாள் என்பது. அறத் தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே என்பது தக்கதனைச் சொல்லி நிற் றல் தோழிக்கு உரித்து என்பது. அல்லதூஉம், பெண்டிற்கு அறமென் பது கற்பு; கற்பின் தலைநிற்றல் என்பதூஉம் ஆம்.

இனி, 'தோழிக்கும் உரித்து என்ற உம்மையான், தலைமகட்கும் அறத்தொடு நிலை உரித்து என்பது. அஃதாவது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தானும், பாங்கற் கூட்டம் கூடியானும் தெருண்டு வரைந்து எய் தலுற்று, தமரை விடும். விட்ட இடத்து அவர் மறுப்ப, தலைமகள் வேறுபடும். எம்பெருமான் மறுக்கப்பட்டமையால் மற்றொருவாறும்

கொல்லோ' எனக் கலங்கி எய்தின பொழுதே தோழிக்குப் புலனாகும்; புலனாயின இடத்து 'எம்பெருமாட்டி, நினக்கு இவ் வேறுபாடு எற்றின் ஆயிற்று, என்னும். என்ற இடத்து, 'இஃது எனக்குப் பட்டது. இன்ன இடத்து, ஒரு ஞான்று நீயும் ஆயங்களும் தழையும் கண்ணியும் கோடற்கு எண்ணிச் சிறிது நீங்க, யான் நின்று ஒரு மணிச்சுனை கண்டேன்; கண்ட யான் வேட்கையால் ஆடுவான் இழிந்தேன்; இழுக்கிக் குட்டம் புக்கேன். புக்குத், 'தோழியோ', என நீ கேளாய் ஆயினை. ஒரு தோன்றல் வந்து என் துயர் நீக்குதற்காகத் தன் கை நீட்டினான். நீட்டினவிடத்து, மயக்கத்தால் நின் கையெனப் பற்றினேன்; பற்ற, வாங்கிக் கரைமேல் நிறீஇ நீங்கினான். நீ கவலுதி யெனச் சொல்லேனாயினேன். நீ எவ்வெல்லைக் கண்ணும் கைவிடாதாய், அஞ்ஞான்று கைவிடலினை ஆக்கிற்று விதியாகாதோ, இனிப்பிறிதாங்கொல்லோ எனக் கலங்கி வேறுபட்டேன்' என்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நிற்கும். பின்னைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்.

இனி வரைவு கடாவும் இலக்கணமெல்லாம் தொகுத்துரைக்கின்றார்.

30. காமம் மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லும் சொல்லும் காப்புச் சிறை மிகவினால் கையற்றுச் சொல்லும் சொற்களும், அவன் வரும் வழியது ஏதம் சிந்தித்து ஆற்றாளாய்ச் சொல்லும் சொற்களும், இரவின் கண்ணும், பகலின்கண்ணும் நீயிர் வந்து ஒழுகுவதாகாதோ, என்று சொல்லும் சொற்களும், தலைவனை இரவின்கண்ணும், பகலின்கண்ணும் வரவேண்டாவென்று சொல்லும் சொற்களும் தன்னுள் கையாற்றினை ஏதிலது ஒன்றன்மேல் இட்டுச் சொல்லும் சொற்களும், அன்ன இலக்கணத்தன பிறவும் தொகுத்துத் தன் ஆற்றாமையால் சொல்லும் சொல்லெல்லாம் வரைதல் வேட்டுச் சொல்லும் சொல் என்ப.

காமம் மிக்க கழிபடர் கிளவி: (காமம்-வேட்கை; மிகுதல்-பெருகுதல் கழி-சிறத்தல்; படர்-நினைத்தல்; கிளவி-சொல்.

பகற்குறியானும், இரவுக்குறியானும் தலைமகன் ஒழுகாநின்ற நிலைமைக்கண் ஒருகாற் கண்டு தரிக்கும் தன்மைத்தன்றும் வேட்கை. அவ் வகையளாய் நின்று, புன்னைக்கானும், அன்னத்திற்கானும், கடலிற்கானும், கழிக்கானும், அவ் வகைப் பிறவற்றிற்கானும் கேட்டுறு குறை தணிப்பவாகச் சிந்தித்துச் சொல்வது.

இதனைத் தலைவன் கேளா வருமே எனின், இங்ஙனம் வந்தொழுக இவள் ஆற்றாள் என்று ஒரு வகையால் முற்பட்டுப் பிற்றை ஞான்று வரைவொடு புகுவானும்.

தோழி கேட்குமே எனின், தலைமகனை முன்னின்று வரைவு கடாவுவாளாம்.

யாரும் கேட்பாரில்லை எனின் ஆற்றுதலைப் பயக்கும். இம் மூன்றினுள் ஒன்றாகாமை இல்லை. "தலைமகன் கேட்பின் இன்னதொன்றாம். தோழி கேட்பின் இன்னதொன்றாம்; யாரும் கேட்பாரில்லை எனினும்

இன்னதொன்றும்'' என்று ஒரு பயனைச் சிந்தித்துச் சொல்லுமோ எனின், சொல்லாள். குழவி அழுதாற்போல வேட்கை மிகுதியால் சொல்லின இடத்து அப் பயன் நிகழும். குழவி அழுகின்றது, 'எனக்குப் பால் தம்மின்; நீர் ஆட்டுமின்' என்று அழாது, துக்கம் வந்ததாக அழும்; அழ, அறிவார் பயம் எய்துவிப்பர் என்பது.

காப்புச் சிறை மிக்க கையறு கிளவி; காப்புத்தான் இரு வகைய, நிறை காவல், சிறை காவல் என. அவற்றுள் நிறை காவல் என்பது, நிறையின் வேறுபாடு புறத்தார்க்குப் புலனாகாமைக் காப்பாள். காத்தும் முறையின் வேட்கை பெருகக் காணல் உறவினன் ஆற்று னாய்ச் சொல்லும்;

சிறை காவல் என்பது, தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கோழி குரல் காட்டல் என இவை.

ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி; இது தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகா நின்ற நிலைமைக்கண் நேர்வது. (ஆறு-வழி; பார்த்துறுதல்-பிரிவுறுதல்; அச்சம்-குறிப்பின்றியே தோன்றும் நடுக்கம்; கிளவி-சொல்).

இதனை ஆறு பார்த்துற்ற கிளவி என்றும், அச்சக் கிளவி என்றும் இரண்டாகப் பிரித்தெண்ணுவர் களவியல் உரையாசிரியர். (அ) ஆறு பார்த்துற்ற கிளவி; எம் பெருமான் வரும் வழி இறப்பவும் இன்னாது, நீருடைத்து, கல்லுடைத்து, முள்ளுடைத்து, ஏற்றுடைத்து, இழி வுடைத்து எனக் கவறல். (ஆ) அச்சக் கிளவி: கள்ளருடைத்து; புலி யுடைத்து; எண்குடைத்து; வெண் கோட்டி யானை உடைத்து; உரு முடைத்து; பாந்தளுடைத்து எனக் கவலும் கவற்சியால் சொல்லுவது. இவை கேட்ட தலைமகன் வரைவானும். தோழி கேட்பின் வரைவு கடாவுவாளாம். யாரும் கேட்பாரில்லையாயின், தானே ஆற்றுவா ளாம். இஃது இரவுக்குறிக்கண்ணதே.

இரவினும் பகலினும் நீ வருக என்றல்; பகற்குறியானும் இரவுக் குறியானும் வந்தொழுகாநின்ற தலைவனை 'இரவும் பகலும் வா' என்று சொல்லுதல். இது கேட்டு 'இவ் வகையான் வந்தொழுகப் பொருது போலும் இவ் வகை சொல்லுவாளாயிற்று' என்று வரைந்து புகுவானும்.

கிழவோன்தன்னை 'வாரல்' என்றல் : தலைமகனை, 'இரவின்கண் ணும் பகலின்கண்ணும் வாரல்' என்று சொல்லுதல். ஒன்று மறுப்பின் ஒன்றின்கண்ணே நிற்கும் கொல்லோ' என்று இரண்டும் மறுத்து வரை வின் கண்ணே படுத்தவாறெனக் கொள்க.

தன்னுள் கையாறு எய்திடு கிளவி : தன்னுள் கையாற்றினை, அய லது ஒன்றின் மேலிட்டுச் சொல்லுதல்.

'பறைவாய் ஒலியோதம் பந்தர் உகளும்
துறைசேர் சிறுகுடியார் துஞ்சினும் துஞ்சாய்
நிறையில் மருள்மாலை எம்போல நீத்த
துறைவன் உடையையோ நீ வாழி வீராய்!'

'என் போல் இரவினெல்லாம் துயிலாய், நீயும் நின் காதலர் மாட்டு என்போல் அறிவிழந்தாயோ' என்னும். என்றது தலைமகன் கேட்பின் வரைவானும்; தோழி கேட்பின் வரைவு கடாவுவாளாம்; யாரும் கேட்பார் இல்லையாயின், தானே சொல்லி ஆற்றுவாளாம்.

அன்ன மரபின் பிறவும் வரைதல் வேட்டுச் சொல்லும் சொற்களாம். அன்ன மரபின் பிறவும் என்றதனால் பகற்குறிக்கண்ணும், இரவுக் குறிக்கண்ணும் வந்தொழுகும் தலைமகனுக்குத் தலைமகளும் தோழியும் ஆற்றாத் தன்மையராய் வரைவு பயப்பச் சொல்லும் சொல்லெல்லாம் கொள்ளப்படும். அக் கிளவி பல. நிலை கண்டு உரைத்தல், படைத்து மொழி கிளவி ஆகியவை அவற்றுள் சில.

இச் சூத்திரத்துட் சொல்லப்பட்டன எல்லாம் தலைமகட்கே உரியனவும், தோழிக்கே உரியனவும், தலைமகட்கும் தோழிக்கும் உரியனவும் என மூன்று வகைப்பட்டன.

காமம் மிக்க கிளவியும், தன்னுள் கையாறெய்திடு கிளவியும் எல்லாம் தலைமகட்கே உரிய 'இரவினும் பகலினும் வருக', என்றலும், கிழவோன் தன்னை 'வாரல்' என்றலும் இவ் விரண்டும் தோழிக்கே உரிய. ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவியும் காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும் இருவர்க்கும் உரிய.

உரிமையால், 'தன்மையழிந்த கிளவியெல்லாம்' என்ற பன்மையால் சொல்லாது ஒருமையால் சொல்லியது எற்றிற்கோ எனின், தோழி தலைமகள் என இருவரையும் வேறுபடுத்துக் கருதாது ஒருவராகவே கருதற் பொருட்டாக ஒருமையால் புணர்த்தார் என்பது.

இனி, களவுக் காலத்துத் தலைமகன் இலக்கணம் உணர்த்துகிறார்.

31. ஆறு இன்னாமையும், ஊறும் அச்சமும் தன் நெஞ்சினால் நோதலும் தலைமகனுக்கு இல்லை.

ஆறு - வழி; ஆறு இன்னாமை - வரும்வழி ஏற்றுடைத்து, இழிவுடைத்து, கல்லுடைத்து, முள் உடைத்து என்றல்; ஊறு - இடையூறு; அது புலியானும், யானையானும் சூரர மகளிரானும், கள்ளரானும், எண்கானும் இடையூறு உடைத்து என்றல்; அச்சம் என்பது அஞ்சப்படுவன கண்ட இடத்து மனக்குறிப்பின்றியே அஞ்சுவது; தன்னை அழிதல் - தன்னை நெஞ்சினால் நோதல்—எனக்காகாததோர் ஒழுக்கம் எடுத்துக் கொண்டேன்' என்று தன்னை நெஞ்சினால் நோதல்; இனையன தலைமகனுக்கு இல்லை. தலைமகனுக்கு இல்லை எனவே, தலைவிக்கும் தோழிக்கும் அவையுள என்பது பெற்றாம். அவர் 'தலைவி, தோழி' ஆறு இன்னாது என்றும், இடையூறுகள் உளவென்றும் அவற்றிற்கு அஞ்சுதலும், 'எம்பெருமான் தனக்குத் தகாத இழிவர ஒழுக்கத்திற்குக்

காரணமாயினும் ஆகாதோ' என்று தம்மை அழிதலும் (நோதலும்) உடையார்.

இனி, மேற்சூத்திரத்தோடு இயைபு என்னையோ எனின், மேல் 'ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி' என்றார், தலைமகன்கண்ணும் உண்டு என்று கருதுவாராயின், கருதற்க என்றற்குச் சொல்லப்பட்டது.

அடுத்து, களவினுள் தங்கி ஒழுகும் ஒழுக்கம் இத்துணைக் காலமல்லது இல்லை என்று வரையறுத்து உணர்த்துகிறார்.

32. களவினுள் தங்குதல், வரைந்தெய்துந்துணையும் நீட்டிக்கும் காலம் திங்கள் இரண்டின் அகம் என மொழிப.

பதினோராண்டும், பத்துத் திங்களும் புக்க தலைமகளோடும், பதினையாண்டும், பத்துத் திங்களும் புக்க தலைமகனைப் போலும் புணர்தல் வேண்டிற்று. இரு திங்கள் புக, இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய், இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய்ச் செல்வதல்லது மற்றையன நிகழா; உலகினுள் இத்துணை மாத்திரையே ஒத்து மற்றை விகற்ப மெல்லாம் ஒவ்வா எனக் கொள்க.

அடுத்துக் களவுக் காலத்துத் தலைமகனது இலக்கணம் உணர்த்துகிறார்.

33. களவு காலத்துத் தலைமகன் காரணமாக இடையீடில்லை.

தலைமகனுக்கு இல்லை எனவே அருத்தாபத்தியால் தலைமகள் காரணமாக இடையீடு உண்டு என்பது. இன்னும் களவினுள் தவர்ச்சி (இடையீடு) தலைவனுக்கு இல்லை என்பதனானே, கற்பினுள் தலைமகள் காரணமாக இடையீடில்லை என்றும். ஆண்மை மிக்க தலைமகன் பிரிவு வேண்டுவதல்லது, தலைமகள் கற்பினகத்து வேண்டாள் என்றவாறு. இனி ஓதல், காவல், பகைதணிவினை என இவை தலைமகன் இயல்பாதலான் கற்பினுள் தலைமகன் இடையீடாதலும் பெறப்பட்டது; ஈங்கு உரைத்தல் வேண்டா என்பது. அவ்வகை இலேசினான் இது பெறப்படும்.

அவ் விரு திங்கள் காறும் தெருளாதே வந்தொழுகும் தலைமகன் ஆயினவிடத்து, தலைமகளாயினவிடத்து, அன்று தெருளாளாய்ப் பின்னை நெறியன்று என்று உணரும். ஆயின், இவனாகாதோ தெருளற்பாலன், பெருஞானத்தனாகலான்? இவளாகாதோ தெருளாது விடற்பாலாள், அவன் துணைப் பேரறிவினள் அன்மையான்? எனின், அதுவன்று. அவன்கண் நின்ற தமியனாதல் தன்மையை விலக்குவது இல்லை; இன்மையான் அப் பெற்றி சுட்டப்பட்டது. இவள் மாட்டு அதனை விலக்குவது உண்டன்றே, இவனது இளிவரவிற்கும் வருத்தத்திற்கும் கவன்ற கவற்சி. அதனான் இவன் தெருளாமைக்கும் இவள் தெருள்தற்கும் காரணம் இது என்பது.

களவு முற்றும்.

2. கற்பு

34. கற்பினகத்து நீக்கம் (பிரிவு) ஆசிரியர்களால் கடிந்து வரையப் படாது.

(துறவு எனினும், நீக்கம் எனினும், பிரிவு எனினும், அகற்சி எனினும் ஒக்கும்). கற்பினுள் பிரிவு இத்துணைக் காலம் என்று வரையறுக்கப்படாது. எனவே, களவினகத்துப் பிரியும் பிரிவு ஒரு திங்களல்லது இல்லை என்பது.

இப் பிரிவு பல. அவையிற்றைப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துவது அடுத்துவரும் சூத்திரம்.

35. ஓதற் பிரிவு, காவற் பிரிவு, பகைதணிவினைப் பிரிவு, வேந்தர்க் குற்றுழிப் பிரிவு, பொருட்குப் பிரியும் பிரிவு, பரத்தையிற் பிரிவு என்று கற்பினகத்துப் பிரிவு ஆறு ஆகும்.

(அ) ஓதற் பிரிவு: கல்வி காரணமாகப் பிரியும் பிரிவு; இது தலையான பிரிவு. எனவே முன்வைக்கப்பட்டது.

(ஆ) காவற் பிரிவு: நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு.

(இ) பகைதணிவினை: இருவர் அரசர் தம்மில் பொரும் என்ற விடத்து அவரைச் சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு.

(ஈ) வேந்தர்க் குற்றுழிப் பிரிவு: தனக்கு நட்டான் ஓர் அரசன் சென்ற இடத்து அவனுக்கு ஆய மறுதலையை வென்று நீக்குதற்குப் பிரியும் பிரிவு.

(உ) பொருட்குப் பிரிவு: தனது தாளாற்றலால் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியும் பிரிவு.

(ஊ) பரத்தையிற் பிரிவு: புறப்பெண்டிர் மாட்டுப் பிரிவு. இவன்கண் அன்பிலனாய்க் கண்டாரிகண் தாழ்ந்து நிறையிலனாய்ப் பிரிந்தானல்லன். தலைமகளை நீங்கி, ஆடல் காண்பல், பாடல் கேட்பல், எனப் பிரியும். பிரிய, அவற்றின்கண் சென்ற உணர்வு தலைமகள் மாட்டு நின்ற உணர்வினை மறைக்கும், இரண்டுணர்வு உடன் நில்லாமையின். இவ்வகை மறைப்ப, இவர் கண்ணதே உள்ளமாம் என்பது. காமம் பின்வைத்து எண்ணப்படுமாதலான் இப் பிரிவு எல்லாவற்றிற்கும் பின் வைக்கப்பட்டது என்பர்.

36. அவற்றுள், ஓதற்குப் பிரியும் பிரிவும் நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவும் உயர்ந்தோர்க்கு உரிய.

மக்களுள் சிறந்து உயர்நிலையில் வாழ்பவர்களே இப் பிரிவுகளுக்கு உரியர் என்பதாம்; இவர் நாட்டின் தலைமைக் குடிமக்களாதலான் இவ்வாறு கூறுகின்றார்.

37. வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் உரித்தே.

இருவர் அரசர் வேறுபட்டு மாறு கொண்டிருந்த இடத்து அவர்களைச் சந்துசெய்வித்தற்குப் பிரியாதுவிடின் அவர்களைச் சார்ந்து வாழ்வாரும் அவர்கள் நாடும் பெரிதும் துன்பம் எய்துமன்றே. அதனை நீக்காது உடன்பட்டிருப்பப் பழியும் பாவமும் பெரிய வாகு மாகலான்

அரசர்க்கு உரியது. அவ் வகை அவர்க்கு ஆகிய சந்து பார்ப்பார்க்கும் உரித்து.

38. அரசரல்லா ஏனையோர்க்கும் வேந்துவினை ஓரிடத்துப் பொருந்தும் என்ப.

அரசர் அல்லா ஏனையோருக்கும்-வணிகர் வேளாளருக்கும் சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு உரித்து என்பர். (இச் சூத்திரம் இருக்க மேற் சூத்திரம் வேண்டா என்றார்க்குக் களவியல் உரையாசிரியர் கூறும் அமைதியை அகப்பொருள் உரையிற் காண்க.)

39. வேந்தர்க்குற்றுழிப் பிரிவும் பொருள் வேட்கையிற் பிரிவும் அவ் விரண்டும் இழிந்தோர்க்குரிய.

இவ் வகைப் பிரிவு வேந்தர்க்கே யன்றி வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரிய என்பர்.

மேல் எல்லாப் பிரிவுகளையும் சிறப்பு வகையான் உணர்த்தினார்; பரத்தையிற் பிரிவு எல்லார்க்கும் உரித்து என்று உணர்த்துகிறார்.

40. காதலிக்கப்பட்ட பரத்தையிற் பிரிவு எல்லார்க்கும் உரித்து.

தலைமகனால் தலைநின்று ஒழுக்கப்படுவன தருமம், அருத்தம், காமம் என மூன்று. ஒரு கூறு அறத்தொடு படச் செல்லும்; இடைக்கூறு அருத்தத்தொடு படச் செல்லும்; கடைக்கூறு காமத்தொடு படச் செல்லும்; அது தலைமகளுழைப் போதருதல். போதர, அப் போதரவு பார்த்திருந்த பரத்தையர், குழலூதி யாழெழீஇத் தண்ணுமை இயக்கி முழவியம்பித் தலைமகனை இங்குக் கூத்துண்டு என்பது அறிவிப்ப. அவ் வகை அறிவிக்கப்பட்ட தலைமகன், 'நாம் இதனை ஒரு கால் நோக்கிப் போதும்', என்று செல்லும்; சென்றக்கால் அவர்கள் தங்கண் தாழ்விப்பர் என்பது. அஃதே எனின், இவன் பரத்தையரைத் தலைமகளை எய்தியிருந்தே உடையனாதல், 'எய்தாததன் முன் உடையனா தல் இரண்டல்லது இல்லை. அவற்றுள் எய்தியிருந்தே உடையனாயினானே எனின், தலைமகள் குணமேயு மன்றிப் பிறவும் இன்பம் செய்வன உளவாகக் கருதினான். ஆகவே,

> கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள
>
> (குறள்)

என்பதனோடு மாறுகொள்ளும் என்பது. இனி, தலைமகளை எய்தாத முன் உடையனாயினனே எனின், முன்னும் இவன் கற்ற காலமின்றிக் காமத்துக்கண்ணே கெழுமி வருகின்றானாம்; ஆகவே நெறியால் வளர்ந்தான் அல்லனாம் என்பது. 'மற்றென்னோ உரை' எனின், தலைமகளை எய்தாத முன்னே, பரத்தையரை உடையன் என்பது. எனவே மேற் சொல்லப்பட்ட குறை எய்தாதோ எனின் எய்தாது.

குரவர்கள் இவன் அறியாமையே இவனுரிமை இது எனவும், இவன் யானையும் குதிரையும் இவை எனவும் மற்று மெல்லாம் இவற்கென்று வகுத்து வைத்துத் தாம் வழங்கித் துய்ப்ப என்பது. அவ் வகையே குரவர்களான் இவன் உரிமை என்றே வளர்க்கப்பட்டார

ராகலான், தலைமகளை எய்துவதன் முன் உளர் என்பது. இவன் முன்னே தன்னுரிமையாவது அறிந்தவாறு என்னை எனின், தலைமகன் தலைமகளை நீங்கித் தருமமும் அருத்தமும், உட்பட்டுத் தலைமகள் மாட்டுப் போதருமிடத்து, அவர் முன் சொன்னவாறே குழலும் யாழும் தண்ணுமையும் முழவும் இயம்ப, இயம்பின இடத்து, "இஃதென்னை" என்னும். என்றக்கால் 'அது நின் உரிமையன்றோ' என்ப. என்றார்க்கு, 'அஃது என் உரிமை ஆயினவாறு என்னை என்னும்; என்ற இடத்து, 'நின் குரவர்களான் நினக்குரிமையாக வகுக்கப்பட்டார்' என்ப. ஆயின், 'நாம் குரவர் பணி மாறு கொள்ளல் ஆகாது' என்பதனாற் காண்டற்குச் செல்லும்; சென்றானை அவர் தங்கண் நயப்பிப்ப என்பது. இது பரத்தையிற் பிரிவு நிகழுமாறு.

அஃதே எனின், மற்றைப் பிரிவெல்லாம் வேண்டுக, ஆள்வினை மிகுதி உடைமையான்; இஃது எற்றிற்கோ வேண்டியது எனின், பரத்தையிற் பிரிந்தான் தலைமகன் என்றால், ஊடலே, புலவியே, துனியே என்றிவை நிகழும். நிகழ்ந்தால் அவை நீங்கிக் கூடின இடத்துப் பெரியதோர் இன்பமாய், அவ்வின்பத் தன்மையை வெளிப்படுப்பன அவை எனக் கொள்க. மென் சுவை மேலே நடந்தானோர் ஆசிரியன் ஆகலான் இப் பிரிவு வேண்டினான்.

அஃதாயின், காதற் பரத்தை எல்லார்க்கும் உரியள் என்றாகாதே சூத்திரஞ் செய்தற் பாலது? உரித்தென்று அஃறிணை வாய்பாட்டாற் சொல்லிற்று எற்றிற்கோ எனின் பிரிவதிகாரம் வாராநின்றமையாற் பிரிவும் உரித்தென்று சொல்லப்பட்டது.

பரத்தையிற் பிரிந்த தலைமகன் பெயர்ந்து தோழியை வேண்டத் தோழி வாயில் மறுப்பாள். எங்ஙனம் வாயில் மறுப்பாள் எனின், 'எம் பெருமானது நிலை சொல்லலுற்றேற்கு, எனது குறிப்பறிந்து இத் தன்மையினாள், இதற்குத் தக்கது அறிந்து செய்' என்று வாயில் மறுக்கும் என்பது.

இனி பரத்தையிற் பிரிந்த தலைமகனுக்கு வாயிலாகப் புக்க பாணன் தலைமகளால் வாயில் மறுக்கப்பட்டு முன்னின்று நீங்குவன். மற்றும் வாயில் பெறாது பரத்தையிற் பிரிந்த தலைமகன் மகனை வாயிலாகக் கொண்டு புக்கானைக் கண்டு பொறாமை நீங்க வேண்டித் தோழி சொல்லவும் சொல்லும்.

இனி, தலைமகன் பிரிந்துறையும் இடத்துக் கால வரையறை உணர்த்துகின்றார்.

41. பிரிவினது நெடுங்காலைச் செலவு, இடத்தின் நீங்கி நாடு இடையிட்டும், காடு இடையிட்டும், உறைவோர்க்கு யாண்டு வரையறுத்துப் பிரிதல் உரித்து.

இன்ன நாளுள் வருதும்; இன்ன திங்களுள் வருதும்; இன்ன இருதுள் வருதும் என்று சொல்லிப் பிரியும்.

42. பரத்தையர் மாட்டுப் பிரியும் பிரிவு இடத்திரிபு இன்று.

இது பரத்தையிற் பிரியும் பிரிவு நாடிடையிட்டுங் காடிடையிட்டும் நீங்கி உறைதல் இல்லை என்பது உணர்த்திற்று.

மேற் சூத்திரத்திற் பிரியுங் காலத்து, நாடிடையிட்டுங் காடிடையிட்டும் பிரிதல் போலில்லை என்றார். எனவே ஓரூரது என்பதூஉம், ஓரிடத்தது என்பதூஉம் உணர்த்தப்பட்டது. பட்டமையால், தன்னிடத்ததாகவும் பெறும், தன்னிடத்து நீங்கிச் சேரியதாகவும் பெறும் என்பது. இனி ஓரிடத்தது என்பதனைத் தலைமகன் இடம் பெரிதாகலான் தலைமகளது இடமும் பரத்தையர் சேரியும் வேறாய் நீங்கி இருக்கும்; அதனுள்ளே செய்குன்றமும் நந்தவனமும் வாவியும் விளையாடிடமும் எல்லாம் உடைத்தாயிருக்கும் என்பது.

அடுத்து, தலைமகன் பரத்தையிற் பிரிந்த இடத்துத் தலைமகளுக்குப் பூப்பு நிகழ்ந்த காலத்து, தலைமகன் இவ்வாறு ஒழுகும் என்பது உணர்த்துகிறார்;

43. பரத்தையிற் பிரிந்த தலைமகன், மனைவி பூப்புப் புறப்பட்ட நாள் முதல் பன்னிரு நாளும் நீத்ததும் அகன்றும் உறைதல் அறநெறியன்று.

எனவே, நீயாதும், அகலாதும் உறைதல் அறநெறி என்பது. சொற் கேட்கும் வழியும் கூடியும் உறைதல் செயற்பான்மையது என்றவாறு.

அஃதாமாறு: தலைமகன் பரத்தையிற் பிரிந்த காலத்துத் தலைமகளுக்குப் பூப்புத் தோன்றிற்று. அது வாயில்கள் உணர்த்தவே உணரும். உணர்த்தப்பட்ட தலைவன் வாயில்களோடும் சென்று, தலைமகளிடத்தனாய் முந்நாளும் சொற்கேட்கும் வழி உறைவான். உறைந்த பின்னை உறைதற்குக் காரணம் என்னை எனின், தலைமகன் பரத்தையர் மாட்டானாக முன்னின்ற பொறாமை உண்டென்று எய்தும். முந்நாளும் சொற் கேட்கும் வழி ஒன்பது நாளுங் கூடி உறைவான். முந்நாளும் சொற் கேட்கும் வழி உறையவே நீங்கும். நீங்கிய பின்றைக் கூடும். ஆகவே, கரு நின்றது மாட்சிமைப்படும். அது நோக்கி உணர்த்தப் பட்டது. அதனான் அறமெனப்பட்டது.

அல்லாவிடில், தலைமகள்மாட்டு ஓர் பொறாமை தோன்றும், பரத்தையர் மாட்டுநின்று வந்தான் என; அப் பொறாமை ஒரு வெகுளியைத் தோற்றுவிக்கும். அவ் வெகுளி பெரியதோர் வெம்மையைச் செய்விக்கும்; அவ் வெப்பத்தினால் கரு மாட்சிமைப் படாதாம். படாதாகவே, அறத்தின் வழுவாம். அதனான் சொற் கேட்கும் வழி உறையல் வேண்டும் என்பது.

'பூப்புப் புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிரு நாளும் என்பது துணிவு' என்றார்க்கு, முந் நாளும் கூட உறையப்படுங் குற்றம் என்னோ எனின் பூப்புப் புறப்பட்ட ஞான்று நின்ற கரு வயிற்றிலே அழியும்; இரண்டாம் நாள் நின்ற கரு வயிற்றிலே சாம்; மூன்றும் நாள் நின்ற கரு குறு வாழ்க்கைத்தாம்; வாழினும் திருவின்றாம். அதனால் கூடப் படாது என்பது.

> 'பூப்பு முதல் முந்நாள் புணரார்; புணரின்
> யாப்புறு மரபின் ஐயரும் அமரரும்
> யாத்த கரணம் அழியும் என்ப'

எனப் பிறரும் ஓதினார் ஆகலான், அமையாது.

44. பரத்தையர் சேரியனாய் பூப்பு உணர்த்தப்பட்ட தலைமகன் கற்பினுள் பிரிந்தோன் எனப்படான்.

இது மேலைச் சூத்திரத்திற்குரியதோர் புறநடை உணர்த்துகிறார்.

(கற்பென்பது பூப்பு. அப் பூப்புக் கற்புக் காலத்தினன்றிக் களவுக் காலத்தில் நிகழாமை நோக்கிப் பூப்பினையும் கற்பென்று சொல்லினான்.

45. புகழும் கொடுமையும் தலைமகன் கண்ண.

புகழ் - தக்கான் எனப்படுதல்; கொடுமை தகான் எனப்படுதல்: அவை இரண்டும் தலைமகன் கண்ண என்றவாறு, தலைமகள் மாட்டு உறைந்தக்கால் தக்கான் எனப்படுதலும், பரத்தையர்மாட்டு உறைந்தக்கால் தகானெனப்படுதலும் சொல்லப்படுவது வாயில்களான் எனக் கொள்க.

46. கொடுமை இல்லை தலைமகள் மாட்டு.

தலைமகள் எக்காலத்தும் ஒரு தன்மையள். தகாள் எனப்படுதல் இல்லை. இது தலைமகளது பெருமை உணர்த்திற்று.

47. தலைமகன் முன்னர்த் தலைமகள் தன்னைப் புகழ்தல் புலவிக் காலத்தும்புரைவதன்று.

எனவே தலைமகள் எவ்விடத்தும் தன்னைப் புகழப் பெறாள் என்பது. எனவே, தலைமகளது பெருமை பெற்றாம் இனி, தலைவி தற்புகழ்தல் பெறாள் எனவே, பரத்தை தற்புகழப் பெறும் என்பது பெற்றாம்.

தலைமகள் தற்புகழ்ந்தாளாகற்க; இவ்வாறு சொல்லியக்கால் அதுவும் புலவி நிமித்தம் என்பது உணர்த்துகிறார்.

48. நாடே, ஊரே, இல்லே இவற்றைக் கருதித் தன்கண் சொல்லின் புலவிப் பொருட்டாம்.

தான் உறையும் நாட்டையும் தன் ஊரையும் தான் பிறந்த குடியையும் சொல்லித் தலைமகள் தற்புகழ்ந்தாளன்று. இவ்வாறு சொல்லியக்கால் இது புலவிப் பொருட்டாம்.

49. நாடும் ஊரும் இல்லும் சுட்டித் தலைமகனைச் சார்த்திச் சொல்லின் அது புலவியை நீக்கி நிறுத்தற் பொருளதாம்.

மேல் சூத்திரத்தில் புலவி என்று வந்ததாகலான் அப் புலவியை நீக்கி நிறுத்தல் பொருட்டுச் சொல்வது. பரத்தையை மறுத்தந்து வாயிலாற் புக்க தலைமகனை ஏற்று எதிர்கொண்டு வழிபட்டாள் பின்னைக் காரணத்தின் நீங்கிய பொறுமை காரணம் பெற்றுத் தோன்றிற்று. அது தோன்றத் தலைமகனை, "எம்பெருமான், நீர் பெரிதாய நாட்டிற் பெரிது மிக்க ஊரிற் பெரிது மிக்க குலத்தில் பிறந்த பேரொழுக்கத் தினிர்க்குத் தக்கதோ சிறியேமாகிய எம் திறத்துத் தலையளி" எனச் சொல்லுதல். இவ்வாறு சொல்லுவாள் புலவி நீக்குவான் சொல்லிற்று என்பது.

இனி, தலைமகட்கே உரியதோர் இலக்கணம் தலைமகனுக்கும் ஓரிடத்து உரித்து என்று உணர்த்துகிறார்.

50. உணர்த்துதற்கு இடம் வாரா ஊடல் தலைமகட்கு வெளிப்படின், புலந்து சொல்லுதல் தலைமகனுக்கும் வரையார்.

இது, எந் நேரத்துக்கண் தோன்றுவது எனின், பரத்தையர் சேரியி னின்றும் வந்து தோழியை வாயிலாகக் கொண்டான்; தோழி புக்குக் காரணம் காட்டினுள். தலைவி அப்பொழுதைக்குச் சிவப்பு நீங்கிப் புகுதுக' என்றுள். என அவன் புக்கான். புக்குப் பள்ளியிடத்தானுக, உள்ளுடைத்தாகிய சிவப்புத் தோன்றும் தோன்றத் தலைவன் பெரிதும் ஆற்றுனாயினன். ஆற்றுத் தன்மையனேயாய் இறந்தகாலத்து நிகழ்ந்த தனைப் பற்றிச் சொல்லும். ''மேலைக் காலத்து நாம் ஆற்றுமாகத் தான் ஆற்றுளாய், நாம் ஆற்ற ஆற்றி வருகின்றவள். இவளே, இற்றையின் ஊங்கு நாம் ஆற்றுமாயது ஆற்றுமையால், (இவள்) நம் காதலியல்லள்; அவள் போல்வதோர் தெய்வம். நீ அவளெனக் கருதினுய் நெஞ்சே, நின் மடமையால்; அவள் யாராகியர் என்று நெஞ் சிற்குச் சொல்லும்.

அது கேட்ட தலைமகள், மேனுள் யான் செய்த குற்றேவல் இன்று உட்கொள்வானுயிற்று, என்கண் நின்ற பேரருளினுன் அன்றே. இவ் வகைப் பேரருளினுன்திறத்து இவ் வகை சினத்தல் ஆகாது' என்று சிவப்பு நீங்குவாள். இன்னும் கற்புக் காலத்துத் தலைமகனுக்குரிய தோர் இலக்கணம் கூறுகிறுர்.

51. உடன் கொண்டு போவேன் எனத் தலைமகன் உள்ளத்தின்கண் நிலை பெற்ற விடத்துக் களவு காலத்துக்குரிய சொல் தலைமகளிடத்துத் தோன்றுவதாயின், திணை நிலையைப் பெயர்ந்து கொள்ளும் கோள் தலை மகனுக்கும் வரையார்,

'நாம் பொருட்குப் பிரிய இவள் ஆற்றுமேல் பிரிதும்; ஆற்று ளாயின் ஒழிதும்' என்று நெஞ்சினெடு ஒருப்பட்டுத் தலைமகளுழைப் புக்கான்; புக்குப் பள்ளி இடத்தானுய்ப் பெரியதோர் அருளிச் செய்தான். செய்யத் தலைமகள், 'எம்பெருமான் பண்டும் அருளிச் செய்தான்; இவை பண்டு போலாது பெரிதும் இழுமத்தக்கன போலக் காட்டின; பிரியக் கருதினுன் கவடு போலும்' என ஆற்றுளாயினுள். அவ் வாற்றுமை தலைமகனுக்குப் புலனுயிற்றுக, இவள் குறிப்பினுனே பிரிவு உணர்ந்து ஆற்றுளாயினுள்; பிரிதும் என்று சொல்லின் இறந்து படும் என்று நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கினுன்.

'மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம்பகட் டிளமுலைப்
பெருந்தோள் நுணங்கிய நுசுப்பின்
கல்கெழு கானவர் நல்குறு மகளே,'

(குறுந். 71)

இவ்வாறு நினைந்து பாலை நிலத்தானுயினன்; செலவழுங்கி மருத நிலத்தான் ஆயினன். இது 'திணைநிலை கைகோள்' தலைவனுக்கு ஆயினவாறு. பிரிவினை வேண்டாதாள் தலைமகளாயினும், இந் நேரத்துத் தலைமகனும் வேண்டான் ஆயினன்.

களவு காலத்துச் சொல் அறத்தொடு நிலையல். தலைவனுக்கும் வரையார் என்ற உம்மையால் தலைவிக்கும் வரையார் எனக் கொள்க, இவளும் உடன் போக்கு ஒட்டிப் பாலை நிலத்தாளாயினள் எனக் கொள்க.

"பொருள் வயின் பிரியினும் புணர்ந்துடன் போகினும்
அதுபிரி வுரைப்பினும் பாலை யாகும்,"

என்றார் ஆகலின்.

52. நிலம் பெயர்ந்துறையும் (பரத்தையிற் பிரிவு ஒழிந்த) எல்லாப் பிரிவும் தலைமகளும் தோழியும் அறியவும் அறியாமையும் அகன்று உறைதல் இயற்கையது என்பர்.

அடுத்து வருவதும் கற்புக் காலத்துத் தலைமகன் பிரிவின்கண் உரியதோர் இலக்கணம் உணர்த்துகிறது.

எனவே,

"ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழிப் பொருட் பிணி" (களவியல் 35)

என இவற்றிற்குப் பிரிகின்ற தலைமகன், தலைமகளும் தோழியும் அறியச் சொல்லியும், அறியாமையும் பிரிதல் உடையன். அறியப் பிரிவதே வலியுடைத்து. அறியாமை பிரிந்த ஞான்று தலைவி சொல்லியதற்குச் செய்யுள்:

செல்வார் அல்லர் என்று யான்இகழ்ந் தனனே;
விடுவாள் அல்லள் என்று அவர் இகழ்ந் தனரே;
ஆயிடை இருபேர் ஆண்மை செய்த
பூசல் நல்லராக் கதுவி யாங்கென்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே

(குறுந் 43)

இனிப் பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகளை வாயில்கள் பார்ப்பானும், பாணனும், பாடினியும் என இவர்கள் ஆற்றுவிக்குமாறு உணர்த்துகிறார்.

53. தலைமகனும் விருந்தும் ஒழிந்த எல்லா வாயில்களுமே தலைமகன் நாடிடையிட்டும் காடிடையிட்டும் பிரியும் பிரிவின்கண், பல நெறியாலும் ஆற்றுவித்தலைக் குறித்தன.

பருவ வரவின்கண் (தலைவன் வாராமையின்) ஆற்றாளான தலைவியைப் பார்ப்பானும், பாணனும், பாடினியும் ஆற்றுவிப்பர்.

54. தலைமகளை ஆற்றுவிக்கும் வகையால் ஆற்றுவித்தற்குரிய வாயில் எல்லாம், தலைமகன் பிரிவின்கண் தலைமகள் ஆற்றாளாயின இடத்து, சிறைப்புறத்துக்கண் வைத்து ஆற்றுவிக்க எனச் சொல்லுவர் புலவர்.

சிறைப்புறம் குறித்தது என்பது கற்பெனப்பட்ட சிறைமேல் வைத்து ஆற்றுவித்தல் என்பது. மேற் சொன்ன முறையானெல்லாம் ஆற்றுவிப்பவும் ஆற்றாளாய் நின்ற தலைமகளை, 'இவ் வாற்றானும் ஆற்று வித்துக் காண்பன்,' எனக் கருதி, நம் பெருமான் தம் ஆண்மைத்

தன்மை காட்டிப் பிரிந்தார்; நீயும் அவர் கருதியது முடித்து வருந் துணையும் கற்புக் காத்திருக்க வேண்டும்; என்றும், சான்றோர் மகளிர் என்பார் சிறியரன்றிப் பெரியராகல் வேண்டும்; அத் தன்மையென்பது தம் குலம் நோக்கித் தம் கற்புக் காத்து ஒழுகுதல் அதனின் மிக்கதில்லை என்றும் இவ் வகை ஆற்றுவித்தல் சிறைப்புறம் குறித்தல் என்பது.

55. தலைமகன் பிரிந்தவழித் தலைமகள் ஆற்றுளாயின இடத்துத் தலைமகனது வரவு சொல்லி ஆற்றுவிக்க என்பது.

மேல் அவ் வகையால் தோழி தலைமகளை ஆற்றுவித்துக் கொண்டு இருந்தாளன்றே. இருந்த இடத்துத் தலைமகனும் தான் எடுத்துக் கொண்ட வினை முடித்தானன்றே. முடித்த வகையால் குறித்த காலம் வந்ததென்று மீண்டும் சார்ந்தாரன்றே. சார்ந்த இடத்துத் தோழி அவன் வரவுணர்ந்து, 'எம் பெருமாட்டி, நீ இறந்துபடுவானை புக்காயால் கண்டாயன்றே, உள்ளோரால் எய்தப்படாத பொருளில்லை, நீ ஆற்றி உளையாய், இன்று எம் பெருமானை வழிபடுவாய் ஆயினை' என இவ்வாறு சொல்லுதல் 'சிறைப்புறம் குறியாத் தோன்றலும் உளவே' என்பது.

மேல் களவும் கற்பும் உணர்த்திப் போந்தார்; இனி அவ் விரண்டும் பற்றி வருகின்ற பாட்டினை இக் கூறிய பத்திலக்கணத்தானும் உரைக்க என்பது உணர்த்துகிறார்.

56. திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடன், காலம், எச்சம், மெய்ப்பாடு, பயன், கோள் என்னும் இப் பத்திலக்கணத்தானும் அகனைந் திணையும் உரைத்தல் ஆறு

(அ) திணை : இது பல பொருள் ஒரு சொல்: நிலத்திணையும் திணை என்பர்; குலத்திணையும் திணையென்பர்; ஒழுக்கத்திணையும் திணை என்பர், ஈண்டு ஆகுபெயராய் அவரால் ஒழுகலாறு நிகழ்ந்த இடத்தையும் திணை என்றார். அவை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்து வகைப்படும். அவை, முதல் கரு உரிப்பொருள் பற்றி அறியப்படும். அவ் விலக்கண மெல்லாம் மேல் அன்பின் ஐந்திணை என்றதன் வழியே உணர்த்திப் போந்தார். அகப்பாட்டின் ஒரு பாட்டுக் கேட்ட இடத்து, இவ் வைந்திணையுள்ளும் இன்னதொன்று பற்றி வந்ததென்று சொல்லுவது.

(ஆ) கைகோள் : களவு, கற்பு என்பன. இது களவு பற்றி வந்தது, இது கற்பு பற்றி வந்தது என்று சொல்லுவது.

(இ) கூற்று : இன்னார் கூறினார் இப்பாட்டு என்று அறிதல்.

(ஈ) கேட்போர் : 'தோழி கூறத் தலைமகள் கேட்டாள்' என, இன்னார் கூற இன்னார் கேட்டார் என்று அறிவது.

(உ) இடம் : அவ்வாறு ஒருவர் கூற ஒருவர் கேட்ட இடம் எது என்று அறிவது.

(ஊ) காலம் : இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும்.

(எ) எச்சம் : ஒழிபு, சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இரண்டு வகைப்படும்.

(ஏ) மெய்ப்பாடு: நகை, அழுகை, இளிவரல், மருட்கை, உவகை, அச்சம், பெருமிதம், வெகுளி என இவை எட்டு வகைப்படும். அவற்றுள் இன்னதோர் மெய்ப்பாடு வந்தது என்று அறிவது.

(ஐ) பயன்: *இது சொல்ல இன்னது பயக்கும் என்று அறிவது.*

(ஒ) கோள்: *ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை. அஃது ஐவகைப்படும். விற்பூட்டு, விதலையாப்பு, பாசி நீக்கு, கொண்டு கூட்டு, ஒரு சிறை நிலை. அவற்றுள் இன்னதோர் பொருள் கொண்டு நின்றது இப் பாட்டு என்று அறிவது.*

57. அவற்றுள் (மேற் கூறப்பட்ட பத்தினுள்) எச்சமேனும், கோளே னும் இரண்டினுள் ஒன்றொழிந்தும் இரண்டும் ஒழிந்தும் நிற்கவும் பெறும்.

58. சொல்லே குறிப்பே என இரண்டு எச்சமாம்.

சொல்லெச்சமாகவும் குறிப்பெச்சமாகவும் செய்யுள் வரும்.

59. முன்னால் உரைக்கப்பட்ட சூத்திரத்துப் பொருட்கெல்லாம் ஒழிவு பட வரும் இடம் ஆராய்ந்து சொல்லப்பட்ட வாய்பாடானன்றிப் பிற வாய்பாடு தோன்றினும் அச் சொல்லப்பட்ட பத்து இலக்கணத்தானே உணர்ந்து உரைக்க என்பது.

இது, இந்நூலுள் எழுத்தோத்தே இலேசே என்னும் இவற்றால் முடியாது நின்றன எல்லாம் இது புறனடையாகத் தந்துரைக்க என்பது உணர்த்துதல் நுதலிற்று.

60. களவு என்றும் கற்பு என்றும் புலவோரால் வகுத்துரைக்கப்பட்ட ஒழுக்கங்கள் இவ் வுலகத்திற் பிறந்தானும் சஞ்சரித்தானும் தலைவன் தலைவி என்னும் இன்னோரது உளத்தின்கண் நிகழ்கின்ற அன்பினது உயர்வின் கண்ணவாம்.

புலவரான், இல்லது இனியது நல்லது என நாட்டப்பட்ட களவு கற்பு ஒழுக்கங்கள் தானே அவள், அவளே தான் என இயன்ற ஈருடலின் ஓருயிர் போல்வார் உளத்தெழு அன்பின் உயர்ச்சி. எனவே, அஃதில்லா விடத்து இவ் வொழுக்கங்கள் நடைபெறா. ஆகவே, அன்பின் விளைவே அகத்திணை யாப்பு என்பது எடுத்துரைக்கப்படுதல் காணலாம்.

4. திருக்கோவையார் துறைவிளக்கம்

திருக்கோவையார் அகப்பொருட் சுவை மிக்க நூல். இதில் வந்துள்ள அகப்பொருள் துறைகளைத் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. ஏனெனின் தொல்காப்பியப் பொருளதிகார அகப் பொருட் சார்பான இயல்களில் துறை வரிசை கூறப்படாது தலைவன் தலைவி முதலியோர் பேச்சு (கிளவி) நிகழும் இடங்களே தொகுக்கப் பட்டுள்ளன. எனவே, அக் கருத்துக்கள் இங்கே வகைப்படுத்தித் தொகுக்கப்பெற்றுள்ளன.

அகப்பொருள் இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், இடந் தலைப்பாடு, மதியுடம்படுத்தல், இருவரும் உள் வழி அவன் வரவு உணர்தல், மூன்றுற உணர்தல், குறையுற உணர்தல், நாண நாட்டம், நடுங்க நாட்டம், மடல் திறம், குறை நயப்புக் கூறல், சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத்தல், உடன்போக்கு, வரைவு முடுக்கம், வரைவு, பொருட் பிரிதல், மணஞ்சிறப்புரைத்தல், ஓதற் பிரிவு, காவல் பிரிவு, பகைதணிவினைப் பிரிவு, வேந்தற்குற்றுழிப் பிரிவு, பொருள் வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு என்ற இருபத்தைந்து பகுதிகள் நானூறு துறைகளாக விரியும். அவை கீழ் வருமாறு :-

1. இயற்கைப் புணர்ச்சி*

1. காட்சி :— தலைவன் தலைவியை ஒரு மொழிலினிடத்து முதலில் காண்தல்.

2. ஐயம் :— அவ்வாறு கண்ட பொருளை யாதென்று ஐயுற்று ஆராய்தல்.

3. தெளிதல் :— அவ்வாறு ஆராய்ந்து கண் இமைத்தலால், அடி நிலத்துத் தோய்தலால், சூடிய மலர் வாடுதலால், தெய்வமல்லள் அது ஒரு பெண் எனத் துணிதல்.

---

* இது தெய்வப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, காமப் புணர்ச்சி எனவும் படும். தலைவனும் தலைவியும் பொழிலிடத்து எதிர்ப்பட்டுத் தெய்வம் இடை நிற்பத் தம்முள் ஒத்த அன்பினராகக் கூடுவது.

4. வியத்தல் :— தெய்வமல்லள் என்று துணிந்த பின் அவளழகை வியத்தல்.

(குறிப்பு—இந் நான்கு துறைகளும் தலைவி கருத்தை அறிவதன் முன் நிகழவே இவை கைக்கிளைத் திணைக்குரியன. இங்குக் குறித்தவை ஆண்பாற் கைக்கிளை. பெண்பாற் கைக்கிளையும் உண்டு. ஆயின் ஆண்பாற் கைக்கிளையே நூல்களுள் காணப் பெறும்.)

5. உட்கோள் :— தலைவி காதலிக்கிருள் என்று குறியறிந்து கூறும் சொற்கள் உட்கோள்.

6. தெய்வத்தை மகிழ்தல் :— தலைவன் விரும்பும் தலைவிக்குத் தன் இடத்துக் காதல் உண்டாகச் செய்த தெய்வத்தை வணங்குதல்.

7. புணர்ச்சி துணிதல் :— தலைவன் தெய்வத்தை வணங்கித் தலைவியைச் சேரக் கருதல். (இச் சேர்க்கை உள்ளத்தால் சேர்தல், மெய் பற்றிச் சேர்தல் என இரண்டு வகைப்படும்.)

8. கலவியுரைத்தல் :— சேர்தல் நிகழ்ந்தபின் அதன் இன்பத்தை அமுதின் சுவை எனக் கூறி மகிழ்தல்.

9. இருவயின் ஒத்தல் :— தலைவனும் தலைவியும் சேர்வதற்கு முன் வேட்கை பற்றியும், சேர்ந்தபின் குணநலன் பற்றியும் இருவர்க்கும் அன்பு ஒத்திருத்தலைக் கூறுவது.

10. கிளவி வேட்டல் :— தலைவி நாணம் மிகுதியால் பேச்சு நிகழ்த்தாதிருந்தாள். இருக்கவே, தலைவியின் இனிய சொல்லைக் கேட்கத் தலைவன் விரும்புவது.

11. நலம் புனைந்துரைத்தல் :— தலைவி கிளவியோ, புன்முறுவலோ நிகழ்த்த, அதன் நலம் பாராட்டுவது.

12. பிரிவுணர்த்தல் :— தலைவனும் தலைவியும் பிறர் அறியக் கூடாத களவொழுக்கம் கைக்கொண்டிருக்கின்றனர். இருக்கவே தலைவன் அது நீடிக்காதவாறு தலைவியைப் பிரியக் கருதிக் குறிப்பால் உணர்த்துதல்.

13. பருவரல் அறிதல் :— தான் தலைவனைப் பிரிய வேண்டுமே என்று தலைவி வருந்த அதனைத் தலைவன் அறிந்து கொள்ளுதல்.

14. அருட்குணம் உரைத்தல் :— தலைவியின் வருத்தத்தை அறிந்து, பிரிவு எப்போதும் நிலைப்பதன்று, சிறிது காலமே (அப் பிரிவு) ஆம்படி இறைவன் திருவருள் கூட்டுவிக்கும் என்று தலைவன் தேறுதல் கூறுவது.

15. இடம் அணித்துக்கூறி வற்புறுத்தல் :— தலைவி ஊருக்குப் பக்கத்தில்தான் தன் ஊர் உள்ளது என்று வற்புறுத்தக் கூறுதல்.

16. ஆயிடத்து உய்த்தல் :— தலைவி தோழி கூட்டத்தில் சேரும் வரை அவளுக்குக் காவலாகச் சென்று ஆயத்தோடு சேர்த்தல்.

17. அருமை அறிதல் :— தலைவி ஆயத்தோடு சேர்ந்தபின் அவளை மீண்டுங் காண இயலுமோ என்று தலைவன் எண்ணுவது.

18. பாங்கியை அறிதல் :— தலைவிக்கு மிகவும் நெருங்கிய நட்புடைய பாங்கியை அவள் இத்தகையள் என்று தலைவன் அறிதல்.

2. பாங்கற் கூட்டம்*

19. பாங்கனை நினைதல் :— தலைவன் தலைவியைப் பிரிந்தான். பிரிந்தபின், அவளை மீட்டும் அடையக் கருதுகிறான். அவ்வாறு அடைவது பாங்கனால்தான் இயல்வது என்று அவனை நினைப்பது.

20. பாங்கன் வினாதல் :— தலைவியைப் பிரிந்துவந்த தலைவனைப் பாங்கன் காண்கிறான். அவன் தலைவன் மெலிவையும் காண்கிறான். கண்டு அதற்குக் காரணம் யாது என்று தலைவனை வினாவுவது.

21. உற்றது உரைத்தல் :— பாங்கன் வினவியதற்கு விடையாகத் தலைவன் தான் தலைவியைக் கண்ட செய்தியை உரைத்தல்.

22. கழறி உரைத்தல் :— தலைவன் கூறியது கேட்டு பாங்கன் தலைவனை நோக்கி, "இச் செயல் நின் தலைமைக்குத் தகுதி வாய்ந்தது அன்று" என்று கூறுதல்.

23. கழற்றெதிர் மறுத்தல் :— பாங்கன் கூறியது கேட்டு அதனை மறுத்துரைப்பான் தொடங்கித் தலைவன், "என்னால் காணப்பெற்ற அவ்வடிவத்தை நீ காணின் இவ்வாறு கூறமாட்டாய்" என்று எதிர் மறுத்துரைப்பது.

24. கவன்றுரைத்தல் :— தலைவன் தலைவியின் இயல்பைக் கூறக் கேட்ட பாங்கன் உண்மை உணர்ந்து தலைவன் வருத்தத்திற்கு அது காரணமாயிற்றே என்று வருந்திக் கூறுவது.

25. வலியழிவு உரைத்தல் :— பாங்கன் வருந்த உரைத்தது கேட்ட தலைவன் தன் மன வலிமைக் குறைவை உரைப்பது.

26. விதியொடு வெறுத்தல் :— தலைவன் தன் குறையைப் பாங்கனுக் குரைத்தும் அவன்தன் (தலைவனது) வருத்தத்தை நீக்க முயலாதது கண்டு தன் விதியை வெறுத்துக் கூறுவது.

27. பாங்கன் நொந்து உரைத்தல் :— தலைவன் விதியை வெறுத்துக் கூறிய மொழிகளைக் கேட்ட பாங்கன், தலைவன் தீரா நோயினைக் கண்டு வருந்திக் கூறுவது.

---

* பாங்கற் கூட்டம் என்பது பாங்கனால் கூடும் கூட்டம். தெய்வப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தன் பாங்கனைக் கொண்டு தலைவியை அடைவது முறைமை என்று கொள்வது.

28. இயலிடம் கேட்டல்:— பாங்கன் அங்கனம் வருந்திக் கூறியபின், தலைவனுக்கு ஆறுதல் விளையும் பொருட்டுத் தலைவியின் இயல்பு, இடம் ஆகியவற்றைக் கேட்டல்.

29. இயலிடம் கூறல்:— பாங்கன் கேட்டதற்கு விடையாகத் தலைவன் பாங்கனுக்குத் தலைவியின் இயல்பு இடம் முதலியவற்றைக் கூறுதல்.

30. வற்புறுத்தல்:— தலைவியின் இயலிடத்தைத் தலைவனிடம் கேட்டுக் கொண்ட பாங்கன் தலைவனை நோக்கி, "யான் சென்று பார்த்து வருகிறேன். யான் மீண்டும் வரும் வரையில் நீ ஆறுதலுற்று இருக்க வேண்டும்" என்று வற்புறுத்துக் கூறுவது.

31. குறிவழிச் சேறல்:—தலைவன் குறிப்பிட்டுக் கூறிய இடத்திற்குப் பாங்கன் செல்கிறான். அங்கனம் செல்லுங்கால் தலைவியை அங்குக் காண இயல்வதோ அன்றோ என்று எண்ணிக் கூறுதல்.

32. குறிவழிக் காண்டல்:— பாங்கன் தலைவி இருக்கும் இடத்தை அடைந்து, அவளைக் கண்டு, தன் தலைவனால் காணப்பெற்றவள் இவளே என்று தெளிவது.

33. தலைவனை வியந்துரைத்தல்:— பாங்கன் தலைவன் கண்ட தலைவியைப் பார்த்தபின், இவளைக் கண்டும் மீண்டனனே என்று எண்ணி அவன் மனவலிமையை வியந்து கூறுவது.

34. கண்டமை கூறல்:—பாங்கன் தலைவியைக் கண்டு, மீண்டு தலைவனைச் சேர்ந்து, தான் தலைவியைக் கண்டமை கூறுதல்.

35. செவ்வி செப்பல்:— தலைவனிடம் பாங்கன் தலைவியின் அழகினைக் கூறுதல்.

36. அவ்விடத்திற்கேகல்:— பாங்கன் சொல்லியது கேட்டுத் தலைவன் தலைவியிடம் செல்லுதல்.

37. மின்னிடை மெலிதல்:— தலைவன் பிரிந்து சென்றபின், தலைவி தன் தலைவன் வருவானோ என்று கவன்று மெலிதலைக் கூறுவது.

38. பொழில் கண்டு மகிழ்தல்:— தலைவியைத் தான் கண்ட பொழிலைக் கண்டு தலைவன் மகிழ்தல்.

39. உயிரென வியத்தல்:— தலைவியைக் கண்ட தலைவன், தன் உயிர் அதுவென வியந்து கூறுவது.

40. தளர்வு அகன்று உரைத்தல்:— தலைவி பொழிலிடத்தே தனித்து நிற்றலைக் கண்ட தலைவன் மனத் தளர்வு நீங்குதல்.

41. மொழிபெற வருந்துதல்:— தளர்வு நீங்கிய தலைவன், தலைவியின் சொல்லைப் பெற வருந்துதல்.

42. நாணிக்கண் புதைத்தல்:—தலைவி, தலைவன் தன்னை வியப்பது கேட்டு நாணித் திரும்பித் தன் கண்களைக் கையால் மூடிக் கொள்ளுதல்.

43. கண்புதைக்க வருந்துதல்:—தலைவி நாணியது கண்டு தலைவன் வருந்தியுரைத்தல்.

44. நாண்விட வருந்துதல்:—தலைவி தன் நாண் மிகுதி பற்றி வருந்துதல்.

45. மருங்கணைதல் :—தலைவன் தலைவி பக்கம் சேர்தல்.

46. இன்றியமையாமை கூறல்:—தனக்குத் தலைவி இன்றி அமையா திருத்தலைத் தலைவன் கூறுதல்.

47. ஆயத்துய்த்தல் :—தலைவியை அவள் தோழி கூட்டத்தில் தலைவன் சேர்த்தல்.

48. நின்று வருந்தல்:—தலைவி சென்றபின் தலைவன் அவள் பிரிவுக்கு நின்று வருந்துதல்.

(குறிப்பு: இத் துறைகளனைத்தும் இவற்றின் விரிவும் பாங்கற் கூட்டப் பகுதிகளாகும்.)

3. இடந்தலைப்பாடு*

49. பொழிலிடைச் சேறல்:—தலைவன் தானே இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவியைக் கண்டு சேர்தல் (இது பாங்கன் அறியக் கூடுதலின்றி நிகழ்வது)

பாங்கற் கூட்டம் அல்லது இடந்தலைப்பாடு கோவைகளுள் காணப் பெறும்.

4. மதியுடம்படுதல்[1]

தலைவியைக் கண்டு சேர்ந்த[2] தலைவன் விரைவில் திருமணம் செய்து கொள்ளத் தக்கவன். அங்ஙனமின்றிக் களவொழுக்கத்தை நீட்டிக்க விரும்புவான். விரும்பித் தலைவியின் பாங்கிக்குத் தன் கருத்தைத் தெரி

*முன்னாள் கூடின இடத்திலே வந்து தலைவியை எதிர்ப்படுதல். அங்ஙனம் வருந்தி நின்ற தலைவன், "இப் புணர்ச்சி என் முயற்சியால் வந்ததன்று, தெய்வம் தர வந்தது, இன்னும் அத் தெய்வம் தானே தரும், யான் அப் பொழிலிடைச் செல்வேன் என்பது.

1 மதி உடம்படுதல் என்பது தலைவிமீது தான் கொண்ட காதலைத் தலைவன் தோழிக்கு உணர்த்தி அவளது அறிவை ஒருவழிப்படுத்துவது. தலைவன் தலைவி இவ்விருவர் ஒற்றுமையால் அவர்தம்முள் கூட்டம் உண்மையைத் தோழி உணர்த்துவது.

2 தலைவியைக் கண்டு சேர்தல் இயற்கைப் புணர்ச்சியிலும், பாங்கற் கூட்டத்திலும், இடந்தலைப்பாட்டிலும் நிகழும்.

விப்பான். தெரிவித்து அவளது கருத்துத் தன் செய்கைக்கு உடன் படுமாறு செய்தல் இப் பகுதியைச் சேரும்.

50. பாங்கியிடைச் சேறல்:—தலைவன் பாங்கியிடம் செல்ல விரும்புதல்.

51. குறையுறத் துணிதல் :—தலைவன் பாங்கியிடம் செல்லும் சாலத்துத் தலைவியும் பாங்கியும் ஒருங்கு நிற்பதைக் காண்பான். கண்டு தோழிக்கு (பாங்கிக்கு)த் தன் கருத்தைக் குறிப்பாகத் தெரிவிக்க நினைப்பது.

52. வேழம் வினுதல்:—குறையுறுந் தலைவன் தலைவியும் தோழியும் ஒருங்கிருப்பதைப் பார்த்து, அவ் இருவரையும், "இங்கு ஒரு மதயானை வரக் கண்டீர்களோ?" என்று வினவுதல்.

53. கலைமான் வினுதல்:—வேழம் வினுதலே அன்றி, "மான் வரக் கண்டீர்களோ?" என்று வினவுதல்.

54. வழி வினுதல் :—"நும் ஊருக்கு வழி யாது?" என வினவுதல் இத் துறையாகும்.

65. பதி வினுதல் :—"நும் ஊர் யாது?" என்று கேட்பது.

55. பெயர் வினுதல்:—"நும் பெயர் யாது?" என்று கேட்பது

57. மொழிபெறுது வருந்தல்:—தலைவியும் தோழியும் ஆகிய இருவரும் யாதும் விடையளியாது நிற்றல் கண்டு வருந்துதல்.

58. கருத்தறிவித்தல்:—தலைவி தோழி ஆகிய இருவர்கட்குத் தழை ஆடை அளிப்பது கருத்தறிவித்தலின் பாற்படும்.

59. இடை வினுதல்:—நும் சிறிய இடை கண்ணுக்குத் தெரிய வில்லை என்று தலைவன் கூறுவது.

5. இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல்[1]

60. ஐயுறுதல் :- தலைவியும் தோழியும் இருக்குமிடத்துத் தலைவன் வந்துரைத்த மாற்றங்களைப் பாங்கி நினைத்து இவன் தலைவியைக் காதலிக்கிருன் போலும் என்று ஐயுறுதல்

61. அறிவு நாடல் :- தலைவன் கருத்து இத்தகையது என்று துணிதல்.

(குறிப்பு: இவ் இரண்டு துறைகளும் தலைவியும் பாங்கியுமாகிய இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் என்ற பகுதியின் பாற்படும்.)

---

1 இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் என்பது தலைமகளும் தலைவியும் உள்வழிச் சென்று, தலைமகன் கரந்த மொழியால் தன் கருத்தினை அறிவிக்கத் தோழி அவன் நினைவு இன்னது என்று அறிந்து நிற்பது.

6. முன்னுற உணர்தல்

62. வாட்டம் வினுதல் :—தலைவன் தன் வாட்டம் உரைப்பத் தலைவி வாடுதலைத் தோழி கண்டு, இருவருக்கும் களவு ஒழுக்கம் நேர்ந் திருக்கக் கூடும் என்று எண்ணித், ''தலைவியின் வாட்டத்திற்குக் காரணம் யாது?'' என வினவுதல்.

(குறிப்பு: தலைவன் வரவு இன்றியே தலைவியின் வாட்டத்தைத் தோழி குறித்தறிந்து (முன் தலைவனைப் பாங்கன் கேட்பது போன்று) வினவுதலும் முன்னுற உணர்தல் என்னும் இப் பகுதியைச் சாரும்.)

7. குறையுற உணர்தல்[1]

63. குறையுற்று நிற்றல்:— தலைவியின் வாட்டத்தைக் குறிப்பால் உணர்ந்த தோழியிடம் சென்று, ''நுமக்கு ஏதேனும் செய்ய வேண்டு வது உண்டேல், யான் அதனை விரைந்து முடித்து வைப்பேன்'' என்று தலைவன் கூறுவது.

64. அவன் குறிப்பறிதல்:— தலைவன் குறையுற்று நிற்கவே, இவன் பால் தலைவிக்குக் காதல் உண்டு என்று பாங்கி அறிந்து கொள்ளுதல்.

65. அவள் குறிப்பறிதல் :— தோழி தலைவியின் குறிப்பறிதல்.

66. இருவர் நினைவும் ஒரு வழி உணர்தல் :— தலைவனுக்குக் காத லுண்டாகி இருக்க வேண்டும் என்றும் அவ்வாறே தலைவிக்கும் காத லுண்டு என்றும் பாங்கி குறிப்பறிதல் இத் துறையாகும்.

8. நாண நாட்டம்[2]

தலைவனும் தலைவியும் காதல் கொள்ளுவதைத் தெரிந்து கொண்ட பாங்கி இருவருக்கும் சேர்க்கை ஏற்பட்டுள்ளதை அறிதற்குத் தலைவி யிடம் கூறுவன. தலைவி தனது களவொழுக்கத்தை அறிவதில் பாங்கிக் குள்ள விருப்பத்தைத் தெரிந்து கொண்டதால் ஆகிய நிலை நாணம்.

67. பிறை தொழு கென்றல்:—பாங்கி தலைவியைப் பிறை தொழும் படி கூற, அவள் பிறை தொழாது நாணித் தலை சாய்த்து நிற்பது கண்டு, அவள் நாணத்திற்குக் காரணத்தை நாடுமுகத்தால் பாங்கி உண்மை உணர்வாள். இது பிறை தொழுக என்றல். இது நாண நாட்டத்தின் ஒரு துறையாம்.

68. வேறுபடுத்துக் கூறல் :— பாங்கி தலைவியைச் சுனை ஆடும்படி வேண்ட, அவள் தலைவனொடு சென்று மீண்டது நோக்கி, அவளை வரை யுறை தெய்வத்திற்கு ஒப்பிட்டு வேறுபடுத்துக் கூறுதல்.

---

1 முன்னர்த் தலைமகனது வாட்டத்தைப் பாங்கன் வினவியவாறு தலைமகளது வாட்டத்தை எதனுல் இவள் வாடியது எனத் தோழி வினவி உணர்வது.

2 இருவர் நினைவும் ஐயமறத் துணிந்த தோழி அவர்களுடைய கூட்டம் உண்மை அறிவது வாயிலாகத் தலைமகள் நாண நாடாநிற்றல். இது நன்னிலை நாணம் எனவும் படும்.

69. சுனையாடல் கூறி நகைத்தல் :—தலைவி சுனையாடவில்லை என்று தைப் பாங்கி அவளுக்குக் குறிப்பால் உணர்த்துவது.

70. புணர்ச்சியுரைத்தல் :—தலைவியின் சேர்க்கையை அறிந்தமை பாங்கி குறிப்பித்தல்.

71. மதியுடம்படுதல் :—தலைவன் தலைவி இருவர்க்கும் இயல்பு ஒன்றென்று பாங்கி தெரிந்து கொள்வது.

9. நடுங்க நாட்டம்

72. நடுங்க நாட்டம் :—தலைவியின் களவொழுக்கம் அறிதற் பொருட்டு அவள் நடுங்கி அஞ்சும்படி பாங்கி சில கூறுதல் நடுங்க நாட்டம் என்னும் பகுதி.

10. மடற்றிறம்*

73. ஆற்றுதுரைத்தல் :— தலைவியும் பாங்கியுமாகிய இருவரும் உள்ள வழி, "நீவிர் அன்பு காட்டாதுவிடின் என் உயிர் போகும்" என்று அவர்கட்குக் கூறுதல்.

74. உலகின்மேல் வைத்துரைத்தல் :—ஆடவராகிய தம் உள்ளம் என்னும் மீன் மகளிர் கண் என்னும் வலையகப்பட்டால் அதனை மீட்டற்கு மடலூர்தலும் செய்வர் என்பது.

75. தன் துணிவு உரைத்தல் :— தலைவன் மடல் ஊர்தலுக்குள்ள தன் துணிபினை வெளியிடுதல்.

76. மடலேறும் வகை உரைத்தல் :—தலைவன், தலைவியின் படத்தை எழுதி மடலேறும் வகையினைச் சொல்லல்.

77. அருளால் அரிதென விலக்கல் :— மடலேறுந் துணிபினைக் கேட்ட பாங்கி, தலைவனை நோக்கி, "மடலேறுதல் அருளுக்குப் பகை" என்பது.

78. மொழி நடை எழுதல் அரிதென விலக்கல் :—தலைவியின் உருவத்தினை எழுதினும், அவள் மொழியினையும் நடையினையும் எழுதுதல் அரிதென விலக்குதல்.

79. அவயமெழுதல் அரிதென விலக்கல் :—தலையின் உறுப்புகள் ஓவியத்து எழுத இயலாத அருமையுடையது என அவன் கருத்தை மறுத்துப் பேசுதல்.

---

* மதியுடம்பட்ட பாங்கி தன் பெரு நாணத்தான் தலைவனுக்குத் துணை புரியாது காலந்தாழ்தலாதல், குறை மறுத்தல் செய்த வழியாதல், தலைவன் தன் கருத்தை முற்றுவிப்பேன் என்பதும் பிறவும் மடல்திறம் என்னும் பகுதியாகும்.

80. உடம்படாது விலக்கல்:—தலைவன் வருத்தத்தை அறிந்து, 'யான் தலைவியைக் கேட்டு நினக்கு விடை சொல்லுவேன், அதுவரை மடல் ஏறுதே' என்று உடம்பட்டு அவனை அத் தொழிலினின்றும் விலக்குவது.

81. உடம்பட்டு விலக்கல்:—தலைவன் குறையை முடித்தல் கூடும். அதனுல் மடலேற வேண்டாம் என்று பாங்கி உடம்பட்டு விலக்கல்.

11. குறை நயப்புக் கூறல்[1]

82. குறிப்பறிதல்:—தலைவியின் கருத்தை அறிய இயலாத பாங்கி தலைவியின் குறிப்பினை அறிவது.

83. மென் மொழியால் கூறல்:—தலைவன் ஒருவன் வந்து போதலைத் தலைவிக்கு மென்மொழியால் பாங்கி கூறுவது

84. விரவிக் கூறல்:—தலைவன் நிலைதான் ஆற்றுெணுதது என்று பாங்கி குறிப்பாகத் தலைவியிடத்துக் கூறுவது.

85. அறியாள் போறல்:—பாங்கி தலைவியை நோக்கி, "நீ அவன் வடிவினைப் பார்த்து அவன் நிலையை எண்ணிப் பார்த்தல் நன்று" என்று கூறித் தான் அறியாள்போல் நிற்றல்.

86. வஞ்சித் துரைத்தல்:— பாங்கி தலைவிக்கு உவமையினுல் தலைவன் இயல்பினை மறைத்துக் கூறுவது.

87. புலந்து கூறல்:—தோழி பாங்கியை நோக்கி, "யான் கூறியது ஒவ்வாது எனின் நீ இதனைப் பிறரிடம் உரையாதே" எனப் புலந்து கூறுவது.

88. வன்மொழியால் கூறல்:— பாங்கி, தலைவியை நோக்கித் "தலைவன் மடலேறத் துணிந்தான், நீ உனக்குத் தோன்றியது கூறு" எனக் கூறுவது.

(குறிப்பு: இவையனைத்தும் பாங்கிக் கூற்றாக நிகழ்வன.)

89. மனத்தொடு நேர்தல்: தலைவன் மடலேறுவதற் காற்றுத தலைவி தன் நெஞ்சொடு தன் நீர்மையைச் சொல்ல விடுத்தல்.

12. சேட்படை[2]

90. தழை கொண்டு சேறல்: பாங்கியிடம் தருதற்குச் சந்தனத் தழையாலாகிய ஆடை கொண்டு செல்லுதல்.

---

1 தலைவன் மடலேறி அழியாமைப் பொருட்டுப் பாங்கி தலைவியிடம் அவன் கருத்தினை அறிவித்து இணங்குவிப்பது.

2 தலைவன் தலைவியைக் களவில் சேர்தல் அரிது. ஆகவே அவளை மணந்து கொள்ளலே நலனெனப் பாங்கி உணர்கிருள். உணர்ந்து தலைவனைப் பல வகையால் களவொழுக்கிலிருந்து விலக்குதல் சேட்படை என்பது. இது மடல் திறத்திற்கு முன் நிகழ்தலும் கூடுவது.

91. சந்தனத் தழை தகாதென்று மறுத்தல்:— தழை தருவது புதிய ஒன்று. ஆகவே தலைவியின் உறவினர்க்கு ஐயப்பாடு நிகழ்வது கூடும்; எனவே அது தகாதென மறுத்துக் கூறுவது.

92. நிலத்து இன்மை கூறி மறுத்தல்:—சந்தனத் தழையின்றி வேறு தழை கொண்டு செல்ல, "இது எங்கள் நிலத்தில் இல்லாதது. உறவினர் ஐயுறுவர்" என்று கூறி மறுப்பது.

93. நினைவறிவு கூறி மறுத்தல்:—தலைவியின் நிலத்துத் தழையினைக் கொண்டு தலைவன் பாங்கியிடம் செல்ல, அவள், "தலைவியின் கருத்தை யறியாது இதனை யான் பெறேன்" என்று மறுத்துக் கூறுவது.

94. படைத்து மொழியான் மறுத்தல்:— இத் தழை புதுமை பயப்பதாகும். ஆகவே இது வேண்டா என மறுத்தல்.

95. *இசையாமை கூறி மறுத்தல்:— தலைவன் தலைவிக்கென கண்ணி கொண்டு பாங்கியிடம் செல்கிறான். அவள், "முன்னுள்ள கண்ணிக்கு மேல் இக் கண்ணியை அணிந்தால், அது ஐயுறுதற்குக் காரணமாகும் என்று கூறி மறுத்தல்.

96. நாணுரைத்து மறுத்தல் :— தலைவி நீ கொண்டு வந்த கண்ணியைச் சூட நாணுவள் என்று கூறி மறுப்பது.

97. செவ்வி இலள் என்று மறுத்தல்:—தலைவிக்கு நேரமில்லை என்று கூறி பாங்கி மறுத்தல்.

98. காப்புடைத்து என்று மறுத்தல்:— என் தலைவிக்குப் பெற்றோரால் காப்பு மிகுதியாக இருக்கிறது என்று கூறி மறுத்தல்.

99. நீயே கூறு என்று மறுத்தல்:— "யான் ஒரு குற்றவேல் மகளே ஆதலின் நீயே தலைவியிடம் கூறு" என்று மறுத்தல்.

100. குல முறை கூறி மறுத்தல்:—"நீ பெரியோய், யாம் சிறியேம், எனவே நீ எம்மிடம் சொல்லாடுதல் தகாது" என்று கூறி மறுப்பது.

101. நகையாடி மறுத்தல்:—"நீ எம்மவரோடு பொருது வெல்" என்று கூறி நகைத்து மறுத்தல்.

102. இரக்கத்தோடு மறுத்தல்:—"தலைவ! நின் பெருமைக்கு இஃது ஏற்றதன்று" என்று கூறி மறுத்தல்.

103. சிறப்பின்மை கூறி மறுத்தல்:—தலைவியிடத்து இன்மைபற்றிக் கூறி மறுப்பது.

104. இளமை கூறி மறுத்தல்:—"தலைவி இளமையள், எனவே இது கருதற்க" என்று மறுத்துக் கூறுவது.

---

* 95-ம் 96-ம் மாற்றி முன்பின்னுக்க் கூறுவாரும் உளர்.

105. மறைத்தமை கூறி நகைத்துரைத்தல்:— பலவாகக் கூறி மறுத்த (மறுக்கும்) பாங்கியை விட்டு வேறு வழியாகத் தலைவன் தலைவியை நாடக் கருதியதைத் தெரிவிப்ப, வேறு வழியில் அடையக் கூடாமை கூறி மறுத்தல்.

106. நகை கண்டு மகிழ்தல்:— பாங்கி இணங்கினள் என்று நினைத்து மகிழ, அவள் அவன் நகை கண்டு மகிழ்தல் என்பது.

107. அறியாள் போன்று நினைவு கேட்டல்:— "தோழியர் பலருள் யாரை நீ பெறக் கருதுகின்றனை" என்று பாங்கி தலைவனைப் பார்த்து அறியாள் போல் நின்று கேட்பது.

108. அவயவம் கூறல்:— அவ்வாறு கேட்டபாங்கிக்குத் தலைவன் தலைவியின் அவயவம் கூறுவது.

109. கண் நயந்துரைத்தல்:—அன்றியும் தலைவியின் கண்ணினை நயந்து கூறுவது.

110. தழை எதிர்தல்:— தலைவன் அளித்த தழையினை ஏற்றுக் கொள்வது.

111. குறிப்பறிதல்:— தழை ஏற்றுக் கொண்ட தோழி குறிப் பறிதல்.

112. குறிப்பறிந்து கூறல்:— தலைவியின் குறிப்பைப் பாங்கி குறிப் பறிந்து கூறுவது.

113. வருத்துரைத்தல்:— தழை ஏற்றல் தகுதியன்று எனினும் வற்புறுத்து ஏற்றல் வேண்டும் என்று கூறுவது.

114. தழையேற்பித்தல்:— தலைவியின் இணக்கத்தினை அறிந்து தழையினை ஏற்றுக் கொள்ளச் செய்தல்.

115. தழை விருப்புரைத்தல்:— தலைவி தழையினை ஏற்றுக் கொண் டாள் என்று தலைவனுக்கு உரைப்பது.

13. பகற்குறி*

116. குறியிடம் கூறல்:— தழை ஏற்ற தலைவியைத் தலைவன் காண வேண்டின், பகலில் இவ்விடத்திற்கு வருக என்று பாங்கி தலைவனுக்குக் கூறுவது.

117 ஆடிடம் படர்தல்:— தலைவியை விளையாடும் இடத்திற்கு அழைத்துக் கொண்டு செல்லுதல்.

---

* தலைமகளைத் தழை ஏற்பித்த தோழி தளைமகனுடன் அவளைப் பகற்குறிக் கண் சேர்ப்பித்தல்.

118. குறியிடத்துக் கொண்டு சேறல்:— ஆடிடத்திற்குச் சென்றதன் பின் குறி இடத்திற்குக் கொண்டு சேர்தல் நிகழும்.

119. இடத்துய்த்து நீங்கல்:— தோழி குறியிடத்துத் தலைவியை விட்டு நீங்குவது.

120. உவந்துரைத்தல்:— தலைவன் குறியிடத்துத் தலைவியைக் கண்டு உவப்பெய்திக் கூறுவது.

121. மருங்கணைதல்:— தலைவன் உவந்து கூறுவதைக் கேட்ட தலைவி நாணி ஒரு மருங்கு ஒதுங்கி நிற்பாள். அவ்வாறு நின்றுளைத் தலைவன் தன் மார்புறத் தாங்கி மருங்கணைதல் என்பது.

122. பாங்கி அறிவுரைத்தல்:— தலைவன் பாங்கியை அறிந்தமை தலைவிக்குக் கூறுவது.

123. உள் மகிழ்ந்து உரைத்தல்:— தலைவியின் இணக்கமறிந்து தலைவன் உளம் மகிழ்ந்து கூறுவது.

124. ஆயத்துய்த்தல்:— மருங்கணைந்து உளம் மகிழ்ந்த தலைவன் தலைவியை ஆயத்துக் கொண்டு விடுதல்.

125. தோழி வந்து கூடல்:— ஆயத்துத் திரும்பி வந்த தலைவியைத் தோழி வந்து சேர்தல்.

126. ஆடிடம் புகுதல்:— தோழி தான் பறித்துவந்த மலரைத் தலைவியின் கூந்தலில் சூடி, வருந்தாமல் மெல்லச் செல்க என்று அவளை யுடன் கொண்டு தோழிமார் விளையாடிடத்திற்குச் சென்று சேர்தல்

127. தனி கண்டு உரைத்தல்:— தோழி தலைமகளை ஆயத்தாருடன் சேர்ப்பித்தபின், தலைவனைக் கண்டு அருந்துவன கொடுத்துப் பொருந்து வனவற்றைக் கூறுவது.

128. பருவங் கூறி வரவு விலக்கல்:— தலைவன் வரைவை விரும்பித் தலைவியின் பருவங் கூறி அவன் வரவை விலக்குதல்.

129. வரைவு உடன்படாது மிகுத்துக் கூறல்:— வரைவு வரையினும் களவு நிகழ்த்தக் கருதும் தலைவன் கூறுவது.

130. உண்மை கூறி வரைவு கடாதல்:— பாங்கி தலைவனுக்கு வரைவு இன்றியமையாமையைக் குறிப்பால் உரைப்பது.

131. வருத்தங் கூறி வரைவு கடாதல்:— தலைவியின் வருத்தத்தைத் தோழி தலைவனுக்குக் கூறி வரைந்துகொள்ள வேண்டுதல்.

132. தாயச்சங் கூறி வரைவு கடாதல்:— தலைவனுக்குத் தோழி, தாயின் காப்பினைக் கூறித் தலைவியை வரைந்து கொள்ள வேண்டுதல்,

133. இல் செறிவித்தமை கூறி வரைவு கடாதல்:— தலைவியை வெளியே செல்ல விடாது பெற்றோர் அவளை இல் செறிவித்தமையைத் தலைவனுக்குக் கூறி, தோழி அவனை வரைந்து கொள்ள வேண்டுவது.

134. தமர் நினைவு கூறி வரைவு கடாதல்:— தலைவியின் தமர் காப் புமைப்பர் என்று அறிவித்து வரைவு வேண்டுவது.

135. எதிர்கோள் கூறி வரைவு கடாதல்:— தலைவன் தலைவியை வரைந்து கொள்ளுதலை அவள் (தலைவி) பெற்றோர் விரும்புவர் என்று கூறி வரைவு வேண்டுவது.

136. ஏறு கோள் கூறி வரைவு கடாதல்:— தலைவியின் பெற்றோர் தலைவியை ஏறு தழுவுவார்க்குக் கொடுக்க எண்ணுவதைக் கூறுவது.

137. அயலுரை உரைத்து வரைவு கடாதல்:— தலைவியைப் பிறர் மணம் பேசுவது கூடும் என்று தோழி தலைவனுக்குக் கூறி வரைவு வேண்டுவது.

138. தினைமுதிர்வு கூறி வரைவு கடாதல்:— தலைவி தினைப்புனம் காத்தல் இனி வேண்டுவதின்று என்று கூறி வரைவு வேண்டுவது.

139. பகல் வரவு விலக்கி வரைவு கடாதல்:— தலைவன் பகலில் வந்தால் பழியாகும் என்று கூறி வரைவு வேண்டுதல்.

140. தினையொடு வெறுத்து வரைவு கடாதல்:— தினையறுப்பு முடிந்த பின்னர் இனி இங்கு வாராள். வரைவு முடித்துக்கொள் என்று வேண்டுவது.

141. வேங்கையொடு வெறுத்து வரைவு கடாதல் — தினையொடு வெறுத்து வரைவு கடாய தோழி, "கயிலை மயில் அனையவளே, இவ் வேங்கை அரும்பிய ஞான்றே அரும்பறக் கொய்தோம். ஆயின், இன்று நம்மைக் கெடுப்பான் வேண்டி இந்தக் கனி (வேங்கை) இத் தினை கெட முயலுமாறும் உண்டோ? யாம் அது செய்யப் பெற்றிலேம்" என்று வேங்கையொடு வெறுத்து, அவ் வேங்கையை இழித்துக் கூறித் தோழி வரைவு கடாவி நிற்பது.

142. இரக்கமுற்று வரைவு கடாதல்:— தலைவி தினைப்புனங் காவலை விடுத்துச் செல்லவிருப்பதால், தலைவன் வந்து இனிக் காணுமாறு எங்ஙனே என அவனுக்கு இரங்கிக் கூறுவாளாய்ச் சிறைப்புறமாக வரைவு முடிக்க வேண்டுவது.

143. தினை கொய்தமை கூறி வரைவு கடாதல்:—தினையறுப்பு முடிந்த தாகலின் தலைவி இனி இங்கு வாராள். வரைவு முடித்துக்கொள் என்று கூறுவது.

144. பிரிவு அருமை கூறி வரைவு கடாதல்:— தலைவி வீட்டை விட்டுப் பிரிவு அருமையினைக் கூறுவது.

145. மயிலொடு கூறி வரைவு கடாதல்:— மயிலை விளித்து வரைவு வேண்டுவது.

146. வரும் புனம் கண்டு வருந்தல்:— இங்ஙனம் வரைவு கடாதல் நிகழத் தினைப்புனம் வெறும் புனமாயிருப்பது கண்டு தலைவன் வருந்துவது.

147. பதி நோக்கி வருந்தல்:— தலைவியின் இருப்பிடம் செல்ல முடியாமையை எண்ணித் தலைவன் வருந்துவது.

(குறிப்பு:- மேற்கூறிய அனைத்தும் பகற்குறிக்கான துறைகள் என்ப.

14. இரவுக் குறி*

148. இரவுக்குறி வேண்டல்:— தலைவன் தோழியிடம் சென்று,'' இன்று இரவு உங்கள் ஊருக்கு என்னை விருந்தாக ஏற்றுக்கொள்வாயாக'' என்று இரவுக்குறியில் தலைவியைக் கூடும் தன் விருப்பினைத் தெரிவிப்பது.

149. வழியருமை கூறி மறுத்தல்:— இரவு ஆகலின் தலைவன் வரும் வழியின் அருமைப்பாட்டினைத் தோழி கூறுவது.

150. நெஞ்சுடைந்து நிற்றல்:— வழியருமை கூறித் தோழி மறுத்தலால்தலைவன் நெஞ்சுடைந்து நிற்பதைக் கூறுவது.

151. இரவுக்குறி நேர்தல்:— தலைவன் நெஞ்சுடைந்து நிற்றலைக் கண்ட தோழி, இடம் அமைக்க இணங்கி, எதிர்மறைச் சொல்லால் இரவுக் குறி நேர்வது.

152. உட்கோள் வினாதல்:— தோழி இரவுக்குறி நேர்ந்தபின் தலைவன் தோழியை நோக்கி, ''யான் எவ் வேடங்கொண்டு வர வேண்டும்'' என்று பாங்கியை வினவுதல்.

153. உட்கொண்டு வினாதல்:— தலைவியின் ஊரினர்போல் வேடம் பூண்ட தலைவன் அவ்வூரினர்க்குரிய மலர் சாந்து முதலியவற்றைத் தோழியிடம் வினவுதல்.

154. குறியிடம் கூறல்:— தோழி தலைவனுக்குத் தலைவியைக் காணும் இடத்தைக் குறிப்பிட்டுக் கூறுவது.

155. இரவுக் குறியேற்பித்தல்:— தலைவன் ஆற்றானென இரவுக் குறியை ஏற்றுக் கொள்ளுமாறு தலைவிக்குத் தோழி சொல்லுதல்.

156. இரவு வரவுரைத்தல்:— தலைவிக்குத் தோழி தலைவனின் வரவினை கூறுவது.

---

* பகற்குறி புணர்ந்து விலக்கப்பட்ட தலைவன் பின்னையும் தோழியைத் தலைப்பட்டு இரவுக்குறி வேண்டிச் சென்று எய்துதல் முறைமை.

157. ஏதங்கூறி மறுத்தல்:— தலைவன் வரும் வழியின் அருமை கூறித் தலைவனுக்குத் தீங்கு நேரும் என்று தலைவி மறுத்துக் கூறுவது.

158. குறை நேர்தல்:— மறுத்த தலைவி தலைவனது ஆற்றாமை யாகிய நிலையைக் கேட்டு, "மலையிலுள்ள சுனைப் புனலில் நான் விழுந்து அழுங்க, என்னைப் பிடித்து எடுத்துக் கரையிற் சேர்த்த பெரியோனுக்குச் சிறியேனாகிய நான் சொல்வது அறியேன்" என்று தோழியிடம் கூறி இரவுக் குறிக்கு உடம்படுவது.

159. குறை நேர்ந்தமை கூறல்:— தலைவனுக்குத் தோழி குறை நேர்ந்தமை கூறுவது (தலைவனிடம் தலைவியின் உடம்பாட்டைத் தெரிவிப்பது.)

160. வரவுணர்ந்துரைத்தல்:— தலைவிக்குத் தோழி தலைவன் வரவினை உணர்ந்து கூறுவது.

161. தாய் துயில் அறிதல்:— தலைவி இரவுக்குறி சேர்வதற்கு எண்ணித் தோழி தாய் துயிலுறுகின்றனளா என்று அறிந்து கொள்ளுதல்.

162. துயிலெடுத்துச் சேறல்:— தோழி தாயின் துயிலை அறிந்து தலைவியிடம் சொல்லி, அவளைக் குறியிடத்துக்கு அழைத்துச் செல்வது.

163. இடத்துய்த்து நீக்கல்:— தோழி தலைவியை இரவுக்குறியிடத்து விடுத்து விலகியிருத்தல்.

164. தளர்வகன்றுரைத்தல்:— தலைவியைக் குறியிடத்து நிறுத்தித் தோழி நீங்க, தலைவன் எதிர்ப்பட்டுத் "தனியே இந்த அரையாமத்தில் நாம் இருவரும் வந்து தங்க நீ விரும்பியது என்னோ?" என்று தலைவியைக் கேட்பது.

165. மருங்கணைதல்:— தலைவியின் இயலைப் புகழ்ந்துரைத்துத் தலைவியின் இடையைத் தாங்குவான்போல் அவள் மருங்கு அணைவது.

166. முகங்கண்டு மகிழ்தல் - "மலர்ந்த குமுதமலர் இவள், நான் அம்மலரை மலர்த்தும் வானத்து இளமதி" என்று கூறி மகிழ்வது.

167. பள்ளியிடத் துய்த்தல் :- பிரியுந் தலைவன் தலைவியைப் பள்ளியிடத்துச் சேர்ப்பது.

168. தலைவன் வரவு விலக்கல் :- தலைவன் மீட்டும் வருவதனை விலக்கக் கூறுவது.

169. ஆற்றுதுரைத்தல் :- தலைவன் வரவு விலக்கலை ஆற்றாது வருந்திக் கூறுவது.

170. இரக்கங்கூறி வரைவு கடாதல் :—தலைவன் வரும் வழியில் எதிரும் இடையூறு எண்ணி அஞ்சி இரங்கும் தலைவியின் இரக்கம் கூறி வரைவு கடாவுவது.

171. நிலவு வெளிப்பட வருந்தல் :- தலைவன் மறுநாள் நிலவு வெளிப்படலும் பிரிவு கருதி வருந்துவது.

172. அல்லகுறி அறிவித்தல் :- குறித்த இடத்தின் வேற்றிடஞ் சென்று தலைவனைக் காணாமையின் தோழி கூறுவது.

173. கடலிடை வைத்துத் துயர் அறிவித்தல் :- கடல்மேல் வைத்து இராவரு துயரம் தலைவனுக்கு அறிய உரைப்பது.

174. காமம் மிக்க கழிபடர் கிளவி :- தலைவனைக் காணப் பெற்ற தலைவி தன் வேட்கை மிகுதியால் கேளாதனவற்றைக் கேட்பனவாக விளித்து என் நிலைமையை நீங்கள் நோக்கவில்லையே என்று அவற்றோடு வருந்திப் பேசுதல்.

175. காப்புச் சிறை மிக்க கையறு கிளவி :- காவலிற் கையறு நிலையைக் கூறுவது.

176. ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி :- தோழி தலைவனிடம் வரும் வழியின் அருமை நோக்கித் தன் அச்சத்தை வெளியிடுவது.

177. தன்னுட் கையாறெய்திடு கிளவி :- தலைவியின் கையற்ற நிலையைக் கூறுவது.

178. நிலைகண்டு உரைத்தல் :- தலைவியின் கையறு நிலையைக் கூறி வரைவு தோன்ற உரைப்பது.

179. இரவுறு துயரம் கடலொடு சேர்த்தல் :— தலைவனைக் காணாது தலைவி துயருறலைக் கூறுவது.

180. அலர் அறிவுறுத்தல் :— தோழி தலைவனுக்கு ஊர் அலரினை அறிவுறுத்துவது.

15. ஒருவழித் தணத்தல்*

181. அகன்றணைவுரைத்தல் :— அலர் காரணமாகத் தோழி, தலைவனுக்குச் "சில நாள் நீங்கிப் பின் வருக" என்று கூறுவது.

182. கடலொடு வரவு கேட்டல் :—தோழி சொல்லியவாறே தலைவன் வாராது இருக்கத் தலைவி பிரிவாற்றுளாகக் கடலை நோக்கித் தலைவனது வரவு கேட்டல்.

183. கடலொடு புலத்தல் :— தலைவி புலந்து சில மொழிகளைக் கடலை நோக்கிக் கூறுவது.

184. அன்னமொடு ஆய்தல் :— அன்னத்தைத் தூது விடுதல்.

185. சேர்வழி நோக்கிக் கடலொடு கூறல் :— தலைவன் தேர்வழியை நோக்கிக் கடலொடு "தேர்வழியை அழியேல்" என்பது.

* அலர் எழுந்தது என்று விலக்கப்பட்ட பின்னர் தெருண்டு வரைதல் ஒருதலை; தெருளான் ஆயின் அவ்வலர் அடங்கச் சில நாள் ஒருவழித் தணந்து உறைதல், உடன் கொண்டு போதல், தோழியால் வரைவு முடுக்கப்பட்டு அருங்கலம் விடுத்து வரைந்து கோடல் என்னும் மூன்றவன் ஒன்று முறைமை என்ப. அவற்றுள் இது ஒருவழித்தணத்தல் என்பது.

186. கூடல் இழைத்தல்:— கடல் தெய்வத்தை வாழ்த்தித் தலைவன் வருவானோ என்று குறிபார்ப்பதற்குத் தலைவி கூடல் இழைப்பது.

187. சுடரொடு புலம்பல்:— குணகடல் எழுந்த சுடர் குடகடல் மறையத் தலைவி மனம் புலம்புவது.

188. பொழுது கண்டு மயங்கல்:— மயல்தரு மாலை வருவது கண்டு தலைவி கவலையுறுவது.

189. பறவையொடு வருந்தல்:— வருத்தம் கைம்மிகத் தலைவி பறவைமேல் வைத்து வருந்துவது.

190. பங்கயத்தொடு பரிவுற்றுரைத்தல்:—முருகவிழ் கானலில் கூம்பிய தாமரையைக் கண்டு தம்மிடம் பரிவு கொண்டதாக உரைத்தல்.

191. அன்னமோடு அழிதல்:— தன் வருத்தம் தலைவனுக்கு உரையாது தான்மட்டும் சேவலொடு மகிழ்ந்திருக்கும் அன்னத்தைப் பழித்துக் கூறுவது.

192. வரவுணர்ந்து உரைத்தல்:— தலைவன் வரவினை அறிந்த தோழி சிறைப்புறமாக மதியை நோக்கி உரைப்பது.

193. வருத்த மிகுதி கூறல்;— சில நாள் நீங்கிச் சேர்ந்த தலைவனுக்குத் தலைவியின் வருத்த மிகுதியைத் தோழி கூறுவது.

16. உடன் போக்கு *

அலர் காரணமாக ஒருவழித்தணத்தல் நிகழாமல், உடன் போக்கும் நிகழும். இப்பகுதியின் பாற்படுவன வருமாறு.

194. பருவங் கூறல்;— தலைமகள் மணத்திற்குரிய பருவம் எய்தினமையால், தலைவன் அவளை வரைதல் வேண்டுமெனத் தோழி தலைவனுக்குக் கூறுவது.

195. அயலவர் மகட் பேச்சுரைத்தல்:— படைத்துமொழிச் சொல்லால் பணிவு அன்புடன் தோழி தலைவனை நோக்கிப் "பலர் மகள் பேசக் கருதுகின்றார்" என்று கூறுவது. தலைவியை மணம் பேச அயலவர் வருவதால் அவளை மணத்தல் அல்லது உடன் கொண்டு செல்லல் செய்யற்பாலது என்பது கருத்து.

196. பொன்னணி உரைத்தல்:— பலர் பரிசினால் மலர் நெடுங் கண்ணியாகிய தலைவியை மகள் பேச வந்தனர். நின் கருத்து யாதெனத் தோழி தலைவனைக் கேட்பது.

---

* 15ஆம் அதிகாரத்தின் அடிக்குறிப்புப் பார்க்க. அங்குக் கூறிய மூன்னுள் ஒன்று இது உடன்போக்கு.

197. அருவிலையுரைத்தல்:— "தலைவிக்குப் பரிசம்" எத்துணை என்று தலைவன் கேட்டலும் அவனுக்குத் தோழி தலைவியின் விலையருமை கூறுவது.

198. அருமை கேட்டழிதல்:— தோழி தலைவியின் அருமை கூறியது கேட்டுத் தலைவன் நெஞ்சை நோக்கி நீ தலைவியை வேட்டல் தக்கதன்று என்பது.

199. தளர்வறிந்துரைத்தல்:— தோழி தலைவியின் ஆற்ருமையைக் கூறுவது.

200. குறிப்புரைத்தல்:— தலைவியின் உடன்போக்குக் குறிப்பைத் தலைவனுக்குத் தோழி கூறுவது.

201. அருமையுரைத்தல்:— உடன்போக்கில் வழியின் அருமையைத் தோழிக்குத் தலைவன் கூறுவது.

202. ஆதாரங் கூறல்:— நின்னெடு செல்லின் தலைவிக்கு வழி அருமை தெரியாதென்று தலைவனுக்குத் தோழி கூறுவது.

203. இறந்து பாடுரைத்தல்:— தலைவன் தலைவியை உடன் கொண்டு செல்லவில்லை எனின் அவள் இறந்து படுவாள் என்று தோழி கூறுவது.

204. கற்பு நலன் உரைத்தல்:— தலைவனேடு செல்லல்தான் கற்புக்கு நல்லதென்று தலைவி தோழியிடம் சொல்லி அவளை உடன் போக்கிற்கு இசையுமாறு கூறுவது.

205. துணிந்தமை கூறல் :—தலைவி உடன்போக்கிற்குத் துணிந்தமையை தலைவனுக்குத் தோழி கூறுவது.

206. துணிவொடு வினவல்:—உடன் போக்கிற்குத் துணிந்த தலைவி, என் அதற்குக் காரணம் என்று வினவுவது.

207. போக்கறிவித்தல் :—தோழி அதற்குக் காரணம் கூறி போக்கறிவிப்பது.

208. நாணிழந்து வருந்தல் :—உடன்போக்கிற்கு இசைந்து, கற்பு நாணினும் சிறந்ததாகலின், நாணிழப்புக்கு வருந்துவது.

209. துணிவெடுத்துரைத்தல் :—உடன்போக்கிற்கு தலைவி துணிந்தமையை தலைவனுக்குத் தோழி எடுத்துக் கூறுவது.

210. குறியிடம் கூறல்:—இன்ன இடத்திற்கு வரல் வேண்டும் என்று தலைவனுக்குத் தோழி கூறுவது.

211. அடியொடு வழி நினைந்து அவன் உளம் வாடல் :—தலைவியுடன் செல்லும் தலைவன் வழியின் கடுமை கருதி உளம் வருந்துவது.

212. கொண்டு சென்று உய்த்தல் :—குறிப்பிட்ட இடத்தில் தலைவனிடம் தலைவியைத் தோழி கொண்டு சேர்த்தல்.

213. ஓம்படுத்துரைத்தல் :—தலைவியைத் தலைவனிடத்துச் சேர்த்த தோழி தலைவனை நோக்கி, "இவளை நீ எந்நாளும் காப்பாற்றி வருக" என்று வேண்டுதல்.

214. வழிப்படுத்துரைத்தல் : தோழி இருவரையும் தீங்கின்றி தம்மூர் சேர்க என்று வழியனுப்புவது.

215. மெல்லக் கொண்டேகல் :—பஞ்சின் மெல்லடித் தலைவியைத் தலைவன் மெல்லக் கொண்டு செல்வது.

216. அடலெடுத்துரைத்தல் :—வழியில் மறவர் கூட்டம் யானைக் கூட்டம் வரின் அம்பால் தடுப்பேன் என்று தலைவிக்குக் கூறி வருந்தேல் என்று அச்சம் தவிர்ப்பது.

217. அயர்வு அகற்றல்:—இன்னல் செறிந்த மலைப்பக்கத்துத் தலைவி நடந்து வருந்துதல் அறிந்து அவள் அயர்வினைத் தலைவன் போக்குவது.

218. நெறி விலக்கிக் கூறல் :—வழியிலிருக்கும் ஊரினர் தம் ஊரில் தங்கிப் போகும்படி அவர்தமை வேண்டுவது.

219. கண்டவர் மகிழ்தல் :—பெருஞ்சுரத்துச் செல்லும் அவ் விளம் தம்பதியரைக் கண்டவர் மகிழ்ந்து கூறுவது.

220. வழிவிளையாடல் :—வன் சுரத்துத் தலைவன் தலைவியொடு விளையாடி மகிழ்வது.

221. நகரணிமை கூறல் :—வழி எதிர் வருவார் அவர்களுக்கு நும் நகர் அணித்து எனக் கூறுவது.

222. நகர் காட்டல் :—கொடுஞ் சுரம் கடந்த தலைவிக்கு தலைவன் தன்னுடைய நகரினைக் காட்டுவது.

223. பதி பரிசு உரைத்தல் :—கண்ணைக் கவரும் வளநகரினைக் கண்டு சென்று அடைந்து, அதன் நலன்களைத் தலைவிக்கு எடுத்துரைப்பது

224. செவிலி தேடல் :—தலைவன் தலைவி செய்தி இவ்வாறாகச் செவிலி கவலையுற்றுத் தேடுவது.

225. அறத் தொடு நிற்றல் :—தோழி செவிலிக்குத் தலைவியின் உடன் போக்கினைக் கூறி அறத்தொடு நிற்பது.

226. கற்பு நிலைக்கிரங்கல் :—இது இவள் இளம்பருவத்திற்கு ஏற்றது அன்று என்று சொல்லி செவிலி இரங்கிக் கூறுவது.

227. கவன்றுரைத்தல் :—செவிலி தன் மகள் நிலையினை நினைந்து கூறுவது.

228. அடி நினைந்து இரங்கல் :—தன் பெண் சென்ற வழி வெம் சுரமாயிற்றே என்றும், அவள் அடி பஞ்சினும் மெல்லிய தாயிற்றே என்றும் செவிலி நினைந்து கவலையுற்றுக் கூறுவது.

229. நற்றாய்க்குரைத்தல் :—தம் பெண்ணுக்கு நிகழ்ந்ததனை நற்றாய்க்குச் செவிலி உணர்த்துவது.

230. நற்றாய் வருத்தல் :—ஏதில் அன்பின் தோழியை விட்டு என்னையும் துறந்து இம் மூதுரை விட்டு அகன்றனளே என்று நற்றாய் வருந்துவது.

231. கிளிமொழிக்கிரங்கல் :—தலைவியின் கிள்ளை அவளை அழைப்பது கேட்டுத் தாய் இரங்கிக் கூறுவது.

232. சுடரோடிரத்தல்: — கதிரவன் தலைவிக்கு வழியில் வெம்மை உண்டாக்காமல் இருத்தற்காக அக் கதிரவனைத் தாய் வேண்டி நிற்பது.

233. பருவம் நினைந்து கவறல்:— தலைவற்குச் செய்யத்தக்க பணிகளைச் செய்தற்குத் தக்க வல்லமையுண்டோ என்று தாய் கவன்று உரைப்பது.

234. நாடத் துணிந்தது :— தன் பெண் சென்ற வழியெல்லாம் சென்று தேடுவேன் என்று துணிந்து கூறுவது.

235. கொடிக்குறி பார்த்தல்:— நற்றாய் காக்கை கரைவது கேட்டுக் குறி பார்ப்பது.

236. சோதிடங் கேட்டல்:— செவிலி மனந் தளர்ந்து, உய்த்துணர்வோரை (சோதிடரைக்) கேட்பது.

237. சுவடு கண்டறிதல்:— செவிலி தேடச் சென்று தலைவி தலைவர் தம் அடிச்சுவட்டினைக் கண்டறிவது.

238. கவடு கண்டிரங்கல்:— தடத்திடைத் தன் பெண்ணினது அடிச் சுவட்டினைக் கண்டு செவிலி இரங்குவது.

239. வேட்ட மாதரைக் கேட்டல் :— அவர்களைப்பற்றி வழியிற் செல்கின்ற மாதரைப் பார்த்து, "என் மகள் அயலானோடு சென்றது கண்டீரோ" என்று செவிலி கேட்பது.

240. புறவொடு புலத்தல்:— காட்டுப் புறுக்களைப் பார்த்து, "நீவிர் இஃது இயலன்று என்று கூறவில்லையே" என்று வருந்திக் கூறுவது.

241. குரவொடு வருந்தல்:— தேடிச் சென்ற செவிலித் தாய், "என் மகள் காயும் கடத்திடை ஆடிக் கடப்பவும் கண்டு நின்வாய் திறவாதிருந்தனையே குரவே" என்று வருந்திக் கூறுவது.

242. விரதியரை வினவல் :— வழியில் வருகின்ற மா விரதியரைக் கண்டு, ஒரு பித்தி பின் வர முன் செல்லும் ஒரு பெருந்தகையைக் கண்டீரோ என்று வினவுதல்.

243. வேதியரை வினவல்:— மான்மயில்போல் ஒருத்தி ஓர் ஏந்தலுடன் எதிரே வந்ததைக் கண்டீரோ என்று மறை வேதியரை வினவுதல்.

244. புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினுதல்:— தலைவனும் தலைவியுமாக எதிரே வரும் இருவரை விளித்து, "உம்மைப்போல் இருவர் முன் போயினமை கண்டதுண்டோ" என்று வினவுதல்.

245. வியந்துரைத்தல்:— செவிலி இருவர் நலத்தையும் கேட்டறிந்து வியந்துரைப்பது.

246. இயைபெடுத்துரைத்தல்:— எதிர் வருவார் இருவர், உடன் போக்கிற் செல்லும் இருவரது பிணைப்பையும் எடுத்துரைப்பது.

247. மீளவுரைத்தல்: இருவரும் இடையூறு இல்லாமல் தலைவன் நகருக்குச் சென்று சேர்வார்கள். ஆதலின் நீ திரும்பிச் செல்க என்று எதிர்வருவார் செவிலிக்குக் கூறுவது.

248. உலகியல்பு உரைத்தல்:— மீளாது கவலையுற்று நின்ற செவிலியை நோக்கி, உலகில் சந்தனம், முத்து, சங்கு என்பன பிறந்த இடத்திற்குப் பயன்படாது தம்மை விரும்பிக் கொள்வாரிடம் சென்று பயன்படுதல் போல மகளிரும் பிறந்த இடத்திற்குப் பயன்படார் எனக் கூறுதல்.

249. அழுங்கு தாய்க்குரைத்தல்:— வருந்தும் செவிலிக்கு எதிர்வார் ஆறுதல் கூறித் திரும்ப அழைத்துக் கொண்டு செல்வதற்குக் கூறுவது.

17. வரைவு முடுக்கம்*

உடன் போக்கு நிகழாதாயின் வரைவு முடுக்கம் நிகழும். அஃதாவது விரைவில் மணந்து கொள்ளுதலைத் தலைவன்பால் தோழி வேண்டுவது. இதன்பாற் படுந் துறைகள் வருமாறு.

250. வருத்த மிகுதி கூறி வரைவு கடாதல்[1]:— தலைவனைத் தலைவி எதிர்ப்பட முடியாமையின் தோழி வரைவு வேண்டுதல்.

251. பெரும்பான்மை கூறி மறுத்தல்:— தலைவியின் உயர் நிலைமையைக் கூறித் தலைவன் மறுத்தல்.

252. உள்ளது கூறி வரைவு கடாதல்:— தோழி, தலைவியின் இணக்கம் கூறி வரைவு வேண்டுவது.

---

* 15ஆம் அதிகாரத்தின் அடிக்குறிப்புப் பார்க்க. உடன் போக்கு நிகழ்ந்தாயின் வரைந்து கோடல் நிகழும். அது நிகழுமிடத்துத் தோழியால் வரைவு முடுக்கப்பட்டு வரைபொருள் பிரிதல் நிகழும். அவற்றுள் இது வரைவு முடுக்கம்.

1 இது 150வது பாடலின் தொடர்ச்சி.

253. ஏதங் கூறி இரவு வரவு விலக்கல் :— தலைவன் வரும் வழியின் தீங்கு முதலியவற்றைக் கூறி இரவு வருவதைத் தோழி விலக்குவது.

254. பழி வரவு உரைத்துப் பகல் வரவு விலக்கல் :— களவு ஒழுக்கத்தினால் வரும் பழியினைக் கூறிப் பகல் வருவதனைத் தோழி விலக்குவது.

255. தொழுது இரந்து கூறல் :— தோழி தலைவனை வரைவு வேண்டித் தொழுது கூறுவது.

256. தாயறிவு கூறல்;— களவொழுக்கத்தைத் தாய் அறிந்து கொண்டாள் என்று சிறைப் புறத்துச் செம்மல் கேட்பத் தோழி கூறுவது.

257. மந்திமேல் வைத்து வரைவு கடாதல் :— கடுவனும் மந்தியும் தம்முள் இன்புறுவது கண்டு தலைவி ஆற்றுளாயினுள் என வரைவு வேண்டுதலைக் கூறுவது.

258. காவல்மேல் வைத்துக் கண் துயிலாமை கூறல் :— நகர்க்காவலின் மிகுதி கூறித் தலைவி கண் துயிலாமையை எடுத்துச் சொல்வது.

259. பகலுடம்பட்டாள் போன்று இரவு வரவு விலக்கல் :— "விரைதரு மலரோய் இரவு வாரல்" என்று கூறி இரவு வருதலை விலக்குவது.

260. இரவுடம்பட்டாள் போல் பகல் வரவு விலக்கல் :— "இகலடு வேலோய் பகல் வாரல்" என்று பகல் வரவினை விலக்குவது.

261. இரவும் பகலும் வரவு விலக்கல் :— தலைவிக்குக் காவல் மிகுதியாயிற்று. ஆகவே இரவும் பகலும் வாரல் என்று வரவு விலக்குவது.

262. காலம் கூறி வரைவு கடாதல்:—தோழி, தலைவன் காலம் கடத்துதலை எடுத்துக்கூறி வரைவு வேண்டுவது.

263. கூறுவிக்குற்றல் :— தலைவன் வரைவுக்கு உடன் படாமல் இருப்பத் தோழி தலைமகளை நோக்கி, "நீயே அவனிடம் சொல்" என்பது.

264. செலவு நினைத்துரைத்தல் :—அது கேட்ட தலைவன் அவ்வாறு சொல்வதற்கு இரங்கிக் கூறுவது.

265. பொலிவு அழிவு உரைத்து வரைவு கடாதல் ;—தோழி தலைவியின் பொலிவு அழிவினைக் கூறி வரைவு வேண்டுவது.

18. வரை பொருட் பிரிதல்*

266. முலைவிலை கூறல் :—தலைவன் பரிசம் எவ்வளவு என்று கேட்டலும் தோழி அது இவ்வளவு என்பது.

---

*வரைவுக்கு உடம்பட்ட தலைவன் பொருள் பெறற்பொருட்டுப் பிரிவது கூறுவது இப்பகுதி.

267. வருமது கூறி வரைவுடம் படுதல் :— தலைவிக்குக் கருப்பம் உண்டாயின் இகழ்ச்சியாம் என்று கூறி வரைவுடம்படுத்தல்.

268. வரை பொருட் பிரிவை உரையெனக் கூறல் :— வரை பொருள் பெறுதற்குப் பிரியும் தலைவன் தோழியை நோக்கித் தலைவிக்கு இது பற்றிக் கூறுக வென்பது.

269. நீயே கூறென்றல் :— "தலைவ, நீயே அவளுக்குக் கூறுக" என்று தோழி மொழிவது.

270. சொல்லா தேகல் :— தலைவன் தலைவிக்குக் கூறாமல், தோழியிடம் பிரிவுரைத்துச் செல்வது.

271. பிரிந்தமை கூறல் :— தலைவிக்குத் தோழி தலைவன் பிரிந்தமை கூறுவது.

272. நெஞ்சொடு கூறல் :— தலைவன் சொல்லாது அகலலும் தலைவி மனம் தளர்ந்து நெஞ்சொடு கூறுவது.

273. நெஞ்சொடு வருந்தல் :— தலைவன் பிரிதலை எண்ணித் தலைவி வாடுவது.

274. வருத்தங் கண்டுரைத்தல் :— தலைவன் பிரிவுக்கு வருந்தும் தலைவியைக் கண்டு, "வருந்தாதே, தலைவன் நீங்குவன் அல்லன்" என்று தோழி கூறுவது.

275. வழியொழுகி வற்புறுத்தல் :— தோழி, தலைவியும் தானும் வருந்துவதைப் பிறர் ஐயுருதவாறு தம் வருத்தத்தை மறக்க வேண்டும் என்று வற்புறுத்துவது.

276. வன்புறை எதிரழிந்திரங்கல் :— தலைவி அதற்கு இணங்காமல் வருந்து தலைக் கூறுவது.

277. வாய்மை கூறி வருத்தம் தணித்தல் :— அவ்வாறு வருந்தும் தலைவிக்குத் தலைவன் மீண்டும் வருவான் என்று கூறி வருத்தம் தணிவிப்பது.

278. தேருது புலம்பல் :— தோழி தேற்றவும் தேருது தலைவி தலைவனது பிரிவை ஆற்ருளாய்ப் புலம்புவது.

279. காலம் மறைத்துரைத்தல் :— புலம்பி நின்ற தலைவி காந்தள் கருவுறக் கண்டு இது கார்கால மாயிற்றே, தலைவர் வரவு குறித்த காலமாயிற்றே என்று கலங்கி நிற்ப, தினைப் பயிர் ஓம்ப நம் ஐயன்மார் கடவுளைப் பராவ, கடவுள் ஆணையால் காலமன்றியும் காந்தள் மலர்ந்தது. அஞ்சற்க, இது தெய்வ மழை என்று தோழி தலைவியை ஆற்றுவிப்பது.

280. தூதுவரவு உரைத்தல் :—அங்ஙனம் காலம் மறைத்த தோழி, "ஒரு தூது வந்துள்ளது. அது நம் தலைவர் அனுப்பியதோ அன்றி அயலார் அனுப்பியதோ அறியேன்" என்று தலைவியிடம் கூறுவது.

281. தூது கண்டு அழுங்கல் :—கூறியது கேட்ட தலைவி, "அயலார் தூதுவருவதும் போவதுமாக உள்ளது. என் ஆவியைக் கொண்டு போய் என் நெஞ்சில் இடம் பெற்றுள்ள தலைவர் ஏது செய்ய எண்ணி வாராது இருக்கின்றார்" என்று அழுங்குவது.

282. மெலிவு கண்டு செவிலி கூறல் :— அழுங்குகின்ற தலைவியைச் செவிலி நோக்கி, "இவள் மென் தோள் மெலிந்தது; ஒளி வாடிற்று; விழி தன் இயல்பு இழந்து வேறுயிற்று; முன்பிருந்த தன்மையினள் அல்லள்; முருகன் ஆட்சியின் பட்டனள் போலும்!" என்று தலைவியின் மெலிவு கண்டு கூறுவது.

283. கட்டுவைப்பித்தல் :— மெலிவு கண்ட செவிலி, "இவளுக்கு உற்ற நோயைத் தெளிய அறிந்து சொல்" என்று கட்டுவித்திக்கு உரைத்துக் கட்டுவைப்பியா நிற்பது (குறி கேட்டு நிற்பது).

284. கலக்கமுற்று நிற்றல் :— உண்மை தெரிந்துவிடும் என்று தோழி கலக்கமுற்று நிற்பது.

285. கட்டுவித்தி கூறல் :— தலைவி மெலிவதற்குக் காரணம் முருகணங்கு என்று கட்டுவித்தி கூறுவது.[1]

286. வேலனை அழைத்தது :— முருகணங்கு என்று கூறக் கேட்டு அது நீக்கும்பொருட்டுத் தாயர் வேலனுக்குப் பூசை இயற்றுவித்து, வேலனை அழைப்பது.

287. இன்னல் எய்தல் :— தாயர் வேலனை அழைப்பது கேட்ட தலைவி, "இது தவறு" என்று வருத்தம் எய்துவது.

288. வெறி விலக்குவிக்க நினைதல் :— இன்னலுற்ற தலைவி, "இனி தாழ்த்துப் பயனில்லை; என் மறையை (இரகசியத்தைத்) தோழிக்கு உரைப்பேன்" என்று தோழியைக் கொண்டு வெறி விலக்குவிக்க நினைத்தாள்.

289. அறத்தொடு நிற்றலை உரைத்தல் :— நினைத்த தலைவி, யாயும் தெறுக, அயலவர் ஏசுக, ஊர் நகுக, நீயும் முனிக, நிகழ்ந்தது கூறுவேன்; யான் தூயன், நினக்கும் சூள் தருவன் (சத்தியம் செய்து கொடுப்பேன்) என்று கூறித் தோழியிடம் தலைவி அறத்தொடு நிற்பது.

---

1 நெற்குறி காட்டி, "இது முருகன் ஊரு மயில்; இது அவன் கொடியிலுள்ள கோழி; இது அவன் சூரைத் தடிந்த வேல்; இவை இங்குப் பரப்பியுள்ள நெல்லின்கண் வந்து தோன்றும் முருகன்" என்றாள். முருகன் எனவே முருகணங்கு என்று கூறினாள் என்பது. குறிக்கிலக்கணம் நெல் மூன்றும் இரண்டும் ஒன்றும் படுகை. அடியும் கொடியும் உவகையும்; அடி மயில், கொடி கோழி, உவகை வேல். ஆதலின் முருகணங்கு எனப் பெற்றது.

290. அறத்தொடு நிற்றல்.— "நாம் அன்று ஒரு நாள் கடற் கரையில் வண்டல் செய்து விளையாடுங்கால் ஒரு தோன்றல் யான் விருந்து என்று வந்து நின்றான். (நீ அப்போது பூக் கொய்ய அப்புறம் சென்றாய்.) அப்பொழுது கொண்டலுற்ற கடல், கடற்கரை மேல் ஏறி என் மேலுற்றது. அது கண்டு என் உயிரைக் கொண்டு தந்து சேரி சென்றான்" என்று அறத்தொடு நிற்பது.

291. ஐயந் தீரக் கூறல்:— தலைவனுக்குப் பழி வருமோ என்று ஐயுற்று அறத்தொடு நின்ற தலைவியின் குறிப்பினை அறிந்த தோழி, "நம் யாயும் அறிவாள், ஊர் அலராம்; நம் குடிக்குப் பழி வரினும் தலைவனுக் குப் பழி வராமல் மறைத்துக் கூறும் வழி யாது" என்று தலைவியைப் பாதுகாத்தல் தோன்றக் கூறுவது

292. வெறி விலக்கல்;— தலைவியின் ஐயம் தீர, வெறிக்களம் சென்று, வேலனை நோக்கி, "மது உண்போர் உண்க. யாம் அதனை விலக்கவில்லை யாம் அன்றொரு நாள் பரங்குன்றத்துப் பரந்த நீரில் மூழ்க, எம்மை மீட்க ஒருவன் விரைந்து வந்தான் அவன் தோள்கள் இதற்குக் காரணமாக இருப்பவும் வேறு ஒன்றைக் கருதுவர். நின்னைப் போல் அறிவுடையார் இவ்வுலகத்தில் இல்லை போலும்" என்று தோழி வெறி விலக்குவது.*

293. செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்றல்:— இங்கனந் தோழி வெறி விலக்குதலும் செவிலி அவளை நோக்கி, "நீ இவ்வாறு செய்யக் காரணம் யாது?" என்று கேட்க, "யாம் தினைப்புனத்துக் கிளி கடியாநின் றோம். ஒரு யானை வந்தது. அருளுடையான் ஒருவன் வந்து, யானையைக் கடிந்து அவளுக்கு உயிர் கொடுத்தான்" என்று தோழி கூறி அறத்தொடு நிற்பது.

294. நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல்:— இங்கனம் தோழி அறத்தொடு நிற்பச் செவிலி தலைவியின் கற்பு மிகுதி தோன்ற நற்றாய்க்குக் கூறி அறத்தொடு நிற்பது.

295. தேர் வரவு கூறல்:— அந்நிலையில் தலைவன் தேர் வரும் ஒலி கேட்டுத் தோழி உவகையொடு சென்று தலைவிக்கு அவன் தேர் வரவு எடுத்துக் கூறுவது.

296. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல்:— தலைவிக்கு மன்றல் என்று மணமுரசு எங்கும் ஒலி செய்தது. மனையிலுள்ளார் தம் மனையை அலங்கரிப்போம் என்று மகிழ்வொடு கூறி நிற்பது.

297. ஐயுற்றுக் கலங்கல்:—"நம் வீட்டில் முழங்கும் மணமுரசு நம் மைக் காத்தவருக்கோ, இயைபு இல்லாத வேறு யாவருக்கோ" என்று தலைவி ஐயுற்றுக் கலங்குவது.

---

* நீரிடை வந்தொருவன் உதவினன் என்பது முருகனணங்கினன் அல்லன் என்று குறிப்பினால் வெறியாட்டு விலக்குவதாகும்.

298. நிதிவரவு கூறு நிற்றல்:— கலங்கிய தலைவிக்கு அன்று யானையைக் கடிந்தவர் நமர் வேண்டியபடியே முழுநிதியைக் கொண்டு வந்து விட்டார் என்று மகிழ்வொடு தோழி நிதிவரவு கூறி நிற்பது.

19. மணஞ்சிறப்புரைத்தல்*

299. மணமுரசு கூறல்: — நிதி தருதற்கு முன்நிற்கண் தலைவனது முரசு முழக்கங் கண்டு மகிழ்வுற்ற தோழி இனி என்ன குறையுடையேம் என வரைவு தோன்ற நின்று தலைவிக்கு மணமுரசு கூறுவது.

300. மகிழ்ந்துரைத்தல்[1]:—மணமுரசு ஒலி கேட்ட தோழி தலைவியைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறுவது.

301. வழிபாடு கூறல்:— தலைவன் மணஞ் செய்து கொண்ட பின்னர் மணமகன் இல்லினைக் காணவந்த செவிலிக்குத் தலைவன் தலைவியின்வழி ஒழுகி நிற்பதைத் தோழி கூறுவது.

302. வாழ்க்கை நலம் கூறல்:— அது கண்ட செவிலி நற்றாயிடம் சென்று அவள் இல்லம் நம் இல்லத்தோடு ஒக்கும்; அவள் நின்னொடு ஒக்கும்; அவள் தலைவன் நின் கொழுநனோடு ஒக்கும் என்றும் பல கூறித் தலைவியின் வாழ்க்கை நலத்தினைக் கூறுவது.

303. காதல் கட்டுரைத்தல்:— இங்ஙனம் செவிலி தலைவியின் வாழ்க்கை நலம் கூறித் தலைவனுடைய காதல் மிகுதியைக் கூறுவது.

304. கற்பு அறிவித்தல்:— தலைவனது காதல் மிகுதியைக் கூறிய செவிலி நற்றாய்க்குத் தன் மகள் கற்பைத் தெரிவிப்பது.

305. கற்புப் பயப்புரைத்தல்:— செவிலி நற்றாய்க்குத் தலைவியின் கற்புப் பயந்த அற்புதத்தை எடுத்து உரைப்பது.

306. மருவுதல் உரைத்தல்:— தலைவன் தேர் பிறிதோரிடத்துத் தங்காது, தலைவியும் கணவனுகிய தெய்வத்தையன்றிப் பிறிதொரு தெய்வத்தை நினையாள் என்று அவ்விருவர் காதலும் மருவுதலைச் செவிலி நற்றாய்க்குத் தெரிவிப்பது.

307. கலவி இன்பங் கூறல்:— அவ்விருவர் காதல் ஈருடலும் ஓருயிருமாக இருக்கும் நலத்தைப் பார்த்து மகிழ்ந்த தோழி தன்னுள் கூறுவது.

---

* மணஞ்சிறப்புரைத்தல் என்பது வரைந்த பின்னர் மணஞ்சிறப்புக் கூறு நிற்பது.

1 (1) மெலிவு கண்டு செவிலி கூறுவது (282ஆம் துறை) முதல், மகிழ்ந்துரைத்தல் என்னும் இத்துறை முடிய பத்தொன்பதும் அறத்தொடு நிலையினையும் பின்னர் வரைந்து கோடலையும் குறிப்பனவாம். இதனுடன் அகத்திணையின் 'இன்பக் கலவி' இன்பக் களவு முற்றும்.

(2) உடம்பட்டு விலக்கல் என்னும் (81ஆம்) துறைமுதல் மகிழ்ந்துரைத்தல் என்னும் இத்துறையளவும் தோழியால் ஆகிய கூட்டம்.

20. ஓதல் பிரிவு[1]

308. கல்வி நலம் கூறல்:— வரைவு நிகழ்ந்தபின், ஓதற்குப் பிரிய நின்ற தலைவன் தோழியை நோக்கிக் கல்வியின் நலத்தை எடுத்துக் கூறுவது.

309. பிரிவு நினைவு உரைத்தல்:— அது கேட்ட தோழி தலைவன் பிரிதற் குறிப்பறிந்து தலைவியை நோக்கிச் "கற்றுணர்ந்து வர விரும்பித் துன்பந்தரும் கானிடத்துப் போகத் தலைவன் கருதினான்" என்று கூறுவது

310 கலக்கங் கண்டு உரைத்தல் :— தலைவன் பிரிவு நினைப்பினைக் கண்டு தோழி தலைவிக்குக் கூறக் கேட்டுக் கலக்கம் கண்டு, "தலைவன் கற்க விரும்பினான்" என்னும் அச் சொல்லே இவ்வளவு ஆயின் பிரிவை இவள் எங்ஙனம் ஆற்றுவாள் என்று தோழி தன்னுள் கூறுவது.

311. வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல்:— தன் கலக்கத்தைக் கண்ட தோழிக்குத் தலைவி, 'பிரியேன்' என்று சொல்லிய வாய்மொழி கூறி வருந்துவது.

21. காவற் பிரிவு[2]

312. பிரிவு அறிவித்தல்:— தலைவன் அரசனது கடமையின் பொருட்டுப் பிரியக் கருதுவதைத் தோழி தலைவிக்கு அறிவிப்பது.

313. பிரிவு கேட்டு இரங்கல்:— தலைவன் பிரிவைத் தோழி சொல்லக் கேட்ட தலைவி முன் நம்மைக் காப்பாற்றியவன் இன்று பிரியக் கருதியிருத்தல் தகுமோ என்று இரங்கிக் கூறுவது.

22. பகைதணிவினைப் பிரிவு[3]

314. பிரிவு கூறல்:— பகை தணிவினையின் மேல் தலைவன் போக நினைக்கின்றான் என்று தோழி தலைவிக்குக் கூறுவது.

---

1 ஓதற் பிரிவு:— வரைந்து கொண்ட பின்னர்த் தலைவனுக்கு முதற் பிரிவு ஓதல் ஆதலால் கல்வியின் மிகுதி கூறி நீங்கா நிற்பது.

முன்னர் ஓதல் இன்றி இவளை வரைந்த பின்னர் ஓத நின்றானோ எனின், அல்லன்; முன்னர் இவளைப் பொருவிறந்தான் என்று கூறப்படுதலால் ஓதி முடித்தான் என்பது. தான் ஓதிய அறம் பொருள் இன்பங்களே அன்றி பிறவிப் பயனாகக் கூறப்படுவன வேறும் உளவோ என்பதனை ஆராய வேண்டும் கருத்தினான் ஆதலானும், கல்வியால் தன்னில் தாழ்ந்தாரைத் தன் கல்வி மிகுதி காட்டி அவர்களை அறிவித்தல் தரும நூல் விதி ஆதலானும் பிரியும்என்ப.

2 தலைவன் எல்லா உயிர்களையும் பாதுகாக்கும் அரசனது கடமையின் பொருட்டுப் பிரிதல் காவற்பிரிவு எனப் பெறும்.

3 தம்மிற் பகைத்த அரசர்க்குள் பொருந்தச் செய்தற்பொருட்டுப் பிரியும் பிரிவு பகை தணிவினைப்பிரிவு எனப்படும்.

315. வருத்தந் தணித்தல்:— தலைவன் போக்கு (பிரிவு) பொய் என்று கூறித் தோழி அவளது வருத்தத்தைத் தணிவிப்பது.

23 வேந்தற்குற்றுழிப் பிரிவு[1]

316. பிரிந்தமை கூறல்:— தம்மை வந்தடைந்த வேந்தனுக்கு உதவி செய்யத் தலைவன் சென்றான் என்று பிரிந்தமை தோழி தலைவிக்குக் கூறுவது.

317. பிரிவாற்றாமை கார்மிசை வைத்தல்:— பிரிவு கேட்ட தலைவி வருந்தக் கண்டு, "காதலர் வினைவயிற் பிரிய நீ வருந்தினால் வினை முடியுமாறு என்னே" என்ற தோழிக்கு, "யான் அவர் பிரிந்ததற்கு வருந்துகின்றேன் அல்லேன்; இக்கார் முகில் சென்று அப்பாசறைக் கண்ணே தோன்றுமாயின், நம்மை நினைந்து ஆற்றாராய் அவ்வினை முடிக்கமாட்டாரென்று அதற்கு வருந்துகிறேன்" என்று கூறுவது.

318. வானோக்கி வருந்தல்:— தலைவியை விட்டுப் பிரிந்த தலைவன், குஞ்சுகளோடு பெடைக் குருகைச் சேவல் தன் சிறகினால் பனியினால் வரும் குளிரினின்றும் பாதுகாக்கும் இரவின்கண் என்பிரிவு தலைவிக்கு என்னாங்கொல் என்று நினைத்து வருந்துவது.

319. கூதிர் கண்டு கலங்கல்:— இக் கூதிர் காலத்துப் பனியில் நெருப்பினை நெருங்கியிருக்க, இம் மேகக் கூட்டம் தனித்துள்ள நமக்கே அன்றித் தலைவனிடமும் செல்லுமோ? செல்லின் நம்மை நினைந்து ஆற்றாது வினையை முற்றுவிக்காது இருத்தலுங் கூடும் என்று வருந்துவது.

320. முன்பனிக்கு நொந்துரைத்தல்:— புள்ளும் தன் பெடையையும் பிள்ளைகளையும் தழுவித் தன் சிறகால் ஒடுக்கி அஞ்சாது துயில் கொள்ளும் இவ் இருளில் இடையறாது விழுகின்ற பனியில் பிரிவினால் துன்புறப் பெற்றவளை நோதலல்லது யாரை நோவேன் என்று முன்பனிக்கு ஆற்றாத் தலைவி தாயொடு நொந்து கூறுவது.

321. பின்பனி நினைந்திரங்கல்:— இப் பின்பனி வெகுண்டு பெய்யுமாயின் தலைவி எங்ஙனம் பொறுப்பாள். எனக்கும் ஆற்றுதல் அரிது என்று தலைவியின் துயர் நினைந்து தலைவன் வருந்திக் கூறுவது.

322. இளவேனில் கண்டு இன்னல் எய்தல்:— குயில்கள் இம் மாம் பொழிலில் வண்டுகள் சூழ்ந்த அரும்பிடத்தே வந்து பற்றின. இனி உயிர் வாழுமாறு ஒன்றுங் கண்டிலேன் என்று தலைவி இளவேனில் கண்டு வருத்தமுறுவது.

---

1 ஒரு வேந்தனுக்கு ஒரு வேந்தன் தொலைந்து வந்தடைந்தால் அவனுக்கு உதவி செய்யப் பிரிவது. (அன்றி அரசனுக்கு உதவியாகப் போரின் பொருட்டுத் தலைவன் பிரிவது என்பர் கா. சுப்பிரமணிய பிள்ளை).

323. பருவங்காட்டி வற்புறுத்தல்:— நம் தலைவன் தேர் இன்றுதல் நாளையாதல் வரும், கவலை வேண்டா என்று தோழி கார்ப்பருவங் காட்டி வற்புறுத்துத் தலைவியைத் தெளிவிப்பது.

324. பருவம் அன்று என்று கூறல்:— "கார் வந்தது; காந்தளும் மலர்ந்தது; தலைவன் வாராதது ஏன்?" என்று தலைவி கலங்கி நிற்க, இது கார்காலம் அன்று என்று கலக்கம் தீரத் தோழி கூறுவது.

325. மறுத்துக் கூறல்:— காந்தள் மலர்ந்துள்ளன. அதுவேயு மின்றித் தோன்றியின் புது மலர்களும் தோன்றியுள்ளன. ஆதலின், இது கார்ப்பருவமே என்று தோழியுடன் தலைவி மறுத்துக் கூறுவது.

326. தேர் வரவு கூறல்:— மறுத்துக் கூறிய தலைவிக்கு, இது பருவமே, தலைவர் தேர் நம் நகர்க்கு வரும் என்று கலக்கம் தீரத் தோழி தலைவனது தேர் வரவு கூறுவது.

327. வினைமுற்றி நினைதல்:— வினை முற்றியபின் தலைவன் இனி விரைவில் செல்வோம் என்று தேர்ப்பாகன் கேட்பத் தலைவியின் முகத்தை நினைந்து கூறுவது.

328. நிலைமை நினைந்து கூறல்:— வினை முற்றிய பின்னர், அவள் முகங் கண்டு வருபவன், 'புறாக்கள் தம் துணையோடு துயின்று முன்றிலில் விளையாடுவது கண்டு, "இது நமக்கு அரிதாயிற்று; என் நிலைமை நினைந்து ஆற்றாள்; விரையத் தேரைச் செலுத்துக" என்று தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுவது.

329. முகிலொடு கூறல்:— மேகத்தின் ஓட்டங்கண்ட தேர்ப்பாகன் விரையத் தேரை ஓட்டினன். அப்போது மேகத்தை நோக்கி, "நீ தேரை முற்பட்டுச் செல்லாதே, செல்லினும் தனியே இருக்கும் தலைவி கேட்க முழங்காதே" என்று தலைவன் முந்துறச் செல்லும் முகிலொடு கூறுவது.

330. வரவு எடுத்துரைத்தல்:— தலைவன் வருவது கண்ட தோழி, 'இனி நமக்கு ஒரு குறை இல்லை' என்று தலைவிக்கு அவள் பொலிவு அடையும்படி எடுத்துக் கூறுவது.

331. மறவாமை கூறல்:— 'எம்மை மறந்தீரே' என்ற தோழிக்கு வினை முடிந்த பின்பு இவளை நினைத்தலே அன்றி, வினை முடிவதற்கு முன்னும் இவளைக் கருதிக் கொண்டுதான் இருந்தேன் என்று தலைவன் கூறுவது.

24. பொருள்வயின் பிரிவு[1]

332. வாட்டம் கூறல்:— "இருமையும் பொருளானே முற்றுப் பெறும்[2] என்று பொதுவகையால் யான் கூற, அக் குறிப்பறிந்து கண் பனிப்ப வாடினாள்; என்னால் பிரிவுரைத்தல் அரிது. நீ புணர்த்து மாற்றான் உணர்த்து" என்று தலைவியின் வாட்டம் தோழிக்குக் கூறுவது.

333. பிரிவு நினைவு உரைத்தல்:— அது கேட்ட தோழி, பொருளிலார் இருமையின்கண் வரும் இன்பமும் அறியார் என உட்கொண்டு, "அருஞ்சுரம் போய் நம் தலைவர் நிலைபெறும் பொருள் தேட நினைக்கின்றார்" என்று தலைவிக்குத் தலைவன் பிரிவு நிலையை உணர்த்துவது.

334. ஆற்றாது புலம்பல்:— பிரிவு நினைவுரைப்பக் கேட்ட தலைவி, "கண்ணுக்கு மை எழுதுகின்ற பொழுதும் தலைவர் கண்ணுக்குத் தெரிய மாட்டார் என்று கண்ணுக்கு மை எழுதுவது விட்டேன். என் தன்மை அறிந்தும், குவளைப்பூவை எறிதற்கு வாள் உறை கழித்தாற் போலத் தலைவர் பிரிவார் என்று இக்கொடியவள் கூறினள்" என்று பிரிவாற்றாது புலம்புவது.

335. ஆற்றாமை கூறல்:— தலைவியின் வருத்தங்கண்ட தோழி, தலைவனுக்கு அவள் பிரிவு ஆற்றாமையைக் கூறுவது.

336. திணை பெயர்த்துரைத்தல்:— பிரிந்து செல்வதால் பாலை நிலத்தவனாகிய தலைவனை மருத நிலத்தவனாக்கித் தலைவி புலந்து கூறுவது.

337. பொருத்தம் அறிந்துரைத்தல்— தலைவன் பொருள் வயின் பிரிவது திண்ணம் என்று தலைவனது கருத்தின் பொருத்தம் அறிந்து தோழி தலைவி மருளக் கூறுவது.

338. பிரிந்தமை கூறல்:— "நின் முன் நின்று பிரிவு உணர்த்தினால் நீ வாடுவாய் என உட்கொண்டு, பொருள் முடித்துக் கடிதின் மீள்வானாய்த் தலைவன் வினை குறித்து இன்று சென்றான்" என்று தலைவிக்குத் தோழி தலைவன் பிரிந்தமை கூறுவது.

339 இரவுறு துயரத்திற்கு இரங்கி உரைத்தல்:— தலைவன் பிரிவு கேட்ட தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி, தலைவன் வருமளவும் இவளை எங்ஙனே ஆற்றுவிப்பது என்று வருந்திக் கூறுவது.

340. இகழ்ச்சி நினைந்து அழிதல்:— இங்ஙனம் தோழி இரக்கமுற்றுக் கூற, "முன் தலைவன் பிரியான் என்று பிரிவிகழ்ந்து இருந்தேன். முன்னின்று பிரிவுணர்த்தினால் இவளுயிர் தரியாதென்று உணர்த்து

---

1 குரவர்களால் படைக்கப்பட்ட பொருள் கொண்டு இல்லறம் செய்வதாயின் அதனால் வருபயன் குரவர்க்கே ஆம்; தமக்கு ஆகாது என்று கருதித் தம் பொருள் கொண்டு இல்லறம் செய்தற்குப் பொருள் தேடப் பிரிவது.

2 துறந்தார் கருதுவதாகிய மறுமை இன்பமும் அரசர் கருதுவதாகிய இம்மை இன்பமும் அவ்விருவரும் கருதுவனவாகிய இப்பொருள் இரண்டினையும் பொருள் முடிக்கும் என்று பொதுவகையால் கூறினான்.

தலையிகழ்ந்து போனார். இரண்டு இகழ்ச்சியும் என்னை இத் தன்மைத் தாக்க அழிவிக்கின்றன என்று தலைவி வருந்துவது.

341. உருவு வெளிப்பட்டு நிற்றல்:— இவ்வாறு தலைவி அழியா நிற்க, தலைவியின் உருவை நினைத்து மேற் செல்ல மாட்டாது காட்டிடை நிற்பது.

342. நெஞ்சொடு நேர்தல்:— மீள நினைந்த தலைவன் பொருள் மேற் செல்லும் உள்ளத்தை நோக்கி, "நெஞ்சமே பொருள் வேண்டின் மேலே செல்ல வேண்டு; தலைவியை அடைய வேண்டின் மீண்டு செல்; இரண்டும் செய்யாது காட்டிடையே நிற்பது யாது பெற வேண்டி" என்று நெஞ்சொடு நேர்வது.

343. நெஞ்சொடு புலத்தல்:— இங்கனம் நெஞ்சொடு நொந்து நின்ற தலைவன், "நெஞ்சமே நின் இரக்கமில்லாமை அஞ்சத்தக்கது" என்று புலந்து கூறுவது.

344. நெஞ்சொடு மறுத்தல்:— பொருள் வேண்டிய நெஞ்சொடு உடம்படாது தலைவன் மறுத்துக் கூறுவது.

345. நாளெண்ணி வருந்தல்:— தலைவன் வரவு நீடித்தலை எண்ணி வருந்தும் தலைவியின் வருத்தங் கண்டு தோழி, "இவளைப் பிரிந்தவர் (தலைவர்) பிரிந்த நாளை எண்ணுவதால் விரல் தேய்ந்தது; நிலனும் குழிந்தது" என நாளை எண்ணி வருந்துவது.[1]

346. ஏறு வரவு கண்டு இரங்கி உரைத்தல்:— மீளலுற்ற தலைவன், மாலைக்காலத்து நாகொடு வரும் ஏறு கண்டு இச் சிறந்த மாலை தலைவி பொறுக்கும் அளவதன்று என்று இரங்கிக் கூறுவது.

347. பருவங் கண்டு இரங்கல்:— ஏறு வரவு கண்டு இரங்கிய தலைவன், "இம் முகில்கள் விரவுதலால் கண் சென்று நுழைய மாட்டாது. மலருள்ள இடமெங்கும் மயிலினம் திரண்டு பீலியை விரித்து நின்று ஆடும். இக் கார்காலத்து அவள் என்னை நினைத்து ஆற்றுளாம் கொல்லோ" என்று கார்ப்பருவங் கண்டு இரங்கிக் கூறுவது.

348. முகிலொடு கூறல்:— பருவங் கண்டு இரங்கி, விரைந்துவரும் தலைவன், "இங்கு முற்பட்டாயினும் முகிலே! தலைவியின் துயர் நீக்கும் பொருட்டு முது பெண்டிர் மலர்தூவி நெல் விரவிய தூய பலியைக் கொடுத்து இல்லுறை கடவுளுக்குப் பூசனை இயற்றும் நகர்க்கு என்னின் முற்படாது ஒழிவாயாக" என்று முற்பட்ட முகிலொடு சொல்லா நிற்பது.

349. தேர்வரவு கூறல்:— பொருள்வயின் பிரிந்த தலைவன், பொருள் முடித்துக் கொண்டு விருப்பொடு வருகின்றான் என்று தலைவிக்குத் தோழி இன்மொழி கூறுவது.

---

1 தலைவியின் வாட்டங்கண்டு ஆற்றுவிக்க ஒண்ணமையால் தோழியும் வாடினள் என்பது.

350. இளையர் எதிர் கோடல் :— "இவள் (தலைவி) ஆவி செல்வதற்கு முன் சூழும் தொகுநிதியொடு அன்பர் (தலைவன்) தேர்வந்து தோன்றிற்று; இனி ஊழின் வலிய தொன்றில்லை" என்று இளையர் தலைவனை எதிர் கொள்வது.

351. உள் மகிழ்ந்துரைத்தல் :— இளையர் எதிர்கொள்ள வந்து புகுந்த தலைவன் தலைவியுடன் பள்ளியிடத்திருந்து இவளைப் பிரிந்திருந்த துன்பமெல்லாம் துவள்வுற்றது என்று தன்னுள் மகிழ்ந்து கூறுவது.

25. பரத்தையிற் பிரிவு[1]

352. கண்டவர் கூறல் :— தலைவன் பரத்தையர் சேரிக்கண் செல்லலும்அவர் அவனை ஒருங்கெதிர் கொண்டு சுற்றும் பற்றி நின்றமை கண்டவர் தம்முட் கூறுவது.

353. பொறை உவந்து உரைத்தல்:— பரத்தையர் தலைவனை எதிர் கொண்டமை கேட்ட தலைவி நெஞ்சுடைந்து, புறத்து வெளிப்படாமல் பொறுத்தமை கண்ட தோழி, அவளது பெரும் பொறையை உவந்து கூறுவது.

354. பொதுபடக் கூறி வாடி அழுங்கல்:— உவந்து கூறிய தோழிக்குக், "கண்ணோட்டமின்றி நலத்தைத் தலைவன் கவர்ந்து கொள்ள வேறு துணையின்றி மெல்லணை துணையாக ஆருயிர் தேய்வுறும் மகளிர் என்னின் வேறு யார் உளர்" என்று தலைவி வருந்திக் கூறுவது.

355. கனவிழந்துரைத்தல்:— தலைவன் கொடுமையை நினைந்து வாடி நின்ற தலைவி, "அமளியின் கண் மாலையை உடைய தன் மார்பினைத் தலைவன் வந்து தர, யான் அதனை நனவு என்று மயங்கிப் புலந்து அவனொடு புணராது கிடந்தேன். அதுவேயுமன்றி நான் விழிப்பதும் உற்றேன். கனவால் வரும் இன்பத்தையும் இழந்தேன்" என்று தோழிக்குக் கூறுவது.

---

1 பரத்தையிற் பிரிதல் என்பது தலைமகளை வரைந்தெய்திய பின்னர் வைகலும் பாலே நுகர்வா னொருவன் இடையே புளிங்காடி நுகர்ந்து அதன் இனிமை அறிந்தாற்போல், அவள் நுகர்ச்சியினிமை அறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியா நிற்றல். அல்லதும் பண்ணும் பாடலும் முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தான் எல்லார்க்கும் தலைவனாதலின், அவர்க்கும் இன்பம் செய்யப் பிரியாநிற்றலும் ஆகும். அல்லதூஉம் தலைமகளை ஊடல் அறிவித்தற்குப் பிரிதல் என்றும் ஆம். இவ்வாறொழிந்து தனக்கின்பம் வேண்டிப் பிரிவானாயின்,

> கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐப்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள —(திருக்குறள், 1101)

என்பதனால் இவளுக்குத் தலைமகள் என்னும் பெயரொடு மாறுபட்டுத் தன்து பெருமையோடு மாறுபடா நிற்கும்.

— பேராசிரியர் உரை

356. விளக்கொடு வெறுத்தல்:— கனவு இழந்தமை கூறி வருந்திய தலைவி, "நெய்பருகி இருளைக் கிழிக்கும் விளக்கே, எம்மைக் கலந்தவர்க்குப் பொய்ம்மை சேர்ந்த முகத்தைக் காட்டித் தெளிந்தாரை வஞ்சித்தல் தகுதி அன்று என்று நீயேனும் கூறிற்றில்லையே, வேறு எவர் கூறுவார்?" என்று வெறுத்துக் கூறுவது.

357. வாரம் பகர்ந்து வாயில் மறுத்து உரைத்தல்:— இங்ஙனம் விளக்கொடு வெறுத்து வருந்தி நின்ற தலைவி, தலைவன் பரத்தையிற் பிரிந்து வாயிற்கண் நிற்ப, "ஆடவர் வண்டோர் அனையர்; மகளிர் பூவோரனையர்; ஆதலின் நாமும் அவன் தலையளி பெற்ற பொழுது ஏற்றுக் கொள்வது அன்றோ நமக்குக் காரியம்; நாம் அவனொடு புலக்கற் பாலேம் அல்லேம் என்று வாயில் நேர்வித்தார்க்கு, "ஊரனது மாலையும் தோளும் அவ்விடத்து வளைத்து வைத்து வேண்டினூர் கொள்ள அமையும்; யான் மன்னனைப் பரத்தையர்க்கு உருவரையாக் கொடுத்தேன்" என மறுத்துக் கூறுவது.

(வாரம் பகர்வது-முற்றூட்டாக்க் கொடுப்பது. உருவரை— முற்றூட்டு)

358. பள்ளியிடத்து ஊடல் :— பெருமை மிக்க கற்பினை உடைய தலைவி தலைவனுடன் வெறுத்து உரைப்பது.

359. செவ்வணி விடுக்க இல்லோர் கூறல்* :— செவ்வணி கூறும் மாதர் பரத்தையர் இடத்துச் செல்ல விரும்புதல் பொல்லா ஒழுக்கம் என்று இல்லில் உள்ளோர் சொல்வது.

360. அயலறிவுரைத்தவள் அழுக்க மெய்தல் :— இல்லோர் செவ்வணி விடுக்க எண்ணியிருப்ப அயலார்முன் இவளால் இக்குறி அறிந்த இடத்து ஒருத்தி நாயகனை நமக்குத்தர நாம் அவனை எய்தும்படி ஆயிற்று நம் பெண்தன்மை என்று அழுக்கமுற்றுக் கூறுவது.

361. செவ்வணி கண்ட வாயிலவர் கூறல் :— செவ்வணி மாதர் வந்து தோன்றியது கண்ட பரத்தை வாயிலவர், "தருமக்குறை வாராமல் ஏகல் வேண்டும்" என்று தலைவனுக்கு அன்புடன் கூறுவது.

362. மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல்:— செவ்வணி கண்ட தலைவன் பரத்தையரை நீங்கித் தன் மனையில் புகக் கண்டு வாயிலார் மகிழ்ந்து கூறுவது.

---

* செவ்வணி விடுத்தலாவது:

'பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறத்தா றன்றே'

என்பது பற்றித் தலைவிக்குப் பூப்பு நிகழ்ந்துழி அந் நிகழ்ச்சியைத் தலைவனுக்கு அறிவித்தற்பொருட்டு ஒரு தோழியை, "செங்கோலஞ் செய்து செப்புப் பாலிகையுள் செம்பூவும் நீருங் கொண்டு சென்று பரத்தையர் சேரியிடத்தானாகிய தலைவன் அடியில் பெய்து போவது.

—திருக்கோவையார் பழைய உரையும் விளக்கமும் பக். 574

363. முகமலர்ச்சி கூறல்:— தலைவன் வந்தான் என்று சொல்லும் அளவில், தலைவியின் மலர்க்கண்கள் சிவந்து தாமரைப் பூவினது செவ்வியை அடைந்தன. ஆயின் தலைவன் எதிர் நோக்கத் தலைவியின் சினம் ஆறி முகமலர்ந்தமை கண்டவர் தம்முட் கூறுவது.

364. கால நிகழ்வு உரைத்தல்:— பரத்தையிற் பிரிந்த தலைவனால் நிகழ்ந்த ஆற்றாமையைத் தலைவி, நீக்காதிருந்தாள். அது கண்டு, "வண்டுது மல்லிகைப் போதாலும், அந்திப் பிறையாலும், கங்குற் பொழுதாலும் ஆற்றாளாய்த் தலைவன் புகுந்து நின்றான், இனி நீ புலக்கற் பாலை யல்லை" என்று வாயிலோர் தலைவிக்குக் கூறுவது.

365. எய்தல் எடுத்து உரைத்தல்:— தலைவியின் புலவி தீர அவள் சிற்றடியைத் தன் சென்னியிற் சேர்த்து துகிலைப்பற்றிக் கலவிக் கடலுள் எய்துவதை எடுத்துரைப்பது. (தலைவன் அன்புடைமையும் தலைவி மகிழ்ச்சியும் கூறுவது.)

366. கலவி கருதிப் புலத்தல்:— புலவி தீர்ந்து இன்புற்றிருந்த தலைவி, இவ்வாறு நமக்கருளிய இவன் ஒரு ஞான்று பிறர்க்கும் ஆம் என்று ஒன்றினை உள்கொண்டு நெட்டுயிர்த்துப் பொருமி அழுது; பின்னும் அவனோடு கலவி கருதிப் புலவா நிற்பது (அன்புடனே கலவி யிலே களித்துப் புலவி உற்றது என்பது பழைய உரை.)

367. குறிப்பறிந்து புலந்தமை கூறல்:— புலவி தீர்ந்து தானும் தலைவனும் பள்ளியிடத்தாளாகிய தலைவி பின்னும் ஒரு குறிப்பு வேறு பாடு கண்டு புலந்து பள்ளியினின்று இறங்கி நிற்க, "தீய மக்களைப் பெறாத இவள் ஒரு காரணமின்றிப் புலத்தல் என்னோ" என்று தலைவன் கூறுவது.

368. வாயிலவர் வாழ்த்தல்:— செவ்வணி விடுக்கப், பூப்பியற் செவ்வி கெடாமல் தலைவியின் மெலிவறிந்து தலைவன் விரைவில் வந்தமையால், "இத்தலைவன் தக்க வாய்மையன்" என்று வாயில் நின்றோர் வாழ்த்துவது.

369. புனல் வரவுரைத்தல்:— ஆற்றில் புதுப்புனல் - (வெள்ளம்) வந்து பாய்ந்தது. இவன் (தலைவன்) புனலாடிப் பரத்தையரை மகிழ்வித்துத் தன் காதலியை (தலைவியை) வெகுள்விப்பான் போலும் என்று கண்டார் கூறுவது.

370. தேர்வரவு கூறி மகிழ்ந்து கூறல்:— தலைவன் புனலாட்டு விழாவிற்குத் தேர் பரத்தையர் சேரிக்குச் சென்றது. அது கண்டு தம்முள் அவர் (பரத்தையர்) மகிழ்ந்து கூறுவது.

371. புனல் விளையாட்டில் தம்முள் உரைத்தல்:— தலைவனைப் பற்றும் விருப்பத்தோடும் பரத்தையர் புனல் விளையாட்டில் தம்முள் கூறுவது.

372. தன்னை வியந்து உரைத்தல்:— தலைவனைப் புல்லும் பரத்தையர்மாட்டு இவன் அருள் செல்லாது விலக்கேனாயின் என் மாட்டு

இவனைத் தந்து அழுகின்ற இவன் மனைக்கிழத்தி ஆகின்றேன் எனப் பரத்தையர் தலைவி தன்னை வியந்து உரைப்பது.

373. நகைத்து உரைத்தல்:— அது கேட்ட தலைவி பரத்தையர் தலைவியை நோக்கி இவள் வருவது அறியாது தன்னைப் புகழ்ந்து கொள்ளுகிறாள் என்று நகைத்துக் கூறுவது.

374. நாணுதல் கண்டு மிகுத்து உரைத்தல்:— தலைவனைப் புனலாடவிட்டுத் தனியே வைகும் தலைவி இது தலைவற்குத் தகாத பழியாம் என்று நாணி அதனை மறைத்திருந்தமை கண்ட தோழி, "இவள் கற்பு நல்ல தாயாம் இயல்பினை உடைத்து" என்று சிறப்பித்துக் கூறுவது.

375. பாணன் வரவு உரைத்தல்:— தனியே இருந்து வருந்தும் தலைவியை நோக்கி, "நல்லாய் நம் தலைவற்குத் துயிலெழும் மங்கலம் பாட விறலியும் பாணனும் யாழைக் கொண்டு வந்து நின்றார்கள். அவர்கள் துணையில்லாதேமை அறிந்திலர் போலும்" என்று தோழி பாணன் வரவைத் தலைவிக்கு உரைப்பது.[1]

376. தோழி இயற்பழித்தல்:— இங்கனம் பாணன் வரவுரைத்த தோழி, இவள் வருந்தத் தலைவன் அயலிடத்து வைகுதலால் தகுதியுடையவனாய் இருந்திலன் என்று குறை கூறுவது.[2]

377. உழையர் இயற்பழித்தல்:— தோழி இயற்பழித்துக் கூறக் கேட்டு, "தன்னிடத்து அன்புடைய நெஞ்சத்துத் தலைவி மயங்கப் பரத்தையர் இடத்துச் சென்றுள்ள தலைவன் வரம்பிலன் என்று உழையர் தலைவனை இயற்பழித்துக் கூறுவது.

378. இயற்பட மொழிதல்:— நம் பொருட்டுத் தழையேந்திப் புனத்தின்கண் அன்று வந்த தலைவன் என் நெஞ்சத்தினின்று நீங்கான். நீங்கள் கொடுமை கூறல் என்னோ எனத் தலைவி தலைவனை இயற்பட மொழிவது.

379. நினைந்து வியந்துரைத்தல்:— தலைவியைப் பிரிந்து பரத்தையரிடத்து இருத்தல் மிகவும் அரிது என்று தலைவன் (தலைவியை) நினைந்து வியந்து கூறுவது.

380. வாயில் பெறுது மகன்திறம் நினைதல்:— பரத்தையரைப் பிரிந்து தலைவியின் நினைவோடு வந்த தலைவன் வாயில் பெறுது நின்று, அமுதத்தை ஒத்த மகன் வந்து என்னை அணைகிறான் இல்லை, யான் எவ்வாறு தலைவியை நண்ணுவது என்று வாடி நெஞ்சொடு கூறுவது.

---

1. தலைவின் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தையர் மாட்டுச் சென்றதை அறியாத விறலியும் பாணனும் வந்து நிற்க, தலைவி இவர் நம்மை நகையாடி வந்தார் என்று முனிந்தாளாகத் தோழி இவர்கள் தலைவன் செயலை அறிந்தார் கள்ளலர் என்றும், தலைவற்கு இயல்பு நம்மிடத்து வருதலும் அவரிடத்துச் சேர்தலும் இயல்பு என்றும் கூறி தலைவியின் சினத்தை ஆற்றுவித்தாள் என்பது.

2. தலைவன் நல்க வேண்டிய இடத்து நல்காதிருத்தலும், வேண்டா இடத்து நல்கி இருத்தலும் தகுதியன்று என்பது.

381. **வாயிற்கண் நின்று தோழிக்குரைத்தல் :— வாயில் பெறாது மகன் திறம் நினையாநின்ற தலைவன், "நல்ல நாட்டுப் பொலியும் மகளிர்தம் கண் இணையான் வந்த அச்சத்தால் உண்டாகிய மயக்கத்தால் நேர்ந்த வட்டத்தை நீக்காத இவ் விரதம் யாது" என வாயில் வேண்டித் தோழிக்குக் கூறுவது[1].**

382. **வாயில் வேண்டத் தோழி கூறல் :—"பண்டு நீ வரும் வழியில் ஆளிக்கு அஞ்சாமலும் இருளைப் பொருட்படுத்தாமலும் கன்றை அகன்ற பசுவைப் போல் (புனிற்று ஈற்றுப் போல) எம்மிடம் வந்தாய். இப்போது எம்மோடு பொருந்தாதார் தெருவில் தேர்மேல் ஏறிப் போகின்றீர். இது நின் அருள் என்று தலைவனை நோக்கி அவன் கொடுமையைத் தோழி கூறுவது.**

---

1 இதற்குப் பேராசிரியர் கொடுத்த பாட்டும் அதன் விளக்க உரையும் இனிமை பயப்பதாகலின் அவை கீழே தரப்படுகின்றன:

பாட்டு: கயல்வந்த கண்ணியர் கண்ணிணை யால்மிகு காதரத்தால்
மயல்வந்த வாட்டம் அகற்று விரதமென் மாமதியின்
அயல்வந்த ஆடர வாடவைத் தோனம் பலநிலவு
புயல்வந்த மாமதிற் றில்லைநன் னாட்டுப் பொலிபவரே.

விளக்கவுரை:—தில்லை நன்னாட்டுப் பொலிபவர் அகற்றாத என இயையும். பொலிபவாக்கு என்னும் நான்கனுருபு விகார வகையால் தொக்கதெனினும் அமையும். இது முன்னிலைப் புறமொழி. இதனுள், 'கயல்வந்த கண்ணியர்' என்றது தலைமகளை. 'தில்லைநன்னாட்டுப பொலிபவர்' என்றது தோழியை. இனி, மதிக்குவமை தலைமகளும், அரவிற்குவமை தலைமகனும், ஈசனுக்குவமை தோழியும் என்றாக்கி, அவ்வகைத்தாகிய பாம்பையும் மதியையும் தம்மிற் பகையறுத்து ஓரிடத்தே விளங்க வைத்தாற்போல என்னுடன் அவட்குண்டாகிய வெறுபபைத் தீாத்து விளங்க வைத்தல் உனக்குங் கடன் என்றாயிற்றென உள்ளுறை காணக. மதியை அரவேதம் குறித்து வந்தாற் போலத் தலைமகளைத் தலைமகனேதம் குறித்து வருதலாவது தலைமகளுக்கு ஊடல் புலவி துனி என்னும வெறுப்புத் தோன்றுதற்குத தக்க காரணங்களைத் தலைமகன் உளனாக்கக் கொணடு வருதல். அரவைக் கண்டு மதிக்கு அச்சம் தோன்றினாற் போலத் தலைமகனைக் கண்டு தலைமகளுக்கும் ஊடற் புலவி துனியென்னும் வெறுப்புத் தோன்றிற்று; ஆதலால் அத் தலைமகனையும் தலைமகளையும் மதிக்கும் அரவுக்கும் ஒப்பச் சிலேடித்த சிலேடைக்கு மறுதலையாகாது, "தேவர் அனையர் கயவா" (திருக். கயமை. 3) எனறார் போலவாம் என்க. கயல் வந்த கணணியர் கண்ணிணையால் வந்த அச்சததால் வந்த மயக்கத்தால் வந்த வாட்டம். இவனுக்கு வருதற்குக் காரணம் தலைவி பராமுகம் செய்யும்படி தான வருந்துதல. இதனைத தீர்த்தல் தில்லை நன்னாட்டுப் பொலியும் மகளிாககுக் கடன் என்றான் என்க. அது:

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத தானே மருந்து —(திருக். புணர்ச்சி மகிழ்தல், 3)

என்றும்,

துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர் நுண்டாது போர்க்குங் கானல்
நிறைமதி வாண்முகத்து நீள் கயற்கண் செய்த
உறைமலி உய்யா நோயூர் சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்!
(சிலப். கானலவரி.)

என்றும், சொல்லியவாறு போலக் கண்ணிலுண்டாகிய நோய்க்குக் கண்ணே மருந்தாம என்று சொல்லியவாறும் எனக்கொள்க. மெய்ப்பாடு அழுகை; பயன்: வாயில் கோடல், நெஞ்சொடு சொல்லியது.

383. தோழி வாயில் வேண்டல்:— ஒரு குடைக் கீழ் உலகெலாம் வியந்து போற்ற இருந்தவன் அன்று நம் புனத்தில் யானையைக் கடிந்த விருந்தினன்.[1] தன் பெருமையை நினையாது வாயிற்கண் வந்து வேட்கை சிறப்ப ஒன்றும் வாய் திறவாது நிற்கின்றான், என் செய்வது என்று தோழி தலைவியிடம் வாயில் வேண்டுவது.

384. மனையவர் மகிழ்தல்:— தோழி வாயில் வேண்டத் தலைமகள் துனித்த (கோபித்த) நோக்கம் கண்டு உவகை தரத் தலைவன் வந்தான் என்ற அளவில் இவள் கண்கள் சிவந்தன என்று மனையவர் தம்முள் மகிழ்ந்து கூறுவது.

385. வாயில் மறுத்துரைத்தல்:—மனையவர் தலைவியின் துனிகண்டு மகிழ, "உலாத்தரும் இந் நடைமணியை (மகனை) நமக்குத் தந்த பின்னர் நம் ஆயத்தார் முன்னே நம் தலைவன் இன்று நம் வாயிலைக் கண்டான்; இதுவன்றோ அவனருள்" எனத் தோழிக்குத் தலைவி வாயில் மறுத்துக் கூறுவது.[2]

386. பாணனொடு வெகுளுதல்:— தோழிக்கு வாயில் மறுத்த தலைவி, "வாயில் வேண்டிய பாணனொடு தலைவன் எம்மிடத்து நீங்காத பெரியன் என்று நீ சொல்ல வேண்டுமோ? அது கிடக்க, கொல் சேரியில் ஊசி விற்றுப் புலையா எம் இல்லத்து வண்ண வண்ணப் பொய் கொண்டு, நிற்கலுற்றோ நீ போந்தது" என்று வெகுண்டு கூறுவது (நீ எங்களுக்குத் தலைவன் செய்தியைச் சொல்வது கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல).

387. பாணன் புலந்துரைத்தல்:—அது கேட்ட பாணன், "அன்னாய்! வெகுளாதே, நீ வாழ்க! யான் செல்லுவதற்கு நின் அடியை வலம்வந்து விடை பெறுகிறேன்" என்று புலந்து கூறுவது.

388. விருந்தொடு செல்லத் துணிந்தமை கூறல்:— "யாவருக்கும் வாயில் நேராது வெகுண்டுரைத்தலால் தழல் வேல் போல் மிளிர்ந்து முத்தம் பயக்கும் இவள் கண்கள், 'விருந்தொடு வந்தான்' என்று சொல்லுமளவில், பண்டைய நிறமாகிய கருங்குவளையினது செவ்வி பரந்து மேவின; என்ன மனையறக் கிழத்தியோ என்று இல்லோர் தம்முள் கூறுவது.

389 ஊடல் தணிவித்தல்:— வருவிருந்து ஏற்றுக் கொண்ட தலைவியினிடம் சென்று, 'நம்முடைய தோன்றலை (புதல்வனை)த் தனக்குத்

---

1 சிற்றில் இழைத்து விளையாடும்போது தலைவன் விருந்தாய்ச் சென்று நின்றானாகலின் விருந்தினன் என்றான். வாயில் பெறுமல் தலைவன் நிற்கத் தோழி சொன்னது என்பது பழைய உரை. 290-ம் துறை குறிப்பினைப் பார்க்க.

2 புதல்வனைத் தந்த பின்பு புலத்தல் முறைமையன்றாயினும் மணிவாள் நகையர் முன்பு வாயில் நேர்தல் பெண்மையன்றென மறுத்தாள் போலும். உலாத் தரும் புதல்வன் என்றமையால் இவன் உலாத்தருமளவும் புறத்தொழுக்கத்தே நின்றான் என்பது. நடைமணி எனவே நம்மை வேண்டானாயினும் மாணிக்க நடை பெற்றாலொத்த தன் புதல்வனை வேண்டான் ஆயினான் பரத்தையர் மேல் வைத்த அன்பினால் என்பது—பழைய உரை.

துணையெனக் கொண்டு வந்து தோன்றுதலால், நின் உள்ளத்துக் கவலையை ஒழித்துத் தலைவனுக்குப் பணிசெய் என்று தோழி தலைவியின் ஊடல் தணிவிப்பது.

390. அணைந்த வழி ஊடல்:— தோழியால் ஊடல் தணிவிக்கப் பெற்றும், பள்ளியிடத்தாளாகிய தலைவி, "நீ செய்கின்ற இதனை நின் காதலிமார்களாகிய இளையார் அறியின் நின்னை வெகுள்வார். அது கிடக்க, யாம் மேனி முழுவதும் சிறுவனால் உண்டாக்கப் பெற்றபால் புலப்படும் தன்மையினை உடையேம். ஆதலின் நினக்குத் தகேம். மேலும் யாமும் நீ செய்கின்ற நாணின்மையோடு கூடிய கள்ளத்தை விரும்பேம். அதனால் என் காலைத் தொடாதே ஒழி, என்னைத் தொடாவும் வேண்டாம்; என் கையை விடுவாயாக என்று தலைவன் அணைந்த வழி ஊடி நிற்பது.

391. புனல் ஆட்டுவித்தமை கூறிப் புலத்தல்: இங்ஙனம் தலைவன் அணைந்தவழி ஊடிய தலைவி, "பலரும் அறிய ஒருத்தியைப் புனல் ஆட்டுவித்து அது செய்தார் போல என் மனைக்கண் வந்து நிற்கின்ற இது எனக்குப் பொறுத்தல் அரிது என்று புலந்து நிற்பது.

392. கலவி கருதிப் புலத்தல்:— ஊடல் தீர்க்கத் தலையளி செய்த தலைவனோடு எம் சிறிய இல்லின்கண் வந்து அன்று நீ செய்த தலையளி அன்று வேண்டுமாயினும் இன்று உன் திருவருள் நீ வந்த இத்துணையே சாலும். வேறு வேண்டுவதில்லை என்று கலவி கருதிப் புலத்தல்.

393. மிகுத்துரைத்து ஊடல்:—நீ விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுமிய குடியிலுள்ளாய், எம் போல்வாரிடத்து இவ்வாறு புணர்தலை விரும்புதல் நுமக்கு விழுமிய அல்ல என மிகுத்துரைத்து தலைவி ஊடா நிற்பது.

394. ஊடல் நீட வாடியுரைத்தல்:— தணிக்கத் தணியாது மிகுத்துரைத்துத் தலைவி மேன்மேலும் ஊடாநிற்ப, 'அன்று அம்மலையிடத்துத் தன்னை எய்துதற்கோர் உபாயம் இன்றி வருந்தா நிற்ப யான் உய்யும் வண்ணம் தன் இணை மலர்க் கண்ணினது இனிய நோக்கத்தைத் தந்தருளி, என்னைத் தன் வயமாக்கிய நம் பெண் அமுதம் அதுவன்று; இது நம்மை வருத்துவதோர் மாயமாம்" எனத் தன் நெஞ்சிற்குச் சொல்லி வாடி நிற்பது.

395. துனி ஒழிந்து உரைத்தல்:— ஊடல் நீடலால் தலைவன் ஆற்றாமை கண்ட தலைவி, "அன்று நம் குன்றத்து மிக்க இருளின்கண் அரி திரண்டு யானை வேட்டஞ் செய்யும் அதரகத்துத் தம் வேலே துணையாக வந்து இயல்பாகப் பொருந்திய அன்பை நமக்குத் தந்தவற்கு இன்று நாம் உடம்படாது நிற்கும் நிலை என்னும்" எனத் துனி ஒழிந்து புணர்ச்சிக்கு உடம்பட நிற்பது.[1]

---

1. செயற்கையாகில் அப்படி வந்து வருந்த வேண்டியதில்லை; ஆதலால் அவன் அன்பு இயற்கை அளவிலே அமைந்தது என முன் நிகழ்ந்தது கூறி நெஞ்சு நெகிழ்ந்தது—பழைய உரை.

396. புதல்வன் மேல் வைத்துப் புலவி தீர்த்தல்:— துனி ஒழித்துக் கூடிப் பிரிந்தவழிப் பின்னும் பரத்தைமாட்டுப் பிரிந்தான் என்று கேட்டுப் புலந்து வாயில் மறுக்க வாயிற்கண் நின்று விளையாடும் புதல்வனை எடுத்தணைத்து அது வாயிலாகக் கொண்டு தலைமகன் செல்லா நிற்ப, அப் புதல்வனை வாங்கி அணைத்துக் கொண்டு அவன் வாயின் தம்பலம் தன் மேல் படுதலான், "எல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டு வந்தோ நீ எம்மைக் கொண்டாடுவது, அது கிடக்க, இதனை நினக்குத் தந்தவாறு சொல்வாயாக" எனப் புதல்வன் மேல் வைத்துத் தலைமகள் புலவி தீராநிற்பது.

397. கலவியிடத்தூடல் :— புதல்வனை வாயிலாகப் புக்குப் புலவி தீர்த்துப் புணர்தலுறுநின்ற தலைவனைத் தலைவி ஒரு காரணத்தால் வெகுண்டு மார்பகத்து மிதிப்ப, அவ் வாகத்தை எங்கைய தென்றே கருதித் தன் சென்னியைத் தந்தனள்; அதனால் தலைவனைப்போல் கள்வன் இல்லை என்று கருதித் தலைவியின் கண்கள் கண்ணீர்த் துளித் தாரையாகிய முத்தமாலையைப் பொருந்தின. அதனால், இவள் புலத்தற்குக் காரணம் வேண்டுவதில்லை போலும்.[1]

398. முன் நிகழ்வு உரைத்து ஊடல் தீர்த்தல் :— "யாம் கொடிய நெறியைச் சென்று சிறிய ஊரின்கண் மரையதட் பள்ளியின்[2] இச் செறிந்த மெல்லிய முலைகள் என் மார்பிடை வந்தடாக்கத் தங்கிய சிறிய துயிலுக்கு மாறு கண்டிலம்; அதனை நீ உள்ளி அறிதியோ" என முன் நிகழ்வு உரைத்து ஊடல் தீரா நிற்பது.

399. பரத்தையைக் கண்டமை கூறிப் புலத்தல்:— முன் நிகழ்வு உரைத்து ஊடல் தீர்ந்து இன்புறப் புணரப் பெற்ற தலைமகள் பிறர்க்கும் நீ இவ்வாறு இன்பம் செய்தி என்று கூற, நின்னையன்றி யான் வேறொருத்தியையும் அறியேன் என்ற தலைவனுக்கு, "நின் பரத்தை போகின்றவள், நம் வாயிற்கண் சிறு தேர் உருட்டி விளையாடுகின்ற புதல்வனைக் கண்டு நின் மகன் என்று ஐயுற்றுத் தழுவ, 'நீ ஐயுற வேண்டா; அவன் உன் மகன்; உறவு மெய்யாகிய உறவே; ஈதும் உன் இல்லமே; ஈண்டு வருவாயாக' என்று யான் கூற, அது கேட்டுத் தான் நாணிப் போயினள்; யான் அவளை அறிவேனாக நீ மாயங் கூற வேண்டுவதில்லை" எனத் தான் பரத்தையைக் கண்டமை கூறிப் பின்னும் அவனோடு புலவாநிற்றல்.

---

1. பிள்ளை வாயிலாகப் புக்க தலைவனை ஏற்றுக்கொண்டு பள்ளியிடத்தாளாக மேற் சொன்ன வகையே உள் நின்று எழுந்த பொருமை காரணம் பெற்றுத் தோன்றியது; தோன்றத் தலைவன் ஆற்றானயின், அவ் வாற்றாமை கண்டு சிவப்பாற்றுவித்தல். தலைவியிடத்தும் தலைவனிடத்தும் இவ் வகை சொன்னாள் என்பது. தலைமகன் இது சொன்னான் எனினும் அமையும். என்னை?

 மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
 நினையும் காலைப் புலவியுள் உரிய

(தொல். பொருள். பொருளியல். 33)

என்றார் தொல்காப்பியனார். தலைமகள் அவ் வகை செய்யவும் பெறும் என்பது.
—பேராசிரியர்.

2. (1) மரையதட் பள்ளி : மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி—பெரும். 89. மரை—ஒரு வகை மான்.

400. ஊதியம் எடுத்துரைத்து ஊடல் தீர்த்தல்:—பரத்தையைக் கண்டமை கூறிப் புலந்து வேறுபட்ட தலைவிக்கு, "இத் தன்மையனும், யாவர்க்கும் ஊதியமாகலின், அன்பால் அன்றி அருளால் பரத்தையர்க்கும் தலையளி செய்ய வேண்டும் அன்றே; புறப் பெண்டிரைப்போல் யாம் அவனோடு புலக்கற்பாலம் அல்லேம்; அவன் வரும் பொழுது எதிர் தொழுதும் போம் பொழுது புறந் தொழுதும் புதல்வனைப் பயந் திருக்கையன்றே, நமக்குக் கடனாவது" எனத் தோழி தலைவனது ஊதியம் எடுத்துரைத்து அவளை ஊடல் தீர்த்து அவனோடு பொருந்தப் பண்ணு நிற்பது.[1]

---

1. இதற்குரிய திருக்கோவையார்ப் பாட்டு ஐவகைத் திணைக்கும் உரித்தாகலின் பொதுவகைத்தெனப் பெறும். அப் பாட்டும் பொருளும் படித்தின்புறத் தக்கனவாகலின் கீழே தரப்படுகிறது.

   காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
   சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
   தாரணி கொன்றையன் தக்கோர் தம்சங்க நிதி விதிசேர்
   ஊருணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே.

பொருள்:— தலைவன் வேண்டாதே கொடுத்தலின் மேகத்தொடு (காரொடு) ஒப்பாவான், வேண்டக் கொடுத்தலின் அழகிய கற்பகத்தோடு ஒப்பாவான். நுண்ணிய கல்வியன் ஆதலின் கற்றவர்க்கு நல்ல உசாத் துணைவன் ஆவான். இசை உணர்வால் பாணர்க்கு அவர் சுற்றத்தோடு ஒப்பாவான். நினைத்தது கொடுத்தலின் சீரை உடைய நல்ல சிந்தாமணியோடு ஒப்பாவான். அழகிய தில்லைக்கண் சிவனது திருவடிக்கு மாலையாகி அவனால் அணியப்படும் கொன்றைப் பூவின் தன்மை உடையவன் ஆவான். சான்றோர்க்குத் தொலையாத நிதியாக இருத்தலின் சங்கநிதியோடு ஒப்பாவான். நட்டார்க்கும் பகைவர்க்கும் தப்பாது பயன் கொடுத்தலின் விதியோடு ஒப்பாவான், சுற்றத்தார்க்கு வேண்டிய செய்ய இருத்தலின் அணித்தாகிய ஊருணியோடு ஒப்பாவான், அதனால் வரைவின்றி எல்லோர்க்கும் இவன் பெறும் பயன் ஆகின்றான்.

5. கல்லாடர் பாடிய அகப்பொருள் துறைகள்

சங்க நூல்கள் போன்ற நடைமிடுக்குடன் அமைந்துள்ளது, கல்லாடர் வழங்கிய கல்லாடம். இந் நூலைக் கற்பது தமிழ்ப் புலமைக்கு உரையாணியாக முன்பு கருதப்பட்டது

திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரின் பெருஞ்சிறப்புகளை உலகம் அறியச் செய்வதற்காக அதில் இடம் பெற்ற துறைகளுள் நூறு துறைகளைத் தேர்ந்து, ஆசிரியப்பாவால் ஆக்கிய பெருநூல் இது என்பது செவிவழிச் செய்தி. திருக்கோவையாரில் தில்லைப் பெருமானைச் சிறப்பித்தாங்குக் கல்லாடம் மதுரைச் சொக்கநாதனின் தெய்விகத் திருவிளையாடல்களைப் போற்றி உரைக்கின்றது.

தேவார-திவ்யப் பிரபந்தப் பக்திப் பாடல்களில் அகப்பொருள் துறையமைதியுடைய பாசுரங்கள் பரவலாக இடம் பெற்றுள்ளன. கல்லாடமும் பக்திச் சுவையுடன் அகப்பொருள் துறைகள் சிலவற்றை எடுத்துச் சித்திரிக்கின்றது, தொல்காப்பியர் காலத்து அகப் பொருள்-கூற்றுகளைக் கோவை நூலாசிரியர்கள் நிரல்படத் தொகுத்துச் சென்றனர். கல்லாடரோ நூறு துறைகளைத் தேர்ந்து அமைக்கின்றார். எனவே, அகப்பொருள் காட்சிகளுள் சிலவற்றைச் சித்திரிப்பதையே நோக்கமாகக் கொண்டமைந்தது கல்லாடம் என்பது கருதத்தகும்.

1. தமர் நினைவு கூறி வரைவு கடாதல்
2. தாய் அறிவு கூறி வரைவு கடாதல்
3. பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்
4. பிரிவு அருமை கூறி வரைவு கடாதல்
5. இளமை கூறி மறுத்தல்
6. சுவடு கண்டு இரங்கல்
7. நற்றாய் வருந்தல்
8. செலவு நினைந்து உரைத்தல்
9. தூது கண்டு அழுங்கல்
10. அறத்தொடு நிற்றல்
11. பரத்தையிற் பிரிவு கண்டவர் கூறல்

12. கல்வி நலம் கூறல்
13. முன் நிகழ்வு உரைத்து ஊடல் தீர்த்தல்
14. நிலவு வெளிப்பட வருந்தல்
15. தேர் வரவு கூறல்
16. அழுங்கு தாய்க்கு உரைத்தல்
17. வெறி விலக்கல்
18. உலகியல்பு உரைத்தல்
19. மகிழ்ந்து உரைத்தல்
20. பிறை தொழுக என்றல்
21. ஆற்றுமை கூறல்
22. தன்னுள் கையாறு எய்திடு கிளவி
23. வேறு படுத்துக் கூறல்
24. காமம் மிக்க கழிபடர் கிளவி
25. இடம் அணித்து என்றல்
26. நின்குறை நீயே சென்று உரை என்றல்
27. இரவுக் குறி வேண்டல்
28. நகர் அணிமை கூறல்
29. அறியாள் போன்று நினைவு கேட்டல்
30. சுடரோடு இரத்தல்
31. இன்னல் எய்தல்
32. நெஞ்சொடு நோதல்
33. அல்லகுறி அறிவித்தல்
34. வேழம் வினுதல்
35. நலம் புனைந்து உரைத்தல்
36. உலகின்மேல் வைத்து உரைத்தல்
37. நாண் இழந்து வருந்தல்
38. தோழி இயற்பழித்து உரைத்தல்
39. பொழுது கண்டு இரங்கல்
40. மாவிரதியரொடு கூறல்
41. ஆடு இடத்து உய்த்தல்
42. இயல் இடம் கூறல்
43. அன்னத்தோடு அழிதல்
44. தலைவற்குப் பாங்கி தலைவி வருத்தம் கூறல்
45. சொல்லாது ஏகல்
46. தெளிதல்

47. மெலிவு கண்டு செவிலி கூறல்
48. பருவம் கண்டு பெருமகள் புலம்பல்
49. முகிலொடு கூறல்
50. தழை விருப்பு உரைத்தல்
51. விரவிக் கூறல்
52. ஊடல் தணித்தல்
53. குலமுறை கூறி மறுத்தல்
54. காவற்பிரிவு அறிவித்தல்
55. உள மகிழ்ந்து உரைத்தல்
56. புனல் ஆட்டுவித்தமை கூறிப் புலத்தல்
57. தன்னை வியந்து உரைத்தல்
58. புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்தல்
59. தலைவி தோழியொடு புலத்தல்
60. வழிபாடு கூறல்
61. ஆதரம் கூறல்
62. முகம் கண்டு மகிழ்தல்
63 ஆயத்து உய்த்தல்
64. சுற்பப் பயப்பு உரைத்தல்
65. மருவுதல் உரைத்தல்
66. பள்ளியிடத்து ஊடல்
67. வழிப்படுத்து உரைத்தல்
68. கடவிடை வைத்துத் துயர் அறிவித்தல்
69. பிரிவு இன்மை கூறல்
70. ஊடல் நீட வாடி உரைத்தல்
71. பங்கயத்தோடு பரிவுற்று உரைத்தல்
72. பதி பரிசு உரைத்தல்
73. தேருது புலம்பல்
74. மாலைப் பொழுதொடு புலம்பல்
75. வாய்மை கூறி வருத்தம் தணித்தல்
76. அயல் அறிவு உரைத்து அவள் அழுக்கம் எய்தல்
77. பிரிந்தமை கூறல்
78. கலக்கம் கண்டு உரைத்தல்
79. முன்பனிக்கு நொந்து உரைத்தல்
80. மறவாமை கூறல்
81. ஊடி உரைத்தல்
82. தோழி பொறை உவந்து உரைத்தல்

83. கலவி கருதிப் புலத்தல்
84. வறும் புனம் கண்டு வருந்தல்
85. நெஞ்சொடு வருந்தல்
86. கண் துயிலாது மொழிதல்
87. தலைவன் வரவு உரைத்தல்
88. இரங்கல்
89. ஐயம் உற்று ஓதல்
90. தலைவனோடு ஊடல்
91. உடன்பட உரைத்தல்
92. பரத்தையிற் பிரிவு உரைத்தல்
93. பாணனை வெகுளுதல்
94. பாணன் புலந்து உரைத்தல்
95. தோழிக்கு உரைத்தல்
96. பாங்கி அன்னத்தோடு அழுங்கல்
97. இரவு இடை விலக்கல்
98. பருவம் குறித்தல்
99. நெறிவிலக்கிக் கூறல்
100. ஆறு பார்த்து உற்ற அச்சக் கிளவி

6. சடகோபர் அருளிய திருவிருத்தத் துறைகள்

நம்மாழ்வார் எனப் போற்றும் சடகோபர் வழங்கிய திருவிருத்தம் நூறு பாடல்களை அந்தாதியாகப் பெற்றதொரு நூல். 'விருத்தம்' என்னும் சொல்லிற்கு செய்தி எனப் பொருள் கொண்டு, ஆழ்வார் தம் அன்பு மிகுதி முதலியவற்றை வெளியிட்டுப் பாடிய பிரபந்தம் ஆதலின் திருவிருத்தம் எனப் பெயராயிற்று என்பர் சிலர். இக் கருத்துக்கு அரண் செய்வது போன்ற குறிப்புகளை முதற் பாசுரத்திலும் இறுதிப் பாடலிலும் காணலாம். ஆயினும் ஆசிரியப்பாவினுலான பிரபந்தம் 'திருவாசிரியம்' எனப் பெயர் பெற்றது போல, விருத்தக் கலித் துறையால் அமைந்த இப் பிரபந்தமும் திருவிருத்தம் எனப் பெயர் பெற்றது என்பது பொருத்தமாகும்.

இத் திருவிருத்தமும் மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார் போன்று அகப்பொருள் அமைதியுடையது. கல்லாடம் போன்றே இதிலும் பற்பல அகப்பொருள்-காட்சிகள் இடம் பெறுகின்றன.

1. விண்ணப்பம்
2. தலைவியின் வேறுபாடு கண்ட தோழி வியந்து உரைத்தல்
3. பிரிவு ஆற்றாத தலைவி நெஞ்சு அழிந்து உரைத்தல்
4. தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு ஆற்றாது வருந்திக் கூறுதல்
5. வாடைக்கு நலிந்த தலைவியின் மாமை கண்டு தோழி இரங்குதல்
6. தலைவியின் எழில்நலம் கண்டு வியந்த தலைவன் கூற்று
7. கால மயக்கு
8. தலைவன் பொருள்வயின் பிரிதலைக் குறிப்பால் அறிந்த தலைவி தோழிக்கு உரைத்தல்
9. தலைவன் தலைவியின் நீங்கலருமை கூறல்
10. மதி உடம்படுத்தலுற்ற தலைவன் குறையுற உரைத்தல்
11. பிரிவு ஆற்றாத தலைவியின் வேறுபாடு கண்டு தலைவன் உரைத்தல்
12. தலைவி நெஞ்சொடு கலாய்த்துத் தன் ஆற்றாமை கூறுதல்
13. பிரிவு ஆற்றாத தலைவி இருளுக்கும் வாடைக்கும் இரங்குதல்
14. நலம் பாராட்டு

15. தோழி தலைவனது கருத்து அறிந்து உரைத்தல்
16. தலைவனைப் பிரிந்த தலைவி பாங்கியை நோக்கி இருள் வியந்து உரைத்தல்
17. தலைவி கடலை நோக்கித் தேர்வழி தூரல் என்றல்
18. கார் கண்டு அழிந்த தலைவியின் ஆற்றாமை கண்டு பாங்கி இரங்குதல்
19. செவிலி பழிக்கு இரங்குதல்
20. வெறி விலக்கு
21. ஏறுகோள் கூறி வரைவு கடாதல்
22. தோழி தலைவனை நகையாடுதல்
23. தலைவன் குறையுற உரைத்தல்
24. பிரிவு ஆற்றாத தலைவியின் ஈடுபாடு கண்ட செவிலி இரங்குதல்
25. தலைமகனது தாரில் ஈடுபட்ட தலைவி ஆற்றாத கூறுதல்
26. நகர் காட்டுதல்
27. தலைவி தார் பெற்று மகிழ்தல்
28. தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி இரங்குதல்
29. தலைவி அன்னத்தை வெறுத்து உரைத்தல்
30. தலைவி அன்னங்களையும் வண்டானங்களையும் தூது வேண்டுதல்
31. தூது செல்லாத மேகங்களைக் குறித்துத் தலைவி இரங்குதல்
32. தலைவன் போலி கண்டு உரைத்தல்
33. தலைவியின் ஆற்றாமைகண்டதோழி தலைவனை வெறுத்து உரைத்தல்
34. கூடலிழைத்து வருந்தும் தலைவியின் நிலையைப் பாங்கி தலைவற்கு உணர்த்தல்
35. தலைவி மாலைக்கு ஆற்றுபல் வாடை கண்டு இரங்குதல்
36. தோழி தலைவனது கொடுமை கூறல்
37. நற்றாய் தன் மகள் சென்ற சுரத்தின் அருமை கூறி இரங்குதல்
38. தலைவனைப் பிரிந்த தலைவி போலி கண்டு மகிழ்தல்
39. தலைவனது உருவெளிப்பாடு கண்ட தலைவி தோழிக்குக் கூறுதல்
40. இருள் கண்டு இரங்கிய தலைவி தோழியர்க்கு வரைவு விருப்பு உரைத்தல்
41. வாடைக்கு வருந்திய தலைமகளது கூற்று
42. தலைவி தலைவனது கண்ணழகில் ஈடுபட்டு வியந்து உரைத்தல்
43. தலைவனது உருவெழில் உரைத்த தலைமகளது கூற்று
44. தலைவி தலைவனது பெருமை உரைத்தல்
45. தலைவி தலைவனது நீரிடை உதவியை நினைந்து உரைத்தல்

46. நெஞ்சத்தைத் தூதுவிட்ட தலைவி இரங்குதல்
47. பிரிவாற்றாது வருந்தும் தலைவியின் நிலை கண்டு செவிலி இரங்குதல்
48. நல் நிமித்தம் கண்டு தான் ஆற்றியிருந்தலைத் தலைவி தோழிக்குக் கூறுதல்
49. இருளுக்கு ஆற்றாத தலைவி தோழிக்குக் கூறுதல்
50. தலைவன் மீண்டு வருகையில் பாகனொடு கூறுதல்
51. கடலின் ஓசைக்கு ஆற்றாத தலைவி இரங்குதல்
52. கால மயக்கு
53. கட்டுவிச்சி கூறுதல்
54. வண்டு விடு தூது
55. நலம் பாராட்டு
56. தலைவன் இரவிடைக் கலந்தமையைத் தலைவி தோழிக்கு உரைத்தல்
57. தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்
58. தோழி தலைவன் பெருமையை உரைத்துத் தலைவியை ஆற்றுதல்
59. இரவு நீடுதற்கு ஆற்றாத தலைவியைப் பற்றிச் செவிலி இரங்குதல்
60. தலைமகளின் இளமைக்குச் செவிலி இரங்குதல்
61. தோழி தலைவனது நீர்மையைத் தலைவிக்குக் கூறுதல்
62. தலைவியின் ஆற்றாமையைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்
63. தலைவனை இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிதல்
64. தலைவன் பேர் கூறித் தரித்திருந்தலைத் தலைவி தோழிக்குக் கூறி இரங்கல்
65. தலைமகள் நோக்கில் ஈடுபட்ட தலைவன் பாங்கனொடு கூறுதல்
66. தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்
67. தலைவன் பாங்கனுக்குத் தன் வலியழிவு உரைத்தல்
68. கால மயக்கு
69. மாலைக்கு இரங்கிய தலைவியைத் தோழி ஆற்றுதல்
70. இரவின் நெடுமைக்குத் தலைவி இரங்குதல்
71. செவிலி வெறுத்தலைத் தலைவி தோழியர்க்கு உரைத்தல்
72. இருளுக்கு ஆற்றாத தலைவி இளம் பிறை கண்டு தளர்ந்து உரைத்தல்
73. பிறையுடை மாலைக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சிக்குப் பாங்கி இரங்குதல்
74. தலைவனது தார்மணம் கொண்டுவரும் தென்றலைத் தலைவி மகிழ்ந்து உரைத்தல்
75. மதியுடம் படுக்கலுற்ற தலைவன் தலைவியையும் தோழியரையும் பதி வினாதல்

76. மாலை பெறுது வருந்தும் தலைவி மதிக்கு வருந்தி, நெஞ்சொடு கூறுதல்
77. தலைவி மாலைப்பொழுது கண்டு வருந்துதல்
78. பிரிவு ஆற்றாத தலைவி தலைவனது ஆற்றலைக் கருதி நெஞ்சு அழிந்து இரங்குதல்
79. தலைவனைப் பிரியாத மகளிரது சிறப்பைக் கூறித் தலைவி இரங்குதல்
80. பிரிவு ஆற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு இரங்குதல்
81. வெறி விலக்குவிக்க நினைந்த தோழி இரங்குதல்
82. உருவெளிப்பாடு கண்ட தலைவி தலைவனது கண்ணின் அழகுக்கு இரங்குதல்
83. அன்றிலின் குரலுக்கு ஆற்றாத தலைவியின் தளர்ச்சி கண்டு தோழி இரங்குதல்
84. தலைவி தலைவனைக் காண விரைதல்
85. மாலைப் பொழுது கண்டு வருந்திய தலைவி இரங்குதல்
86. தலைவனைப் பிரிந்த தலைவி இரங்குதல்
87. அன்றிலுக்கும் ஆழிக்கும் ஆற்றாத தலைவிக்குத் தோழி இரங்குதல்
88. போலி கண்டு அழிகிற தலைவி ஆற்றாமைக்கு இரங்குதல்
89. தலைவனது கலவிக்கு விரைகின்ற தலைவி இரங்குதல்
90. தலைவனைப் பிரிந்த தலைவி காலத்தின் நீட்டிப்புக்கு ஆற்றாது உரைத்தல்
91. தோழிக்குத் தலைவி தன் கற்பு உணர்த்தி அறத்தொடு நிற்றல்
92. வேந்தற்கு உற்றுழிப் பிரிவில் தலைவனைக் குறித்துத் தலைவி இரங்குதல்
93. இருள் கண்டு அஞ்சுகிற தலைவி தோழியையும் செவிலியரையும் வெறுத்தல்
94. தலைவியைக் கண்ட பாங்கன் தலைவனை அடுத்து வியந்து கூறுதல்
95. தலைவி அறத்தொடு நிற்கத் துணிதல்
96. தலைவி வெறி விலக்குவிக்க நினைத்தல்
97. தலைவன் பிரிவில் துயில் கொள்ளாத தலைவி இரங்குதல்
98. தலைவனது அருமை நினைந்து கவல்கிற தலைவிக்குத் தோழி கூறுதல்
99. தலைவனிடத்துள்ள அன்பின் உறுதியைத் தலைவி தோழிக்குக் கூறுதல்
100. நூற்பயன்

7. கம்பராமாயணத்தில் அகப்பொருட் கருத்துகள்

கம்பனும் அகப்பொருள் நெறியும் — ஐந்திணை வளம் — சான்றோர் கவியில் ஐந்திணைநெறி — இராமனும் சீதையும் கண்ட முதற்காட்சி — இருவரும் உற்ற காதல் நோய் — வில்லேற்றிய மணம் அசுரமணமாமா — மணமண்டபக் காட்சி — இராமன்-சீதை திருமணம் — கற்புத் திருமணம் — சூர்ப்பணகையின் காதல் பேச்சு மரபுக்கு மாறுபட்டது — இராவணன் கொண்ட விபரீதக் காதல் — இராவணன் செய்கை அறமாகாது — அயோமுகியின் அடாமுறைக் காதல் — இராமன் சீதையர் இன்ப வாழ்க்கை — இல்வாழ்க்கைச் சித்திரம் — வன வாழ்க்கையில் அன்பும் இன்பும் வெளிப்படுதல் - கோதாவரிக்கரையில் தலம் பாராட்டல் — சீதையின் பிரிவும் இராமன் சோகமும் — பர்ணசாலையைக் கண்ட இராமனின் நிலை — இராமனின் இரங்கல் — இரவுத் தனிமையில் இராமனின் ஏக்கம் — கலன் கண்டு உற்ற சோகம் — கார் காலத்தில் இராமன் உற்ற பிரிவுத் துயர் — சீதையின் துயரநிலை — ஆடவர் மகளிர் இன்பக் களியாட்டங்கள் — புலவிநுணுக்கம் — ஊடலும் கூடலும் — இன்பமும் அறநெறிப்பட்டதே.

கம்பனும் அகப்பொருள் நெறியும்

வான்மீகி முனிவர் வடமொழியிலே வழங்கிய இராமகாதையைப் பொருளாகக் கொண்டு காவியம் பாடியவன் கம்பன். எனவே, இக் காவியத்தில் சங்கப் பாடல்களிற் காணப்படுவது போன்ற அகப் பொருள் நிகழ்ச்சிகளைக் காண இயலாது. ஆயினும் காலத்தொடு பொருந்தத் தமிழ்நாட்டுப் பண்பாடுகளையும் போற்றி இராமகாதையில் புதுமை புகுத்திய கம்பன், பொருத்தமான இடங்களில் தமிழ் நெறியாம் அகப் பொருள் நிகழ்ச்சிகளையும் அமைத்துள்ளான்.

சங்க காலத்தில் அகப்பொருள் பாடல்களும் நூல்களும் மிகுந்து விளங்கின; தொடர்ந்து சங்கம் மருவிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலும் மூன்றிலொரு பங்கு அகம் தழுவிக் காணப்படுகின்றன; பின்னர் கோவை, உலா, மடல், கலம்பகம் போன்ற இலக்கியங்களாகவும் உருவெடுத்து அகப்பொருள் புது நெறியில் புகுந்து உலாவியது; பக்தி இலக்கியம் மேலோங்கிய காலத்தில் கடவுளிடம் கொண்ட காதலாய்த் தனிக்கோலம் கொண்டது. இவ்வாறு பல வகையாலும் பண்டைய அகப்பொருள் நெறி வளர்ந்து மேலோங்கி இருந்த காலத்தில் கம்பனின் பெருங்காவியம் தோன்றியது. ஆகவே,

முந்தையோர் வழிதுறைகளை அடியொற்றித் தம் காவியப் போக்கிற்கு ஏற்றவகையில் அங்கங்கே அகப்பொருள் கருத்துகளையும் காட்சிகளையும் கம்பன் படைத்துள்ளான்.

ஐந்திணை வளம்

காப்பியத் தொடக்கமாகிய நாட்டுப் படலத்தில் மருதநில வளத்தினையும் ஏனைய முல்லை, குறிஞ்சி நில வளங்களையும் சிறப்புறக் கம்பன் பாடியுள்ளான்; தாடகை வதைப் படலத்தில் பாலைநிலக் காட்சிகளைப் பாங்குற அமைத்துள்ளான். நில வருணனை போலவே பெரும் பொழுதாகிய பருவங்களையும், சிறு பொழுதாகிய காலை, மாலை, இரவு முதலியவற்றையும் கதைப் போக்கில் அவற்றைக் குறிக்க நேர்ந்த இடங்களில் எல்லாம் எழிலுற வருணிக்கும் காட்சிகளைக் காவியம் முழுமையிலும் பரக்கக் காணலாம். 'தெய்வம், உணா, மா, மரம், புள்' முதலிய கருப்பொருள்களும் ஏற்ற இடங்களில் கவினுறப் புனையப்பட்டுள்ளன.

சான்றோர் கவியில் ஐந்திணை நெறி

கோதாவரி நதியின் போக்கினைச் சான்றோர் கவியுடன் ஒப்புக் கூறிய இடத்திலே கம்பன், அக்கவிகள் எல்லாம், 'அவி அகத் துறைகள் தாங்கி ஐந்திணை, நெறியளாவி' உள்ளன என்கிறான். இங்கே 'ஐந்திணை நெறி' என்றது களவு, கற்பு எனப் பண்டையோர் கொண்டொழுகிய ஒழுக்கங்களே. ஐந்திணை நெறி அளாவுதலாவது ஐவகை நிலங்களுக்குரிய முதற் பொருள் கருப் பொருள்களோடு புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஒழுக்கங்களையும் அவற்றின் கூறுகளையும் சிறப்பித்துக் கூறுதலாகும்.

காவிய மரபில் அகப்பொருள்

காவிய மரபுகளும் கம்பன் காலத்தில் வளர்ந்து பெருகியுள்ளன. பெருங்காவியப் போக்குப் பற்றித் தண்டியலங்காரம்,

'மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்று
இன்னன புனைந்த நன்னடைத்தாகி'

வருதல் வேண்டும் என்று சுட்டுகிறது. இங்குக் குறித்தவையனைத்தும் கம்பன் காவியத்தில் ஏற்ற இடங்களில் ஏற்புடையவாயும் மிக ஏற்றமுடையவாயும் அமைந்துள்ளமை காணலாம். சிறப்பாகப் பாலகண்டத்துள் வரும் வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், புனல் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் என்பவை அமைக்கப்பட்டதிறம் காவிய மரபினை நன்கு எடுத்துக் காட்டும். சங்கப் பாடல்களில் காணும் புனலாட்டு, உண்டாட்டு என்பவற்றின் விரிவே கம்பன் தரும் காட்சிகள்.

ஆடவர் பெண்டிரின் அகவொழுக்கம் இக் காவிய நாடகத்தில் புறக்காட்சியாய்க் காணுமளவுக்குச் சித்திரித்துக் காட்டியுள்ளான் கம்பன். இந்த மரபு பற்றிய படலச் செய்திகளைக் கொண்டு சிருங்கார ரசத்தைக் கம்பன் மிகுத்துப் பாடியுள்ளான் என்று கருதுவாரும் உண்டு. தமிழில் வடநூல் மரபுகளும் வேர்விட்டு வளர்ந்து வந்த நிலையில் காவியமரபு பற்றியே கம்பனும் சிறப்பிக்கின்றான் என்று கொள்வதே பொருத்தமாகும்.

இராமனும் சீதையும் கண்ட முதற்காட்சி

இராமனும் சீதையும் சந்திக்கும் முதற்காட்சி கைக்கிளை யமைதி பெறக் கம்பனால் அமைக்கப்பட்டுள்ளது. விசுவாமித்திர முனிவனைத் தொடர்ந்து இராம-இலக்குவர் மிதிலை நகர வீதியிலே சனக மன்னனைக் காண்பதற்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது கன்னி மாடத்தின் மேலே சீதை அன்னங்கள் கூடி விளையாடும் துறைக்கு முன் பாக நின்று கொண்டிருந்தாள். அவள் பொன்னொளியும் பூவின் அழகும் தேனின் இன் சுவையும் கலந்த ஒரு கலவை போல அழகே யுருவாய்க் காணப்பட்டாள். அன்னங்கள் இணைந்து விளையாடும் காட்சி வீதி வழி வந்து கொண்டிருந்த முனிவர் முதலியோரையும் கவர்கிறது. அவர்களும் அக் காட்சியைக் கண்டு அதன் பக்கத்தில் சற்று நின்றனர். இந்த நிலையில் இராமனின் பார்வை கன்னிமாடத்தின் மேல் நிற்கும் சீதையின்மேல் படுகிறது; அப்பொழுது அவளும் அவனை நோக்கினள். இருவரும் நோக்கத்தினாலேயே காதற்குறிப்புத் தோன்ற மனம் ஒன்றுபடுகின்றனர். கம்பன் தரும் இக் காட்சியை அவன் வாக்காலே காணலாம்.

'பொன்சேர் மென்கால் கிண்கிணி யாரம் புனையாரம்
கொன்சேர் அல்குல் மேகலை தாங்கிக் கொடியன்னாள்
தன்சேர் கோலத்து இன்னெழில் காணச் சதகோடி
மின்சே விக்க மின்னர செனனும் படிநின்றாள்.
(பால. மிதிலைக். 31)

'கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவையெல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழிகொண்டாள்
சொல்லும் தன்மைத் தன்றது குன்றும் சுவரும் திண்
கல்லும் புல்லும் கண்டுரு கப்பெண் கனிநின்றாள்.'
(பால. மிதிலைக். 32)

பெண்களின் நாயகமாய் விளங்கும் சீதை, தோழியர் தன்னைச் சூழக் கன்னிமாடத்தில் நின்ற காட்சி இதுவாகும். இந்த நிலையில் இராமன் சீதையர் உள்ளம் ஒன்றுபடுகிறது.

'எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'.
(பால. மிதிலைக். 35)

'பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.'
(பால. மிதிலைக். 36)

'மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற்கு உயிரொன் றாயினர்
கருங்கடற் பள்ளியில் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?'
(பால. மிதிலைக். 38)

இராமன் சீதை 'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்;' 'ஒருங்கிய இரண்டுடற்கு உயிர் ஒன்றாயினர்' என்னும் கம்பன் வாக்குகளால் இருவரும் ஒருவரையொருவர் விரும்பி உள்ளத்தால் ஒன்றுபட்ட நிலையினராயினர் என்பது இயற்கைப் புணர்ச்சி மரபிற்கு ஒத்ததாயுள்ளது.

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே.'
(தொல். களவு. 2)

என்று தொல்காப்பியர் பல பிறவிகளிலும் ஒன்றாயிருக்கும்படி உயர்ந்த ஒருவகை ஊழினால் இயற்கைப் புணர்ச்சி நேர்கிறது என்று கூறுகிறார். இக் கருத்தைத் திருப்பாற் கடற் படுக்கையிலிருந்து பிரிந்து வந்த திருமாலும் இலக்குமியுமே இவர்கள்; அதனால் இவர்களின் கூட்டம் பற்றிச் சொல்லுதலும் வேண்டுமோ என்று எடுத்துக்காட்டுகிறான் கம்பன்.

இருவரும் உற்ற காதல் நோய்

முதன்முதலிற் கண்டு உளம் கலந்து காதல் வயப்பட்டுப் பிரிந்த இராமனும் சீதையும் காதல் நோயால் துன்புற்றதைக் கம்பன் பல பாடல்களில் விளக்கமுற உரைக்கின்றான். (சீதையின் காதல்நோய். பால. மிதிலைக். 40—50). காதல் நோய் வெதுப்ப அவள் வாய் பிதற்றுதல் பற்றியும் கூறுகிறார் (பால. மிதிலைக் 53, 54). 'இராமன் தான் பார்த்த கண்வழியே உள்ளத்தில் புகுந்துவிட்டானே; அவன் ஒரு கள்வனோ?' என்று எண்ணுகின்றாளாம் சீதை.

'பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்
எண்வழி யுணர்வுநா னெங்கும் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்!'
(பால. மிதிலைக். 55)

வாய் பிதற்றியதோடு அமையாது சீதை அந்திமாலைப் பொழுது கண்டும், அன்றிலை நோக்கியும், சந்திரோதயம் கண்டும் பலவாறு துன்புற்றுப் பேசுவதாகவும் கம்பன் அமைத்துள்ளான்.

'இந்திர நீலமொத்து இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேஅல;
முந்திஎன் உயிரைஅம் முறுவல் உண்டதே!'

(பால. மிதிலைக். 57)

இது சீதை இராமனைத் தன் உளக் கண்ணால் கண்ட காட்சி.

'ஆலம் உலகில் பரந்ததுவோ
ஆழி கிளர்ந்ததோ? அவர்தம்
நீல நிறத்தை எல்லோரும்
நினைக்க அதுவாய் நிமிர்ந்ததுவோ?
காலன் நிறத்தை அஞ்சனத்தில்
கலந்து குழைத்துக் காயத்தின்
மேலும் நிலத்தும் மெழுகியதோ?
விளக்கும் இருளாய் விளைந்ததுவே!'

(பால. மிதிலைக். 67)

இருள் பரவியது கண்ட சீதையின் உளநிலைமை வெளிப்படுத்து கிறது இப்பாடல்.

'கொடியை யல்லைநீ யாரையும் கொல்கிலாய்
வடுஇல் இன்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடு என்னுளளைச்
சுடுதியோ, கடல் தோன்றிய திங்களே!'

(பால. மிதிலைக். 77)

நிலவை நோக்கிய சீதையின் கூற்று இது. இப்பாடல்களில் சீதை காதல் நோயால் வருந்தும் நிலை நன்கு விளக்கமாதல் காணலாம்.

இவ்வாறே இராமனின் நிலையையும் கம்பன் அவன்தன் காத லுணர்வு வெளிப்படப் பேசுகின்றான்; இரவில் இராமன் தனியனாய்த் தான் கண்ட சீதையின் எண்ணத்திலேயே ஆழ்ந்திருக்கிறான்.

'விண்ணின் நீங்கிய மின்னுரு இம்முறை
பெண்ணின் நல்நலம் பெற்றது உண்டேகொலோ?
எண்ணின் ஈதுஅலது என்று அறியேன்இரு
கண்ணி னுள்ளும் கருத்துள்ளும் காண்பெனால்!'

'வண்ண மேகலைத் தேர்ஒன்று, வாள்நெடுங்
கண்இரண்டு, கதிர்முலைத் தாம் இரண்டு
உண்ணவந்த நகையும் என்று ஒன்று உண்டால்;
எண்ணும் கூற்றினுக்கு இத்தனை வேண்டுமோ?'

(பால. மிதிலைக். 144)

சீதையின் உருவெளித் தோற்றம் கண்டு இராமன்பேசிய பேச்சு இது. அவன் நிலவைப் பற்றிப் பேசும் பொழுது,

'கொள்ளை கொள்ளக் கொதித்து எழுபாற்கடல்
பள்ள வெள்ளம் எனப்படரும் நிலா
உள்ள உள்ள உயிரைத் துருவிட
வெள்ளை வண்ணவிடமும் உண்டாங்கொலோ?'
(பால. மிதிலைக். 146)

என்று அதனை வெள்ளை வண்ணமுடைய நஞ்சு என்று தன்னை வருத்துதல்பற்றிக் குறிப்பிடுவது சுவை பயப்பதாம்.

காதல் கொண்டோர் கூறும் இத்தகு கூற்றுகளைக் 'காமமிக்க கழிபடர் கிளவி' என்பர். காதலுற்றோர் இருவரும் பிரிந்த நிலையில் ஒருவர் மற்றொருவரை நினைந்து வருந்துதலும் தம் நெஞ்சொடு கூறியும், மற்றும் பேசாத அன்றில், திங்கள், தென்றல் முதலிய பொருள்களை விளித்துத் தம்மை வருத்துதலைச் சுட்டியும், தம் வருத்தத்தைத் தம்மைச் சூழ்ந்த பொருள்களும் உற்றனபோலக் கொண்டு பேசுதலும் இயல்பாகும் என்பர் தொல்காப்பியர் (தொல். பொருள். பொருளியல் 2, 3). இந்த மரபு நிலையை அடியொற்றியே கம்பனும் மிதிலைக் காட்சியில் இருவரும் கண்டு உள்ளம் பறிகொடுத்த நிலையில் தனித்திருக்க நேர்ந்த காலத்து அவர்தம் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றான்; கம்பன் தருவது இராமகாதை; ஒரு காவியம். இங்கே இராமன் சீதை இருவருடைய பெயர் சுட்டியமைந்தமையால் இதனைச் சுட்டியொருவர் பெயர்கொண்டு அமைந்த காமம் பொருளாக வந்த பாடாண்பாட்டு என்று கொள்ள வேண்டும்.

வில்லேற்றிய மணம் அசுர மணமாமா?

சீதையை மணப்பவன் சனகனிடமுள்ள சிவதனுசை வளைத்து நாணேற்ற வேண்டும் என்னும் சங்கற்பப்படி, இராமன் சிவதனுசை வளைத்து நாணேற்ற, அவ்வில் இற்று ஒடிந்தது. வில்லேற்றிக் கொண்ட இத்திருமணம் எண்வகைத் திருமண முறைகளுள் அசுரமணமாகும் என்பர்; அது சரியன்று. கதைநிகழ்ச்சி அவ்வாறு அமையினும் கம்பன் தமிழ் நெறிக்கு ஏற்ப இருவரையும் முதலிலேயே காண வைத்துக் கதைக்குப் புதுமெருகு தருகிறான்.

மணமண்டபக் காட்சி

இராமன்-சீதை திருமணம் மறைநெறி முறையில் நிகழ்த்துவிக்கப் பெறுகிறது. இருவரும் நீராடி வழிபாடியற்றி மணக்கோலம் பூண்டு மணமண்டபத்திற்கு வருகின்றார்கள். சீதை கொண்ட கோலத்தைக் 'கோலங்காண் படலம்' என ஒரு படலமே அமைத்துக் கம்பன் விவரிக்கிறான். மணமண்டபத்திற்கு வந்த சீதையை இராமன் கண்டு மனத்துள் வியக்கிறான். சீதையோ தன் கைவளைகளைத் திருத்துகின்ற பாவனையாய் இராமனைக் கடைக்கண்ணால் பார்க்கின்றாள்.

'எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்தும்
மெய்விளை விடத்துமுத லையம்விட லுற்றாள்,
ஐயனை யகத்து வடிவேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்.'
(பால. கோலங்காண், 37)

இந்த நிகழ்ச்சி மணநாளுக்கு முந்திய நாளில் நடந்தது. அந்த நாள் இரவிலும் இருவரும் காமவேதனையுற்றுப் பலவாறு நினைந்து பலப்பல பேசினர் என்பதைக் கம்பன் குறிப்பிடுகிறான். கன்னிமாடத்தில் முதன்முதல் கண்டு காதல் கொண்ட இருவரும் உற்ற நிலையை உணர்த்திய கம்பன், இரண்டாம் முறை மணமண்டபத்தில் ஒருவரையொருவர் கண்ட அன்று இரவும் இருவரும் காதல் நோயால் மிக வருந்தினர் என்று எடுத்துரைக்கிறான்.

இராமன்-சீதை திருமணம்

மணநாளன்று இராமன் கோலம் புனைந்ததைக் கவிச் சக்கரவர்த்தி கம்பன் பல கவிகளால் தெரிவிக்கின்றான். வசிட்டன் மணமேடையில் அமர்ந்து திருமணச் சடங்குகளைச் செய்துவைக்கிறான். சனகன் சீதையை இராமனுக்குத் தாரை வார்த்துத் தருகிறான். சானகியின் கையை இராமன் தன் கையினால் பற்றிக் கொண்டு தீவலம் செய்து அம்மி மிதித்து அருந்ததி காணுகின்றனர். பின் பெரியோர் ஆசி பெற்றுக்கொண்டபின் மனைக்குத் திரும்புகின்றனர்.

கற்புத் திருமணம்

இந்த மண நிகழ்ச்சி கம்பன் காலத்திற்குமுன்பே நாட்டில் புகுந்துவிட்ட மணமுறையாகும். எரியோம்புதலின்றி தலைவியரின் சுற்றத்தார் வளர்பிறை நாளில் திருமணம் நிகழ்த்திய விதம் வேறு; அது பழங்கதை.

> 'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'
>
> (தொல். பொருள். கற்பு. 1)

என்று தொல்காப்பியர் சுட்டியபடி தலைவியின் பெற்றோர் சடங்கு நிகழ்த்திப் பெண்ணைக் கொடுப்பத் தலைவன் திருமணம் புரிவது கற்புத் திருமணம். இங்கே, 'கொளற்குரி மரபின் கிழவன்,' 'கொளற்குரி மரபின் கிழத்தி,' 'கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது' என்னும் தொடர்கள் ஊன்றிக் கவனிக்கத் தக்கவை. இதனால் உரியவர் உவந்து கொடாமல் மணந்து கொள்வது வழக்கமில்லை என்பது தெரியவரும். இதனைக் கம்பன் இராமன் மூலம் ஆணித்தரமாகப் பெற வைக்கின்றான். சூர்ப்பணகை தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்று வேண்டியபோது இராமன் பின்வருமாறு உரைக்கின்றான் என்று எடுத்துக்காட்டுதல் கவனிக்கத் தக்கது.

> 'ஒருவனோ உலக மூன்றிற் கோங்கொரு தலைவன் ஊங்கில்
> ஒருவனோ குபேரன் நின்னோ டுடன்பிறந்தவர்கள் அன்னார்
> தருவரேற் கோடும்; அன்றேல் தமியை வேறிடத்துச்சார;
> வெருவுவென் நங்கை என்றான் வேதத்தின் அறிவைவென்றான்.'
>
> (ஆரணிய. சூர்ப்பணகை. 53)

பெண்ணைக் கொடுப்பதற்கு உரிமையுடையார் கொடுப்பக் கொள்ளுதலே கற்புத் திருமணம் என்பது இதனாலும் நன்கு விளங்கும்.

சூர்ப்பணகையின் காதல்-பேச்சு மரபுக்கு மாறுபட்டது

சூர்ப்பணகை இராமனிடம் காந்தருவ முறைப்படி மணந்து கொள்வோம் என்று பின்னர்ப் பேச முற்படுகிறாள்.

'காந்தர்ப்ப மென்ப துண்டால்
 காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும்
 மறைகளே வகுத்த கூட்டம்
ஏந்தற் பொற் றோளினாய்! இஃது
 இயைந்தபின் எனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்பிற் றாகும்
 வேறுமோ ருரையுண் டென்றாள்.'

(ஆரணிய. சூர்ப்பணகை. 54)

இந்தக் காந்தருவ மணம் பண்டைத்தமிழ் நூல்களில் சிறப்பிக்கப் படும் களவு மணத்தை ஒத்த இயல்புடையது என்பர்.

சூர்ப்பணகையின் பேச்சு காந்தருவ முறைக்கு அடுத்ததன்று. ஆடவர் மகளிர் சந்திப்பில் ஆடவர் மட்டுமே பேசுவோராகக் காணப் படுவர். காதலை வெளிப்படுத்தும் உரைகள் ஆடவர் வாயினின்றே பிறக்கும். பெண்டிர் பேசுவது அவர்தம் நாணம் என்னும் பெருமி குணத்திற்கு மாறுபாடாகும். இதனையும் சூர்ப்பணகை உணர்ந்தவு ளாகவே காணப்படுகிறாள்.

'தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்பதென்பது
ஆமென லாவ தன்றால் அருங்குல மகளிர்க்கு அம்மா!
ஏமுறும் உயிர்க்கு நோவேன் என் செய்கேன் யாருமில்லேன்
காமனென் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்றாள்!'

(ஆரணிய. சூர்ப்பணகை. 45)

இங்குச் சூர்ப்பணகை சொல்லியபடி அவள் குலமகளாக இல்லை; அவள் கன்னியும் அல்லள்; விதவை. விதவைக்கு நாணம் ஏது? அகப்பொருள் மரபு மீறினால் வரும் குற்றங்களையும் துன்பங்களையும் இந் நிகழ்ச்சினால் கம்பன் பெற வைக்கின்றான் என்றே கொள்ள வேண்டியுள்ளது; மூக்கறு பட்ட பின்பும் காதல் பேச்சுப்பேச முற்படுகின்றாளெனில் அவள் நிலையை என்னவென்பது? உலகியலுக்குப் பெரிதும் மாறுபட்டது சூர்ப்ப ணகையின் காதல்.

இராவணன் கொண்ட விபரீதக் காதல்

ஆடவரும் மகளிரும் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டுக் கண்டு காதல் அரும்புவது இயற்கையானது. இவ்வாறன்றி ஒரு பெண்ணைப் பற்றிக் கேட்ட மாத்திரத்திலேயே காமுறுதல் விநோதமானது. இராவணன் சீதையிடம் வைத்த காம இச்சை சூர்ப்பணகை சொலக் கேட்டு எழுந்ததாகும்.

சூர்ப்பணகை சீதையின் பொருட்டாகவே தனக்கு மானபங்கம் நேர்ந்தது என்று சொன்னபோது, இராவணன், 'ஆர் அவள்?' என்று

விளைவுகின்றான். உடன்தானே சீதையின் பேரழகினைச் சூர்ப்பணகை பலபட விரித்துரைக்கிறாள். அவள் சீதையின் அழகுபற்றிப் பேசப்பேச இராவணன் காமநோய் மிக்கவனாகிறான்.

'கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலாதான்.'
(ஆரணிய. சூர்ப்பணகை. 88)

'மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை நாதன் இதயம் ஆம் சிறையில் வைத்தான்
அயிலுடை அரக்கன் உள்ளம் அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய் போல் வெதும்பிற்று [அன்றே.'
(ஆரணிய. சூர்ப்பணகை. 85)

அதன்பின் தன் மாளிகை புகுந்த இராவணன் காமநோய் மேலும் வளர, அதனால் உற்ற துன்பங்களையும் அவன் செயல்களையும் பல பாடல் களில் கம்பன் எடுத்துரைக்கின்றான் (ஆரணிய. சூர்ப்பணகை. 89-104). சீதைபால் கொண்ட மோகம் காரணமாக அவளைச் சூழ்ச்சியால் கவரத் திட்டமிட்டுச் செயலாற்ற முற்படுகிறான் இராவணன்.

இராவணன் செய்கை அறமாகாது

மணமாகாத கன்னி யொருத்தியை அவள் விருப்பின்றியே ஓர் ஆடவன் வலிந்து பற்றிச் சென்று மணந்து கொள்வது இராக்கத மணம் எனப்படும். இந்த நிலையை ஒட்டிப் பார்த்தால், சீதையை இராவணன் கவர்ந்து சென்றது இராக்கத மணமுறையாகாது பிறனொருவனுக் குரிய மனையாளை மணந்து கொள்ள வேண்டும் என்னும் கெட்ட எண்ணத்துடன் இராவணன் செய்கை உள்ளது. இது பிறனில் விழைதல் என்னும் பெருங்குற்றமாம். இதனைக் கடிந்தே 'பிறனில் விழையாமை' என்னும் ஓர் அதிகாரத்தை வள்ளுவர் அமைக்கின்றார்.

'அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல்'

என்னும் குறளுக்கு நல்ல எடுத்துக்காட்டாவான் இராவணனே.

அயோமுகியின் அடாமுறைக் காதல்

சீதையைத் தேடிக் கொண்டு இராம-இலக்குவர் வனத்தின் வழிச் சென்றனர். இராப்பொழுது எதிர்ப்படவே ஒரு பளிக்கறையில் தங்கி இராமன், உண்ணுநீர் கொண்டு வரத் தம்பி இலக்குவனை விடுத்தான். நீர் கொண்டுவரச் சென்ற இலக்குவனைக் கண்ட அயோமுகி என்பவள், 'நான் உன்பால் ஆசையின் வந்த அயோமுகி; கன்னிப் பெண்ணாகிய என்னுடன் நீ சேர்ந்து என் இச்சையை நிறைவேற்றுவாய்' என்று வேண்டுகிறாள்.

"பின்னு முரைப்பவள் பேரெழில் வீரா
முன்ன மொருத்தர் தொடாமுலை யோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தென்
இன்னுயி ரைக்கடி திகுதி என்றாள்.'
(ஆரணிய. அயோமுகிப். 58)

என்று அயோமுகியின் வேண்டுதலைக் கவி கூறுகிறான்.

இலக்குவன் மறுத்து அவளை வெருட்டி ஓட்டிவிட முயன்றபோது அவள் அவனைத் தன்னிடத்திற்கு எடுத்துச் சென்று தழுவ நினைத்துத் தூக்கிச் சென்றனள். அப்பொழுது இலக்குவன் அவளுடைய மூக்கு முதலிய உறுப்புகளை அறுக்கவே அவள் பேரொலியுடன் அலறினாள். இங்கு அயோமுகி சூர்ப்பணகையைப் போலவே தகாநெறியில் காம இச்சை கொண்டு அழிந்தாள் என்பது காண்கிறோம்.

இராமன்–சீதையர் இன்ப வாழ்க்கை

இராமன்-சீதை இருவரும் இல்லற வாழ்வில் எத்தகைய சிறப்புடன் வாழ்ந்தனர் என்பது பற்றிய விளக்கம் மிகுதியும் தரப்படவில்லை. திருமணம் முடிந்த பின்னர் இராமன் சீதாப்பிராட்டியுடன் 'பாற்கட லன்னதொரி பாயல் அணைந்தான்' (பால. கடிமணப். 99) என்ற அளவில் கூறி, அவர்கள் இருவரும் கூடி இன்பந் துய்த்து வாழ்ந்தனர் என்பதைக் குறிப்பினால் கம்பன் பெற வைக்கின்றான். எத்தனை எத்தனையோ இன்ப உரையாடல்கள் அவர்களிடம் நிகழ்த்திருத்தல் வேண்டும். ஒருமுறை தான் வளர்க்கும் கிளிக்கு யார் பெயரை இடுவது எனச் சீதை கேட்க, அதற்கு இராமன் தன் அன்பு அன்னை கைகேயியின் பெயரைச் சூட்டச் சொன்னான். இச் செய்தி பின்னால் சீதை அனுமனுக்குச் சொல்லி யனுப்பிய அடையாளச் செய்திகளுள் ஒன்றாய் அமைவதிலிருந்து வெளிப் படுகிறது.

இல்வாழ்க்கைச் சித்திரம்

கணவனும் மனைவியும் நடத்தும் இல்லற வாழ்வில் மனைவி தன்னைக் கொண்ட கணவனை உண்டி முதலியவற்றாற் பேணித் தன்னில்லம் நாடி வரும் விருந்தினர் முதலியோரையும் உபசரித்துச் சுற்றம் தழுவி வாழும் கடப்பாடுடையவள். தொல்காப்பியர் இல்லத் தலைவிக்குரிய பண்புகளை,

'கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்ற மோம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையின் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய'
(தொல். பொருள். கற்பியல், 11)

என்னும் நூற்பாவால் தொகுத்துரைக்கிறார்.

இராமனுடன் சீதை வாழ்ந்திருந்தபோது இல்லற தருமம் இனிது நடந்து வந்தது என்பது அவளுடைய சிந்தனை வெளிப்பாட்டால் தெரிய வருகிறது. இலங்கைச் சிறையிலிருந்த போது சீதை,

'அருந்தும் மெல்லடகு ஆர்இட அருந்தும் என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்'
(சுந்தர. காட்சி. 15)

எனக் கம்பன் சீதையின் எண்ண அலைகளையும் உணர்ச்சிகளையும் எடுத்தியம்புவதனால் புலனாகிறது. மேலும், பாலகாண்டம் நகரப் படலத்தில் மாந்தர் செல்வமும் கல்வியும் சிறக்க மகிழ்வுடன் வாழ்ந் தமையைக் கம்பர் எடுத்துக் காட்டுகின்றார்.

மணவாழ்க்கையில் அன்பும் இன்பும் வெளிப்படுதல்

இராமன் சீதையிடம் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடு அவர்கள் வனம் புகுந்த நிலையில்தான் நமக்கு நன்கு புலனாகிறது. இராமனையே அவள் முற்றும் நம்பி வாழ்ந்தாள் என்பது, 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு' (அயோத். நகர் நீங்கு. 228) என்றுரைத்துத் தானும் மரவுரி தரித்து அவன் கையைப் பற்றிக் கொண்டு காட்டிற்கு உடன்தானே புறப்பட்ட நிலையினால் விளங்கும். சீதை இராமனுடன் விளையாட்டாகப் பேசிக் கொண்டே வழியிடைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து செல்கின்றாள்.

'அளியன்னதொர் அறல்துன்னிய
குழலாள் கடல் அமிழ்தின்
தெளிவன்னதொர் மொழியாள்நிறை
தவமன்னதொர் செயலாள்
வெளியன்னதொர் இடையாளொடும்
விடையன்ன தொர் நடையான்
களியன்னமும் மடவன்னமும்
உடனாடுவ கண்டாள்.' (அயோத்தி. கங்கைப். 2)

மிதிலை மாநகருக்கு இராமன் முதலியோர் வந்த காலத்தில் கன்னி மாடத்தின் அயலே அன்னம் ஆடும் முன்துறையில் அன்னங்களின் கூட்டுறவைக் கண்டு மகிழ்ந்தான் இராமன். அது போன்றதொரு இன்பக் காட்சியை இருவரும் காடுநோக்கிச் செல்லும் வழியில் இங்கும் காண்கின்றனர். இராமன் நகர்விட்டுக் கங்கையாற்று வெளியில் முதற்கண் நடந்து சென்ற பகுதி கங்கைப் படலத்தில் விவரிக்கப் படுகிறது. ஒருவர் அழகினை மற்றொருவர் இயற்கைப் பொருள்களினிட மாகக் கண்டு களித்து விளையாடிக் கொண்டே வழிநடந்து சென்றார்கள் என்பது பல பாடல்களில் விவரிக்கப்படுகிறது. கங்கையில் இருவரும் நீராடி மகிழ்ந்ததையும் கம்பன் சுட்டுகிறான் (அயோத். கங்கை.16).

கங்கையாற்றங் கரையில் சிருங்கிபேரபுரத்தில் வாழ்ந்த குகனுடன் இராமன் நட்புக் கொண்டு, அக்கங்கையாற்றைக் கடந்து தென்கரை சேர்ந்து, அவனிடம் விடைபெற்றுக் கொண்டு காட்டுவழியே செல் கின்றனர். சீதைக்கு வழிநடை வருத்தம் தோன்றாத வண்ணம் வனத்தில் காணப்படும் பல வளங்களையும் சுட்டிக் காட்டிக்கொண்டே இராமன் செல்கிறான்.

'மன்றலின் மலிகோதாய் மயிலியல் மடமானே
இன்றுயில் வதிகோபத் தினம்விரி வனமெங்கும்
கொன்றைகள் சொரிபோதின் குப்பைகள் குலமாலை
பொன்திணி மணிமானப் பொலிவன பலகாணாய்!'

(அயோத். வனம்புகு. 3)

என்று தொடங்கிப் பதினேழு பாடல்களிலே அந்த வனத்தின் அழகுகளைப் பலபடப் பாராட்டிப் பேசியமையைக் கம்பன் எடுத்துரைத்துள்ள திறம் கண்டு மகிழத்தக்கது.

சித்திர கூடத்தில் சீதைக்குக் காட்டிய காட்சிகள்

அடுத்து, வனத்தில் சித்திரகூட பர்வதத்தைச் சார்கின்றனர். இராமன் அந்த மலையில் காணும் அழகுகளை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துப் பேசுதலை முப்பத்தேழு பாடல்களில் கம்பன் சித்திரிக்கிறான்;

'வாளும் வேலும்விட் டளாயின வனையகண் மயிலே
தாளி னேலமுந் தமாலமும் கூர்தரு சாரல்
நீள மாலைய துயில்வன நீருண்ட கமஞ்சூல்
காள மேகமும் நாகமும் தெரிகில காணாய்!'

(அயோத் சித்திரகூடப். 2)

சீதைக்கு மலைக் காட்சிகளைச் சுட்டிக்காட்டி வருணித்துக் கூறுவதாகவுள்ள ஒவ்வொரு பாடலிலும் அவளை விளிப்பனவாக வரும் மொழிகளிலே அவளுடைய நலங்களைப் புலபடப், புகழ்ந்து பேசுதலைக் காணலாம்.

கோதாவரிக் கரையில் நலம் பாராட்டல்

இங்ஙனமே கோதாவரி ஆற்றங்கரையில் அவர்கள் செல்லும் போதும் நலம் பாராட்டற் பகுதி அமைகிறது. கணவன் மனைவியின் நலம் பாராட்டிப் பேசுதல் களவு வாழ்க்கையிலன்றிக் கற்பு வாழ்க்கையிலும் இயல்பாய் நிகழ்வதாகும். மனைவியின் நலம் பாராட்டும்போது அவளும் கணவனின் நலங்களைப் பாராட்டிப் பேச இடமாமன்றோ? கோதாவரி ஆற்றங்கரைச் சூழலில் இராமனும் சீதையும் மனம் கலந்து இன்பக்காட்சியில் ஈடுபட்டும் நயவுரை பகர்ந்தும் மகிழ்கிறார்கள்.

'நாளங்கொள் நளினப் பள்ளி
நயனங்கள் அனைய நேமி
வாளங்கள் உறைவ கண்டு,
மங்கைதன் கொங்கை நோக்கும்;
நீளம்கொள் சிலையோன் மற்றை
நேரிழை நெடிய நம்பி
தோளின்கண் மனம்வைத் தன்ன
சுடர்மணித் தடங்கள் கண்டாள்.'

'ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன், உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்;

மாதவன் தானும் ஆண்டு
வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.'

(ஆரணிய. சூர்ப்பணகை. 4-5)

இங்கே இராமனை 'முறுவல் செய்தான் என்று கூறிய கவி கம்பன் சீதையின் சிரிப்புப் பற்றி 'முறுவல் பூத்தாள்' என்று கூறும் நயம் பாராட்டத் தக்கது. மகளிர் முறுவல் வெளித் தோன்றுது அடங்கியே நிற்கும் என்பதனை இது காட்டும்.

'வில்லியல் தடக்கை வீரன்
வீங்குநீ ராற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான்
மங்கைதன் மருங்குல் நோக்க,
எல்லியங் குவளைக் கானத்து
இடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டான்
அண்ணல்தன் வடிவு கண்டாள்.'

(ஆரணிய சூர்ப்பணகை. 6)

இவ்வாறு இருவரும் கோதாவரிக் கரையில் இன்பமாக உலவிப் பொழுது போக்கி, பஞ்சவடியில் இலக்குவன் அமைத்த பர்ணசாலையில் வீற்றிருக்கிருர்கள். இந்த இன்பக் காட்சி பின்பு திருமுடி சூட்டுகிற பொழுதுதான் காணமுடிகிறது. அடுத்துச் சூர்ப்பணகையின் சூழ்ச்சியால் சீதை சிறையெடுத்துச் செல்லப்படுகிருள். பின்பு நிகழ்வன வெல்லாம் பிரிவினுல் நேர்ந்த சோகமாகவே அமைகின்றன.

சீதையின் பிரிவும் இராமன் சோகமும்

அகப்பொருட் பகுதிகளைக் கூர்ந்து நோக்கின் புணர்வு-பிரிவு என்னும் இரு கூற்றுள் அடக்கிக் காணலாம். இருத்தல், இரங்கல், ஊடல் என்பன பிரிவினுல் ஏற்படும் நிலைமையே ஆகும்.

இராமனுடைய இன்ப வாழ்வில் பிரியாத சீதை அவன் காடு சென்று வாழ்கின்ற நிலையிலும் அவனுக்குப் பக்கபலமாயிருந்து தொண்டாற்றி வந்தனள். இத்தகைய பெருமாட்டியை இராவணன் அவள் இருந்த பர்ணசாலையுடன் பெயர்த்து எடுத்துச் சென்றுவிட்டான்; இலங்கை மாநகரிலுள்ள அசோகவனத்திலே அரக்கியர் மத்தியில் சிறைவைத்துவிட்டான். இந்தப் பிரிவு இருவரையுமே பெருந் துன்பத்திற்குள்ளாக்கிற்று. இருவரும் பிரிந்து வாழ்ந்த நிலையில் ஒருவரையொருவர் எண்ணி உளம் மெலிந்து உருகிப் புலம்பிய மொழிகள் கொஞ்சநஞ்சமல்ல.

மாயமானய் வந்த மாரீசன்பட, அம்மாரீசன் இராமன் குரலால் அபயமிட்டது கேட்டு இலக்குவனையும் வற்புறுத்தி அனுப்பிவிட்டாள் சீதை. இராம-இலக்குவர் இருவரும் இல்லாத நிலையில் இராவணன் அவளைக் கவர்ந்து சென்றுவிட்டான். இராம-இலக்குவர் பர்ணசாலையை நோக்கி வருகின்றனர். இராமன் சீதையைக் காணுது திகைத்தான்.

தனக்குரிய உடம்பை விட்டுப் பிரிந்த ஆருயிர், மீண்டும் தனக்குரிய உடம்பை நாடிவந்து அதனைக் காணாமையால் தனிநின்று அலமரும் தன்மையன் ஆயினான்.

'ஓடி வந்தனன் சாலையில் சோலையின் உதவும்
தோடு இவர்ந்தபூஞ் சுரிகுழ லாள்தனைக் காணான்
கூடு தன்னுடையது பிரிந்து ஆருயிர் குறியா
தேடிவந்து அது கண்டிலது ஆம் என நின்றான் '

(ஆரணிய. சடாயுஉயிர்நீத்த. 158)

இங்கே சீதையும் இராமனும் உடம்பும் உயிரும் போல அன்புறவு பூண்டவர் என்பதனைக் கவிஞர் சுட்டுவதிலிருந்தே அவ்விருவர்தம் அன்பின் பிணைப்பும் பிரிவினால் நேர்ந்துள்ள பெருந்தவிப்பும் புலனாம்.

பர்ணசாலையைக் கண்ட இராமனின் நிலை

இராமனுக்குப் பெரும்பொருளாய் இருந்தவள் சீதை. அந்த அரும்பொருளை இழந்த நிலையில் அவன் எந்த அளவில் திகைப்புற் றிருப்பான். பொருளிலான் ஒருவன் சேமித்து வைத்த பெரும் பொருளை இழந்தால் எந்நிலையன் ஆவனோ அத்தகு நிலையனாய் இராமன் காட்சி தரலானான்.

'கைத்த சிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணான்
உய்த்து வாழ்தர வேறு ஒரு பொருளிலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடும் மறைந்தன வாங்கிப்
பொய்த்துளோர் கொளத் திகைத்து நின்றாரையும்
[போன்றான்.'

(ஆரணிய. சடாயு உயிர்நீத்த. 159)

இராமனுடைய திகைப்புநிலை கண்டு மண்ணும் விண்ணும் எல்லாப் பொருள்களுமே நடுங்கிச் சுழன்றனவாம்.

'மண்சுழன்றது மால்வரை சுழன்றது மதியோர்
எண்சுழன்றது சுழன்றதவ் வெறிகடல் ஏழும்
விண்சுழன்றது வேதமும் சுழன்றது விரிஞ்சன்
கண்சுழன்றது சுழன்றது கதிரொடு மதியும்.'

(ஆரணிய. சடாயு உயிர்நீத்த. 160)

இராமனின் இரங்கல்

பின்னர், இலக்குவன் தேர்த்தடம் தெரிவது சுட்டிக்காட்ட, அவ்வழியே இருவரும் சீதையைத் தேடிக்கொண்டு போகிறார்கள். வழியில், சீதைக்காக இராவணனுடன் போரிட்டுச் சிறகற்று வீழ்ந்து கிடந்த சடாயுவைக் காண்கிறார்கள். சடாயு அவர்களுக்குத் தேறுதல் கூறிச் சீதையை இராவணன் எடுத்துச் சென்றுள்ள செய்தியையும் அறிவிக்கின்றான்.

அதன்பின் சடாயு மரணமுற அவர்கள் உரிய ஈமக் கடன்கள் ஆற்றிவிட்டு மேற்கொண்டு வழிச் செல்கின்றனர். தூக்கமின்றிக் காவல் புரியும் இலக்குவனைப் போன்றே சீதை பிரிவால் இராமனும் இரவில் தூக்கம் இன்றித் துயரால் நலிகிறான்.

'பெண் இயல் தீபம் அன்ன பேர்எழி லாட்டிமாட்டு
நுண்ணிய பிரிவு செய்த நவையினுர் நவையில் உள்ளத்து
எண்ணியது அறிதல் தேற்ரும், இமைத்தில இராமன் என்னும்
புண்ணியன் கண்ணும் வன்தோள் தம்பிகண் போன்ற அன்றே.'

(ஆரணிய. அயோமுகிப். 5)

சீதையை நினைந்து இராமன் வருந்திக் கூறிய மாற்றங்களையெல்லாம் அயோமுகிப் படலத்தில் பல கவிகளில் கம்பன் பாடியுள்ளான். இவற்ருல் சீதையின் பிரிவினுல் இராமன் உற்ற உணர்வுகள் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (ஆரணிய. அயோமுகிப். 9-27)

சிறப்பாகச் சீதையைப் பிரிந்து வருந்தும் இராமன் துயருக்கு இரங்கிப் பறவை முதலிய இயற்கைப் பொருள்களும் இரங்கி ஒலித்தன என்று கம்பன் காட்டுவதும், இணையிணையாய் வரும் மயிலும் பெடையும், மானும் கலையும், பிடியும் களிறும் கண்முன்னே திரிவதையும் அவன் பார்க்கின்றபோது உற்ற நிலையினையும் கவிச் சக்கரவர்த்தி கம்பன் மிக அழகாகச் சித்திரித்துள்ளான்.

'வெள்ளம் சிலம்பும் பாற்கடலின்
விரும்பும் துயிலை வெறுத்து அளியும்
கல்லும் இலம்பும் பூங்கோதை
கற்பின் கடலிற் படிவாற்குப்
புள்ளும் சிலம்பும் பொழில் சிலம்பும்
புனலும் சிலம்பும் புனைகோலம்
உள்ளும் சிலம்பும் சிலம்பாவால்
உயிர் உண்டாகும் வகை உண்டோ?'

'மயிலும் பெடையும் உடன்திரிய
மானும் கலையும் மருவிவர,
பயிலும் பிடியும் கடகரியும்
வருவ திரிவ பார்க்கின்ருன்,
குயிலும் கரும்பும் செழுந்தேனும்
குழலும் யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதும் சுவைநீத்த
மொழியைப் பிரிந்தால் அழியானே?'

(ஆரணிய. அயோமுகிப். 28,29)

இப் பாடல்களின் ஓசைப் போக்கும் நடை நலமும் இராமனின் சோகத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

இரவுத் தனிமையில் இராமனின் ஏக்கம்

நீர் கொண்டுவரப் பிரிந்த இலக்குவன் அயோமுகியால் கவரப் பட்டு, அவளை மூக்கரிந்துவிட்டு, இராமன்பக்கல் இரவில் திரும்புகிருன். இருவரும் வருண மந்திரத்தால் வானநீர் பருகி, மலை ஒன்றில் தங்குகின் றனர். இரவுத் தனிமை இராமனுக்குச் சீதையின் பிரிவுத் துயரை மிகு விக்க, அவன் ஆற்ருது பலவாறு புலம்பித் துயருறுகிருன் (ஆரணிய. அயோமுகிப். 95. 100)

கலன் கண்டு உற்ற சோகம்

பின்னர்ச் சுக்கிரீவனோடு நட்புக் கொள்ளுகிறான் இராமன். வான் வழிச் சென்ற தேரிலிருந்து சீதை தன் ஆபரணங்களைப் பொதிந்து போட, அதனைச் சுக்கிரீவன் எடுத்து வைத்திருந்தான். அந்த அணி கலன்களை அவன் இராமனிடம் காட்ட, இராமன் அவற்றைக் கண்டு உற்ற உணர்வுகளைக் கம்பன் அற்புதமாக எடுத்துரைக்கிறான்.

(கிட்கிந்தா. கலன்காண், 5-9)

கார் காலத்தில் இராமன் உற்ற பிரிவுத் துயர்

வாலி வதம் முடிந்தபின் நான்கு மாதங்கள் வரையில் ருசியமுக பர்வதத்தில் காத்திருக்கின்றனர் இராம-இலக்குவர். அப்பொழுது கார் காலம் தோன்றுகிறது; சீதையின் பிரிவு இராமனைப் பெரிதும் வாட்டுகிறது.

'தேரைக் கொண்டபோர் அல்குலாள் திருமுகம் காணான்
ஆரைக் கண்டுஉயிர் ஆற்றுவான்? நல்உணர்வு அழிந்தான்;
மாரற்கு எண்இல் பல்ஆயிரம் மலர்க்கணை வகுத்த
காரைக் கண்டனன்; வெந்துயர்க்கு ஒருகரை காணான்.'

'அளவுஇல் கார்எனும் அப்பெரும் பருவம் வந்து அணைந்தால்
தளர்வர் என்பது தவம்புரி வோர்கட்கும் தகுமால்;
கிளவி தேனினும் அமிழ்தினும் குழைத்தவள் கிளைத்தோள்
வளவி உண்டவன் வருந்தும் என்றால் அது வருத்தோ?'

(கிட்கிந்தா. கார்காலப். 49,50)

என்று கம்பன் கூறுமாறு இராமன் முகில் முதலியவற்றோடு புலம்பிச் சோர்கிறான் (கிட்கிந்தா. கார்காலப். 51-63). இலக்குவன் தேறுதல் மொழிகள் உரைத்துச் சீதையை நாட முற்படும் முயற்சியில் முனையத் தூண்டுகிறான்.

தென்திசைக்குச் சென்ற அனுமன் சீதையைக் கண்டு வந்து நற் செய்தி கூறுகின்றான்; இராமன் மகிழ்கிறான். சீதை தந்தனுப்பிய சூடா மணியை இராமனிடம் கொடுத்த போதுதான் இராமனின் உள்ள மெலிவு நீங்கியது.

'பையப் பயந்த காமம்
  பரிணமித்து உயர்ந்து பொங்கி
மெய்யுற வெதும்பி உள்ளம்
  மெலிவுறு நிலையை விட்டான்;
ஐயனுக்கு அங்கி முன்னர்
  அங்கையால் பற்றும் நங்கை
கைஎனல் ஆயிற்று அன்றே
  கைபுக்க மணியின் காட்சி!

(சுந்தர. திருவடிதொழுத. 47)

என்று சூடாமணி பெற்ற இராமனின் நிலையைக் கம்பன் வெளிப்படுத்து கின்றான்.

சீதையின் துயரநிலை

சுந்தர காண்டத்தில் அனுமன் சீதையைக் கண்டமை பற்றி உரைக்கும் காட்சிப் படலத்திலே அரக்கன் சிறையில் அன்னை சீதை பட்ட துயர நிலையைக் கம்பன் படம் பிடித்துக் காட்டுகிறான் (சுந்தர. காட்சிப். 3-29) அவற்றுள் இராமனது பிரிவால் சீதை உற்ற துயர நிலையைத் தெற்றெனக் காட்டும் மூன்று பாடல்களைப் பார்ப்போம்.

'அரிய மஞ்சினோடு அஞ்சனம் முதல் இவை அதிகம்
கரிய காண்டலும் கண்ணின்நீர் கடல்புகக் கலுழ்வாள்;
உரிய காதலின் ஒருவரோடு ஒருவரை உலகில்
பிரிவு எனும் துயர் உருவுகொண் டாலன்ன பிணியாள்.'

'துப்பினால் செய்த கையொடு கால்பெற்ற துளிமஞ்சு
ஒப்பினான் தனை நினைதொறும் நெடுங்கண்கள் உகுத்த
அப்பினால் நனைந்து அருந்துயர் உயிர்ப்புடை யாக்கை
வெப்பினால் புலர்ந்து ஒருநிலை உறாதமென் துகிலாள்.'

'அரிது போகவோ விதிவலி கடத்தல்! என்று அஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாரா,
சுருதி நாயகன் வரும்வரும் என்பது ஓர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள்.'

(சுந்தர. காட்சிப். 7,8,9)

சீதையின் துயர நினைவுகளை எல்லாம் பல பாடல்களில் கம்பன் எண்ணியெண்ணி வகுத்துரைப்பது பிரிவு நிலையில் அவளுடைய மன நிலையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

(சுந்தர.காட்சிப். 13-29)

மிகுந்த துன்ப நிலையிலும் திரிசடை அவளுக்கு ஆறுதலாய் இருந்து வருகிறாள். அரக்கியர் துயில்வுற்ற நிலையில் சீதை துயர் மிகுதியால் தன் உயிரை விடவும் துணிகிறாள். இந்தச் சமயத்தில் அனுமன் தோன்றித் தான் இராமதூதனாய் வந்துள்ள செய்தி சொல்லி அவளுக்கு ஆறுதல் தருகின்றான். தனக்கு உயிர் நல்கிய அனுமனை அவள் வாழ்த்துகிறாள்.

ஆடவர்-மகளிர் இன்பக் களியாட்டங்கள்

மக்களின் மகிழ்ச்சி வாழ்வில் செல்வமும் அறிவுநலனும் புணர்வும் விளையாட்டுகளும் இடம் பெற்றிருத்தல் இயல்பே. தொல்காப்பியர் உவகைச் சுவையின் நிலைக்களமாக,

'செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே'

(தொல். பொருள். மெய்ப். 11)

என்பர். கம்பனுக்கு முற்பட்ட கவிஞர்களும் ஆடவர்-மகளிர் விளையாட்டுகளையும் அவர்தம் அந்தரங்க உறவுகளையும் பாடி வந்துள்ளனர். கலம்பகத்தில் வரும் காதற் பாட்டுகளும் பரணியில் இடம் பெறும் கடைதிறப்புப் போன்ற பகுதிகளும் இங்குக் குறிப்பிடத்தக்கன. இந்த நிலையில் காதல் சுவையை—ஆடவர்-மகளிர் இன்பக் களி

யாட்டங்களை—கம்பனும் தன் காவியத்தில் ஏற்ற இடங்களில் அமைத்துத் தந்துள்ளான்.

கோசல நாட்டின் தலைநகராகிய அயோத்தி மாநகர மக்களின் இன்பப்பொழுது போக்குகளைப் பற்றிச் சொல்லவந்த இடத்தில் கம்பன் பின்வருமாறு நமக்கு எடுத்துரைக்கிறான்.

'ஊடவும் கூடவும், உயிரின் இன்னிசை
பாடவும், விறலியர் பாடல் கேட்கவும்,
ஆடவும் அகன்புனல், ஆடி அம்மலர்
சூடவும், பொழுதுபோம்—சிலர்க்கு அத்தொல் நகர்.'

''நந்தன வனத்து அலர்கொய்து நவ்விபோல்
வந்து, இளையவரொடு வாவிஆடி, வாய்ச்
செந்துவர் அழிதரத் தேறல்மாந்தி, சூது
உந்தலின் பொழுதுபோம் — சிலர்க்கு அவ்ஒள்நகர்''

(பால. நகரப். 66, 69)

இந்தப் பாடல்களில் விவரிக்கும் ஆடல் பாடல்களின் அடிப்படையைப் பின்னணியாக வைத்தே மிதிலைக்குத் தசரதன் சேனை முதலிய பரிவாரங்களுடன் செல்லும் காலத்து வழியிடைக் காட்சியாகப் பின் வரும் படலங்களைக் கம்பன் அமைத்துள்ளான். சந்திரசயிலப் படலம், வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், புனல் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் ஆகியவை இங்குக் குறிப்பிடத்தக்கன.

இப்படலங்களில் ஆடவரும் மகளிரும் மகிழ்வுடன் திரிந்து, பல் வேறு இயற்கைக் காட்சிகளைக் கண்டு பூக்கொய்தும் புனலாடியும் கள்ளுண்டு களித்தும் மகிழ்வுடன் இருந்த பாங்கினைக் கம்பன் விவரிக்கிறான். இப்பகுதிகளில் வரும் ஆடவர்-மகளிர் வருணனை, அவர் ஊடலும் கூடலுமாய் நிகழ்த்திய கேளிக்கைகள் முதலியவற்றை எடுத்துரைக்கிறான். இத்தகு சிருங்கார வருணனைகள் எல்லாம் அகப்பொருள் நெறியானது இன்பப் பொழுது போக்குகளாயும் மக்களிடை வளர்ந்து விட்ட ஒரு நிலையை எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

புலவி நுணுக்கம்

வள்ளுவர் குறளில் நயம்பட உரைக்கும் புலவி நுணுக்கங்களைக் கம்பன் உளங்கொண்டும் சில பாடல்களை அற்புதமாகப் பாடியுள்ளான்.

''செம்மாந்த தெங்கின் இளநீரை ஓர் செம்மல் நோக்கி,
அம்மா இவை மங்கையர் கொங்கைகள் ஆகும் என்ன,
எம்மாதர் கொங்கைக்கு இவை ஒப்பன என்று ஓர் ஏழை
விம்மா வெதும்பி வெயரா முகம் வெய்துயிர்த்தாள்.''

''போர் என்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் [திண்தோள்
மாரன் அனையான் மலர்கொய் திருந்தானை வந்து ஓர்
கார்அன்ன கூந்தல் குயில் அன்னவள் கண்புதைப்ப
ஆர்என்ன லோடும் அனல்என்ன வெய்துயிர்த்தாள்.,'

(பால. பூக்கொய். 17, 18)

ஊடலும் கூடலும்

காம இன்பம் சிறப்பதற்குக் கருவியாக அமைவது ஊடல். ஊடலால் ஆடவர்க்கும் மகளிர்க்கும் கூடல் வேட்கை மிகும். எனவே, ஊடலின் பின் அமையும் கூடல் மிகுதியான இன்பம் பயப்பதாக அமையும்; இதனுல் உவகை மிக உளதாகும். வள்ளுவப் பெருந்தகை யும் காமத்துப்பாலின் இறுதியதிகாரமாக 'ஊடலுவகை' என்பதை அமைந்திருப்பதும் இப்பயனைப் புலப்படுத்தவேயாம்.

உணவு உண்ணுதல் இன்பம் தருவதே. ஆனுலும், உண்ட உணவு செரித்தல் உண்பதினும் இன்பம் தருவதாக அமையும். பசி நேர்ந் தால் சுவைத்து மிகுதியாக உண்ணலாம் அல்லவா? அது போலவே காம உணர்வு கொண்ட காதலர் சேர்க்கையை விடவும் அவர்க்கு ஊடலால் பிரிந்து மீண்டும் கூடுகை மிக்க இன்பம் பயப்பதாய் அமை யுமாம். அகன்று கூடும்வழி போதும் என்ற நிறைவு தோன்றுமல் மேலும் பெருகிய இன்ப அனுபவமாய் அமையுமாம். இதனை,

'உணலினும் உண்டல் அறல் இனிது, காமம்
புணர்தலின் ஊடல் இனிது.' (குறள். 1326)

என்னும் வள்ளுவர் வாய்மொழி தெரிவிக்கிறது. ஊடலுவகை அதி காரத்தின் இறுதிக் குறளாயும் காமத்துப்பாலின் நிறைவுக் குறளாயும் உள்ள,

'ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்' (குறள் 1330)

என்பதால் ஊடலும் கூடலும் இன்பச் சுவையை மிகுவிப்பன எனத் திருவள்ளுவரும் எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்த அகப்பொருள் நெறிமுறையை நன்கு உணர்ந்த கம்பனும் தம் காவியத்துள் அங்கங்கே ஊடல், கூடல் என்பவைபற்றிக் காமச் சுவை ததும்பக் கட்டுரைத்துச் செல்லுகின்றுன்.

அயோத்தி மாநகர மக்களின் மகிழ்ச்சி வாழ்வினைப் பல பாடல் களில் கம்பன் பாடுகிறுன் (பால. நகப் 52-65). அங்கே ஒரு பாடலில்,

'ஓடுவார் இழுக்குவது, ஊடல் ஊடுறக்
கூடுவார் வனமுலை கொழித்த சாந்தமே'
(பால. நகரப். 56)

என்று ஆடவர்-மகளிர் ஊடுதலையும் கூடுதலையும் சுட்டுகின்றுன்.

கைகேயி சூழ்வினைப் படலத்தில் விடியற்கால நிகழ்ச்சிகளை வரு ணிக்கும் பகுதியில், யாமபேரி இசைத்தமையால் ஊடல் உற்றவர் பின்னர்க் கூடலின்றிக் கழிந்தனர் என்று ஒரு பாடலில் குறிக்கின்றுன். அது வருமாறு:

'ஆடகம் தருபூண் முயங்கிட
அஞ்சி அஞ்சி அனந்தரால்
ஏடகம் பொதி தார் பொருந்திட,
யாம பேரி இசைத்தலால்,

சேடகம் புனை கோதை மங்கையர்
சிந்தை யில்செறி திண்மையால்
ஊடல் கண்டவர் கூடல் கண்டிலர்
நையும் மைந்தவர்கள் உய்யவே.'
(அயோத். கைகேயி சூழ். 61)

ஆகவே, ஊடலும் கூடலும் இன்பநுகர்ச்சியின் இணைபிரியாச் சரடு போன்றுள்ளமை காணலாம்.

ஊடலையும் கூடலையும் மிகுகாமச்சுவை தோன்றக் கம்பன் கூறும் இடங்கள் காவியத்தில் அங்கங்கே உண்டு. சிறப்பாக உண்டாட்டுப் படலத்தில் மதுவுண்ட ஆடவர்-மகளிரின் கூடல் ஊடல் பற்றித் தொடர்ச்சியாகப் பத்துப் பாடல்களிலே (பால. உண்டாட்டுப் 56—65) பேசுகிறான் கம்பன். இந்த நிகழ்ச்சியைக் 'கலவிப்பூசல்' என்றும் (பால. உண்டாட்டுப். 66) என்றும் அவன் சுட்டுகிறான்.

'நறைகமழ் அலங்கல் மாலை
நவிர்நறுங் குஞ்சி மைந்தர்
துறையறி கலவிச் செவ்வித்
தோகையர் தூசு வீசி
நிறைஅகல் அல்குல் புல்கும்
கலன்கழித்து அகல நீத்தார்;
அறைபறை அனைய நீரார்
அருமறைக்கு ஆவரோ தான்?'
(பால. உண்டாட்டுப். 56)

என்கிறான் கம்பன். கூடல்வினை மறைவாகத் தனியிடத்தில் நிகழ்வது என்பதனை 'அருமறை' என்பதனால் கம்பன் வெளிப்படுத்துகிறான். தனியிடத்தில் கலவிச் செவ்வியில் இருக்கும் நிலையை அப்படியே சொல்லோவியமாக்கித் தருகிறான். இது போன்ற தனிமைக் காட்சிகள் தனிமையில் படித்துச் சுவைக்கலாமே யன்றிப் பலரறியச் சொல்வது நாகரிகமாயிராது. ஆயினும் சங்கப்புலவர் தொடக்கமாக அற முரைத்த வள்ளுவர் முதலியோராலும் ஏற்றுப் போற்றப் பெறும் ஊடல் கூடல் நிகழ்ச்சிகளைக் கம்பன் காட்டியதும் அவன் காவியப் பெருமைக்கு ஏற்ற அளவில் மிகுதியாகவே உள்ளது என்னலாம். இன்பச் சுவையை இயல்பாய் எடுத்துரைக்கும் இடங்களும் மரபுவழியே கம்பனால் தரப்பட்டுள்ளன என்றே கொள்ளல்தகும்.

இன்பமும் அறநெறிப்பட்டதே

ஆடவர்-மகளிர் இன்பக் களியாட்டங்களைச் சிருங்கார ரசம் ததும்பப் பல பாடல்களில் வருணித்து, அவர்தம் இன்பவுணர்வுகளை மெய்ப்பாடு தோன்ற இயற்கையோடு ஒட்டி இயல்பாய் அமையத் தந்திருக்கிறான் கம்பன். இது கொண்டு தகாத நெறியில் இன்பம் துய்த்தனர் என்று கொள்வது அகப்பாட்டு நுணுக்கங்களையும் தமிழின் பொருளிலக்கணச் சிறப்புகளையும் அறியார்தம் கூற்றெனவே விடுத்தல் சாலும்.

'ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும் நெறியின் புறம் செலாக்
கோச லம்புனை ஆற்றணி கூறுவாம்'

(பால. ஆற்றுப். 1)

என்றே கம்பன் தன் பெருங்காவியத்தைத் தொடங்குகிறான். கோசல நாட்டு ஆடவரும் பெண்டிரும் அறநெறி திறம்பா நல்வாழ்வுடைய வர்கள். எனவே, அவர்தம் இன்பக் களியாட்டங்களும் அறநெறிப் பட்டனவேயாதல் வேண்டும் என்பது விளங்கும். மக்கள் வாழ்விலும் இலக்கியங்களிலும் பேரிடம் பெற்று வந்துள்ள அகப்பொருள் மரபு களைக் காலத்திற்கு ஏற்பவும், தாம் பாட எடுத்துக் கொண்ட காவிய அமைப்பிற்குப் பொருந்தவும் கம்பன் ஏற்ற பெற்றி அமைத்துள்ளமை கண்டு களிக்கத் தக்கதாகும்.

8. காதல்*

"மங்கிய மணியெனக் கிடந்தேன்—எனக்கது
மணியென ஒளிவிடக் காட்டிற் றன்றோ!"

—குர்ஆன்

ஒவ்வோருள்ளமும் மற்றோருள்ளத்திற்கு ஒரு காதல் தெய்வமாகக் காட்சியளிக்கிறது. அவ்வுள்ளத்திற்கு ஓய்வுகளும் விழாக்களும் உண்டு; அந்த நாட்களில் உலகம் திருமணவிருந்தாகத் தோன்றும். இயற்கையில் எழும் ஒலிகளும் பருவகாலச் சுழற்சிகளும் காதல் பாட்டுகளாகவும் களி நடனங்களாகவும் தோன்றும்; காதல் என்பது இயற்கையில் அனைத்திடங்களிலும் ஊக்கமும் ஆக்கமுமாக வியாபித்திருக்கிறது. காதல், நம்முடைய உயர்ந்த சொல்லாகவும் கடவுளது மறு பெயராகவும் விளங்குகிறது.

ஓருள்ளத்தின் ஒவ்வோர் உறுதிப்பேச்சும் எண்ணிக்கையற்ற நிறைவேற்றத்தைக் கொண்டுள்ளது; அதனுடைய ஒவ்வொரு மகிழ்ச்சியும் ஒரு புதிய தேவையாக முதிர்கிறது. உலகத்தின் இயற்கை என்னும் வெள்ளம் அடக்க முடியாதது; ஓடிக் கொண்டேயிருப்பது; முன்னோக்கிய பார்வையுள்ளது. அன்புக்கு முதன்முதலாகத் தன்னை அர்ப்பணஞ் செய்து கொண்டு, தயை ஈவிரக்கங்களை எதிர்பார்க்கிறது. பொது நோக்கில் குறிப்பிட்ட மதிப்புகளை இழந்துவிடுகிறது. இந்த இன்பமான நிலைக்கு அறிமுகம் தனிமையிலும் ஒருவர்க்கொருவர் காட்டும் மென்மை உறவிலுமுள்ளது. அதுவே மனித வாழ்க்கைக்கு இன்ப மயக்கமாகும். அது ஒரு தெய்விக எழுச்சி போலவும் உற்சாகம் போலவும் ஒரு காலத்தில் மனிதனை ஈர்த்து அவனுடைய மனத்தில் ஒரு புரட்சியைச் செய்து உடலில் ஒரு தெம்பினையுண்டாக்குகிறது.

இது அவனை அவன் இனத்துடன் இணைக்கிறது. பின்னும் குடும்பத்துடனும் உயிருடனும் உறவுகொள்ள, மற்றும் உறுதிகொள்ளச் செய்கிறது. இயற்கை நியதியில் ஈடுபாட்டையும் அறிவாற்றலில் மேம்பாட்டையும் கொடுக்கிறது. கற்பனையோட்டத்தை வெளியிடச் செய்கிறது. வீரத்தையும் ஒழுக்கத்தையும் சேர்க்கிறது. மற்றும் தூய பண்புகளைக் கொடுக்கிறது. திருமணத்தைச் செய்துகொண்டு சமூகத்தில் ஒரு நிரந்தரமான இடத்தைக் கொடுக்கிறது.

---

* எமர்சென் என்னும் தத்துவப் பேரறிஞர் இயற்றிய 'காதல்' என்னும் கட்டுரையின் தமிழாக்கம். இதனை மொழிபெயர்த்து அமைக்கத் துணைபுரிந்தவர் வில்வாரணிப் பெரும்புலவர் பா. பச்சையப்பனார் ஆவர்.

இத்தகைய இயற்கையான காதல் உள்ளத் தொடர்பு இளங் காதலரிருவர்க்கும் தோன்றலும் ஒருவர்க்கொருவர் தம்மை அர்ப் பணித்துக் கொள்கிறது. எனவே இவ் இளமை செறிந்த உள்ளங் களுக்கு முதியோர் அறிவுரைகளும் கட்டுப்பாடும் சிறிதே ஆயினும் சுவையூட்டுவதில்லை. இதனால்தான் எனக்குத் தோன்றும் உலகியல் கட்டுப்பாடும் பிறவும் அவர்கட்குத் தகாதவையாகின்றன. ஆனால் நான் என் சகமுதியோர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்வது அவர்கள் காதல் வாழ்க்கைக்குக் குறுக்கே தடையாக இருக்க க்கூடாது என்பது. ஏனெனில், இக் காதல் வாழ்க்கை இளமையானவர்களுடன் தொடர் பியதாக இருந்த போதிலும் முதிய வயதானவராகிய பின்னும் உயரிய பிணைப்பினால் ஒன்றி இளமையிலிருந்த அன்பினும் பெருகியவர்களாய் ஒருவர்க்கொருவர் இன்றியமையாதவர்களாய் விடுகின்றனர். இவ் வொருமைப்பாடு முதுமையில் உயர்வகையதாகிவிடுகிறது. கருணை மிகுந்து தோன்றிய முதல் தீ குறுகிய ஒரு தனியுள்ளத்தினுடையதாக எழுந்து மற்றொரு தனியுள்ளத்தைப் பற்றிப் பின் அத்தீயினின்று தணியாது செந்தணலாகப் பெருகி இவ்வுலகம் முழுவதையும் அணைத்து ஒளிவிட்டுப் பயன்தருகிறது. எனவே இருபதில் முப்பதில் எழும் காதலுணர்ச்சியை விளக்குவது பெரிதன்று; எண்பதிலும் அவ்வுணர்ச்சிப் பெருக்கம் குறைவதுமில்லை. காதல் தோன்றிய முதற் பருவத்தை விளக்கும்பொழுது பின்னர்க் காணும் அன்புறவின் சிறப் பான குணங்களில் சிலவற்றைத் தீட்டாது போகலாம். அதுபோலவே பிற்கால வாழ்க்கையைத் தீட்டுங்கால் இளமையுணர்வுகளைத் தீட்டாது போதலும் கூடும். பொறுமையினாலும் தெய்வத்தினருளினாலும் உட்கருத்தினையுணர்ந்து என்றும் இளமையும் அழகுமுள்ள ஒருண்மையை விரிக்கக்கூடும். அவ்வமயத்தில் நாமதனை எக்கோணத்திற் கொண்டு காண்கிறோமோ அக்கோணத்தில் நமக்கு நன்கு புலனாகும்.

இன்னும் முதல் நிபந்தனையாக நாம் மிக நெருக்கமாகவும் நடந் தவை நடந்தவையாகச் சொல்வதை விட்டுவிட வேண்டும். ஏனெனின் ஒவ்வொருவனும் தனிச் சொந்த வாழ்க்கை அழித்து மாற்றப்பட்டு விட்டதாகக் காண்கிறான். ஆனால் அது அப்படியல்ல. ஒவ்வொருவனும் தன் அனுபவத்தில் ஒரு குறைபாடுள்ளதாக எண்ணுகிறான். ஆயின் பிறர் வாழ்க்கை அழகாக எடுத்துக்காட்டாக, அமைந்துள்ளதாகக் காண்கிறான். எவனும் தன் இளமையில் நேர்ந்த உணர்ச்சிவயப்பட்ட உறவினை நினைத்துப் பார்த்தால் தன் வாழ்க்கையின் அணிகலனாக அமைந்ததையும் அது ஊக்கத்தையும் ஊட்டத்தையும் அளித்திருந்தும் அவ்விளமை நிகழ்ச்சிக்கு வருந்திச் சொல்லக் கூசுவான். ஐயோ! எனக்கு ஏனென்று தெரியவில்லை. ஆனால் அளவற்ற பச்சாத்தாபங்கள் முதிர்ந்த வாழ்க்கையில் கசப்பினையுண்டாக்குவதுடன் முதலில் தோன்றிய இனிமையான நினைவுகளை எண்ணிப் பார்த்தும் ஒவ்வொரு அருமை அன்புப் பெயரைத் தொடர்புப் படுத்திப் பார்த்தும் நிற்பதைக் காணலாம். ஒவ்வொன்றும் அறிவுடை நோக்கில் உண்மையில் மிக அழகாகத் தோன்றும் எவையும் விளக்கங்களாக விரித்தால் துக்ககர மானவைகளாகும்; திட்டமோ காணத்தக்கதாயும் உயர்வானதாயும் உள்ளது. இந்நடைமுறையுலகில்—துக்ககரமான காலமும் இடமும் ஆட்சி புரியும் உலகில்—கவலையும் அழிவுண்ணும் அச்சமும் குடியிருக்

கின்றன. நினைவில் அந்த இலட்சியத்தில் என்றும் மாறாத மகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் இருக்கும் அதைச் சுற்றியே பாடல்கள் எழும். ஆனால் துயரோ பெயர்களை மக்களைக் கிழித்து இன்றும் நேற்று முண்டான நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியைக் காட்டும். அதாவது அம் மனிதன் வாழ்ந்த இன்பமான நாட்களின் அனுபவங்களைக் கூறாது ஒழியும்.

இயற்கையின் வலிவுள்ள சார்பு சமூகத்தின் உரையாடல்கள் தனிப் பட்ட உறவுகளினால் கவரப்பட்டு வருகிறது. ஒரு பெருமகனின் வாழ்க் கையில் இவ்உணர்ச்சிகள் எவ்வளவுக்கு நிகழ்ந்தது என்று வரலாற் றுப் பின்னணி நிகழ்ந்துள்ளது என்று—நாமறிய விரும்புகிறோம். நடமாடும் நூல்நிலையங்களில் எந்தப் புத்தகங்கள் எடுத்துப் படிக்கப் படுகின்றன? எப்படி உணர்ச்சியூட்டும் கதைகளைப் படித்துப் பார்க்கும் போது நமக்குள் ஒரு வேகம் ஏற்படுகிறது? காதலர் இருவருக் கிடையே ஏற்படும் அன்பினை வெளிப்படுத்தும் பகுதிகள் நம் கருத்தை யிழுக்கின்றன. அவர்களை முன்பு பார்த்ததுமில்லை; மீண்டும் அவர் களைச் சந்திக்கப் போவதுமில்லை. ஆயின், நாம் பல சந்திப்புகளில் (கதைகளில்தான்) பார்க்கும் பார்வை அல்லது அவர்கள் ஒருவர்க் கொருவர் அவர்களுக்குள் எழும் ஆழமான உணர்ச்சி முதலியவற்றைக் கண்டுகொள்வதால் அவர்கள் நமக்குப் புதியவர்களும் அல்லராகி விடுகின்றனர். நாம் அவர்களைப் பற்றி நன்கு புரிந்து கொள்கிறோம்; அவர்களுடைய வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கறை கொள்கிறோம். அனைத்து மனிதவுள்ளமும் ஒரு காதலினிடத்து அன்பு கொள்கிறது. முதல் நிகழ்ச்சியில் ஏற்படும் காதல் வெளிப்பாடும் ஒருவர்க்கொருவர் காட்டும் அன்பும் இயற்கையின் மனத்தைக் கவரும் காட்சிகளாகும்; முரட்டு மக்களதும் கிராமப்புறத்தார்களதும் நாகரிக வளர்ச்சிக்கும் உயர் அழகுக்கும் அவை விடிவெள்ளியென உதயமாகிறது. முரட்டுக் கிராமப்புறப் பையன் இளம்பெண்களைக் கிண்டல் செய்கிறான். ஆயின், ஓர் குழந்தை அங்கு வரும்போது தன் புத்தகப்பையை நழுவவிட்டதைக் கண்டதும் அவன் ஓடிச்சென்று சிதறிய புத்தகங்களை அடுக்கிக் கொடுப்பான். கொடுத்ததும் அவள் தனக்குத் கிட்டாததூரத்தில் செல்வதைப் போல் தோன்றும். பெண்களின் கூட்டத்தில் ஓடு மவனுக்கு ஒருத்திமட்டும் அவனுடைய கருத்தை ஈர்த்துவிடுவாள். அந்த இளம் இரு உறவினர்கள்மட்டும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு மதிப்பு வைத்துக்கொள்வர். அல்லது, பாதி சமர்த் தாகவும் பாதி கபடமற்றும் பள்ளிப் பெண்கள், கடைக்குச் சென்று பட்டுநூல், வெள்ளைத்தாள் போன்றவற்றை வாங்குங்கால் முகமலர்ச்சி யோடும் நல்லியல்போடும் பேசும் கடைக்காரப் பையனிடம் ஒன்று மில்லாததைப் பற்றிப் பேசுவதைக் காணாது கிராமத்தில் தன் கண்களைத் திருப்பிக் கொள்பவர் யார்தாம்? அவர்களனைவரும் சரிசமமாகப் பழகுவர்; அவ்வன்பால் மகிழ்வர். மோகமூட்டலின்றி எவ்விதமான கள்ளங்கபடும் இல்லாமல் இயல்பாகவுள்ள அன்புள்ளம் பொங்கி இவ்வாறு வீண்பேச்சு பேச வைக்கிறது. அப்பெண்களுக்கு அழகு இல்லாமலிருக்கும். எனினும் அவர்களுக்கு அந்த நல்ல பையனுடன் நம்பிக்கையான நட்புறவு இருக்கும் தம் நண்பர்களைப் பற்றிய வேடிக்கை விருப்புகளை அவனுடன் விளையாட்டாகப் பேசுவர்; நடந்த

விருந்தில் யார்யாரை அழைத்தார்கள்; நடனப் பள்ளியில் யார் ஆடினர்; பாட்டு சொல்லிக் கொடுக்கும் பள்ளி என்று தொடங்கும் என்பதும் பிற வீண்பேச்சுக்களைப் பேசியும் அவர்கள் மகிழ்வர். சிறிது சிறிதாக, அந்தப் பையனுக்கும் தக்க ஒரு பெண்ணை மணந்து வாழ்க்கை நடத்தும் விருப்பம் எழும். தனக்கேற்ற பெண் எங்கு கிடைப்பாள் என்று பார்ப்பான். எதிர்பாராதவிதத்தில் திருமணம் முடிந்து, கற்றோர் அவதிப்படுவதைப்பற்றி மில்டன் புலம்புவதைப் போலன்றி மிகவும் உண்மையாகவும் இதயபூர்வமாகவும் காதல்கூர்பவளைத் தேடுவான்.

பொது மக்கள், என்னைப்பற்றிப் பேச்சு வரும்போது சொந்த உறவு களுக்கு நல்லிடம் கொடாது அநியாயமாக முகஞ்சுளிப்பதாக என்னிடம் தெரிவித்துள்ளனர். அப்படித் தரக் குறைவாக நடந்து கொண்ட நேரங்களை இப்போது நினைத்துக் கொண்டால் நான் மிகவும் குன்றிப் போய்விடுகிறேன். ஏனெனின், உலகுக்கு ஆணும் பெண்ணும் தேவை. காதல் இன்றேல் உலகம் இல்லை. கடுஞ் சிந்தனையுடைய தத்துவ ஞானி களால் கூட இளங்காதலன் இயற்கைக்கு மாறாகவும் நம்பிக்கைத் துரோகமாகவும், சமூக நன்னெறிக்குப் புறம்பாகவும் நடந்ததாகக் கூறியதில்லை. இங்ஙனம் இரு உள்ளங்களைக் கூட்டுவிக்கும் திருவருள்[1] இளைஞர் மேல்தான் விழுகிறது. பிரித்துப் பார்த்தல், ஒத்திடுதல் போன்ற எல்லாவற்றையும் தள்ளி மேலெழுந்து நிற்கும் அழகு நம்மை இவற்றிற்கு அப்பால் கொண்டுவிடுகிறது. இவை முப்பது வருடங் கட்குப் பின் பெரும்பாலும் தோன்றுவதில்லை. இருந்தபோதிலும் இந் நிகழ்ச்சியின் காட்சிகள் பிற நினைவுகள் மறந்துபோயினும், மனத்தில் பசுமையாக நன்றாக இருக்கும். இதுவே முதுமையின் மலர் முடியாகும். ஆனால் இங்கு புது உண்மையும் ஒன்றுண்டு. பல மனிதர்கள் தம் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்குங்கால், அவர்களுடைய வாழ்க் கைப் புத்தகத்தில் அதனினும் அழகான பக்கம் ஒன்றில்லை எனலாம்படி சில நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருதல் கூடும். ஆயினும் அவை மந்திரத் தால் நேர்ந்தனபோல எதிர்ப்பாராதவிதமாகவும் சாமானியமான சூழ் நிலையிலும் நிகழ்ந்தனவாகத் தோன்றக்கூடும். எது உண்மையாக ஆழ்ந்த நிகழ்ச்சியின் சிகரமாக அமைந்து நறுமணத்தைக் கொடுத்ததோ அதைத் தவிர்த்துப் பிறவே உண்மையில் நிகழ்ந்ததாகத் தோன்றும். ஆயினும் நம்முடைய அனுபவம் நிகழ்ச்சி முறையில் எப்படியேனும் இருப்பினும், அதன் ஆற்றலினால் அவர் இதயமும் மனமும் அதை மறக்கச் செய்வதில்லை. மற்றும் அந்நினைவே அனைத்துப் பொருள்களையும் புதியனவாக தோன்றச் செய்கிறது; அதனால் இசை, பாட்டு, கலை ஆகியவற்றையுணரும் உதய நாளாகிறது. அதுவே இயற்கையின் முகத் திற்குச் செந்நிற ஒளியைக் கொடுத்து காலையும் இரவும் பலவித மன ஈர்ச்சியைத் தருகிறது. ஒரு குரலின் ஓர் ஒலி உள்ளத்தைக் கிளர்ந் தெழச் செய்யும். ஓர் உருவின் தொடர்பான ஒரு சிறு நிகழ்ச்சி நினைவு என்னும் நறுமனத்துள் வைக்கப்படுகிறது. ஒருத்திக்கு ஒருவன் அங்கிருக் கும்போது எல்லா நாட்டமும் அங்கே அவன் சென்றபின் அவளுக்கு

---

1 தமிழ் அகப்பொருள் மரபில் தலைவன் தலைவியர் வயது அவர்களது இளம் பருவத்தையே காட்டுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

அவனைப் பற்றிய நினைவே. இளமை சாளரத்தினூடே எதிர்பார்த்தல்; கையுறை, கட்டு நூல், தலைத் துணி, வண்டி வரும் ஒலி என்று ஆர்வ மொடு பார்த்தல் என்பதில்லை; அவளுக்குத் தனிமை என்பதில்லை; ஒன்றும் மௌனமாக இருப்பதில்லை; புதிய எண்ணங்களில் நல்ல தோழமையும் இனிய சொல்லாடலும் அவளுக்குண்டு. பழைய தோழிகள் மிக நல்ல தோழமையைக் கொடுக்க இயலுமாயினும் அதனின் மேலாக இவை தோன்றும். தனக்கினியவன் தன்னுரு, இயக்கம் (நடை), சொல் எனும் அவையனைத்தும் நீர் மேலெழுதிய உருவமன்று; அவை புடமிட்டு ஒளிரும்;

"பிரிவெனப் படுவது பிரிவே யன்று,
திரிந்தெவண் இருப்பினும் விரிந்த நின்கண்கள்
கருணை கொண்டவனைக் காத்தல் செய்வன
வருந்தும் நின்உள்ளம் மனத்தவன் காணும்
விரிந்த இவ்வுலகத்துப் பிரிந்தோ ராயினும்
ஒருவருள் ஒருவர் ஒன்றினர் ஆவரே.'

வாழ்க்கையின் நண்பகலிலும் மாலைப் பொழுதிலும் காலையிலும் எழுந்த இன்பமும் போதிய இன்பமன்று; துன்பமும் அச்சமும் தேய்ந்தது என்று எண்ணுங்கால் நம் நாடி துடிக்கும். காதலைப்பற்றிச் சொல்லி யவன், பிற எல்லா இன்பங்களும், காதலால் எழுந்த துன்பங்கட்கு ஈடாகா என்றான். அவற்றை எண்ணிப் பார்க்க நெடும் பகலும் போதாது, இரவும் வேண்டும்.

இரவெல்லாம் தான் செய்துள்ள பரந்த உறுதிப்பாட்டினை எண்ணித் தலையணையில் படுத்துக் கிடந்தகால் தலை கனத்துவிடும். நிலவொளி இன்பச் சுரத்தையூட்டும்; உடுக்கணங்கள் கடிதங்களாகத் தோன்றும்; பூக்களெல்லாம் பூச்சியங்கள்; காற்று இசையாக மாறும்; எல்லா வேலைகளும் வீண் எனத் தோன்றும். தெருவில் போவதும் வருவதுமா யுள்ளோர் எல்லாம் நிழற்படங்களே.

ஆர்வம் இளமைக்குப் புத்துலகினைச் செய்து கொடுக்கிறது. அது எல்லாப் பொருள்களையும் உயிருள்ளனவாகவும் முக்கியமானதாகவும் இருக்கச் செய்கிறது. இயற்கை மனமார வளர்கிறது. ஒவ்வொரு பறவையும் மரத்தின் கிளைகளில் இருந்துகொண்டு, அவன் உள்ளமும் உயிரும் உவப்பப் பாட்டிசைக்கும்.

அவ் இசைகள் மிகவும் தெளிவானவை. மேகக் கூட்டங்கள் அனைத் தும் அவனுக்குப் பார்க்கும்போது இன்முகங் கொடுக்கும். காட்டிலுள்ள மரங்கள், அடர்ந்து வளைந்து அசைந்தாடும் புற்கள், எட்டிப் பார்க்கும் மலர்கள் எனுமிவை அனைத்தும் அறிவு பெற்று வளர்ந்துள்ளனவாகத் தோன்றும்; எனவே அவன் அவைகள் தம்முடன் தன் இரகசியத்தைப் பங்கிட்டுக் கொள்ள அவை அழைக்குங்கால் அவற்றுக்குச் சொல்ல அச்சப்படுகிறான். இருந்தபோதிலும், இயற்கை அவனைத் தேற்றி அவன் நிலைக்கு இரங்குகிறது.

"நீருற்றும் வழிதெரியா கா ர்ந்த புதரும்
வேரூன்று காதலினால் விரும்பியபல் இருப்பும்
காரூர்ந்த இருள்தனிலே ககறியழும் கோட்டானும்
நீருற்றும் அழுகுரலும் நிலைத்தவுணவு எமக்காகும்."

என்பது தனிமையின் நிலை. இப் பசுமைத் தனிமையில் தன்னரிய இல்லத்தைக் காண்கிறான். மக்களுடன் அன்று காட்டில் திரியும் அவ் வழகிய இளைஞன் பித்தம் பிடித்து அலைவதைப் பாருங்கள். இனிமை யான ஒலிகளுக்கும் காட்சிக்கும் இருப்பிடம் அவன் விவரிக்கிறான்; அவன் இப்போது ஒரிரட்டை மனிதன். தன் பின்னே புட்டத்தின் மீது தன் கைகளிரண்டையும் வைத்துக்கொண்டு நடக்கிறான். தனக்குள்ளே பேசிக் கொள்கிறான். புற்களுடனும் மரங்களுடனும் பேசுகிறான்; ஊதாப்பூவின் இரத்த ஓட்டத்தை உணர்கிறான்; குளோவர் மலரிலும் குவளை மலரிலும் உள்ள நீரோட்டம்தான் இரத்தத்திலும் கலந்தோடுவ தாக உணர்கிறான். தன் காலை நனைக்கும் நீரோடையுடன் பேசுகிறான்.

இங்ஙனம் இயற்கையோடு இயைந்து அதன் எழில் நயங்களை ஆர்வத்தோடு உணர்வதால் இசையின் ஈடுபாட்டில் ஒன்றிவிடுவதும் அமைந்து வருகிறது. அடிக்கடி நாம் காணும் உண்மை ஒன்று உண்டு. மனிதர்கள் ஓர் ஆர்வத்தில் நல்ல கருத்துள்ள செய்யுள்களை இயற்றி விடுவார்கள். ஆயின் அவர்கள் ஓய்வாகப் பிற சந்தர்ப்பங்களில் எழுதினால் அவை நன்றாக அமைவதில்லை. இது கண்கூடு. அது போன்ற ஆற்றல் அவனுடைய காதல் மயக்கில் இயல்பாக ஏற்பட்டுவிடுகிறது. உள்ளத்தில் எழும் உணர்வினை விரிவாக்குகிறது. விளையாட்டுப் பிரியனையும் ஆழ்ந்த சிந்தனையாளனாக்கி விடுகிறது. எளிதில் இரக்கம் கொள்பவனையும் மனமொடிந்து கிடப்பவனையும் வீரவுள்ளத்தினனாக்கித் தீயவுலகை எதிர்க்க வைக்கிறது. அவன் அன்புடன் மதிக்கும் அவன் மனமகிழ்வொன்றே அவன் குறிக்கோள். இங்ஙனம் அவளுக்குத் தன்னை அர்ப்பணித்தால் தனக்குத் தானாகவே தன்னைக் கொடுத்துக் கொள்பவனாகிறான். இப்போது அவன் ஒரு புதிய மனிதன்; புதிய நோக்குடையவன். புதிய கூரிய நோக்கம் நடத்தையிலும் கொள்கை யிலும் சிறிய கடைப்பிடிப்பு தன் குடும்பம் தன் சமூகம் என்பது இனியில்லை; மனிதத்தன்மை வந்துவிடுகிறது. கனிந்த நல்ல உள்ள முள்ளவன்.

இங்கு ஆற்றல் வாய்ந்த அவ்விளைஞனுக்கு ஊக்கம் கொடுத்த சக்தியைச் சற்று நோக்குவோம். மனிதனுக்கு விழிப்பினையூட்டிய அழகு குளிரில் நடுங்கும் ஒருவன் வரவேற்கும் வெய்யில் போன் றது. அவ்வழகு அவனுக்கு மட்டுமன்று; தனக்கும் பிறருக்கும், மகிழ்வினை ஊட்டுவது. காதல் மயக்கில் இருக்கும் அவன் தன் காதலியைத் தன் உள்ளத்தில் திக்கற்றவளாகவும் தனியளாகவும் கருதான். பூத்துக் குலுங்கும் மரம்போன்று அவ்வளவு மெல்லியதாய் சமூகம் வரவேற்று மகிழும் அழகியதாய் அவனுள்ளத்திற்படிந்து, அன்னநடை நடக்கும். அவள் இருப்பு உலகுக்கு நன்மை தரும். பிறர் மேல் நாட்டம் கொள்ளாது தன்னிடமே ஈர்த்துக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவள் எனினும், அவள் தன்னைக் காட்டிக் கொள்ளாமல், எல்லா நலன்களுக்கும் காரணமாக்கிக் கொள்வாள். அக்காரணம் பற்றியே காதலின் தலைவியைப் பெண்ணினத்துடனோ பிறருடனோ ஒப்புமை வைத்துக் காணமாட்டான். அவன் நண்பர்கள் அவளை அவள் தாயின் சாயல் உள்ளவள், அன்றி உடன் பிறந்தார்களது சாயல் உள்ளவள் அன்றி அவளுடன் பிறவாப் பிறர் சாயலுள்ளவள் என்று காண்பார்கள்,

அவனுக்கோ அவள் இளவேனில்; ஒளி மிளிரும் காலைப் பறவைகளின் இன்னிசை.

பண்டையோர் அழகினை மலருங்கற்பு என்பர். பெயரிடவொண்ணு அவ்வழகினை இன்ன உரு இன்னமுகம் என்று யார்தாம் பிரித்துக் காட்டக் கூடும்? அன்பின் வயப்பட்டுவிடுவோம்; ஆயின் எங்கிருந்து இவ் அன்பின் மெல்லியல் உணர்வு வந்தது என்று காணக்கூடுவதில்லை. இத்தன்மையது, இவ்விடத்துத் தொடர்புடையது என்று சொல்வது அழித்தல் வேலைதான். எட்டாத எல்லையில் இருப்பது என்றே எனக்குத் தோன்றுகிறது. நுண்ணியது, இனியது. ரோஜாவும், நீலாம்பரமும் குறிப்பால் உணர்த்திப் பின் விளைவை முன்கூட்டி அறிவிப்பது போன்றது. அழகினை நம்மால் எளிதில் பற்றிக் கொள்ள இயலுமா? அதன் இயல்பு புறவின் கழுத்துப்புறம் போன்று வனப்பும் மென்மையும் உடையது; மனத்தைக் கவர்வது; நிலையற்றது; இங்கு இது மிக நல்ல வற்றை ஒத்துள்ளது. இவையெல்லாம் வானவில்லின் தன்மையைப் பெற்றுள்ளன. சொந்தமாக்கித் தனக்கு மட்டும் பயன் கொள்ளும் தன்மையதன்று. இதனுலன்றே ஜீன்பால் ரிக்டர் இசையைப் பற்றிச் சொல்லும்போது, ''போ, போ என் வாழ்நாள் எல்லாம் தேடியும் முடிவெது என்று காணவில்லை; இனியுங் காண்பேன் என்னும் நம்பிக்கையும் இல்லை. என்னிடம் எல்லாம் தெரிந்தவன் போலச் சொல்ல வேண்டா,'' என்று கூறினர். இவ்வாறே பிற கலைச் செல்வங்களைப் பற்றியும் சொல்லுதல் அமையும். கல்லாகிய சிலை அழகு பொருந்தியிருப்ப தாயினும் அது எவ்வாறு உருவம் பெறத் துவங்கிற்று என்பது நமக்குப் புலனுகாது. அளவுகோலாலும் பிறவற்ருலும் அளந்து காண முடியாது. ஆயின், நம்மன உணர்வினுல் அதை ஒருவாறு அறிந்து கொள்ளவியலும். சிலை வடிப்போன் தெய்வத்தையோ வீரனையோ கல்லில் வழங்கத் தொடங்குவான். அவ் உரு சிற்பியின் கற்பனைக்குள் தொடங்கும். அவன் தொடங்கியதும் கல் என்ற நிலை மாறிவிடும். இதுபோன்றே வண்ண ஓவியத்திற்கும் கூறலாம். அவ்வாறே கவிதையும். கவிதை நன்ருக அமைந்தாலும் கூட அது வெற்றி ஆகாது. ஆயின் அது மக்களிடையே எழுச்சியைத் தோற்றி அவர் மனத்தில் மேலோங்கி நிற்குமாயின் அப் போதியற்றிய கவிதைக்கு ஈடு செய்ய இடலாது. இதுபற்றி அறிஞர் லாண்டார், ''இதனை முற்றும் உள்ளத்தின் எழுச்சி என்ருே, அவன் உள்ளத்தில் படிந்த ஒன்று என்ருே ஆராயக் கூடுமா?'' என்று வினவுகிருர்.

இது போன்றே ஒருத்தியின் அழகு முதலில் ஒருவன் மனத்தை யீர்க்கிறது. அவளே அழகின் உருவமாகத் தோன்றுகிருள். அவள் உரு தலைவனின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பினுலும் அது இவ் உலகத் திருப்திக்கு அன்று. தலைவன் தலைவி இவர்களுக்குள் எழும் உள்ள எழுச்சி, திருவருளால் ஆனதாகும். தலைவனுக்குத் தலைவியைக் கண்ட போதுதான் அவளைப் பெறத் தகுதியுடையவனே என்று ஐயுறுகின்ருன். அவ்வாறு அவளைப் பெறும் உரிமை (பெருமை) தனக்கில்லையென்று அவன் உணரவில்லையாயின் அவன் அவ்வுரிமையைப் பெற்றவன் ஆகான், எவ்வாறு உலகத்தின் உடுக்கணங்களையோ மாலைக்கால மாட்சியினையோ பெறும் உரிமை அவனுக்கில்லையோ அதுபோல்தான் இச்செயலும் ஆகும்.

எனவேதான், "நான் உன்னை விரும்புகிறேன் ஆயின் அதனால் உனக்கு ஆவதென்ன?" எனும் சொற்றொடர் வழக்காற்றிலுள்ளது. ஏன் அவ்வாறு சொல்ல வேண்டும் எனின் அவ்விருப்பம் நீ நினைத்த மாத்திரத்து வந்து விடுவதன்று; அதற்கு மேலேயுள்ள ஒன்றே அவ்வாறு நாட்டம் கொள்ளச் செய்கிறது. அதற்குக் காரணம் நீ அல்லன். மற்று அது உன்னிடத்திருந்து எழுந்தவொரு ஒளியினால்தான் நிகழ்கிறது. அதனை உன்னுள் இருக்கிறதென்று நீ அறிய மாட்டாய்; அறியப் போவதுமில்லை.

அழகு பற்றிய உயர் தத்துவத்திற்கு இது ஒத்து வருகிறது. பண்டைய அறிஞர்கள் இதனைச் சிந்தித்து மகிழ்ந்தனர். மனித உள்ளம் இவ்வுலகத்தில் தோன்றிப் பல திசைகளிலும் திரிந்து, "எங்கிருந்து நாம் வந்தோம்? அது எங்குள்ளது?" என்று நாடிப், பின் இயல்பாக எழும் ஞாயிற்றின் ஒளி கண்டு மயங்கிற்று. இவ்வுலகில் காணும் பொருள்களை யன்றி வேறு ஒன்றையும் காணாததாயிற்று. அவ்வாறு உலகத்திற் காணும் பொருள்களும் உண்மைப் பொருள்களின் நிழல்களே. ஆகவே தெய்வம் இளமையின் பெருமையை முன்னிட்டு உள்ளத்தைப் பின் வைத்து, அவ்வுள்ளத்தால் அழகின் பெருமையையும் அதன் நன்மையை யும் இனிமையையும் நினைவு கூரச் செய்கிறது, அவ்வாறான அழகினைப் பெண்ணின் உருவிற் கண்டதும் இளைஞன் மனம் அவளை நோக்கி விரைந்து செல்கிறது. அவள் உரு, நடை, அறிவு ஆகியவற்றால் ஒரு பெரும் மகிழ்வைக் காண்கிறான். ஏனெனின் அவ் வழகினுருவம், அவ னுள்ளத்தில் படிந்து அவனெண்ணத்தைத் தூண்டி மகிழச் செய்கிறது என்பது.

இனி, இவ்வுலகிலுள்ள பொருள்களைப்பற்றி மிகவும் கூர்ந்து ஆராயப்புகின், அவ்வாய்வு வெற்றெனை முடியும். அதனாலாயபயன் துயர் தருவதேயன்றி வேறு பயன் இல்லை. வெறும் உடல் மட்டும் அழகுபோல் உள்ளத்தை யீர்ப்பதில்லை. ஆயின், அவ்வுருவைக் கண்டதும் அவன் கற்பனை மிகுந்துள்ளத்தைக் கவர்ந்து விடுகிறது. அதே போன்று தலைவி யின் உள்ளத்தும் அவன் மேலுள்ள கவர்ச்சி விழுகிறது. அவ்விரு காத லர்களும் கண்ணாலும் வாயாலும் பேசிக் கொள்வர். அவர்கள் செயலும் ஓர் அழகு என்னும் அரண்மனையில் குடிபுகும், இவ்விருவர்க்கிடையே யுள்ள ஈர்ப்பும் நாளும் வளரும். அவ் அருங் காதல் வெறும் அன்பினை வீழ்த்தி மேலெழும். ஞாயிற்றின் மூன் அடுப்பினின்றெழும், ஒளி குன்று வது போன்றது அது. அக் காதல் தூய்மையானதும் தெய்விகத் தன்மை வாய்ந்ததும் ஆகும். அவ்விருவரும் பேசுவது பெரிதாகவிருக்கும்; நன்றாக விருக்கும்; பணிவாகவிருக்கும்; நேர்மையாக இருக்கும். காதல் கொண்டவன் உயர் கொள்கைகளைக் கைப்பற்றி விரைந்து அதன் நலன் களை உணர்வான். அவ்வாறுணர்ந்து இவ்வுலகத்து அனைத்து உயிர்கள் மீதும் அவன் அன்பு செல்லும். அவ்வாறு உலகின்மேல் அன்பினைச் செலுத்துவதற்குத் தலைவியின் திருவுருவமே வழியாகும். அத் திருவுரு வின் வழியேதான் சமூகத்தினிடையே செல்லக் கூடும். தன் தலைவி, பிறந்து, வளர்ந்து, வாழும் சமூகத்தில் அவன் தன்கு ஆவனவற்றைக் கண்டு கொள்வான். உலகில், அவள் தனக்கின்றியமையாதவள் என்று உணர்வான். அவர்களுள் எழும் மகிழ்வு பிறர்க்குத் தீங்கு நினையாதது,

அவர்களுக்குள் உயர்வு தாழ்வு தருவதும் அன்று. ஒருவர்க்கொருவர் தடையாகவும் இரார். ஒருவர்க்கொருவர் உதவி, துன்பம் துடைத்து, மனவமைதி பெறுவர். இத் தெய்விக அழகின் இழை பல உள்ளங்களில் ஓடக் காணலாம். தலைவன் திருவின் உச்சியைச் சேர்ந்து இறையின் (தெய்வத்தின்) நிலையினையுணர்வான், இங்ஙனம் காதல் அவனுக்கு மேல் நிலையையடையும் ஏணியாகும்.

ஒருவாறு இதைப்போன்று ஒத்திருக்கும் ஒன்றை அறிஞர்கள் ஒவ்வொரு காலத்திலும் நமக்கு அறிவுறுத்தியுள்ளனர். எனவே இக்காதல் வாழ்க்கைக் கொள்கை பழையதுமன்று; புதியதுமன்று. பிளேடோவும் புளுடார்க்கும் இதனை விளக்கியுள்ளனர். பின்வந்த பெட்ரார்க்கும், அஞ்சலோவும், மில்டனும் அவ்வாறே விளக்கியுள்ளனர். இவ்வுயரிய கொள்கையின் விளக்கத்திற்கு எதிர்ப்புமுண்டு. திருமணத்தில் முடிந்து அவ் விழாவில் சொல்லும் சொற்கள் உயர்ந்தனவாக இருக்கலாம். ஆயின் ஒருவன், குடியிலும் வெறியலங்காரத்திலும் கீழ்நோக்கிச் செல்லவும் கூடும். உயர் வாழ்க்கைக்குத் தடங்கலாக வெறும் உடல் உணர்ச்சி நின்று மனித அன்பின் இயல்பினை அழியச் செய்யவும் கூடும். இல் வாழ்க்கை (திருமண வாழ்வு) தலைவியைச் சிக்கனம் கடைபிடித் தொழுகும் இல்லக் கிழத்தி என்பது மட்டுமே; அவளுக்கு வேறொரு குறிக்கோளுமில்லை என்று கற்பித்தல் மிகக் கேடு விளைவிப்பதாகும்.

இக் காதலின் கனவு அழகியதாயினும் வாழ்க்கையின் ஒரு பகுதியேயாகும். மனித உடலுக்குள்ளிருந்த உள்ளம் வெளிப்பட்டு இயங்குகையில் அது உலவி வரும் இடம் பெரிதாகும். குளத்து நீரிலிட்ட கல் எப்படிச் சிற்றலையை எழுப்பிப் பின் அவ் அலையைப் பெரியதாக்குகிறதோ எங்ஙனம் ஞாயிற்றின் ஒளி அதனின்று புறப்பட்டு உலகெங்கணும் பரவுகின்றதோ அதைப் போன்றது அக் காதல் உள்ளத்தின் உலா. உள்ளத்தின் ஒளி முதலில் அண்மையில் உள்ள பொருள்களில் படிகிறது. பின் ஒவ்வொரு தட்டுமுட்டிலும் விளையாட்டுப் பொருளிலும் படுகிறது. பின் செவிலிகள் வீட்டிலுள்ளோர், வீடு, வீட்டின் முற்றம், வந்து செல்வோர், வீட்டிற்கு வந்து அறிமுகமானோர் என்று அவ்வொளி பரவுகிறது. அரசியல், நிலபுலம், வரலாறு என்று விரிந்து செல்கிறது. ஆயின் பொருள்கள் உயர் தத்துவத்தின் நியதியிலோ உள்ளார்ந்த நியதியிலோ சேர்ந்து கொள்கிறது. அண்டை அயல்மை, அளவு, தொகை, பழக்க வழக்கங்கள், மக்கள் என்று தொடங்கி அவற்றின் ஆற்றல் நம்மீது குறைந்து விடுகிறது. காரண காரியம், உள்ளம், சூழல் இவற்றுக்கு ஒற்றுமை ஏற்படுத்துவதில் விருப்பம், முன்னேற்றம், உயர்ந்த தத்துவத்தைத் தேடும் மனவெழுச்சி ஆகியவை பின்னர் மேலெழுகின்றன. இவ்வாறு முன்னேறியபின் பின்னுக்குத் திரும்புவது இயல்வதன்று. எனவே காதலும் திருவருளால் இருவரைக் கூட்டி அதன்பின் தமக்கு என்ற நிலை மாறி, "நாம் பிறர்க்கு உதவுவதற்குள்ளோம்", என்ற குறிக்கோளில் தம்மையிழந்த நிலைக்கு மாறிவிடுவர். முதலில் இதன் குறிப்பு அவர்களுக்குத் தோன்றாது. இளம் வயதினரான தலைவியும் இதனை நினைப்பதில்லை. பெருங் கூட்டத்தினிடையேயோ தனியிடத்திலோ ஒருவரையொருவர் கண்டதும் காதல் கொள்வர். தம் முள்ளத்தினை அவர்கள் கண்கள் வெளிப்படுத்தும். இப்புதுமை பின்னர்

பழுத்துப் பிறர்க்குப் பயன்படும் நிலைமை எய்தும். வித்து, முளைத்து— மேற்போர்வையைக் கிழித்து—இலை—மொக்கு—மலர்—காய்—கனி என்று விரிவடைகிறது. கண்ணொடு கண் நோக்கி உள்ளம் பரிமாறிய தொடக்கத்தில் இருந்து முன்னேறி ஒருவரையொருவர் மதித்துப் பல தடங்கல்களைக் கடந்து மண முடிப்பு நிகழ்கிறது. உள்ளம் உடலுள் முற்றிலும் அடங்கியது. பின் உடலே உள்ளத்தின் ஏவல்களுக்குள்ளாகிறது. இதனை, ''என்பும் உரியர் பிறர்க்கு'', என்னும் அருள்வாக்கினால் உணரலாம்.

> ''உள்ளத் திருந்த உவகை
> உலகம் அறிய முகத்தில்
> கள்ள மின்றிக் காட்டி
> காதல் குறிப்பைத் தோற்றி
> மெள்ள அவனுக்கு ஊட்டி
> மென்மை அறிவை சேர்த்திக்
> கொள்ளும் அவள்தன் மேதை''

ரோமியோ இறந்தானாயினும் அவன் உடல் பல கூறாகப் பிரிந்து வானில் உடுக்கணங்களாகி அவ்வானை அழகுபடுத்த வேண்டும் என்பது ஜூலியத்தின் விருப்பம். இங்கனம் ரோமியோ, ஜூலியத் என்னும் இவ்விருவரது வாழ்க்கை வேறு குறிக்கோள் உடையது அன்று, ஜூலியத்தைவிட ரோமியோவைவிட வேறு ஒன்றையும் வேண்டாது. இரவு, பகல், பட்டறிவு, ஆற்றல், அரசு, சமயம் என்ற இவையெல்லாம் அவ் உள்ளத்தின் உருவில் சேர்ந்துள்ளது. அவ்வுள்ளமே எல்லா உருவமாகவும் அமைந்துவிடுகிறது. தலைவனும் தலைவியும் ஒருத்தருக்கொருத்தர் காட்டும் அன்பினில் மகிழ்கிறது. அவ் இருவரும் தம் காதலின் திண்மையை வெளியிட்டுக் கொள்வதில் மகிழ்வர். தலைவன் தனித்திருக்கும்போது தலைவியின் உருவத்தை மனத்தில் உட்கொண்டு அமைவான். அவ்வாறே தலைவி தனித்திருக்கையில் தலைவனின் உருவத்தை மனதில் உட்கொண்டு அமைவாள்.

''தலைவன் கண்ட அதே உடுக்கணந்தாமா? மேகம் கரையும் தன்மை தலைவன் கண்டது போன்றே உள்ளதோ? தலைவன் படித்த நூல் இதுவோ? அவன் உவந்தது இதுவோ?'' என்று அவற்றைக் காணுங்கால் மகிழ்வாள். அவ்வாறே அவர்கள் அன்பு எனும் ஒருமைப்பாடு நண்பரிடையேயும், ஏற்கும் தொழிலிலேயும், பெற்ற பொருளிலேயும் தம் மகிழ்வைப் பகிர்ந்து கொள்வார்கள். அவர்களுக்குள் யாருக்கேனும் ஒரு சிறிது தீங்கு நேர்வதாயினும் பொறார். உயிர் கொடுத்தும் அவர் மகிழ்வைப் பெறுவதற்குப் பின் வாங்கார். மனித இனத்தின் விதி இவ் இளங்காதலர் கைகளில்தான் உள்ளது. ஆபத்து, துயர் முதலியன எல்லோருக்கும் போல்தான் அவர்களுக்கும் வருகிறது ஆயின் அவர்கள் அத் துன்பம் முதலியவற்றைப் போக்கத் தெய்வத்தை வணங்குவர். திருவருளைப் பெற்றுச் சுகமடைய விரும்புவர். அவ்வாறு ஒன்றிய அவ்வொற்றுமை வளர்ந்து உறவு நீண்டு பொன்னொளி பரப்பினாலும் அவர்கள் நிலை நிலையற்றதாகவே இன்னும் உள்ளது. பூக்களும் முத்துக்களும் கவிதையும் இல்லமும் வெற்றெனை அமைந்து விடுவதில்லை. தானே எழுந்து, அணிந்து, உலகின் பரந்த கொள்கையை முற்றுவிக்க விரும்பு

கிறது. ஒவ்வோர் உள்ளமும் நேர்மையை விரும்பும். ஒவ்வாதனவற்றைக் கண்டு பிற குறைகளையும் கண்டு நீக்க விரும்பும். எனவேதான் ஒருவருக்கொருவர் கொள்ளும் ஐயப்பாட்டிலும் துன்பிலும் உள்ளம் பங்கு கொள்கிறது. இவ்விருவர் தாம் ஒருவருக்கொருவர் இணைந்த தன்மை இனிமையின் அறிகுறி; உண்மைக்கு அறிகுறி; உண்மையும் நன்மையும் அங்குள்ளவாயினும் அவை மறைந்து மறைந்து நிற்கின்றன. அவை தோன்றி மறைந்து ஒன்றையொன்று ஈர்த்துக் கொள்ளும் முயற்சி நடந்து கொண்டேயிருக்கிறது. அவ்விருவர்க்கும் உள்ள மதிப்பு மாற்ற மடைகிறது. குறிப்பு மொழி போய்விடுகிறது. பின் உண்மைப் பொருவில் தோய்கிறது; பற்றிக் கொள்கிறது. இப்பற்று பழைய துன்பினை மாற்றி விடுகிறது. இதற்கிடையே அவர்தம் ஒற்றுமை பிரிவுதன்னை நீக்க எல்லா முயற்சிகளையும் கைக் கொள்ளுகின்றது. ஒருவரது வலிவும் எளிமையும் மற்றவருக்கு எளிதில் புலப்படும். இதுவே இயல்பு. இதுவே மனித இனம் கொள்ளும் உறவுக்கு உதவுகிறது. உலகத்தில் உள்ள எல்லாம் மனித இனத்திற்குப் புலப்படவேண்டும். இதுவேதான் ஆணுக்கும், பெண்ணுக்கும், அவர் கண்களுக்குப் புலப்படாமல், இழையாக ஓடிக் கொண்டிருப்பது.

உலகம் உருண்டு சென்று கொண்டேயிருக்கிறது. சந்தர்ப்பங்கள் நாழிகைக்கு நாழிகை மாறுபடுகின்றன. இவ் உடலாகிய கோயிலுக்குள் குடியிருக்கும் தேவதைகள் சாளரத்தின் வழி நல்லதற்கும் பொல்லதற்கும் தோன்றும். எல்லா நலன்களாலும் அவர்கள் ஒன்றுபடுவர்; நன்மை இருந்தால் எல்லாப் பொல்லாங்குகளும் வெளிப்படும். வெளிப்பட்ட பொல்லாங்குகள் ஓடிவிடும். ஓடவே ஒருவர்க்கொருவர் வைத்திருக்கும் உள்ளார்ந்த மதிப்பு மேம்பாட்டையும், ஒருவர் உள்ளத்தை ஒருவர் நன்கு புரிந்து கொள்வர். வருத்தமின்றி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பர். இங்ஙனம் வாழ்க்கையை ஏற்றுக் கொண்ட தலைவனும் தலைவியும் தமக்கெனவுள்ள கட்டுப்பாடுகளை நிறைவேற்ற முனைவர். முக மலர்ச்சியோடு தன்னலம் இன்றி ஒருவர் இல்லாத நேரத்தும் அவரிருக்கும்போதும் அவரை அவரது நோக்கத்தையறிந்து செயல்படுவர். பின்னர், எது தம்மிருவரையும் ஒன்றுக்கியதோ அத்தூய நிலை வளர்ந்து பரவி நலம் பயந்து உள்ளத்தைத் தூய்மையாக்கி அறிவைப் பெருக்கி உலகுக்குப் பயன்படுகிறது என்பதை அவர்கள் கண்டு கொள்வர். இவ்வாறு ஒருவனும் ஒருத்தியும் ஓரில்லத்து இருந்து இன்பம் நுகர்ந்து நாற்பது ஐம்பது ஆண்டுகள் உலகுக்குப் பயன்பட வாழும் வாழ்க்கை, இளமையில் கட்புலன் ஆகா அழகில் ஈடுபட்டுப் புணர்ந்து அறிவு மிகுந்து வாழும் வாழ்க்கை ஒரு நல்ல திருமணக் காவியம் ஆகும்.

இங்ஙனம் நமக்கு ஒரு வாழ்க்கைப் பயிற்சி தரப்படுகிறது. அதனால் விளையும் காதலுக்கு ஆண், பெண் என்பதில்லை. காய்தல் உவத்தல் இல்லை. உயர் உண்மை, அறிவு என்பவற்றை எங்கணும் நாடுகிறது. அவ்வுண்மையும் அறிவும் முதிர்வதற்கு நமக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. நாம் இயல்பாகவே கண்ணால் நோக்கிக் கருத்தினைச் செலுத்துபவர்கள். அதனால் நாம் கற்றுக் கொள்கிறோம். அதுவே நாம் நினைத்த நிலை ஆயின், நாம் நம் அன்பினை இரவில் தங்கும் ஒரு கூடாரம் என்று

நினைக்கத் தூண்டப்படுகிறோம். மெல்ல மெல்ல நாம் துன்பத்தோடு அன்பு செலுத்தும் உருவங்கள் மாறி நாம் விரும்பும் உருவங்களாக முழு கின்றன. அன்பு ஆட்கொள்ளும் காலங்களுமுண்டு. அக் காலங்களில் மனிதனை அவ்வன்பு ஆட்கொள்வது அவன் சார்ந்த மக்களைப் பொறுத்தது. மனிதனின் அறிவுணர்ச்சியின் வலிவானது மிக்கெழுந்து, அச்சத்தையும் பல இன்னல்களையும் கடந்து ஓர் உயர் வாழ்க்கையினை எய்தி அதனையும் விடுத்து, முழுநிலை பெற ஒன்றவேண்டும். இவ்வாறு உள்ளம் முன்னேக்கிச் செல்வதால் இழப்புதான் என்று அஞ்சத் தேவை இல்லை. உள்ளம் முடிவுவரை நம்புதற்குரியது. எது அவ்வளவு அழகும் ஈர்ப்புமுடையதாக இருக்கிறதோ அவ்வளவு அவ் உறவு வெற்றி பெற வேண்டும். அதனின் மிக்க அழகு அவர்களை ஆட்கொள்ளவும் (அவர்கள்) மேலே மேலே செல்ல வேண்டும். அதுவே வாழ்க்கையின் குறிக்கோள். அதுவே வாழ்வாங்கு வாழ்வது. அதுவே காதல் அன்பு.

திருக்குறளில் அகப்பொருள் மரபு

1. காமத்துப்பாலின் பகுப்புமுறை

தொல்காப்பியர் கண்ட பாகுபாடு

பொருள்வகையில் காமத்துப்பால் இரு பகுப்பினுள் அடங்குவதாயுள்ளது. காதலர் வாழ்வில் களவு ஒழுக்கம் ஒரு பகுதி; கற்பொழுக்கம் மற்றொரு பகுதி. இவை தொல்காப்பியர் கண்ட பாகுபாடாகும்.

பரிமேலழகரின் பகுப்புமுறை

அகவாழ்வின் பெருங்கூறுகிய இவற்றைப் பற்றிய பரிமேலழகர் விளக்கவுரை வருமாறு:

'இனி, அப்பொருளைத் துணைக் காரணமாகவுடைத்தாய் இம்மையே பயப்பதாய இன்பங் கூறுவான் எடுத்துக் கொண்டார். ஈண்டு இன்பம் என்றது, ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இச்சிறப்புப் பற்றி வடநூலுள் போசராசனும், 'சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே' என இதனை மிகுத்துக் கூறினன்.

இது புணர்ச்சி, பிரிவு என இருவகைப்படும். ஏனை இருத்தல் இரங்கல், ஊடல் என்பனவோவெனின், இவர் பொருட்பாகுபாட்டினை 'அறம் பொருள் இன்பம்' என வடநூல் வழக்குப் பற்றி ஓதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினர் என்க. இனி, அவை தம்மையே தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் "களவு" என்றும், பிரிவைக் "கற்பு" என்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையொடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுகின்றார்.

அக்கைகோள் இரண்டனுள் களவாவது, பிணி மூப்பு இறப்புக்கள் இன்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையதாய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமன்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது. அதனை ஏழதிகாரத்தாற் கூறுவான் தொடங்கி முதற்கண் தகையணங் குறுத்தல் கூறுகின்றார்.'

காம இன்பம் பற்றிய செய்திகளைச் சுருக்கமாகப் புணர்ச்சி, பிரிவு என இரு பாகுபாட்டுள் அடக்கிப் பேசுகிறார் பரிமேலழகர். பிரிவு

காரணமாக நிகழ்கின்ற இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவற்றையும் பிரிவுப் பகுதியிலேயே — அடக்கியுரைக்கின்றார். இவற்றைத் தமிழ்நூல் வழக்கிற்கு ஏற்பப் புணர்ச்சியைக் 'களவு' என்றும், பிரிவைக் 'கற்பு' என்றும் சுட்டி விளக்குகிறார் ஆசிரியர் திருவள்ளுவர் என்பது அவர் கருத்து.

திருவள்ளுவரின் அதிகாரப் பகுப்பு

தமிழ் நூல்களில் காணும் முறைப்படி களவு — கற்பு நிகழ்ச்சிகளை முற்றும் விரித்துரையாது முக்கிய நிகழ்ச்சிகளை மட்டும் நாடகப் பாங்கில் அதிகாரங்களாக வகுத்துக்கொண்டுள்ளார் ஆசிரியர் திருவள்ளுவர். தகையணங்குறுத்தல் முதல் அலரறிவுறுத்தல் ஈறாக ஏழு அதிகாரங்களும் களவு பற்றியவை; ஏனைய பதினெட்டு அதிகாரங்களும் கற்புவாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றியுரைப்பவை.

கற்பியலின் முதல் அதிகாரம் பிரிவாற்றாமை. களவு வெளிப்பாடாக அலரறிவுறுத்தல் கூறியவர் காதலர் உலகு அறிய மணம் புரிந்த செய்திகளை விரித்துரையாது, 'பிரிவாற்றாமை' என்பது கொண்டு அவர் தம் கற்பு வாழ்க்கையை உய்த்துணர வைக்கிறார்.

பிரிவை நால்வகைப் படுத்தும் முறை

பிரிவாற்றாமையில் தொடங்குகின்ற கற்புப் பகுதியின் முதல் நிகழ்ச்சியாகிய பிரிவினை நால்வகைப்படுத்திக் காண்பர். அவையாவன: செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவி என்பனவாம். இவற்றுள் செலவு பற்றி உரைப்பதே பிரிவாற்றாமை என்னும் கற்பியல் முதல் அதிகாரம். தலைவனுடைய செலவினால் தலைவிக்குளதாகிய ஆற்றாமையைப் படர் மெலிந்திரங்கல் முதல் நிறையழிதல் ஈறாய அதிகாரங்களில் (117-126) எடுத்துரைத்துள்ளார். விதுப்பு என்பது பற்றி அவர்வயின் விதும்பல் (127) முதல் புணர்ச்சி விதும்பல் (129) ஈறாய அதிகாரங்கள் அமைந்துள்ளன. புலவி பற்றியவை நெஞ்சொடு புலத்தல் (130) முதல் ஊடல் உவகை (133) ஈறாக நான்கு அதிகாரங்கள் ஆம்.[1]

மணக்குடவர் பகுக்கும் திறம்

காமம் கொண்டார் பெறும்பயன் புணர்தலேயாம். இதனைக் கூடல், முயக்கு என்றும் கூறுவர். 'வளியிடை போழப் படா முயக்கு' எனக் காற்றினாலும் ஊடறுத்துச் செல்ல இயலாதவாறு காதலர் இணைந்து இன்பமுறுதல் இயல்பு என்பதனை எடுத்துரைக்கின்றார். பிரிவு, ஊடல், உணர்தல் என்பனவெல்லாம் புணர்ச்சியில் போய் முற்றுப் பெறுகிறது.

> 'ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம்
> கூடியார் பெற்ற பயன்' (1109)

---

1 'ஈண்டுப் பிரிவினை வடநூல் மதம் பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவி என நால்வகைத்தாக்கிக் கூறினார். அவற்றுட் செலவு பிரிவாற்றாமையுள்ளும், ஆற்றாமை படர்மெலிந்திரங்கல் நிறையழிதல் ஈறாயவற்றுள்ளும், விதுப்பு அவர் வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறாயவற்றுள்ளும் புலவி நெஞ்சொடு புலத்தல் ஊடல் உவகை ஈறாயவற்றுள்ளும் கண்டு கொள்க.'

என வள்ளுவர் வகுத்துரைக்கின்றார். எனவே, எந்நிலையில் நோக்கினும் காமமுற்றார் பெறவேண்டும் பயன் கூடலேயாம். எனவே, கூடல் என்பதனையே தலைமையாய் வைத்துக் காமத்துப்பால் அதிகாரங்களை அருமையிற் கூடல், பிரிந்துகூடல், ஊடிக்கூடல் என மூவகைப் படுத்துரைப்பர் மணக்குடவர்.

தகையணங்குறுத்தல் (109) முதல் புணர்ச்சியின் மகிழ்தல் (111) ஈறாய அதிகாரங்கள் மூன்றும் அருமையிற் கூடலாம். நலம் புனைந்துரைத்தல் (112) முதலாகப் புணர்ச்சி விதும்பல் (129) ஈறாக உள்ள பதினெட்டும் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமுமாக உள்ளவை என்பர். இறுதி அதிகாரங்களாகிய நெஞ்சொடு புலத்தல் (130) முதல் ஊடலுவகை (133) ஈறாய நான்கு அதிகாரங்களும் ஊடிக் கூடலும் அதற்கு நிமித்தமாகவும் அமைந்தவையாம்:

> "இவற்றுள் முன்பு கண்டறியா அருமையிற் கூடலைப் புணர்ச்சி மகிழ்தல் என்றும், அதனை அறிதலால் பிரிந்து கூடலைப் புணர்ச்சி விதும்பல் என்றும், கலாம் தீர்ந்து கூடுதலால் ஊடிக்கூடலை ஊடலுவகை என்றும்" கொள்ளப்படுதல் வேண்டும் என்பர்.

இவ் விளக்கம் காமத்துப்பாலின் இன்பஉணர்விற்கு ஏற்ற வகையில் அமைந்த பாகுபாடாகும். எனினும், பண்டை மரபாகிய களவு கற்பு என்னும் பெரிய நெறிகளுக்கு இஃது ஏற்புடைத்தானவை அல்ல என்று இவ்வகைப் பாகுபாட்டைப் புறக்கணிப்பர் சிலர்.

பரிப்பெருமாள் கட்டுரை

பரிப்பொருமாள் என்னும் உரைகாரர் காமத்துப்பால் பகுதி முற்றும் மைந்தர்க்கும் மகளிர்க்கும் சேர்க்கையால் உளதாகிய இன்பப் பகுதிபற்றிக் கூறுவது என்கிறார். ஆடவர் கன்னியருடன் கூடிமகிழும் கூட்டமே இதில் சிறப்பித்துரைக்கப்பட்டுள்ளது என்பது இவருடைய கருத்து. இதனை விளக்கும் இவர்தம் உரைவிளக்கப்பகுதி வருமாறு:

> "காமத்துப் பாலாவது மைந்தர்க்கும் மகளிர்க்கும் கலவியானுளதாகிய இன்பப் பகுதி கூறுதல். அஃது யாங்கனம் கூறினார் எனின், ஒருவனுக்கு இன்பம் நுகர்தற்கு இடம் கன்னியரும் கணிகையரும் பிறர்தாரமும் என மூவகையல்லது இல்லை. அவற்றுள் பிறர் மனைக்கூட்டம் பாவம் தரும் என்று அறத்துப்பாலுள் கூறிக், கணிகையர் கூட்டம் பொருட்கேடு தரும் என்று பொருட்பாலுட் கூறினாராதலின், அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர் கூட்டம் என்று அது ஈண்டுக் கூறப்பட்டது என்க.

> "அதுதான் எட்டு வகைப்படும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என. அவற்றுள் அசுரம் முதலான மூன்றும் ஒருதலைக் காமம் ஆகலானும், பிரமம் முதலான நான்கும் ஒப்பில்கூட்டம் ஆகலானும், அவையிற்றுக்கு இன்பச் சிறப்பு இன்மையின், காந்தருவ நெறியே ஈண்டுக் கூறப்பட்டது என்று கொள்ளப்படும். என்னை?

"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே
பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே"

என்றும்,

"காமக் கூட்டம் காணும் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"

என்றும் இலக்கணம் கூறுதலின். அஃதாவது கொடுப்போரும் அடுப்போரும் இன்றி ஒத்தார் இருவர் தாமே கூடும் கூட்டம், என்னை?

"அதுவே
தானே அவளே தமியர்க் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்"

என்ப வாகலின்,"

வடநூலார் மதம் பற்றிப் பரிப்பெருமாள்

மேலும், இவ்வுரைகாரர் வடநூலார் மதம் பற்றி வேறு வகையாகவும் பாகுபடுத்தி உரைப்பர்.

"இக் காமப் புணர்ச்சியை வடநூலாசிரியர் அராகத்தால் கூடும் கூட்டம் என்ப. இதுதான் மூவகைப்படும். அருமையிற் கூடலும், பிரிந்து கூடலும், ஊடிக் கூடலும் என. அருமையிற் கூடுதலாவது கூடுதற்கு எளிது அன்மையால் ஒருவர் ஒருவரைக் கண்ட காலம் தொட்டும் ஒத்த நினைவினராய் நின்று கூடுதல். பிரிந்து கூடுதலாவது இவ்வாறு கூடினார் பின்பு ஒரு காரணத்தால் பிரிந்து அதன் பின் கூடுதல். ஊடிக் கூடுதலாவது தலைமகன்மாட்டுத் தவறு கண்டு புலந்த தலைமகளைப் புலவி நீக்கிக் கூடுதல்."

அவற்றுள் முன்பு கண்டறியா அருமையிற் கூடலைப் புணர்ச்சி மகிழ்தல் என்றும், அதனை அறிதலால் பிரிந்து கூடலைப் புணர்ச்சி விதும்பல் என்றும், கலாந் தீர்ந்து கூடுதலால் ஊடிக் கூடலை ஊடலுவகை என்றும் கூறினார் என்று கொள்ளப்படும்.

"அன்றியும்,
'புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே'

என்றாராதலின், அவற்றுள் இருத்தலும் இரங்கலும் பிரிந்துழி நிகழுமன்றே; அவற்றைப் பிரிவினுள் அடக்கிப் புணர்தலும் பிரிதலும் ஊடலும் எனத் தமிழ் நடையிற் கூறினும் இழுக்காது.

ஐந்திணை அமைப்பில் காமத்துப்பால்

காமத்துப்பால் பகுதியைக் களவியல் கற்பியல் என இரு பெரும் பிரிவாகப், பரிமேலழகரும், புணர்தல், பிரிதல், ஊடல் எனப் பரிப்பெருமாள் முதலியோரும் கொண்டமையை முன்பு கண்டோம். இவ்வாறன்றி, 'அன்பின் ஐந்திணை' எனச் சிறப்பிக்கப்படும் அகப்பாடல்களை ஐந்திணைவழிப் பாகுபடுத்திக் காணுகின்ற முறைப்படி,

வள்ளுவரும் காமத்துப்பாலை ஐந்து திணைக் கூறுபாட்டில் வகுத்துள்ளார் என்று கொள்கின்றனர். குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் முறையில் ஒவ்வொரு திணைக்கும் ஐந்தைந்து அதிகாரங்களாக இருபத்தைந்து அதிகாரங்களால் காமத்துப்பால் பகுதி அமைந்து விளங்குகிறது என்பர். இம்முடிவு மணக்குடவரால் காட்டப்பட்டது எனத் திரு. செல்வக்கேசவராய முதலியார் தாம் எழுதிய 'திருவள்ளுவர்' என்ற கட்டுரையில் தெரிவித்துள்ளார்கள். (1920-ஆம் ஆண்டுப் பதிப்பு. பக். 29)[1]

நூல் முழுமைக்குமாக முப்பால் பற்றியும் அமைந்த இந்தப் பழைய உரை விளக்கத்திலிருந்து காமத்துப்பால் பாகுபாடு பற்றிய விளக்கக் குறிப்பினை மட்டும் இங்குப் பார்ப்போம். அது வருமாறு:

"காமத்துப்பால் கூறுவார்: குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணையும் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றனுள் பெரும்பான்மையும் உரிப்பொருள் பற்றிப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி எனவும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை எனவும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லை எனவும்" இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் எனவும், ஊடலும் ஊடல் நிமித்தமும்; மருதம் எனவும் ஓரோ ஒரு நிலம் ஐந்து அதிகாரமாக இருபத்தைந்து அதிகாரத்தால் கூறி,

"ஆக நூற்று முப்பத்து மூன்று அதிகாரமாக்கி ஓரோர் அதிகாரம் பத்துக் குறள் வெண்பாட்டாகக் கொண்டு இங்ஙனம் ஆயிரத்து முந்நூற்று முப்பது பாட்டான் வடநூலும் தமிழ்நூலும் கூறும் பொருள் எல்லாம் தொகுத்துக் கூறினர் என உணர்க."

இந்த உரை விளக்கத்தால் பண்டைமொழிகளாகிய வடமொழி, தென்மொழி நூல்களில் கூறும் பொருள்களில் எல்லாம் நல்லன ஆராய்ந்து, எடுத்து வள்ளுவர் தம் பெருநூலை ஆக்கியுள்ளார் என்னும் கருத்தினை இப் பண்டை உரைகாரர் வற்புறுத்திக் கூறக் காணலாம். சிறப்பாகக் காமத்துப்பாலில் தகையணங்குறுத்தல் முதல் ஊடல் உவகை ஈறாக உள்ள 25 அதிகாரங்களுள் முறையே ஐந்தைந்து அதிகாரங்கள் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் திணைகள் பற்றி அமைந்தன என்பதும் தெளிவுபடுத்தப்பட்டிருத்தல் காணலாம்.

இதன்படி ஐந்திணைப் பாகுபாட்டில் காமத்துப்பால் அதிகாரங்கள் பின்வருமாறு அமைந்து கிடக்கின்றன எனல் வேண்டும்:

---

1 மணக்குடவர் உரையும் பரிப்பெருமாள் உரையும் மயங்கிக் கிடக்கின்ற நிலையில் பேராசிரியர் செல்வக் கேசவராய முதலியார் குறிப்பிட்டுள்ள முன்னுரைப் பகுதி பரிப்பெருமாள் உரையே ஆகும் எனப் பன்மொழிப் புலவர் டாக்டர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தாம் வெளியிட்டுள்ள வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' என்னும் நூலில் (பக். 185-186) காரணகாரியங்களை நன்கு விளக்கித் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

குறிஞ்சி புணர்தல்- புணர்தல் நிமித்தம்	முல்லை பிரிதல் பிரிதல் நிமித்தம்	பாலை இருத்தல் இருத்தல் நிமித்தம்	நெய்தல் இரங்கல் இரங்கல் நிமித்தம்	மருதம் ஊடல் ஊடல் நிமித்தம்
1. தகையணங் குறுத்தல்	நாணுத்துற வுரைத்தல்	பசப்புறு பருவரல்	உறுப்பு நலன் அழிதல்	புணர்ச்சி விதும்பல்
2. குறிப்பறிதல்	அலர்அறி வுறுத்தல்	தனிப்படர் மிகுதி	நெஞ்சொடு கிளத்தல்	நெஞ்சொடு புலத்தல்
3. புணர்ச்சி மகிழ்தல்	பிரிவாற்றாமை	நினைந்தவர் புலம்பல்	நிறையழிதல்	புலவி
4. நலம்புனைந் துரைத்தல்	படர்மெலிந் திரங்கல்	கனவுநிலை யுரைத்தல்	அவர்வயின் விதும்பல்	புலவி நுணுக்கம்
5. காதற் சிறப் புரைத்தல்	கண்விதுப் பழிதல்	பொழுதுகண்டு இரங்கல்	குறிப்பறி வுறுத்தல்	ஊடல் உவகை

இம்முறைப் பகுப்பு பழையதாய் அகப்பொருள் மரபுவழி அமைகின்றது. இந்த நோக்கிலும் மேற்குறித்தபடி அதிகாரங்களைப் பகுத்து நோக்கி மகிழும் வண்ணம் காமத்துப்பால் பகுதி உள்ளது என்பது சிந்தித்துச் சுவைத்துப் பார்க்கத்தக்கதாகும்.

கூற்றுவகையால் மூவகைப்பகுப்பு

அகப்பொருட் பாடல்களைத் 'திணையே கைகோள் கூற்று வகை எனு (தொல். பொருள் செய்யுளியல் சூ. 1) என்று பாகுபடுத்திக் காணும் மரபினைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். இந்த அடிப்படை மூன்றில் திணைவகையாலும், களவு கற்பு என்னும் கைகோள் வகையாலும் காமத்துப்பாலைப் பகுத்து விளக்கம் தந்தார் கருத்துகளை நோக்கினோம். இனி, கூற்றுவகையாலும் காமத்துப்பாலைப் பகுத்துக் கண்டாரும் உளர். இப் பகுப்பு மரபினைத் திருவள்ளுவமாலைப் புலவர் சுட்டியுள்ளார்கள். தொடித்தலை விழுத்தண்டினார் பெயரால் சுட்டப்படும் பாடல்,

> "அற நான்கு; அறிபொருள் ஏழ்; ஒன்று காமத்
> திறம் மூன்று எனப் பகுதி செய்து.' (திருவள்ளுவமாலை 22)

என்று திருக்குறள் முப்பாலுள்ளும் இயல் பாகுபாடு பற்றி உரைக்கின்றது. இதில், 'ஒன்று காமத்திறம் மூன்று' என்பதனால் காமத்துப் பால் பகுதி மூன்று கூறாக உள்ளது என்பது விளங்கும்.

மோசிகீரனார் சுட்டும் பகுப்பு

இந்த மூன்று கூறுகள் என்ன என்ன என்பது பற்றி மோசிகீரனாரின் பாடல் தெளிவுபடுத்துகின்றது. அது வருமாறு:

> "ஆண்பால் ஏழ்; ஆறிரண்டு பெண்பால்; அடுத்தன்பு
> பூண்பால் இருபால் ஓர் ஆறாக — மாண்பாய
> காமத்தின் பக்கம் ஒரு மூன்றாகக் கட்டுரைத்தார்
> நாமத்தின் வள்ளுவனார் நன்கு."

இதன்படி, ஆண்பால் இயல் முதல் ஏழ் அதிகாரம்; அடுத்துவரும் 12 அதிகாரங்கள் பெண்பால் இயல்; இவற்றின் பின்னர் ஈற்றில் உள்ள 6 அதிகாரங்கள் இருபாலுக்கும் உரியன என்று கொள்ளுதல் வேண்டும். இது பேசுவோரை முதன்மையாக வைத்துக் காண்கின்ற பகுப்பு ஆகையினால், 'திணையே கைகோள் கூற்று' என்னும் முறைமையில் கூற்றுப் பற்றிய பாகுபாடாகும்.

கூற்றுவகைப் பாகுபாடு கொண்டார் காளிங்கர்

கூற்றுவகையால் பகுத்து நோக்கும் முறையும் இப்பொழுது இட்டி யுள்ளது. திருக்குறள் உரைகாரர்களுள் பழைய உரைகாரர் என்று அறிஞர்களால் ஆராய்ந்து அறுதியிடப்பட்டுள்ள காளிங்கர் உரையில் காணப்படுகிறது.[1]

திருவள்ளுவமாலையில் மோசிகீரனார் சுட்டியமுறை, ஒரு பழைய மரபே என்பது காளிங்கர் உரைத்திறனாலும் நமக்கு விளக்கமா கின்றதன்றோ?

தலைமகன் கூற்று முடிந்து தலைமகள் கூற்றுத் தொடங்குவதாகிய பிரிவாற்றாமையின் முன்னுரையில் காளிங்கர்,

> ''தலைமகன் கூற்று முடிந்தது; இனி தலைமகள் கூற்றுக்
> கிளவி வருமாறு''

என்று எழுதிச் செல்லும் காளிங்கர் உரை, அவர் திருவள்ளுவ மாலையில் மோசிகீரனார் சுட்டிய பகுப்பை மேற்கொண்டுள்ளார் என்பதை விளக்கவல்லதாம்.

மூவகைப் பகுப்பைப் பின்னுள்ளோர் போற்றாமை

காமத்துப்பாலைக் கூற்று வகையால் மூன்றாகப் பகுத்துக் காணும் பழையமுறை பிந்திய உரைகாரர்களால் போற்றப் படவில்லை. பிந்தியோர் போக்கு வேறுபட்டுள்ளது. இந்த வேற்றுப்போக்கினை மணக்குடவரே தொடங்கி வைத்துள்ளார் என்று டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் தமது ஆய்வுரையில் தெளிவுபடுத்தி யுள்ளார்கள். அவர்கள் தரும் விளக்கம் வருமாறு.[2]

''காமத்துப் பாலைப் பொறுத்த அளவில், மோசிகீரனார் காட்டிய அமைப்பினைப் பரிமேலழகரே மாற்றி அமைத்தார் என்பர் ஒரு சிலர். பரிமேலழகருக்கு முந்தியவர் மணக்குடவர். அவரே மோசிகீரனார் அமைப்பினைப் பின்பற்றாமையைக் காண்கிறோம். அவர் ஆண்பாலிய லாகக் குறிப்பறிதல் (அதிகாரம் 110), புணர்ச்சி மகிழ்தல் (அதிகாரம்

---

1 காளிங்கர் உரை இந்த முறைப்படி (ஆண்பால், பெண்பால், இருபால்) எழுதப் பெற்றதோர் உரையாகும், மணக்குடவர் உரை புலவி நுணுக்கம், ஊடலுவகை என்ற அதிகாரங்களில் பெரும்பான்மையும் காளிங்கர் உரையை அடியொற்றிப்போகக் காண்கிறோமாதலின், காளிங்கர் உரை பழைய உரையே யாம்.' வள்ளுவர் கண்ட நாடும் காமமும்‧ தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பக். 190

2 வள்ளுவர் கண்ட நாடும் காமமும்— தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பக். 193

111), நலம்புனைந்துரைத்தல் (அதிகாரம் 112) என்ற மூன்றை மட்டுமே கொள்கின்றார். பெண்பாலனவாக அலரறிவுறித்தல் (அதிகாரம் 115) தொடங்கி அவர்வயின் விதும்பலோடு (அதிகாரம் 125) முடியும் 13 அதிகாரங்களையும், நெஞ்சொடு புலத்தல் (அதிகாரம் 130) புலவி (அதிகாரம் 131), புலவி நுணுக்கம் (அதிகாரம் 132) என்ற மூன்று அதிகாரங்களையும் சேர்த்து அந்த 16 அதிகாரங்களிலும் அவ்வாறு பொருள் கூறுவர், மிகுந்து நிற்பனவாய் காமத்துப் பாலின் முதலில் வரும் தகையணங்குறுத்தலையும் (அதிகாரம் 109), இடையிடையே வரும் காதற் சிறப்புரைத்தல் (அதிகாரம் 113), நாணுத்துறவுரைத்தல் (அதிகாரம் 114), குறிப்பறிவுறுத்தல் (அதிகாரம் 128), புணர்ச்சி விதும்பல் (அதிகாரம் 129) என்பவற்றையும் முடிவாக வரும் ஊடல் உவகை (அதிகாரம் 133) என்பதனையும் சேர்த்து அந்த ஆறு அதிகாரங் களிலும் இருபாலாயினர் கூற்றே வருவதாகப் பொருள் உரைப்பார். இவ்வாறு மோசிகீரனார் அமைப்பினைப் பின்பற்றுகின்றார் மணக்குடவர் என்றே கூறலாம். ஆதலின் பரிமேலழகருக்கு முன்னரே இந்த இய லமைப்பு மாறியது எனலாம்.''

இங்ஙனமாகக் காளிங்கர் பகுப்பு முறை இவருக்கு அடுத்து வைத்து எண்ணத் தகும் மணக்குடவர், பரிப்பெருமாள் என்போர்களாலேயே கைவிடப்பட்டு வேறு வகையில் பாகுபாடு செய்ய முற்பட்டுள்ளமையை முன்னர்க் கண்டோம். பண்டை உரைகாரர் பதின்மருள் ஈற்றில் வந்து பேருரை வழங்கிய பரிமேலழகர் தெளிவு கருதியும், தொல்காப்பியர் நூலமைப்பினை ஒட்டியும் களவு, கற்பு மரபினைப் போற்றியுள்ளார். இன்றைய மூலப் பதிப்புகளிலும் கூட பரிமேலழகர் பகுப்பு முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

காமத்துப்பாலின் பாகுபாட்டுத் தோற்றம்

இந்த இயலில் விவரிக்கப்பட்டுள்ள செய்திகளை எல்லாம் தொகுத்து நோக்கின் காமத்துப்பால் கூற்றுவகையில் மூன்றாகக் கொள் ளப்பட்டது பழைய மரபாகும் என்பது தெளிவுபடுகிறது. அடுத்து ஐந்திணை வகையில் நோக்கிய வகையும் புலப்படும். பின்னர் உரிப் பொருளாகிய காமக் கூட்டத்திற்கு முதன்மை தந்து அருமையிற் கூடல் பிரிந்துகூடல், ஊடிக்கூடல் என்று முக்கூறுபடுத்திக் காண்பதும் புலனு கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகக் களவுகற்பு என்னும் கைகோள் வழிப் பரிமேலழகர் கொண்ட பாகுபாடே இவர்தம் பேருரை எழுந்த பின் யாவரும் போற்றிக் காணும் பகுப்பு முறையாயிற்று என்னலாம்.

காமத்துப்பாலின் பொருட்கோவை

காமத்துப்பாலில் காணப்படும் 'தகையணங்குறுத்தல்' முதல் 'ஊடல் உவகை' ஈறாக உள்ள இருபத்தைந்து அதிகாரங்களின் பொரு ளடைவினைக் கருதின், ஏழு முக்கிய கூறுகள் அமைந்திருத்தல் தெளி வாகிறது. புணர்ச்சி மகிழ்தலில் தொடங்கி ஊடல் உவகையில் முற் றுப் பெறும் இக்காமத்துப்பால் பகுதி முழுமையும் உவகைச் சுவைப் பொருளாய் உள்ளமையை உணர்த்தும்.

களவுப் புணர்ச்சி

முதல் ஐந்து அதிகாரங்கள் களவுப் புணர்ச்சி பற்றிக் கட்டுரைக்கின்றன. தகையணங்குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல், காதற்சிறப்புரைத்தல் எனவரும் அதிகார அடைவும் பொருளின் போக்கும் ஒத்த அன்புடைக் காதலர் தம்முள் கூடி இன்ப உரையாடும் காட்சிகளை நம் கண்முன் நிறுத்துகின்றன.

களவு வெளிப்பாடு

அடுத்து வரும் நாணுத்துறவுரைத்தல், அலரறிவுறுத்தல் என்னும் இரண்டும் முறையே தலைவன்—தலைவியர்வழி களவுநிலை வெளிப்பட்டதனைக் கட்டுரைக்கின்றன.

பிரிவு நிலையில் தலைவியின் உள்ளமும் உடலும்

களவு நிலையினும் களவு வெளிப்பட்ட தன்மையினும் காதலர் உலகறி நன்மணம் பூண்டு இல்வாழ்க்கை மேற்கொண்டனர் என்பது 'பிரிவாற்றாமை' எனத் தொடங்கும் பொருள் கொண்டே ஊகிக்கத் தகும். பிரிவு நிலையில் தலைவியின் உள்ளமும் உடலும் எவ்வெவ் நிலைகளுக்கு இலக்காயின என்பது பற்றி நான்கு அதிகாரங்கள் வருகின்றன. அவையாவன, பிரிவாற்றாமை, படர்மெலிந்து இரங்கல், கண்விதுப்பு அழிதல், பசப்புறு பருவரல் என்பனவாம்.

தனிமை வாழ்வில் தலைவி உற்ற துயர்

அடுத்துத் தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் நிலையில் தலைவி உற்ற துயரங்களைத் தொகுத்து உணர்த்துவன பின்வரும் நான்கு அதிகாரங்கள். தனிப்படர்மிகுதி, நினைந்தவர் புலம்பல், கனவுநிலையுரைத்தல், பொழுது கண்டு இரங்கல் என்பவற்றில் தலைவி தனிமைத்துயரால் வாடிய நிலையில் அவளுடைய உள்ளுணர்வுகளையும் கனவு கண்டு அவள் உற்ற நிலைமையையும், மாலைப் பொழுதின் வரவு கண்டு அவள் இரங்கி உரைக்கின்ற பாங்கையும் வெளிப்படுத்துகின்றன.

தலைவியின் இரங்கலால் விளைந்தவை

இவ்வாறாகத் தலைவி பிரிவுத்துயரால் வருத்தமுற்றதன் விளைவாக அவளுடைய உறுப்புநலன் அழிதலும், அவள் நெஞ்சொடு பேசித் தன் உணர்வுகளை வெளிப்படுத்தலும் அடக்கவும் அடங்காது வெளிப்படும் காமஉணர்வால் அவள் தன் நெஞ்சத்து நிறை கடந்து பேசும் நிலைமையும் தோன்றுகின்றன. உறுப்புநலன் அழிதல், நெஞ்சொடு கிளத்தல், நிறையழிதல் என்னும் அதிகாரங்களின் அமைப்பும் பொருட்போக்கும் பிரிவைத் தாங்க இயலாத ஒருநிலையைத் தலைவி அடைந்துவிடுகிறாள் என்பதனை விளக்கிக் காட்டுகின்றன.

வேட்கை மிகுதல்

பிரிந்து வாழ்நிலையில் காதலர்க்குள் ஒருவர் நினைவு மற்றவர்க்கு எழுதலும், அதன் காரணமாக ஒருவரையொருவர் விரைவில் அடைய

வேண்டும் என்னும் வேட்கையும் எழுதல் இயல்பு. இத்தகு சூழலை சித்திரிப்பவை அவர்வயின் விதும்பல், குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சி விதும்பல் எனவரும் மூன்று அதிகாரங்கள் ஆகும்.

ஊடலும் கூடலும்

பிரிந்த காதலர் மீண்டும் ஒன்றிய நிலையில் புணர்ச்சி விருப்பம் காரணமாக நெஞ்சொடு புலந்து பேசுதலும் புலவியும் ஊடலும் தோன்றுதலும் வாழ்க்கைச் சூழல் நோக்கி அமைகின்றன. இருவர் பாலும் தோன்றும் இந்தப் பிணக்கு அவரைக் கூடச் செய்து முன்னையி னும் மிக்கதோர் இன்பத்தை அவர்களுக்குத் தருகிறது.

> "ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
> கூடி முயங்கப் பெறின்"

என முத்தாய்ப்புவைத்து முடிக்கின்ற இறுதிக்குறளில் புலவி ஊடல் களால் விளையும் இன்பப்பயனை வள்ளுவர் காதலரின் வாய்மொழியால் குறிப்பிட்டுள்ளமை காணலாம். நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்பன ஊடலும் கூடலுமாய் அமையும் காதல் வாழ்வின் உச்சக் கட்டத்தை உரைக்கின்றன.

2. காமத்துப் பாலின் கட்டுக்கோப்பு

தமிழ் நெறி

பண்டைய அகப்பொருள் நெறியாகிய புலனெறி வழக்க மரபு பரந்துபட்டதொன்று. காளையரும் கன்னியரும் உளம் ஒருமைப்பட்டு ஒன்று சேர்ந்து வாழ்கின்ற வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் விளக்கிக் கவிபாடும் மரபும் பழமையானது களவியல் — கற்பியல் எனப்படும் வாழ்க்கை நிலைகளைத் 'தமிழ் நெறி' என்றே முன்னையோர் பாராட்டுவாராயினர். தமிழ் நெறிவழி அகப்பொருட் கவிதைகள் பல சங்க காலத்துப் புலவர்களால் பாடப்பட்டமையைச் சங்கத் தொகை நூல்களில் கண்டு களிக்கலாம் அவையெல்லாம் காதலன் — காதலியரின் களவு, கற்பு வாழ்க்கையில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டுவனவாய் விளங்குகின்றன.

தொல்காப்பிய வழிகாட்டி

பண்டு தொடங்கி வழங்கிவந்த தமிழ்நெறி வழக்கு முறைமைகளைத் தொகுத்தும் வகுத்தும் தொல்காப்பியரின் பெருநூல் அமைத்துத் தந்துள்ளது. தொல்காப்பியத்துள் வரும் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் முதலியவற்றால் அகப்பொருள் நெறிமுறைகள் ஒருவகைக் கட்டுக்கோப்புக்கு உட்பட்டு வருவதனை உணரலாகும்

காமத்துப்பாலின் பொது அமைப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் தலைசிறந்து விளங்கும் திருக்குறளில் இம்மரபுகள் விரிவாகக் கூறப்படாவிடினும், அவற்றின் உயிர் நிலைக் கோட்பாடுகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார் திருவள்ளுவர். 'தகையணங்குறுத்தல்' தொடங்கி 'ஊடல் உவகை' ஈறாக 25 அதிகாரங்களில், அகப்பொருள் இலக்கியங்களின் முக்கிய போக்குகளை நன்கு திறம்படக் கோடிட்டுக் காட்டியுள்ளனர். நாடகப் பாங்கில், சிலவற்றை உள்ளடக்கி உய்த்துணர்ந்து இன்பம் துய்க்கும் வகையில் இக்காமத்துப்பால் அமைக்கப்பட்டுள்ளது.

காதலர் சந்திப்பு

அக வாழ்வின் முதல் நிகழ்ச்சி காதலர் சந்திப்பு; முன்பின் அறிமுகமில்லாத இருவர் — ஓர் இளைய நம்பியும் நங்கையும் — எதிர்பாரா வகையில் நேர்படுகின்றனர். இருவரும் இளமை, அழகு முதலிய

நலன்கள் எல்லாம் ஒருங்கே பெற்றவர். இந்நிலையில் ஒருவர்தம் வனப்பு மற்றொருவரைக் கவர்ந்து இழுக்கிறது. எனினும், பெண்பாலர்க்குரிய இயற்கைக் குணமாகிய அச்சம், நாணம், மடன் முதலியவற்றால் நங்கை பேச இயலாது நாணமுற்று நிற்கின்றாள் ஆனால், தலைவனே பெருமையும் உரனுமுடைய ஆண்மகனாதலின் வாய்விட்டுப் பேச முற்படுகின்றான். இந்த முதற்சந்திப்பினைப் பொருளாகக் கொண்டு காமத்துப்பாலின் முதலிரு அதிகாரங்கள் அமைந்துள்ளன.

தலைவனின் வியப்புரை

தகையணங்குறுத்தல் — குறிப்பறிதல் இரண்டுமே ஆடவனின் பங்காய் அமைகின்றன. எதிர்ப்பட்ட கன்னியின் வனப்பினைக் கண்ட காளை, அவ்வனப்பு, தன் உள்ளத்தைக் கவர்ந்து வருத்துதலை உணர்கின்றான். தன் மனத்துள் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் உரையாடத் தொடங்குகின்றான். தன் நெஞ்சு படும் பாட்டைத் தலைமகன் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது வள்ளுவர் காமத்துப் பாலின் முதற்பாட்டு.

> 'அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை
> மாதர்கொல்? மாலுமென் நெஞ்சு!' (குறள். 1081)

'என் நெஞ்சு ஐயுற்றுத் துணிவு கொள்ளாது மயக்கமுறுகிறது. எதிர் நிற்பாள் ஒரு தெய்வப்பெண்போலன்றோ காட்சி தருகின்றாள்? இம் மாதர் மயில்போல் சாயலுடையளாய் என் உள்ளத்தை மயக்கு கின்றனளே!' எனத் தலைமகன் வியப்பு மேலிட்டவனாய்ப் பேசுகின்றான். இப்பேச்சு ஒரு நாடகக்காட்சி போல அமைந்துள்ளது. இந்த வகையில்தான் காமத்துப்பாலில் உள்ள குறள்கள் ஒவ்வொன்றும் காட்சி தந்து கற்பார் கருத்தினைப் பிணிக்கின்றது.

இருவரும் உளம் ஒத்து ஒருவராதல்

எதிர்ப்பட்ட தலைவியின் வனப்பில் ஈடுபட்டு வியந்து அவளுடைய அழகினைப் பலவாறு போற்றியுரைக்கும் தலைமகன், அவளுடைய கண்ணோக்கினாலும் பிற குறிப்புகளாலும், அத்தலைவியும் தன்னை விரும்பி ஈடுபாட்டுடன் இணைய இருப்பதையும் குறிப்பினால் உணர்ந்து கொள்ளுகிறான்.

> 'இருநோக்கு இவளுண்கண் உள்ளது; ஒரு நோக்கு
> நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து' (1091)

எனத் தலைவியின் பார்வை, தன்னை வருத்தினும், அப்பார்வையே அவளுடைய விருப்பத்தையும் தெரிவிப்பதால் அமைதி பெறுகிறான்.

> 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின், வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல' (1100)

என இருவர் நோக்கமும் ஒத்து, அவர்கள் இருவரையும் ஒன்றுகூடச் செய்துவிடுகிறது. இருவரும் உளமொத்து ஈருடல் ஓருயிராய் ஒருவரை ஒருவர் தழுவி இன்பம் துய்த்தனர்.

தலைவன் தலைவியர் பிணைப்பு

தலைவன் தலைவியரின் கூட்டத்தைப் பற்றி உரைக்கும் வள்ளுவர். அவர்கள் இருவரும் எவ்வளவு நெருக்கமாக அணைந்திருந்தனர் என்பதனை மிக நயமாக எடுத்துரைக்கின்றார். காற்றும் இடையே நுழைய இயலாத வகையில் அவர்தம் பிணைப்புக் காணப்பட்டதாம்.

'வீழும் இருவர்க்கு இனிதே, வளியிடை
போழப் படாஅ முயக்கு' (1108)

என்னும் குறட்பாவில், காற்றும் இடைபுகவொட்டாத நிலையில் கூடிக் கிடப்பது, ஒருவரைஒருவர் உயிரினும் மேலாய் விரும்புவார்க்கு இன்பம் தருவதாம் என்பதனை எடுத்துரைக்கிறது.

இதே கருத்தையே பிறிதோரிடத்து வள்ளுவர் வேறொரு வகையானும் சுட்டியுள்ளார். காதலனுடன் கூடியிருந்தபோது, இருவரிடையே காற்றுச் சிறிது ஊடுருவும் அளவுக்கு இடைவெளி யிருந்தாலும் தலைவி அதனைப் பெரியதோர் இடையீடாக, பிரிவாக எண்ணிக் கவல்வாளாம்; உடன்தானே அவள் கண்களும், தோள் முதலியனவும் பசலையாய் நிறம் வேறுபட்டுக் கிடப்பாளாம்.

'முயக்கிடைத் தண்வளி போழ, பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்' (1239)

எனத் தலைவியைக் குறித்துத் தலைவன் பேசுவது, அவளியல்பு உணர்ந்து பேசிய பேச்சாக, இயற்கையாக வள்ளுவர் வெளியிட்டுள்ளார்.

காதலர் முயக்கம் பற்றிய சிலம்புரை

காதலரின் முயக்கினைப்பற்றிப் பிற புலவர்களும் இனிய முறையில் எடுத்தியம்பியுள்ளார்கள். பாம்புகள் இணைந்து கிடந்தாற்போல் உள்ளது காதலரின் பிணைப்பு எனச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது. கோவலன் கண்ணகியரின் மனையற மாண்பினைப் போற்றியுரைக்கும் 'மனையறம் படுத்த காதை'யின் இறுதியில் வரும் ஒரு வெண்பா அவர்கள் இன்பம் துய்த்த வகையினை எடுத்தியம்புகின்றது. அது வருமாறு:

'தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து — நாமந்
தொலையாத இன்பமெலாந் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று.'

கோவலன் கண்ணகியரின் கூட்டம் காமவேளும் இரதிதேவியும் கூடியிருந்தது போன்ற காட்சியாகும். இருவரும் மாறிப்புக்கு ஒருவரை ஒருவர் அணைத்துக் கிடந்து இன்பம் நுகர்ந்த காட்சி, பாம்புகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து இன்பந் துய்த்தாற்போலக் காணப்பட்டதாம். உலகில் இளமை, செல்வம் முதலியன எல்லாம் நிலையா என்பது உணர்ந்து, அவை பெற்ற காலத்து விரைந்து நுகர்வாரைப் போன்று, இன்பம் துய்த்துக் கிடந்தனராம் கோவலனும் கண்ணகியும். வள்ளுவர் கூறிய வளியிடைப்புக இயலாத கூட்டம் என்பது எப்படிப் பட்டது என்பதனை இளங்கோவின் இந்த வாக்கினால் தெள்ளிதின் உணரலாம்.

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை

காதலர் கருத்தொருமித்து ஒருவரை ஒருவர் தழுவி மகிழும் திறம் பற்றிக் கவி புனைந்தார் பலர். கலித்தொகையுள் பாலை பாடிய சேரமான் பெருங்கடுங்கோ எந்நிலையிலும் பிரியாது கூடி வாழும் காதலர் வாழ்வை அழகுற எடுத்துக் காட்டியுள்ளார்.

'இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ றுடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு!' (கலி. 18)

எந் நிலையிலும் ஒன்றிப் பிணைந்து வாழ்வார் வாழ்க்கையே அன்புடைத்து என, இப்புலவர் பெருமகனார் எடுத்துக் காட்டுவது எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

காதலர் களியாட்டம்

தலைவன் தலைவியரின் கூட்டமாகிய புணர்ச்சிப் பொருளாகக் காதலரின் உள்ளக் களிப்புகளைக் காட்சிச் சித்திரமாக்கி மூன்று அதிகாரங்களை வள்ளுவர் வகுத்துள்ளார். புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல் ஆகிய மூன்றும், காதலர் களியாட்டங்களையும், இருவர்பாலும் அமைந்த அன்பின் பிணைப்பு களையும் எடுத்துக் காட்டும் வகையில் தரப்பட்டுள்ளன. இவை காதலரின் களவு வாழ்க்கையில் நிகழ்ந்தவை என்பது மட்டும் தெளிவு. ஆயின், களவு நெறியில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம், பகற்குறி இரவுக் குறியிடங்களில் தலைப் படல், வரைவு கடாதல், உடன்போக்கு என்னும் பல்வேறு நிலைகளில் அவர்களின் சேர்க்கைகளையும் உளப்படுத்தியுரைக்கின்றன. அன்றி, இவற்றுள் 'இப்பாட்டு இந்நிகழ்ச்சிக்கே உரியது' என்று பரிமேலழகர் வரையறைப் படுத்திச் சுட்டுவது போன்ற குறிப்பு ஒன்றும் இவ்வதிகாரப் பாடல்களில் தென்படவில்லை.

தலைவியின் நலம் புனைந்துரைக்கும் தலைவன்

புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல் என்னும் இரண்டும் தலைவனின் பேச்சாகவே அமைந்துள்ளன.

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.' (1101)

'அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு' (1110)

என்று இவ்வாறு எல்லா வகையின்பமும் ஒருங்கே தருபவளாயும், அவளுடன் கூடும்போதெல்லாம் புதுப்புது இன்பம் கொடுப்பவளாயும் தலைவி அமைந்துள்ளாள் என்று தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறான் தலைமகன்.

தலைவியின் முகப்பொலிவும் மென்மையும்

நலம் புனைந்துரைத்தலில், தலைவியின் மென்மையும் அழகும் பலபடத் தலைவனால் போற்றிப் புகழ்ந்து உரைக்கப்படுகின்றன. அவளுடைய முகத்தை முழுமதியுடன் ஒப்பிட்டு மதிக்கில்லாப் பெருமை அவளுக்கிருப்பதைப் பேசுவதாகவும் சில குறள்கள் அமைந்துள்ளன.

'மதியும், மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.' (1116)

'அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல,
மறுவுண்டோ, மாதர் முகத்து?' (1117)

'மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்,
காதலை வாழி மதி!' (1118)

'மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்,
பலர்காணத் தோன்றல் மதி.' (1119)

இப்பாடல்களில் தலைவியினுடைய முகத்தின் ஒளி மதிக்கில்லை என்பதும்; மறுவுடைய மதி போலாது மாசின்றித் தூய ஒளிபடைத்து அவள் முகம் விளங்குவதும், மதியைப் போலப் பலர் காணத் தோன்றும் இழிநிலையின்றி அவள் முகம் தானே கண்டு மகிழ அமைந்து விளங்குவதும் தலைவனால் எடுத்துரைக்கப் படுகின்றன.

தலைவி அனிச்சப் பூவினும் மிகவும் மென்மையுடையாள் என்றும் சுட்டிக் காட்டுகிறான் தலைவன். இயற்கைப் பொருள்களோடு தலைவியை ஒப்பிட்டு, அவள் அழகினைச் சிறப்பித்துப் பேசுவது, அவனுள்ளத்து மிகுந்த ஆர்வத்தின் வெளிப்பாடேயாம்.

'நன்னீரை வாழி, அனிச்சமே! நின்னினும்,
மென்னீரள் யாம்வீழ் பவள்.' (1111)

'மலர்காணின், மையாத்தி நெஞ்சே! இவள்கண்,
பலர்காணும் பூவொக்கு மென்று.' (1112)

அனிச்சப் பூவையும், நெஞ்சையும் விளித்துப் பேசும் இரு பாடல்களிலும் தலைவன், பூவினும் மெல்லிய காதலியின் இயல்பினை எடுத்தியம்பியுள்ளான்.

உறுப்பு நலன் கண்டு உவப்புடன் பேசுதல்

நலம் புனைந்துரைக்கின்ற இவ்வதிகாரத்தில் காதலியின் பொதுவான மென்மைத் தன்மையை முதற்கண் வெளிப்படுத்தியது மட்டுமன்று; அவளுடைய அழகு மேனி, வெண்பல், இயல்பாய் அமைந்த நறுமணம், மைதீட்டிய கருங்கண், ஒளிமுகம் என்பவற்றைப் பல்வேறு பொருள்களுடன் ஒப்புக் கண்டு பேசும் பேச்சுக்கள், அத்தலைவனின் உள்ளுணர்வுகளை எடுத்துக்காட்டும்.

''காணிற் குவளை, கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வே மென்று'' (1114)

என்பது குவளையின் கவிழ்ந்த நோக்கம், தலைவியின் கண்ணுக்குத் தான் நிகராக இல்லையே என்று நாணுகின்ற நாணக் கவிழ்ச்சியாகும் என்று கற்பனை செய்கின்றான் தலைவன். இங்ஙனம் தலைவன் பேச்சாகவே

அமைந்த இவ்வதிகாரங்கள் இரண்டும் தலைவியின் சிறப்புகளை நன்கு வெளிப்படுத்துவன. மேலும், அத்தலைவியின் ஒன்றிய உள்ள நட்பையும் நன்கு வெளிப்படுத்துவனவாம்.

தலைவன் - தலைவியரின் அன்பு வெளிப்பாட்டுரை

காதற் சிறப்புரைத்தல் அதிகாரத்திலே காதலன்-காதலியரின் அன்பு வெளிப்பாட்டுரைகளும் அமைந்துள்ளன. தலைவிமாட்டுத் தான் கொண்டுள்ள அன்பின் பிணைப்பு உயிரோடு உடம்பிற்குள்ள உறவினைப் போன்றது என்கிறான் தலைவன்.

> ''உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன,
> மடந்தையொ டெம்மிடை நட்பு'' (1122)

என்பதனால், காதலரின் நட்பின் நெருக்கம் உயிர் கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின் தொடர்பாகும் என்பது பெறப்படும்.

> ''வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை; சாதல்
> அதற்கன்னள் நீங்கு மிடத்து'' (1124)

என வரும் குறட்பாவும் இக்கருத்தினையே நன்கு புலப்படுத்துகின்றது.

தலைவன் காதலியை உயிராகக் கருதுவது போலவே, தலைவியும் தன் காதலனைக் கண்ணிலும் நெஞ்சிலும் நீங்காதுறைபவனாகக் கொண்டு வாழ்கின்ற திறமுடையவளாகச் சொல்லப்பட்டுள்ளாள்:

> ''கண்ணுள்ளார் காத லவராகக், கண்ணும்
> எழுதேம், கரப்பாக் கறிந்து.' (1127)

> ''நெஞ்சத்தார் காதலவ ராக, வெய்துண்டல்
> அஞ்சுதும், வேபாக் கறிந்து' (1128)

என்று தலைவி பேசுவதாக அமைந்துள்ள குறட்பாக்களால், அவள் தலைவனை உயிரினும் மேலாக நேசிக்கின்ற இயல்புடையளாய் உள்ளாள் என்பது விளங்கும். இங்ஙனம் உளமொத்து, உயிருக்குயிராய் ஒருவரை ஒருவர் கருதி வாழும் வாழ்வு, இன்ப வாழ்வாய் அமைதல் இயல்பே யன்றோ?

தலைவன் மடல் ஏறத் துணியும் சூழல்

உலகறிவாராக் களவு நெறிக் கூட்டம் மறைவில் நிகழ்வது; எனினும், சில பொழுதில் இவர்தம் மறைவொழுக்கம் புறத்தார்க்குப் புலனாக இடமாகிறது. ஊரார் இவர்களைப் பிணைத்துப் பேசத் தொடங்குகின்றனர்; பலரறியப் பேசும் இம்மொழிகளே அலர் எனப் படுகின்றது. மறைவில் காதலர் கூடிவரும் செய்தி உலகறியும் ஒரு நிலையை எய்துகிறது. எனவே, காதலர்கள் முன்பு போலத் தனிமையில் சந்திக்கும் வாய்ப்பு அரிதாகின்றது. தலைவி தன் இல்லத்திலே கட்டுக் காவலுக்குட்பட நேர்கிறது. தலைவன் தலைவியைப் பெறாத நிலையில், நாணத்தையும் விட்டுத் தன் காதலை வெளிப்படுத்த முயலுகிறான். மடலேறியாயினும் தன் காதலை வெளிப்படுத்தித் தலைவியை அடைய வேண்டும் என்று கருதுகிறான். இது குறித்து அவன் பேசும் பேச்சுகள் நாணம் விட்டுப் பேசும் பேச்சுகளாகும். 'நாணுத்துறவுரைத்தல்' என்னும் அதிகாரம் தலைவன் தன் நாணத்தை விட்டு மடலேறத் துணியும் பாங்கினை எடுத்துமொழிவதாக அமைக்கப்பட்டுள்ளது.

"காம முழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி."

"காமக் கடும்புனல் உய்க்குமே, நாணொடு
நல்லாண்மை என்னும் புணை"

எனவரும் குறள்களால் தலைவன் நாணமும், நல்லாண்மையும் இழந்து மடலே துணையாகப் பெற்றாகிலும் தன் காதலியை அடையத் துணி கிறான் என்பது வெளிப்படை.

ஊர் அலர் பற்றிய தலைவியின் உள நிலை

இங்ஙனமே காமக்கூட்டம் புறத்தே அலராயிற்று என்பதனைத் தலைவியும் தோழிக்கு எடுத்துச் சொல்கிறாள்.

"அறிகிலார் எல்லாரும் என்றே, என்காமம்
மறுகின் மறுகும் மருண்டு" (1139)

எனவரும் பாடலில், 'காமம் மருண்டு மறுகின் மறுகும்' என்றது காமக் கூட்டம் அம்பலாய், அலராயிற்று என்பதனைப் புலப்படுத்தும். ஊரார் அலர் தூற்றுவதனைப் பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டதே, 'அலரறிவுறுத்தல்' என்னும் அதிகாரம்.

"களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால், காமம்
வெளிப்படுந் தோறும் இனிது.' (1146)

"ஊரவர் கௌவை யெருவாக, அன்னைசொல்
நீராக நீளுமித் நோய்" (1147)

எனவரும் தலைவன் தலைவியரின் பேச்சுகள் அலரால் அவர்கள் கொண்ட காமம் உறுதிப்பட்டு வளர்வதேயன்றிக் குறைந்துபடுதல் இல்லை என்பதனைத் தெரிவிப்பனவாம். ஏனெனில், அலர் காரணமாகத் தலைவியின் மணநாள் நெருங்கி வரும் என்பது கருத்து.

அலரால் வரும் நன்மை

மடல் காரணமாகவோ, அலர் பரவியதாலோ, காதலரின் அன்பின் பிணைப்பு அனைவர்க்கும் புலனாகும். அதனால் பெற்றோர் அக்காதலர் களுக்கு உலகறியத் திருமணம் செய்வித்து, அவர்களை இல்லற நெறியில் விரைந்து புகுத்துவர் என்பதாம். இதனாலேயே அலரும் காதலர்க்கு நன்மை பயக்கும் ஒரு கருவியாயிற்று.

உலகறி நன்மணம்

அலரறிவுறுத்தல் பற்றி உரைத்த வள்ளுவர் அதன் காரணமாகக் காதலர்களின் திருமணம் விரைவில் கைகூடும் என்பதனை உய்த்துணர வைத்துக் களவு பற்றிய நெறியைத் தலைக்கட்டுகிறார். காரணம் தோன்றினால், அடுத்து அதன் ஏதுவாகக் காரியம் நிகழ்வது ஒருதலை யன்றோ? அலரறிவுறுத்தல்பற்றி அறிவித்தமட்டில் காதலர் களவு வாழ்வு முற்றுப் பெற்று உலகறி நன்மணம் நடைபெறும் நாள் நெருங்கி யுள்ளது என்பதனைக் குறிப்பின் பெறவைத்துள்ளார்.

அடுத்துக் கற்பியலின் தொடக்கமாகப் 'பிரிவாற்றுமை' என ஆசிரியர் தொடங்குதலால், களவு மணம் கண்ட காதலர், உலகறியக் கற்பு மணம் கொண்டு மனைவாழ்வு எய்தினர் என்பது வெளிப்படுதல் இயல்பேயன்றோ?

களவு நிகழ்ச்சிகளை நாடகப் பாங்கில் இங்ஙனம் ஏழு அதிகாரங்களில் திருவள்ளுவர் காட்டியமை அவர்தம் புதுமைப் படைப்பாற்றல் என்றே சொல்லவேண்டும். சொல்லியது கொண்டு சார்புடைய சொல்லாதனவும் பெறப்படும் வகையில் இக்களவுப் பகுதி அமைந்துள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

சேயிடைப்பிரிவு

கற்பியலின் தொடக்கமே பிரிவாற்றுமை. ஆகவே, இணைபிரியாது வாழ்ந்த காதலர் பிரிய நேர்ந்தமை குறிக்கப்படுகிறது. இதனால் களவு நெறி ஒழுகியோர் அலரெழப் பின் பெற்றோரும் ஊரும் உலகும் அறிய மணவாழ்வு பெற்றனர் என்பது உய்த்துணரலாகும். இல்லற வாழ்வில் தலைவியை விட்டுத் தலைவன் சிலகாலங்களில் பிரிந்து செல்லவும் நேரும். ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தர்க்குற்றுழி, பொருட்பிணி என்னும் ஐந்தனுள் ஒன்று ஏதுவாக நீண்ட தூரத்தே செல்லும் நிலை தலைவனுக்கு நேரும். இதனைச் சேயிடைப்பிரிவு என்பர். அவ்வூரகத்தே தலைவியைப் பிரிந்து பரத்தையை நாடித் தலைவன் பிரிதலை 'ஆயிடைப் பிரிதல்' என்பர். இப்பிரிவுகளுள் எதனையும் வள்ளுவர் இனம் சுட்டிப் பேசவில்லை.

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை' (1151)

என்பதில் தலைவன் பிரிந்து நீண்ட தூரம் செல்லக் கருதுகிறான் என்பதும் அவன் சென்றவினை முற்றி மீண்டு வரும் வரையில் பிரிந்து வாழும் நிலையில் தலைவி உயிருடன் இராள் என்றும் குறிப்பிடப்படுவதனால் இங்குச் சுட்டும் பிரிவு சேயிடைப் பிரிவேயாம்.

பிரிவு நிலையைத் தலைவி உணர்கை

தலைவன் பிரிந்து செல்ல முற்படுகின்றான் என்பதை அத்தலைவனின் பேச்சு, செயல்களிலிருந்தே தலைவி குறிப்பாய் அறிந்து கொள்ளுகிறாள்.

"இன்கண் உடைத்தவர் பார்வல், பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தாற் புணர்வு" (1152)

எனத் தலைவி தோழியிடம் பேசும் பேச்சில் தலைவனின் சேர்க்கைக் குறிப்பு அவர் பிரிவரோ என்னும் அச்சத்தை விளைவிப்பதாகக் கூறுவதிலிருந்து, தலைவன் திடீரெனப் பிரிந்து சென்று விடுவதில்லை என்பது புலப்படும். தான் பிரிந்து செல்லும் முன்பே தலைவன் பிரிய இருக்கின்ற நிலையைத் தன் பேச்சு, செய்கைகளால் புலப்படுத்தியே பிரிந்து செல்வான் என்பதும் தெரிய வரும். அதனால் தலைவன் சொல்லை முற்றும் தேறாத நிலையினளாகத் தலைவியிருப்பாள்.

"அறிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்" (1153)

என்னும் தலைவி பேச்சு அவளுடைய உள்ள நிலையைத் தெள்ளிதின் காட்டும்.

பிரிவில் காமத்தீ

காதலரைப் பிரிந்து வாழ்வது என்பது மகளிர்க்கு மிகமிகத் துன்பம் தருவதொன்றாகும். தோழியர் இல்லாத வேற்றூரிலே வாழ்தல் எவ்வளவு துன்பம் தருமோ அதற்கு மேலும் பன்மடங்காய்த் துயரம் தருவது இனிய அன்புடைக் காதலரைப் பிரிந்து வாழ்தல் என்று தன் உயிர்த்தோழிக்குத் தலைவி எடுத்துரைக்கிறாள். காமத்துன்பம் அவளுக்கு மிகவும் தொல்லை தருகின்றது. உலகில் உள்ள நெருப்பானது தொட்டாரைத்தான் சுடும் பான்மையது. ஆனால், இந்தக் காம நோயோ நீங்கினால் பெரிதும் வருத்துகின்றதே!

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ" (1159)

என்னும் தலைவியின் பேச்சு, தலைவனைப் பிரிந்து இருக்கும் நிலையில் காமநோயால் எவ்வளவு துன்புற்றுத் துவண்டு அவள் பேசுகின்றாள் என்பதனை வெளிப்படுத்துகின்றது.

ஆடவர் வினைத்திறம்

காதலன் ஓதல், பொருள் தேடல், காவல்புரிதல் முதலியவற்றின் காரணமாகச் சேயிடைப் பிரிந்து சென்று விடுகிறான். 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்றபடி வினைமேற் சென்று வெற்றி பெறும் ஊக்கத்துடன் தலைவன் பிரிவு அமைகிறது அவன் சென்ற வினை முற்றுப்பெறுவது வரையில் அவனுடைய உள்ளம் அதிலேயே ஆழ்ந்திருக்கும். தான் சென்ற வினை முற்றியபின், இல்லக்கிழத்தியின் நினைவு தோன்ற — பிரிவினால் அவள் எந்நிலையுற்றாளோ என்று இரங்கி அவளிடம் சென்று சேர்தற்கு மிக விரைந்து வருவதாகக் கவிதை புனைவது மரபாகும். அவ்வாறு திரும்பும் தலைவன் தன் உணர்வுகளைத் தேர்ப்பாகனுக்குச் சொல்லி விரைந்து தேரினை ஓட்டுமாறு கூறுவதாய்ப் புலவர்தம் புலனெறி வழக்கப்பாடல்கள் உள்ளன.

தனித்திருக்கும் தலைவியின் நிலை

ஆனால், தலைவியின் நிலையோ வேறு. தலைவன் பிரிந்து வினைமேற் சென்றமையால் அவள் இல்லத்தே தனித்திருக்க வேண்டியவளாகின்றாள். ஆகவே தலைவன் பிரிவினை உணர்ந்தாள் துன்பமுற்று இரங்கியிருக்கும் நிலையினளாகிவிடுகின்றாள். இந்தப் பிரிவு நிலையைப் பொருளாகக் கொண்டு அமைந்தவை, 'படர்மெலிந் திரங்கல்,' 'கண்விதுப் பழிதல்,' 'பசப்புறு பருவரல்,' 'தனிப்படர் மிகுதி,' 'நினைந்தவர் புலம்பல்,' 'கனவுநிலை உரைத்தல்,' 'பொழுதுகண்டு இரங்கல்,' 'உறுப்பு நலன் அழிதல்,' 'நெஞ்சொடு கிளத்தல்,' 'நிறை அழிதல்,' 'அவர் வயின்விதும்பல்' என்னும் பதினோர் அதிகாரங்களாம். இவையெல்லாம் தலைவனைப் பிரிநத தலைவியின் உளநிலை, அதனால் அவள்

உடம்பில் தோன்றிய மாறுபாடுகள், அதன் காரணமாக மனம் மிக வருந்தித் தலைவனை எப்பொழுது காண்போம் என ஆவலுடன் எதிர் நோக்கும் நிலை என்னும் இவற்றைத் திருவள்ளுவர் மையமாக வைத்துத் தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவி படும் பாடுகளைப் பாகுபடுத்தி முறைப்படுத்தித் தெரிவித்துள்ளார். இனி, பிரிவு நிலையில் தலைவியின் வாழ்க்கையும் போக்கும் அமைந்த பான்மையைக் காண்போம்.

தலைவியின் துன்ப வெளிப்பாடு

தனித்திருந்து துயருழக்கும் தலைவி எவ்வளவுதான் துன்பத்தை மறைத்த போதிலும் அது எப்படியோ வெளிப்பட்டுப்போகிறது

> 'மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
> ஊற்றுநீர் போல மிகும்'

என்பதனால் காதலியின் துன்பம் நீருற்றுப்போல வளர்நிலைத் தன்மையுள்ளது என்கிறாள். ஊற்றுநீர் ஒருகாலைக்கு ஒருகால் சுரந்து மேலெழல் போலே பிரிவுநிலையில் காதலியின் துயரும் மேன்மேலும் மிகுந்து விளங்கியமை பெறப்படும்.

இராப்பொழுதில் தலைவி பட்டபாடு

இராப்பொழுது தனித்திருக்கும் தலைவிக்குப் பெருந்துயர் தருவதாயுள்ளது. அவள் கண்கள் தூக்கங் கொள்ளவில்லை; மாறாகக் கண்ணினின்று நீர் பெருகி வழிகிறது.

துன்பம் செயும் அந்த இரவும் நீண்ட இரவாக அவளுக்குத் தோற்றமளிக்கிறது.

> 'கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
> நெடிய கழியும் இரா' (1169)

எனப் பிரிவாற்றா நிலையினளான தலைவி தன் உணர்வைக் கொட்டுகிறாள். 'காமக்கடல்' (1164), 'காமக்கடும்புனல்' (1167) எனத் தாம் உற்ற காமநோயைக் குறிப்பதனால் அவளுற்ற நோயின் பெருக்கும் தெரியலாகும். இரவில் எல்லா உயிர்களுமே தூங்கத் தொடங்கிவிடுகின்றன. அப்பொழுது இரவுக்குத் துணையாகத் தலைவி ஒருத்தியுமே கண் உறங்காது கவலையுடன் உறைகின்றாள்.

> 'மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
> என்னல்லது இல்லை துணை' (1168)

என்று இரவுக்கும் இரங்கிப்பேசுவது போலப் பேசுகின்றாள் தலைவி.

கண்களின் நிலை மாற்றம்

கண் விழித்துக் காதலனை நினைந்து ஏங்கி வருந்தித் தனித்திருக்கும் காதலியின் கண்கள் காதலன் வரவை நோக்கி அவனைக் காண்பதற்காக விரைகின்றன; அவன் வாராமையால் அக்கண்கள் வருந்துகின்றன. முன்பு காதலரைக் கண்டு காதல் கொண்டு அவனைக் கூடுவதற்குத் துணைபுரிந்த கண்கள் இன்று துயருற்று நீர் சிந்துகின்றன. இது குறித்துக் கண்ணின் நிலைமாற்றம் சரியாமோ என்று நகையாடிக் கூறுவாள் போன்று பேசுகின்றாள் தலைவி.

'கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம் கண்டது.' (1171)

'தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்?' (1172)

'கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து.' (1173)

இவ்வாறுகக் கண்ணின் நிலைகுறித்துத் தலைவி பேசுகின்ற பேச்சுகளால், அவள் வருந்தியிருக்கும் நிலையை வெளிப்படுத்துவதோடு, அவனை விரைந்து காணவேண்டும் என்னும் வேட்கையையும் இவ்வுரைகள் புலப்படுத்தி நிற்றல் காணலாம்.

பசலை படர்தல்

பிரிவுத் துயர் கண்ணின் நிலைமாற்றத்தை மட்டுமா விளைவித்தது? அவளுடைய அழகிய உடம்பெல்லாம் பசலை படர்ந்தும் அவள்தம் அழகினைச் சிதைக்கலாயிற்று. தன் மேனி பசப்புற்றதால் ஏற்பட்ட வருத்தத்தைத் தலைவி தன் நெஞ்சை நோக்கியும், தோழியைப் பார்த்தும் உரைக்கின்ற பாங்கில் 'பசப்புறு பருவரல்' என்னும் அதிகாரப் பாடல்கள் அமைந்துள்ளன.

'நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க்கு உரைக்கோ பிற.' (1181)

'சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து' (1183)

எனவரும் தலைவியின் பேச்சுகளால் பிரிவு நிலையில் அவள்தன் இயற்கை அழகு பசலையால் மாற்றம் பெற்றுள்ளமை வெளிப்படுதல் காணலாம்.

பசலை என்பது காதலனின் பிரிவு சற்று நிகழ்ந்தால்கூடத் தோன்றி விடும் நிலையினதாம். எப்பொழுது தலைவன் தன் காதலியைக் கூடாது சிறிது சோர்கின்றான் என்று காலம் பார்த்துக் கொண்டிருக்குமாம் பசலை, சிறிதளவு பிரிவு நேரும் நிலை ஏற்பட்டால்கூடத் தலைவியின் மேனியில் பசலை படர்ந்து விடுமாம்.

''விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.'' (1186)

''புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.'' (1187)

விளக்கு மாய இருள் புகுதல் போலே காதலன் கை நெகிழ்ந்தால்கூடக் காதலிக்குப் பிரிவுணர்ச்சி மேலிட்டு மேனி பசந்துவிடுகிறதாம். அங்ஙனமாகவும் அவன் சேயிடைப் பிரிந்து சென்ற நிலையில் அவளுடைய உடம்பில் பசலைபடர்தல் இயல்புதானே. பசலையை முன்வைத்து அதனால் ஏற்படும் தலைவியின் உணர்ச்சிகளைச் சித்திரிக்கும் வகையில் தலைவனுடைய பிரிவையும் தலைவியின் அன்பின் பெருக்கையும் எடுத்துக் காட்டுகிறது. 'பசப்புறு பருவரல்' என்னும் அதிகாரம்.

மகளிர் காதலரைப் பிரிகின்ற நிலையில் தோன்றும் பசலைபற்றிக் குறுந்தொகைப் பாட்டொன்று தரும் சித்திரம் வள்ளுவர் வாக்கிற்கு விளக்கமாம்.

"ஊருண் கேணி உண்டுறை தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழி தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே."

காதலர் தொடுவுழி நீங்கியும் விடுவுழி வந்து பற்றியும் நிற்கும் பசலையின் பாங்கு வியப்பிற்குரியதே.

காதலனைப் பிரிந்திருக்கும் நிலையில் கண்ணின் கலக்கமும் அதன் விளைவான உரைகளையும் அடுத்துத் தன் மேனியில் பசலை படர்தலாலும் அவள் துன்பமுற்று மொழிகின்றாள். காதலனைப் பிரிந்து தனித்திருக்கும் நிலையில் மேனி பசலை நோயுற்று அழகிழந்தவளாய்த் துயரம்மிகக் கொள்பவளானாள். துணைவனைப் பிரிந்திருக்கும் நிலையில் துணைவியின் தனிமைத் துன்பத்தைச் சித்திரிப்பதற்கு ஓர் அதிகாரமே வள்ளுவர் வகுத்துள்ளார்.

தனிப்படர் மிகுதி

தனிப்படர் மிகுதியில் தலைவியின் தனிமை ஏக்கக்குரல் நன்கு வெளிப்படுகிறது. உடனுறையும் தோழி ஆறுதலுரை கூறவும் ஆற்றாளாய்த் தலைவி தன் துயர நிலையை வெளியிடுகின்றாள்.

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால், வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி." (1192)

விரும்பும் காதலர் வந்து முகமலர்ந்து இனிய கூறி அன்பு செய்வாராயின் அச்செய்கை, உலகில் உயிர் வாழ்வார்க்கு அளவறிந்து மழை பெய்தாற் போல ஆகும் என்கிறாள். இப்பொழுது தலைவன் பிரிந்து சென்றமையினாலே தமக்கு அத்தகைய அன்பாதரவு இல்லையே என்னும் உள்ளத்தின் ஏக்கறவு வெளிப்படுத்தப்படுகிறது.

தனித்திருக்கும் தலைவியின் சிந்தனை

தலைவனை நினைந்து காம இச்சையால் நலிந்து தனித்திருக்கும் தன்னைப்போலவே தலைவனுக்கு அந்த இச்சை அரும்புமாயின் விரைந்து திரும்புவானன்றோ என்றும் எண்ணமிடுகிறாள். எனக்குத் துன்பம் விளைக்கும் காமன் அத்தலைவனுக்கும் இதுபோல் துன்பம்தாரானோ? துன்பம் தரின் வாராதிருப்பனோ? என்றும் சிந்திக்கிறாள். இத்தகு சிந்தனைகளின் வெளிப்பாடாகப் பின்வரும் குறள்கள் காணப்படுகின்றன:

"ஒருதலையான் இன்னாது காமம் காப்போல
இருதலை யானும் இனிது. (1196)

"பருவரலும் பைதலும் காணான்கொல், காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்." (1197)

நெஞ்சுவிடு தூது

தலைவனும் தன்போல் மிக வருந்தினுனையின் தூதுவழி இன்ன காலத்து வருவேன் என்று செய்தியாகிலும் சொல்லியனுப்பலாமே; செய்தி எதுவும் வரவில்லையே என நினைந்த தலைவி தானும் தூதுவிடக் கருதியவளாய்த் தன் நெஞ்சினை விளித்துப் பேசுவதாக ஒருபாடல் உள்ளது.

"உறுஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்
செறுஅய் வாழிய நெஞ்சு" (1200)

'நெஞ்சே'! உன்னோடு பொருந்தாது சென்றார்க்கு யான் உற்ற துன்பத்தை உரைக்க முற்படுவாய். அது கைகூடாவிடினும் துன்பம் செய்யும் கடலையாயினும் தூர்த்துவிடு' என்கிறாள். தூதாகச் சென்று நோவுரைத்து வருவதைவிடத் துன்பம் தரும் கடலைத் தூர்த்துவிடுவது எளிது என்று உபாயம் சொல்லுகிறாள். இவ்வாறு தோழியை விளித்தும், கடலை நோக்கியும் தன் தனிமைத் துயரைத் தலைவி வெளிப்படுத்தும் நிலையில் இவ்வதிகாரம் உள்ளது. கணவன் பிரிந்து சென்ற நாளில் அவன் வரவை விரும்பியும் அவன் இல்லாமையால் உற்ற பிரிவுத்துயரை வெளியிடுகின்ற நிலையில் இவ்வதிகாரம் அமைந்துள்ளது. கணவன் பிரிவில் மனைவியின் வாழ்க்கை நிலையையும், உள்ளுணர்வுகளையும் 'தனிப்படர் மிகுதி'யில் சித்திரித்துள்ளார் ஆசிரியர்.

தலைவனை நினையும் தலைவியின் புலம்பல்

தனித்திருக்கும் நிலையில் ஒருவரை ஒருவர் நினைந்து வருந்துதல் இயல்பே. தலைமகன் நாடு காவல், பொருள் முதலியவற்றின் ஏதுவாகச் சென்றவிடத்து வேற்று நாட்டகத்துத் தனிமை எய்துதல் நேரும். தலைவனது பிரிவில் தலைவி தன் இல்லத்துத் தனித்திருந்து துன்புற்றிருப்பள். எனவே, தனித்திருப்பார் தன்துணைநாடி அவரைக் குறித்துப் புலம்பும் நிலையினராகின்றனர். பிரிவில் நேரும் இந்த நிலையைப் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. 'நினைந்தவர் புலம்பல்' என்னும் அதிகாரம். 'நினைந்தவர் புலம்பல்' எனப் பன்மை வாசகத்தால் அதிகாரப்பெயர் அமைந்துள்ளமையால் இருவரையும் பொதுவில் கருதியதாகக் கருத்துக்கொள்வர்.

அதிகாரவைப்பு முறையை நோக்கினுல் இவ்வதிகாரம் முற்றுமே தலைவி தலைவனை நினைந்துப் புலம்பியதாகக் கொள்வதே ஏற்புடைத்தாதல் பெறப்படும். இதற்கு முந்திய தனிப்படர் மிகுதியும், இதனை அடுத்து வரும் கனவு நிலையுரைத்தலும் தலைவியின்பால் நேரும் நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுவன. எனவே, 'நினைந்தவர் புலம்பல்' அதிகாரம் பிரிவில் தனியிருந்து துயருற்றுளாகிய தலைவியின் பாங்காய் அமைந்தது எனலே மிகப் பொருத்தமாகும்.

மணக்குடவர் விளக்கம் மாண்புடையது

திருக்குறள் உரைகாரர்களுள் காலத்தால் முந்தியவரான மணக்குடவர் கருத்தும் இவ்வதிகாரம் தலைமகள்மாட்டு நிகழ்வதாகவே உள்ளது. அவர்தம் கருத்துரை வருமாறு: 'நினைந்தவர் புலம்பலாவது

செய்மைக் கண்ணும் அண்மைக்கண்ணும் பிரிந்த தலைமகனை ஒழிவின்றி நினைத்த தலைமகளிர் துன்பமுறுதல். "நினைத்தவர் புலம்பல்" என்பது பாடமாயின் அதற்கு அவரை நினைத்துப் புலம்பல் என்று பொருள் உரைத்துக் கொள்க.'

இவரைப்போலவே காளிங்கரும் பரிப்பெருமாளும் இவ்வதிகாரத்தை மகளிர் கூற்றாகவே கொண்டுள்ளனர். எனவே, தலைவி கூற்றாகக் கொண்டு இவ்வதிகாரத்திற்குப் பொருள் காண்டல் நேரிதாம்.

தலைவனின் நினைவால் வரும் இன்பம்

காதலரைப் பற்றிய நினைவு மகிழ்ச்சி தருவது ஆதலால் என் மனம் அவரை நாடி நிற்கின்றது. உண்டால் களிப்புத் தரும் கள்ளைப் போலன்றி உள்ளினாலே இன்பம் செய்யும் காமம் மிகவும் இன்பம் நல்குகின்றது என்று தோழியை நோக்கிக் கூறுவது போலத் தலைவி மொழிவதாக இவ்வதிகாரத்தின் முதற்பாடல் உள்ளது.

> "உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
> கள்ளினும் காமம் இனிது." (1201)

தும்மலின் கருத்து

செய்மையில் நின்றிருப்பார் நினைந்தால் அவரால் நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்பது ஓர் உலகியல் வழக்காகும். தலைமகளுக்குத் தும்மல் வருவது போலத் தோன்றுகிறது. ஆனால், அது வெளிப்படவில்லை. எனவே, தலைவர் மேற்கொண்ட வினை முடிவது போலத் தோன்றியும் இன்னும் முடியவில்லை போலும் என்று கருதுகிறாள். இதன் விளைவாக,

> "நினைப்பவர் போன்று நினையார்கொல், தும்மல்
> சினைப்பது போன்று கெடும்" (1203)

என்னும் சொற்கள் தலைவி வாயினின்றும் பிறக்கின்றன.

இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தும் நிலை

கருத்தொருமித்த காதலனும் காதலியும் ஒருவர் நெஞ்சுள் மற்றவர் குடிபுகுந்து நீங்காதிருக்கின்ற இயல்பினராய் வாழ்பவராவர். பிரிவு நிலையிலும் இருவர் உள்ளத்தும் மாறிப் புகுந்திருக்கும் அந்நினைவு மாறாதன்றோ! இத்தகு நினைவையே ஓர் ஆறுதலாக அவள் எண்ணித் தலைவனை நினைந்து பேசுகிறாள்.

> 'யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்து
> ஓஒ உளரே அவர்!' (1204)

> 'தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார், நாணார்கொல்,
> எந்நெஞ்சத் தோவா வரல்!' (1205)

> 'மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
> உற்றநாள் உள்ள உளேன்!' (1206)

> 'மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
> உள்ளினும் உள்ளம் சுடும்.' (1207)

நெஞ்சால் நினைந்து போற்றுதல்

ஒருமை நெஞ்சமுடைய காதலரின் இயல்பினைத் தலைவியின் உரைகள் நன்கு வெளிப்படுத்துகின்றன. பிரிவுநிலையிலும் ஒருவரை ஒருவர் நெஞ்சால் நினைந்து நினைந்து போற்றும் இயல்பினராவர்.

இங்கே தலைவி, தலைவனை, 'என்றும் மறப்பறியேன்' என்று உரைப்பது போலத் தலைவனும்,

'உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்,' (1125)

எனக் காதற் சிறப்புரைக்கின்ற இடத்துப் பேசுகின்ற பான்மையும் ஈண்டு ஒப்பு நோக்கி மகிழற்பாலது.

கனவுநிலைக் காட்சி

காதலனைப் பிரிந்து தனித்து இருந்து துயருழந்து எந்நேரமும் அக்காதலனையே நினைத்திருக்கும் காதலிக்கு உறக்க நிலையினும் அந்நினைவுகள் கனவாகத் தோன்றுகின்றன. கனவில் தன் காதலனைக் காண்பது தன் வருத்தத்திற்கு ஓர் ஆறுதலாயும் அமைந்துள்ளது என்கிறாள் காதலி. தலைவனைக் கண்முன்னர்க் கொண்டுவந்து காட்டு கின்ற கனவினுக்கு எந்த வகையில் விருந்துவைத்து உபசரிக்க வல்லேன் என்று ஆற்றாமைப்படுகிறாளாம். இத்தகைய காதலியின் உளப் பாங்கைப் பின்வரும் குறட்பாடல்களில் காணலாகும்:

'காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து.' (1211)

'நனவினால் நல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.' (1213)

'நனவென ஒன்றில்லை யாயின் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்' (1216)

'துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.' (1218)

இவற்றால் காதலனுடைய நினைவு நீங்காத தலைவிக்கு இரவில் கனவிலும் காதலன் காட்சியே தோற்றமளிக்கிறது என்பது விளக்கமாம்.

மாலைப் பொழுதும் தனிமை இரக்கமும்

இரவில் கனவு கண்டு தலைவனின் நினைவு வளர ஆற்றாமையுடன் இல்லில் வதியும் தலைமகள் நனவுப் பொழுதில் எந்நிலையினளா கின்றனள்? காதலனைப் பிரிந்து உறையும் மகளிர்க்குப் பகலும் இரவும் தனிமைதான்; அத்தனிமை அவளுக்கு எல்லாக் காலத்தும் துன்பம் தருவதேயாகும். ஆயினும், பகலில் விலங்கும் புள்ளும் மற்றையோரும் வினைமுடித்து வீடு திரும்பும் மாலைக்காலம் துணையின்றி வாழ்வார்க்கு மிக்க துயரமளிப்பதாகும். ஆகவேதான், 'பொழுது கண்டிரங்கல்' என்பதில் வள்ளுவப் பெருந்தகை மாலைப்பொழுது கண்டு இரங்கிய தனையே நலமுற எடுத்து காட்டியுள்ளார், இவ்வதிகாரத்தின்

பத்துப்பாடல்களிலும் 'மாலை' என்னும் சொல் பயின்று வருதல் சிறப்பாகக் குறிப்பிடத்தகும். இக்காமத்துப்பால் அதிகாரங்களுக்குள்ளேயே இதற்குரிய தனிச் சிறப்புத் தன்மைக்கு இச் சொல்லாட்சியும் ஒரு சான்றாகும்.

பொருள் மாலையாளர்

பொழுது கண்டு இரங்கும் தலைவி காதலன் பிரிந்து சென்ற ஏதுவையும் நினைந்து பேசுகிறாள். இங்கே தலைமகன் பொருளின்பொருட்டுப் பிரிந்துள்ளான் என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றாள்.

'பொருள்மாலை யாளரை உள்ளி மருண்மாலை
மாயும்என் மாயா உயிர்.' (1230)

என்பதனால் இவள் பொருளின் பொருட்டாகப் பிரிந்த தலைமகனை நினைக்கின்ற தலைவியாகின்றாள்.

கதிரவன் மறையும் மாலைக் காலத்தே அவள் தன் பிரிவுத்துயர் மிகுந்து உயிர் நலிதலையும் நன்கு வெளிப்படுத்து உரைக்கின்றார். தலைவியின் வருத்தமிகுதியால் அவளுக்கு அந்நாளிலே அப்பிரிவு மாலை, கதிர் மயக்கந்தரும் மாலையாகக் காட்சி தருகிறது. எனவே, அவள் அதனை 'மருள்மாலை' யாகச் சுட்டுகின்றாள். பிரிவுத் துன்பத்தால் துவளும் அத்தலைவியின் உயிர் நலிவதாயிற்றுதலின் அவள் அவ்வாறு குறிப்பித்தது பொருத்தமான வாக்கே.

மாலை மலரும் காதல் நோய்

பிரிந்துறை மகளிரை மாலைக்காலம் பெரிதும் பீழிக்கும் என்பதனை வள்ளுவர் நலமுறச் சில குறள்களில் சுட்டியுள்ளார். அத்தலைவி கொண்ட காமநோய் காலையில் அரும்பாய், பகலில் போதாய், மாலையில் மலர்ந்து காமநோயாகி வருத்தம் பெரிதுமுறச் செய்கின்றதாம். காதலர் உடனில்லாதபோது வரும் மாலைக்காலம் கொலைக் களத்திலே உயிரைக் கொள்ளவரும் கொலைஞரைப் போல வந்து நலிகிறதாம். ஆயர் மந்தையுடன் மாலையில் ஊதிவரும் குழலோசை பிரிந்துறை தலைவிக்குக் கொல்லும் ஆயுதம் போன்று காணப்படுகிறதாம் இனிய மாலைப்பொழுது காதலரைப் பிரிந்த காலத்து இன்னாமை செய்வதாய்க் காணப்படுவது காலச்சூழலே.

'காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய்' (1227)

'காதல ரில்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.' (1224)

'அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.' [1228)

மாலைப் பெண்

மேலும், மாலையையே முன்னிலைப்படுத்தி, அதனை ஒரு பெண்ணாகப் பாவித்து, 'மாலையே! நீயும் இப்பொழுது ஒளி இழந்து காணப்படுகின்றாயே? உன் துணைவனும் என் துணைவனைப் போலக் கடுமனம்

உடையான் போலும்! அதனுல்தான் இவ்வாறு ஒளிமங்கி இருக்கின்றய் போலும்!' என்பது நோக்குவன எல்லாம் தன்னையே பொருளாக வைத்து நோக்குவதால் தற்சூழல் நிலையிலும் தான் துன்பம் காண்பதனை உணர்த்துவாளாயினள்.

> 'புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
> வன்கண்ண தோநின் துணை?' (1222)

'ஊர்முற்றுமே இம்மாலையில் துயருறும் என உளங் கொண்டு,

> 'பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
> மாலை படர்தரும் போழ்து' (1229)

என்று பேசுகிறாள் தலைவி. இவ்வாருகப் பொழுது கண்டு இரங்கல் பகுதியிலே மாலைப்பொழுதை மையமாக வைத்துக் காதலனைப் பிரிந்து வாழ்கின்ற காதலியின் உளநிலைகளை ஆசிரியர் திருவள்ளுவர் நன்கு சித்திரித்துள்ளார்.

பிரிந்துறை தலைவியின் உடல்–உளநிலைகள்

தலைவனுடைய பிரிவினுல் தனித்திருந்து, மாலைப் பொழுது கண்டு வருந்தி வாழ்ந்துவரும் தலைவியின் உளநிலை உடல்நிலைகளையும் ஆசிரியர் நுனித்தறிந்து, அவற்றை உலகிய லொப்ப எடுத்துரைத்துள்ளார். 'உறுப்புநலன் அழிதல்', 'நெஞ்சொடு கிளத்தல்' 'நிறையழிதல்' என்னும் மூன்று அதிகாரங்களும் (124-126) பிரிந்துறையும் மகளிரின் நிலையை எடுத்துரைப்பனவாம்.

தலைவனைப் பிரிந்து வாழும் நிலையில் தன் உடம்பினைப் பேணுமலும் ஒப்பனை செய்யாமலும் இருப்பதனுலேயே தலைவியின் மேனி மெலிவுற்றும் அழகிழந்தும் காணப்படுவது இயல்பே. இவ்வாறு நலமிழந்தாள் தன் நெஞ்சை நோக்கியுரைத்து மன ஆறுதல் சொல்லப் பார்க்கிருள். பின்னும் துயரம் உள்ளடங்காமல் மேலிட அதனை அடக்கும் நிலையிழந்து பிறர் கேட்கும் வகையில் வெளிப்படப் பேசத் தொடங்குகிருள். உள்ளம் கரைகடந்துவரும் இத்தகு பேச்சுகளைத் தெரிவிப்பதனையே 'நிறையழிதல்' என்று பேசுகிருர் வள்ளுவர்.

கண்ணும் தோளும் நுதலும் கவின் இழத்தல்

உறுப்புநலன் அழிதல் பற்றி உரைப்பதற்கு முன்னரே பொதுவாகத் தலைமகள் துன்புற்றுக் கண் கலுழ்ந்து, மேனி பசலை பரவ வாழ்ந்திருந்த நிலையை எடுத்துப் பேசியுள்ளார். 'படர்மெலிந்திரங்கல்' (அதி 117), 'கண்விதுப்பழிதல்' (அதி. 118), 'பசப்புறு பருவரல்' (அதி. 119) என்பன தலைவியின் வருத்த நிலைபற்றியும் மேனி நலம் இழந்தது குறித்தும் பேசப்படும் அதிகாரங்களாம். இவற்றிற்கேற்பப் பொது வகையில் பேசாது 'உறுப்பு நலன் அழிதல்' என்பதில் தலைவியின் மேனி யுறுப்புகள், சிறப்பாகக் கண்ணும் தோளும் நுதலும் உற்ற வாட்டத்தினையே ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

கண்ணின் அழகிழப்பை நான்கு குறள்களின் வழி சுட்டிச் சொல்லியுள்ளார். இந்த அதிகாரத்தின் தொடக்கப் பாடல்கள் இரண்டும் (1231, 1232), ஈற்றுப் பாடல்கள் இரண்டும் (1239, 1240) கண்களைப்

பற்றிப் பேசும் பொருத்தம் நோக்கத்தகும். 'பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்' என்றபடி உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துவதில் முதன்மை பெறும் கண்ணின் நலமிழப்பை முதலும் முடிவுமாக வைத்துப் பேசியதும் பொருத்தந்தானே? நுதல் பசலைபடர்ந்து செவ்வி கெட்டதனை ஒரு பாடல் தெரிவிப்பதாயுள்ளது (1238). தோள் நலம் தொலைந்தமை குறித்து ஐந்து பாடல்களில் (1233-1237) பேசப்பட்டுள்ளன.

தலைவி நெஞ்சொடு பேசுதல்

தலைவி தான் தனித்து வாழும் சூழலில், மாலைப்பொழுது கண்டும், மா, புள் முதலியவற்றின் போக்கினைக் கண்டும் கண் கலுழ்ந்து தோள் நலம் தொலையவும், மேனி பசலை படரவும் நின்ற நிலையில், தன் துயரைத் தான்பொறுது வாய்விட்டுரைக்க முற்படுகிறாள். யாரிடம் குறையைச் சொல்லி இரங்குவது? ஆயமும் சுற்றமும்கூட அவள் துணையாய் நின்று ஆறுதல்தர அருகில் இல்லை. அவளுடைய நெஞ்சமே கண்முன் நிற்கிறது. எனவே தன் நெஞ்சை விளித்துத் தன் உளக்குறைகளை வெளியிடத் தொடங்குகின்றாள். பிறரிடம் சொல்வதற்கு நாணித் தன் நெஞ்சோடு பேசுகிறாள் நங்கை. நெஞ்சை முன்னிலைப்படுத்தி அதனோடு பேசி ஆறுதல் பெறத் தொடங்குகிறாள் காதலி. நாடகப் பாத்திரங்களின் தனிமொழிப் பேச்சுவகையில் நெஞ்சோடு பேசும் பேச்சுகள் உள. இந்த அதிகாரத்தில் 'நெஞ்சம்' என்பது எல்லாப் பாடல்களிலும் இடம் பெற்று விளி முதலிய பொருளில் வந்துள்ளமை காணலாம்.

கனவுநிலை உரைத்தல் போல இந்த நெஞ்சொடு கிளத்தலும் பிரிவுக் காலத்துத் தலைவியின் உளப்பாங்கினை வெளியிடுவதாகும். துயரத்தை யாரிடமாவது சொல்லி வெளிப்படுத்தினால், அத்துயரம் சற்றுக் குறையும் எனக் கருதுவர். அந்த வகையில் தலைவி தன் நெஞ்சை விளித்து, அதனிடமே தன் நிலைமையை எடுத்துரைக்கின்றாள்.

> ''நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
> எவ்வநோய் தீர்க்கும் மருந்து'' (1241)

என்று தலைவன் பிரிவினால் தன் உறுப்பு நலன் இழந்து வருந்தி வாழும் தலைவி தன் துன்பம் தீர்க்கும் மருந்து ஏதாயினும் ஒன்றை ஆராய்ந்து சொல்லவேண்டும் என நெஞ்சினிடமே, வினவுகிறாள். காமமும் நாணமும் தன்னை மிகவும் வருத்துகின்றன என்பதனை நெஞ்சிற்கு உரைத்து அவற்றுள் ஒன்றை விட்டுவிடுமாறும் வேண்டுகிறாள்.

> ''காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
> யானோ பொறேனிவ் விரண்டு.'' (1247)

நெஞ்சத்தை, 'நல்நெஞ்சே' என்று விளிக்கின்றாள். ஏனெனில் காமத்தையும் நாணையும் விடாதுநின்ற அவளுடைய பெண்மையை நிலைநாட்டுதலினாலேயாகும்.

> ''துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
> இன்னும் இழத்தும் கவின்'' (1250)

என்பது தலைவி பிரிவுத்துயரைத் தாங்க இயலாத நிலைக்கு வந்துள்ளமையை வெளிப்படுத்தும். இதன் பெருவிளக்கமே அடுத்த அதிகாரமாகிய நிறையழிதல்.

காமநோய் மேலீடு

'நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை' என்பார் கலித்தொகையில் (133:12) கபிலர். மறைவான உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தல் முறையன்றாம். எனவே, நெஞ்சிற்குரைத்து ஆறுதல் மொழி கூறுவார் ஆசிரியர். எனவே, நாணத்தைவிட்டு வேட்கை மிகுதியால் தன்னிலையைத் தலைவி எடுத்தோதுகின்றாள். தன்னுடைய நிறையென்னும் மனவடக்கத்தை வேட்கை மீதூர்ந்து விடுகிறது. எனவே, அவள் தனக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய பெண்மை இயல்புகள் விட்டோடியமையை உணர்கிறாள். காமத்தைக் கோடரிக்கு ஒப்பிட்டுப் பேசுவதால், அது விளைக்கும் கொடிய துன்பம் புலப்படும் (குறள் 1251).

தாம் உற்ற பிரிவுத் துயரை மறைக்கவும் அது மறையாது மேலெழுகின்ற பாங்கினை உரைக்கிறாள் தலைவி. தலைவனைப் பிரிந்து தனித்து வாழ நேர்ந்த சூழலில் தும்மல் போல் காமநோய் மேலெழுந்து வருகிறதாம்.

> "மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
> தும்மல்போல் தோன்றி விடும்" (1253)

என்பது தலைவியின் ஆற்ற ஒண்ணாத நிலைமையை வெளிப்படுத்தும்.

பெண்மைக்கு இயல்பான நாணைக் காமம் அழிப்பது போல நிறை என்னும் அடக்கத்தைத் தலைவனின் அன்புரைகள் அழித்துவிட்டனவாம்.

> "பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ நம்
> பெண்மை உடைக்கும் படை." (1258)

இதுபோன்ற உரைகள் தலைவி உறும் மிகு துயரை வெளிப்படுத்துவனவாம்.

இவ்வாறாகப் பிரிவுநிலையில் நிறையழிந்து வருந்திப் பேசும் தலைவி, பிரிந்த தலைமகன் மீண்டுவந்து சேர்ந்த இடத்தும் இவ்வாறு நிற்பளோ என்றால், இல்லை. அவன் வந்து சேர்ந்த காலத்து அவனது பிரிவு நிலையில் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் பறந்தோடி விடுகின்றன.

> "புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
> கலத்தல் உறுவது கண்டு." (1259)
>
> "நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
> புணர்ந்தூடி நிற்பேம் எனல்." (1260)

தலைவனைக் காணத்துடிக்கும் தலைவியின் ஆர்வம்

இவற்றால் பிரிவு நிலையில் உறுப்பு நலன் இழந்து, நாணம் அழிந்து, உள்ள நிறையாம் அடக்கம் தகர்ந்து, அவன் வரவை நோக்கியிருக்கின்ற தலைவியின் ஆர்வம் புலப்படும். ஆர்வத்தால் அவனைச் சேருவதற்கு

உள்ளம் அவாவுகின்றாள். பிரிவு நிலையில் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காண்பதற்கு விரைந்து அவாவும் உளப்பாங்கினை 'அவர்வயின் விதும்பல்' என்னும் அதிகாரம் எடுத்துக்காட்டுகிறது.

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்." (1261)

தலைவன் என்று வருவான் என்று அவன் சென்ற திசையை நோக்கித் தலைவி காலங்கழிப்பதனால், கண்கள் ஒளி இழந்து காணப்படுகின்றன. அது போன்றே சுவரில் இட்ட நாள் எண் குறிப்பைத் தன் விரலால் தொட்டுத்தொட்டு எண்ணுதலால் விரல்களும் தேய்ந்தனவாம். எனவே, தலைவனைக் காண்பதற்கு அவள் எத்துணை ஆர்வத்தளாயுள்ளாள் என்பது தெரியவரும்.

"உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்." (1263)

"வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்-நோய் எல்லாம் கெட." (1266)

"வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து." (1268)

இத்தகு பாடல்களால் தலைவனைக் காண்பதில் தலைவிக்கு உளதாம் பெரு விருப்பு நன்கு வெளிப்படும்.

உளக்குறிப்பின் வெளிப்பாடு

குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சி விதும்பல் என்னும் அதிகாரங்கள் பிரிந்த தலைமகன் மீண்டு வந்த காலத்து நிகழ்ச்சிகளாம்.

களவுக்காலத்து இருவரும் எதிர்பட்டவழி தலைமகளின் காதல் குறிப்பை அறிந்து தலைவன் பேசிய மொழிகள் 'குறிப்பு அறிதல்' எனப் பட்டது. அங்கே சொல்லப்பட்டவை தலைமகளின் உள்ளக்குறிப்பை—காதல் நெஞ்சத்தை—தலைமகன் அறிந்து போற்றியதாம். இங்கே சொல்லப்படுவது குறிப்பு அறிவித்தல் ஆகும். பிரிந்து கூடியவிடத்துத் தலைமகன், தலைமகள், தோழி என்போருள் ஒருவர் உளக்குறிப்பினை ஏனையோர்க்கு வெளிப்படுத்தலாகும்.

பிரிந்து மீண்டும் வந்து சேர்ந்த தலைமகளின் அன்புரைகளும் தலையளிகளும் தலைமகளுக்குத் தலைவன் மீண்டும் பிரிவனோ என்னும் ஐயத்தைத் தோற்றுவிக்கின்றதாம். அதனை அத் தலைமகளின் கண்களிலிருந்து கண்ட தலைமகன் அவள் குறிப்பறிந்து தான் அவளுடைய கண்ணின் குறிப்பினால் அவளுடைய எண்ணத்தைத் தெரிவுற்றதாகச் சொல்லுகிறான்.

'கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு!' (1271)

என்பதனால் உளக்குறிப்பை முகக்குறிப்பினால் உணரும் பான்மை வெளிப்படுகிறது, முகத்தினும் முக்கியமான கண்ணே இன்னும் தெளிவாக அவர்தம் கருத்துகளை வெளியிடுகின்றன என்று பேசுகின்றார்.

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு" (1274)

எனத் தலைவியின் சிரிப்பினாலேயே அவள்தன் அன்பு வெளிப்படுகிறது என்பது கண்டு கூறுகின்றான்.

துறைவன் பிரிவான் என்பது உணர்ந்த தலைவியின் குறிப்பறிந்த நிலையும் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

"தண்ணம் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை!" (2277)

"நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து." (1278)

பிரிவுக் குறிப்பும் மெலிவும்

தலைவனுடைய பிரிவுக்குறிப்பு உணர்ந்தாள் மெலிவினால் வளை கழல மேனி பசப்பூர, உடல்மெலிந்தாள் என்பது ஒவ்வொன்றும் தலைவன் - தலைவியரின் உளக்குறிப்புகளை எடுத்துரைத்து ஆற்றியிருக்கின்ற திறம் விளக்கப்பட்டிருத்தல் காணலாம்.

தலைவன் எங்கிருக்கிறானோ அங்கே தானும் செல்லும் குறிப்பினள் தலைவி என்பதனை,

"தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது" (1279)

என்னும் தோழியின் கூற்றுத் தெரிவிக்கும்.

காம நல விழைவு

களவு ஒழுக்கில் தலைவியுடன் கூடி மகிழ்ந்த தலைவன் அக்கூட்டத்தால் மகிழ்ந்து கூறிய உரைகளைப், 'புணர்ச்சி மகிழ்தல்' என ஆசிரியர் முன்னர் உரைத்தார். அவ்வாறே இங்குக் கற்புக்காலத்தும் சிலகாலம் பிரிந்து மீண்டு வந்த தலைமகன் தலைமகளுடன் கூடி மகிழ விரும்புதலும், அங்ஙனமே தலைவி தலைவனுடன் சேர விரும்புதலும் இயல்பாம். 'புணர்ச்சி விதும்பல்' அதிகாரத்தில் தலைவன் தலைவியர் கூற்றுகளாக வருபவை காமநலம் துய்க்க விழையும் அவர்தம் உளப்பாங்கினைத் தெள்ளிதின் காட்டுகின்றன.

"கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று" (1290)

என்னும் தலைவன் கூற்றுப் பிரிவுகாரணமாகத் தலைவி தன் கண்மாத்திரத்தான் சிறிது ஊடினாளே தவிர, அவளும் தன் விருப்பம் மீதூரக் கூடிவிட்டாள்; தலைவன் எதிர்நிற்கும் ஆற்றல் இலளாயினாள் என்பது தெரியவரும்.

"இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு" (1288)

என்பது கள்ளுண்போர் அது குற்றம் என்பது உணர்ந்தும் மீண்டும் அதனையே உண்டு களிப்பர். அங்ஙனமே தலைவன் இன்னா செயினும் அவன் மார்பும் கூடி முயங்குதற்கு உரியதாயிற்று என்பதாம்.

பெண்ணின் உள்ளம்

தலைவன் பிரிவில் துயருற்ற தலைவி அவன் திரும்பிய காலத்து முன்னர்த் தாம் பட்ட துயரம் முற்றும் மறந்து தலைவனுடன் சேர்ந்து விடுவது அவள் தன் பெண்மைக்கு இயல்பாகவுள்ளது. தலைவியின் உள்ளுணர்ச்சிகளைச் சித்திரிக்கும் வகையில் வள்ளுவர் தீட்டிக் காட்டிய சித்திரம் பெண்ணுள்ளத்தைத் தெற்றென வெளிப்படுத்துவதாயுள்ளன.

"பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண்." (1283)

"ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு." (1284)

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து."

"காணுங்கால் காணேன் தவறாய, காணாக்கால்
காணேன் தவறல் லவை." (1286)

தலைவியின் உளப்பாங்கும் அவள் தலைவனுடன் கூடி மகிழ்தற்கு எவ்வளவு தூரம் முந்துகிறாள் என்பதும் இப்பாடல்களிலே நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன.

புணர்ச்சிப் பெருவிருப்பம்

ஒத்த அன்புடைய காதலர் கூடி மகிழ்தலை எவ்வளவு தூரம் மிகுதியாய் விரும்புகிறார்கள் என்பதனை,

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு" (1281)

என்னும் குறள் தெற்றென விளக்குதல் காணலாம்.

நெடுநாள் பிரிந்து வந்த தலைவனோடு தலைவி பிணக்குக் கொள்ளவே எண்ணுகின்றாளாம். ஆனால், அவனைக் கண்டபோதே அவன் செய்த பிழைகள் எல்லாம் மறந்துபோய் விடுகின்றனவாம் அவளுக்கு. அவனொடு கூடி மகிழவே அவள் உள்ளம் அவாவி விடுகிறதாம்.

'ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு.' (1284)

எனத் தோழியை விளித்துத் தன் மனநிலையை வெளிப்படுத்தும் தலைவி வாக்கு அவளுக்குப் புணர்ச்சி மேலுள்ள பெருவிருப்பினை நன்றாக விளக்குகிறது.

புணர்ச்சியை விரும்பிய தலைவன் தலைவியர் இருவரும் தம்முள் மாறுபடக் கருதாது தம் நெஞ்சொடு மாறுபட்டு, அதனைக் கடிந்து உரையாடும் வகையில் நெஞ்சொடு புலத்தல் அதிகாரம் அமைந்துள்ளது.

தலைவனைப் பிரிந்து வாழ்ந்த காலத்து நெஞ்சை விளித்து, அதனோடும் தம் நிலையை எடுத்துரைக்கும் பாங்கில் முன்னர் நெஞ்சொடு கிளத்தல் என ஓர் அதிகாரம் ஆசிரியர் அமைத்துள்ளாரன்றோ? அது போலவே இருவரும் நெஞ்சொடு மாறுபட்டுப் பேசுமிடத்தும் அவர் தம் உள்ளன்பு வெளிப்படுதலும் விளங்கும்.

பிரிந்து சென்று தமக்குப் பல பிழைகள் புரிந்தும்கூடத் தம் நெஞ்சம் அத்தலைவரிடமே ஓடுதல் கண்டு தலைவி அதனைக் கடிகின்றாள்.

'உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறிஎன் நெஞ்சு.' (1292)

'கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சே நீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.' (1293)

இவையெல்லாம் தலைவியின் உள்ளம் அன்பால் நெகிழ்வதையே வெளிப்படுத்தும்.

நெஞ்சத்தே உயிர்க் காதலை உள்ளுதல்

தலைவி தன் நெஞ்சம் காதலனுடன் கூடியிருந்த காலத்து அச்சம் விளைப்பதாகவும், தலைவன் பிரிவினிடத்து வருத்தம் தருவதாயும் இருந்த தன் அனுபவத்தை மொழிகின்றாள்.

'தனியே யிருந்து நினைந்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு.' (1296)

'பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.' (1295)

இவ்வாறு புணரினும் பிரிவினும் தலைவன் இடும்பை தரினும் அவரிடத்து மேலும் அன்புகொண்டு செல்வதற்கு யாது காரணம்? தலைவன் தலைவியை மதியாது விடுத்து வினைமேற் சென்றாலும் அவள் நெஞ்சம் அவனொடு மாறுபட்டு இகழ்வதில்லை; அவனை நினைந்து அவனுடன் கூடி மகிழ்தற்கே அவாவுகின்றது.

'எள்ளின் இழிவாமென் றெண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.' (1298)

தலைவியின் உள்ளம் எத்தகைய பண்பட்ட உள்ளம். அவளுடைய காதல் நெஞ்சம் என்றும் பகைமை பூத்துக்கிடத்தல் புலப்படும்.

சிறு பிணக்கு

நெஞ்சுடன் புலத்தலின் பின்வரும் மூன்று அதிகாரங்களும் காதலரிடையே காணும் சிறுபிணக்குகளையும், உளமாற்றங்களையும், இறுதியில் அவர்கள் உவந்து கூடுதலையும் பொருளாகக் கொண்டவை. புலவி, ஊடல், ஊடல்-உவகை, என்னும் மூன்றும் நுட்பமான உளவியல் அடிப்படையில் அமைந்தனவாம்.

புணர்ச்சியை அவ்விருவருடைய நெஞ்சமும் விரும்பினாலும், இடையே சற்று ஒருவரோடு ஒருவர் மாறுபட்டுப் பேசும் பேச்சுகள் அவர்தம் மனப் பிணக்கினை வெளிப்படுத்துவன. 'புலவி' அதிகாரம் முற்றுமே தலைவி தோழியரின் பேச்சுகளாகவே தரப்பட்டுள்ளன.

தோழி தலைவிக்குச் சொல்லுகிறாள்; 'தலைவனை விரைந்து சேர்ந்து விடாதே; அவனோடு சிறுபிணக்கை மேலிட்டுச் சில பொழுது இரு; அவன் படும் அல்லலையும் சிறிது காண்போம்' என்று அறிவுறுத்துகிறாள்.

> 'புல்லா திராஅப் புலத்தை அவருறும்
> அல்லல்நோய் காண்கம் சிறிது.' (1301)

சிறிதளவுதான் பிணங்கலாமே தவிர, அப் பிணக்கம் அளவிற்கு மிஞ்சி நீளுதலும் கூடாது. அது உணவிற்கு இடும் உப்புப்போல அமைந்தால்தான் சுவையுடையதாயிருக்கும் என்றும் எடுத்துரைக்கிறாள் தோழி.

> 'உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்.' (1302)

பிணக்கத்தால் இன்பம் ஏற்றமுறுதல்

காதலரிடையே நிகழும் இத்தகு சிறு பிணக்குகளும் அவர்தம் அன்புள்ளம் மேலும் சிறந்து கூடி மகிழ்தற்கே துணைசெய்கின்றனவாம். பிரிவின்றிக் கூடி மகிழ்தலினும் சிறிய பிணக்கத்தால் இடையறவு பட்டுக் கூடுதல் அவர் பெறும் இன்பத்திற்கே ஓர் ஏற்றம் காணச் செய்யுமாம்.

> 'துனியும் புலவியும் இல்லாயின் காமம்
> கனியும் கருக்காயும் அற்று.' (1306)

முதிர்ந்த பிணக்கும் இளம் பிணக்கும் இல்லாதிருந்தால் காமமாகிய இன்கனி நன்சுவை பயவாதாம். இப் பிணக்குகள் இல்லாதாரி காம நுகர்ச்சி செங்காயையும் இளங்காயையும் நுகர்ந்தாற் போல ஆகுமாம்.

புலவி உரைகள்

புலவி என்னும் பிணக்கவுரைகள் எல்லாம் தலைவியே இட்டுக்கட்டிச் சொல்பவைகளேயாம். அத் தலைவனுடைய உள்ளப் பாங்கை செம்மை நிலையை வெளிப்படுத்த இப் புலவியுரைகள் பயன்படுகின்றன.

நெஞ்சுடன் மாறுபட்டு வருந்திப் பேசிய தலைமகள் வெளிப்படையாகவே தம் பிணக்கை வெளிப்படுத்த முற்படுகிறாள். இவ்வாறு பிணங்கி உரைக்கும் உரைகள் அன்புடையாரிடத்து இனிமையாகக் காணப்படும். அன்பு இல்லாவிடின் அப்புலவி இனிமை பயவாதாம். எப்படி நிழலின் கீழ் அமைந்த நீர் இனிதாயிருக்குமோ அதுபோல என்று ஒப்புக்காட்டித் தலைமகன் கூற்றாக ஒரு குறள் அமைந்துள்ளது.

> 'நீரும் நிழலது இனிதே புலவியும்
> வீழுநர் கண்ணே இனிது.' (1309)

இங்கே 'வீழுநர்' என்பது விருப்பமுடையாரி, அன்புடையாரி என்பது பொருளாம். விருப்பமுடைய காதலரி மாட்டுப் புலவி நீட்டித்திராது என்பதாம்.

புலவி நுணுக்கத்தில் காணும் பேச்சருமை

புலவி என்பதனை அடுத்துப் 'புலவி நுணுக்கம்' என்னும் ஓர் அதிகாரமும் காணப்படுகிறது. காதலனும் காதலியும் ஓர் அமளியில்

உடனிருந்தும் அவன்மேல் சில தவறுகளை ஏறட்டுக் கொண்டு பேசுதல் கூறப்படும். தலைமகன் சொல்லினும் செயலினும் வேறு குறிப்புளது போலத் தலைவி கருதிப் பேசுவது அவரிடத்துப் பிணக்கம் உள்ளது போலக் காட்டும். தலைமகனுடைய தும்மல், பேச்சு, செய்கை, அவன் அணிந்துள்ள பூ முதலிய எல்லாவற்றானும் தலைமகன் வேறு மகளிர்பால் நாட்டம் வைத்துள்ளானோ என்னும் ஐயம் புலப்படும்படியாக அமைகிறது தலைவியின் பேச்சு.

இப் புலவி நுணுக்கம் பற்றிய அதிகாரத்தில் 'புலவி' 'ஊடல்' என்பன போன்ற பிணக்கத்தைச் சுட்டும் சொற்கள் ஒன்று கூட இல்லை. ஒரு சில நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

புலவி-ஊடல் பற்றிய வள்ளுவர் அமைப்பு

தலைவியின் புலவி, ஊடல்களுக்கு அத்தலைவனின் பரத்தையர் பிரிவை ஓர் ஏதுவாக வள்ளுவர் யாண்டும் கூறிற்றிலர். 'பெண்கள் பிறராலும் உன் மார்பு பார்க்கப்படும்; ஆதலால் நீ பரத்தமைப் போக்கு உடையவனே' என்கிறாள். இக் கருத்தில் புலவி நுணுக்கத்தில் வரும் முதற்பாட்டு,

'பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு' (1311)

என உள்ளது. இங்கே பெண்பாலார் பிறர் தலைவனுடைய பவனி கண்டு காதல் கொள்ளுவதாக உள்ளதே தவிரத் தலைவன் பரத்தையர் இல்லம் சென்று வந்தான் என்னும் குறிப்பு ஏதுவும் இல்லை. பிறரால் விரும்பப்படும் நீர்மையில் உள்ளான் தலைவன் என்ற குறிப்பில்தான் சுட்டப்படுகின்றான். அன்றி அவன் பரத்தையரை நாடினன் என்னும் செய்தி பேசப்படவில்லை.

தொல்காப்பியம் சங்கநூல் முதலியவற்றில் பரத்தையர் பிரிவு என்பது குறித்துப் பலபடப் பேசப்பட்டுள்ளன. அதனால் புலவியும் ஊடலும் புகுந்தமையும் கூறப்பட்டுள்ளன. ஆனால், வள்ளுவர் புலவி. ஊடல்களுக்குப் பரத்தையரை ஏதுவாகச் சுட்டினாரில்லை.

பின்னாளில் வளர்ந்த அகப்பொருட் கோவை நூல்களாம் பாண்டிக் கோவை, திருச்சிற்றம்பலக் கோவை முதலிய கோவை நூல்களில் பரத்தையர் பிரிவு சொல்லப்பட்டிருக்கிறது. இருமனப் பெண்டிர், பொருட்பொருளார், வரைவிலா மாணிழையார், பண்பில மகளிர் என்றெல்லாம் பொருட்பாலில் கடிந்துரைத்த வள்ளுவர் அப் பரத்தையர் ஒழுக்கினை ஒரு சமுதாய நடப்பாகக்கூட ஒப்ப ஒருப்பட்டிலர்.

வள்ளுவர் தந்த குறட்பாலம்

சங்கநூல் மரபுக்கும் இடைக்கால அகப்பொருள் மரபுகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் உள்ளது முப்பால். காமத்துப் பாலிலும் மனைவியின் தூய கற்பொழுக்கம் பேணியே பேசப்படுகிறது. இவருடைய நூல் முற்கால இலக்கியங்களுக்கும் இடைக்கால இலக்கியங்களுக்கும் ஒரு பாலமாய் அமைந்துள்ளது எனலாம்.

இப் புலவி நுணுக்க அதிகாரத்தில் தும்மல் ஏதுவாகச் சில பாடல்கள் நுணுக்கமாகத் தரப்பட்டுள்ளன.

கருத்து நுட்பத்தால் விளையும் புலவி

ஒருவர் தும்மினால் அவரை யாரோ நினைக்கிறார் என்பது உலக வழக்கு. அதுவுமன்றித் தும்மியவரின் அருகிருக்கும் அன்பர்கள், 'அவரை வாழ்க!' என வாழ்த்துவதும் வழக்கமாம். இந்த உலகியலைப் பின்னணியாகக் கொண்டு சில குறள்கள் புலவி நுணுக்க அதிகாரத்துள் தரப் பட்டுள்ளன.

தலைவனோடு மாறுபட்ட தலைவி அவனுடன் ஒரே அமளியில் உடன் இருந்தும் பேசினாளில்லை. அவளைப் பேச வைக்கும் ஒரு வாயிலாகத் தும்மலைப் பயன்படுத்துகிறான் தலைவன். இச்செய்தியைத் தோழிக்குத் தலைவி சொல்வதாக உள்ளது பின்வரும் குறட்பாடல்.

'ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.' (1312)

தலைவன் தும்மியபோது தலைவி வாழ்த்தினாள்; வாழ்த்தியவள் அழவும் தொடங்கினாளாம். 'யார் உம்மை நினைத்ததால் உமக்குத் தும்மல் வந்தது?' என்று கேட்டு அழுதாளாம்.

'வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.' (1317)

தலைவன் அவளுடைய கருத்தை எப்படி மறுப்பது என்று திகைத்தான். அன்றியும் அடுத்துத் தனக்குவந்த தும்மலையும் வெளிப்படாதபடி அடக்கினானாம். அது கண்ட அவள், 'உம்மைச் சேர்ந்தவர் நினைத்தலை மறைப்பதற்காகத்தானே தும்மலை அடக்கினீர்' என்று மீண்டும் அழத் தொடங்கி விட்டாளாம்.

'தும்முச் செறிப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.' (1318)

தும்மினாலும் குற்றம்; தும்மாது தவிர்ந்தாலும் குற்றம் என்ற வகையில் தலைவி புலந்து பேசும் பேச்சு நயமுடைத்து.

பின்னர்த் தலைவன் ஊடல் கொண்ட அவளைத் தெளிவித்து உவப்பூட்டும்பொருட்டுப் பணிந்து பேசினானாம். அதனைக் கண்ட அவள் இது போலத்தானே பிற பெண்களிடத்தும் நடந்திருப்பீர்போலும் என்று ஐயுறவு கொண்டவள்போலப் பேசத் தொடங்கினாளாம்.

'தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீர ராகுதிர் என்று' (1319)

என்னும் தலைவனின் பேச்சு இப் புலவி நிகழ்ச்சியைத் தெரிவிக்கிறது.

இவ்வாறாகத் தன்னுடைய பேச்சிலும் செயலிலும் குறை கண்டு மனம் பிணங்கிப் பேசும் தலைவியின் போக்கினைத் தலைவன் கண்டான். எனவே, அவன் யாதும் பேசாது தலைவியின் மேனியின் அழகைக்

நோக்கிக் கொண்டு வாளாவிருந்தான். அப்பொழுதும் அவள் விட்டா வில்லை. 'என் அவயங்களைக் கூர்ந்து நோக்குகிறீரே, எந்தப் பெண்ணின் உறுப்போடு என் உறுப்புகளை ஒப்புக் காண்கிறீர்' என்று கேட்டனளாம். எவ்வுளவு நுட்பமாகக் காதலி பேசுகிறாள் என்பதும் அவர்தம் பிணக்குச் சிறு பிணக்கே என்பதும் விரைவில் தீர்ந்துவிடும் என்பதும் தெரியவரும்.

புலவி நுணுக்கப் பகுதியில் தலைவன் உரையாடலில் வரும் சிற்சில சொற்களே புலவிக்குக் காரணமாக அமைந்து விடுகின்ற பாங்கையும் வள்ளுவர் காட்டியுள்ளார். தலைவி எவ்வளவு உன்னிப்பாகத் தலைவனின் பேச்சைக் கேட்கிறாள் என்பது அப் பாடல்களை நோக்கின் புலனாகும்.

தலைவியின் பிணக்கத்திற்கு ஏதுவாயின தன் உரைகளைத் தலைவன் எடுத்துச் சொல்லி, அவற்றிற்கெல்லாம் எவ்வகைக் கருத்தினைக் கொண்டு பிணங்கியுரைத்தாள் என்பதனையும் உணர்த்துகின்றன பின்வரும் குறட்பாக்கள் :

'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.' *(1314)*

'இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண் டனள்.' *(1315)*

'உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக்க னள்.' *(1316)*

இப் பாடல்களில் வரும் 'யாரினும்,' 'இம்மைப் பிறப்பிற் பிரியலம்,' 'உள்ளினேன்' எனவரும் சொற்களின், உட்பொருள்களை நோக்கின் தலைவியின் புலவிக்குக் காரணம் வெளிப்படும். அவளுடைய நுண் ணறிவின் திறமும் வியப்பிற்குரியதாம்.

ஊடல், கூடல், உவகை

புலவி, புலவி நுணுக்கங்களாய்க் காதலரின் ஊடல் உணர்வுகளை ஆழ்ந்து கண்டு உணர்த்திய வள்ளுவப் பெருந்தகை அவர்தம் பிணக்கம் பேரிணக்கத்தையும் உவகையையும் விளைத்தமை கூறிக் காமத்துப்பால் பகுதியைத் தலைக்கட்டுகிறார். ஊடலால் நேர்ந்த உவகையையும் அவ்வூடல் கூடலாய் அமைந்து தனி இன்பம் தந்தமையையும் இருவரும் உளமாரப் போற்றிப் பேசுகின்றனர்.

'இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.' *(1321)*

'தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து.' *(1325)*

இவ்விரு பாடல்களாலும் தவறிலராயினும் உடையார் போன்று ஊடு தலால் அவருடைய அன்பு முன்பினும் பெருகிக் காணப்படும் என்னும் உண்மை வெளிப்படுத்தப்படுகிறது.

ஊடல் பின்னர் மிகவும் இன்பம் தந்து இருவரையும் முன்னினும் நெருங்கிப் பிணைந்து கூடி மகிழ்ந்து திளைக்குமாறு செய்துவிடுகின்றது. ஊடலால் விளையும் அற்புதம் கூடல்,

'உணலினும் உண்ட தறலினிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.' (1326)

'ஊடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும்
கூடலிற் காணப் படும்.' (1327)

'ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.' (1328)

'ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.' (1330)

காதலரிருவர் கருத்தொருமித்து ஆதரவு பெருகக் கூடி இன்புற்று வாழ்தல்தானே மனையறப்பயன்? இல்லறம் சிறக்க இல்வாழ்வாரின் காதல் வாழ்வின் சிற்சில நிலைகளைத் தொட்டுக்காட்டிக் காதலரின் இன்ப வாழ்வினைத் திருவள்ளுவர் சிறப்பித்துரைக்கும் அற்புதம் நீடு நினைந்து இன்புறத்தக்கது.

3. ஆண் - பெண் சமத்துவம்

சமத்துவப் பேச்சு

'சமத்துவம்' என்பது எல்லாருக்கும் ஒத்த, ஏற்றத்தாழ்வற்ற, ஒரே சீரான உரிமைகளை உணர்த்துவதற்கு இப்பொழுது வழங்கப்படுகிறது.

'மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே'

என்று நம் தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் இசைக்குமாறு, 'சரி நிகர் சமானம்' என்பதுதான் சமத்துவம். பாரதியார் பாடும் இந்த 'விடுதலைப்பாட்'டில் ஆண்-பெண் சமத்துவம் வற்புறுத்தப்படுகிறது. நாட்டில் பெண்கள் அடிமைகளாய்க் கருதப்பட்ட முன்னைய நிலைமையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

வள்ளுவர் காலச் சமுதாயம்

இங்கே நாம் காணப்போவது தெய்வப் புலமைத் திருவள்ளுவர் காலத்துச் சமுதாய நிலை. எனவே, பண்டைக் காலச் சூழல், பண்டைய இலக்கியங்கள், பண்டைய வரலாற்றுச் சின்னங்கள், மரபுவழி வழக்காறுகள் முதலியவற்றையும் துணையாகக் கொண்டு திருவள்ளுவ தேவர் தந்த திருக்குறளில் ஆண்-பெண் சமத்துவ நிலையைச் சீர்தூக்கிக் காணல் பொருத்தமாம். ஆனால், அந்த அளவு விரிவாக நோக்குதற்கு உரிய ஆற்றலும் அவகாசமும் எனக்கு இல்லை. இயன்ற அளவு திருக்குறள் எல்லையிலேயே பெரும்பாலும் நின்று பார்க்க முற்படுகிறேன்.

'சமத்துவம்' என்ற சொல்லின் பிறப்பு

ஒத்த உரிமைபற்றிப் பேசும்போதே பேசப்படும் பொருள்களிடையே வேறுபட்ட தனித் தன்மைகளும் இருத்தல் புலப்படும். எல்லாம் ஒத்து இருந்தால் அப்பொழுது 'சமத்துவம்' என்ற பேச்சுக்கே இடமில்லை. பெரும்பான்மையும் பண்பு ஒத்து இருக்கின்ற இரு பொருள்களிடத்தில் தான் ஒற்றுமைக் கூறுகள் மிகுதியும் காணப்படும். இந்த 20-ஆம் நூற்றுண்டு உலகியல் வாழ்வில் நாடு, மக்கள், மொழி, இனம் முதலிய வேற்றுமை குறைந்து எல்லாருக்கும் ஒத்த உரிமையும், ஏற்றமிகு நல்

வாழ்வும் ஏற்பட வேண்டுமென்று சான்றோர் விரும்புகின்றனர். இத்தகு சீரிய நோக்கில் பொதுநலத்திற்குப் பாடுபட முன்வந்த பெரியார்களால் சமாதான சகவாழ்வு—அமைதியுடன் கூடி வாழ்வது—என்னும் எண்ணமும் எழுச்சியும் மக்களிடையே பரப்பப்பட்டபோது, 'சமத்துவம்' என்னும் சொல் பெருவழக்காயிற்று. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியில் இச்சொல் இடம் பெறாமையினால் இது மிக அண்மைக் காலத்தில் வழக்கிற்கு வந்ததென்பது தெளிவுறும். 1937-ஆம் ஆண்டு வெளிவந்த மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் இச் சொல் இடம் பெற்றுள்ளது. இதற்குச் 'சமநிலை, சமமான தத்துவம்' என்னும் பொருள் களை இவ்வகராதி தந்துள்ளது இதைப் பின்பற்றிப் பின்வந்த 'ஆனந்த விகடன் அகராதி' முதலியனவும் இச் சொல்லையும் பொருளையும் எடுத்தாண்டுள்ளன.

சமத்துவப் பொருளில் இலக்கிய வழக்காறுகள்

சமத்துவம் என்னும் பொருளில் 'சமநிலை' என்னும் சொல் வழக்காறு காலத்தால் முந்தியதே. தண்டியலங்காரத்திலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குப் பேராசிரியர் எழுதிய உரையிலும் இச்சொல் இடம் பெறுகிறது. சமநிலை, சமதை, சமம், நிகர், ஒப்பு முதலிய பல சொற்கள் இப்பொருள் தருவனவே.

திருவள்ளுவர் திருக்குறளிலே ஒக்க (490), ஒக்கின் (1100), ஒக்கும் (972, 1112), ஒத்தது (214), ஒத்தல் (993), ஒத்தாங்கு (561), ஒத்தி (1119), ஒப்ப (702), ஒப்பது (162, 536, 621), ஒப்பரி (413, 730), ஒப்பாரி (1071), ஒப்பு (800, 812, 993) என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன. ஒத்தநிலை—சமநிலை என்னும் பொருளில் 'சமன்' (118) என்னும் சொல்லும் திருக்குறளில் ஓரிடத்து வந்துள்ளது.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி' (118)

என்னும் இத்திருக்குறள் 'நடுவு நிலைமை' அதிகாரத்தின் எட்டாம் பாடலாக உள்ளது. நடுவு நிலைமையாவது "பகை, நொதுமல், நண்பு என்னும் மூன்று பகுதியிலும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை", ஆகும் என்பர். எல்லாருக்கும் ஒப்ப நிற்கும் சமநிலையை நடுவு நிலைமை அதிகாரத்தில் காண்கிறோம்.

வள்ளுவர் நூலின் பொதுமை

மக்கள் வாழ்க்கைக்கு வழி வகுத்துக் காட்டும் நூல்களுள் வள்ளுவர் தந்த பொதுமறை ஈடு இணையற்று விளங்கும் தனிப்பெரும் சிறப்புடையது என்பது அறிஞர் பலரும் ஒருமுகமாகக் கண்ட உண்மை.

'வையம் புகழ்ஞானி வள்ளுவன் மக்களெலாம்
உய்யும் படிமுப்பால் ஓதினன் - ஐயமின்றி
இம்மை மறுமை இரண்டுக்கும் நேர்வழியைச்
செம்மையிற் கண்டு தெளிந்து'

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை போற்றி உரைக்கிறார்.

இல்வாழ்க்கை சமநிலை காட்டும்

மக்கள்வாழ்வு என்பது ஆண் - பெண் கூடிப் புரியும் இல்லற வாழ்வின் அடிப்படையில் அமைவதல்லவா? நூலின் தொடக்கத்தே ஆடவரும் பெண்டிரும் நடத்தும் இல்வாழ்க்கையில் நூலைத் தொடங்குகிறார் வள்ளுவர் பெருந்தகை. கருத்தொருமித்த காதலர் வாழ்வின் இன்பத்தைக் காமத்துப்பாலில் விளங்க உரைத்து நூலை முடிக்கிறார். ஆணும் பெண்ணும் ஒத்திணங்கி வாழும் வாழ்வியல் கூறுவதனால் நூலின் முதன்மைப் பகுதி இருபாலாரின் சமத்துவ வாழ்வினை உணர்த்துவதாகும் என்று பொதுப்படையாகக் கூறலாம்.

ஆண் - பெண் ஒத்து இணைந்து புரியும் காதல் வாழ்வினை, 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை' (தொல். பொருள். களவு - 1) என்று போற்றுகிறார் இலக்கிய மரபுரைக்கும் தொல்காப்பியர். அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுள் வாழ்க்கைக்கு அடிப்படையாய்த் தலைமையிடம் பெறுவது பொருள். பொருளினால்தான் அறமும் போகமும் எய்த இயலும்.

'அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.' (குறள்: 754)

'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு' (குறள்: 760)

எனப் பொருளால் வரும் பயன்களை வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இது பற்றியே பிறிதோரிடத்து உவமை வாயிலாகவும் 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பதைத் திண்மையாய் வலியுறுத்துகிறார்.

பொருட்பாலின் போக்கு

பொருள் தேடும் முயற்சி ஆண்பாலர்க்கே உரியது; பொருள் வேண்டி நாடிடையிட்டும் காடிடையிட்டும் செல்வதோடு திரைகடலோடியும் சென்று வருபவன் அவனே. எனவே, இப் பொருட்பாலில் ஆண் - பெண் இருபாலாருக்கும் சமத்துவ நிலை காணலில், சில பொதுமைப் பண்புகளையே நாம் கவனிப்பது சாலும்.

கல்வி, கேள்வி, அறிவுடைமை, சுற்றந்தழால், குடிமை, மானம், நாணுடைமை, பண்புடைமை முதலிய பல பண்புகள் இருபாலார்க்கும் உரியவை. இத்தகு பொதுப்பண்புகளை வற்புறுத்துவதில் சமநிலைப் பண்பையே காண்கிறோம்.

இருபாலருக்கும் ஒத்த பண்புகள்

ஆண் பெண் இருபாலாருக்கும் உரிய ஒத்த பண்புகளை எடுத்துக் காட்டும்போது,

'பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டொடு
உருவு, நிறுத்த காம வாயில்,
நிறையே, அருளே, உணர்வொடு, திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே'
(தொல். பொருள். உவமை 25)

எனத் தொல்காப்பியர் எடுத்துக் காட்டுவர். இவற்றுள் 'ஆண்மை' என்பது இருபாலாருக்கும் சுட்டப்படுகிறது.

ஆணிற்கு ஆண்மை என்பது ஆள்வினையுடைமை, குடியாண்மை, இல்லாண்மைகளைக் குறிக்கும். பெண்ணிற்கும் குடியாண்மையும் இல்லாண்மையும் வேண்டுமன்றோ? இல்லத்தை ஆளும் திறம் அவளுடைய சிறப்புரிமை.

'நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்' (1026)

என வள்ளுவரும் இல்லாண்மைபற்றி எடுத்துரைக்கிறார்.

இல்வாழ்வில் இல்லாளின் முதன்மை

இல்வாழ்க்கையில், அவ்வாழ்க்கைக்குரிய மனைவியே முதன்மை இடம் பெறுகிறாள். இல் (45, 46, 47, 48, 49), இல்லாள் (59, 143, 145, 146), மனை (60, 148, 901, 1268), மனையாள் (904) என்னும் சொற்களைப் பெண்பாலார்க்கு வள்ளுவரும் சுட்டியுள்ளமையால் இது நன்கு விளங்கும்.

இல்வாழ்க்கை என்பது மாட்சியுடைய மனைவியுடன் கூடி வாழும் வாழ்வேயாகும். இல்வாழ்க்கையின் ஏற்றம்பற்றி உரைக்கும் இல்லறவியலின் முதல் அதிகாரத்தில் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரப் பெயரை ஐந்து குறள்களில் (5, 6, 7, 8, 9) வள்ளுவர் ஆண்டுள்ளதோடு நான்காம் குறளில் 'வாழ்க்கை' என்றே அடைமொழியின்றி இல்வாழ்க்கையைக் குறிப்பிடுகின்றார். இதனால் உலகில் வாழ்க்கை என்று ஏற்றம் பெறுவது இல்வாழ்க்கையே என்பது தெளிவாம்.

இல்வாழ்வின் முதலும் துணையும்

இல்வாழ்க்கையை விளக்க முற்படும் இல்லறவியலின் தொடக்க அதிகாரத்தின் முதற்குறளில் 'இல்வாழ்வான்' என இல்லத்தலைவன் சுட்டப்படுகிறான். அடுத்துவரும் இரண்டாம் அதிகாரம் வாழ்க்கைத் துணையாகிய மனையாளின் இயல்புரைப்பது. இவ்வாறாக ஆண்முதலும் பெண்துணையுமாகச் சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளனர்.

மனையாளின் மாண்புகள்

இல்வாழ்க்கை அதிகாரத்தைத் தொடங்கும்போது இல்லத் தலைவனைச் சுட்டி, 'இல்வாழ்வான்' என்று அவனுடைய கடமைகளை வற்புறுத்தியது போலவே, அடுத்து வாழ்க்கைத் துணைநலத்தில் மனையாளின் இயல்பும் கடமைகளும் இயம்பப்பட்டுள்ளன. எடுத்த எடுப்பிலேயே வள்ளுவர்,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்னும் பெயரால் குறிப்பிட்டு, அவளுடைய கடமைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த அதிகாரத்தின் இறுதிக்குறளில், 'மனைக்கு' விளக்கு மனையாள், அவளுக்கு அணிகலம்

நன்மக்கட்பேறு' என்று இல்வாழ்வார் பெறும் மக்கட்செல்வம் போற்றி உரைக்கப்படுகிறது. இவ்வாறாக ஆண் பெண் இருவரும் ஒரு பொருளின் முதல் சினைபோல இல்வாழ்க்கை என்னும் நல்வாழ்க்கைக்கு முதலும் துணையுமாக விளங்கும் தன்மை விளக்கமாகிறது. சினை முதலுள் அடங்கு குதல்போல வாழ்க்கைத் துணையாகிய பெண் ஆண்மகனின் வாழ்க்கைக்கு வலுவூட்டும் பின்னணித் துணையாகிறாள். இல்வாழ்க்கைச் சகடம் நன்னெறியில் செல்ல ஆணும் பெண்ணும் இருசக்கரங்கள்போல உள்ளனர் என்று கொள்ளலாம். எனினும் ஆண் முதன்மையாய்ப் பெண் அந்த ஆணினை அடுத்து வாழும் நிலைமையையே காண்கிறோம்.

வாழ்க்கைத் துணையாம் மனைவி தன்னைக் கொண்ட கணவனைப் பேணி, அவனுடைய புகழுக்குச் சிறிதும் குறைநேராதபடி இல்லக் கடமைகளை ஏற்றபடி செய்துவாழும் பொறுப்புடையவளாவள். கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றிக் கற்பு என்னும் திண்மை யுடையவளாய் அவள் திகழவேண்டும் என்று வள்ளுவர் திருமறை அறிவுறுத்துகிறது.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.' (54)

'தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.' (55)

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.' (56)

சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.' (57)

'பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு' (58)

எனவரும் குறள்மணிகள் மகளிர் கடமைகளை வற்புறுத்துகின்றன.

மனைவியும் மக்களும்

கற்புடைய மனைவியை, 'மனைக்கு விளக்காகிய வாணுதல்' என்று புகழ்ந்தனர் முன்னையோர் (புறம் 314)

'உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'

எனத் தொல்காப்பியரும் (களவியல். 23) கூறியுள்ளார்.

'மயக்குறும் மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே' (புறம் 188)

என மக்கட் பெறுதலை இல்வாழ்க்கையின் பெருநோக்கமாகக் கூறியுள்ளான் பாண்டியன் அறிவுடைநம்பி. வள்ளுவரும்,

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு' (குறள் 60)

என்றனர். இக்கருத்தினையே நான்மணிக்கடிகையில் விளம்பிநாகனும்

'மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்' (நான்மணி 101)

என்று சுட்டுகிறார். இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறுதல் என்னும் இல்லறவியலின்முதல் மூன்று அதிகாரங்களும் குடும்ப வாழ்வின் அமைப்பினை எடுத்துக்காட்டுவனவாகும். இதன்பின் வரும் அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல் முதலியவற்றில் இல்லறத்திலே ஆடவரும் பெண்டிரும் பெற்றிருக்கவேண்டிய நற்பண்பு களை உணர்த்துகின்றன. இவையெல்லாம் இருவருக்கும் உரிய பொது அறங்களாம்.

இல்லறப் பண்புகள்

மனைவிக்குரிய மாண்புகளாகத் தொல்காப்பியர்,

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்இயல் பொறையும், நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'

என்று கற்பியலில் எடுத்துக்காட்டியுள்ளார். இவற்றிற்கு விளக்கம் தரும்பொழுது நச்சினார்க்கினியர், கற்பாவது, 'கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத ஒழுக்கம்' என்றும், காமம் என்பது, 'அன்பு' என்றும், நற்பால் ஒழுக்கம் என்பது, 'எவ்வாற்றானும் தம் குலத் திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கம்' என்றும் கூறுவர். இவ்வகை யில்தான் திருக்குறளிலும் கற்பு, அன்புடைமை, விருந்தோம்பல் முதலி யவை இல்வாழ்வோரின் பொது அறமாகப் போற்றி உரைக்கப் பட்டுள்ளன.

கணவனுக்கு மனைவி கட்டுப்பட்டவள்

பெண்டிர்க்கு 'இல்லக்கிழத்தி' என்னும் முறையில் பலவகையான உரிமைகள் இருந்த போதிலும் அவர்கள் கணவனுக்குரியவான உடைமைப் பொருள்களுள் ஒன்றாகவே முற்காலத்தில் கருதப்பட்டு வந்தனர். வள்ளுவர் பிறனில் விழையாமைபற்றி உரைத்த அதிகாரத்தில் மனைவியைப் பிறன் ஒருவனுக்குப் பொருள் போல் உரிமை யுடையவள் என்று குறிப்பிடுதல் காணலாம்.

'பிறன் பொருளாள்' (141), 'பிறனியலாள்' (147), 'பிறர்க் குரியாள்' (149), 'பிறன்வரையாள்' (150) என்னும் குறள் மொழிகள் நோக்கத்தக்கன.

மக்கட் பேற்றின் பொதுமை

'மக்கட்பேறு' என்பது ஆண்-பெண் வேற்றுமையின்றிப் பொதுப் படையாகவே காணப்படுகிறது.

'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.' (61)

'தம்பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்
தம்தம் வினையான் வரும்.' (62)

'குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்.' (63)

என்றாற்போல மக்கள் என்று குறிப்பிடப் பெற்ற குறள்களில் ஆண்-பெண் வேற்றுமை சுட்டப்படவில்லை. புதல்வரைப் பெறுதல் அதிகாரத்தில் மகனைப் பெற்ற தந்தைகடன் அவனை அவையத்து முந்தியிருப்பச் செய்வதாகும் என்றும் (67) மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேட்டபொழுது தாய் பெரிதும் மகிழ்வள் (69) என்றும் திருக்குறள் குறிப்பிடுகிறது.

'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது' (68)

என்னுமிடத்தில் அறிவுடைமையில் பாகுபாடு காணப்படவில்லை. கல்வி, கேள்வி, அறிவுடைமை முதலியவைபற்றிய தனி அதிகாரங்களிலும் பொதுமையே காணப்படுகிறது. சிறப்பு நிலையில் மகனை அவையத்து முந்தியிருப்பச் செயல் தந்தைகடன் என்ற போதிலும் 'கல்வி'யை இருபாலருக்கும் பொதுவாகவே குறள் கூறுகிறது.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.' (392)

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.' (396)

என்பன பொதுவாக மக்களுக்குக் கல்வி வேண்டும் என்பதனை வற்புறுத்தி யுரைப்பன.

'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.' (397)

'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.' (34)

என்றாற்போலக் கல்வி அறம் முதலியன ஆண்பால் மேற்றாகக் கூறப்பட்டன என எண்ணுவதற்கு இல்லை. பொதுவான செய்திகளை ஆண்பால்மேல் வைத்துச் சொல்வது மரபு.

'ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்,
வருவகை தானே வழக்கென மொழிப.'
(பொருளியல். 28)

எனத் தொல்காப்பியர் இம்மரபினை எடுத்துக்காட்டுதல் நோக்கத் தக்கது.

பரிமேலழகர் காலத்துக் கருத்து

திருக்குறளுக்குப் பெருவிளக்கம் தந்த பரிமேலழகர் 'மக்கள்' என்ப் பொதுமையாக வரும் இடங்களிலும் அச்சொல் ஆண்பாலரைச் சுட்டிய தாகவே கருதுகின்றார். இவர், 'நன்மக்கட்பேறு' (60) என்பதற்கு 'நல்ல புதல்வரைப் பெறுதல்' என்று உரை தருகிறார். 'அறிவறிந்த மக்கட் பேறு (61) என்ற இடத்து 'அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய மக்கள் என்று உரை எழுதி, 'அறிவறிந்த என்றதனால் மக்கள்

என்னும் பெயர் பெண்ணொழிந்து நின்றது' என்று இவர் விளக்கம் தருகிறார். மேலும், 'கேட்ட தாய்' (69) என்பதற்கு 'அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய்' என்று பொருள் செய்தவர், 'பெண் இயல்பால் தானாக அறிய மாட்டாமையின் கேட்ட தாய்' எனக் கூறினார் என்று விளக்கவுரையில் குறிப்பிடுகிறார். இத்தகு விளக்கங்கள் ஆண்-பெண் சமத்துவம் இன்மை ஊறிப்போன சமுதாய நிலையினை ஒட்டி எழுந்தன என்று கருதலே தக்கதாம். அன்றி ஆசிரியர் திருவள்ளுவரின் திருவுள்ளம் என இவற்றைக் கருதுவதற்கில்லை.

காமத்துப்பாலில் ஒத்தநிலை

ஆண், பெண் இருவரும் வள்ளுவர் கருத்தில் சமமான பங்குடையவர் என்பதைக் காமத்துப் பாலில் பரக்கக் காணலாம். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்தும் ஒன்றனுள் ஒன்று அடங்காத தனித்தனி உரிப்பொருள்களாம். இவற்றுள் ஊடல் ஒழிந்த நான்கும் களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளுக்கும் பொது என்று கொள்ளவேண்டும். தமிழரின் இன்பவாழ்க்கை களவு-கற்பு என்றே பிரிக்கப்பட்டு இருந்தமையைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் களவியல் கற்பியல் என்னும் இரண்டு இயல்களிலும் விரிவாகக் கூறியுள்ளார். திருக்குறளிலே காமத்துப்பாலும் களவியல் (அதி. 119-115), கற்பியல் (அதி. 116-133) என்று இருபெரும் பகுப்பாகவே உள்ளது.

காமத்துப்பாலின் முதல் இரண்டு அதிகாரங்களைக் கூர்ந்து நோக்கின் தலைவன் தலைவிமாட்டு எவ்வளவு உயர்ந்த நோக்க முடையவன் என்பதைக் கண்டுகொள்ளலாம். புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல், காதற்சிறப்புரைத்தல் அதிகாரங்களிலும் தலைவியின் அழகினையும் நலத்தினையும் சிறப்பினையும் எடுத்துரைக்கும் பாங்கில் தலைவன் தலைவியிடம் கொண்டுள்ள பெருவிருப்பும் மதிப்பும் புலனாகும்.

தலைவன் தலைவியர் நேயம்

காதற்சிறப்புரைத்தல் அதிகாரத்தில் இருவர்தம் அன்பின் ஒத்தநிலை நன்கு புலனாகிறது. இந்த அதிகாரத்தின் முதல் ஐந்து பாடல்கள் தலைமகன் கூற்றாகவும் பின் ஐந்து பாடல்கள் தலைமகள் கூற்றாகவும் அமைத்துள்ளன.

'உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு' (1122)

'வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை, சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து' (1124)

என்னும் தலைவன் கூற்றுகள் அவன் அவளை உயிருக்குயிராகக் கருதினான் என்பதனை எடுத்துக்காட்டுவன. இவ்வாறே,

'கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்' (1126)

'உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்' (1130)

என்னும் தலைவி கூற்றுகள் தலைவி தலைமகனைக் கண்ணுக்குக் கண்ணாகத் தம் நெஞ்சம் நிறைந்தவராகக் கொண்டு போற்றியமையைப் புலப் படுத்தும்.

சங்கநூல் முதலியவற்றுள் சமநிலை

ஆண்பெண் சமத்துவ உறவினைச் சங்க நூல்கள் முதலாக எல்லா நூல்களிலும் புலவர் பெருமக்கள் எடுத்துரைத்துள்ளனர்.

'உயிர்க்கு உயிர் அன்னர்' (குறுந். 218)
'உயிர் கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மை (ஐங். 419)

'ஓர் உயிர்ப்புள்ளின் இருதலையுள் ஒன்று
போர் எதிர்ந்தற்றுப் புலவல்' (கலித். 89)

'வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறுந் 135)

என்பன சங்கச் சான்றோர் வாக்குகள். வள்ளுவர் முதலிய முன்னையோர் கருத்தினை அடியொற்றிக் கம்பரும் இராமனும் சீதையும் ஒருவரை யொருவர் கண்டு காதல் கொண்ட நிலையை விளக்கும்போது,

'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்' (பால் மிதிலக் 37)

என்றும்,

'மருங்குஇலா நங்கையும் வசைஇல் ஐயனும்
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர்ஒன்று ஆயினர்'
(பால் மிதிலக் 38)

என்றும் இருவர்தம் ஒட்டுறவினை எடுத்துரைக்கின்றார். எனவே, தலைவன் தலைவியர் இருவரும் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர் என்பது பெறப்படும். பல பிறவிகளிலும் தொடர்ந்து வந்த உழுவலன் பால் ஏற்பட்ட தொடர்பாதலின் வாழ்நாள் முழுவதும் தொடரும் நட்பு ஆண்-பெண் கூட்டுவாழ்வு என்பது பெறப்படும்.

கற்பியல் குறள்களில் சமநோக்கு

கற்பியல் குறள்களும் கணவன்-மனைவியர் சம நோக்கினைக் காட்டு வனவாகவே உள்ளன. குறிப்பறிவுறுத்தல் என்னும் அதிகாரம் தலை மகன், தலைமகள், தோழி என்னும் மூவரும் ஒருவர் குறிப்பை ஒருவருக் குச் சொல்லுவதாக அமைந்துள்ளது. இக்குறள்களைக் கூர்ந்து நோக்கு மிடத்துத் தலைவன் தலைவரிடையே உயர்வு தாழ்வு இல்லாமையைக் காணலாம். ஆயினும் நினைந்தவர் புலம்பல், கனவுநிலை உரைத்தல், நெஞ்சொடு கிளத்தல், அவர்வயின் விதும்பல் முதலிய சில அதிகாரங் களில் தலைவியின் மெலிவும் தலைவனின் உயர்வும் காணக்கூடும். ஆயினும் அவையெல்லாம் இன்பச்சுவை கருதிக் கூறப்புட்டன என்று கருதலாம்.

'மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்' (1289

என்றபடி இன்பத்தின் மென்மை இயல்பு அறிந்து ஆண் பெண் சமத்துவ உரிமையைப் போற்றுவார் அரியரே.

'ஆணும் பெண்ணும் நிகாரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி, இவ்வையம் தழைக்குமாம்;
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்!' (புதுமைப்பெண்-5)

என்று பாரதியாரின் புதுமைப்பெண் எடுத்துரைக்குமாறு பெண்ணின் பெருமையறிந்து ஆண்-பெண் சமத்துவம் போற்றுதல் நம் கடமை. வள்ளுவர் தந்த திருமறை நம் வாழ்வுக்கு வழிகாட்டி.

'வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயர்நிலையை,
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே.'

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

4. கூற்று வகை

தலைவன் கூற்று

அகப்பொருள் இலக்கியங்களிலே கூற்றுநிகழ்த்துவோருள் முதன்மை யானவர் தலைவனும் தலைவியுமே. திருக்குறளிலே காமத்துப்பாலை உரைகாரராகிய காளிங்கர் பகுத்த முறையில் பார்த்தால் முதல் ஏழு அதிகாரங்கள் ஆண்பாற் கூற்றும் என்பது தெரியவரும். உரைகாரர் எல்லாருடைய நோக்கிலும் பார்த்தாலும் இவற்றுள் முதல் நான்கு அதிகாரங்கள் தலைவனின் தனித்த பேச்சுரைகளே என்பது தெளிவாம்.

தலைவனின் தனித்த பேச்சுரைகள்

தகையணங்குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல் என்னும் முதல் நான்கு அதிகாரங்களிலும் பேசுவோன் தலைவனாகவே அமைகிறான். குறிப்பறிதலில் இருபாடல்களைத் (1099, 1100) தோழி கூற்றெனப் பரிமேலழகர் கொண்டு காட்டினும் அவற்றை யும் தலைமகன் பேச்சு எனவே மிகவும் பொருத்தமாம். இவற்றுள் சில, தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறினும் பெரும்பகுதி தலைவியை நோக்கியே அமைந்தது என்பது விளங்கக் காணலாம் எனவே, இங்குத் தலைவனுடைய உரையைக் கேட்டார் தலைவியேயாம்.

காதற் சிறப்புரைத்தல், நாணுத் துறவுரைத்தல், அலரறிவுறுத்தல் ஆகியவற்றுள் தலைவனுடைய பேச்சு மிகுதியாயும் தலைவியின் உரை குறைவாயும் கொண்டு பரிமேலழகர் கருத்து விளக்கம் தருகின்றார். இங்கே பரிமேலழகர் தலைவி கூற்றாய்க் காட்டுவன சிலவற்றைக் காளிங் கர் ஆண்பாற் கூற்றாயும் ஒரு சிலவற்றைப் பாங்கன் உரையாகவும் பகுத்து உரைப்பர். எனினும் இப்பகுதியில் பரிமேலழகர் தரும் உரை விளக்கமே நயமாயுள்ளது.

பெண்பாற் கூற்று

தலைவி கூற்று

பெண்பாற் கூற்றாக அமைந்தவை 'பிரிவாற்றாமை' தொடக்கமாக 'புணர்ச்சி விதும்பல்' ஈறாக உள்ள பன்னிரண்டு அதிகாரங்கள். இங்கே பெண்பால் என்றது வாழ்வுக்குத் துணையாகிய தலைவியேயாம்.

நினைந்தவர் புலம்பலில் இரண்டும் (1201, 1202), உறுப்பு நலன் அழிதலில் மூன்றும் (1238—1140), அவர்வயின் விதும்பலில் மூன்றும்

(1268—1270) பாடல்களைத் தலைமகன் கூற்றாகவும் பரிமேலழகர் காட்டு வர். மேலும், தோழி கூற்றாகவும் உறுப்புநலன் அழிதலில் ஐந்து பாடல்களை (1231—1235). இவர் கொள்ளுவர். 'அவர்வயின் விதும் பல்' என்பதில் அவர் எனப் பொதுவாக வந்தமையின் தலைவன் தலைவி இருவரும் கொள்ளத்தக்கார் என்பது அவர் கருத்து. உறுப்பு நலன் அழிதல் என்பது தலைவியின் உடலுறுப்புகள் தலைவனுடைய பிரிவினால் அழகு கெட்டு வேறுபடுதலேயாம். இதனைத் தலைவன், தலைவி, தோழி என்னும் மூவர் வாக்காகவும் கொண்டு பரிமேலழகர் குறட்பாக்களைப் பாகுபடுத்தி விளக்கம் தருகிறார்.

பிரிவாற்றாமையில் ஒரு பாடலில் தோழியையும் (1151), நினைந்த வர் புலம்பலில் இருபாடல்களில் (1201—1202) தலைவனையும் பரிமேலழகர் நடையாடவிட்டதும் தலைமகள் கூற்று என்றே கொள்ளத் தக்கன. தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் அவர்கள் இவ்வதிகாரங்கள் முழுமையும் தலைவிக்குரியதாகவே கொண்டு விளக்கம் தருவர். இவர் தம் கருத்துரைகள் பொருத்தமாகவே உள்ளன.

எனவே, பிரிவாற்றாமை தொடக்கமாகப் பொழுது கண்டு இரங்கல் வரையில் உள்ளன எல்லாம் தலைமகள் கூற்றே. மற்றும், நெஞ்சொடு புலத்தல், நிறையழிதல், அவர்வயின் விதும்பல் என்னும் மூன்றும் தலை மகள் கூற்றேயாம்.

காமத்துப் பாலின் பிற்பகுதி 6 அதிகாரங்களையும் இருபாற் கூற்றுகள் என்பர் காளிங்கர். பரிமேலழகர் முதலாயினாரும் அவற்றைத் தலைவன், தலைவி, தோழி கூற்றாகப் பாகுபடுத்திக் கூறுகின்றனர். ஆதலின், இப்பகுதியைப் பொறுத்தவரையில் உரைகாரர் எல்லாருடைய கருத்தும் ஒத்த நிலையினவே என்பது தெளிவு.

தோழி கூற்று

கூற்று நிகழ்த்துவோருள் தலைவிக்கு அடுத்தபடியாய்த் தோழியைக் கருதலாம். தலைவியுடன் நெருங்கிப் பழகும் தன்மையாலும் களவு ஒழுக் கத்தில் இவளுடைய துணை தலைவன்-தலைவியர்க்குப் பெரிதும் வேண்டப்படுதலாலும், களவுப் பகுதியில் பெரும்பகுதி இவளும் இடம் பெறுகின்றாள். அன்றியும் கற்பு வாழ்விலும் இவள் துணை நிற்றலாலும் தலைவிக்கு அடுத்த நிலையைத் தோழி பெறுதல் இயல்பே.

தலைவனுக்கு உற்ற நண்பனாகிய பாங்கனோ களவுப் பகுதியில் ஓரிடத்தில் வந்து தலைகாட்டுகிறான். ஏனைய செவிலி, நற்றாய், பாணன் முதலியோர் காதலர் வாழ்வில் இடையிடையே ஒரு சில இடங்களில் வந்து போகின்றவராவர். எனவே, கூற்றுவகைப் போக்குகளைக் கருதினால் தலைவன், தலைவி, தோழி என்னும் மூவர் பேச்சுகளே முதன்மை பெறும்.

திருவள்ளுவப் பெருந்தகையும் தம் தனிப்படைப்பாகிய காமத்துப் பாலுள் தலைவன், தலைவி, தோழி ஆகியோரையே எடுத்துக் கொண் டுள்ளார். இவருள் தோழி கூற்றாகப் பரிமேலழகர் கண் கொண்டு பார்ப்போமாயின் 12 பாடல்களே காமத்துப் பாலுள் காணப்படும்.[1]

1 1099—1100, 1151, 1231—1235, 1278, 1288, 1301, 1302.

குறிப்பறியும் தோழி

குறிப்பறிதலில் வரும்,

'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.' (குறள். 1099)

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல'

என்னும் இரு பாடல்களுக்கும், 'தோழி மதியுடம் படுவாள் தன்னுள்ளே சொல்லியது' என்று பரிமேலழகர் கருத்துத் தெரிவித்துள்ளார்.[1] இப் பாடல்களின் உட்பொதி பொருளை ஊன்றிப் பார்த்தால், காதலன் காதலியரின் உணர்வுகளை எட்டி நின்று கவனித்த ஒருவருடைய பேச்சாகவே காணப்படுதல் புலனாகும்.

'காதலார்' என்றும், 'நோக்குதல் உள' என்றும் பன்மை வாசகத்தால் பேசுதலினாலே காதலார் இருவர் என்பதும் நோக்குதல் குறிப்பு வேறுபாடுகள் பலவாகக் காணப்படுகின்றன என்பதும் விளங்கும். இவ்வாறே 'கண்ணொடு கண்ணிணை' என்றும் 'வாய்ச் சொற்கள்' என்றும் அடுத்த பாடலிலும் பேசுகின்றார். ஒப்ப நோக்கி உள்ளப் பிணைப்புறுவதற்கு இணைந்தார் இருவருடைய கண்கள் சந்திப்பது இயல்பே. கண்கள் கலந்து பேசிய குறிப்பினால் இருவருடைய ஈடுபாடும் வெளிப்படுகிறது.

தொல்காப்பியத்தில் களவியலில்,

'நாட்டம் இரண்டும் அறிவு உடம்ப டுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்'

எனத் தொல்காப்பியர், 'கண்களே காதலர்க்குள் உடம்பாடு கொள்ளச் செய்வன என்பதனைச் சுட்டியுள்ளார். காதலர் கண்களின் பேச்சு அவர்களுடைய உள்ளத் தொருமையுணர்வுகளை வெளிப்படுத்தும் பான்மையது ஆகும்.

'ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்
நரந்தங் கண்ணி யிவனொடு இவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் நாணுவர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுப கண்ணி னானே'

என்னும் பாடல் காதலர் கண்களின் நோக்கக் குறிப்பை கண்டுணர்ந்த தோழியின் கூற்றாக அமைந்துள்ளது. அக் காதலரின் மன மகிழ்ச்சி மது

---

1 இவ்விரு பாடல்களையும் தலைவன் தன் நெஞ்சை விளித்துக் கூறியதாகவே கொண்டு பொருள் விளக்கம் செய்துள்ளார் காளிங்கர். இவருடைய கருத்துப்படி இவை தலைமகன் கூற்றேயாம். தலைவன் காதலியின் நோக்கு நிலை கண்டு அதன் இனிமைக் கூற்றினை எடுத்து மொழிவதாய் உள்ளது. நோக்கு ஒத்ததோடு அவளுடைய வாய்ச் சொற்களைக் கேட்டுள்ள குறிப்பும் அவை பற்றிப் பேசப்படுவதனால் தெளிவாகும். இங்ஙனமாகக் காளிங்கர் நோக்குப் படி இவ்விரு பாடல்களும் தோழி கூற்று ஆகாமை காணலாம்.

மறைந்து உண்டவர் மகிழ்ச்சி போல உள்ளது என்கிறான். கள்ளோ உண்டார்க்குத்தான் களிப்புத் தரும்; காதலர் நோக்கு அப்படியன்று. ஒருவரையொருவர் கண்டாலே போதும். அவர்கள் ஒருவரை ஒருவர் உள்ளத்துக் கொண்டு எண்ணுகின்ற எண்ணமே பெருமகிழ்வு செய்யும். காதலரோ ஒருவரை ஒருவர் கண்ணால் கண்டு கண்டு உளக் குறிப்பைப் பரிமாறிக் கொள்கின்றனர். இக் காதல் நுட்பத்தையும் கணக்கிட்டறிந்தவர் வள்ளுவர்.

'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு'

என்பது அவர்தம் அனுபவ வாக்கு

காதலரிடத்து ஒத்த அன்புளது என்பதனைத் தோழி பல்வேறு சூழல்களிலும் குறிப்பினால் நுணுகி ஆராய்ந்து காண்பவளாவள். காதலன்-காதலியரின் உளக் குறிப்பை உற்று ஓர்ந்து ஆராய்தலினால், தோழியின் ஆய்வினை 'மதியுடம்பாடு' என்று தொல்காப்பியமும் பிற கோவை நூல்கள் முதலியனவும் கூறும்.

தலைவன்-தலைவி என்னும் இருவர்தம் கண்களும் ஒத்துவிடின் வாய்விட்டுத் தம் காதலை ஒருவர்க்கொருவர் சொல்ல வேண்டுமோ? அகத்து நிகழ் வேட்கையினைக் கண்ணால் அறியக் கிடந்த பாங்கினைக் குறிஞ்சிக் கலியுள் கபிலர் சித்திரித்துள்ள திறமும் கண்டு ஒப்பு நோக்கி உணரத்தகும்.

'கயமல ருண்கண்ணாய் காணாய் ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன் வில்லன் வரும்என்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுதல் அல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயரும் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந் தவன்வயிற்
சேயன்மன் யானும் துயருழப்பேன்'

(கலித்தொகை 37:1-7)

இங்கே தலைவியின் உள்ள ஒருமைப்பாட்டைத் தோழி பொய்யினும், மெய்யினும் பல்வேறு கவர் பொருளால் நாடுகின்ற திறம் சித்திரிக்கப்பட்டுள்ளமை காணலாம்.

பிரிவுபற்றித் தோழி

கற்பியலின் முதலில் வைத்துப் பேசப்படுகிறது 'பிரிவு ஆற்றாமை.' காதலன் பிரிந்து செல்கின்றான் என்பதனை அறியும்போது காதலியின் உள்ளம் அதற்கு இசையுமோ? எனவே, பிரிவு என்னும் உணர்வு அவளுடைய உள்ளத்தை வருத்தவே அவள் பலபடப் பேசுகிறாள். பிரிவாற்றாமை முற்றுமே தலைவியின் கூற்றாகவே அமைத்திருக்கின்றார் ஆசிரியர் திருவள்ளுவர். இவ்வாறாகவும் பிரிவாற்றாமை அதிகாரத்தின் முதற் பாட்டாக வரும்,

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை' (குறள், 1151)

என்பதனைப் பரிமேலழகர் தோழி கூற்றாகக் கொண்டு அதற்குப் பாட்டில் பொருத்தமும் காண முற்பட்டுள்ளார்.

'பிரிந்து கடிதின் வருவல் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது' என இப்பாடல் பிறந்த காலமும் களமும் கணித்துக் காண்கிறார் பரிமேலழகர். இதற்கு அவர் தரும் விளக்கக் குறிப்பில் பின்வருமாறு எழுதுகின்றார்.

> 'தலைமகளை யொழித்து "எனக்கு" என்றாள், "தான் அவள்" என்னும் வேற்றுமை இன்மையின். அக்காலமெல்லாம் ஆற்றியிருந்து அவ் வரவு காண வல்லவள் அல்லள். பிரிந்தபொழுதே இறந்துபடும் என்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றாக்கி உரைப்பாருமுளர்.'

இங்கே தலைமகள் கூற்றாகப் பொருள்கோடல் இயற்கையாகத் தோன்றுகிறது; அது முந்திய மரபாகவும் காணப்படுகிறது. ஆயினும், அதனை விடுத்துத் தம் மதி நலத்தால் தோழிக்கு ஆக்கி உரைக்கிறார் பரிமேலழகர். ஏனைய பாடல்கள் ஒன்பதும் தலைமகள் கூற்றாகவே இதனையும் தலைமகள் கூற்று என்றலே ஆசிரியரின் உள்ளக் கிடக்கை என்பது எளிதில் உணரலாகும். இங்கே பரிமேலழகர் உரைக்கும் பொருள் வலிந்து கொள்ளும் பொருளேயாம். தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம்பூரணர் இக் குறட்பாவினைப் பிரிவுணர்த்திய தோழியை நோக்கித் தலைமகள் கூறியதற்கு மேற்கோளாக எடுத்தாண்டுள்ளமையும் (தொல்.பொருள். 45) கருதற்பாற்று.

தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கம் அவர்களும் இந் நேரிய பொருளையே உடன்பட்டு உரைத்துள்ளார். அவர்கள் தரும் விளக்கம் பின்வருமாறு:

> 'பிரிவாற்றாமை அதிகாரத்தின் பத்துக் குறள்களையும் தலைவி கூற்றாகவே வள்ளுவர் வகுத்திருக்கின்றார். பிரிந்து செல்வோன் தலைவனாகலின் அவனைத் தடை செய்யும் முறையில் தலைவியின் ஆற்றாமையைத் தலைவி கூறுவது பொருந்தும் என்பது ஆசிரியர் கருத்து. பிரிவாற்றாமை பத்துப் பாக்களில் முதற் செய்யுள் பிரிவு கூறிய காதலனைப் பார்த்துக் காதலி தன் உள்ளக் கிடக்கை முற்றும் தோன்ற நேராகச் சொல்லிய முறையில் ஆக்கப்பட்டிருக்கிறது. இப்பாட்டுப் பலராலும் அடிக்கடி எடுத்தாளப்படுவதொன்று. இதனைத் தோழி கூற்றாக ஆக்கி வலிந்து பொருள் கொள்கின்றார் உரையாசிரியர் பரிமேலழகர். இது தலைவி கூற்று என்பதே என் கருத்து.'
>
> (வள்ளுவர் தந்த இன்பம், பக், 54-55)

காதலரைப் பிரிந்த மாலைப்பொழுது

தலைவன் பிரிந்த காலத்துத் தலைவி பிரிவுத் துயரால் வாடுதல் இயல்பே. அதிலும் அந்நிலையில் தோன்றும் மாலைப்பொழுது தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிருக்கு மிகவும் துன்பம் விளைத்தல் ஒருதலை. இப் பிரிவுத் துன்பம் காரணமாகத் தலைவியினுடைய கண், தோள்

முதலிய உறுப்புகள் மெலிகின்றன. இது குறித்துத் தோழி பேசுவன வாக 'உறுப்புநலனழிதலி்' முதல் ஐந்து பாடல்கள் அமைந்துள்ளன.[1] அவை வருமாறு:

'சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.' (குறள். 1231)

'நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண்.' (குறள். 1232)

'தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.' (குறள். 1233)

'பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.' (குறள். 1234)

'கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.' (குறள். 1235)

பிரிந்து நெடுந்தொலை சென்றவராகிய தலைவனுடைய நினைவால் தலைவியினது கண்களும் தோள்களும் வாடியமையைத் தோழி நயமுற எடுத்துரைக்கின்றாள். கண்ணும் தோளும் வாடிப் பிரிந்து சென்ற தலைவரின் பிரிவுக் கொடுமையைப் பறை சாற்றுகின்றன என்று தோழி சுட்டிக் காட்டுகின்றாள். தோழியின் பார்வைக்கு முதலில் கண்ணும் அடுத்துத் தோளும் இலக்கானமைபற்றி முதற்கண் கண்ணின் தோற்றத்தையும் அடுத்துத் தோள்களின் மெலிவையும் அவள் கூறு வதன் பொருத்தம் நோக்கத்தகும்.

'சேட் சென்றார்', 'தணந்தமை' என்னும் சொற்கள் தலைவன் தலைவி யைப் பிரிந்து நீண்ட தூரம் சென்றுள்ளான் என்பதனைக் குறிப்பிடு கின்றன.

தலைவனுடைய பிரிவுச் செய்தியைக் குறிப்பால் உணர்ந்த தலைவியும் தலைவன் தான் பிரியு முன்னர்ச் செய்த தலையளியையும், மற்றும் தன் வளை கழலுமாறும் மேனி பசக்குமாறும் கூறிப் பிரிவால் நேர்ந்துள்ள வேறுபாடுகளையும் அறுதியிட்டுரைக்கின்றாள். இதனை நன்கு உணர்ந்த தோழி, தலைவி செய்த குறிப்புத் தலைவனுடன் போதல் விருப்பினைப் புலப்படுத்துவதாயும், தோள் மேலுள்ள வளையையும் மெல்லிய தோளை யும் அவள் பார்த்த குறிப்புப் பிரிவால் அவள் மேனி வாடும் என்பதனை உணர்த்தியபடியாயும் தோழி அறிகிறாள். மற்றும் தலைவனோடு உடன் போய் வாழ்தலே தன் உள்ளக் கிடக்கை என்பதனைத் தலைவி தன் காலைப் பார்த்த பார்வையாலும் தெளிவுபடுகிறது. எனவே அத்தோழி தலைவனை நோக்கி,

''தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள் செய்தது'' (குறள். 1279)

எனக் கூறுதலால் தெளிவுபடும். இப் பாடலுக்குத் 'தலைமகள் குறிப்பு அறிந்த தோழி அதனைத் தலைமகற்கு அறிவித்தது' என்று பரிமேலழகர்

---

1 இவற்றைத் தலைவிக்கு ஏற்குமாறும் காளிங்கர் கட்டுரைக்கின்றார்.

தரும் குறிப்பே இப்பாடலின் பாடலின் பொருளை நாம் நன்கு உணரத் துணைபுரிகிறது. தலைவியின் செயல்களை அடுத்திருந்து அறிவாள் தோழியே யாதலின் அவள் வாயிலாகத் தலைவியின் குறிப்பு வெளிப் படுத்தப்படுதல் பொருத்தமாகும்.

தலைவன் பிரிந்து மீண்டு வருங்கால் ஒருவரை ஒருவர் உடன் கூடுவ தற்கு விரைதல் இயல்பேயாகும். தலைமகளின் புணர்ச்சி விருப்ப வேகத் தினை அறிந்த தோழி தலைமகனுக்கு அதனைக் குறிப்பால் உணர்த்துவ தாகப் புணர்ச்சி விதும்பலில் ஒரு குறட்பா உள்ளது. அது வருமாறு:

> 'இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
> கள்ளற்றே கள்வநின் மார்பு.' (குறள் 1288)

இதற்குப் பரிமேலழகர், 'தலைமகள் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி தலை மகற்குச் சொல்லியது' என்று கருத்துரைக்கின்றார். தலைவனுடைய மார்பை முயங்குதற்குத் தலைவனது பிரிவு துன்பம் முதலியன விளைப் பினும் மேன்மேலும் அதனை அத்தலைவி விரும்புகிறாள். இஃது உலகியல். இத்தகைய பெருவிருப்பினைத் தோற்றுவிக்கும் முயக்கத்திற்குரிய தலைவ னுடைய மார்பினைக் கள்ளிற்கு ஒப்பிட்டுக் கூறுகிறாள் தோழி. கள் உண்டு களிப்பார் மேன்மேலும் அதனையே விரும்புமாறு போலத் தலைவி யும் அத்தலைவனுடன் கூடி அவனுடைய மார்பினை முயங்குவதற்கு மேன்மேலும் விரும்பி விரைகின்றாள் என்பதாம். இதனால் பிரிந்தவர் கூடி மகிழ்தல் என்பது தோழி வாயிலாகவும் புலப்படுத்தப்படுகிறது.

தலைவன்-தலைவியரிடை நேரும் சிறுபிணக்கால் இருவருக்கும் சில சமயம் கூட்டமின்மையும் நேரும். இப்பிணக்கே புலவி எனப்படும் புலவியைத் தீர்த்து வைக்கத் தலைவனின் தூதாய்த் தோழி வந்து தலைவி யுடன் உரையாடுவதும் உண்டு. அவ்வாறு புலவி நீக்கவந்து உரை யாடும் தோழி புலவியின் இயல்பினையும் தலைமகனோடு புலப்பது எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதனையும் எடுத்துரைப்பாள்.

> 'புல்லா திராஅப் புலத்தை அவருறும்
> அல்லல்நோய் காண்கம் சிறிது.' (குறள் 1301)

> 'உப்பமைந் தற்றால் புலவி யதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்' (குறள் 1302)

எனப் புலவி அதிகாரத்துள் அமைந்த முதலிரு பாடல்களும் தோழியின் பேச்சாக உள்ளன.

புலவி நீக்கவந்த தோழியே தலைவியிடம், 'நீ தலைவரைக் கூடா திருந்து சிறிது நேரம் புலப்பாயாக. அந்நேரம் அவர் உறும் துயரநிலை யைச் சிறிதுகாண்போம்' என்கின்றாள். நீண்ட நேரம் புலத்தல் முறை யன்று என்பதாம். அதனையே அடுத்த பாடலில் உணவிற்கு உப்புப் போன்றது காதலர் புலவி; எனவே, அப்புலவி அளவோடு அமைதலே தக்கது' என்கிறார். உப்பு மிக்க வழிச் சுவை கெடுமாறு போலப் புலவி மிக்க இடத்துக் காதலர் சேர்க்கை இன்பம் பயவாது என்றும் குறிப்பிக் கின்றாள்.

இவ்விருபாடல்களின் உட்கருத்துகளைப் பரிமேலழகர் பின்வருமாறு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்;

'வாயிலாகச் சென்றதோழி தலைமகள் வாயில்நேர்
தற்பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது'

என்பது முதற்பாடலின் குறிப்பு. இரண்டாம் பாடல்,

'புலவியொழிந்து வாயில் நேரும்வகை அவள்
சொல்லியது'

என்பதாம்.

களவுக் காலத்துத் தலைவன்-தலையரிடையே நின்று அவர்தம் கூட்டத்திற்குத் துணைபுரிந்த தோழியே கற்புக் காலத்திலும் அவர் வாழ்க்கை வளம் பெற உதவுகிறாள். தோழியின் பங்கு புலவி போன்ற ஓரிரு நிகழ்ச்சிகளிலன்றிப் பிற இடங்களில் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, தோழி கூற்று அகப்பொருள் இலக்கியங்களில் குறைவாக இருப்பது இயல்பேயாகும்.

5. மெய்ப்பாட்டு இயற்கையும் காமத்துப்பாலின் கட்டுரையும்

உளத்தொடு இயைந்த வாழ்வியல்

அகப்பொருள் துறைகளில் நிகழ்த்தப்பெறும் உரையாடல்கள் முதலியனவெல்லாம் தலைவன்–தலைவி முதலியோரின் உள்ளத்துணர்வுகளை வெளிப்படுத்தும் கண்ணாடிகளே. காதல் இருவர் இயற்கைச் சூழலில் எதிர்ப்பட்டு, உளம் ஒருமைப்பட்டு இருவரும் ஒருவராய்ப் பிணைப்புண்டு தொடங்கப்பெறும் காதல் வாழ்வு மட்டும் அன்று. உலகம் உவப்ப இல்லறக் கடமையாற்றி வரும் நாளில் இருவரிடையே ஏற்படும் பிணக்குகளும் ஊடல் கொள்ள ஏதுவாம் நிகழ்ச்சிகளும், மாறுபாடு மறையக் கூடி மகிழ்தலும் எல்லாம் உள்ளத்தொடு இயைந்த உணர்வு வெளிப்பாடுகளின் விளைவுகளாம்.

> 'இன்பமும் துன்பம்தானும்
> உள்ளத்தோடு இயைந்தன்றே'

எனக் கம்பன் கட்டுரைக்குமாறு வாழ்வியல் உள்ளத்தைச் சார்ந்து அமைவது.

காமத்துப்பால் அமைப்பில் வள்ளுவர் காதலர் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கினை அறிந்து சுவைப்பதன் முன்னர் மெய்ப்பாட்டு மரபுகளை நுணுகிப் பார்த்தல் பயனுடையதாகும். ஆகவே, மெய்ப்பாட்டு இயல்புகளை நன்கு விளக்கும் தொல்காப்பியச் செய்திகளை முதற்கண் நோக்குவோம். அவற்றொடு தொல்காப்பியர் விரித்துரைக்கும் மெய்ப்பாட்டுநிலைகளுக்கு ஒத்துவரும் குறளுரைகளையும் உடன் வைத்து ஒப்பு நோக்கிக் காணலாம்.

பொருளுக்கு அடிப்படை மெய்ப்பாடு

தொல்காப்பியப் பொருளதிகாரத்துச் செய்யுளியல் யாப்பிலக்கணத்தைக் கூறுவது. ஆயின், அது பொருளைப் புனைந்துரைக்கும் கருவியே[1], எனவே, அவ்வதிகாரத்து அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள் என ஐந்து இயலால் விளக்கிக் கூறப்பெற்றது. பின், அகப்புறப் பொருள்களைப் புனைந்துரைக்கும் செய்யுள் வகைகளைக் கூறத்

---

1. மெய்ப்பாட்டியல், ச. சோமசுந்தர பாரதியார், பக் 18

தொடங்கிய தொல்காப்பியர், பொருட்சிறப்பிற்கு மிக்க உரிமையுடைய மெய்ப்பாடு, உவமைவகைகளை இரண்டு இயல்களில் கூறுவார்.

மெய்ப்பாடு என்பது ஒருத்தரின் அகவுணர்வுகளைப் புறத்தே அறியப் புலப்படுத்தும் குறியாகும். இம் மெய்ப்பாடு அகப்புறப் பொருள் துறைகள் அனைத்திற்கும் அமைய வருவன.

அகப்புறப் பொது மெய்ப்பாடுகள்

மெய்ப்பாட்டியலின் முதற்சூத்திரம்,

'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப' (மெய்ப்.1)

என்பது. இது, 'எண்வகை இயல்நெறி பிழையாது[1]' எனக் கூறும் அகப்புறப்பொருள் துறையனைத்திற்கும் பொதுவாகிய மெய்ப்பாட்டுப் பொருள் முப்பத்திரண்டும், புறத்தே இயற்குறியால் நான்கு நான்காய் எண்ணான்காம் என்று கூறுவது. இங்ஙனம் நான்கு நான்காய் எண் வகை இயல்நெறி பிழையாது வருவனவேயன்றி, எட்டு எட்டாய்த் தொக்கு வகைபட வரும் தன்மைய பிறவும் உள என்பதை,

'நாலிரண் டாகும் பாலுமா ருண்டே' (மெய்ப். 2)

எனவரும் இரண்டாம் நூற்பா துலக்குகிறது.

எட்டுவகை மெய்ப்பாடு

முதல் சூத்திரத்தில், 'எண்ணான்கு பொருளும்' நான்கு நான்காய்த் தொகுத்துவரும் என்றதற்கேற்ப, அம்மெய்ப்பாட்டுவகை எட்டும் இன்னவென விளக்குவது மூன்றாம் சூத்திரம். அது வருமாறு:

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.' (மெய்ப். 3)

இந்த எட்டுவகை மெய்ப்பாடுகளும் நன்னான்கு நிலைகளில் சிறப்பாக வெளிப்படும் தன்மையை அடுத்துவரும் நூற்பாக்களிலே தொல்காப்பியர் விவரித்துச் செல்லுகிறார்.

நகை

நகை நான்கு வகையதாகும் என்பதனை,

'எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான்கு என்ப' (மெய்ப். 4)

என்பது புலப்படுத்தும். இவற்றுள் எள்ளல் என்பது நகைமொழி; இளமை என்பது பிள்ளைமை; பேதைமை என்பது அறிவின்மை; மடன் என்பது ஏழைமை.

அழுகை

மூன்றாம் சூத்திரத்துச் சுட்டிய அழுகை நான்குவகை என்று கீழ் வரும் சூத்திரம் கூறுகிறது.

1. தொல். பொருள். செய்யுளியல். 205

'இளிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே' (மெய்ப் 5)

இளிவு[1] என்பது இழிதகவு; இழவு என்பது இழத்தல்; அசைவு என்பது தளர்வு; வறுமை என்பது இல்லாமையாகிய மிடி.

இளிவரல்

அடுத்துவரும் நூற்பா இளிவரல் என்னும் மெய்ப்பாட்டு வகையினை இயம்புவது அது வருமாறு:

'மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே' (மெய்ப். 6)

இவற்றுள் மூப்பு என்பது முதுமை; பிணி என்பது நோய்; வருத்தம் என்பது இடுக்கண்; மென்மையொடு என்பது எளிமை. இந்நூற்பாவிலே சுட்டப்பெறும் இளிவரல் உயிர்வாழ ஒல்லாமல் மானம் குன்ற வரும் பழிநிலையைக் குறிப்பது.

மருட்கை

அடுத்துவரும் நூற்பா மருட்கை என்னும் மெய்ப்பாட்டு வகை நான்கும் இவை என்று கூறுவது அது வருமாறு:

'புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.' (மெய்ப். 6)

புதுமை என்பது முன்னறியாத்தன்மை; பெருமை என்பது இத்தனை பெரிதோ என்று மருள்வது; சிறுமை என்பது இத்தனைச் சிறிதோ என்று திகைப்பது; ஆக்கம் அறிவுடை மக்கள் சமைப்பால் ஆவது. இங்குக் கூறியவை தேர்ந்து தெளியும் திறனற்று அறிவு சிறவா நிலையில் வரும். மருட்கை என்பது மயக்கம்.

அச்சவகை நான்கு

அடுத்துவரும்,

'அணங்கே விலங்கே கள்வர்தம் இறைஎனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே' (மெய்ப் 8)

என்னும் நூற்பா அச்சவகை ஆமாறு கூறுவது அணங்கு காரணங் காணுமிடத்துக் கடவுள்மேல் ஏற்றிக் கூறுவது; விலங்கு என்பது கொடு விலங்கினால் வரும் அச்சம்; கள்வர் என்பது அலைத்துப் பொருள் வௌவுவோரால் வரும் அச்சம்; இறை என்பது குற்றங்கடிந்தொறுக்கும் வேந்தனால் வரும் அச்சம்.

பெருமிதம்

மூன்றும் நூற்பாவில் கூறிய பெருமிதம் என்னும் நான்காம் வகையைக் கீழ்வரும் நூற்பா வகுத்துரைக்கின்றது.

---

1. ஈண்டுக் கூறிய இளிவு என்பது பிறர் இகழ்வால் பிறக்கும் அவலம்; மூன்றும் சூத்திரத்துக் கூறப்பெறும் இளிவரல் அன்று. இவ் இழவு என்பதனை இழிவு என்று பாடம் ஓதுவர் இளம்பூரணர்.

'கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே.' (மெய்ப். 9)

கல்வியாலாகிய பெருமிதம் செருக்கன்று; தறுகண் என்பது ஆண்மை; இசைமை என்பது சீர்த்தி; கொடை என்பது வள்ளல் தன்மை. இவை பழியற்றுப் புகழாம் பெருமிதம்.

வெகுளி

அடுத்துவரும் சூத்திரத்து வெகுளி வகை நான்கு இவை என்று கூறுவார் தொல்காப்பியர் ;

'உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே.' (மெய்ப். 10)

உறுப்பறை என்பது சினைசிதைத்தலாகிய அங்கபங்கமாம்; குடிகோள் என்பது ஓம்பற்குரியாரை நலிதல்; அலை என்பது அலமரச் செய்தல்; கொலை என்பது கொல்லல்; இவை நான்கும் வெறுப்பினால் விளையும் வெகுளியின் வகைகளாம்.

உவகை

இனி, எட்டாவதாகிய உவகை நான்கு கூறுவார்,

'செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே.' (மெய்ப். 11)

என்று விளக்குகிறார். செல்வம் என்பது திரு அல்லது ஆக்கப் பெருக்கம்; புலன் என்பது அறிவிலுறும் உள்ள மலர்ச்சி; புணர்வு என்பது கற்புறு காதற்கூட்டம்; விளையாட்டு என்பது உளங்களித்தாடும் தீதறியாப் பொய்தல். கடலாடல், புதுப்புனல் ஆடல், உண்டாட்டு என்பன தீதிலா விளையாட்டு.

இதுகாறும் கூறியவை முதற்சூத்திரத்துக் கூறிய 'பண்ணைத் தோன்றிய எண்ணான்குணர்வின்' ஆய மெய்ப்பாட்டு வகையின் விரிவாகும்.

எட்டெட்டாய் வரும் முப்பத்திரண்டு மெய்ப்பாடுகள்

இனி, இரண்டாம் சூத்திரத்துச் சுட்டிய நாலிரண்டாகும் மெய்ப் பாடுகள் விளக்கப்படுகின்றன.

'ஆங்கவை ஒருபா லாக ஒருபால்
உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல்,
தன்மை, அடக்கம், வரைதல், அன்பு எனாஅ,
கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல்,
நாணுதல், துஞ்சல், அரற்றுக், கனவு, எனாஅ,
முனிதல், நினைதல், வெருஉதல், மடிமை,
கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்புஎனாஅ
கையாறு, இடுக்கண், பொச்சாப்புப், பொறாமை,
வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கு, எனாஅ
இவையும் உளவே அவை அலங்கடையே.' (மெய்ப். 12)

இதற்கு முன்கூறிய மெய்ப்பாட்டுணர்வுவகை எட்டும் ஒரு பான்மையவாக, மற்றொரு பான்மையவாக உடைமை முதல் நடுக்கு வரை எட்டு எட்டாய் எண்ணப்படும் உணர்வுகளும் செய்யுட் பொருள் சிறக்க வருவன உள. இவ்வாறு எண்ணான்கும் நாலெட்டுமாய் வகை பெறுவது புறக்குறிச் சார்புடையவும், அஃதின்மையும் அறிவிப்பதற்கு.

அகப்பொருட்குச் சிறப்பு அளிப்பவை

இனி, எண்ணான்கு மெய்ப்பாட்டு வகை அகப்புறப் பொருட் பகுதிகள் இரண்டிற்கும் ஒப்ப வருபவை. ஆயின் நாலெட்டு உணர்வு வகை அகத்துறைகளுக்குச் சிறப்புரிமை பெறுவது. இங்குக் கூறிய முப்பத்திரண்டு அகச்சிறப்பு மெய்ப்பாடுகளின் விளக்கத்தை ஈண்டுக் காண்போம்.

முதல்நிலை மெய்ப்பாடுகள்

1:1. உடைமை : உடைமை என்பது பொருண்மை; அதாவது பொருளுடைமையாம்.

1:2. இன்புறல் : இன்புறல் என்பது அவ்வுடைமை உணர்வால் மகிழ்வது.

1:3. நடுவுநிலை : இரு கடமைகள் மாறுபடக் கோடாது இருக்கும் மனச் செம்மையாம்.

1:4. அருளல் : தவறு உணரா அன்பின் பெருக்கம் அருள் என்பதாம்.

1:5. தன்மை : தானது ஆகும் இயல்பு, மனம் ஒன்றில் ஈடுபட்டு அதுவே ஆதல்.

1:6. அடக்கம் : தன் உயரிய நிலையை மறந்து காதலால் பணிதல். மறை பிறர் அறியாமல் காக்கும் நிறையையும் குறிக்கும்.

1:7. வரைதல் : நாணுவரை இறந்து, முன் உவந்த பலவும் வெறுத்து விலக்குவது இம் மனநிலையாம். இது காதலின் எழுவது.

1:8. அன்பு : அருட்கு முதலாகிய மனத்தின்கண் நிகழ்வது.

இவை எட்டும் காதலின் முதல் நிலையாகிய இயற்கைப் புணர்ச்சியோடு தொடர்வன.

இடைநிலை மெய்பாடுகள்

2:1. கைம்மிகல் : அடங்காத கர்தற் பெருக்கு.

2:2. நலிதல் : மெலிதல்; வலிமை அழிதல்.

2:3. சூழ்ச்சி : நேராக் கூட்டம் நிகழும்வழி ஆராய்தல்.

2:4. வாழ்த்தல் : காதலால் நெஞ்சையும் பிறவற்றையும் வாழ்த்துவது.

2:5 நாணுதல் : வெருளுதல்; வெட்கப்படுதல்.

2:6. அரற்றல் : வாய்விடல்; வாய்விட்டுக் கூறுவது.

2:7. துஞ்சல் : தூங்குவது

2:8. கனு : தூக்கத்தில் தோன்றுவது. இதுவும் காதலிற் கனிவதுமாம்.

இவை எட்டும் இடந்தலைப்பாடு முதலிய பின் நிகழ் காதல் நிலைக்கு உரியவாம்.

முதிர்நிலை

3:1. முனிதல் : முன் விரும்பியவற்றை வெறுத்தல்.

3:2. நினைதல் : விருப்புற்று நினைத்தல்.

3:3. வெருஉதல் : பிரிவும் ஊறும் அஞ்சுதல்; பிரிவச்சம் என்பது இதுவாம்.

3:4. மடிமை : ஆற்றாமையின் அயர்வு.

3:5. கருதல் : குறிப்பு.

'செறாஅச் சிறுசொல்லும், செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு.' (திருக்குறள். 1097)

3:6. ஆராய்ச்சி : காதலர் அன்பு கனிய வழிசூழ்தல்.

3:7. விரைவு : இது ஆர்வம் மிகுதியால் நேர்வது.

3:8. உயிர்ப்பு : ஆறாக் காதலின் நெட்டுயிர்ப்பது.

இவை எட்டும் பாங்கொடுதழால் என்னும் மூன்றும் நிலைக் காதல் நிலைக்கு உரியன. காதலரின் காதலுணர்வு மிகுதியை வெளிப்படுத்தும்.

வளர்நிலை

வளர்நிலை என்பது காதலர் வாழ்வு நெடுகிலும் தொடர்ந்து செல்வதாகிய உணர்வு வெளிப்பாடுகளாம். அங்கே கூடினார்பால் இன்பும் கூடார்பால் துன்பும் ஆகப் பிணைந்து செல்லும் காட்சிகள் தோன்றும்.

4:1. கையாறு : வசம் அழிவு; செயலற்று நிற்பது. இது காதல் நோயால் வருவது.

4:2. இடுக்கண் : காதலால் வரும் துன்பம்.

எடுத்துக்காட்டு :

(1) 'படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.' (குறள். 1175)

(2) 'பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.' (குறள். 1229)

4:3. பொச்சாப்பு : மறதி. இதுவும் களவுக்கைகோளின் மரபு.

4:4. பொருளை : காதலர் ஒருவர்பழி ஒருவர் ஒல்லாமை. இயற்பழிக்கும் தோழி கூற்றும், ஏனோர் கூறும் பழியும் தலைவி தாங்காதவளாய் வெறுத்துக் கூறுவது.

4:5. வியர்த்தல் : நாணாலும் நடுக்கத்தாலும் வியர்த்தல்.

4:6. ஐயம் : காதல் மிகுதியால் எழும் ஐயவுணர்வு. இது குறிப்பாக ஊடலில் எழும் ஐய உணர்வைக் குறிப்பது.

எடுத்துக்காட்டு :

(1) 'கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.' (குறள். 1313)

(2) 'வழுத்தினாள் தும்மினேன்ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று,' (குறள். 1317)

(3) 'தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.' (குறள். 1318)

4:4. மிகை : கைம்மிகு காதலான் வரும் நிறையழிவு, காதல் மிகையும் அதனால் நிறையழிவும் தலைவனுக்கும் தலைவிக்கும் சுட்டப்படும் திருக்குறள் பாக்கள் கீழ்வருவன:

(அ) தலைவனுக்கு :

(1) 'மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்.' (குறள். 1161)

(2) 'காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.' (குறள். 1251)

(ஆ) தலைவிக்கு :

'பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.' (குறள். 1258)

4:8. நடுக்கு : காதலர்களுக்கு உணர்வு மிகையாலாம் பனிப்பு.

களவிற்குச் சிறப்புடைய மெய்ப்பாடு

இங்ஙனம் அகத்திணைகளுக்குப் பொதுவான மெய்ப்பாடுகளைக் கூறி, அடுத்து அகத்துள்ளும் களவிற் சிறந்து பயிலும் மெய்ப்பாடுகள் கூறுவார், அவற்றுள் தலைப்படுவார் உளத்தெழும் காதல் முதற் குறிகள் இவை எனக் கூறுகிறார்.

காதல் முதற் குறிகள்

'புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.' (மெய்ப். 13)

புகுமுகம் புரிதல் : தலைக் காட்சியில் தலைவன் நோக்கெதிர்வைத் தலைவி விரும்புவது.

'நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.' (குறள். 1082)

'கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.' (குறள். 1092)

பொறிநுதல் வியர்த்தல் : காதலால் நோக்கெதிர்ந்த தலைவி தனக்கு இயல்பாய் அமைந்த அச்சமும் நாணும் அலைக்க, அவள் நெற்றியில் வியர்வு பொடித்தல்.

நகுநயம் மறைத்தல் : தலைவனின் காதல்குறி கண்ட மகிழ்வால் முகிழ்க்கும் தன் முறுவலைப் பிறர் அறியாது தலைவி அடக்குதல்.

'அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.' (குறள். 1098)

'கரப்பினுங் கையிகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன்று உண்டு.' (குறள். 1271)

'முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு.' (குறள். 1274)

சிதைவு பிறர்க்கின்மை : தன்னுள் நிறையழிவைப் புறத்துப் புலனாகாது மறைக்கும் தலைவியின் திறம்.

'குட்ட நீர்க் குவளை எல்லாம்
  கூடிமுன் விரிக லாற்று
கட்டழ கமைந்த கண்ணாள்
  நிறையெனுஞ் சிறையைக் கைபோய்
இட்ட நாண் வேலி யுந்திக்
  கடலென எழுந்த வேட்கை
விட்டெரி கொளுவ நின்றாள்
  எரியுறு மெழுகின் நின்றாள்.' (சீவகசிந். 710)

'திங்கரும் பெருத்தில் தூங்கி
  ஈஇன்றி இருந்த தீம்தேன்
நாங்கணாற் பருகி யிட்டு
  நலனுணப் பட்ட நம்பி
பூங்குழை மகளிர் முன்னர்ப்
  புலம்பல்நீ நெஞ்சே என்றாள்
வீங்கிய காமம் வென்றார்
  விளைத்தவின் பத்தோ டொப்பார்.' (சீவகசிந். 712)

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தவை நிச்சமும் பெண்பாற்குரிய தன்மையால், தலைமகள் தன் கரக்கும் காதலைக் கரக்கும் ஆதலின், இம்மெய்ப்பாடுகள் பெரிதும் தலைவிமாட்டே காணப்பெறுவன.

அன்பின் இரண்டாங் கூறு

இனி, அன்பின் இரண்டாங் கூறு வருமாறு :

'கூழைவிரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு
ஊழிநான்கே இரண்டென மொழிப.'

கூழை விரித்தல் : தழையும் காதல் தன்னுள்ளம் நெகிழ்க்கத் தலைவி கூந்தலைக் குலைத்திருப்பது. கூந்தலே கூழை எனப்படுவதாம்.

காதொன்று களைதல் : காதினில் பூட்டாது செருகிய தோடு ஒன்றைத் திருத்துவாள் போன்று கழற்றுதல்.

ஊழணிதைவரல் : தொடி, வளை முதலானவற்றைச் செறிப்பது போலத் தடவுவது.

உடைபெயர்த்துடுத்தல் : குழையும் உடலில் குலையும் உடையைத் திருத்துதல்.

இந் நூற்பா சுட்டும் நான்கு மெய்ப்பாடும் ஒருங்கே நிகழ்ந்தமை யைக் கீழே தரப்படும் பழம் பாட்டால் காணலாம்.

> விண்ணுயர் விறல்வரைக் கவாஅன் ஒருவன்
> கண்ணின் நோக்கிய தல்லது தண்ணென
> உரைத்தலும் இல்லை மாதோ, அவனே
> வரைப்பால் கடவுளும் அல்லன்; அதற்கே
> ஓதி முந்துறக் காதொன்று ஒருகிழ
> நிழலவிர் மணிப்பூண் நெஞ்சொடு கழலத்
> துகிலும் பன்முறை நெடிதுநிமிர்ந் தனவே
> நீஅறிகுவை அதன் முதலே
> யாதோ தோழி அதுகூறுமா றெமக்கே.
>
> (இலக்கண விளக்க மேற்கோள்)

காதலின் மூன்றுங் கூறு

இனி, காதலின் மூன்றுங் கூறு வருமாறு:

> 'அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல்,
> இல்வலி யுறுத்தல், இருகையும் எடுத்தலொடு
> சொல்லிய நான்கே மூன்றென மொழிப.' (மெய்ப். 15)

அல்குல் தைவரல்: இங்கே அல்குல் என்பது இருப்புறுப்பு (ஆசனம் என்பதாம். இதனை அவையல்கிளவியாக்கிக்கொண்டு கூறும் உரை பொருந்தாது என்பர் பாரதியார்.[1] அதற்கு அவர் எடுத்துக்காட்டி யவை படித்துப் பயன்பெறத் தக்கன. தைவரல் என்பது தடவுதலாம். உடை பெயர்த்து உடுத்தியபின், குலையாது திருத்திய கலை முன் நிலை படியத் தடவுதல் இயல்பு. அவ்வியல்பு இங்கு அல்குல் தைவரல் எனக் கூறப்பட்டது என்பர் பாரதியார்.

அணிந்தவை திருத்தல்: அணிந்தவை என்பது ஊழணியல்லாப் பிற கலன், விரும்பப் புனைந்த வேறு கலன் திருத்தலும் காதற் காட்சி யில் பெண்டிர்க்கு இயல்பாம்.

இல்வலியுறுத்தல்: தள்ளும் தன் உளநிலையைத் தலைவனும் பிறரும் அறியாதவாறு உரனுடைமை படைத்துக் காட்டுதல்.

---

1 மெய்ப்பாட்டியல் உரை—ச. சோமசுந்தர பாரதியார், பக். 52.

எடுத்துக்காட்டு:

'செறுஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறுஅர்போன் றுற்றார் குறிப்பு.' (குறள். 1097)

'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.' (குறள். 1099)

இவ் விரண்டு குறள்களால் இது பெண்ணியல்பாதலைக் குறிப்பறியும் தலைவன் கூற்றாக விளக்குதல் காண்க.

இரு கையும் எடுத்தல்: தன் மெய் தொட்டுப் பயிலும் தலைவன் தழுவக் குழைபவளுக்கு, முன் தான் கரந்த காதல் கைம்மிக, நினையாமலே கைகள் தாமே அவனைத் தழுவ எழுவது.

காதலின் நான்காம் கூறு

இனி, காதலின் நான்காம் கூறு வருமாறு:

'பாராட் டெடுத்தல், மடந்தப உரைத்தல்,
ஈரமில் கூற்றம், ஏற்றலர் நாணல்,
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ,
எடுத்த நான்கே நான்கென மொழிப.' (மெய்ப். 16)

பாராட்டெடுத்தல்: இது தலைவனும் தலைவியும் புணர்ந்தபின் ஒருவர் மற்றவரின் நல்லியல்புகளை வியப்பது.

எடுத்துக்காட்டு:

(1) தலைவன் தலைவியின் நலம் பாராட்டுவது:

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.' (குறள். 1101)

(2) தலைவி தலைவன் நலம் பாராட்டுவது:

'உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர்.' (குறள். 1130)

மடந்தப உரைத்தல்: இது பேதைமை ஒழியப் பேசுவது. தலைவி களவில் தலைவனை மணந்தபின் முன்னைய நிலைமை நீங்கித் தேர்ந்துரையாடுவது.

ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்: தலைவி தன் களவொழுக்கத்தை ஐயுற்று அயலவர் தூற்றும் பழிக்கு நாணுதல்.

எடுத்துக்காட்டு:

'யானே ஈண்டை யேனே, என்நலனே
ஆனா நோயொடு கானல் அஃதே;
துறைவன் தம்மூ ரானே
மறைஅலர் ஆகி மன்றத் தஃதே'. (குறுந்தொகை, 97)

கொடுப்பவை கோடல்: தலைவன் கொடுத்து அனுப்பும் தழையும் கண்ணியும் போன்ற அன்புக் கையுறைகளைத் தலைவி ஏற்று மகிழ்வது.

எடுத்துக்காட்டு:

'மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய
பிறங்குகுரல் இறடி காக்கும் புறந்தாழ்
அஞ்சி லோதி அசையியற் கொடிச்சி
திருந்திழை அல்குற்குப் பெருந்தழை உதவிச்
செயலை முழுமுதல் ஒழிய, அயலது
அரலை மாலை சூட்டி
ஏமுற் றன்றுஇவ் அழுங்கல் ஊரே.' (குறுந்தொகை. 214)

இதில் தலைவன் கொடுப்பதும் தலைவி கொள்ளுதலும் கூறுவது காண்க.

காதலின் ஐந்தாங் கூறு

இனி, காதலின் ஐந்தாம் கூறுபற்றி வருவன காண்போம்.

'தெரிந்துடம் படுதல், திளைப்புவினை மறுத்தல்,
கரந்திடத் தொழிதல், கண்டவழி உவத்தலொடு,
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.' (மெய்ப். 17)

இது கூட்டம் பெறாது நைந்தழி தலைவியின் கூறும் என்பர் புலவர்.

தெரிந்துடம்படுதல்: அலரால் இல்செறிவுறினும், தமர் மணம் மறுப்பினும், தனிமை ஆற்றாத தலைவி தலைவனுடன் உடன்போக்குக்கு உடம்படலும், தோழியால் அறத்தொடு நிற்க உடம்படுதலும் ஆகும்.

திளைப்பு வினை மறுத்தல்: அங்கனம் தமர்க்குத் தான் உடம்பட்டதன் பின் தலைமகளோடு பகலும் இரவும் பண்டு திளைத்தவாறு திளைத்தலை அச்சமும் நாணும் மடனும் காரணமாக மறுத்தல். இதற்கு வேறாகப் பேராசிரியர் பாரதியார் கீழ்வருமாறு பொருள் கொள்வர்.

''ஆற்றாத் தனிமையில் அழியும் தலைமகள் தனிமை தாங்கா உளத்தாள் ஆதலின் உவப்பிற்குரியவும் உவர்ப்பாளாகித் திளைப்புவினை மறுத்தல் இயல்பாம் அதனால் அந்நிலை குறிக்கப் பெற்றது.''

"பாலும் உண்ணாள்' என்னும் குறுந்தொகைப் 'பாட்டில், 'பந்துடன் மேவாள், விளையாட்டயர்வோள்' என அன்பற்றவள் முன்பு திளைத்தவற்றை வெறுக்கும் குறிப்பு விளக்கப்படுதல் காண்க.''

கரந்திடத்தொழிதல்: தலைவி இற்செறிக்கப்படுதலால், அவள் தலைவனை மறுத்த ஏதத்திற்கு நாணியும் அஞ்சியும் அவனுக்கு வெளிப்படாதிருத்தல்.

எடுத்துக்காட்டு:

'யாவரும் அறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டைபோல வுட்கிடந்து
சாயின் அல்லது பிறிதெவன் உடைத்தோ
யாமைப் பார்ப்பின் அன்ன
காமங் காதலர் கையற விடினே.' (குறுந்தொகை. 152)

'யாமெங் காதலர் காணே மாயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே.' (குறுந்தொகை. 290)

கண்டவழி உவத்தல்: அங்ஙனம் தலைவி கரந்தொழுகுங்கால், அவனை ஒருஞான்று கண்டவழிக் கழியுவகை மீதூர்தல். (இது தலைமகனுக்கும் உரித்து.)

இவற்றுக்கு எடுத்துக்காட்டுச் செய்யுள் வருமாறு:

'அறியாய் கொல்லோ நீயே தெறுவர
நோக்குதொறும் பனிக்கும் நெஞ்சமொடு இவளே
யாய்க்கறி வுறுலின் நின்னெதிர் நாணி
மனைவயிற் பிரியலள் மன்னே அதற்கே
நினைவிலள் இவளென உரைத்தி
புனைதார் மார்ப காண்டியோ அதுவே.'

(இலக்.வி.பக். 534)

இது, பகற்குறிக்கண் தலைமகளை இடத்துய்த்து வந்த தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி வரைவு கடாயது. இதற்குப் பேராசிரியர் எழுதிய குறிப்புரை வருமாறு:[1]

இதனுள் 'யாய்க்கறிவுறுலின்' என்பது தெரிந்துடம்படல் என்பது; என்னை? அவள் நோக்குதொறும் பனித்தல் என்று அறிவுறுத்தாள் என்றமையின்.

'நின்னெதிர் நாணி' என்பது தினைப்பு வினை மறுத்தல்; என்னை? தமர்க்கு மறைத்தாள், இம்மறையினை என்று தலைமகன் குறிக்கும் என்று நாணி எதிர்ப்பட்டமையின்.

'மனைவயிற் பிரியலள்' என்பது கரந்திடத்தொழிதல்.

'புனைதார் மார்ப கண்டியோ அதுவே' என்பது கண்டவழி உவத்தல்; என்னை? நிற்கண்டவழி நுதலும் தோளும் பசலை நீங்கியவாறு கண்டிலையோ என்னுங் குறிப்பினாற் கூறினமையின், பிறவும் அன்ன.

காதலின் ஆறுங்கூறு

இனி, காதலின் ஆறுங்கூறு வருமாறு:

'புறஞ்செய சிதைதல், புலம்பித் தோன்றல்,
கலங்கி மொழிதல், கையற வுரைத்தலொடு
புலம்பிய நான்கே ஆறெனு மொழிப.' (மெய்ப். 18)

1 தொல்.பொருள்.மெய்ப்.பக். 823 (கனக சபாபதிப் பிள்ளை பதிப்பு 1935).

புறஞ்செயச் சிதைதல்: பூவும் சாந்தும், பூணும் துகிலும் முதலாயின கொண்டு புறத்தே கோலம் செய்ய, அகத்தே (காதலன் காணா இவை உதவாமையினால்) சிதைவுண்டாதல்.

புலம்பித்தோன்றல்: அங்ஙனம் புனைந்த கோலம் துணையோடு (தலைவனொடு) கழியப் பெறாமையினால் அழியும் தலைவி ஏங்கும் நிலை.

கலங்கி மொழிதல்: வருந்தும் அவளைப் பார்த்து இரங்கிச் சுற்றம் துனி வினவ, அவள் (தலைவி) தன் மனத்து நிகழ்வனவற்றுள் சில புலப்பம் சொல்லுதல்.

கையறவு உரைத்தல்: அவ்வாறு சொல்லுங்கால், செயலறவு தோன்றச் சொல்வது.

இந் நான்கு நிலைக்கும் எடுத்துக்காட்டுச் செய்யுள் வருமாறு:

'இவளே,
அணியினும், பூசினும், பிணியுழந் தசைஇப்
பல்கிளை நாப்பண் நல்கிளை போல
மொழிவகை அறியாள் பொழிகண் நீர்துடைத்து
யானே கையற வலம் வரும்
கூருய் பெருமநின் தேறு மாறே.'

(இலக்கண விளக்க மேற்கோள்)

இதில் இங்குக் கூறிய மெய்ப்பாட்டுணர்வுகள் நான்கும் ஒருங்கு அமையத் தோழி கூறியதாக உள்ளமை காணலாம்.

காதலின் அறுகூற்றுப் பொதுத்தன்மை

இனி, மேலனவற்றிற்குப் புறநடையாய் அவற்றின் பொதுத் தன்மையினை உணர்த்தும் சூத்திரம் வருமாறு:

"அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப.' (மெய்ப். 19)

இது, மேல் உரைத்த இருபத்து நான்கே புணர்வின் நிமித்தம் என்று நினையாது, அவை போல்வன பிறவும் கொள்க என்பது. இப்புறநடைச் சூத்திரத்திற்கு பேராசிரியர் எழுதிய விளக்க உரை மிகவும் பயனுடையதாதலால், அது (முழுவதும்) இங்குத் தரப்படுகிறது.

"மன்னிய வினைய" என்பது நடுவண் ஐந்திணைக்கே உரிய மெய்ப்பாட்டினவை என்றவாறு; என்னை? கந்தருவ வழக்கம் அல்லனவற்றை மன்னிய காமம் என்றார் அன்றே, அஃது இடையறவுபடாது ஆகலின் எனவே, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் வரையறை இன்றி வேண்டியவாறு வரப்பெறும் என்பதாம். அவை மன்னியவினை அல்லாமையின், என்னை?

"காமஞ் சாலா இளமையோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்து'தலும்

(தொல். பொருள். அகத்திணை. 50)

நாற்பத்தெட்டாண்டையாளொடு பன்னீராட்டையாள் கூட்டம் சொல்லுதலும் ஒத்த காமம் எனப்படமாட்டா ஆகலின் என்பது

இவ்வாறு கூறவே, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இவை வைத்த முறையான் வரையறுத்துக் கூறப்படா எனவும், அவை வருவன வந்துழிக் கொளப்படும் என்பதும் பெற்றும். இது புவனெறி வழக்கமல்லாத கந்தருவ மணத்திற்கும் ஒக்கும்.

இனி, 'அன்ன பிறவும் அவற்றொடு சிவணி,' வருவன யாவை எனின், புகுமுகம் புரிதலின்கண் தலைமகன் நோக்கியவழி ஒருவல்லி (பெண்), பொதும்பரானும், மற்றொன்றானும் சார்பு பெற்று மறைதலும், அவையில்லாதவழி இடர்ப்படுதலும் என்றால் போல்வன புகுமுகம் புரிதலாய் அடங்கும்.

நகுநயம் மறைக்குங்கால், தலைமகன்கண் தோன்றிய நகை முதலாகிய குறிப்பு ஏதுவாக நகை தோன்றியதனை மறைக்குங்கால் இதழ் மொக்குளுள் தோன்றுவது நகையெனப்படாது நகுநயம் மறைத்தலின்பாற்படும் என்பது.

இனிச் சிதைவு பிறர்க்கின்மையின் கண்ணும்,

'நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்'
(தொல். பொருள். கள 96)

என்றமையால் கண்ணின் வேறுபாடு உளவாம் அன்றே, அவை சிதைவு பிறர்க்கு அறிவிக்குமாயினும், ஆண்டுத் தான் அது மறைத்தாள் என்னும் கருத்தினள் ஆகலின் அதுவும் சிதைவு பிறர்க்கின்மையாம் என்பது. (அவை யாவை எனின், அமர்த்து நோக்காது அலமர நோக்குதலும் நிலங்கிளைத்தலும் போல்வன) மற்றும்,

பொறிநுதல் வியத்தற்குப் புறநடையால் கொள்வன யாவை? எனின், புறநடையால் கோடல் ஆணை அன்று ஆகலான் உள்ளன வற்றிற்குக் கொண்டு ஒழிக என்றவாறு

ஒழிந்தன வற்றிற்கும் இவ்வாறே வருவன அறிந்து அடக்கம் கூறுக.

மற்றும், 'பிறவும் அவற்றொடு சிவணி' எனவே, மேற்கூறிய வற்றோடு பொருந்த வருவன கோடும் அன்றே? 'அன்ன' என்றது என்னை எனின், அதனானே தலைமகனுக்குரிய மெய்ப்பாடு வேறு உள ஆயினும் கொள்க: அவை, ஐயப்படுதலும், ஆராய்தலும், துணிதலும் முதலாயின.

மற்றுத் தலைமகளுக்கு உரிய மெய்ப்பாடு போலத் தலைமகனுக்கு உரியனவும் இவை முறையான் என்று வரையறுத்துக் கூறுரோ எனின், அற்றதன்று தலைமகன் குறிப்புச் சிலபற்றித் தலைமகள்

குறிப்புப் பல பிறக்கும் ஆகலானும், ஐயம் முதலாயின மெய்ப்பாடு காமப் புணர்ச்சிக்கு இன்றியமையாதன இன்மையானும் தலை மகளுக்குரிய மெய்ப்பாடே சிறந்தன என்று அவற்றை வரை யறுத்துக் கூறினன் என்பது.

மற்று, இவற்றை நிமித்தம் என்றது என்னை எனின், இவை முறையானே நிகழ்ந்து புணர்ச்சி நிகழும் ஆகலின் என்பது. வினைய என்பது ஆறும் வேற்றுமைப் பன்மை உருபு.

கைக்கிளை-பெருந்திணை மெய்ப்பாடுகள்

இம் மெய்ப்பாட்டினுள், கைக்கிளை பெருந்திணைக்கு வருவன வருமாறு:

> 'ஒருக்குநாம் ஆடும் குரவையுள் நம்மை
> அருக்கினன் போல்நோக்கி அல்லல்நோய் செய்தல்
> குரூஉக்கண் கொலைஏறு கொண்டேன்யான் என்னும்
> தருக்கன்றே ஆயர் மகன்' (கலித்தொகை, 104)

எனப் புகுமுகம் புரிதல் கைக்கிளைக்கண் வந்தது.

> 'முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே'
> (தொல். பொருள். களா. 105)

என்பதனான் இது கைக்கிளை எனப்பட்டது. மற்று இது முல்லைத் திணைப் பாட்டன்றோ எனின்; அது நிலந்தான் முல்லை ஆயிற்றென்று அகத்திணை யுட் கூறினும்.

இனித் தொன்மையும் (தொல். பொருள். செய்யுள். 549) தோலும் (தொல். பொருள். செய்யுள். 550) முதலாயின் வனப்புகளுள் புதுமுகம் புரிதல் முதலாயின பெருந்திணைப் பொருள் பற்றி அறிந்து கொள்க.

மற்று இவ் இருபத்து நான்கு மெய்ப்பாடும் கற்பினுள் இம்முறை யானே வரப்பெறுவோ எனின், அதற்கு இம்முறையான் இவை அனைத்தும் வரல் வேண்டுவது இன்மையின், களவிற்கே விதந்து கூறினன் என்பது. அஃதென்னை பெறுமாறு எனின், 'பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்' (தொல். பொருள். மரபியல். 665) என்னும் உத்தி வகை.

கற்பினுள் வரும் மெய்ப்பாடு

இனி, கற்பினுள் வருவன வருமாறு:

> 'இனிதெனக் கணவன் உண்டலின்
> நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே'
> (குறுந்தொகை. 167)

என்பதனுள் நகுநயம் மறைத்தல் வந்தது.

"மாணமறந் துள்ளா நாணிலிக்கு இப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎம் எனநெருங்கின் தப்பினேன்
என்றடி சேர்தலும் உண்டு." (கலித்தொகை, 89)

இதனுள் சிதைவு பிறர்க்கின்மை வந்தவாறு; ஒழிந்தனவும் அன்ன.

'நோய் சேர்ந்த திறம்பண்ணி நின்பாணன் எம்மனை
நீ சேர்ந்த இல்வினாய் வாராமற் பெறுகற்பின்'
(கலித்தொகை, 77)

என்பது மடந்தப உரைத்தல். இவையெல்லாம் கற்பின்கண் வந்தன.

'அன்னை சொல்லும் உய்கம் என்னதூஉம்
ஈரஞ் சேரா இயல்பிற் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கெளவையும் ஒழிக' (அகநா. 65)

என்பதோ எனின், அது, 'பாராட்டெடுத்தல், மடந்தப உரைத்தல்' (தொல். மெய்ப். 16) என்புழி அடங்கும் என்பது.

புணர்ச்சி நிமித்தமாம் மெய்ப்பாடுகள்

இனி, மேலனவற்றுக்கே ஆவதோர் விதி கூறுகிறார்.
'வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே'
(தொல் பொருள். மெய்ப் 20)

என்னும் இச் சூத்திரத்து, உயிர் மெலிவிடத்து (காதல் ஆற்றாமை வந்த இடத்து) மேல் அறுவகையால், இருபத்து நான்கு மெய்ப்பாட்டினை அம் முறையானே நிமித்தமாகக் கொண்டு வருதலின்மையும் உரித்தெனப் படும். அடுத்த சூத்திரம், மேல் கூறியன தோன்றுவிடத்துக் கீழ்க் குறிக்கும் மெய்ப்பாடுகள் நிகழ்தலும் உண்டெனக் கூறுகிறது.

'அவையும் உளவே அவையலங் கடையே.' (மெய்ப் 21)

இந் நூற்பா அடுத்த நூற்பாவின் முதலில் வைத்து எண்ணத் தக்கது. பின்வரும் மெய்ப்பாடுகள் முன்குறித்தவற்றோடு விரவாமல், அவையல்லாவிடத்தே தோன்றுதற்குரியன என்பர் பேராசிரியர் பாரதியார். அவையல்லாதவிடத்து இவையும் உளவாம் எனவே, வருகின்ற மெய்ப்பாடும் களவிற்கும் கற்புற்கும் உரியனவும், களவிற்கு வருங்கால் முதற்கூறிய இருபத்து நான்கின் பின்னுமே இவை பெரும் பாலும் வரும் எனவும், கற்பிற்காயின் பயின்றுவரும் என்றும் பேராசிரியர் கூறுவர்.

இனி, 'அவையும் உளவே' எனப்பட்ட மெய்ப்பாடு கூறுகின்றார்.

"இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,
எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்,
பசியட நிற்றல், பசலை பாய்தல்,
உண்டியிற் குறைதல், உடம்புநனி சுருங்கல்,
கண் துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்,
பொய்யாக் கோடல், மெய்யே என்றல்,

ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல்,
அறனளித்து உரைத்தல், ஆங்குநெஞ் சழிதல்,
எம்மெய் ஆயினும் ஒப்புமை கோடல்,
ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல்,
நலத்தக நாடில் கலக்கமும் அதுவே'. (மெய்ப் 22)

இன்பத்தை வெறுத்தல் முதல் கலக்கம் ஈறாக எண்ணப்பட்ட இருபதும் புணர்ச்சிக்கு நிமித்தம் ஆகாத போன்று காட்டினும், அவற்றை மிகவும் ஆராய்ந்துணரில் புணர்ச்சி நிமித்தமேயாம் என்பர் பேராசிரியர்.

1. இன்பத்தை வெறுத்தல்: யாழும் குழலும் பூவும் சாந்தும் முதலாக இன்பத்திற்கு ஏதுவாகிய பொருள் கண்டவழி அவற்றின்மேல் வெறுப்புத் தோன்றுதல்.

2. துன்பத்துப் புலம்பல்: பிரிவாற்றாது துன்புறுங்கால், அவ்வாற்றாமை தலைமகனுக்கின்றித் தானே துன்புறுகின்றாளாகச் சொல்லுதல்

எடுத்துக்காட்டு:

''கரத்தலும் ஆற்றேன்இந் நோயை, நோய்செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.' (குறள். 1162)

''காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.' (குறள் 1167)

3. எதிர் பெய்து பரிதல்: உருவெளி கண்டு இரங்குதல்.

''வாரா தாயினும் வருவது போலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில்மறந் தனவால் தோழி, என் கண்ணே.'

(குறுந்தொகை, 301)

4. ஏதம் ஆய்தல்: கூட்டத்திற்கு வரும் இடையூறு உண்டென்று பலவும் ஆராய்தல். இது நொதுமலர் வரையக் கருதுவர்கொல் எனவும், பிரிந்தோர் மறந்து இனி வாரார்கொல் எனவும் தோன்றும் உள்ள நிகழ்ச்சி.

'வாரார் கொல்எனப் பருவரும்
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே' (அகம். 150)

என்பது இதற்கு எடுத்துக்காட்டு

5. பசியட நிற்றல்: பசி வருத்தவும் அதற்குத் தளராது உணவு மறுத்தல்

''அன்னாய் வாழ்வேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனள் என வினவுதி '' (அகம் 48)

என்பது இதற்கு எடுத்துக்காட்டு

6. பசலை பாய்தல்: கூட்டம் பெறாது ஆற்றாத் தலைவி காதல் நோயால் தன் மாமைக்கவின் இழந்தெய்தும் நிறவேறுபாடு.

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை யல்குல்என் மாமைக் கவினே'
(குறுந்தொகை. 27)

7. உண்டியிற் குறைதல்: உண்டி ஊட்டியவழிப் பண்டுபோலாது சிறிது உண்டல்.

'தீம்பா லூட்டினும் வேம்பினும் கைக்கும்
வாராய் எனினும் ஆர்வமொடு நோக்கும்
நின்னிற் சிறந்ததொன் றிலளே
என்னினும் படாஅள் ஏன்னிதிற் படலே.'
(இலக்கண விளக்க மேற்கோள்)

8. உடம்பு நனிசுருங்கல்: அவ்வுண்ணாமை உயிரிற் செல்லாது உடம்பிற் காட்டுதல்.

'யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே. (குறுந்தொகை. 290)

9. கண்துயில் மறுத்தல்: இரவும் பகலும் துஞ்சாமை.

'வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.' (குறள். 1179)

10. கனவொடு மயங்கல்: அரிதினில் துயிலெய்தியவழித் தலைவனைக் கனவில் கண்டு பின்னர் அவன் அல்லாமையின் மயங்கும் மயக்கம்.

'நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டுஎன் உயிர்.' (குறள். 1213)

11. பொய்யாக் கோடல்: காதல் மிகையால், மெய்யைப் பொய்யாகத் திரித்துக்கோடல்.

'பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.' (குறள். 1311)

12. மெய்யே என்றல்: பொய்யை மெய் என்று துணிதல். அது,

"கழங்காடு ஆயத்து அன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே?" (அகப். 66)

என்பது.

13. ஐயம் செய்தல்: நம்மை இம்மைப் பிறப்பினுள் துறப்பார் கொல் என வாளாதே ஐயம் செய்தல்.

'தூதுவர் விடுதரார் துறப்பார்கொல் நோதக
இருங்குயில் ஆலும் அரோ.' (கலித். 33)

14. அவன் தமர் உவத்தல்: தலைவி தலைவன் சுற்றத்தை நயத்தல்.

'அவர் நாட்டு
மாலைப் பெய்த மணங்கமழ் உந்தியொடு
காலை வந்த காந்தள் முழுமுதல்
மெல்லிலை குழைய முயங்கலும்
இல்லுய்த்து நடுதலும் கடியா தோட்கே' (குறுந். 361)

15. அறன் அளித்து உரைத்தல்: அறக்கிழவனை அன்பு செய்தல்.

'பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள் எய்தி.' (அகம். 9)

இனி, இதற்கு அறனழிய வெறுப்பதுபோல் வெறுத்துக் கூறுதல் என்று பொருள் கூறிக் கீழ்வரும் திருக்குறட்பாக்களை எடுத்துக் காட்டுவர் பேராசிரியர் பாரதியார்.[1]

'அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு.' (குறள். 1154)

'விளியும்என் இன்னுயிர் வேறுஅல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து.' (குறள். 1209)

16. ஆங்கு நெஞ்சழிதல்: அங்ஙனம் உரைக்குங்கால் நெஞ்சழிந்து உரைத்தல், எனவே, அறனழித்துரைப்பது அழிவின்று ஒன்றும் என்பது.

'தன்னலம் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல், அவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ... ...' (குறுந். 93)

17. எம் மெய்யாயினும் ஒப்புமை கோடல்: யாதானும் ஒரு பொருள் கண்ட இடத்துத் தலைமகனோடு ஒப்புமை கோடல்.

'சுணைகழி கல்லாத கன்பிறங்கு ஆரிடைப்
பணைஎருத்து எழிலேற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ பிரியுமோ அவையே,' (கலி 20)

இனி, இம் மெய்ப்பாட்டிற்குப் பேராசிரியர் பாரதியார் வரைந்த உரையும் எடுத்துக்காட்டுகளும் குறிப்புரையும் வருமாறு:

''இது காணும் பொருள் எதுவும் தலைவன் வடிவு, வண்ணம், பண்பு, வினைகளுள் ஒன்றுக்கு ஒப்பெனக் கருதும் காதல் இயல்பு.''

---

[1] இம் மெய்ப்பாட்டிற்குப் பேராசிரியர் பாரதியார் எழுதிய ''அறனழித்துரைத் தாள், பின் அதற்கு நெஞ்சழிதல் வேண்டாளாதலானும் அப்பாடம் பொருந் தாமை அறிக'' என்னும் குறிப்பு விளங்கவில்லை. ஒரு சொல் விடுபட்டிருத்தல் கூடும் என்று கருதத்தகும்.

எடுத்துக்காட்டு:

'இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தியென் உயிரையம் முறுவல் உண்டதே.'
(கம்ப. மிதிலைக் காட்சி, 56)

படர்ந்தொளி படர்ந்துயிர் பருகும் ஆகமும்
தடந்தரு தாமரைத் தாளு மேயல
கடந்தரு மதங்கலுழ் களிநல் யானைபோல்
நடந்தது கிடந்ததென் உள்ளம் நண்ணியே!'
(கம்ப மிதிலைக்காட்சி. 57)

இவற்றில் தலைவன் வடிவு, வண்ணம், நடை முதலியவற்றிற்கேற்ப எப்பொருளாயினும் ஒப்புக் கோடல் காண்க.

இனி, ஏற்புடைப் பொருள்களைத் தலைவன் தலைவிக்கு ஒப்புக் கோடலும் இத் துறையாகும்.

எடுத்துக்காட்டு:

'நன்னீரை வாழி அனிச்சமே, நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.' (குறள். 1111)

'மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று' (குறள். 1112)

'மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்' (குறள். 1116)

என வருபவையெல்லாம் தலைவன் தலைவிக்கு ஒப்புமை கோடலைக் குறிப்பன.''

18 ஒப்புவழி உவத்தல்: ஒப்புமை உண்டாகியவழி உவமை கொண்டு அதனால் உவகை தோன்றுவது. எனவே, முன்னது ஒப்பின்றி ஒப்புமை கொண்டதாயிற்று.

'காமரு நோக்கினை அத்தத்தா என்னும் நின்
தேமொழி கேட்டல் இனிதுமற் றின்னாதே.' (கலி. 80)

19. உறுபெயர் கேட்டல்: தலைவனது பெரும்புகழ் கேட்டு மகிழ்வது.

'நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.' (குறள்: 1199)

'மென்றோள் நெகிழ்ந்தான் தகையல்லால்[1] யான்காணேன்
நன்றுதீ தென்று பிற' (கலி. 142)

20. கலக்கம்: சொல்லத்தகாதன சொல்லுதல்.

'பிறங்கிரு முன்னீர் வெறுமணல் ஆகப்
புறங்காலிற் போக இறைப்பேன் முயலின்
அறம்புணை ஆகலும் உண்டு ....' (கலி. 144)

---

1 திறல்யால் என்றும் பாடம்.

இனி, 'கலக்கமும் நலத்தக நாடின் அதுவே' என்றது, கலக்கம் என்பதனை வேறு பெயர்த்து வைத்தது என்னை? எனின், இக்காலத்துத் தலைவிக்கு இதனின் இங்கு நிகழும் மெய்ப்பாட்டுக் குறிப்புள்ளன அல்ல என்பது அறிவித்தற்கு' என்பது பேராசிரியர் விளக்கமாகும். அதனால் தலைவனுக்காயின் இதனின் இங்கு வருவதோர் கலக்கமும் உளதாகும். அவை மடலூர்தலே, வரை பாய்தலே முதலியன.

'மாவென மடலும் ஊர்ப, பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப,
மறுகின் ஆர்க்கவும் படுப,
பிறிதும் ஆகுப காமங் காழ்க் கொளினே.' (குறுந். 17)

இவ்வாறு கூறவே இந் நூற்பாவுள் கூறிய இருபது மெய்ப்பாடும் தலைவனுக்கும் ஏற்ற வகையால் கொள்ளப்படும்.

வரைவியல் மெய்ப்பாடு

இது வரையில் களவொழுக்க மெய்ப்பாடுகள் கூறினர். இனி, வரைந்தெய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடுகள் இவையென உணர்த்துகிறார். அது வருமாறு:

'முட்டுவயின் கழறல், முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகல்தல், அவன் புணர்வு மறுத்தல்,
தூது முனிவின்மை, துஞ்சிச் சேர்தல்,
காதல் கைம்மிகல், கட்டுரை இன்மை என்று
ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்.' (மெய்ப். 23)

1. முட்டுவயின் கழறல்: இற்செறிப்பு முதலிய கூட்டத்திற்கு இடையூறு உற்றுழி வரைவு வற்புறுத்துவது.

'நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றால் தோழிநம் களவே.' (அகம். 122)

இது தலைவன் சிறைப்புறத்தானாக அவன் கேட்ப உரைத்தது.

2. முனிவு மெய்ந் நிறுத்தல்: தலைவி உள்ளத்து வரையாக் கூட்டத்தின் வெறுப்பு வெளிப்பட நிற்கும் நிலை.

'இன்னுயிர் கழிவது ஆயினும் நின்மகள்
ஆய்மலர் உண்கண் பசலை
காம நோய்எனச் செப்பாதீமே.' (அகம். 52)

'நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்த காதலர்
அமைவிலர் ஆகுதல் நோமென் நெஞ்சே.' (குறுந். 4)

3. அச்சத்தின் அகல்தல்: தலைவன்கண் வரும் ஏதம் அஞ்சி அவனை நீங்கும் குறிப்பு.

'மன்றுபா டவிந்து......மயங்கி
இன்னம் ஆகவும் நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது கைம்மிக்கு
இறும்புபட் டிருளிய விட்டரும் சிலம்பின்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கல்மிசைச் சிறுநெறி
மாரி வானம் தலைஇ நீர்வார்
பிட்டரும் கண்ண படுகுழி இயவின்
இருளிடை மதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே.' (அகம். 128)

(இதன் கருத்தாவது: நாம் அவர் இருளிடை வருதலில் ஏதம் அஞ்சி அகன்று அவலித்திருப்பவும் என்னையும் நின்னையும் கேளாது என் நெஞ்சு போவானேன் என்பது.)

4. அவன் புணர்வு மறுத்தல்: இரவுக் குறியும் பகற்குறியும் விலக்கு வதற்கு எழுந்த உள்ள நிகழ்ச்சி; அதாவது வரையாது வந்தொழுகும் தலைவன் கூட்டம் மறுத்தல்.

''நல்வரை நாட நீவரின்
மெல்லிய லோரும் தான்வா ழலளே''[1] (அகம். 12)

5. தூது முனிவின்மை: புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறையானும் சொல்லுதல்.

'கானலும் கழறாது கழியும் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிதியாதும் இலனே
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கதழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்
தண்டாது ஊதிய வண்டினம் களிசிறந்து
பறவை இளரும் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ' (அகத். 170)

எனவுழி, கூறப்பட்டன வெல்லாம் தூதாதலின் தூது விடுதலை வெறாத தன்மை கூறியதாம்.

6. துஞ்சிச் சேர்தல்: மனையகத்துப் பொய்த்துயிலோடு மடிந்து வைகுதல். (துஞ்சுதல் எனினும் மடிதல் எனினும் ஒக்கும். வேண்டிய வாறு கூட்டம் நிகழப் பெறுமையின் தலைமகனோடு புலந்தாள்போல மடிந்து ஒன்றுமாகலின் அதனை அஞ்சிச் சேர்தல் என்றார்.)

'என்மலைந் தனன்கொல் தானே தன்மலை
ஆரம் நாறும் மார்பினன்
மாரி யானையின் வந்து நின்றனனே.' (குறுந். 161)

---

1. இது தலைவன் குறிப்பினைத் தோழி கூறியதாகலான் அவன் புணர்வு மறுத்த லெனப்படும். இது 'ஒன்றித் தோன்றும் தோழி மேன' (39) என்னும் இலக்கணத்தால் தோழி குறிப்பாயினும் தலைவன் குறிப்பெனவே படும் என்பது (508) கொள்க.—பேராசிரியர் உரை.

என்ன காரியம் மேற்கொண்டு வந்தான் என்றமையின் இது துஞ்சிச் சேர்தல் ஆயிற்று. அல்லாக்கால் அங்ஙனம் சொல்லுதல் அன்பழிவு எனப்படும் என்பர் பேராசிரியர்.

7. காதல் கைம்மிகல்: காமம் கையிகந்த வழி நிகழும் உள்ள நிகழ்ச்சி.

'உள்ளின் உள்ளம் வேமே, உள்ளாது
இருப்பின் எம்அளவைத் தன்றே, வருத்தின்
வான்தோய்வு அற்றே காமம்
சான்றோர் அல்லர்எம் மரீஇ யோரே.' (குறுந் 102)

நிறையுடையேன் என்பேன்மன் யானோ, என்காமம்
மறையிறந்து மன்று படும்.' (குறள். 1254)

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.' (குறள். 1293)

8. கட்டுரையின்மை: உரை மறுத்திருத்தல்.

'யான்தன் அறிவல் தான்அறி யலளே
யாங்கா குவள்கொல் தானே
பெருமுது செல்வர் ஒருமட மகளே.' (குறுந். 337)

வரைந்தெய்தியபின் வருவன

இனி, அழிவில் கூட்டம் நிகழ்ந்தபின் வருதற்குரிய மெய்ப்பாடு இவை என்று கூறுகிறார்.

'தெய்வம் அஞ்சல், புரையறம் தெளிதல்,
இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல்,
புணர்ந்துழி உண்மை பொழுதுமறுப் பாக்கம்
அருள்மிக உடைமை அன்புதொக நிற்றல்
பிரிவாற்றாமை மறைந்தவை உரைத்தல்
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே.' (மெய்ப். 24)

செப்பிய பொருள் என்பது அழிவில் கூட்டம் அன்றே? அதற்கு முற்படும் மெய்ப்பாடு எட்டனையும் அழிவில் கூட்டம் என்றதுபோல், அதற்குப் பிற்படும் மெய்ப்பாட்டினையும் அழிவில் கூட்டம் என்பார் மேல் கூறிய அழிவில் கூட்டமே இவையும் எனக் கூறியது. எனவே, வரைந்து எய்திய பின்னர், தலைவன் மனத்து நிகழ்வன இவை எனக் கூறினாராம்.

1. தெய்வம் அஞ்சல்: சூள் பொய்த்தல், பரத்தையர் கூட்டம் முதலிய தலைவன் தவறுகளுக்குக் கடவுள் வருத்தும் எனத் தலைவி அஞ்சுவது.

'சினைவாடச் சிறக்கும்நின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ.' (கலி. 16)

2. புரையறம் தெளிதல்: தனக்கொத்த இல்லறம் இன்னதென்று தலைவி மனத்துப் படுதல்.

'விரியுளைக் கலிமான் தேரொடும் வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்பல்......' (கலி. 75)

இது, அவனொடு சொல்லாடாது ஊடி இருப்பேன் ஆயின் விருந்து கொண்டு புகுதரும்: அதனான் ஊடலை மறப்பேன் என்றமையின் புரையறம் தெளிதல் ஆயிற்று.

3. இல்லது காய்தல்: களவின்கண்போலாது தலைவனுக்கு இல்லாத தனை உண்டாக்கிக் கொண்டு காய்தல்.

''கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.' (குறள். 1318)

4. உள்ளது உவர்த்தல்: இது தலைவன் மெய்யாகச் செய்யும் அன்பினை மறுத்துப் பொய்யென வெறுத்தல்.

''வேப்புநனை யன்ன நெடுங்கண்நீர் ஞெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி அயலது
ஒலித்த பகன்றை இருஞ்சேற் றள்ளல்
திதலையின் வரிப்ப ஓடி விரைந்துதன்
நீர்மலி மண்ணளைச் செறியும் ஊர!' (அகம். 76)

இதில் தலைமகன் வாயில் வேண்டச் சென்றானைப் பிறர் கூறும் பழிக்கு வந்தாய் என்றமையின் உள்ளது உவத்தல் ஆயிற்று.

5. புணர்ந்துழி உண்மை:[1] முன்கூறிய இல்லது காய்தலும், உள்ளது காய்தலும் ஆகிய விகாரம் இன்றிப் புணர்ச்சிக் காலத்துச் செய்வன சென்ற உள்ள நிகழ்ச்சி.

''குளிரும் பருவத்தே யாயினும் தென்றல்
வளிஎறியின் மெய்யிற் கினிதாம்—ஒளிஇழாய்
ஊடி இருப்பினும் ஊரன்நறு மேனி
கூடல் இனிதாம் எனக்கு.' (ஐந்திணை ஐம்பது, 30)

6. பொழுது மறுப்பாக்கம்: களவின்கண் பகற்குறியும் இரவுக்குறியும் என வரையறுத்தால் போல்வதோர் வரையறை இன்மையின் அப்பொழுதினை மறுத்தலாகிய ஆக்கம் என்பது. எனவே, களவுக் காலத்துப் பொழுது வரைந்து பட்ட இடர்ப்பாட்டின் நீங்கிய மனமகிழ்ச்சி ஆக்கம் எனப்படும்.

''அயிரை பரந்த அந்தண் பழனத்து
ஏந்தெழில் மலர்ந்த தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்கல் ஆனீர்
தொழுதுகாண் பிறையின் தோன்றி யாம்நுமக்கு
அரியேம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோயானே.' (குறுந். 178)

1. புணர்ந்துழி உண்மைப் பொழுது மறுப்பாக்கம்' என்ற தொடரைப் புணர்ந்துழி உண்மை' 'பொழுது மறுப்பாக்கம்' என்று பிரித்தெண்ணிப் பதினொன்றாக்குவர் பேராசிரியர், அஃதே இங்குக் கொள்ளப்படுவது.

இதனுள் தொழுது காண் பிறையில் தோன்றினம் என்பது களவுக் காலத்து இடையீடு பெருகிற்று எனக் கூறி அங்ஙனம் வரைந்த பொழுதினை மறுத்த காலத்து நடுங்கலானீர் என்றமையின் அப்பொருட்டாயிற்று.

7. அருள்மிக உடைமை: முன் களவில் தலைவன் அருளை வேண்டிய தலைவி கற்பில் அவனை அருளொடு பேணுவது.

'நெடிய திரண்ட தோள்வளை நெகிழ்த்த
கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை இன்முகம் திரியாது
கடவுள் கற்பின் அவனெதிர் பேணி
மடவை மன்ற நீஎனக் கடவுபு
துனியல், வாழி தோழி, சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ காணுங்காலே.' (குறுந். 252)

இப்பாட்டில் பழிக்குரிய தலைவன் தவறுரைப்பதும் இழுக்கென வெறுக்கும் தலைவியின் அருள் நயத்தற்குரியது என்று பாராட்டி மனைத்தக்க மாண்புடைய மனைவி இயல்பு, 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணுதல்' என்னும் திருவள்ளுவர் கொள்கையும் இவ் உண்மையை வலியுறுத்தும் என்று விளக்குவார் பேராசிரியர் பாரதியார்.

8. அன்புதொக நிற்றல்: களவுக் காலத்துப் போலப் பிரிந்த காலத்தும் தலைவன்பால் காதல் குறையாது, இல்லறத்தின்மேல் விருப்பினால் ஒருங்குதொக நிற்றல்.

'என்போற்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறைய
என்ன கடத்தளோ மற்றே.' (அகம். 186)

9. பிரிவாற்றாமை: களவில் பிரிவாற்றுதல் வேண்டுமாறு போலக் கற்பினுள் பிரிவாற்றுதல் வேண்டப்படாமை.

''இடனின்றி இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருள் ஆகுமோ
வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை
(கலி. 2)

பிரிவாற்றாமையின் இவள் இறந்துபடுவாள்; பின்னை பொருள் கொண்டு ஆற்றும் இல்லறம் யாண்டையது எனத் தலைவி பிரிவாற்றாமை கூறியது.

10. மறந்தவை உரைத்தல்: களவுக் காலத்து நிகழ்ந்தனவற்றைக் கற்புக் காலத்துக் கூறுதல். இதனைக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்' (தொல். கற்பு. சூத் 5) என்புழித் தோன்றிய மனக்குறிப்பு என்பர் பேராசிரியர்.

'முயங்கல் விடாஅ இவையென மயங்கி
யானோம் என்னவும் ஒல்லார் தாம் அன்று
இவைபா ராட்டிய பருவமும் உளவே
இனியே,
புதல்வன் தடுத்த பாலொடு தடைஇத்
திதலை அணிந்த கேழ்கிளர் அகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுதல் தாம் அஞ்சினரே.' (அகம். 26)

இது மறைவில் நிகழ்ந்ததைத் தலைவி பின்னர்த் தோழிக்கு எடுத்துரைத்தது.

11. புறஞ்சொல் மாணுக்கிளவி: தலைவனுக்கு வந்த புறஞ் சொல்லின் பொல்லாங்கு குறித்து எழுந்த கிளவி. அவனுக்கு வந்த பழி காத்தலும் தனக்கு அறமாகலின் அதுவும் கற்பின்கண் நிகழும்.

"அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு
யானெவன் செய்கோ என்றி, யானது
நகையென உணரேன் ஆயின்
என்ஞ் குவைகொல் நன்னுதல் நீயே.' (குறுந். 96)

இப்பாட்டில் தலைவனைப் புறம்பழித்த தோழியைத் தலைவி வெகுளும் இம் மெய்ப்பாட்டினைக் காண்க.

இச் சூத்திரத்துக் காட்டிய மெய்ப்பாடுகள் பத்தென்னுது பதினொன்று என்று கூறும் பேராசிரியர், 'ஒன்பதும் குழவியொடு இளமைப் பெயரே (தொல். பொருள். 556) என்னும் மரபியற் சூத்திரம் போல் மொழிமாற்றி உரைத்து, சிறந்த பத்தும் புறஞ்சொல் மாணுக் கிளவியொடு தொகைஇ எனக் கூட்டிக் கூறினர்.

இனி, இளம்பூரணர் இச் சூத்திரத்து மெய்ப்பாடு பத்து எனவே எண்ணினர். ஆயின் அவர் மறைந்தவை உரைத்தல், புறஞ்சொல் மாணுக்கிளவி என்னும் இரண்டையும் இணைத்து ஒன்றாகக்கொண்டு பத்தாக்கிக் காட்டுவர். பேராசிரியர் பாரதியார் புணர்ந்துழி உண்மை பொழுது மறுப்பாக்கம் என்று ஒரு தொடராக்கி, மணந்து வாழ்வார் கற்புக் காதலுக்கு இடையூறு காலத்தொடை கருதாது ஒழுகுதலாம் என்று பொருள் கூறி,

'காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்' (குறுந். 32)

என்வரும் குறுந்தொகைப்பாட்டை எடுத்துக்காட்டாகத் தருவர்.

தலையாய காதல் நிலைக்கான ஒப்பு வகை

இனி, தலையாய காதல்நிலையாவதற்குக் காதலர் இருபாலார்க்கும் வேண்டப்படும் ஒப்புமை வகையினை அடுத்த நூற்பாவில் கூறுகிறார். அது வருமாறு:

'பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.' (மெய்ப். 25)

1. பிறப்பு: ஒத்துத் தோன்றிய குடிநிலை
2. குடிநிலை: ஒத்த ஒழுக்கநிலை
3. ஆண்மை: ஒத்த ஆண்மை; ஆண்மையாவது இங்கு ஆளும் திறம் என்பதாம்.
4. ஆண்டு: ஒத்த பருவம் (பருவம்: வயது)
5. உருவு: ஒத்த வடிவம் (வடிவம் : வனப்பு)
6. நிறுத்த காம வாயில்: ஒத்த அன்பு (அன்பு : காதல் நிலை)
7. நிறை அடக்கம் (மறை பிறர் அறியாது நெஞ்சினை நிறுத்தல்.)
8. அருள் : ஒத்த பரிவுடைமை
9. உணர்வு : ஒத்த அறிவு
10. திரு : ஒத்த செல்வம்.[1]

இவை தலைவனுக்கு மெய்ப்பாடெனப் படாவோ எனின் படும்; ஆயினும் அஃது ஒப்பினது வகையென்றதனுனே தலைமகட்கே உரிமை கொளப்படும்.[2]

காமக்குறிப்பிற்கு ஆகாதவை

இனி, காமக்குறிப்பு ஆகாதவை இவை என்று அடுத்த நூற்பாவில் கூறுகிறுர் ஆசிரியர் தொல்காப்பியர். அது வருமாறு :

'நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை
என்றிவை யின்மை என்மனுர் புலவர்.' (மெய்ப். 26)

1. நிம்பிரி: பொருமை தோன்றும் குறிப்பு.
2. கொடுமை: கேடு சூழ நினையும் தீவினையுள்ளம்.
3. வியப்பு: தலைமகள்பால் தெய்வத்தன்மை கண்டான்போல வியந்தொழுகுதல்.
4. புறமொழி: புறங்கூற்று.
5. வன்சொல்: கண்ணேட்டமின்றிச் சொல்லும் சொற்கள்.
6. பொச்சாப்பு: கடைப்பிடியின்றி நெகிழ்ந்திருத்தல்.

---

1. செல்வம் என்பது இங்குப் பொருள் பற்றியதன்று; உள்ள மலர்ச்சி' 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்பதனுலும் இப்பொருட்டாதல் அறிக' என்று விளக்குகிறுர் பேராசிரியர் பாரதியார்.
2. இவற்றிற்கு உதாரணங்கள் விரிவஞ்சி விடுக்கப்பெற்றன.

7. மடிமை: சோம்பு உள்ளம்.

8. குடிமையின்புறல்: தலைவி தன் குடி உயர்வு உள்ளி உவத்தல்.[1]

9. ஏழைமை மறப்பு: நுழைந்த உணர்வின்றிவரும் வெண்மை என்பர் பேராசிரியர். பாரதியார் இதனைத் தலைவி தன் வாழ்வு மறுத்தல் என்று பொருள் கூறுவர்[2]

10. ஒப்புமை: தலைவனைப் பிறரோடு ஒப்ப நினைப்பது.

இவையெல்லாம் இன்றிவரும் மெய்ப்பாடு தலைவியின்கண் நிகழும் என்பது புலவர் கொள்கை.

மெய்ப்பாடு உணரப் பொது அறிவு வேண்டும்

இனி, மேற்கூறிய மெய்ப்பாட்டுக்கெல்லாம் புறநடை கூறுகிறார்.

'கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே'
(மெய்ப். 27)

கண்ணாலும் செவியானும் யாப்புற அறியும் அறிவுடையார்க்கல்லது மெய்ப்பாட்டுப் பொருள் கொள்வது அரியது.

''இரண்டறி கள்விநம் காத லோளே
முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்தள் ஆகித்
தமரோர் அன்னள் வைகறை யானே.' (குறுந். 312)

இதில் அமரா முகத்தள் ஆதலும், தமரோர் அன்னள் ஆதலும் தலைமகற்குப் புலனாகலின் அவை கண்ணுணர்வு எனப்படும்.

'ஒழிகோ யானென அழிதகக் கூறி' (அகம். 110)

என்பதில் தலைவன் மனத்து நிகழ்ந்தவழி எல்லாம் 'ஒழிகோ யான்' என்ற உரையானே உணர்ந்தமையின் அது செவியுணர்வு எனப்படும்.

''செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.' (குறள் 1097)

இத்திருக்குறளில் தலைவியின் சிறுசொல்லின் அன்புண்மையினைச் செவியினும், செறுநோக்கின் அன்புண்மையைக் கண்ணினும் தலைவன்

1. இதனைக் குடிமை என்றும், இன்புறல் என்றும் வேறுகப் பிரித்துக்கூட்டுவர் பேராசிரியர்.

2. ஏழைமை எளிமை. அதாவது தணிவுப் பொருட்டு. தணிவு உணர்வு மறப்பது அன்பொழுக்கத்திற்கு ஆகாத தவறு, இனி, ஏழைமை என்பது வெண்மை அறிவு எனின் தலைவிக்கு வேண்டப்படும் புரையறம் அறிதல் கூடாதாகலின் அது பொருளன்று என்று விளக்குவர் பாரதியார். இதன் விரிவு அவர்தம் நூலில் படித்து இன்புறத்தக்கது.

தன் நுண்ணுணர்வால் திண்ணிதின் உணர்ந்தான் என்பது அறிந்து இன்புறத்தக்கது.

பழைய மரபினின்று மாறும் புதுமை

அகப்பொருள் நெறிமுறைபற்றிப் பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் வகுத்துரைக்கும் செய்திகளும், அச்செய்திகள் பலவற்றிற்கும் ஏற்ற இலக்கியமாக இன்று கிட்டியுள்ள சங்கப் பாடல்களின் பாடுபொருள்களும் உணர்த்தும் மரபு பண்டைப் புலவர் மேற்கொண்ட புலனெறி வழக்கமாகும். பொதுவாக அகப் பாடல்கள் கலிப்பா, பரிபாடல்களால் இயன்றுவரும் எனத் தொல்காப்பியர் சுட்டிய பழைய மரபுக்கு ஏற்பக் கலித்தொகை ஒன்றையே இன்று காண்கிறோம். அவர் சுட்டாத அகவற்பாவாலாகிய அகப் பாடல்களே சங்ககாலத்து மிகுந்துள்ளன என்பதற்கு ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்னும் சங்கத்தொகை நூல்களே சான்றும். சங்கம் மருவிய நூல்கள் எனப்படும் பிற்சங்க நூல்களாகிய பதினெண் கீழ்க்கணக்கினுள் அடங்கிய ஐந்திணை நூல்கள் ஆறும் நாலடி வெண்பாவினால் இயன்றுள்ளன.

> "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்
> கலியே பரிபாட்டு ஆயிரு மருங்கின்
> உரிய தாகும் என்மனார் புலவர்"
>
> (தொல். பொருள். அகத் 56)

என அகப்பொருள் பாடுதற்குரிய பாவகைபற்றி உரைக்கும் நூற்பா, 'கலியே பரிபாட்டு ஆயிருவகையினும்' என்று அந்த இருவகைப் பாவுமே உரித்தாகும் என்று எண்ணிட்டுக் காட்டுகிறது. மேலும், இது வழிவழி வரும் முன்னையோர் நெறி என்பதனை, 'என்மனார் புலவர்' என அவர் எடுத்துக்காட்டுதலால் புலனாகும். இதனால் ஆசிரியர் தொல்காப்பியர் கடைச்சங்க காலத்துக்கும் பல நூற்றாண்டுகள் முற்பட்டு வாழ்ந்தவர் என்பதும், அவர் சுட்டிய முந்தை நெறி அவர் காலத்திலும் தொடர்ந்து வந்துள்ளது என்பதும் அறியலாகும்.

வள்ளுவர் வழங்கும் காமத்துப்பால்

திருவள்ளுவர் குறள் வெண்பாவினாலேயே காமப்பொருளாகிய அகப்பொருளைக் கற்பார் உளம் முகிழ அற்புதமாகப் படைத்தளித்துள்ளார்.

அகப்பாடல்கள் ஐந்திணையடிப்படையில் முதற்பொருள், கருப்பொருள்களின் பின்னணியில் தலைவன்-தலைவியரை முதன்மையாக வைத்து, தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், கண்டோர், ஊரார், பாணன், விறலி முதலியோர் கூற்றாகப் படைக்கப்படுதல் கவிமரபு. வள்ளுவர் காமத்துப்பாலில் ஐந்திணை அமைப்பு இல்லை; களவு கற்பு என்னும் கைகோளும் திட்டவட்டமாய் வெளிப்படையாய்த் தெரியவில்லை. தலைவன், தலைவி, தோழி, பாங்கன் கூற்றுகளாக உரைகாரர் வழி நாம் காணினும் முதன்மையாகத் தலைவன்-தலைவியர் பேச்சுக்களே மிகுதியாயுள்ளன. கேட்போர்பற்றியும் வரையறுத்துச் சுட்டுதல் எளிதன்று. இயற்கைப் புணர்ச்சி தொடங்கி அகப்பொருள் நிகழ்ச்சிகளைப்

பிற்காலத்துக் கோவை போலத் தொடர்பாகவும் தரவில்லை. சிற்சில காட்சிகளே காமத்துப்பால் பகுதியில் சிறப்பாக எடுத்தோதப்படு கின்றன.

குறளில் உரிப்பொருளே சிறந்து நிற்றல்

சுருங்கிய ஈரடிகளைக் கொண்ட குறட்பாவில் முதற்பொருள், கருப் பொருள் குறிப்புகள் பின்னிலமாக அமைதல் எளிதன்று. முதல் கரு உரி என்னும் மூவகைப் பொருளினும் சிறப்புடைத்தாய உரிப்பொரு ளையே குறட்பாக்கள்வழி வெளிப்படுத்தியுள்ளார். ஒத்த தலைவன், தலைவியர் முதலியோர் வாயிலாக அவர்தம் உள்ளத்துணர்வுகள் வெளிப் படுதல் மெய்ப்பாடுகளினால்தான். ஆகவே முக்கியமாக மெய்ப்பாடுகளை முதன்மையாய் வைத்து, நாடகப்பாங்கில் அகப்பொருள் காட்சிகள் சில வற்றைக் காமத்துப்பால் வெளிப்படுத்துகிறது.

மெய்ப்பாடு விளங்கும் கூற்றுகள்

பழைய அகப்பொருள் மரபுகளை உளத்தில் கொண்ட பண்டை உரைகாரர்கள் ஐந்திணை அடிப்படையிலும், களவு கற்பு என்னும் கைகோள் வகைகளிலும், ஆண் பெண் இருபாலார் கூற்றுகளாகக் கூற்று வகைப்படுத்தும் காமத்துப்பால் அதிகாரங்களை அடக்க முயன்றுள்ள னர். இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழி யிற் கூட்டம் என்னும் முக்கிய கூறுகளாகவும் குறள்களைப் பரிமேலழகர் முதலியோர் பாகுபடுத்த முற்படுகின்றனர். ஆனால், இத்தகு பாகுபாடு கள் பற்றிய குறிப்புகள் குறட்பாக்களில் வெளிப்படையாய்த் தென் படவே இல்லை. பழைய மரபுகளை மனத்துள் கொண்டு அவை இயல்லாறு ஊகமாக உரைக்கப்படுவனவே. தலைவன், தலைவி முதலியோர் வாய்ப் பிறப்பாக வரும் பாடல்களில் அவர்தம் மெய்ப்பாடுகள் நன்கு புலனா கின்றன ஆகவே, காமத்துப்பால் பகுதியில் இன்ப உணர்வு வெளிப் பாடுகளையே நாம் விஞ்சக் காணலாம்.

'குறளின் செய்தி' தரும் விளக்கம்

ஆசிரியர் ப. அருணாசலம் அவர்கள் எழுதியுள்ள 'குறளின் செய்தி என்னும் நூலில், காமத்துப்பால் பற்றி விளக்கும் பகுதிகள் வள்ளுவர் நிகழ்ச்சிகளை மெய்ப்பாட்டின் அடிப்படையிலேயே அமைத்துத் தந்துள் ளார் என்பதனை ஆங்காங்கே குறிப்பிட்டுக் காட்டுகிறார்கள். இக்கருத் துக் குறட்பாக்களின் தன்மைக்கும் அமைப்பிற்கும் பொருத்தமாகும் எனத் தோன்றுகிறது

> நிகழ்ச்சிகளை வகைப்படுத்திக் கூறும் நெறியில் செல்லாது பெற்ற அனுபவத்தை, உணர்ச்சியைப் புலப்படுத்துவதே வள்ளுவர் நெறி யாகும். சுருங்கக்கூறின் பெரிதும் மெய்ப்பாட்டினைப் பொருளாகக் கொண்டே காமத்துப்பாலைப் பாடி முடித்தார் எனக் கொள்ள வேண்டும் ''
>
> (குறளின் செய்தி, பக். 186)

என ஆசிரியர் அருணாசலம் அவர்கள் முதலில் பொதுக் கொள்கையாகச் சுட்டித் தம் கட்டுரை முழுமையும் இக்கருத்தின் வெளிப்பாடாக அமைத்துள்ளார்.

மேலும், இது குறித்து இவர்தரும் விளக்கவுரையும் இங்கு உடன் வைத்துக் காண்பது பொருத்தமாக அமையும்.

"திருவள்ளுவர் காமத்துப்பாலைக் களவு என்றும் கற்பு என்றும் பாகுபடுத்தினர் என்பதும் ஐயத்திற்குரியது; பாகுபடுத்தினர் என்று கூறுகிறவர்களே புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை என்ற மூன்றையும் கற்பியலில் அடக்குவர். அவ்வாறாயின்,

'ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்'

(குறள் 1109)

என்று களவியலில் ஊடலுணர்ந்தபின் நிகழும் 'புணர்ச்சி' பற்றிக் கூறியிருக்க வேண்டாம். காம நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் களவு, கற்பு என்று கூறினர் எனக் கொள்வதைவிட, அகவாழ்க்கையில் களவு, கற்பு என்னும் கைகோள் இரண்டிலும் நிகழும் மெய்ப்பாடுகளையே, அதிகாரங்களின் தலைப்புகளாகக்கொண்டு சுவைபட அவற்றைக் கூறுகிறார் என்றலே பொருந்துவதாகவுள்ளது. சில மெய்ப்பாடுகள்—தகையணங்குறுத்தல், குறிப்பறிதல் போன்றவை . களவுக்கே சிறந்தன. சில, பிரிவாற்றாமை, புலவி முதலியன கற்புக்குச் சிறந்தன என்னலாம் மேலும் இங்குக் கூறிய அதிகாரங்கள் பலவும் மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியர் கூறுவனவே. மெய்ப்பாடுகள் பலவற்றுக்குத் திருக்குறட்பாக்களையே இளம்பூரணர் மேற்கோளாகக் காட்டுவதும் கருதத்தக்கது."

(குறளின் செய்தி, பக். 191-192)

ஒவ்வொரு குறளுமே ஒருதனிக்காட்சி

கூர்ந்து நோக்கினால் ஒவ்வொரு குறளும் காமப்பொருளாகக் காட்டப்பெறும் காதலர் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு தனிச்செய்தியின் புலப்பாடாக உள்ளமை காணலாம். இது குறித்து டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தாம் எழுதிய 'வள்ளுவர் கண்ட நாடும் காமமும்' என்னும் நூலில் குறிப்பிடும் கருத்துரை காணத் தக்கது.

"காமத்துப்பாலில் ஒவ்வொரு திருக்குறளும் காதலின் உயர் நிலையை விளக்கத்தக்க உலக நிகழ்ச்சி ஒன்றில் முகிழ்த்தெழுந்து, உள்ளடங்காத இன்ப உணர்ச்சிப் பேச்சாக நின்று, ஒழுக்கமணம் வீசி, அன்புத்தேன் பிலிற்றி மலர்ந்து வரும் தமிழ்ப் பாடற்பூ ஆகும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு காதற்காப்பியம். ஒரு பேச்சில் திரண்டு விளங்கும் நாடகம். இன்றைய வழக்கில் விளக்கினால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடகப்பாத்திரத்தின் பேச்சாக அமையும் சிறுகதை எனலாம். 250 சிறுகதைகளும் 250 காதல்துறைகளை விளக்கும் வழியாகக் காதலின் கடவுள் தன்மையை விளக்குகின்றன."

(வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பக், 197-198)

பேராசிரியர் அவர்களின் இந்தக் கருத்துரை காமத்துப்பால் குறள் களின் போக்கினை விளக்கும் நல்லதொரு விளக்கவுரையாகும். உள் ளுணர்வு வெளிப்பாடுகளையே மையமாக வைத்து அகம் பற்றிய அன்புடைமைக் காமம் வள்ளுவர் குறளில் ஒரு புத்துருவம் பெற்றுத் திகழ்கிறது என்பது ஆழ்ந்து நோக்குவோர்க்கு நன்கு புலனாகும்.

'தானே முழுதுணர்ந்து, தண்தமிழின் வெண்குறளால்,
ஆன அறம்முதலா அந்நான்கும்—ஏனோருக்கு
ஊழின் உரைத்தார்க்கும் ஒண்நீர் முகிலுக்கும்
வாழிஉலகு என்ஆற்றும் மற்று.'

— நக்கீரர்

'அறம்தகளி, ஆன்ற பொருள்திரி, இன்பு
சிறந்த நெய், செஞ்சொல் தீ, தண்டு—குறும்பாவா,
வள்ளுவனார் ஏற்றினார், வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.'

—நப்பாலத்தனார்

'புத்தகக் காட்டிலே — புகுந்து
புத்தி மயங்குவதேன்?
பத்தியொ டிந்நூலை — நிதமும்
படித்தல் போதுமையா!'

'ஓதி அறம் தெளிவீர் — பொருளின்
உண்மை உணர்ந்திடுவீர்;
காதலின் காட்சியெல்லாம் — நன்கு
கண்டு களித்திடுவீர்.'

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

பொருட்குறிப்பு அகராதி

(எண் : பக்க எண்)

அ

அகத்திணைக் காட்சிகள் 21
அகநானூற்றின் அமைப்புச் சிறப்பு 19
அகப்பாடல் 1
அகப்புறப் பொது மெய்ப்பாடுகள் 218
அகப்புறப் பொருள்களின் பண்புகள் 37
அகப்புறம் 5
அகப்பொருட்குச் சிறப்பு அளிப்பவை 221
அகப்பொருட் செய்யுட்களின் அங்கங்கள் 3
அகப்பொருட் பொது இயல் மரபுகள் 1
அகப்பொருள் 1
அகப்பொருள் இருபத்தைந்து பகுதிகள் 78
அகப்பொருள் நெறி முறை 1-16
அகப்பொருள் மரபுகள் 8
அகப்பொருளின் வகைகள் 2
அகம் 1
அகம் என்றது ஓர் ஆகுபெயர் 1
அகவொழுக்கம் 1
அகன்றணைவுரைத்தல் 93
அச்சத்தின் அகல்தல் 237
அச்சம் 39
அச்ச வகை நான்கு 219
அசுரம் 39
அசைவு 219
அடக்கம் 221
அடலெடுத்துரைத்தல் 96
அடி நினைந்து இரங்கல் 97
அடியொடு வழி நினைந்து அவன் உளம் வாடல் 95
அணிந்தவை திருத்தல் 225
அணைந்தவழி ஊடல் 115
அம்பல் 58
அயர்வு அகற்றல் 96
அயலவர் மகட்பேசி உரைத்தல் 94
அயலறிவுரைத்தவள் அழுக்க மெய்தல் 110
அயலுரை உரைத்து வரைவு கடாதல் 90
அயோமுகியின் அடா முறைக் காதல் 134
அரற்றல் 222
அருட்குணம் உரைத்தல் 79
அருணாசலம், ப. 246
அருமறை 145
அருமை அறிதல் 80
அருமை கேட்டறிதல் 95
அருமை சாற்றல் 52
அருமையுரைத்தல் 95
அருவிலையுரைத்தல் 95
அருள் 243
அருள் மிக உடைமை 241
அருளல் 221
அருளால் அரிதெனவிலக்கல் 47, 85
அல்குல் தைவரல் 225
அல்லகுறி அறிவித்தல் 93
அலர் 58

அலர் அறிவுறுத்தல் 93
அலரால் வரும் நன்மை 177
அவ்விடத்திற்கேகல் 81
அவயவங்கூறல் 88
அவயவம் எழுதல் அரிதென
விலக்கல் 47,85
அவன் குறிப்பறிதல் 84
அவன் தமர் உவத்தல் 235
அவன் புணர்வு மறுத்தல் 228
அழகு பற்றிய உயர்
தத்துவம் 154
அழுகை 212,218
அழுங்கு தாய்க் குரைத்தல் 98
அறத்தொடு நிலை 62
அறத்தொடு நிற்கும் பாங்கு 21
அறத்தொடு நிற்கும்
முறைமை 52
அறத்தொடு
நிற்றல் 21,31,96,102
அறத்தொடு நிற்றலை
உரைத்தல் 101
அறன் அளித்து உரைத்தல் 235
அறியாள் போறல் 86
அறியாள் போன்று
நினைவு கேட்டல் 50,88
அறிவு 29
அறிவு நாடல் 83
அறுவகைப் பிரிவு 13
அன்பின் இரண்டாங் கூறு 224
அன்பின் விளைவே அகத்
திணை யாப்பு 77
அன்பு 37,221
அன்பு தொக நிற்றல் 241
அன்னமொடு ஆய்தல் 93
அன்னமோடு அழிதல் 94

ஆ

ஆங்கு நெஞ்சழிதல் 235
ஆடவர்-மகளிர் இன்பக்
களியாட்டங்கள் 142
ஆடவர் வினைத்திறம் 179
ஆடிடத்து உய்த்தல் 79
ஆடிடம் படர்தல் 88
ஆடிடம் புகுதல் 89
ஆண்டு 243
ஆண்-பெண் சமத்துவம் 199
ஆண்மை 243
ஆதாரங்கூறல் 95
ஆயத்துய்த்தல் 82,89
ஆர்வம் 151
ஆராய்ச்சி 222
ஆரிடம் 39
ஆலம்பேரி சாத்தனார் 32
ஆற்றாது புலம்பல் 107
ஆற்றாதுரைத்தல் 85,92
ஆற்றாமை கூறல் 107
ஆறு இன்னாமை 67
ஆறு பார்த்துற்ற அச்சக்
கிளவி 66,93

இ

இகழ்ச்சி நினைந்து அழிதல் 107
இசையாமை கூறி மறுத்தல் 87
இடத்துய்த்து நீங்கல் 89,92
இடந்தலைப்பாடு 9,27,82
இடந்தலைப்பாடு முதலிய
பின்நிகழ் காதல் 222
இடம் 2,76
இடம் அணித்துக் கூறி
வற்புறுத்தல் 79
இடுக்கண் 226
இடைநிலை மெய்ப்பாடுகள் 221
இடை வினாதல் 83
இயலிடம் கூறல் 41,81
இயலிடம் கேட்டல் 41,81
இயற்கைப் புணர்ச்சி 78
இயற்கைப் புணர்ச்சியோடு
தொடர்வன 221
இயற்பட மொழிதல் 112
இயைபெடுத்துரைத்தல் 98
இரக்கங் கூறிவரைவு
கடாதல் 92
இரக்கத்தோடு மறுத்தல் 87
இரக்கமுற்று வரைவு
கடாதல் 90
இரண்டு எச்சம் 77
இரவின்கண் குறியிடம் 58
இரவினும் பகலினும் நீ வருக
என்றல் 66
இரவுக்குறி 56,57,91

இரவுக்குறி இடையீடு 89
இரவுக்குறி நேர்தல் 91
இரவுக்குறி யேற்பித்தல் 91
இரவுக்குறி வேண்டல் 91
இரவுடம்பட்டாள் போல் பகல் வரவு விலக்கல் 99
இரவுத் தனிமையில் இராமனின் ஏக்கம் 140
இரவும் பகலும் வரவு விலக்கல் 99
இரவு வரவுரைத்தல் 91
இரவுறு துயரத்திற்கு இரங்கி உரைத்தல் 107
இரவுறு துயரம் கடலொடு சேர்த்தல 93
இராக்கதம் 39
இராப் பொழுதில் தலைவி பட்ட பாடு 180
இராமன்-சீதை திருமணம் 132
இராமன்-சீதையர் இன்ப வாழ்க்கை 135
இராமன் துயருக்குப் பறவை முதலியவைகளும் இரங்கி ஒலித்தன 140
இராமனின் இரங்கல் 139
இராமனும் சீதையும் உற்ற காதல் நோய் 129
இராமனும் சீதையும் கண்ட முதற் காட்சி 128
இராவணன் கொண்ட விபரீதக் காதல் 133
இராவணன் செய்கை அறமாகாது 134
இருகையும் எடுத்தல் 226
இருபாலருக்கும் ஒத்த பண்புகள் 201
இருவகை மணநிலை 31
இருவர் நினைவும் ஒருவழி உணர்தல் 84
இருவரும் உள்வழி அவன்வரவு உணர்தல் 46,83
இருவரும் உளம் ஒத்து ஒருவராதல் 172
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தும் நிலை 184
இருவயின் ஒத்தல் 79
இருள்பரவியது கண்ட சீதையின் உள நிலைமை 130
இல் செறிவித்தமை கூறி வரைவு கடாதல் 90
இல்லது காய்தல் 240
இல்லறத்தின் இனிய பயன் 15
இல்லறப் பண்புகள் 204
இல்லற வாழ்க்கை 35
இல்வலியுறுத்தல் 226
இல்வாழ்க்கைச் சித்திரம் 135
இல்வாழ்க்கை சமநிலை காட்டும் 201
இல்வாழ்வில் இல்வாரின் முதன்மை 202
இல்வாழ்வின் முதலும் துணையும் 202
இலக்கிய மரபு 10
இழிவு 219
இளம்பூரணர் 8,242
இளமை கூறி மறுத்தல் 87
இளவேனில் கண்டு இன்னல் எய்தல் 105
இளிவரல் 219
இளிவு 219
இளைஞனுக்கு ஊக்கம் கொடுத்த சக்தி 152
இளையர் எதிர்கோடல் 109
இறந்துபாடுரைத்தல் 95
இறையனார் அகப்பொருள் 36
இறையனாரகப்பொருளாசிரியர் 4,113
இறையனாகப் பொருளுரை 18
இன்பத்தை வெறுத்தல் 233
இன்ப நுகர்ச்சியின் இணைபிரியாச் சரடு 145
இன்பமும் அறநெறிப் பட்டதே 145
இன்ப வாழ்க்கை 15
இன்புறல் 221
இன்றியமையாமை கூறல் 82
இன்னல் எய்தல் 101

ஈ

ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல் 226

உ

உட்கோள் 79
உட்கோள் வினுதல் 91
உடம் பட்டு விலக்கல் 48, 86
உடம்படாது விலக்கல் 86
உடம்பு நனி சுருங்கல் 234
உடன் கொண்டு வினுதல் 91
உடன் போக்கு 11, 32, 94
உடை பெயர்த்துடுத்தல் 225
உடைமை 221
உண்டியிற் குறைதல் 234
உண்மை கூறி வரைவு
கடாதல் 89
உணர்தல் 12
உணர்வு 243
உயிர் கலந்து ஒன்றிய உறவு 25
உயிர்ப்பு 222
உயிரென வியத்தல் 81
உரு 38
உருவு 243
உருவு வெளிப் பட்டு
நிற்றல் 108
உலகறி நன்மணம் 11, 177
உலகியல்பு உரைத்தல் 98
உலகின்மேல் வைத்
துரைத்தல் 85
உலகினோடு மாறு
கொள்ளாமை 54
உவகை 220
உவகைச் சுவை 142
உவந்துரைத்தல் 89
உழையர் இயற்பழித்தல் 112
உள் மகிழ்ந்து
உரைத்தல் 89, 109
உள்ளத்து உணர்ச்சி 48
உள்ளது உவர்த்தல் 240
உள்ளது கூறி வரைவு
கடாதல் 98
உள்ளப் புணர்ச்சி 8
உள்க் குறிப்பின் வெளிப்
பாடு 190
உளத்தொடு இயைந்த
வாழ்வியல் 217
உற்றது உரைத்தல் 80
உறுதிப் பொருள் நான்கு 1
உறுப்பு நலன் கண்டு உவப்
புடன் பேசுதல் 175
உறுப்பு நலனழிதல் 214
உறு பெயர் கேட்டல் 236

ஊ

ஊடல் 12
ஊடல், கூடல், உவகை 197
ஊடல் தணிவித்தல் 114
ஊடல் நீட வாடியுரைத்தல் 115
ஊடலில் தலைமகள் புலந்து
சொல்லுதல் 74
ஊட்லும் கூடலும் 144, 170
ஊதியம் எடுத்துரைத்து
ஊடல் தீர்த்தல் 117
ஊர் அலர் பற்றிய தலைவி
யின் உள நிலை 177
ஊழ்ணி கைவால் 225

எ

எச்சம் 76
எச்சவகை 4
எட்டிறந்த பலவகை 2
எட்டுவகை மெய்ப்பாடு 2, 218
எட்டெட்டாய் வரும் முப்பத்
திரண்டு மெய்ப்பாடுகள் 220
எதிர்கோள் கூறி வரைவு
கடாதல் 90
எதிர் பெய்து பரிதல் 233
எம்மெய்யாயினும்
ஒப்புமை கோடல் 235
எமர்சன் 147
எய்தல் எடுத்து உரைத்தல் 111
எழில் 38

ஏ

ஏதங்கூறி இரவு வரவு
விலக்கல் 99
ஏதங்கூறி மறுத்தல் 92
ஏதம் ஆய்தல் 233
ஏர் 38
ஏழைமை மறுப்பு 244
ஏறுகோள் கூறி வரைவு
கடாதல் 90

ஏறு வரவு கண்டு இரங்கி
யுரைத்தல் 108

ஐ

ஐங்குறுநூறு 18
ஐந்திணை 5,38
ஐந்திணை அமைப்பில்
காமத்துப்பால் 164
ஐந்திணை அமைப்பு 18
ஐந்திணை ஒழுக்கம் 7
ஐந்திணை நெறி 4
ஐந்திணைப் பின்னணி 6
ஐந்திணை வளம் 127
ஐயந்தீரக் கூறல் 102
ஐயம் 78,224
ஐயம் செய்தல் 235
ஐயனாரிதனார் 17
ஐயுற்றுக் கலங்கல் 102
ஐயுறுதல் 83
ஐவகை மரபு 2

ஒ

ஒத்தார் இருவர் கூடும்
கூட்டம் 164
ஒப்பு 38
ஒப்புமை 244
ஒப்பு வழி உவத்தல் 236
ஒரு வழித் தணத்தல் 93
ஒவ்வொரு குறளுமே ஒரு
தனிக் காட்சி 247
ஒன்றினார் வாழ்க்கையே
வாழ்க்கை 174

ஓ

ஓதல் பிரிவு 104
ஓதற் பிரிவு 69
ஓம்படுத்துரைத்தல் 96
ஓம்படை 61
ஓர்ப்பு 89

க

கட்டுரையின்மை 239
கட்டுவித்தி கூறல் 101
கட்டுவைப்பித்தல் 101
கடலிடைவைத்துத் துயர்
அறிவித்தல் 93
கடலொடு புலத்தல் 93
கடலொடு வரவு கேட்டல் 93
கடைதிறப்பு 142
கடைப் பிடி 39
கண்களின் நிலைமாற்றம் 180
கண்டமை கூறல் 42,81
கண்டவர் கூறல் 109
கண்டவர் மகிழ்தல் 96
கண்டவழி உவத்தல் 228
கண்ணும் தோளும் நுதலும்
கவின் இழத்தல் 187
கண் துயில் மறத்தல் 234
கண் நயந்துரைத்தல் 88
கண் புதைக்க வருந்துதல் 82
கணவனுக்கு மனைவி கட்டுப்
பட்டவள் 204
கந்தருவ வழக்கம் 3
கபிலர் 22
கம்பராமாயணத்தில் அகப்
பொருட் கருத்துகள் 126
கம்பன் கட்டுரை 217
கம்பனும் அகப்பொருள்
நெறியும் 126
கரந்திடத் தொழிதல் 227
கருத்தறிவித்தல் 83
கருத்து நுட்பத்தால்
விளையும் புலவி 196
கருதல் 222
கல்லாடம் 36,118
கல்லாடர் 36
கல்லாடர் பாடிய அகப்
பொருள் துறைகள் 118-121
கல்வி இருபாலார்க்கும்
பொது 205
கல்வி நலங்கூறல் 104
கலக்கங்கண்டு உரைத்தல் 104
கலக்கம் 236
கலக்கமுற்று நிற்றல் 101
கலங்கி மொழிதல் 229
கலம்பகத்தில் வரும் காதற்
பாட்டுகள் 142
கலவி இன்பங் கூறல் 103

கலவி கருதிப் புலத்தல் 111, 115
கலவிப் பூசல் 145
கலவியிடத்தூடல் 116
கலவியுரைத்தல்
கலன் கண்டு இராமன்
உற்ற சோகம் 141
கலித்தொகை 18, 19
கலித் தொகைக் காட்சி 34
கலைமான் வினுதல் 83
கவன்று உரைத்தல் 41, 80, 96
கழற்றெதிர் மறுத்தல் 80
கழற்றெதிர்மறை 40
கழறியுரைத்தல் 40, 80
களவியல் 36
களவியல் உரையாசிரியர் 45
களவில் நான்கு கூறு 9
களவில் பேச்சு நிகழ்த்தற்
குரியார் 10
களவிற்குச் சிறப்புடைய
மெய்ப்பாடு 223
களவினுள் இடையீடு 54
களவு 37, 161
களவுக் கூட்டம் 24
களவு நெறி 8
களவு நெறியில் அறிமுகமாகும்
மாந்தர் 10
களவுப் புணர்ச்சி 169
களவு மணம் பற்றிய பேச்சு 22
களவு வாழ்க்கை 21
களவு வெளிப்பாடு 169
களன் 3
கற்பியல் குறள்களில்
சம நோக்கு 207
கற்பின் தலைநிற்றல் 64
கற்பினுள் வரும் மெய்ப்
பாடு 231
கற்பினொடு மாறு கொள்
ளாமை 53
கற்பு 38, 69
கற்பு அறிவித்தல் 103
கற்புக்கு இலக்கணம் 54
கற்புத் திருமணம் 132
கற்பு நலன் உரைத்தல் 95
கற்பு நிலைக் கிரங்கல் 96
கற்பு நெறி மணமுறை 11
கற்பு நெறி வாழ்க்கை 11
கற்புப் பயப்புரைத்தல் 103
கற்பு மணத்தின் முறை 33
கற்பு வாழ்க்கையில் முக்கிய
நிகழ்ச்சிகள் 12
கற்பு வாழ்வில் பழகும்
மாந்தர் 13
கனவிழந்துரைத்தல் 109
கனவு நிலைக் காட்சி 185
கனவொடு மயங்கல் 234
கனு 222

கா

காட்சி 78
காதல் 147
காதல் இன்றேல் உலகம்
இல்லை 150
காதல் கட்டுரைத்தல் 108
காதல் கைம்மிகல் 230
காதல் முதற் குறிகள் 222
காதல் வாழ்க்கை 148
காதல் வாழ்க்கைக்
கொள்கை 155
காதலர் களியாட்டம் 174
காதலர் சந்திப்பு 171
காதலர் முயக்கம் பற்றிய
சிலம்புரை 173
காதலரின் அன்புப்
பிணைப்பு 25
காதலரைப் பிரித்த
மாலைப் பொழுது 218
காதலின் அறுகூற்றும்
பொதுத் தன்மை 229
காதலின் ஆறுங்கூறு 228
காதலின் ஐந்தாங் கூறு 227
காதலின் நான்காம் கூறு 226
காதலின் பெருக்கம் 26
காதலின் மூன்றுங் கூறு 225
காதொன்று களைதல் 220
காந்தர்வம் 39
காதருவ நெறி 163
காப்பு 54, 63
காப்புச் சிறை மிக்க
கையறு கிளவி 66, 93
காப்புடைத்து என்று
மறுத்தல் 87

காமக் குறிப்பிற்கு ஆகா்தலை 243
காமத்துப் பாலில் ஒத்த நிலை 206
காமத்துப் பாலின் கட்டுக் கோப்பு 171
காமத்துப் பாலின் பகுப்பு முறை 161
காமத்துப் பாலின் பாகு பாட்டுத் தோற்றம் 168
காமத்துப் பாலின் பொது அமைப்பு 171
காமத்துப் பாலின் பொருட் கோவை 168
காம நல விழைவு 191
காம நோய் மேலீடு 189
காமம் பொருளாக வந்த படாண்பாட்டு 131
காமம் மிக்க கழி படர் கிளவி 65, 93, 131
கார் காலத்தில் இராமன் உற்ற பிரிவுத் துயர் 141
காரணி கற்பகம் 117
கால நிகழ்வு உரைத்தல் 111
காலம் 2, 76
காலம் கூறி வரைவு கடாதல் 99
காலம் மறுத்துரைத்தல் 100
காலவகை 3
காவல் மேல் வைத்துக் கண் துயிலாமை கூறல் 99
காவலொடு மாறு கொள்ளாமை 54
காவற் பிரிவு 69, 104
காவிய மரபில் அகப் பொருள் 127
காளிங்கர் 214
காளிங்கர் பகுப்பைப் பின்னுள்ளோர் போற்றுமை 167, 168

கி

கிழவோன் தன்னை வாரல் என்றல் 56
கிளவி வேட்டல் 79
கிளி மொழிக் கிரங்கல் 97

கு

குகனுடன் இராமன் நட்பு 136
குடி நிலை 243
குடிமையின்புறல் 244
குராவொடு வருந்தல் 97
குலமுறை கூறி மறுத்தல் 52, 87
குறளில் உயிப் பொருளே சிறந்து நிற்றல் 246
குறளின் செய்தி தரும் விளக்கம் 246
குறிஞ்சிப் பாட்டு 21, 22
குறிப்பறிதல் 86, 88
குறிப்பறிந்து கூறல் 88
குறிப்பறிந்து புலந்தமை கூறல் 111
குறிப்பறியும் தோழி 211
குறிப் புரைத்தல் 95
குறிப்பு வேறு கொளல் 51
குறியிடத்துக் கொண்டு சேறல் 89
குறியிடம் கூறல் 88, 91, 95
குறியிடம் விலக்கல் 29
குறிவழிக் காண்டல் 81
குறிவழிச் சேறல் 81
குறுந்தொகை 33
குறுந்தொகைப் பாட்டில் பசலை 182
குறை நயப்புக் கூறல் 86
குறை நேர்தல் 92
குறை நேர்ந்தமை கூறல் 92
குறையுற்று நிற்றல் 84
குறையுற உணர்தல் 46, 84
குறையுறத் துணிதல் 83

கூ

கூட்டக் கூடல் 43
கூடல் இழைத்தல் 94
கூடலூர் கிழார் 35
கூதிர் கண்டு கவல்தல் 105
கூழை விரித்தல் 225
கூற்று 76
கூற்று வகை 3, 14, 209
கூற்று வகைத் துறைகள் 20
கூற்று வகை நிலை 14

கூற்று வகைப் பாகு பாடு
கொண்ட காளிங்கர் 167
கூற்று வகையால் மூவகைப்
பகுப்பு 166
கூறிவிக்குற்றல் 99

கே

கேட்போர் 3, 76

கை

கைக்கிளை 5
கைக்கிளை பெருந்திணை
மெய்ப்பாடுகள் 231
கைகோள் 2, 3, 76
கைம்மிகல் 221
கையறவு உரைத்தல் 229
கையாறு 222

கொ

கொடிக்குறி பார்த்தல் 97
கொடுப்பவை கோடல் 227
கொடுமை 243
கொண்டு சென்றுய்த்தல் 96

கோ

கோதாவரிக் கரையில் நலம்
பாராட்டல் 137
கோள் (பொருள் கோள்) 77

ச

சங்க இலக்கிய மரபுகள் 17-35
சங்க கால இலக்கணம்
தொல்காப்பியம் 17
சங்க நூல்களுள் அகப்பாட்டு 18
சங்க நூல் முதலியவற்றுள்
சம நிலை 207
சடகோபர் அருளிய திரு
விருத்தத் துறைகள் 122-125
சடாயு 139
சந்தனத் தழை தகா
தென்று மறுத்தல் 87
சந்து செய்வித்தற்குப்
பிரியும் பிரிவு 70
சமத்துவப் பேச்சு 199
சமத்துவப் பொருளில்
இலக்கிய வழக்காறுகள் 200
சமத்துவம் என்ற
சொல்லின் பிறப்பு 139
சமூகத்தின் உரையாடல்கள் 149

சா

சாமிநாதையர்
உ. வே. டாக்டர் 20
சாயல் 38
சான்றோர் கவியில் ஐந்திணை
நெறி 129

சி

சித்திரகூடத்தில் சீதைக்குக்
காட்டிய காட்சிகள் 137
சிதைவு பிறர்க்கின்மை 224
சிறப்பின்மை கூறி மறுத்தல் 87
சிறு பிணக்கு 193
சிறு பொழுது 3
சிறை காவல் 62
சிறையுறக் கிளந்து சேண்பட
நிறுத்தல் 50

சீ

சீதை இராமனை உளக
கண்ணால் கண்ட காட்சி 130
சீதையின் உருவெளி கண்டு
இராமன் பேசிய பேச்சு 130
சீதையின் துயர நிலை 142
சீதையின் பிரிவும்
இராமனின் சோகமும் 138

சு

சுடரொடு புலம்பல் 94
சுடரோடிரத்தல் 97
சுப்பிரமணிய பாரதியார் 199
சுவடு கண்டறிதல் 97
சுவடுகண்டிரங்கல் 97

சுளையாடல் கூறி நகைத்தல் 85

சூ

சூடாமணி பெற்ற
இராமனின் நிலை 141
சூர்ப்பணகையின் காதல்
பேச்சு மரபுக்கு
மாறுபட்டது 133
சூழ்ச்சி 221

செ

செய்யுள் 2
செல்வக் கேசவராய
முதலியார் 165
செலவு நினைந்துரைத்தல் 99
செவ்வணி கண்ட
வாயிலவர் கூறல் 110
செவ்வணி விடுக்க
இல்லோர் கூறல் 110
செவ்வி இலள் என்று
மறுத்தல் 87
செவ்வி செப்பல் 81
செவிலிக்குத் தோழி
அறத்தொடு நிற்றல் 102
செவிலி தேடல் 96

சே

சேட்படை 86
சேயிடைப் பிரிவு 178

சொ

சொல்லர்தேகல் 100

சோ

சோதிடம் கேட்டல் 97

த

தண்டியலங்காரம் 127
தமர் நினைவு கூறி வரைவு
கடாதல் 90
தமிழ்நெறி 171
தலைமகளது கடமை 41
தலைமகளது பெருமை 73
தலைமகளின் நேச உணர்வு 26
தலை மகனின் காதல்
மொழிகள் 26
தலையாய காதல் நிலைக்
கான ஒப்புவமை 242
தலைவன் கூற்று 209
தலைவன் தலைவியர் நேயம் 206
தலைவன் தலைவியர் பிணைப்பு 173
தலைவன் தலைவியரின் அன்பு
வெளிப்பாட்டுரை 176
தலைவன் தலைவியின் நலம்
பாராட்டுவது 226
தலைவன் மடல் ஏறத்
துணியும் சூழல் 176
தலைவன் வரவு விலக்கல் 92
தலைவனின் ஆண்மையும்
வீரமும் 23
தலைவனின் தனித்த
பேச்சுரைகள் 209
தலைவனின் நினைவால்
வரும் இன்பம் 184
தலைவனின் வியப்புரை 172
தலைவனுடைய பெரு
வேட்கை 22
தலைவனைக் காணத் துடிக்கும்
தலைவியின் ஆர்வம் 189
தலைவனை நினையும்
தலைவியின் புலம்பல் 183
தலைவனை வியந்துரைத்தல் 42,81
தலைவி கூற்று 209
தலைவி தலைவன் நலம்
பாராட்டுவது 226
தலைவி நெஞ்சொடு பேசுதல் 188
தலைவியின் துன்ப
வெளிப்பாடு 180
தலைவியின் நலம் புனைந்
துரைக்கும் தலைவன் 174
தலைவியின் முகப்
பொலிவும் மென்மையும் 175
தழை எதிர்தல் 88
தழை கொண்டு சேறல் 86
தழையேற்பித்தல் 88
தழை விருப்புரைத்தல் 88

தளர்வகன்றுரைத்தல் 92
தளர்வறிந்துரைத்தல் 95
தளர்வு அகன்று உரைத்தல் 81
தன் துணிவு உரைத்தல 85
தன்மை 221
தன்னுட் கையாறெய்திடு
கிளவி 93
தன்னுள் கையாறெய்திடு
கிளவி 66
தன்னை வியந்துரைத்தல் 111
தனி கண்டு உரைத்தல் 89
தனித் திருக்கும் தலைவியின்
சிந்தனை 182
தனித்திருக்கும் தலைவியின்
நிலை 179
தனிப்படர் மிகுதி 182
தனிமை வாழ்வில் தலைவி
உற்ற துயர் 169

தா

தாய் அறிவின்றெடு மாறு
கொள்ளாமை 53
தாய் துயில் அறிதல் 92
தாயச்சங் கூறி வரைவு
கடாதல் 89
தாயறிவு கூறல் 99

தி

திணை 2, 3, 76
திணை நிலைப் பெயர் 2
திணை பெயர்த்துரைத்தல் 107
திரு 243
திருக் குறளில் அகப்
பொருள் மரபு 159
திருக்கோவையார் 78, 118
திருக்கோவையார் துறை
விளக்கம் 78
திருமங்கை மன்னன் 34
திருமணக் காவியம் 157
திருவள்ளுவ மாலை 167
திருவள்ளுவர் 144
திருவள்ளுவர் என்ற
கட்டுரை 165
திருவள்ளுவரின் அதிகாரப்
பகுப்பு 162
திருவாசகப் பாடல் 11
திருவிருத்தம் 122
திளைப்பு வினை மறுத்தல் 227
திணை மெய்தமை கூறி
வரைவு கடாதல் 90
திணை முதிர்வு கூறி வரைவு
கடாதல் 90
திணையொடு வெறுத்து
வரைவு கடாதல் 90

து

துஞ்சல் 22
துஞ்சிச் சேர்தல் 238
துணிந்தமை கூறல் 95
துணிவெடுத்துரைத்தல் 95
துணிவொடு வினுதல 95
தும்மலின கருத்து 184
துயிலெடுத்து சசேறல் 92
துறைவகை 4
துன்பததுப் புலம்பல் 233
துனி ஒழிந்து உரைத்தல் 115

தூ

தூது கண்டு அழுங்கல் 101
தூது முனிவின்மை 238
தூது வரவு உரைத்தல் 101

தெ

தெய்வத்தை மகிழ்தல் 79
தெய்வம் 39
தெய்வம் அஞ்சல் 239
தெரிந்துடம்படுதல் 227
தெளிதல் 78

தே

தேசிக விநாயகம் பிள்ளை,
கவிமணி 248
தேர் வரவு கூறல் 102, 106, 108
தேர் வரவு கூறி மகிழ்ந்து
கூறல் 111
தேர் வழி நோக்கிக்
கடலொடு கூறல் 93

தேருது புலம்பல் 100

தொ

தொகை நூல்களில் சில காட்சிகள் 24
தொல்காப்பியம் 17, 36
தொல்காப்பியம் களவியல் 211
தொல்காப்பியர் 3, 8, 10, 12, 13, 17, 28, 129, 142, 218
தொல்காப்பியர் கண்ட பாகுபாடு 161
தொல்காப்பிய வழிகாட்டி 171
தொழுது இரந்து கூறல் 99

தோ

தோழி அறத்தொடு நிற்றல் 64
தோழி இயற்பழித்தல் 112
தோழி கூற்று 210
தோழி முதலியோரின் உரையில் இடம் பெறுவார் 14
தோழியின் துணை 28
தோழி வந்து கூடல் 89
தோழி வரைவு கடாவுவகை 58
தோழி வாயில் வேண்டல் 114

ந

நக்கீரர் 248
நக்கீரர் உரை நடை 36
நகர் காட்டல் 96
நகரணிமை கூறல் 95
நகு நயம் மறைத்தல் 294
நகை 218
நகை கண்டு மகிழ்தல் 88
நகைத்து உரைத்தல் 112
நகையாடி மறுத்தல் 87
நச்சினார்க்கினியர் 1, 3, 5, 6, 7, 17, 18
நடுங்க நாட்டம் 85
நடுவு நிலைமை 221
நப்பாலத்தனார் 248
நல்லந்துவனார் 43
நலம் புனைந்துரைத்தல் 79
நலிதல் 221
நற்றாய் அறத்தொடு நிற்றல் 63
நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றல் 102
நற்றாய்ச் சுரைத்தல் 97
நற்றாய் வருந்தல் 97
நற்றிணை குறுந் தொகைகளின் நிலை 20

நா

நாடத் துணிந்தது 97
நாடு அறி நன்மணம் 23
நாண் 38, 39
நாண் விட வருந்துதல் 89
நாண நாட்டம் 45, 82
நாணிக்கண் புதைத்தல் 82
நாணினொடு மாறு கொள்ளாமை 54
நாணிழந்து வருந்தல் 95
நாணின் கற்பு வலியுடைத்து 60
நாணுதல் 221
நாணுதல் கண்டு மிகுத்து உரைத்தல் 112
நாணுரைத்து மறுத்தல் 87
நாராயணசாமி ஐயர், அ., பின்னத்தூர் 20
நால் வகை உவமை 2
நாளெண்ணி வருந்தல் 108
நான்கு வகை நகை 218

நி

நிதி வரவு கூறுநிற்றல் 103
நிம்பிரி 243
நிலத்து இன்மை கூறி மறுத்தல் 87
நிலம் பெயர்ந்துறையும் பிரிவு 75
நிலமக்கள் பெயர் 2
நிலவு வெளிப்பட வருந்தல் 93
நிலன் 2
நிலைகண்டு உரைத்தல் 93
நிலைமை நினைந்து கூறல் 101

நிறுத்த காமவாயில் 243
நிறை 39, 243
நின்று வருந்தல் 82
நினைதல் 222
நினைந்து வியந்துரைத்தல் 112
நினைவறிவு கூறி மறுத்தல் 78

நீ

நீயே கூறு என்று மறுத்தல் 50, 87
நீயே கூறெனல் 100

நு

நுகர்வு 39

நெ

நெஞ்சத்தே உயிர்க் காதலை உள்ளுதல் 193
நெஞ்சால் நினைந்து போற்றுதல் 185
நெஞ்சுடைந்து நிற்றல் 91
நெஞ்சுவிடு தூது 183
நெஞ் சொடு கூறல் 100
நெஞ்சொடு நேர்தல் 108
நெஞ்சொடு புலத்தல் 108
நெஞ்சொடு மறுத்தல் 108
நெஞ்சொடு வருந்தல் 100
நெறி விலக்கிக் கூறல் 96

நோ

நோய் 38

ப

பக்திப் பாடல்களில் அகப் பொருள் 118
பகல் வரவு விலக்கி வரைவு கடாதல் 90
பகலுடம்பட்டாள் போன்று இரவு வரவு விலக்கல் 99
பகற் குறி 55 88
பகற் குறியிடம் 58
பகை தணிவினைப் பிரிவு 69, 104
பங்கயத் தொடு பரி வுற்றுரைத்தல் 94
பச்சையப்பனார், பா. 147
பசலை 181
பசலை படர்தல் 181
பசலை பாய்தல் 234
பசியட நிற்றல் 233
பஞ்சவடி 138
படைத்து மொழியாக் மறுத்தல் 51
படைத்து மொழியான் மறுத்தல் 87
பத்து வகைக் கேட்போர் 2
பதி நோக்கி வருந்தல் 91
பதி பரிசுரைத்தல் 96
பதி வினுதல் 83
பயன் 4, 77
பயிர்ப்பு 40
பர்ணசாலையைக் கண்ட இராமனின் நிலை 139
பரணர் 30
பரத்தையர்ப் பிரிவு 13
பரத்தையர் உரிமையாதல் 70 71
பரத்தையிற்பிரிவு 69, 70,71 109
பரத்தையைக் கண்டமை கூறிப் புலத்தல் 116
பரிப் பெருமான் கட்டுரை 193
பரிமேலழகர் 215, 216
பரிமேலழகர் காலத்துக் கருத்து 205
பரி மேலழகரின் பகுப்பு முறை 161
பருவங் கண்டு இரங்கல் 108
பருவங் காட்டி வற்புறுத்தல் 106
பருவங் கூறல் 94
பருவங் கூறி வரவு விலக்கல் 89
பருவம் அன்று என்று கூறல் 106
பருவம் நினைந்து கவறல் 97
பருவரல் அறிதல் 79
பழந் தமிழ் இலக்கியம் 17
பழி வரவு உரைத்துப் பகல் வரவு விலக்கல் 99
பழைய மரபினின்றும் மாறும் புதுமை 245

பள்ளி யிடத்து ஊடல் 110
பள்ளி யிடத் துய்த்தல் 92
பறவையொடு வருந்தல் 94
பன்னிரண்டு உறுப்பு 3
பன்னிரு வகைக் கூற்று 3

பா

பாகனும் தூதனும் 14
பாங்கற்கூட்டம் 9,28,40,80
பாங்கன் 10
பாங்கன் நொந்து
உரைத்தல் 80
பாங்கன் வினுதல் 27, 80
பாங்கனுக்குத் தலைவனின்
மறுமொழி 28
பாங்கனை நினைதல் 80
பாங்கி அறிவுரைத்தல் 89
பாங்கிடைச் சேறல் 83
பாங்கியர்க் கூட்டம் 9
பாங்கியை அறிதல் 80
பாங்கொடுதழால் என்னும்
மூன்றும் நிலை 222
பாடுதுறைகள் 15
பாண்டிக் கோவை 36
பாணன் புலந்துரைத்தல் 114
பாணன் வரவு உரைத்தல் 112
பாணனொடுவெகுள்தல் 114
பார்ப்பான் 10
பாரதியாரின் புதுமைப்
பெண் 208
பாராட்டெடுத்தல் 226
பால் 2

பி

பிணக்கத்தால் இன்பம்
ஏற்றமுறுதல் 194
பிரசாபத்தியம் 39
பிரமம் 39
பிரிந்தமை கூறல் 100,105,107
பிரிந்துறை தலைவியின் உடல்
உளநிலைகள் 189
பிரிவாற்றுமை 241
பிரிவாற்றுமை கார்மிசை
வைத்தல் 105
பிரிவிடைத் தலைமகளை
வாயில்கள் ஆற்றுவித்தல் 75
பிரிவில் காமத்தீ 179
பிரிவு 13
பிரிவு அருமை கூறி
வரைவு கடாதல் 90
பிரிவு அறிவித்தல் 104
பிரிவுக்குறிப்பும் மெலிவும் 191
பிரிவு கூறல் 104
பிரிவு கேட்டு இரங்கல் 104
பிரிவுணர்த்தல் 79
பிரிவுநிலையில் தலைவியின்
உள்ளமும் உடலும் 169
பிரிவுநிலையைத் தலைவி
உணர்கை 178
பிரிவுநினைவு உரைத்தல் 104 107
பிரிவுபற்றித் தோழி 212
பிரிவு வகை 8
பிரிவை நால்வகைப்
படுத்தும் முறை 162
பிறப்பு 243
பிறை தொழுக என்றல் 45, 84
பின்பனி நினைந்திரங்கல் 105

பு

புகழ்மூதம் புரிதல் 223
புணர்ச்சி துணிதல் 79
புணர்ச்சி நிமித்தமாம்
மெய்ப்பாடுகள் 232
புணர்ச்சிப் பெருவிருப்பம் 192
புணர்ச்சி பிரிவு 161
புணர்ச்சியுரைத்தல் 84
புணர்ந்துடன் வருவோரைப்
பொருந்தி வினுதல் 98
புணர்ந்துழி உண்மை 240
புதல்வன்மேல் வைத்துப்
புலவிதீர்த்தல் 116
புரையறம் தெளிதல் 240
புலந்துகூறல் 86
புலம்பித் தோன்றல் 229
புலவி 12
புலவி உரைகள் 194

புலவி ஊடல் பற்றிய வள்ளுவர்அமைப்பு 195
புலவி நீக்குவான் கூறும் சொல் 73
புலவி நுணுக்கத்தில் காணும் பேச்சருமை 194
புலவி நுணுக்கம் 143
புலனெறி வழக்கம் 4,5,17
புலனெறி வழக்கில் வாழ்வியல் 16
புறஞ்செயச் சிதைதல் 229
புறஞ்சொல்மாணுக் கிளவி 241
புறநானூற்றுப் பாடல் களுக்குத்திணை துறை 17
புறப்பொருள் வெண்பா மாலை 17
புறமொழி 243
புறவொடுபுலத்தல் 97
புனல் ஆட்டுவித்தமை கூறிப் புலத்தல் 115
புனல் வரவு உரைத்தல் 111

பூ

பூப்பின்பின் பன்னிருநாள் உடனுறைதல் 72

பெ

பெண்ணின் உள்ளம் 192
பெண்பாற்கூற்று 209
பெயர் வினுதல் 83
பெருந்திணை 5
பெரும்பான்மை கூறி மறுத்தல் 98
பெரும்பொழுது 3
பெருமிதம் 219
பெருமையோடு மாறு கொள்ளாமை 53

பே

பேராசிரியர் 8 9,10,12, 228,229
பேராசிரியர் உரை 38
பேரெயின் முறுவலார் 33

பை

பைசாசம் 39

பொ

பொச்சாப்பு 222, 243
பொதுப்படக்கூறி வாடி அழுங்கல் 109
பொய்யாக்கோடல் 234
பொருட்குப் பிரிவு 69
பொருட்பாலின் போக்கு 201
பொருத்தம் அறிந்துரைத்தல் 107
பொருள் 4
பொருள்மாலையாளர் 186
பொருள்வயின் பிரிவு 107
பொருளுக்கு அடிப்படை மெய்ப்பாடு 217
பொலிவு அழிவு உரைத்து வரைவு கடாதல் 99
பொழில் கண்டு உவத்தல் 43
பொழில் கண்டு மகிழ்தல் 81
பொழிலிடைச் சேறல் 43,82
பொழுது கண்டு மயங்கல் 94
பொழுது மறுப்பாக்கம் 240
பொறுமை 223
பொறிநுதல் வியர்த்தல் 224
பொறை உவந்து உரைத்தல் 109
பொன்னணி உரைத்தல் 94

போ

போக்கறிவித்தல் 95
போசராசன் 336

ம

மக்கட் பேற்றின் பொதுமை 204
மகள் பேச விடுத்தல் 32
மகிழ்ந்துரைத்தல் 103
மடந்தவ உரைத்தல் 262
மடம் 39
மடல் திறம் 47

மடலேறும் சூழ்நிலை 32
மடலேறும் மரபு 33
மடலேறும் வகை
உரைத்தல் 85
மடலேறுவான் நிலை 33
மடற்றிறம் 85
மடன் 38
மடிமை 222, 244
மணக்குடவர் பகுக்கும்
திறம் 162
மணக்குடவர் விளக்கம்
மாண்புடையது 183
மணஞ்சிறப்புரைத்தல் 103
மணமண்டபக் காட்சி 131
மணமுடிப்பு 156
மணமுரசு கூறல் 103
மணமுரசு கேட்டு
மகிழ்ந்துரைத்தல் 102
மதி உடம்படுத்தல் 44, 85
மதி யுடம்படுதல் 82
மந்திமேல்வைத்து வரைவு
கடாதல் 99
மயிலொடுகூறி வரைவு
கடாதல் 91
மருங்கணைதல் 42, 82, 89, 92
மருட்கை 219
மருவுதல் உரைத்தல் 103
மலருங் கற்பு 153
மலிதல் 12
மறவாமை கூறல் 106
மறுத்துக் கூறல் 106
மறைத்தமை கூறி
நகைத்தல் 50
மறைத்தமை கூறி
நகைத்துரைத்தல் 88
மறைந்தவை உரைத்தல் 241
மன்றல் எட்டு 39
மனத்தொடு நேர்தல் 86
மனைபுகல் கண்ட
வாயிலவர் கூறல் 110
மனையவர் மகிழ்தல் 114
மனையாளின் மாண்புகள் 202
மனையோள் மாண்புகள் 11
மனைவியும் மக்களும் 203

மா

மாந்தரின் வாழ்க்கைப்
போக்கு 16
மாரீசன் 138
மாலைப் பெண் 186
மாலைப்பொழுதும் தனிமை
இரக்கமும் 185
மாலை மலரும் காதல் நோய் 186

மி

மிகுத்துரைத்து ஊடல் 118
மின்னிடை மெலிதல் 81

மீ

மீளவுரைத்தல் 98
மீனாட்சி சுந்தரனார்
தெ.பொ. 247

மு

முகங் கண்டு மகிழ்தல் 92
முகமலர்ச்சி கூறல் 111
முகிலொடு கூறல் 106, 108
முட்டுவயின் கழறல் 237
முதல்நிலை மெய்ப்பாடுகள் 221
முதற்பொருள் 6
முதிர் நிலை 222
முலைவிலை கூறல் 99
முன்நிகழ்வு உரைத்து
ஊடல் தீர்த்தல் 116
முன்பனிக்கு
நொந்துரைத்தல் 105
முன்னம் 4
முன்னுற உணர்தல் 44, 84
முனிதல் 222
முனிவு மெய்ந்நிறுத்தல் 237

மெ

மெய்ப்பாட்டு இயற்கையும்
காமத்துப்பாலின்
கட்டுரையும் 217

மெய்ப்பாடு 4,77,218
மெய்ப்பாடு உணரப்
பொது அறிவு வேண்டும் 244
மெய்ப்பாடு விளங்கும்
கூற்றுகள் 246
மெய்யே என்றல் 234
மெல்லக் கொண்டேகல் 96
மெலிவு கண்டு செவிலி
கூறல் 101
மென்மொழியால் கூறல் 48,86

மொ

மொழிநடை எழுதல்
அரிதெனவிலக்கல் 85
மொழி பெற வருந்துதல் 81
மொழி பெறாது வருந்தல் 83

மோ

மோசி கீரனார் 167
மோசிகீரனார் சுட்டும்பகுப்பு 166

ரோ

ரோமியோ ஜூலியத் 156

வ

வகுத்துரைத்தல் 88
வஞ்சித்துரைத்தல் 86
வடநூலார் மதம்பற்றிப்
பரிப்பெருமாள் 164
வரவு எடுத்துரைத்தல் 106
வரவுணர்ந்து உரைத்தல் 92,94
வருத்தங் கண்டுரைத்தல் 100
வருத்தங் கூறி வரைவு
கடாதல் 89
வருத்தந் தணிவித்தல் 105
வருத்த மிகுதிகூறல் 94
வருத்த மிகுதிகூறி வரைவு
கடாதல் 89
வருமது கூறி வரைவு
கடாதல் 100
வரைதல் 221
வரைதல் முறை இரண்டு 62
வரைதல் வேட்டுச்
சொல்லும்சொல் 64
வரைந் தெய்தியபின்
வருவன 239
வரைந்தெய்தும் துணையும்
நீட்டிக்கும் காலம் 68
வரை பொருட் பிரிதல் 99
வரை பொருட் பிரிவை
உரையெனக்கூறல் 100
வரைவியல் மெய்ப்பாடு 237
வரைவு உடன்படாது
மிகுத்துக் கூறல் 89
வரைவு கடாதல் 30,31
வரைவு முடுக்கம் 98
வலியழிவுரைத்தல் 80
வழக்கு 2
வழிப்படுத்துரைத்தல் 96
வழிபாடு கூறல் 103
வழியருமை கூறி மறுத்தல் 91
வழியிடைக் காட்சியாய்க்
கம்பன் அமைத்த
படலங்கள் 143
வழியொழுகி வற்புறுத்தல் 100
வழிவழித் தொடரும்
கேண்மை 24
வழிவிளையாடல் 99
வழிவினுதல் 83
வழு 2
வள்ளுவர் கண்டநாடும்
காமமும் 247
வள்ளுவர் காலச்
சமுதாயம் 199*
வள்ளுவர் தந்த குறட்
பாலம் 198
வள்ளுவர் நூலின்
பொதுமை 200
வள்ளுவர் வழங்கும்
காமத்துப்பால் 245
வள்ளுவர் வாக்கு 35
வள்ளுவர் வாய்மொழி 144
வளர்நிலை 222
வற்புறுத்தல் 81
வறும்புனம் கண்டு வரைவு
கடாதல் 91

வறுமை 129
வன்சொல் 243
வன்புறை எதிரழிந்து இரங்கல் 100
வன்மொழியால் கூறல் 48, 86

வா

வாட்டம் கூறல் 107
வாட்டம் வினுதல் 84
வாய்மை கூறி வருத்தம் தணித்தல் 100
வாய் மொழிக் கூறித் தலைமகள் வருந்தல் 104
வாயில்கள் 73
வாயில் பெருது மகன் திறம்நினைதல் 112
வாயில் மாறுத்துரைத்தல் 114
வாயில் வேண்டாத் தோழிக் கூறல் 113
வாயிலவர் வாழ்த்தல் 111
வாயிற் கண் நின்று தோழிக் குரைத்தல் 43
வாரம் பகர்ந்து வாயில் மறுத்து உரைத்தல் 110
வாழ்க்கைத் துணையாம் மனைவி மாண்பு 203
வாழ்க்கை நலம் கூறல் 103
வாழ்க்கைப் பயிற்சி 167
வாழ்க்கையில் அன்பும் இன்பும் வெளிப்படுதல் 136
வாழ்க்கையின் குறிக்கோள் 158
வாழ்த்தல் 221
வானேக்கி வருந்தல் 105

வி

விதியொடு வெறுத்தல் 80
வியத்தல் 79
வியந்துரைத்தல் 98
வியர்த்தல் 253
வியப்பு 243
விரதியரை வினுதல் 97
விரவிக் கூறல் 86
விருந்தொடு செல்லத் துணிந்தமை கூறல் 114
விரைவு 222
வில்லேற்றுய மணம் அசுரமண மாமா? 131
விளக்கொடு வெறுத்தல் 110
வினை முற்றி நினைதல் 106

வெ

வெகுளி 220
வெரூஉதல் 222
வெறி விலக்கல் 102
வெறி விலக்குவிக்க நினைதல் 103
வெறுப்பு 38

வே

வேங்கையொடு வெறுத்து வரைவு கடாதல் 90
வேட்கை 38, 40
வேட்கை மிகுதல் 169
வேட்ட மாதரைக் கேட்டல் 97
வேதியரை வினுவல் 98
வேந்தர்க் குற்றுழிப் பிரிவு 69.105
வேலனை அழைத்தது 101
வேழம் வினுதல் 83
வேறுபடுத்துக் கூறல் 45, 85